தொல்காப்பியம்

எழுத்ததிகாரம்

இளம்பூரணர் உரை

(விளக்கவுரையுடன்)

பதிப்பாசிரியர் :

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி

கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ.,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இரண்டாம் பதிப்பு : ஆகஸ்டு 1979

திருப்பனந்தாள் திருமட நிதிய வெளியீடு

விலை : ரூ.

அச்சிட்டோர் :

ஸ்ரீ விநாயகா பிரஸ்

சிதம்பரம்

திருப்பனந்தாள் காசிமடத்து இருபத்தொன்ருவது பட்டத்து
எழுந்தருளியுள்ள, திருப்பெருந்திரு.
காசிவாசி முத்துக்குமாரசாமித்தம்பிரான் சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
திருப்பனந்தாள்

ஆசியுரை

தொல்காப்பியம் தமிழில் உள்ள அரிய பெரிய இலக்கண நூல். காலப்பழமையும் கருத்து வளமும் நிறைந்தது; மொழி நூல் வல்லுநரும் வியந்து பாராட்டும் முறையில் அமைந்தது. இதற்கு அமைந்த உரைகள் பல. அவற்றுள் முதலுரையாக விளங்குவது இளம்பூரணர் உரையாகும்.

தொல்காப்பியம் எழுத்துச் சொற் பொருள் என மூன்று அதிகாரங்களையுடையது. எழுத்ததிகாரத்துக்கு அமைந்த இளம் பூரணருரை இதற்கு முன்னும் பிறரால் வெளியிடப் பெற் றிருப்பினும், இப்பதிப்பு அவற்றினும் சீரிய முறையில் அமைந் திருப்பதை இதனை நோக்குவார் நன்கறிதல் கூடும்.

அறிஞருலகிற்கும் மாணக்கருலகிற்கும் ஒருங்கு பயன்படும் வண்ணம் ஆராய்ச்சி முன்னுரையும், விளக்கக் கட்டுரைகளும், விளக்கவுரைகளும் இப்பதிப்பில் அமைந்துள்ளன. மேலும், தொல் காப்பிய நூற்பாக்களுள் சிறந்த பாடம் இது எனக் குறிக்கப் பட்டுள்ளது. அன்றியும் இதற்குமுன் வந்த பதிப்புக்களைப் பற்றியும் எழுதப் பெற்றிருக்கிறது.

இங்ஙனம் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடுபவர் பல நூல்களை வெளியிட்டு வியாபாரம் செய்யும் நூல் வெளியீட்டாளர் அல்லர்; பெருந்தனக்காரருமல்லர்; எளியவர்; சிறந்த புலமை சான்றவர்; தான் கற்றறிந்தவற்றைப் பிறரும் அறிய வேண்டும் என்ற தெளிவுள்ளம் படைத்தவர்; நம் செந்தமிழ்க் கல்லூரியிற் பயின்று, வித்துவான் தேர்வில் முதல் தரத்தில் வெற்றி பெற்று, நம் செந்தமிழ்க் கல்லூரியிற் பேராசிரியராய்த் தொல்காப்பியம் முதலிய பெரு நூல்களைப் பாடஞ் சொல்லும் ஆற்றல் பெற்றவர்; செஞ்சொற் கொண்டல், இளைஞர்; சைவ சித்தாந்த சாத்திரத்தை நன்கு கற்றவர்; திரு. கு. சுந்தரமூர்த்தி என்னும் பெயரினர். தொல்காப்பிய உரைகள் பலவற்றையும் பிறர் வழியும் தன் பொருட் செலவிலும் இதற்கு முன்னரும் இவர் வெளியிட்டிருப்பது தமிழுலகம் அறிந்ததொன்று. இவ்விளைஞர் பணி சிறப்பதாக! தமிழுலகம் இந்நூலைக் கற்றுத் தெளிவதாகுக! இவர்க்குச் செந்திலாண்டவன் துணை நிற்க!

சிவ சிவ

அணிந்துரை

திரு. கு. சுந்தரமூர்த்தி, திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராக இலக்கணம் கற்பித்து வருகிறார். இந்த அனுபவத்தையும், ஏற்கனவே தொல்காப்பியத்திற்குள்ள வேறு பல உரைகளை வெளியிட்டிருக்கும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்குப் பழைய உரையாசிரியர் இளம்பூரணர் எழுதிய உரையைத் தம் விளக்கத்துடனும் பாட பேதங்களுடனும் பதிப்பித்து உள்ளார். ஆராய்ச்சி முன்னுரையில் தொல்காப்பியரைப் பற்றியும், தொல்காப்பியத்தைப் பற்றியும் உரையாசிரியர்களைப் பற்றியும் தெளிவாக எழுதியுள்ளார்.

எழுத்ததிகாரத்தில் இயல்களின் கருத்தைத் திரட்டி விளக்கம் தந்து உரைநடையில் கட்டுரை வடிவமாக எழுதியும் உள்ளார். ஒவ்வொரு சூத்திரத்தின் கீழும் விளக்கக் குறிப்புக்கள் தந்துள்ளார். தொல்காப்பியம் மிக அரிய நூல். அதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுவதற்கு இன்றியமையாத உதவிகளை எல்லாம் இப்பதிப்பில் தந்துள்ளார். எனவே சிறந்த தமிழ்த் தொண்டே செய்துள்ளார். மேலும் இத்தகைய தொண்டினைச் செய்து வரத் தமிழன்னை இவரைத் தூண்டு வாளாக!

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

நன்றியுரை

இப்பதிப்பு முதன் முதலாக 1969 ஆம் ஆண்டில் என் சொந்த முறையில் வெளிவரத் திருவருள் கூட்டுவித்தது. அதன்பின் வெளியிடும் வாய்ப்பு ஏற்பட்டிலது. எனினும் அவ்வப்பொழுதெல்லாம் ஆசிரிய உலகிலிருந்தும், மாணவர் உலகிலிருந்தும் இப்பதிப்புத் தேவையெனும் கருத்துக்கள் நிலவின.

அதன் பயனாக இதுகாலை அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக இந்நூல் வெளிவருகின்றது. இத்தகைய நூல்கள் வெளிவிடுவதற்கென அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசித் திருமடத்தின் அறக்கட்டளை ஒன்று உள்ளது. அவ்வறக்கட்டளையிலிருந்து இந்நூலை வெளியிடலாம் எனத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசித் திருமடத்தின் அதிபராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுள்ளம் கொண்டார்கள். அவர்களுக்கும், அதற்கு இசைவு நல்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீட்டுக் குழுவிற்கும், ஆட்சிக் குழுவினர்க்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலின் முதற்பதிப்புக்கு வழங்கப்பெற்ற ஆசியுரையும், அணிந்துரையும் இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளன. ஆசியுரை வழங்கியருளிய அருள்மிகு காசிவாசி சுவாமிகள் அவர்களை நினைவு கூர்ந்து என் வணக்கத்தைச் செலுத்திக் கொள்கிறேன். அணிந்துரை வழங்கிய அறிஞர் பெருந்தகைக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நலம் காத்தலிலும், அதனைப் பேணலிலும் தலைசிறந்து விளங்குபவர்களும், ஒவ்வொரு துறையிலும் துறைபோகிய தக்கவர்களைக் கொண்டு பல்கலைக்கழகம் இனிது இயங்க வேண்டும் என்னும் பேரார்வத்தில் தலைசிறந்து விளங்குபவர்களும் என் அன்பிற்கும், மதிப்பிற்கும், வணக்கத்திற்கும் உரியவர்களுமான செட்டிநாட்டரசர் மேதகு, இணைவேந்தர் டாக்டர் இராசா. சர். முத்தைய செட்டியார் K.T., B.A., D.Litt., அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிப்பதில் என் நெஞ்சம் அடையும் மகிழ்ச்சிக்கு உவமை இல்லை.

இத்தகைய நல்ல பல தமிழ்ப் பணிகளை நாளும் மேற்கொண்டு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் மதிப்பிற்குரிய துணைவேந்தர் நடுவர் பி. எஸ். சோமசுந்தரம் அவர்களுக்கு நன்றியுடையேன்.

தொடர்ந்து பல பணிகளை மேற்கொள்ளத் திருவருள் கூட்டுமென்று நம்புகிறேன்.

செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்
30 – 8 – 1979

கு. சுந்தரமூர்த்தி
முதல்வர்

பதிப்புரை

முத்தநூலான தொல்காப்பியம் தமிழிலக்கண முதல் நூலாகும். தமிழ் இலக்கண நூல்களில் பல்கலைக்கழகம் திருத்திய பதிப்பாகவும் மாணுக்கர்களுக்கு குறைந்த விலையிலும் வெளிக்கொணர வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் இலக்கண நூல்களை வெளியிட முன் வந்தது. யாப்பருங்கலக் காரிகை, நம்பியகப்பொருள், தொல்காப்பிய இலக்கிய வரலாறு முதலிய நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. அவ்வரிசையில் செந்நாப் புலவர் திரு. கு. சுந்தர மூர்த்தி அவர்களின் நுண்பதிப்பான எழுத்ததிகாரமும், சொல் லதிகாரமும் வெளிவருகின்றன. திருக்குறளுக்கு அமைந்த பரிமே லழகர் உரை போல எழுத்ததிகாரத்திற்கு அமைந்தது இளம் பூரணர் உரையாகும். நன்னூல் என்ற ஒர் இலக்கணநூல் தோன்றியதற்கு இளம்பூரணர் உரை காரணமாகும்.

அனைத்துப் பிற்கால உரையாசிரியர்களும் போற்றும் இளம் பூரணர் உரையுடன் எழுத்ததிகாரத்தைச் செம்பதிப்பாக வெளியிடும் பணிக்குப் புலவர் கு. சுந்தரமூர்த்தி அவர்களைப் பணிக்க அப் பணியினைப் பாராட்டும் வகையில் வடிவுடனும் வனப்புடனும் செய்துள்ளார்.

அரிய பழந்தமிழ் இலக்கண நூல்களும், இலக்கிய நூல்களும் மக்களுக்கும் மாணவர்களுக்கும் கிட்டச் செய்யும் தமிழ்ப்பணிக்குத் திருப்பனந்தாள் திருமடத்தின் அறக்கட்டளை கொடுத்துள்ள நிதியத்தின் வழி தொடர்ந்து பல நல்ல நூல்கள் வெளிவருகின்றன. இந்நூலிற்குரிய வரவேற்பும் வாழ்த்தும் எண்ணிலடங்கா. பழந்

தமிழ் இலக்கியங்கள் காட்சிப் பொருளாக அல்லாமல் கற்றுணரும் அறிவகங்களாக இருப்பதற்கு இவ்வறக்கட்டளை வழிகோலுகின்றது. இவ் அறக்கட்டளையை நிறுவிய சைவப் பெரியோர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் கடப்பாடுடையது.

பயனுள்ள இந்நூல் வெளிவருவதற்கு ஒல்லும் வகையெல்லாம் ஒத்துழைத்த வெளியீட்டுக் குழுவிற்கும், ஆட்சிக் குழுவிற்கும், நன் முறையில் அச்சியற்றிய ஸ்ரீ விநாயகா அச்சகத்தார்க்கும், இவ் இலக்கணம் கற்று இன்பம் துய்ப்பார் கட்டாயம் கடமைப்பட்டவர் ஆவார்.

டாக்டர் ஆறு. அழகப்பன்
வெளியீட்டுப் பொறுப்பாளர்

பதிப்பின் சிறப்பு

இற்றைக்குக் கிடைத்திருக்கும் தொன்மையான இலக்கண நூல்களில், பழமையும் வளமையும் சிறந்து விளங்கும் நூல் தொல் காப்பியமேயாகும். இவ்வரிய நூலிலிருந்து பண்டைக் காலத்திலேயே நம் மொழி எத்துணை வளர்ச்சியும் எழுச்சியும் பெற்றிருந்தது என்பதையும், அக்காலத்துத் தமிழர்தம் வாழ்வியல், நாகரிகம், அகப்புற ஒழுக்கங்கள் ஆகியன எங்ஙனம் இருந்தன என்பதையும் நன்கறிய இயலுகின்றது.

பதிப்புக்கள்:

இச்சீரிய நூல் எழுந்த கால முதலே, இதற்கு உரைகளும் தோன்றியிருந்தன. எனினும் நமக்குக் கிடைத்திருக்கும் உரைகள் ஆறேயாகும். அவற்றிலும் நூல் முழுமைக்கும் கிடைத்திருக்கும் உரை இளம்பூரணர் உரையேயாகும். எழுத்ததிகாரத்தைப் பொறுத்தமட்டில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவரின் உரையும் முழுமையாக உள்ளன. எழுத்ததிகார இளம் பூரணர் உரையை முதன்முதல் பதிப்பித்து உதவியவர்கள் பூவிருந்தவல்லி, திரு சு. கன்னியப்ப முதலியார் அவர்கள் ஆவர். அப்பதிப்புத் திரிசிரபுரம் மகா வித்துவான் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணாக்கருள் ஒருவராகிய திரு. சுப்பராய செட்டியார் அவர்களால் பரிசோதிக்கப் பெற்று கி.பி. 1868-ல் வெளி யிடப்பட்டதாகும். அப்பதிப்பு ஏட்டில் கண்டவாறே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. உரை பொழிப்புரையாயுள்ளது. விளக்கவுரை எடுத்துக்காட்டுக்கள் ஆகிய அனைத்தும் அதனுடன் இணைக்கப் பட்டுள்ளன. நூற்பாக்கள் உரிய முறையில் அமைக்கப்படவில்லை. இப்பதிப்பை வேறு பல பிரதிகளோடு ஒப்பிட்டுப் பதவுரை யாக்கியும், விளக்கம் எடுத்துக்காட்டுக்களைத் தனித்தனியே பிரித்தும் தமது கருத்தையும் ஆங்காங்கு வெளிப்படுத்தியும் இரண்டாவதாகப் பதிப்பித்துதவியவர் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் ஆவர்.

இப்பதிப்பு 1-6-1928-ல் பதிப்பிக்கப்பெற்றது. இவ்விரு பதிப்புக்களையும் அடுத்துத் திரு. ஞா தேவநேயப்பாவாணர் அவர்களின் அடிக்குறிப்புடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் 1955-ல் வெளியிடப்பட்டது.

இப்பதிப்பின் செம்மை :

மேற்கூறிய பதிப்புக்கள் ஒவ்வொன்றும் முன்னைய பதிப்பினின்றும் திருத்தம் பெற்றிருப்பினும், மேலும் திருத்தம் பெற வேண்டிய இடங்கள் பல இருந்தன. அவை அனைத்தும் இப் பதிப்பில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. சில நூற்பாக்களில் நூற்பாவின் சொற்கள் ஒன்றுய்க் கண்ணழித்தலில் வரும் சொற்கள் ஒன்றுய் வேறுபட்டிருந்தன. இன்னும் சில இடங்களில் சில சொற்கள், தொடர்கள் விடுபட்டிருந்தன. அவை எல்லாம் இப்பதிப்பில் திருத்தம் பெற்றுள்ளன. பொருள் உணர்ச்சி கருதிப் பாராக்களை ஆங்காங்கு எல்லாம் பிரித்துச் செப்பம் செய்யப் பட்டுள்ளது. மாட்டேற்று நூற்பாக்களாக வருவன பலவும், அவை எவ்வெந் நூற்பாக்களோடு மாட்டெறிய வருகின்றன என்பதையும், இளம்பூரணரொடு நச்சினார்க்கினியர் மாறுபட்டுரைக்கும் பாடபேதங்களையும் அவ்வவ்விடங்களில் காட்டப்பட்டுள்ளன.

இந்நூலைக் கற்போருக்குப் பெருந்துணையாக இருக்கும் வண்ணம் இளம்பூரணர் கருத்தினையும், அவரொடு மாறுபட்டுரைக்கும் நச்சினார்க்கினியர் கருத்தினையும் விளக்கிப் பொருந்துவன இவை, பொருந்தாதன இவை எனக் குறித்தும், தொல்காப்பியக் கருத்தொடு நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம் முதலிய நூல்களோடு ஒப்பிட்டும், அவ்வந் நூற்பாக்களில் ‘விளக்கவுரை’ என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இளம் பூரணர் கருத்தின் வழிநின்று, ஒவ்வொரு இயலின் கருத்துக்களையும் அடைவு படுத்திப் பொருள் அமைப்பு என்ற பெயரில் அவ்வவ் வியலின் முன் தரப்பெற்றுள்ளது. நூலைப்பற்றியும் உரையைப் பற்றியும் அறியத்தகும் இன்றியமையாத செய்திகளை ‘ஆராய்ச்சி முன்னுரை’ என்ற தலைப்பில் காட்டப்பட்டுள்ளது. அறிஞருலகிற்கும், மாணக்கருலகிற்கும் இப்பதிப்புப் பெரிதும் பயன்தரும்.

*

ஆராய்ச்சி முன்னுரை

1. முன்னுரை:

என்றுமுள தென்தமிழ் எனச் சிறப்பிக்கப்படும் நம் தமிழ் மொழி காலத்தால் முதிர்ந்து விளங்குவது; சீலத்தால் உயர்ந்து விளங்குவது. என்றும் அழியாத் தன்மையோடிருத்தலின் இளமை குன்ருதிருப்பது. இத்தகைய சீரிளமைத் திறம் நம்மைச் செயல் மறந்து வாழ்த்துமாறு செய்வதில் வியப்பில்லை.

இத்தகைய அருமைமொழி எத்துணையோ இலக்கண இலக்கியங்களைக் கால எல்லைக்கு எட்டாத மிகப் பழங்காலத்திலேயே தன்பால் கொண்டு இலங்குகின்றது. இறைவனும் அவனருள் வழிப்பட்டு இயங்கிய அரசர்களாலும், புலவர் பெருமக்களாலும் சங்கம் அமைத்து மொழி வளர்க்கப்பட்டது. அத்தகைய சங்கங்கள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி வளர்ந்தன என்றும், அக்காலத்தே எத்துணையோ இலக்கிய இலக்கணங்கள் தோன்றின என்றும் இறைவனர் களவியல் உரையாசிரியரும், சிலப்பதிகார உரையாசிரியரும் கூறுகின்றனர். எனினும் இற்றைக்குக் கண்டு இன்புறும் அளவில் இருக்கும் முதனூல் தொல்காப்பியமேயாகும்.

2. தொல்காப்பியர்:

இவ்வரிய நூலை இயற்றியவர் தொல்காப்பியராவர். தொல்காப்பியர் என்ற பெயருக்குப் பழமையான காப்பியக்குடியில் பிறந்தோர் எனப் பொருள் காண்பர். வெள்ளூர்க் காப்பியன்,

காப்பியாற்றுக் காப்பியன், பல்காப்பியன் என வரும் பழம் பெயர்களை நோக்கக் காப்பியம் என்பது ஒரு குடிப்பெயராக இருத்தல் வேண்டும் என அறியலாம். இக்குடியினர் அறிவால் மிகச்சிறப்புற்று விளங்கியமையின் இக்குடிப்பெயரை ஆறு, ஊர்கள் முதலியவற்றுக்குக்கூடக் கொடுத்து வழங்கினர். காப்பியாறு, காப்பியாமூர், காப்பியக்குடி எனவரும் பெயர்கள் இவ்வுண்மையை விளக்கும். இக்குடியில் பிறந்து, காப்பியர் என்ற பெயருடையார் பலராக, அவர்களினின்றும் வேருக அறிதற்குத் 'தொல்' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டுத் 'தொல்காப்பியர்' என அழைக்கப் பட்டார். இப்பெயர் இவரது பெற்ருேரால் இவருக்கு வைக்கப் பட்ட இயற்பெயரேயாகும். இதனைத் 'தொல்காப்பிய னெனத் தன் பெயர் தோற்றி' எனவரும் சிறப்புப் பாயிரத்தால் நன்கறியலாம். இதுவன்றிச் சுக்கிரனது மரபைக் குறிக்கும் காவ்ய கோத்திரத்தில் பிறந்தார் என்ருே, சமதக்கினி என்னும் முனிவருடைய மகனுகத் திரணதூமாக்கினி என்னும் பெயருடன் இருந்தார் என்ருே கூறுவதெல்லாம் புனைந்துரையே யாகும்.

(அ) ஆசிரியர் அகத்தியனார் என்றல்:

அகத்தியனார் தலைச்சங்க காலத்தும், இடைச்சங்க காலத்தும் வாழ்ந்த புலவர் என்றும், அவரிடம் பயின்ற மாணவர்கள் பன்னிருவர் என்றும், அவருள் தலைமையானவர் தொல்காப்பியர் என்றும் உரையாசிரியர்கள் பலரும் குறிப்பிடுகின்றனர்[1]. எனினும் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்திலோ தொல்காப்பியத்திலோ இதற்குச் சான்ருக ஏதுமின்மையின் இக்கூற்று ஆராயத் தக்கதேயாகும்.

(ஆ) சமயம்:

மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய தெய்வங்களை முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய

1. பன்னிரு படலம்– பாயிரம்; தொல்–சொல்; சேனு 279 – உரை; தொல்–பொருள்–மரபு–பேரா 649 உரை; புறப்பொருள் வெண்பா மாலைப்பாயிரம்; அகப்பொருள் விளக்கப்பாயிரம்; இலக்கணக் கொத்து உரைச் சிறப்புப்பாயிரம்.

நான்குவகை நிலத்திற்கும் உரிய தெய்வமாகக் குறிப்பிடுகின்றார். கொற்றவைநிலை என்ற துறையில் வெற்றிக்குரிய தெய்வமாக வெற்றித்திருவைக் குறிப்பிடுகின்றார். கடவுளின் இயல்பினை விளக்கும் முகமாக 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்' என்றும், 'பால்வரை தெய்வம்' என்றும், குறிப்பிடுகின்றார். இச் சொற்களின் பொருளாழத்தை உற்று நோக்கின் இவரைச் சைவர் என்று கருத இடந்தருகின்றது. இதுபற்றித் தொல்காப்பிய எழுத்ததிகார, நச்சினார்க்கினிய உரைப் பதிப்பிலும் விளக்கி யுள்ளேன். ஆண்டுக்காண்க.

(இ) காலம்:

இடைச்சங்கத்தாருக்கும் கடைச்சங்கத்தாருக்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் என இறையனார் களவியலுரை பகருகின்றது. இந்நூலில் கூறப்பட்ட கணக்கின்படி இடைச்சங்கம் கி.மு. 1320-ல் தொடங்கப்பெற்றதாதல் வேண்டும் என்பது அறிஞர்களின் முடி பாகும். எனவே இவரது காலமும் அதுவேயாகும்,

3. நூலின் அமைப்பும் அழகும்:

இவ்வாசிரியரால் செய்யப்பட்ட நூல் தொல்காப்பியம் என்ற ஒன்றுமேயாம். அதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

நூல் என்பதற்கு இவர் கூறிய இலக்கணம் அனைத்தும் இவர் நூலில் அமைந்திருப்பதைக் காணலாம். கற்போர் எளிதில் நினைவு கொள்ளுமாறு இன்னோசையும், எதுகை மோனையும் அமைந்து இன்பம் பயந்து நிற்பது இந்நூலாகும். சென்று தேய்ந்து இறுதலின்றியும், மிகுதல் குறைதலின்றியும், அழகா கவும் செவ்விதாகவும் இந்நூல் இயன்றுள்ளது.

இந்நூல், எழுத்துச் சொல் பொருள் என்னும் மூன்று அதி காரங்களையுடையது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பது ஒன்பது இயல்களாக மொத்தம் இருபத்தேழு இயல்களை உடையது.

இம்மூன்று அதிகாரங்களிலும் உள்ள நூற்பாக்கள் எல்லாம், உரையாசிரியர்கள் கருத்திற்கேற்ப இணைத்தும் பிரித்தும் கூறப் பட்டுள்ளனவாதலின், அவற்றின் எண்ணிக்கையும் ஒவ்வொருவர் கருத்திற்கேற்ப மாறுபடுகின்றன.

எழுத்ததிகார நூற்பாக்கள் 483 என இளம்பூரணரும் நச்சி னார்க்கினியரும் கொள்வர். சொல்லதிகார நூற்பாக்கள் 456 என இளம்பூரணரும், 463 எனச் சேனாவரையரும் நச்சினார்க் கினியரும், 453 எனத் தெய்வச்சிலையாரும் கொள்வர். பொரு ளதிகார நூற்பாக்கள் 656 எனக் கொள்வர் இளம்பூரணர். பொருளதிகாரம் முழுமைக்குமாகப், பிற உரையாசிரியர்களின் உரை கிடைத்திலது.

எழுத்ததிகார இயல்களின் அமைப்பு முறையைப் பற்றி யும், நூற்பாக்களின் தொகையைப் பற்றியும் குறிப்பிடும் பழம் பாடல்கள் இரண்டுள. அவை வருமாறு:—

எழுத்ததிகார இயல்களின் அமைப்பு

'நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகை – பாலாம்
உருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கம்
தெரிவரிய குற்றுகரஞ் செப்பு'

எழுத்ததிகார நூற்பாக்களின் தொகை

'எழுத்ததி காரத்துச் சூத்திரங்கள் எல்லாம்
ஒழுக்கிய ஒன்பதோத் துள்ளும் – வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கள்
மேனூற்று வைத்தார் விரித்து'

இவர் இந்நூலைச் செய்திருக்கும் திறம் அறிந்து இன்புறுதற் குரியதாகும். ஒரே நூற்பாவைப் பல இடங்களில் கூறினும், அவ்வவ்விடத்திற்கு ஏற்ப அந்நூற்பாவின் பொருள் அமையச்

செய்தலும், ஒரே தொடர் பல நூற்பாக்களில் வருமாறு செய்தலும், அன்றி அத்தொடர் தனித்த ஒரு நூற்பாவாகவோ வருமாறு செய்தலும், மாட்டேறு பெற நூற்பாக்களைச் செய்தலும், இலக்கணம் கூறும் வகையில் ஆங்காங்குச் சொற்பொருள் விரித்தலும், வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்செய்த இவர், வழக்கு, செய்யுள் ஆகிய இவ்விரண்டிற்கும் பொதுப்பட விதி கூறுதலின்றிச் செய்யுட்கே உரிய விதிகளைத் தனித்துக் கூறுதலும் இவர்தம் பழக்கமாகும். இவையன்றிச் சில நூற்பாக்கள் இலக்கணப் பொருண்மைக்கு ஏற்பதோடு மெய்ப்பொருள் நுவல்வதற்கும் ஏற்புடையதாய் இருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

(i) ஒரே நூற்பா பல இடங்களில் வருதல்:

(1) 'வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே'-இந்நூற்பா, (217, 226, 253, 260, 267, 277 ஆகிய நூற்பாக்களாக) ஆறு இடங்களில் வருகின்றது.

(2) 'தொழிற் பெயரெல்லாம் தொழிற்பெயரியல'-இந்நூற்பா, (307. 328, 377, 402 ஆகிய நூற்பாக்களாக) நான்கு இடங்களில் வருகின்றது.

(3) 'அல்வழி யெல்லாம் உறழெனமொழிப'-இந்நூற்பா (369, 399 ஆகிய நூற்பாக்களாக) இரண்டு இடங்களில் வருகின்றது

(4) 'நான்கன் ஒற்றே லகார மாகும்' – இந்நூற்பா (453, 467 ஆகிய நூற்பாக்களாக) இரண்டு இடங்களில் வருகின்றது.

(5) 'உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது' – இந்நூற்பா (208, 395 ஆகிய நூற்பாக்களாக) இரண்டு இடங்களில் வருகின்றது.

(6) 'மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும், கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்'-இந்நூற்பா (276, 291 ஆகிய நூற்பாக்களாக) இரண்டு இடங்களில் வருகின்றது.

இவை இவ்வாறு வரினும் ஒவ்வோரிடத்திலும் இவற்றின் பொருள் வேறுபடும்.

(ii) ஒரே தொடர் பல இடங்களில் வருதல்:

(1) 'வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்' (157) என்றவரி, 'சொல்லதிகாரம் 115 – ஆம் நூற்பாவிலும், (2) 'அன்றி அனைத்தும் இயல்பென மொழிப' (211) என்ற வரி, எழுத்ததிகாரம் 225 ஆம் நூற்பாவிலும், (3) 'வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகுமே' (236) என்றவரி 281 – ஆம் நூற்பாவிலும், (4) 'மெல்லெழுத்து மிகுதல் ஆவயினான' (316) என்ற வரி, 321 – ஆம் நூற்பாவிலும், (5) 'வல்லெழுத்தியையின் அவ்வெழுத்து மிகுமே' (297) என்ற வரி, 358 – ஆம் நூற்பாவிலும் ஈற்றடியாக வந்துள்ளன. (6) 'ஒன்பான் இறுதி உருபுநிலை திரியா (து) இன்பெறல் வேண்டும் சாரியை' (459) என்றஇரண்டு வரிகளும் 470-ஆம் நூற்பாவிலும் வந்துள்ளன

(iii) ஒரு நூற்பா மற்றொரு நூற்பாவில் ஒருவரியாக வருதல்:

(1) 'வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே' (217) என்னும் நூற்பா, 293 – ஆம் நூற்பாவின் முதல் வரியாகவும், (2) 'சுட்டு முதல் இறுதி உருபியல் நிலையும்' (282) என்னும் நூற்பா, 264 – ஆம் நூற்பாவின் முதல் வரியாகவும், (3) 'அளவும் நிறையும் ஆயியல் திரியா' (477) என்னும் நூற்பா, 474 – ஆம் நூற்பாவின் முதல் வரியாகவும், வந்துள்ளமை காண்க.

(iv) இலக்கணம் கூறும் வகையில் சொற்பொருள் விரித்தல்:

(1) பனை என்பது அளவையும் (170) மரத்தையும் (284), (2) யா என்பது வினாவையும் (176) மரத்தையும் (230), (3) எல்லாம் என்பது அஃறிணைப் பொருளையும் (190), உயர்திணைப் பொருளையும் (191), (4) மா என்பது மரத்தையும் விலங்கையும் (232) அளவையும் (480), (5) புளி என்பது மரத்தையும் (245), சுவையையும் (246), (6) ஒடு என்பது மரத்தையும் நோயையும் (263), வேற்றுமை உருபையும் (114), (7) சே என்பது மரத்தையும் (279), பெற்றத்தையும் (280), (8) விசை

என்பது மரத்தையும், விசைத்தல் தொழிலையும் (283), (9) இல் என்பது வீட்டையும் (294), இன்மைப்பொருளையும் (373), (10) ஆண் என்பது ஆண்பால் விரவுப்பெயரையும் (304) மரத்தையும் (305), (11) விண் என்பது ஆகாயத்தையும் குறிப்பையும் (306), (12) எண் என்பது வரையறையையும் எள்ளையும் (309), (13) எகின் என்பது மரத்தையும் (337), அன்னப்பறவையையும் (338), (14) குமிழ் என்பது மரத்தையும், குமிழ்த்தல் தொழிலையும் (387) குறிக்கும்.

(v) தொடர்ந்து கூறும் மாட்டேற்று நூற்பாக்கள் :

ஆசிரியர் தொல்காப்பியருக்கு மாட்டேறுபெற நூற்பா யாப்பதில் பெருவிருப்புண்டு. இங்ஙனம் கூறுவதால் ஒரு விதியை மீண்டும் மீண்டும் நினைவு கூற ஏதுவாகின்றது. அன்றியும் சொற் சுருக்கமும் ஏற்படுகிறது. எழுத்ததிகாரத்தில் மட்டும், நூற்றுக்கு மேற்பட்ட இடங்கள் மாட்டேறுள்ள நூற்பாக்களாகக் காணப் படுகின்றன. இவையன்றி ஒருநூற்பா இன்னொரு நூற்பாவினோடும் அதனைப் பிறிதொரு நூற்பாவினோடும் தொடர்ந்து மாட்டெறிதலும் உண்டு. அவற்றை மட்டும் ஈண்டுக் காண்க.

இல்லம் என்னும் மரப்பெயர் மெல்லெழுத்துப் பெறும் என்பதை 5 நூற்பாக்களால் தொடர்ந்து மாட்டேறு பெறக் கூறியுள்ளார். இங்ஙனம் இருள் என்னும் சொல் அத்தும் இன்னும் பெறுதலை 5 நூற்பாக்களாலும், எகின் மரக்கிளவி அம் சாரியை பெறுதலை 3 நூற்பாக்களாலும் தொடர்ந்து மாட்டெறிகின்றார் அவை வருமாறு:—

1. இல்லமரப் பெயர் மெல்லெழுத்துப் பெறுதல்:

(1) 'இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே'. (314)

(2) 'விளாமரக் கிளவியும் ஞெமையும் நமையும்
ஆமுப் பெயரும் சேமர இயல' (283)

(3) 'சேஎண் மரபெயர் ஒடுமர இயற்றே' (279)

(4) 'ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே' (263)

(5) 'உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே'. (244)

2. இருள் என்னும் சொல் அத்தும் இன்னும் பெறுதல்:

(1) 'இருளென் கிளவி வெயிலியல் நிலையும்' (403)

(2) 'வெயிலென் கிளவி மழையியல் நிலையும்' (378)

(3) 'மழையென் கிளவி வளியியல் நிலையும்' (288)

(4) 'வளியென வரூஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப' (243)

(5) 'பனியென வரூஉம் கால வேற்றுமைக்(கு)
அத்தும் இன்னும் சாரியை யாகும்', (242)

3. எகின்மரக் கிளவி அம்முச் சாரியை பெறுதல்:

(1) 'எகின் மரமாயின் ஆண்மர இயற்றே' (337)

(2) 'ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே' (305)

(3) 'பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையும் காலை அம்மொடு சிவணும்
ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே
மெய்யவண் ஒழிய என்மனார் புலவர்', (284)

(vi) செய்யுட்கென்றே விதந்து கூறும் நூற்பாக்கள்:

(1) 'செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றுகும்' (51)

(2) 'நீட வருதல் செய்யுளுள் உரித்தே' (209)

(3) 'பலவற் றிறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான' (214)

(4) 'குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே' (235)

(5) 'இன்றி என்னும் வினையெஞ் சிறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே' (238)

(6) 'அன்றுவரு காலை ஆவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப' (259)

(7) 'செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்
ஐயென் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்
டகாரம் ணகார மாதல் வேண்டும்' (289)

(8) 'விண்என வருஉம் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை' (306)

(9) 'இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலும் உரித்தே செய்யு ளான' (317)

(10) 'பொன்னென் கிளவி ஈறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுள் மருங்கின் தொடரிய லான' (357)

(vii) மெய்ப்பொருள் நுவலும் நூற்பாக்கள்:

(1) 'மெய்யோ(டு) இயையினும் உயிரியல் திரியா'. (10)

இந்நூற்பா, உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களோடு இயைந்து நின்ற போதும், தத்தம் அளவும் குறியும் திரியா என்பதைக் கூறவந்ததாகும். எனினும், இதுவே உயிர்கள் தத்தம் வினைக்கேற்ப உடம்போடு இயையினும், அவை அவ்வுயிராந் தன்மையினின்றும் திரியா என்ற பொருளையும் தருதல் காண்க.

(2) மெய்யின் வழிய(து) உயிர்தோன்று நிலையே'. (18)

இந்நூற்பா, உயிர்மெய் யெழுத்துக்களில் மெய் முன்னரும் உயிர் அதன்பின்னரும் ஒலிக்கும் என்பதைக் கூறவந்ததாகும். எனினும் இதுவே, 'உயிர் காட்சிப்பொருள் அல்லவேனும், அவ்

வுயிர் எடுத்த உடம்பின் வாயிலாக அவ்வுயிர் உண்மை தெரிய வரும்' என்ற பொருளையும் தருதல் காண்க.

(3) இங்ஙனமே சொல்லதிகாரம் வினையியல் முதல் நூற்பாவும் காணப்படுகின்றது.

'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.'

இந்நூற்பா, வினைச்சொல் என்பது வேற்றுமையுருபினை ஏற்காது ஆராயுங்காலத்துக் காலத்தொடு தோன்றும் என்பதைக் கூற வந்ததாகும். எனினும் இதுவே, உயிர்களால் அளவின்றி ஈட்டப்பட்ட வினைதாமும், ஒருயிர் செய்த வினை பிறிதோருயிரைச் சார்தலாகிய வேற்றுமையின்றி, அவ்வவ்வுயிர் செய்த வினை அவ்வவ்வுயிர்க்கேயாய், ஆராயுங்காலத்து அவ்வினை வந்து உருக்கும் சமயத்தில் அவ்வுயிர்கள் மாட்டுத் தோன்றும்' என்னும் பொருளையும் தருதல் காண்க.

viii மக்கட் பெயர், விலங்கின் பெயர் முதலியன:

இந்நூலிலிருந்து ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்து வழங்கிய மக்கட் பெயர், நாட்பெயர் முதலியனவற்றுள் எவை யெவை பெரிதும் வழக்காற்றில் இருந்தன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்நூலில் கூறப்பட்டனவன்றி ஏனைய பெயர்கள் வழக்காற்றில் இருந்திருக்குமாயினும், ஆசிரியர் எடுத்தோது மாற்றிற்குச் சிறப்புப் பெற்றிருக்கும் பெயர்கள், இவையே எனத் தெரிகிறது. அவை வருமாறு:—

1. முறைப்பெயர்:— தந்தை (348), மக்கள் (351), தாய் (359), மகன் (360).

2. உணவுப்பெயர்:— நெல் (372), எள் (309).

3. தொழிற்பெயர்:— கம் (329), கன் (367).

4. எண்ணுப்பெயர்:— அரை (166), ஒன்று (438), இரண்டு (440), மூன்று (441), நான்கு (442), ஐந்து (443), ஆறு (458), ஏழ், (388), எட்டு (444), ஒன்பது (445), பத்து (391), தொண்ணூறு (445), நூறு (460), ஆயிரம் (318), தொள்ளாயிரம் (463), நாலுயிரம் (471)

5. நிறைப்பெயர்:— கா (170), கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை(171-ஆம் நூற்பா உரை).

6. அளவுப் பெயர்:— கலம் (169), பனை (170) தூணி, பதக்கு (240), சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு (171–ஆம் நூற்பா உரை).

7. நாட்பெயர்:— நாட் பெயர்களை ஆசிரியர் விதந்து கூறுரா யினும், அவர் ஈறுபற்றிக் கூறும் நூற்பாக்களின் துணைக்கொண்டு அவற்றையறிய முடிகின்றது. அவையாவன: பரணி, சோதி (இக்காலத்து சுவாதி என வழங்கும்) (248), மகம்; ஓணம் (332), கேட்டை (287).

8. திங்கட் பெயர்:— இப்பெயர்களையும் ஆசிரியர் விதந் தோற்றிலர். ஈறுபற்றிக் கூறப்படும் நூற்பாக்களின் துணைக் கொண்டே இவற்றையும் அறிய இயலுகின்றது. அவையாவன: சித்திரை (287), ஆடி (249).

இவ்வீறுகளில் நாட்பெயர், திங்கட் பெயர்களுள் வேறு பிறவும் உளவாகக், குறிப்பிட்ட இப்பெயர்களையே உரையாசிரியர்கள் காட்டற்குக் காரணம் தெரிந்திலது. பேராசிரியர் திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் இவ்வுரையாசிரியர்கள் காட்டும் பெயர்கள் அக்காலத்திருந்தனவா என்பது ஆராயத்தக்கது என்பர் இக்கருத்து இன்னும் ஆய்தற்குரியதாகும்.

9. காலப்பெயர்:— பண்டைச் சான்றோர் காலத்தைச் சிறு பொழுது, பெரும்பொழுது எனப் பிரிப்பர். அவற்றுள் பெரும் பொழுதாக இவ்வதிகாரத்திற் குறிப்பன இரண்டாம். அவை

யாவன: பனி (242), மழை (288). சிறுபொழுதாவன: வெயில், (378), இருள் (403).

10. பூதப்பெயர் :— ஆசிரியர் பொருளதிகாரத்தில் 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகம்' எனக் கூறுமிடத்து இவ்வைம்பெரும் பூதங்களையும் குறிப்பிடுவர். அவற்றுள் இரண்டினை இவ்வதிகாரத்தில் குறிக்கின்றார். அவை யாவன : வளி (243), விண் (306).

11. விலங்குப்பெயர்:— மா (232), சே-பெற்றம் (280).

12 புட்பெயர் :— எகின் (337), வண்டு (421), புள் (404)

13. நீர்வாழ்வன :— மீன் (340).

14. மரப்பெயர் :— யா, பிடா, தளா (230), மா (232), உதி (244), புளி (245), ஒடு (263), சே (279). விசை, ஞெமை, நமை (283), பனை, அரை, ஆவிரை (284), ஆண் (305), இல்லம் (314), எகின் (337), ஆர், வெதிர், சார் (364), பூல், வேல், ஆல் (376), குமிழ் (387).

15. கொடிப் பெயர்:— பீர் (366). இதனை மரம் என்பர் இளம் பூரணர்.

16. பூப்பெயர் :— பூப்பெயர் என்று பொதுப்படக் கூறுகிறார் ஆசிரியர் (269).

4. உரையாசிரியர்கள் :

இந்நூற்கு உரைகண்டவர்கள் அறுவர். அவர்கள் இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், பேராசிரியர், கல்லாடர், பழைய உரைகாரர் ஆவர். இவர்களுள் முதல் உரையாசிரியர் இளம்பூரணரேயாவார். இவ்வுரைக்கு முன்னமேயே தொல்காப்பியத்திற்கு உரைகள் பல இருந்தன. அதனை, இளம்பூரணரே 'என்பாரும் உளர்', 'என்பர் ஒருசாரார்'

எனக் கூறுமாற்றானும், நச்சினார்க்கினியர் சில விடங்களில் 'இங் ஙனம் பாடம் ஓதுப' என்றும், 'உதாரணம் காட்டுப' என்றும் கூறுமாற்றானும் அறியலாம். நச்சினார்க்கினியர் 362, 477–ஆம் நூற்பாக்களில் குறிக்கும் செய்திகள் இளம்பூரணர் உரையில் காணப்பட்டில.

எனவே, இளம்பூரணருக்கு முன்னமேயே இந்நூற்கு உரைகள் பல இருந்தன என்பது வெள்ளிடைமலை. எனினும் இளம்பூரணர் சேனாவரையர் முதலியோர்தம் உரைவந்தபின், அவை நிலையற்றொழிந்தன எனத்தெரிகிறது. இளம்பூரணரை யடுத்துச் சேனா வரையரும், பேராசியரும், இவர்களை யடுத்துச் நச்சினார்க் கினியரும் வாழ்ந்தவராவர். தெய்வச்சிலையார் இவர்களுக்கு முன்னோ பின்னோ எனத்தெரிந்திலது. கல்லாடர் நச்சினார்க்கினி யருக்குப்பின் வாழ்ந்தவர் ஆவர்.

இவர்களில் இளம்பூரணர் உரையே முழுமைக்கும் கிடைத் துள்ளது, சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர், உரைகள் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உள்ளன. பேராசிரியர் உரை பொருளதிகாரத்துள் பிற்பகுதியான மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கே உள்ளது. நச்சினார்க்கினியர் உரை பொருளதிகாரப் பிற்பகுதியில் மெய்ப்பாட்டியல், உவமவியல், மரபியல் ஆகிய மூன்று இயல் களுக்குக் கிடைக்கவில்லை. எனினும் இவர் இப்பகுதிக்கும் உரை யெழுதியுள்ளமை, இப்பொருளதிகார முற்பகுதியில் ஆங்காங்கு எழுதியுள்ள குறிப்புக்களால் தெரியவருகிறது. இவ்வுரைகளே யன்றிச் சொல்லதிகாரத்திற்குக் கிளவியாக்கம் முதல் வேற்றுமை மயங்கியல் (சில நூற்பாக்கள் தவிர) வரை பழைய உரை யொன் றும் உளது. அது யாருடையது எனத் தெரிந்திலது.

5. இளம்பூரணர்:

தொல்காப்பியத்திற்கு உரைகண்ட அறுவருள் இவரே முதல் உரையாசிரியர் ஆவர். 'உரையாசிரியராகிய இளம்பூரணஅடிகள்' என அடியார்க்குநல்லாரும், 'உளங்கூர் கேள்வி இளம்பூரணர்

எனும் ஏதமில் மாதவர்' என மயிலைநாதரும் குறிப்பிடுவதிலிருந்து இவர் இளமையிலே பேரறிவு படைத்திருந்தனர் என்றும், துறவுமேற்கொண்டிருந்தனர் என்றும் அறியமுடிகிறது.

அன்றியும் தொல்காப்பியத்துப் பொருளதிகார முதல் நூற்பாவிலேயே, 'இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு அறிந்து கொள்க' எனக்கூறுவதும் இவர் துறவு நெறியினர் என்பதை வலியுறுத்தும்.

இவையன்றி இவர் வாழ்ந்த இடம், பெற்றோர், எழுதிய பிறவுரைகள் பற்றி, இவரைப்பற்றிய சிறப்புப்பாயிரப் பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

[1]'தண்கடல் அசைவளி யுறுப்பத் திரைபிதிர்ந்
தூங்கலின் பொருட்குவைப் புணரியில் ஐயுற
அலைவமன் மயரினை யகற்ற எழுத்தால்
திணைதுறை உட்கோள் இயற்றிற னறியாக்
கவர்பொருள் மாக்கள் மயக்கினுக் கிரங்கிப்
பாயிநுங் காப்பியச் சுவைபல உணர்ந்தகம்
தோய மடுத்தோர் தொல்காப் பியனுரை
முத்திற ஒத்தினுக் கொத்தசீர்க் காண்டிகை
சொன்னிலை மேற்கோள் தொகுபொருள் துணிபுடன்
இயல்நூற் பாமுடி பிணைத்தடி காட்டித்
தலைகடை கூட்டித் தந்தனன் பண்டே
கொங்குவேள் மாக்கதை குறிப்புரை கண்டோன்
தன்னறி அளவையில் நல்லுரை தேவர்
பன்மணிக் குறட்பா மதிப்பிடப் பொறித்தோன்
குணகடற் செல்லூர் மணக்குடி புரியான்
தண்முல்லை முகையென வெண்ணூல் சூடி
அந்தணன் துறவோன் அருமறை யுணர்ந்த
இளம்போதி பயந்த புனிதன்
இளம்பூ ரணனுரை இனிதுவாழ் கீங்கென்'

1. செந்தமிழ்–தொகுதி 42; பக்கம் 157.

இப்பாடலிலிருந்து இவர்தம் ஊர் செல்லூர் மணக்குடிபுரி என்றும், இவர் அந்தணர் குலத்தவர் என்றும், இளம்போதி என்பாரின் மைந்தர் என்றும், இவர் தொல்காப்பியத்திற்கேயன்றி கொங்குவேள் மாக்கதை, திருக்குறள் ஆகிய நூற்களுக்கும் உரை வகுத்தவர் என்றும் அறிய முடிகின்றது. மணக்குடி புரியான் என்ற பெயர், திருக்குறளுக்கு உரை வகுத்த மணக்குடவர் என்ற பெயரோடொத்தது என்றும், தொல்காப்பியப் புறத்திணையியலுக்கு இவர் எழுதியுள்ள உரைநடைப் பகுதியும், திருக்குறளுக்கு மணக் குடவர் எழுதியுள்ள உரைநடைப் பகுதியும் ஒத்திருத்தல் இதற்குச் சான்றாகும் என்றும் இப்பாடலை ஆய்ந்த திரு. தி வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் குறித்துள்ளார். கொங்குவேள் மாக் கதைக்கு இவர் உரை எழுதியதாகக் கூறப்படினும் அது கிடைத் திலது. எனினும் இக்கருத்துக்கள் இன்னும் ஆராயத் தக்கனவா யுள்ளன.

(அ) சமயம்:

'னகாரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பால் பின் வைக்கப்பட்டது' என முதல் நூற்பா உரையில் இவர் கூறுவதால் இவரைச் சமண மதத்தினர் என்பர். இளம் பூரணன் என்னும் பெயர், என்றும் இளையனாய்ப் பேரறிவுச் செல்வனாய் விளங்கும் முருகப் பெருமானைக் குறிக்கும் பெயராகும். பொருளியல் முதல் நூற்பாவிற்கு உரையெழுதுங்கால் இறைவனது தாள் நிழலைச் 'சிவானுபூதி' எனக் குறிக்கின்றார். அன்றியும் 'தாமரைபுரையும் காமர் சேவடி எனத் தொடங்கும் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துப் பாடலை உவமஇயல் 3, 6; செய்யுளியலில் 11, 49, 74 ஆகிய நூற்பாக்களில் எடுத்துக்காட்டுகின்றார். இங்ஙனம் இவரது பெயரையும் இவ்வுரைகளையும் ஒத்து நோக்குழி இவரைச் சைவர் என்று துணிய இடந்தருகின்றது.

(ஆ) காலம்:

தொல்காப்பியத்தையும் முதல் உரையாசிரியராகிய இவ் விளம்பூரணரின் உரையையும் தழுவியே பவணந்தி முனிவர்

நன்னூலைச் செய்துள்ளார். இதனை இவ்வதிகாரத்து ஆங்காங்கு உள்ள நூற்பக்களிலும் விளக்கியுள்ளேன். பவணந்தியாரின் காலம் இற்றைக்குச் சுமார் 750 ஆண்டுகட்குமுன் என்பர் வரலாற்று ஆசிரியர்கள். எனவே இவ்வுரையாசிரியர் காலம் அவருக்குச் சிறிது முந்தியதாகலாம். எனவே இவர் காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டு எனக் கருதலாம்.

6. உரைநலம்:

இவருக்குப் பின் வந்த சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலியோர் இவர்தம் உரையை ஆங்காங்கு மறுத்துச் செல்லினும் இவர்பால் அவர்களனைவரும் பெருமதிப்பு வைத்திருந்தனர் என்பதை அவரவர் உரையால் நன்கறியமுடிகின்றது. அவர்களனைவரும் இவர்தம் இயற்பெயரைக் குறியாது உரையாசிரியர் என்றே குறித்துச் செல்லுகின்றனர். ஒருசில இடங்களில் உரையாசிரியர் கருத்தாக எடுத்து மறுத்த இடங்கள் இப்பொழுது காணக் கிடைக்கும் இவர்தம் உரையில் இலவாதல் பற்றி உரையாசிரியர் என்பாரும் இளம்பூரணர் என்பாரும் வேறு வேறு என்பர் சிலர். எனினும் அது பொருந்துவதன்றாம்.

இவர்தம் உரை ஆற்றொழுக்காக அமைந்து செல்கிறது. கருத்து, பதப்பொருள், காட்டு ஆகிய மூன்றும் கொண்டிலங்குவது. இன்றியமையாது விளக்கவேண்டிய இடங்களில் மட்டும் விளக்கிப் படிப்போருள்ளத்தில் நூற்கருத்தையே இடம்பெறச் செய்யும் இயல்பினது. ஐயுறுதற்கு ஏதுவான பொருளை இங்ஙனமிருக்கும் போலும் எனக் கூறிச் செல்வது இவ்வுரையின் இயல்பாகும். எடுத்துக்காட்டாக 10, 33, 116, 373, 431 ஆகிய நூற்பாக்களைக் காண்க.

இவ்வதிகாரத்தில் நச்சினார்க்கினியர் இளம்பூரணரை மறுத்துக் கூறுமிடங்களாக ஏறத்தாழ 21 இடங்கள் உள்ளன. இவற்றுள் இருவருரையும் ஏலாத இடங்கள் இரண்டாகும். 1. சிறப்புப்பாயிர உரை, 2. நூன்மரபின் பெயர்க்காரண உரை. நச்சினார்க்கினியர் உரை சிறக்குமிடம் 317-ஆம் நூற்பாவாகும். எஞ்சிய 18 இடங்

களிலும் இளம்பூரணர் உரையே ஆசிரியர் கருத்தொடுபட்ட உரையாக அமைந்துள்ளது. 22, 23, 27, 28, 33, 34, 40, 45, 47, 50, 53, 101, 212, 408, 409, 410 முதலிய நூற்பாக்களுக்கு இருவருரையையும் ஒத்து நோக்கின் இவ்வுண்மை புலனாகும். இது பற்றியே எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர் உரையே சிறப்புடைத்து எனப் பலரும் போற்றுவாராயினர். 'உளங்கூர் உரையாம் இளம்பூரணம்' என இலக்கணக்கொத்து உரையுடையார் கூறிய கூற்று மிகவும் பொருந்துவதாகும்.

1. உவமைகள்:

இளம்பூரணர் உரை உவமைநலம் சான்றது. அவ்வுவமைகள் பலவும் மிக எளிமையாகவும் மிக அரிய பொருளை விளக்கிக் காட்டுவனவாகவும் உள்ளன. அவை வருமாறு: 1. அணியிழை மகளிர்க்கு அவ்வணியிற் சிறந்த ஆடை போல (பக்—2) 2. சந்தனக் கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாதது போல (பக்-32), 3. நாலுழக்குக் கொண்டது நாழி என்றாற் போல (பக்—37), 4. பாலும் நீரும் போல, விரல்நுனி தலைப் பெய்தாற் போல (பக்—47).

2. ஆசிரியர்களைப்பற்றிய குறிப்புக்கள்:

(i) அகத்தியர்:

இவர் செய்த அகத்தியம் தொல்காப்பியத்திற்கு முதனூலாகும். இவர் இசைநூலாசிரியருமாவர் (நூற்—33 உரை).

(ii) தொல்காப்பியர்:

எழுத்ததிகாரத்தில் ஆசிரியர் பெயர்வினையல்லனவற்றிற்குக் கருவி செய்யார் (32, 109, 185 உரை காண்க). ஆசிரியர் மிகைபடக் கூறியிருப்பின் அதற்கு அவர் கருத்தை இன்னதெனத் தெரிந்து கொள்ள வேண்டுமேயன்றி மிகைபடக் கூறலாகக் கருதுதல் கூடாது (178 ஆம் நூற்பா உரை).

(3) பாடவேறுபாடுகள்:

எழுத்ததிகாரத்தில் மட்டும் பாடங்கொள்ளும் முறையில் நச்சினார்க்கினியரொடு இளம்பூரணர் மாறுபட்டுரைக்கும் இடங்கள் 35 ஆகும். அவை வருமாறு:

எண்	நூற்பா	இளம்பூரணர்	நச்சினார்க்கினியர்
1.	11	அளபு	அளவு
2.	13	அரையளபு	அரையளவு
3.	22	மெய்ம்மயங்கு	மெய்ம்மயக்கு
4.	48	மூன்றும்முன்ஒற்ற	மூன்றும்ஒற்ற
5.	90	ரகாரழகாரம்	ரகாரம் ழகாரம்
6.	103	அளபு	அளவு
7.	104	அறுநான்கீரெடு	அறுநான்கீற்ரெடு
8.	122	அளபொடு	அளவொடு
9.	141	உருபுகொளல்	உருவுகொளல்
10.	152	உறழ்பாகுநவும்	உறழாகுநவும்
11.	155	இகரஈற்றுப்பெயர்	இகரஇறுபெயர்
12.	159	நிலைஇய	நிலைய
13.	161	தன்னுருபு	தன்னுரு
14.	189	ஆஎஆகும்	ஆஎவ்வாகும்
15.	212	சேயென்கிளவி	செயவென்கிளவி
16.	215	றகரவொற்ருதலும்	றகரவொற்ருகலும்
17.	241	டகாரம்	டகரம்
18.	257	இயல்பே	இயல
19.	276	மாறுகொள்	மாறுகோள்
20.	283	அவைமுப்பெயரும்	ஆமுப்பெயரும்
21.	292	ஒழிந்தவற்றியற்றே	மொழிந்தவற்றியற்றே

எண்	நூற்பா	இளம்பூரணர்	நச்சினார்க்கினியர்
22.	343	இறுதியோடுறழும்	இறுதியொடுறழும்
23.	351	வழியே	வழியும்
24.	364	அல்பெயரெண்ணும்	அல்பெயரெண்ணினும்
25.	405	பெயர்நிலைக்கிளவியும்	பெயர்ச்சொல்இறுதி
26.	409	நிறையும்	நிலையும்
27.	433	ஒற்றும் இறுதியும்	ஒற்றும்உகரமும்
28.	438	இயற்கைக் குற்றியலுகரம்	இயற்கை குற்றியலுகரம்
29.	445	றகாரம்	றகரம்
30.	451	நமவருங்காலை	நமவருகாலை
31.	452	வகாரம்	வகரம்
32.	474	திரியா	திரியாது
33.	476	இன்னென்சாரியை	இன்னும்சாரியை
34.	479	யாவருங்காலை	யாவருகாலை
35.	480	அளபொடு	அளவொடு

இவற்றுள் சில பாட வேறுபாடுகள் ஏடுபெயர்த் தெழுதினோராலும் நேர்ந்திருக்கலாம். அளபு என்ற பாடத்தினும் அளவு என்ற பாடமே சிறப்புடைய தாகும். இங்ஙனமே 141-ஆம் நூற்பாவில் உருபு எனப் பாடங் கொள்வதிலும் உருவு என்ற பாடமே சிறப்புடைத்தாகும். 409-ஆம் நூற்பாவில் நிறையும் என்ற பாடத்தினும் நிலையும் என்ற பாடமே சிறப்புடைத்தாகும். ஏனைய சொல் வேறுபடுதலின்றிப் பொருள் வேறுபடுதலின்று.

(4) நூற்பா அமைப்பதில் வேறுபாடு:

இளம்பூரணர் 102, 103 ஆகக் கொண்ட இருநூற்பாக் களையும் நச்சினார்க்கினியர் ஒரே நூற்பாவாகக் கொள்வர். நச்சி

ஞர்க்கினியர் 440, 441 ஆகக் கொண்ட இருநூற்பாக்களையும் இளம்பூரணர் ஒரே நூற்பாவாகக் கொள்வர். இவையன்றி 2, 4 ஆம் நூற்பாக்களில் சீர் பிரித்து அமைக்குமாற்றிலும் இருவரும் வேறுபடுகின்றனர்.

இளம்பூரணர் பிரிக்குமாறு:—

'அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன' (2)

'ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப' (4)

நச்சினார்க்கினியர் பிரிக்குமாறு:—

'அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன (2)

ஆ ஈ ஊ
ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப (4)

7. எழுத்ததிகார நூற்பாக்களைப் பிற உரையாசிரியர்கள் எடுத்தாண்ட இடங்கள்:

தொல்காப்பிய உரையாசிரியர்கள் அறுவரில் சேனாவரையரும், தெய்வச் சிலையாரும், பேராசிரியரும், தத்தம் பகுதிக்கு உரையெழுதுங்கால் எழுத்ததிகார நூற்பாக்களைப் பல இடங்

களில் எடுத்தாண்டும், ஒரோவழி உரைவகுத்தும் சென்றுள் ளனர்.

அவை வருமாறு:—

(i) சேனாவரையர் எடுத்தாண்ட இடங்கள்:

சொல்லதிகாரம்:- (எண்-நூற்பா எண்) 1, 115, 187, 226, 250, 294, 415, 420, 452.

(ii) தெய்வச்சிலையார் எடுத்தாண்ட இடங்கள்:

சொல்லதிகாரம்:- 182, 267, 394, 399.

(iii) பேராசிரியர் எடுத்தாண்டஇடங்கள்:

செய்யுளியல்:—314, 317, 320, 322, 324, 329, 330, 353, 364, 406, 457, 526, 535.

மரபியல்:—627, 653, 655, 663, 995.

8. முடிவுரை:

எழுத்ததிகாரம் முழுவதும் சுவைத்து இன்புறுதற்குத் துணை புரிந்த இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவரின் பெருந்தொண்டையும், மேற்காட்டியவாறு இவ்வதிகாரத்திலுள்ள நூற்பாக்களை எடுத்தாண்டதன் வாயிலாகத் தம் கருத்தையும் இன்னது என விளக்கி இன்புறச் செய்திருக்கும் சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் ஆகியோரின் பெருந்தொண்டையும் மறக்கப்போமோ! இப்பேராசிரியர்களின் மதிநுட்பத்தோடு நமது மதிநுட்பத்தையும் ஒருங்கிணைவித்து நூலைச் சுவைப்போமாக!

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'.

—o—

பொருளடக்கம்

அ. ஆசியுரை

ஆ. அணிந்துரை

இ. நன்றியுரை

ஈ. பதிப்புரை

உ. பதிப்பின் சிறப்பு

ஊ. ஆராய்ச்சி முன்னுரை i-xxi

எ. நூல்

1.	சிறப்புப்பாயிரம்	1
2.	நூன்மரபு	19
3.	மொழிமரபு	61
4.	பிறப்பியல்	108
5.	புணரியல்	124
6.	தொகைமரபு	165
7.	உருபியல்	202
8.	உயிர் மயங்கியல்	229
9.	புள்ளி மயங்கியல்	303
10.	குற்றியலுகரப் புணரியல்	376

ஏ. நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை 431

தொல்காப்பியம்

எழுத்ததிகாரம்

இளம்பூரணருரை

1

சிறப்புப்பாயிரம்

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

என்பது பாயிரம்.

எந்நூல் உரைப்பினும் அந்நூலுக்குப் பாயிரம் உரைத்து உரைக்கவென்பது மரபு. என்னை?

' ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே '

என்பவாகலின்.

பாயிரமென்பது புறவுரை. அது நூற்குப் புறவுரையேல் அதுகேட்டு என்னை பயனெனின், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள்போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும் திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம்போல அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருதலானும், பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனில் குறிச்சி புக்க மான்போல மாணாக்கன் இடர்ப்படுமாகலானும், பாயிரங்கேட்டல் பயனுடைத்தாயிற்று.

அப்பாயிரம் பொதுவும் சிறப்பும் என இருவகைத்து. எல்லா நூன்முகத்தும் பொதுவாக உரைக்கப்படுதலிற் பொதுவெனப் பட்டது. ' ஈவோன்றன்மை ' முதலிய நூலுட் சொல்லும் பொருளல்லாத புறப்பொருளைக் கூறும் பொதுப்பாயிரம் போலாது, நூலகத்தெல்லாம் பயத்தன் மாத்திரையேயன்றி அந்நூலிற் சொல்லப்படுகின்ற பொருள் முதலிய உணர்த்தலின், அணியிழை மகளிர்க்கு அவ்வணியிற் சிறந்த ஆடைபோல நூற்குச் சிறத்தலாற் சிறப்பெனப்பட்டது.

அவற்றுள் பொது நால்வகைத்து:

' ஈவோன் தன்மை யீத லியற்கை
கொள்வோன் தன்மை கோடன் மரபென
ஈரிரண் டென்ப பொதுவின் தொகையே. '

இதனான் அறிக.

ஈவோர் கற்கப்படுவோரும் கற்கப்படாதோரும் என இருவகையர். கற்கப்படுவோர் நான்கு திறத்தான் உவமம் கூறப்படுவர்.

'மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்
உலைவி லுணர்வுடை யார்.'

இதனான் அறிக.

இனிக் கற்கப்படாதார்க்குக் கூறும் உவமமும் நால்வகைத்து :

'கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு
குண்டிகைப் பருத்தியோ டிவையென மொழிப.'

இதனான் அறிக.

ஈதலியற்கை :

'ஈத லியல்பே யியல்புறக் கிளப்பின்
பொழிப்பே யகலம் நுட்ப மெச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்
தெளிந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோ னுணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்.'

இதனான் அறிக.

கொள்வோர் கற்பிக்கப்படுவோரும் கற்பிக்கப்படாதோரும் என இருவகையர். கற்பிக்கப்படுவோர் அறுவகையர். அவர்தாம்,

'தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளனோ டிவரென மொழிப.'

இதனான் அறிக.

இவர் தன்மை :

'அன்னங் கிளியே நன்னிற நெய்யரி
யானை ஆனே றென்றிவை போலக்
கூறிக் கொள்ப குணமாண் டோரே.'

இதனான் அறிக.

இனிக் கற்பிக்கப்படாதார் எண்வகையர் :

'மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன்
அடுநோய்ப் பிணியாளன் ஆருச் சினத்தன்
தடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்
நெடுநூலைக் கற்கலாதார்.'

இதனுன் அறிக.

இவர் தன்மை :

'குரங்கெறி விளங்கா யெருமை யாடே
தோணி யென்றுங் கிவையென மொழிப.'

இதனுன் அறிக.

கோடன் மரபு :

[1]' கொள்வோன் முறைமை கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
முன்னும் பின்னும் இரவினும் பகலினும்
அகலா னாகி அன்பொடு புணர்ந்தாங்
காசற உணர்ந்தான் வாவென வந்தாங்
கிருவென இருந்தே டவிழென வவிழ்த்துச்
சொல்லெனச் சொல்லிப் போவெனப் போகி
[2]நெஞ்சுகள னாகச் செவிவா யாகக்
கேட்டவை கேட்டவை வல்ல னாகிப்
போற்றிக் கோட லவனது தொழிலே.'

'எத்திறத் தாசா னுவக்கும் அத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே.'

'செவ்வன் தெரிகிற்பான் மெய்ந்நோக்கிக் காண்கிற்பான்
பல்லுரையுங் கேட்பான் மிகப்பெரிதும் காதலான்
தெய்வத்தைப் போல மதிப்பான் திரிபில்லான்

---

1. 'கோடல் மரபு கூறுங் காலை'.

2. 'பகுகுவ னன்ன ஆர்வத்த னாகிச், செவிவா யாக நெஞ்சு கள னாக' என்பன நச்சினார்க்கினியர் பாடங்கள்.

இவ்வாறு மாண்பு முடையாற் குரைப்பவே
செவ்விதி னூலைத் தெரிந்து.'

'வழக்கின் இலக்கணம் இழுக்கின் றறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினுதல் வினயவை விடுத்த லென்றிவை
கடனுக் கொளினே மடநனி யிகக்கும்.'

'அனையன் அல்லோன் கொள்குவ னுயின்
வினையி னுழப்பொடு பயன்றலைப் படாஅன்

இவற்ருன் அறிக.

இவ்வாறு கோடன் மரபுடைய மாணுக்கன் நூன்முற்ற அறிந்தாணுமாறு:

'ஆசா னுரைத்தவை யமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னுகும்.'

'அவ்வினை யாளரொடு பயில்வகை யொருபால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு பாலும்
மையறு புலமை மாண்புநனி யுடைத்தே.'

இவற்ருன் அறிக.

சிறப்புப் பதினெரு வகைத்து:

'ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனே டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.'

'காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே.'

இவற்ருன் அறிக.

இனி அச்சிறப்பிலக்கணம் செப்புமாறு :

' பாயிரத் திலக்கணம் பகருங் காலை
நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி
ஆசிரியத் தானும் வெண்பா வானும்
மருவிய வகையான் நுவறல் வேண்டும்.

இதனுன் அறிக.

நூல் செய்தான் பாயிரம் செய்வானல்லன் :

' தோன்ரு தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே. '

என்பவாகலின்.

பாயிரம் செய்வார் தன் ஆசிரியனும், தன்னேடு ஒருங்கு கற்ற மாணுக்கனும், தன் மாணுக்கனும் என மூவகையர். அவருள் இந்நூற்குப் பாயிரம் செய்தார் தன்னேடு ஒருங்கு கற்ற பனம்பாரனர்.

இதன் பொருள் : வடவேங்கடம் தென்குமரி ஆ இடைத் தமிழ் கூறும் நல் உலகத்து வழக்கும் செய்யுளும் ஆ இரு முதலின் - வடக்கின்கண் ணுளதாகிய வேங்கடமும் தெற்கின்கண் ணுளதாகிய குமரியுமாகிய அவற்றை எல்லையாக வுடைய நிலத்து வழங்கும் தமிழ்மொழியினைக் கூறும் நன்மக்களான் வழங்கும் வழக்கும் செய்யுளுமாகிய இரு காரணத்தாலும், எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி - எழுத்திலக்கணத்தினையும் சொல் லிலக்கணத்தினையும் பொருளிலக்கணத்தினையும் ஆராய்ந்து, செந் தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு - (அவ்வாராய்ச்சியிற் குறைபாடுடையவற்றிற்குச்) செந்தமிழினது இயல்பு பொருந்தின செந்தமிழ் நிலத்து வழக்கோடு முதல்நூல் களிற் சொன்னவற்றினைக் கண்டு, முறைப்பட எண்ணி - அவ் விலக்கணம் முறைப்பட ஆராய்ந்து, நிலம்தரு திருவின் பாண்டியன் அவையத்து - மாற்ருரது நிலத்தினைத் தன்கீழ் வாழ்வார்க்குக் கொண்டுகொடுக்கும் போர்த்திருவினையுடைய

பாண்டியன் மாகீர்த்தியது அவைக்கண்ணே, அறம் கரை நாவின் நால்மறை முற்றிய அதங்கோட்டு ஆசாற்கு - (அவ் வவையுள்ளார்க் கேற்பத் தெரிந்தே நின்ற) மெய் சொல்லும் நாவினையுடைய நான்கு வேதத்தினையும் முற்றவுணர்ந்த அதங் கோடு என்கின்ற ஊரின் ஆசானுக்கு, அரில் தபத் தெரிந்து - கடா அறத் தெரிந்துகூறி, மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி - (அவ்வெழுத்தும் சொல்லும் செய்கின்றுழி முன்னை நூல்போல எழுத்திலக்கணம் சொல்லுட்சென்று) மயங்காத முறைமை யானே எழுத்திலக்கணத்தினை வேறு தெரிவித்து, மல்கு நீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி - (அவ்வாறு செய்கின்றுழி) மிக்க நீரையுடைய கடலாகிய எல்லையையுடைய உலகின்கண்ணே இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணத்தினை நிறைய அறிந்த பழைய காப்பியக்குடியிலுள்ளோனெனத் தன் பெயரைத் தோற்றுவித்து, போக்கு அறுபனுவல் - நூற்குச் சொல்லப்பட்ட குற்றங்க ளற்ற தன்னூலுள்ளே, புலம் தொகுத்தோன் - அவ்விலக்கணங்களைத் தொகுத்துக் கூறினான், (அவன் யாரெனில்) பல் புகழ் நிறுத்த படிமையோன் - (தவத்தான் வரும்) பல் புகழ்களை உலகிலே நிறுத்தின தவவொழுக்கத்தினை யுடையான் என்றவாறு.

வழக்கும் செய்யுளும் ஆ இரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி முறைப்பட எண்ணி, பாண்டியன் அவையத்து அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத் தெரிந்து, எழுத்திலக்கணத் தைச் சொல்லும் முறைமை மயங்கா மரபிற் காட்டி, தொல் காப்பியனெனத் தன் பெயர் தோற்றி, பனுவலுள் புலந்தொகுத் தோன் படிமையோன் எனக் கூட்டுக.

'வடவேங்கடந் தென்குமரி' யெனவே, எல்லை பெறப் பட்டது. 'வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்' எனவே, நூல் நுதலியதூஉம் பயனும் பெறப்பட்டன. 'முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி' யெனவே, வழியும் யாப்பும் காரணமும் பெறப்பட்டன. 'பாண்டியனவையத்' தெனவே, காலமுங் களனும் பெறப்பட்டன. 'அதங்கோட்டாசாற்கு அரில்தபத்

தெரிந்து' எனவே, கேட்டோர் பெறப்பட்டது. 'தொல்காப்பிய னெனத் தன்பெயர் தோற்றி' யெனவே, ஆக்கியோன் பெயரும் நூற்பெயரும் பெறப்பட்டன.

மங்கலத்திசையாகலின், வடக்கு முன் கூறப்பட்டது. கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின், தெற்கும் எல்லை கூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிறநாடு இன்மையின், கூறப் படாவாயின. பிற இரண்டெல்லை கூருது இம்மலையும் ஆறும் கூறியது, அவை தீர்த்தமாகலானும் கேடிலவாதலானும் எல்லா ராலும் அறியப்படுதலானுமென்பது. இவை அகப்பாட்டெல்லை. ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தென்றது, அவ்வெல்லை தமிழ் கூறும் நல்லாசிரியரது என்றவாறு. நல்லாசிரியர் – அகத்தியனுர் முதலாயினேர். உலக மென்பது ஆசிரியரை. அ என்றது ஆகுபெயரான், அவற்றை எல்லையாக வுடைய நிலத் தினை. இடையென்பது ஏழா முருபு. முறைப்பட வெண்ணி யென்றது, அம் முந்து நூல்களில் ஒன்றற்குரிய இலக்கணத்தினை ஒன்றன் இலக்கணத்தோடு ஆராய்ந்தாற்போல ஆராயாது முறைப்பட ஆராய்ந்து என்றவாறு. மற்று, நூல் செய்யும் இலக்கணமெல்லாம் இந்நூலுட்படச் செய்தானென்பது இம் 'முறைப்பட வெண்ணி' யென்றதனுற் கொள்க. அவையாமாறு :

'ஒத்தே சூத்திர மெனவிரு வகைய.'

'நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.'
(செய்யுளியல் 171)

'நுட்ப மொட்பந் திட்பஞ் சொல்லிற்
சுருக்கங் கருத்துப் பகுதியொடு தொகைஇ
வருத்தமில் பொருட்பய னிகழ்ச்சி சூத்திரம்.'

'பொதுவினுஞ் சிறப்பினும் போற்றுங் காலைப்
பெறுதல் பெற்றவை காத்தல் காப்பொடு
பிறிதுபெற நிகழ்த்த லதன்கருத் தாகும்.'

'அதுவே
பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடை யென்றதன் விகற்பமோ
டொன்றிய குறியே யொன்று மென்ப.'

'ஆற்ற தொழுக்கே தேரைப் பாய்வே
சீய நோக்கே பருந்து வீழ்வென்(று)
ஆவகை நான்கே கிடக்கைப் பயனே.'

'பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்
பழிப்பில் சூத்திரப் பயனான் கென்ப.'

'பாடங் கண்ணழி வுதாரண மென்றிவை
நாடிற் றிரிபில வாகுதல் பொழிப்பே.'

'தன்னூல் மருங்கினும் பிறநூல் மருங்கினுந்
துன்னிய கடாவின் புறந்தோன்று விகற்பம்
பன்னிய வகல மென்மனார் புலவர்.'

'ஏதுவி னுங்கவை துடைத்தல் நுட்பம்.'

'துடைத்துக்கொள் பொருளை யெச்ச மென்ப.'

இவற்றானும் பிறவற்றானும் அறிக.

இனி, நூல் செய்தற்கு உரியானையும், நூல்செய்யும் ஆற்றையும் சொல்லுதும்.

'அப்புல மரில்தப வறிந்து முதனூல்
பக்கம் போற்றும் பயந்தெரிந் துலகத்
திட்ப முடைய தெளிவர வுடையோன்
அப்புலம் படைத்தற் கமையு மென்ப.'

'சூத்திர முறையென் றுயிரு திறனும்
பாற்படப் போற்றல் படைத்த லென்ப
நூற்பய னுணர்ந்த நுண்ணி யோரே.'

இவற்றான் அறிக.

போக்கு அறுதல் – நூற்குங்கூறும் குற்றங்களற்று நன்மையுளவாதல். அவை :

' ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
எண்வகைப் புணர்ப்பின தென்மனார் புலவர்.'

இதனுன் அறிக.

'எழுத்தும் சொல்லும் பொருளும்' என வைத்துப் பின்னும் 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' என்றது, பிறநூல் போலச் சொல்லுள் எழுத்தினை மயக்கிக் கூருது, வேறு சேரக் கூறினுரென்ற தென்பது.

(விளக்கவுரை) ஆயிரமுகத்தான் – ஆயிர வுறுப்புக்களால். புறவுரை - நூல் நுதலிய பொருள் அல்லனவற்றை உரைப்பது.

(அ) கற்கப்படுவோர் – கற்பிப்பதற்குத் தகுதி வாய்ந்த நல்லாசிரியர். இவருக்குக் கூறப்படும் உவமைகள் நான்கு. அவை மலை, நிலம், பூ, துலாக்கோல் என்பன.

இவற்றின் இயல்பை,

' மலையே
அளக்க லாகாப் பெருமையும் அருமையும்
மருங்ககல முடைமையும் ஏறற் கருமையும்
பொருந்தக் கூறுபப் பொச்சாப் பின்றி.'

' நிலத்தின் இயல்பே நினைக்குங் காலைப்
பொறையுடை மையொடு செய்பாங் கமைந்தபின்
விளைதல் வண்மையும் போய்ச்சார்ந் தோரை
இடுதலும் எடுத்தலும் இன்னண மாக
இயையக் கூறுப இயல்புணர்ந் தோரே.'

' பூவின தியல்பே பொருந்தக் கூறின்
மங்கல மாதலும் நாற்ற முடைமையும்
காலத்தின் மலர்தலும் வண்டிற்கு நெகிழ்தலும்
கண்டோ ருவத்தலும் விழையப் படுதலும்
உவமத் தியல்பின் உணரக் காட்டுப.'

'துலாக்கோல் இயல்பே தூக்கும் காலை
மிகினும் குறையினும் நில்லா தாகலும்
ஐயந் தீர்த்தலும் நடுவு நிலைமையோடு
எய்தக் கூறுப இயல்புணர்ந் தோரே.'

(தொல் – சிறப்பு – நச்.)

என்பவற்றான் அறியலாம்.

(1) மலை	ஆசிரியர்
1. அளக்கலாகாப் பெருமை.	அளவிட்டுரைத்தற் கரியதாய தோற்றப் பொலிவு.
2. அருமை.	அரிய நுண் பொருள்களைத் தன்னகத் துடைமை.
3. மருங்ககல முடைமை.	அருகிலுள்ளவர்களாலும் அறியப்பட்ட கல்விப் பெருமை.
4. ஏறற்கருமை.	மாறுபட்ட கருத்தினால் வாதம் செய்து வென்றி கொள்ளுதற்கு நெருங்காத அருமை.

(2) நிலம்	ஆசிரியர்
1. செய்பாங்கு அமைந்தபின் விளைதல் வண்மை :— விளைநிலம், உழவர்கள் செய்தற்குரிய வினைவகைகள் (அதாவது உழுதல் எருவிடுதல் முதலியன) செய்த பின் அவர்களுக்குப் பயன்படுதல்.	ஆசிரியனும், மாணாக்கன் தனக்குச் செய்யும் வழிபாட்டினைச் செய்தபின் அவனுக்குப் பயன்படுவது.
2. போய்ச் சார்ந்தோரை இடுதல் – தன்னையடைந்த உழவர்களுக்குத் தன் பயனைக் கொடுத்தல்.	ஆசிரியனும் தன்னையடைந்த மாணாக்கனுக்குத் தன் அறிவைக் கொடுப்பது.

3. எடுத்தல் – நிலம் தன் பயனால் உழவர்களை உயர்த்தல்.	ஆசிரியனும் தன்னையடைந்த மாணாக்கனுக்குத் தன்னறிவால் அவனை உயர்த்துவது.

(3) பூ, ஆசிரியருக்கு உவமையாதல் வெளிப்படை.

(4) துலாக்கோல்	ஆசிரியர்
1. மிகினும் குறையினும் நில்லாதாகல் - தன்னிடத்து வைக்கப்பட்ட பொருள் அளவில் மிகினும் குறையினும் தான் சம நிலையில் நில்லாதிருத்தல்.	ஆசிரியனும் தான் எடுத்துக் கொண்ட நூலிலோ, அன்றித் தன்கண் கேட்கப்பட்ட வினாவிலோ குற்றம் மிகுந்திருப்பினும், அன்றிக் குறைந்திருப்பினும் அவற்றையே நினைந்து அவற்றுடன் அமைந்து விடாமல் அவற்றின் உண்மைப் பொருளை உணர்த்தி விடுவது.
2. பொருள் அளவை காட்டி, இது இவ்வளவினது என உணர்த்தும்:	ஆசிரியனும் வினவப் பட்ட பொருளின் ஐயத்தினை இதற்கு இது கருத்தாகும் என அவ்வையத்தினை நீக்கி வைப்பன்.
3. ஒரு பொருளைக் கொடுப்போனுக்கும் வாங்குவோனுக்கும் இடையே நின்று, கொடுப்போன் பொருளை நடுநின்று இவ்வளவினது என உணர்த்தும்.	ஆசிரியனும், நூலாசிரியர்க்கும் மாணாக்கனுக்கும் இடை நின்று, நூலாசிரியர்தம் பொருளைக் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலையுடன் விளக்குவன்.

(ஆ) கற்கப்படாதோர் – கற்பிப்பதற்குத் தகுதியில்லாத ஆசிரியர். இவற்கு உவமையாகக் கூறப்படுவன நான்கு. (1) கழற்பெய்குடம், (2) மடற்பனை, (3) முடத்தெங்கு, (4) குண்டிகைப் பருத்தி.

1. கழற்பெய்குடமாவது கொள்வோனுணர்வு சிறிதாயினும் தான் கற்றதெல்லாம் ஒருங்குரைத்தல்.

2. மடற்பனை என்பது பிறரால் கிட்டுதற்கு அரியதாகி இனிதாகிய பயன்களைக் கொண்டிருத்தல்.

3. முடத்தெங்கு என்பது ஒருவர் நீர்வார்க்கப் பிறர்க்குப் பயன்படுவது போல, ஒருவர் வழிபடப் பிறர்க்கு உரைத்தல்.

4. குண்டிகைப் பருத்தி என்பது சொரியினும் வீழாது சிறிது சிறிதாக வாங்கக் கொடுக்கும். அதுபோலக் கொள்வோ னுணர்வு பெரிதாயினுஞ் சிறிது சிறிதாகக் கூறுதல்.

(அ) கற்பிக்கப்படுவோர் - கற்பிப்பதற்குத் தகுந்த மாணுக்கர். இவருக்கு உவமையாகக் கூறப்படுவன அன்னம், கிளி, நன்னிறம் நெய்யரி, யானை, ஆனேறு என்பன. இவ்வுவமைகளைப் பின் வருமாறு ஒப்பிட்டுக் காண்க. இவற்றுள் அன்னம், கிளி, பன்னுடை இவற்றின் இயல்பு வெளிப்படை.

நன்னிறம் : நன்னிறம் எவ்வகையான நிறங்களும் தன் னகத்தே கலத்தற்குரியதாதல் போல, மாணுக்கனும் நல்லாசிரியன் கூறும் எவ்வகைப் பொருளையும் தன்னகத்தே ஏற்றுக்கொள்ளுதற்கு உரியனுயிருத்தல் வேண்டும் என்பதாம்.

யானை: யானை தன்னினத்தோடு கூடி அவற்றிற்கு இடையூறு வாராதவாறு பரிகரிப்பது போல, மாணுக்கனும் தன்னெத்த மாணுக்கர்களுடன் கூடி அவர்களுக்கு ஏற்பட்ட ஐயங்களை நீக்கல் வேண்டும் என்பதாம்.

ஆனேறு : ஆனேறு காட்டில் இயங்கும் பொழுது, அங்குத் தோன்றும் ஒலியை இன்னதன் ஒலியென ஓர்ந்து அறிதல் போல, மாணுக்கனும் ஆசிரியன் கூறிய பொருண்மையின் நுண்பொருளை ஓர்ந்து தெளிதல் வேண்டும் என்பதாம்.

(ஆ) கற்பிக்கப்படாதோர் - கற்பிக்கத் தகுதி யில்லாதவர்.

மாணி – இருமுது குரவர், ஆசிரியர் முதலியோர்களை வணங்குதலும் அவர்கள் வழி நிற்றலும் தனக்கு இழுக்கென்று கொள்பவன். இத்தகைய ஒழுக்கத்தை 'மாண்பிறந்த மானம்' என்பர் திருவள்ளுவர்.

பொச்சாப்பன் – மறதியுடையவன்.

(1) குரங்கெறி விளங்காய் : குரங்கினிடம் இருக்கும் விளங்காயைப் பெறுதற்காக, அதற்குக் கல்லெறிந்து தான் கருதிய பயனைக் கொள்ளுதலாகும். கடைமாணுக்கனும் ஆசிரியனிடமிருந்து தான் கருதிய பொருளைப் பெறுதற்காக அதனை அவனிடம் வழிபட்டுப் பெருது, சில வினுக்களை நிகழ்த்தி அவற்றின் மூலம் தான் கருதிய பயனைப் பெற்றுக்கொள்வன் என்பதாம்.

(2) எருமை : இது பெருகியோடும் நீர்க்குத் தடையாகப் படுத்துக்கொண்டு, அதனைக் கலக்கி உண்ணும் இயல்பினது. அதுபோலவே கடைமாணுக்கனும் ஆசிரியனிடத்திருந்து விரைந்து வரும் பேரறிவைத் தடுத்து நிறுத்தி, அவரைக் கலங்குமாறு செய்வித்துப் பின் அவ்வறிவினை ஏற்பன்.

(3) யாடு : இதன் இயல்பு வெளிப்படை.

(4) தோணி : தோணி நீரிடையன்றி நிலத்திடை ஓடாதது போலக் கடைமாணுக்கனும் தான் படித்த நூலிலன்றிப் படியாத நூலின்கண் செல்லமாட்டான் என்பதாம். 'கடல் ஓடும் நாவாயும் ஓடா நிலத்து' எனத் திருவள்ளுவனுர் கூறியருளியதாலும் தோணியின் இயல்பு விளங்குதல் காண்க.

பனம்பாரனுர் : இவர் அகத்தியனுரிடம் தொல்காப்பியனுரொடு ஒருங்கு கற்றவர். இவரே இச்சிறப்புப்பாயிரத்தை இயற்றியவராவர். பனம்பாரம் என்ற இலக்கண நூல் இவர் செய்தது என்ப. அந்நூலில் ஓரிரு நூற்பாக்களே இப்பொழுது காணக் கிடைக்கின்றன.

இச் சிறப்புப் பாயிரத்துள், முதல் ஏழு அடிகட்கு உரை கூறுவதிலேயே இளம்பூரருணம் நச்சினர்க்கினியரும் வேறுபடுகின்றனர். அவர்கள் கருத்து வருமாறு :—

பொதுநிலை :— வடவேங்கடம் தென்குமரியாகிய இரண்டெல்லைக்கும் உட்பட்ட நிலம், செந்தமிழ் நிலமெனக் கூறப்படுமாயினும், வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் ஆகிய நான்கு எல்லைக்குட்பட்ட நிலத்தையே செந்தமிழ் நிலம் என்பது இளம்பூரணர் நச்சினார்க்கினியர் ஆகிய இருவர்க்கும் கருத்தாகும். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் சோழ நாடேயாகும். வடவேங்கடம் தென்குமரிக்குட்பட்ட பரந்துபட்ட நிலப்பரப்பில் இச்சோழ நாடு ஒரு பகுதியே யாகும். ஈது ஒழிந்த பாண்டியநாடு, குட நாடு முதலியன வெல்லாம் செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்தன வாகும். சோழ நாடாகிய புனல் நாட்டினைச் செந்தமிழ் நாடென்றும், அதனைச் சேர்ந்த இப்பன்னிரு நிலங்களையும் கொடுந்தமிழ்நாடு என்றும் நச்சினார்க்கினியர் கருதுவர். இவ்வகையில் செந்தமிழ்நாடு என்பது புனல் நாடே என்பதில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவர்க்கும் கருத்து வேறுபாடில்லை. இதனைச் 'செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலத்தும்' (சொல் – 394) என்று தொடங்கும் நூற்பாவிற்கு இவ்விருவரும் கூறும் உரையான் நன்கறியலாம்.

கருத்து வேற்றுமை :— தொல்காப்பியர் வடவேங்கடம் தென்குமரி ஆகிய இவ்வெல்லைக்குட்பட்ட செந்தமிழ் நிலம், அதனைச் சேர்ந்த பன்னிரு நிலம் ஆகிய பதின்மூன்று நிலத்திலும் வழங்கும் வழக்கும் செய்யுளையும் ஆராய்ந்து இந்நூலை எழுதினாரா? அன்றிச் செந்தமிழ் நிலத்தில் மட்டும் வழங்கும் வழக்கும் செய்யுளையும் ஆராய்ந்து இந்நூலை எழுதினாரா? என்பதில்தான் கருத்து வேற்றுமை வருகிறது.

இளம்பூரணர் கருத்து :— வடவேங்கடம் தென்குமரியாகிய இவ்விரண்டையும் எல்லையாக உடைய தமிழ் நிலத்து (அதாவது செந்தமிழ் நிலமாகிய புனல் நாடு ; அதனைச் சேர்ந்த பன்னிரு நாடுகள் ஆகிய பதின்மூன்று நாடுகளில், கொடுந்தமிழ் நிலத்து) வழங்கும் வழக்கும் செய்யுளையுமே முதற்கண் ஆராய்ந்து எழுத்துச்சொல் பொருளிலக்கணத்தை ஆக்குதற்கு ஒருப்பட்ட தொல்

காப்பியர், அவற்றுள் சில இலக்கண நெறிகள் குறைபாடுடையனவாய் இருக்கக் கண்டு, அக்குறைபாடுடைய இலக்கண நெறிகளுக்கு மட்டும் மேற்கூறிய பதின்மூன்று நிலங்களுள் ஒன்ருகிய செந்தமிழ் நிலத்து வழங்கும் வழக்கினையும், தம் காலத்திற்கு முந்திய நூல்களையும் துணையாகக் கொண்டு அவற்றைச் செம்மைப் படுத்தி யாத்தனர் என்பது இவர் கருத்து.

நச்சினார்க்கினியர் கருத்து :— வடவேங்கடம் தென்குமரியாகிய அவ்விரண்டு எல்லைக்குள்ளிருக்கும் பதின்மூன்று நாடுகளில், செந்தமிழ் நிலத்து வழங்கும் வழக்கும் செய்யுளையுமே ஆராய்ந்து, அதற்குத் தம் காலத்து வழங்கிய முந்திய நூல்களையும் துணைக்கொண்டு இந்நூலை யாத்தனர் என்பது இவர் கருத்து.

இளம்பூரணர் கருத்தினை நச்சினார்க்கினியர் மறுப்பர். எனினும் உண்மையை நோக்கின் இவ்விருவர் கூற்றுமே பொருத்தம் உடையதாய்த் தோன்றவில்லை. இவ்விருவர்க்கும் மூலமாக அமைந்த பாயிரத்தை நோக்குழி, வடவேங்கடமும் தென்குமரியுமாகிய அவ்விரண்டெல்லைக்குட்பட்ட (கிழக்கும், மேற்கும் கடல் எல்லையாதலின் கூருராயினர்) தமிழ் கூறும் நல்லுலகத்துச் சான்றோர்தம் வழக்கும் செய்யுளையுமே ஆராய்ந்து, அவற்றின் நுண்மையை யறிதற்பொருட்டு அந்நிலத்து முதற்கண் தோன்றிய முன்னைய நூல்களையும் ஆராய்ந்து தம் நூலைச் செய்தார் எனத் தெரிகிறது. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' என ஆசிரியர் பனம்பாரனுரே சிறப்பித்திருக்க, அதன்கண் அடங்கிய தமிழ் நிலத்தைச் செந்தமிழ் நாடு, கொடுந்தமிழ் நாடு எனப் பிரிப்பதும், கொடுந்தமிழ் இலக்கணத்தை முற்பட ஆராய்ந்து, குறைபாடுடையவற்றிற்குச் செந்தமிழ் வழக்கை ஆராய்ந்தார் என்பதும், அன்றி இத்தமிழ் கூறும் நல்லுலகத்துள் ஒரு பகுதியாகிய செந்தமிழ் நிலத்து வழங்கும் வழக்கும் செய்யுளுமே கொண்டு தம் நூலை யாத்தார் என்பதும் பொருந்துவதன்ரும்.

செந்தமிழ் என்பது இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயராம்; செஞ்ஞாயிறு என்பதுபோல, ஆதலில் இதனின் வேருகக் கொடுந்

தமிழ் நிலமெனப் பிரித்தலே தவறுடையதாகும். அன்றியும், இளம்பூரணர் நச்சினார்க்கினியர் முதலியோர் புனல் நாடே செந்தமிழ் நிலம் என்பர்; சிவஞான முனிவர் முதலியோர் பாண்டியநாடே செந்தமிழ் நிலம் என்பர். இவ்விருசாராரும் தத்தம் நிலம் ஒழிய ஏனையவற்றைக் கொடுந்தமிழ் நிலம் என்பர். ஆதலின் இப்பாகுபாடே யின்றிப் பனம்பாரனார் கூறுமாறு போலத் தமிழ் கூறும் நல்லுலகம் என்பது வடவேங்கடம் தென்குமரி ஆகிய ஈரெல்லைக்கும் உட்பட்ட நிலவுலகம் என்பதே பொருந்து வதாகும். இதுபற்றிச் செந்தமிழ்ச்செல்வி – சிலம்பு 38; பரல்–1 இல் 'தொல்காப்பியர் கூறும் செந்தமிழ் நிலம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். ஆண்டும் காண்க.

பாண்டியன் மாகீர்த்தி: இவன் தென்மதுரையில் தலைச் சங்கத்தைத் தோற்றுவித்து அதனைப் பாதுகாத்த பாண்டியமன்னர் களில் இறுதியாக இருந்தவன். இவன் காலத்தில் பாண்டி நாட்டின் தென்பகுதியாகிய பஃறுளியாறு முதல், குமரி மலை வரை கடல் கோளால் அழிந்துவிட, அதனை ஈடு செய்யும் பொருட்டு வடஇமயம் வரைசென்று பொருது வெற்றிபெற்று, அதனைத் தன்னகப்படுத்திக் கொண்டான். ஆதலின் இவனை 'நிலந்தரு திருவிற் பாண்டியன்' என்றும் கூறுவர். இப்பாண்டி யனின் அவைக்களத்தேதான் தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டது. இவன் இருபத்து நாலாயிரம் ஆண்டு அரசு வீற்றிருந் தான் என நச்சினார்க்கினியர் கூறுவதிலிருந்து இவன் நெடுங் காலம் வாழ்ந்திருந்தான் எனத்தெரியலாம்.

ஐந்திரம்: இது இந்திரனால் செய்யப்பட்டது. இதனை 'விண்ணவர் கோமான் விழுநூல்' எனச் சிலப்பதிகாரம் கூறும். 'இந்திரத்தை இனிதாக ஈந்தார் போலும்' என்பது திருநாவுக் கரசர் வாக்கு. இது வடமொழி யிலக்கணம் பற்றிக் கூறும் நூலாகும். இந்நூல் இதுபோழ்து கிடைத்திலது.

தென்குமரி–தெற்கிலுள்ள குமரியாறு. இவ்யாறு தொல்காப் பியர் காலத்து இருந்து, பின் கடல்கோளால் வௌவப்பட்டது. தொல்காப்பியர் காலத்து இவ்யாற்றிற்குத் தென்பாலும் பல

நாடுகள் இருந்தன. இதுபற்றி அடியார்க்குநல்லார் நன்கு விளக்கியுள்ளார். அதுவருமாறு:— நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமென்றது பௌவமுமென்றது என்னை ? யெனின், முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் உள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றி யாண்டு இரீஇயினார் காய்சினவழுதி முதற் கடுங்கோனீரு யுள்ளார் எண்பத்தொன்பதின்மர் ; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டிருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னுமாற்றிற்கும் குமரியென்னு மாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ்மதுரை நாடும் ஏழ்முன்பாலை நாடும், ஏழ் பின்பாலை நாடும் ஏழ்குன்ற நாடும் ஏழ்குணகாரை நாடும் ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்லம் முதலிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியும், தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றாரென்றுணர்க. இஃது என்னைப் பெறுமாறெனின் 'வடிவேலெறிந்த வான்பகை பொறுது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடுங் கொடுங் கடல் கொள்ள' (சிலம்பு–11: 18–20) என்பதனாலும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும், பிற வாற்றானும் பெறுதும். (சிலம்பு 8 : 1).

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

2

நூன்மரபு

பொருளமைப்பு

நூல்களில் வழிவழியாகச் சொல்லப்பட்டுவரும் எழுத்துக் களின் இலக்கணத்தை இவ்வியல் உணர்த்துதலின் இது 'நூன் மரபு' எனப் பெயர் பெற்றது. இவ்வியல் முழுதும் தனி எழுத்துக்களின் இயல்பு கூறப்படுகின்றது.

இவ்வியலில் கூறப்படும் செய்திகளை ஆறுவகையாகப் பிரிக்க லாம். அவை 1. எண். 2. பெயர், 3. முறை, 4. வடிவு, 5, அளவு, 6. மயக்கம் என்பன.

1. எண் :

எழுத்துக்கள் முதல் சார்பு என இருவகைப்படும். தாமே தனித்து நடக்கும் இயல்பினவாய எழுத்துக்களை 'முதலெழுத் துக்கள்' என்ப. உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் இவ்வகையில் அடங்கும். சார்பெழுத்துக்கள் மூன்றும் உயிரெழுத்துக்கள் போன்று தனித்தாயினும் மெய் யெழுத்துக்கள் போன்று உயிருடன் கூடியாயினும் வாராது ஒரு மொழியைச்சார்ந்து வருதலை இலக்கணமாக உடைமையின் சார்பெழுத்து ஆயின. குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பன இவ்வகையில் அடங்கும்.

2. பெயர் :

(அ) உயிரெழுத்துக்கள் : உடலை உயிர் இயக்குவது போல ஒற்றெழுத்துக்களை இவை இயக்குதலின் உயிரெழுத்துக்கள் எனப் பெயர் பெற்றன. இங்ஙனம் வரும் எழுத்துக்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன. இவற்றுள் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குற்றெழுத்துக்களாம். அ, இ, உ என்பன ஒன்றைச் சுட்டிச் சொல்லுதற்கண் பயன்படுதலின் சுட்டெழுத்து என்றும் பெயர் பெறும். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழும் நெட்டெழுத்துக்களாம். ஆ, ஏ, ஓ என்பன வினவுதற்கண் வருதலின் வினவெழுத்துக்கள் என்றும் பெயர் பெறும்.

(ஆ) மெய்யெழுத்துக்கள் : உயிர் இயங்குவதற்கு இடனாக உடம்பு இருப்பதுபோல உயிரெழுத்துக்கள் இயங்குவதற்கு இடனாக இம்மெய்யெழுத்துக்கள் இருத்தலின் மெய்யெழுத்துக்கள் எனப்பட்டன. இங்ஙனம் வரும் எழுத்துக்கள் க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பனவாம். இவை ஓசை வேறுபாட்டான் மூன்று வகைப்படும். (1) வல்லெழுத்து: க, ச, ட, த, ப, ற என்பன. (2) மெல்லெழுத்து: ங, ஞ, ண, ந, ம, ன என்பன. (3) இடையெழுத்து: ய, ர, ல, வ, ழ, ள, என்பன.

(இ) சார்பெழுத்துக்கள் : சார்பெழுத்துக்கள் மூன்றும் ஒரு மொழியைச் சார்ந்து வருதலையே இலக்கணமாக உடைமையின் அவற்றை ஈண்டு உணர்த்தாது ஆசிரியர் மொழிமரபில் கூறுவாராயினர்.

3. முறை:

இம்முதலெழுத்துக்கள் அகரமுதல் னகர இறுதியாக நடப்பதே முறையாகும். இதற்குரிய காரணத்தை நச்சினார்க்கினியரும், சிவஞான முனிவரும் விளக்குவர். ஆண்டுக்காண்க.

4. வடிவு:

(அ) உயிர்: மெய்யெழுத்துக்களுக் கெல்லாம் புள்ளி கொடுத்து வழங்குதலும், உயிரெழுத்துக்களுக்கு எல்லாம் புள்ளி கொடாது வழங்குவதுமே இக்காலத்து நாம் கையாண்டுவரும் முறையாகும். ஆனால் பண்டோ எ, ஒ என்ற இரு உயிரெழுத்துக்களும் குற்றெழுத்தாயின் புள்ளிபெற்றும், நெட்டெழுத்தாயின் புள்ளி யின்றியும் வழங்கப்பட்டன.

(ஆ) மெய்: 'மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்' என்பதால் மெய்யெழுத்துக்களெல்லாம் பண்டும் இன்றும் திரி பின்றி இருந்தன என்று விளக்குகின்றது. எனினும் இளம் பூரணரின் கருத்துப்படி இன்று எழுதிவரும் 'ம்' என்ற எழுத்துப் பண்டு 'ப்' என இருந்ததாகத் தெரிகிறது. (இது பற்றிய கருத்து வேறுபாட்டினை 14 ஆம் நூற்பாவின் விளக்கவுரையில் காண்க.)

(இ) உயிர்மெய்: பதினெட்டு மெய்யும் பன்னிரு உயிருடன் சேர்ந்துவரின் அவை உயிர்மெய் எனப்பெயர்பெறும். அப் பொழுது மெய்யெழுத்துக்களின் வடிவு வேறுபடும். பதினெட்டு மெய்களும் அகரவுயிரோடு சேர்ந்துவரின் தாம் பெற்ற புள்ளியை மட்டும் நீங்கி இருக்கும். ஏனைய உயிர்களோடு சேர்ந்துவரின் மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்றும், கோடுபெறுவன கோடு பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெறுவன உடன்பெற்றும் வரும். அக்காலத்தே அருகே கொடுக்கப் பட்ட புள்ளி இக்காலத்தே காலாக (ா) வழங்கப்படுகிறது.

இவ்வுயிர் மெய்யெழுத்துக்களில் மெய்யோசை முன்னும் உயிரோசை பின்னுமாய் நிற்கும்.

5. அளவு:

உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் ஒலிக்கும் கால அளவை மாத்திரை என்பர். மக்கள் தம்மியல்பில் கண்ணி மைத்தற்கும், கை நொடித்தற்கும் ஏற்படும் கால அளவை ஒரு

மாத்திரை என்பர். மகரக்குறுக்கம் கால் மாத்திரை பெறும். மெய் பதினெட்டும், சார்பெழுத்து மூன்றும் அரை மாத்திரை பெறும். உயிரினுள் குற்றெழுத்து ஒரு மாத்திரையும், நெட்டெழுத்து இரு மாத்திரையும் பெறும். இரண்டு மாத்திரையினும் மிக்கொலிக்கும் எழுத்துக்கள் தமிழ் மொழியில் இல்லை. அன்றி மூன்று மாத்திரையாகவும், நான்கு மாத்திரையாகவும் மிக்கு ஒலிக்கவேண்டின் தாம் விரும்பும் மாத்திரைக்கேற்ற எழுத்துக்களைக் கூட்டி ஒலித்துக்கொள்ளவேண்டும். இதனை 'அளபெடை' என்பர். மெய்யெழுத்திற்கு அரை மாத்திரையென்றும், குற்றுயிர்க்கு ஒரு மாத்திரை யென்றும் அளவு கூறப்படினும், அவை யிரண்டும் கூடி உயிர் மெய்யெழுத்தாக வருகையில் ஒன்றரை மாத்திரை பெறுவதில்லை. ஒரு மாத்திரையே பெறும். இங்ஙனமே மெய்யெழுத்துக்கள் நெட்டுயிரோடு கூடி வரினும் இரண்டரை மாத்திரை பெறுவதில்லை. இரண்டு மாத்திரையே பெறும். இது, நீர் தனித்து அளந்துழியும் நாழியாய் அரைநாழி உப்பிற் சேர்த்துழியும் கூடி ஒன்றரை நாழியாய் மிகாதவாறு போல்வதோர் பெற்றியதாம். இங்ஙனம் மெய்க்கும் உயிர்க்கும் அளவு கூறப்பட்டதாயினும் இசை நூலிடத்தும் விளிக்கும் இடத்தும் இவை, இவற்றிற்குரிய மாத்திரையினின்றும் நீண்டொலிக்கும்.

6. மயக்கம்

மயக்கம் — கூட்டம். எழுத்துக்கள் ஒன்றனோடு ஒன்று கூடி வருங்கால் தம்மொடு தாமே கூடி வருவனவும், தம்மொடு பிறவே கூடி வருவனவும், தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் கூடி வருவனவும் என முத்திறமாகக் கூறப்படும்.

எழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய் என மூன்று வகைப்படும். இவற்றுள் உயிருடன் உயிர் கூடி வருதல் இல்லை. உயிர் மெய் முன் உயிர்மெய் கூடி வருவதற்கு வரையறையில்லை. ஆதலின் இடை நின்ற மெய்யெழுத்துக்களே தம்மொடு தாமும், தம்மொடு பிறவும், தம்மொடு தாமும் பிறவும் மயங்கி வரும்.

இம்மயக்கத்தையே (கூடும் கூட்டத்தையே) வரையறை செய்கின்றார் ஆசிரியர். இவற்றுள் தம்மொடு தாம் மயங்கும் மயக்கத்தை 'உடனிலைமயக்கம்' என்றும், தம்மொடு பிறமயங்கும் மயக்கத்தை 'வேற்றுநிலை மெய்ம் மயக்கம்' என்றும் கூறுவர்.

1. உடனிலை மெய்ம் மயக்கம்: க, ச, த, ப, என்ற நான்கு எழுத்துக்களும் தம்மொடு தாமே மயங்குவனவாகும்.

2. வேற்றுநிலை மெய்ம் மயக்கம்: ர, ழ என்பன க, த, ந, ப, ம, ச, வ, ஞ, ங ஆகிய எழுத்துக்களுடன் மயங்கி வரும்.

3. தம்மொடுதாமும் தம்மொடுபிறவும் மயங்குவன: இங்ஙனம் வரும் எழுத்துக்கள் 12. அவை ட, ற, ல, ள, ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய என்பன.

ட, ற என்பன க, ச, ப, ஆகிய மூன்றுடன் கூடிவரும், லள என்பன க, ச, ப, ய, வ ஆகிய ஐந்தெழுத்துக்களுடன் கூடி வரும். ஙகரம் ககரத்துடனும், ஞகரம் சகர யகரங்களுடனும், ஞகரம் தகர யகரங்களுடனும் கூடிவரும். மகரம், பகர, யகர, வகரங்களுடன் கூடி வரும். ணகரம், ட, க, ச, ந, ப, ம, ய ஆகிய எட்டெழுத்துக்களுடனும், னகரம் ற, க, ச, ஞ, ப, ம, ய, வ ஆகிய எழுத்துக்களுடனும் கூடி வரும். வகரம் யகரத்துடன் கூடி வரும். ய என்பது மொழிக்கு முதலாக வருகின்ற க, த, ந, ப, ம, ச, வ, ஞ ஆகிய எட்டு எழுத்துக்களுடனும் கூடிவரும்.

நூன்மரபு

1. எழுத்தெனப் படுப
அகரமுத னகர விறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே.

என்பது சூத்திரம்.

இவ்வதிகாரம் என்நுதலி எடுத்துக்கொள்ளப்பட்டதோவெனின், அதிகாரம் நுதலியதூஉம் அதிகாரத்தினது பெயர் உரைப்பவே அடங்கும். அதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின், எழுத்ததிகாரம்

என்னும் பெயர்த்து. எழுத்துணர்த்தினமை காரணத்திற்பெற்ற பெயர் என உணர்க,

எழுத்து எனைத்து வகையான் உணர்த்தினரோ வெனின், எட்டு வகையானும் எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினரென்பது.

அவற்றுள், எட்டுவகையாவன : எழுத்து இனைத்தென்றலும், இன்ன பெயர வென்றலும், இன்ன முறைமைய வென்றலும், இன்ன அளவின வென்றலும், இன்ன பிறப்பின வென்றலும், இன்ன புணர்ச்சிய வென்றலும், இன்ன வடிவின வென்றலும், இன்ன தன்மைய வென்றலும். எனவே, அவற்றுள் தன்மையும் வடிவும் ஆசிரியர் தாம் உணருவரெனினும், நமக்கு உணர்த்தல் அருமையின் ஒழிந்த ஆறுமே இதனுள் உணர்த்தினர் என உணர்க.

இனி, எட்டிறந்த பலவகையாவன: உண்மைத்தன்மையும், குறைவும், கூட்டமும், பிரிவும், மயக்கமும், மொழியாக்கமும், நிலையும், இனமும், ஒன்று பலவாதலும், திரிந்ததன் திரிபது வென்றலும், பிறிதென்றலும், அதுவும் பிறிதும் என்றலும், நிலையிற் றென்றலும், நிலையா தென்றலும், நிலையிற்று நிலையா தென்றலும், இன்னோரன்னவும் என இவை. இவையெல்லாம் ஆமாறு மேல் வந்தவழிக் கண்டுகொள்க.'

இவ்வதிகாரத்திலக்கணம் கருவியும் செய்கையும் என இரு வகைத்து. அவற்றுள், கருவி புறப்புறக்கருவியும், புறக்கருவியும், அகப்புறக்கருவியும், அகக்கருவியும் என நான்குவகைப்படும். செய்கை புறப்புறச்செய்கையும், புறச்செய்கையும், அகப்புறச் செய்கையும், அகச்செய்கையும் என நான்கு வகைப்படும். நூன் மரபும் பிறப்பியலும் புறப்புறக்கருவி; மொழிமரபு புறக்கருவி; புணரியல் அகப்புறக்கருவி.

'எகர வொகரம் பெயர்க்கீ றாகா
முன்னிலை மொழிய வென்மனார் புலவர்'
(உயிர் மயங்கியல் - 40)

என்றாற்போல்வன அகக்கருவி.

'எல்லா மொழிக்கு முயிர்வரும் வழியே
உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்'
(புணரியல் – 38)

என்றாற்போல்வன புறப்புறச்செய்கை.

'லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
தநவென வரிற் றனவா கும்மே'
(தொகைமரபு – 4)

என்றாற்போல்வன புறச்செய்கை.

'உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமும் உயிரும் வரும்வழி யியற்கை'
(தொகைமரபு - 21)

என்றாற்போல்வன அகப்புறச்செய்கை.

தொகைமரபு முதலிய ஓத்தினுள், இன்ன ஈறு இன்னவாறு முடியுமெனச் செய்கை கூறுவன வெல்லாம் அகச்செய்கை.

இவ்வோத்து என்நுதலிற்றோ வெனின், அதுவும் அதன் பெயர் உரைப்பவே அடங்கும். இவ்வதிகாரத்தாற் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தினை ஓராற்றால் தொகுத்து உணர்த்துதலின், நூன் மரபு என்னும் பெயர்த்து. இதனுட் கூறுகின்ற இலக்கணம் மொழியிடை (நின்ற) எழுத்திற்கன்றித் தனிநின்ற எழுத்திற்கென உணர்க.

இத்தலைச் சூத்திரம் என்நுதலிற்றோ வெனின், எழுத்துக்களது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ – ள் : எழுத்து எனப்படுப - எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன, அகரம் முதல் னகர இறுவாய் முப்பஃது என்ப- அகரமாகிய முதலை யுடையனவும் னகரமாகிய இறுவாயினை யுடையனவுமாகிய முப்பதென்று சொல்லுப (ஆசிரியர்) : சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடை – சார்ந்து வருதலாகிய இலக்கணத்தினையுடைய மூன்றும் அல்லாவிடத்து; மூன்றும் ஆன விடத்து முப்பத்து மூன்று என்று சொல்லுப எ-று.

எ-டு: அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஐ-ஒ-ஓ-ஔ; க்-ங்-ச்-ஞ்-ட்-ண்-த்-ந்-ப்-ம்-ய்-ர்-ல்-வ்-ழ்-ள்-ற்-ன் எனவரும்.

'எனப்படுப' என்ற சிறப்பான், அளபெடையும் உயிர்மெய்யும் வரிவடிவும் சிறப்பில்லா எழுத்தாகக் கொள்ளப்பட்டன.

அ ஆ என்பன பெயர்; முறை, அம்முறை; தொகை, முப்பது. அவற்றுள், அகரம் தானும் இயங்கித் தனிமெய்களை இயக்குதற் சிறப்பான் முன்வைக்கப்பட்டது. னகாரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின்வைக்கப்பட்டது.

தொகை (யென்பது) தொகையுள்தொகையும், தொகையுள் வகையும், தொகையுள்விரியும், வகையுள்தொகையும், வகையுள் வகையும், வகையுள்விரியும், விரியுள்தொகையும், விரியுள்வகையும், விரியுள்விரியும் என ஒன்பது வகைப்படும். எழுத்தென்பது தொகையுள்தொகை, முப்பதென்பது அதன் வகை. முப்பத்து மூன்றென்பது அதன் விரி, முப்பதென்பது வகையுள்தொகை. முப் பத்து மூன்றென்பது அதன் வகை, அளபெடை தலைப்பெய்து நாற்ப தென்பது அதன் விரி. முப்பத்துமூன்றென்பது விரியுள்தொகை. நாற்பதென்பது அதன் வகை, உயிர்மெய் தலைப்பெய்து இரு நூற்றைம்பத்தாறென்பது அதன் விரி.

செய்யுளின்பம் நோக்கி வகரம் நீங்கிப் பகரம் இடப்பட்டது. அகரமுதல் னகர இறுவாய் என்ன இருபெயரொட்டாகு பெயரான் முப்பதன் மேல் நின்றன.

(வி-ரை) இவ்வியலின் பெயர்க்காரணத்தை இளம்பூரணர் முதல் சிவஞானமுனிவர் ஈருக ஒவ்வொருவரும் ஒவ்வொரு வித மாகக் கூறினர். அவை வருமாறு:—

1. இளம்பூரணர்: 'இவ்வதிகாரத்தால் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தை ஒராற்றல் தொகுத்து உணர்த்துதலின் நூன்மரபு என்னும் பெயர்த்தாயிற்று' என்றனர்.

அங்ஙனமாயின் எழுத்ததிகாரமரபு எனப்படுவதன்றி, நூன் மரபு எனப்படாது எனச் சிவஞானமுனிவர் மறுத்தனர்.

2. நச்சினார்க்கினியர்: 'இத்தொல்காப்பியம் என்னும் நூற்கு மரபாந் துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த்தினமையின் நூன்மரபு என்னும் பெயர்த்தாயிற்று என்றனர்.

இவ்வோத்துள் கூறப்பட்டன செய்கை ஓத்திற்கும், செய்யுளியலுக்கும் கருவியாவதன்றி, மூன்றதிகாரத்திற்கும் பொதுவாகாமையின் அதுவும் பொருந்தாது எனச் சிவஞான முனிவர் மறுத்தனர்.

3. சிவஞானமுனிவர்: 'நூலினது மரபு பற்றிய பெயர் கூறுதலின் நூன்மரபு எனப்பட்டது' என்றனர்.

அவ்வாறு கோடல் ஓராற்ரூல் அமையுமாயினும், அவர் கூறியவாறு எழுத்தின் பெயர்களேயன்றி நூன்மரபு பற்றி வரும் பெயர் அனைத்தும் ஈண்டுக் கூறப்படாமை குன்றக் கூறலாம் ஆகலான், அதுவும் உண்மைப் பொருளாதலின்று எனத் திரு. வேங்கடராசலு ரெட்டியார் அவர்கள் மறுத்தனர். எனினும் திரு. பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் அவர்கள் இந்நூலின் கண் வழங்கப்படும் எழுத்து குற்றெழுத்து, நெட்டெழுத்து, உயிர், மெய், வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என நூற்கு இன்றியமையா மரபுபற்றிய குறிகளை விதிக்கும் இயலாதலின் இவ்வியல் நூன்மரபு எனப் பெயர் பெற்றது என விளக்கிச் சிவஞான முனிவர் கருத்தினையே தழுவினர்.

திரு. வேங்கடராசலு ரெட்டியார் அவர்கள் 'நூல் என்பது ஈண்டு எழுத்தைக் குறித்தது' என்றும், அவ்வெழுத்துக்களின் இயல்பை உணர்த்தியதால் இவ்வியல் நூன்மரபு எனப் பெயர் பெற்றது என்றும் காரணம் கூறினர். எனினும் அவரே நூல் என்பது எழுத்தைக் குறித்ததற்குத் தக்க மேற்கோள் இன்மையின் இதுவும் ஆராயத்தக்கதே என எழுதியுள்ளனர்.

ஒன்றற்குப் பெயர் இடுவது அதனை வழக்கில் எடுத்தாளுதற் பொருட்டேயாகும். அந்நிலையில் இவ்வியலில் எழுத்துக்கள் பலவற்றிற்கும் பெயரிட்டிருப்பது அதனைப் பின்னரும் எடுத்

தாளுதற் பொருட்டே யாகலானும், அங்ஙனமே மூன்றதிகாரத்தும் இக்குறியீடுகள் எடுத்தாளப் பட்டிருப்பதனாலும் சிவஞான முனிவர் கருத்தே சிறந்தது எனத் தெரியலாம்.

நூன்மரபு மொழிமரபு என்ற இயல்களுக்கு, 'மரபு' என்ற சொற்பெய்திருப்பது எற்றிற்கோ எனில், இவ்வியலில் கூறப் படும் குறியீடுகள் எல்லாம் ஆசிரியர் தாம் இயற்றியவை அல்ல; தமக்கு முன்னுள்ளோர் குறியிட்டவையே என்பதை விளக்குதற்கு என்க. அங்ஙனமாதல் 'எழுத்தெனப்படுப', 'குற்றெழுத்தென்ப', 'நெட்டெழுத்தென்ப,' 'மெய்யெனமொழிப' எனக் கூறுமாற்ருன் உணரலாம்.

எழுத்து இனைத்தென்றலையும், இன்னமுறையின என்றலையும் முதல் நூற்பாவானும், இன்ன பெயரின என்றலை 2, 3, 4, 8, 9, 19, 20, 21 ஆம் நூற்பாக்களானும், இன்ன அளவின என்றலை 3, 4, 5, 7, 10, 11, 12. ஆம் நூற்பாக்களானும், இன்ன பிறப்பின என்றலைப் பிறப்பியலானும், இன்ன புணர்ச்சிய என்றலைப் புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஆறு இயல்களானும், இன்ன வடிவின என்றலை 14, 15, 16, 17, ஆம் நூற்பாக்களானும் உணர்த்தியுள்ளார் ஆசிரியர்.

எழுத்துக்களது குறைவு — எழுத்துக்களின் மாத்திரைக் குறுக்கம்.

கூட்டம்—உயிரும் மெய்யும் கூடல். பிரிவு—கூடிய உயிரும் மெய்யும் பிரிந்து நிற்றல்.

மயக்கம்—எழுத்துக்கள் தம்மில் கூடல்.

மொழியாக்கம்—எழுத்துக்கள் பல சேர்ந்து சொல்லாதல்.

நிலை—எழுத்துக்கள் முதல், இடை, இறுதியில் நிற்கும் நிலை.

ஒன்றுபலவாதல்: ஒரு சொல்லில் நிற்கும் ஓரெழுத்து, ஒன்ருய் நிற்க ஒரு பொருள் தந்தும், அதுவே பிரிந்து நிற்கப் பிறிதொரு பொருள் தந்தும் நிற்றல். (எ-டு) குன்றேருமா

என்பதில் றகர ஆகாரம் சேர்ந்து நிற்கக் குன்று+ஏரு+மா எனப் பொருள் தந்தும், அதுவே பிரிந்து நிற்கக் குன்று+ஏறு+ஆமாஎனப் பொருள் தந்தும் நிற்றல் காண்க.

திரிந்ததன் திரிபு அதுவென்றல்: நிலைமொழியும் வருமொழியுமாகப் புணர்க்கப்பட்ட புணர்மொழிகளில், ஓரெழுத்திற்குத் திரிபு கூறி, அதற்கு மீண்டும் திரிபு கூறுங்கால் அங்ஙனம் திரிந்த எழுத்தைக் கூருது, அங்ஙனம் திரியப்பட்ட எழுத்திற்கே திரிபு கூறலாகும். (எ-டு) 'நீ என் ஒருபெயர் நெடுமுதல் குறுகும், ஆவயின் னகரம் ஒற்ருகும்மே' என்ற நூற்பாவால் 'நீ' என்பது 'நின்' என்ருகும் எனத் திரிபு கூறிய ஆசிரியர், மீண்டும் அதற்குத் திரிபு கூறுங்கால் 'நின்' என்பதைக் கூருது, அங்ஙனம் திரியப் பட்ட 'நீ' என்பதற்கே திரிபு கூறல் காண்க.

திரிந்ததன் திரிபு பிறிது என்றல்: நிலைமொழியிலுள்ள ஓரீறு திரிந்துழி, அங்ஙனம் திரிந்த அவ்வீறே நிலைமொழியீருய் நின்று வருமொழியோடு புணருவது. (எ - டு) மரம்+அடி என்ற சொற்கள் புணருமிடத்து முன்னர் மகர ஈறு கெடப், பின்பு அதனை அகர ஈருகவே வைத்துப் புணர்ப்பது காண்க.

திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதுமென்றல் : ஓர் ஈறு பிறிதோரீருகத்திரிய அதனேடு வருமொழியை வைத்துப் புணர்க்குங் கால், அங்ஙனம் திரிந்த ஈற்றையும் திரிதற்கு முன்னிருந்த ஈற்றையும் ஒருங்கு வைத்துத் திரிபு கூறுவதாகும். (எ – டு) தாம் + அது என்ற இரு சொற்களும் புணருங்கால் 'தாம்' என்பது 'தம்' எனக் குறுகும். அவ்வீறும் அகரத்தொடு புணர்ந்து 'தம' என நின்று வருமொழியோடு புணரும். இந்நிலையில் தம என்பதில் இயல்பீறு மகர ஒற்ருகும். விதியீறு அகர ஈருகும். இவ்விரண்டில் ஒன்றைக்கூருமல், இவ்விரண்டையுமே ஒருங்கு சேர்த்து 'ஈருகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்' எனக் கூறுதல் காண்க.

நிலையிற்றென்றல் : நிலைமொழியும் வருமொழியும் புணருங் கால் கூறப்படும் புணர்ச்சிவிதி, அச்சொற்களைப் பிரிக்கும்பொழுதும்

நிலைத்து நிற்குமேல் அது நிலையிற்று என்றலாம். நிலையிற்று—நிலையானது. (எ - டு) பொற்குடம் என்ற தொடர்க்கண் காண்க.

நிலையாதென்றல் : நிலைமொழியும் வருமொழியும் புணருங்கால் கூறப்படும் புணர்ச்சி விதி, அச்சொற்களைப் பிரிக்கும் பொழுது நிலையாது வருதலாம். (எ – டு) மூன்றில் என்ற தொடர்க்கண் காண்க.

நிலையிற்றும் நிலையாதும் என்றல் : ஒரே ஈற்றையுடைய இரு சொற்களில் ஒன்றற்குக் கூறப்பட்ட விதி இன்னொன்றற்கு நிலையாது (ஏலாது) இருத்தல் (எ – டு) பலா என்புழி ஆகார ஈறு அகரம் பெறும் என விதித்தார் ஆசிரியர். அதுவே இரா என்புழி ஏலாது என்றார்.

கருவி—சொற்கள் ஒன்றனோடு ஒன்று புணருங்கால் கருவியாக வரும் இலக்கணம்.

செய்கை—புணர்ச்சி விதிகள்.

அகக் கருவி : நிலைமொழி வருமொழிகளுள், நிலைமொழியீறுகள் பெறும் விதிகளைக் கூறுவது. ' எகர ஒகரம் பெயர்க்கு ஈறாகா ' எனவே, இது நிலைமொழியீறுபற்றிய விதியாதல் காண்க.

அகப்புறக் கருவி : நிலைமொழியும் வருமொழியும் புணருங்கால் அவை பொதுவாகப் பெறும் புணர்ச்சி யிலக்கணம், திரிபுகள், சாரியை பெறுதல், அவை அடையும் திரிபுகள் ஆகியவற்றைக் கூறுவதாகும். புணரியலில் இந்நிலையைக் காண்க.

புறக் கருவி : சொற்கள் புணருங்கால் அவை பெறும் புணர்ச்சி விதிகளைக் கூறாது அம்மொழிகளின் மரபினைக் கூறுவதாகும். இதனை மொழி மரபில் காண்க.

புறப்புறக் கருவி : மேற்கூறிய சொற்களின் இயல்பன்றி, அவை சொற்களாதற்குரிய எழுத்துக்களின் இலக்கணம், அவை

பிறக்குமிடம் ஆகியவற்றைக் கூறுவது. இதனை நூன்மரபாலும், பிறப்பியலானும் அறிக.

அகச் செய்கை : நிலைமொழியீறுகளுள் இன்ன ஈறு இன்ன வாறு முடியுமெனக் கூறுவது.

அகப்புறச் செய்கை : நிலைமொழிகளின் திரிபைக் கூருது அவை பெற்று வரும் எழுத்துக்களின் திரிபு முதலியன கூறுவது.

புறச் செய்கை : வருமொழிப் புணர்ச்சி பற்றிக் கூறுவது.

புறப்புறச் செய்கை : நிலைமொழி, வருமொழியீறுகள் புணரும் செய்கையன்றி அவையிரண்டையும் உடன்படுத்துதற்கு வரும் உடம்படுமெய் தோன்றுவது போன்று, ஒரெழுத்து வருவதைக் கூறுவது.

னகாரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை யுணர்த்துதற் சிறப்பால் பின் வைக்கப்பட்டது என்ற கருத்துப் பொருத்தம் இன்று.

எழுத்துக்கள் அகர முதல் னகர இறுவாயாகக் கூறப்படுதற் குரிய காரனத்தை நச்சினார்க்கினியரும் சிவஞானமுனிவரும் விளக்கியுள்ளனர். அவற்றை அவரவர் உரைகளான் உணர்க.

அகர முதல் என்பது அகரமாகிய முதலையுடைய எழுத்தை யும், னகர இறுவாய் என்பது னகரமாகிய இறுதியையுடைய எழுத்தையும் குறித்தலின் இரு பெயரொட்டாகு பெயர் என்றார் உரையாசிரியர். சிவஞான முனிவர் இவற்றைப் பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்பர்.

எழுத்தினை எண்வகையான் உணர்த்தினர் என்ற உரை யாசிரியர் கூற்றை அடிப்படையாகக் கொண்டே நன்னூலாரும்,

'எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி என்ரு
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே'

என நூற்பா யாத்தனர். (1)

2. அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன.

இது, மேல் சார்ந்து வரும் என்னப்பட்ட மூன்றற்கும் பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ – ள் : அவைதாம் - மேற் சார்ந்துவரும் எனப்பட்டவை தாம். குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பால் புள்ளியும் – குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் என்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளியும் என இவை, எழுத்து ஓர் அன்ன – (அவை) மேற்சொல்லப்பட்ட முப்பது எழுத்தோடு ஒரு தன்மைய எ – று.

அப்பெயர், பெயர். அம்முறை, முறை.

‘எழுத்தோ ரன்ன’ என வேண்டா கூறியவதனன், முன் ‘எனப்படுப’ என்ற சிறப்பு, அம்மூன்றற்கும் கொள்ளக்கிடந்தமை யின், அது விலக்குதல் பெறுது மென்பது.

குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்னும் எண்ணும்மை விகாரத்தால் தொக்கன. சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங் கோல் ஆகாது அதுபோல இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர்[1] ஆகற்பாலன. அவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள்வேற்றுமையும் நோக்கி வேறெழுத்தென்று வேண்டினு ரென உணர்க.

(வி–ரை) முன்னைய நூற்பாவில் சார்ந்துவரும் மரபினையுடைய (குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்) மூன்றெழுத்துக்களும் அல்லாத விடத்து முப்பது எழுத்துக்களும் சிறந்தன எனக் கூறப் பட்டது. இங்ஙனம் கூறவே அம்மூன்று எழுத்துக்களுமே எழுத் தெனப்படற்குச் சிறந்தன ; ஒழிந்த முப்பதும் அத்துணைச் சிறப்பில

1. ‘பெயராகற்பாலன என்பது கன்னியப்ப முதலியார் பதிப்பிலுள்ள பாடம்.

என்னும் கருத்துப் பெறப்படும். அதனை விலக்கவே இந்நூற்பாவில் 'எழுத்தோரன்ன' என்றார். குற்றியலிகரம் முதலிய சார்பெழுத்துக்கள் மூன்றும் முற்கூறிய முப்பதெழுத்துக்களோடும் ஒரு தன்மைய என்பதால் அம்முப்பத்து மூன்று எழுத்துக்களுமே சிறந்தன என்னும் கருத்துப் பெறப்படுகின்றது.

(சார்ந்துவரும் மரபினையுடைய எழுத்துக்கள் குற்றியலிகரம், குற்றியலுகரம், மூன்று புள்ளியினையுடைய (ஃ) ஆய்தம் ஆகிய மூன்றுமாம். இவையும் மேற்கூறிய முப்பதெழுத்தோடு ஒருங்கு வைத்து எண்ணத்தக்கனவாம் எனப்பொருள் காண்பர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும்.)

எனவே இவர்கள் கருத்தின்படி 'முப்பாற் புள்ளி' என்ற தொடர் ஆய்தத்தின் வரிவடிவை விளக்க வந்ததாகும். சார்பெழுத்துக்களாகிய இம்மூன்றையும் ஒருங்கு கூறும்பொழுது ஒன்றன் வரிவடிவத்தை மட்டும் விளக்குதல் அத்துணைச் சிறப்பின்மையானும், ஆசிரியர்க்கும் அதுவே கருத்தாயின் 'ஆய்தமாகிய முப்பாற்புள்ளியும்' என விளங்க நூற்பா யாத்திருப்பர் ஆதலானும் இவ்வுரை பொருந்துவதன்றாம்.

'முப்பாற்புள்ளி' என்ற தொடரை மேற்கூறிய மூன்றற்கும் பொதுப்பெயராகக் கொண்டு, 'அங்ஙனம் சார்ந்துவரும் எனப்பட்டவைதாம் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஆய்தமும் ஆகிய மூவகையான புள்ளிபெறும் எழுத்துக்களாம், அவை முற்கூறிய முப்பதெழுத்துக்களோடு ஒரு தன்மையவாம்' எனப் பொருள் காண்பர் பேராசிரியர்.

இம்மூன்றனுள் ஆய்தம் புள்ளிவடிவினது என்பதைக் 'குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி' எனப் பின்னரும் குறியிட்டாளுதலானும், குற்றியலுகரம் புள்ளிபெற்று வரும் என்பதைக் 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' எனமாட்டெறிதலானும், குற்றியலிகரம் புள்ளிபெறும் என்பதை 'ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம்' எனக் கூறுதலானும் ஆசிரியர்க்கும் இதுவே கருத்தாதலை நன்கறியலாம். 'ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம்'

என்பதனுள் குற்றியலிகரம் புள்ளி பெற்றுவரும் என்பதை ஆசிரியர் தெளிவாகக் கூறவில்லையாயினும், அந்நூற்பா உரையில் பேராசிரியர் இவற்றையெல்லாம் (குற்றியலிகரம், குற்றியலுகரம்) 'ஒற்றெழுத்தியற்றே' என்றதனால் புள்ளியிட்டெழுதுக எனக் கூறியுள்ளமையானும், பின்னும் அவர் மரபியல் 10–ஆம் நூற்பா உரையில் 'அவைதாம், குற்றியலிகரம் ....எழுத்தோரன்ன' என் புழிக் குற்றியலிகரம் புள்ளி என்று யாண்டும் ஆள வாராமையானும், அதுதான் அவ்வழி வரவேண்டுதலானும், அங்ஙனம் புள்ளி என்று ஆளவரும் குற்றுகரத்தோடும் ஆய்தத்தோடும் உடன் கூறுதலாயிற்று' எனக் கூறியுள்ளமையானும், குற்றியலிகரமும் புள்ளி பெற்றுவரும் என்பதை நன்கறியலாம். இனிச் சங்கயாப்புடையாரும் 'குற்றியலிகரமும் குற்றியலுகரமும், மற்றவை தாமே புள்ளி பெறுமே' எனக்கூறுவதும், சிவஞானமுனிவரும் தமது சூத்திர விருத்தியுள் இக்கருத்துப் பொருத்தம் உடையது எனக் கூறியிருப்பதும் இதனை வலியுறுத்தும். எனவே இந்நூற்பாவிற்குப் பேராசிரியர் கருத்தே பொருத்தம் உடையது என அறியலாம்.

இகர உகரங்கள் ஒரு மாத்திரை பெறுவன. இவை குறுகி வரும் பொழுது (குற்றியலிகரம், குற்றியலுகரமாக) அரை மாத்திரை பெறும். எனினும் உயிர் உயிரேயாகும். இதனையே சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது என்னும் உவமையால் விளக்கினர் இளம்பூரணர். சந்தனக்கோல்-சந்தனக் கட்டை. பிரப்பங்கோல்–பிரப்பங் கட்டை. பிரம்பு-இது ஒருவகை மரம். 'அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது' (நறுந் -25) எனக் கூறப்படுதலும் காண்க. (2)

3. அவற்றுள்
அ இ உ
எ ஒ வென்னும் அப்பால் ஐந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.

இது, மேற்கூறப்பட்டனவற்றிற்கு அளபும் குறியும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அவற்றுள்-மேற்கூறப்பட்ட எழுத்தினுள், அ-இ-உ-எ-ஒ என்னும் அப்பால் ஐந்தும்-அ-இ-உ-எ-ஒ என்று சொல்லப் படுகின்ற அக்கூற்று ஐந்தும், ஓர் அளபு இசைக்கும்-(ஒரோ வொன்று) ஓர் அளபாக இசைக்கும், குற்றெழுத்து என்ப-(அவை தாம்) குற்றெழுத்தென்னும் குறிய என்று சொல்லுவர் (புலவர்) எ-று.

இவர் காரணம் பற்றியன்றிக் குறியிடார். ஆகலின், இது தன் குறுமையான் இக்குறி பெற்றது. இக்குறியை ஆண்டவாறு மேல் வந்தவழிக் கண்டுகொள்க. (3)

4. ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப.

இதுவும் அது.

இ-ள்: ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என்னும் அப்பால் ஏழும்-ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என்று சொல்லப்படுகின்ற அக்கூற்று ஏழும் ஈர் அளபு இசைக்கும் - (ஒரோவொன்று) இரண்டு மாத்திரை யாக ஒலிக்கும், நெட்டெழுத்து என்ப- (அவைதாம்) நெட்டெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர் (புலவர்) எ - று.

[1]ஐகார ஔகாரங்களுக்கு இனம் இல்லையெனினும், மாத்திரை யொப்புமையான் அவை நெட்டெழுத்து எனப்பட்டன.

(வி - ரை) ஒரு மாத்திரை பெறுவதைக் குற்றெழுத்து என்றும், இரு மாத்திரை பெறுவதை நெட்டெழுத்து என்றும், வரையறை செய்தனரேயன்றி, இனம் உண்மையும் இன்மையும் கருதியன்று. ஆதலின் ஐகார ஔகாரங்களுக்கு இனமில்லையெனினும், மாத்திரை யொப்புமையான் அவை நெட்டெழுத்து எனப்பட்டன என்ற கருத்துப் பொருத்தம் இல்லை. (4)

5. மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே.

இஃது, உயிரளபெடை யெழுத்திற்கு மாத்திரை கூறுதல் நுதலிற்று.

---

1. 'ஐகாரஔகாரங்கள் தமக்கு' என்பது க. ப. பாடம்

இ - ள் : மூ அளபு இசைத்தல் ஓர் எழுத்து இன்று - மூன்று மாத்திரையாக ஒலித்தல் இயல்பாகிய ஓர் எழுத்திற்கு இல்லை (விகாரமாகிய இரண்டு கூடியதற்கு உண்டு) எ - று.

(வி - ரை) முன்னர் ஒரு மாத்திரையும் இரு மாத்திரையும் பெறும் எழுத்துக்களைக் கூறினமையின், மூன்று மாத்திரை பெறும் எழுத்துக்களும் உளவோ என ஐயம் நிகழ்ந்தது. அவ்வையத்தை நீக்கவே இந்நூற்பா எழுந்ததாகும். நச்சினார்க்கினியரும் 'இஃது ஐயம் அகற்றியது; ஓரெழுத்து மூவளபாயும் இசைக்குங் கொல்லோ என்று ஐயப்படுதலின்' எனக் கருத்துரை கூறுமாறும் காண்க. அங்ஙனமாக 'உயிரளபெடை யெழுத்திற்கு மாத்திரை கூறுதல் நுதலிற்று' என இளம்பூரணர் கருத்துரை கூறல் பொருந்து வதன்றாம்.

மூன்று மாத்திரை பெறுதல் ஒரெழுத்திற்கு இன்று எனவே, விகாரமாக இரண்டெழுத்து கூடின் மூன்று மாத்திரை பெறும் எனக்கொண்டு உயிரளபெடைக்கு மாத்திரை கூறுதல் நுதலிற்று எனக் கருத்துரை கூறினர் எனினும், அதுவும் பொருந்துவதன்று. என்னை? உயிரளபெடை மூன்று மாத்திரையே யன்றி நான்கு மாத்திரையும் பெறுதலுண்மையின் என்க.

ஒவ்வொரு எழுத்தையும் தனித்தனியே எண்ணி மாத்திரை கோடல் இயல்பாகும். அளபெடையில் இரண்டெழுத்து அல்லது மூன்றெழுத்துக்களைக் கூட்டி ஓரெழுத்தாகக் கொண்டு மாத்திரை மூன்று என்றும் நான்கு என்றும் கோடல் விகாரமாம். இது பற்றியே விகாரமாகிய இரண்டு கூடியதற்கு உண்டு என்றனர் இளம்பூரணர். (5)

6. நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழுஉதல் என்மனார் புலவர்.

இஃது, உயிரளபெடை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : நீட்டம் வேண்டின் - நீண்ட மாத்திரையையுடைய அளபெடை எழுத்துப்பெற வேண்டின், அ அளபு உடைய கூட்டி

எழூஉதல் - மேற்கூறிய இரண்டளபுடைய நெடிலையும் ஓர் அள புடைய குறிலையும் (பிளவுபடாமற்) கூட்டியெழூஉக, என்மனார் புலவர் - என்று சொல்லுவர் புலவர் எ - று. (6)

7. கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே.

இஃது, அம்மாத்திரை யிலக்கணம் கூறுதல் நுதலிற்று.

இ - ள் : கண்ணிமை என நொடி என அவ் மாத்திரை - கண்ணிமையும் நொடியுமாகிய அவை மாத்திரைக்கு அளவு, நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறு - (இது) நுண்ணிதாக நூலிலக்கணத்தினை உணர்ந்த ஆசிரியர் கண்ட நெறி எ - று.

இமையென்றது, இமைத்தல் தொழிலை. நொடியென்றது, நொடியிற் பிறந்த ஓசையை. தன் குறிப்பு இன்றி நிகழ்தலின் இமை முன் கூறப்பட்டது.

நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல், நெறித் தளத்தல், தேங்க முகந்தளத்தல், சார்த்தியளத்தல், எண்ணி யளத்தல் என எழுவகைய என்னும் அளவினுள், இது சார்த்தி யளத்தல்.

'நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறு' என்றதனன், நாலுழக்குக் கொண்டது நாழியென்றாற்போல அவ்வளவைக்கு அளவை பெருமை அறிக

(வி—ரை) இமைத்தலும் நொடித்தலும் இயல்பாக எழும் பொழுது உளவாகும் காலக்கழிவே மாத்திரைக்கு அளவாகும். 'இயல்பெழுமாந்தர் இமைநொடி மாத்திரை' என நன்னூலாரும் இதன் நுண்மை தெரிந்து கூறுதல் காண்க.) இங்ஙனம் வரும் ஒரு மாத்திரையையும்,

'உன்னல் காலே ஊன்றல் அரையே.
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே'

எனப் பாகுபாடு செய்து காண்பர்.

அளவை ஏழு வகைப்படும்:

(1) நிறுத்தளத்தல்—பொருள்களைத் துலாக்கோலால் நிறுத்தி அளப்பது. (2) பெய்தளத்தல் — பொருள்களைப் படி, மரக்கால் முதலியவற்றில் பெய்து அளப்பது. (3) சார்த்தியளத்தல்—ஒன்றை ஒன்றனோடு ஒப்பிட்டு அளப்பது. அது மலையனைய தோள் என்றாற் போல்வது. (4) நீட்டியளத்தல்—ஆடை, மரம், நிலம் போல்வனவற்றைக் கை அல்லது கோலால் நீட்டி அளப்பது. (5) நெறித்தளத்தல்—வீணையின் நரம்புகளைக் கையால் மீட்டி அதன் ஒலியை அளப்பது போல்வது. இதனைத் தெறித்தளத்தல் என்பர் நச்சினார்க்கினியர். (6) தேங்கமுகந் தளத்தல்—படி, மரக்கால் போல்வனவற்றில் பொருள்களை மேல்வாய்க்கும் மேலாகத் தேக்கி அளப்பது. பெய்தளத்தில் அக்கருவியின் மேல்வாய் அளவோடு நிற்கும். இதுமேல்வாய்க்கும் மேலாகத் தேக்கி அளப்பதாகும். (7) எண்ணியளத்தல் - பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என எண்ணியளப்பது போல்வது.

மாத்திரையின் அளவைக் கண்ணிமைத்தல், கைநொடித்தல் ஆகியவற்றின் அளவோடு ஒப்பிட்டுரைத்தலின் இவ்வளவு, சார்த்தி யளத்தலின் பாற்படும்.

எழுத்துக்களை ஒலித்தற்கு ஆகும் காலக்கழிவினை மாத்திரை என்பர். இதில் கால், அரை, முக்கால் என்னும் பகுப்பு உண்டு. ஆனால் இரு மாத்திரை கொண்டது இன்ன பெயர் பெறும் என்றோ, மூன்று மாத்திரை கொண்டது இன்ன பெயர் பெறும் என்றோ அதற்குப் பெயர் கூறப்படுவது இல்லை. இதற்கு மாறாக முகத்தல் அளவையில் இங்ஙனம் பெயர் உளதாதலைக் காணலாம். நான்கு உழக்கு கொண்டதற்கு நாழி என்று பெயர். இரண்டு நாழி கொண்டதை ஒரு படி என்பர். இரண்டு படி கொண்டதை ஒரு குறுணி என்பர். இங்ஙனம் கூறுமாறு போல இத்துணை மாத்திரை யுடையது இன்ன பெயர் பெறும் என்று கூறப் படுவதில்லை. இதனையே 'நாலுழக்குக் கொண்டது நாழியென்றாற் போல' என்னும் உவமைகொண்டு உரையாசிரியர் விளக்குகின்றார்.

சேனாவரையர் கண்ணிமை நொடி (294) என்னும் நூற்பாவில் 'என'வைக் கண்ணிமை யென்பதனோடும் கூட்டுக என்றுரைத்தலானும் அவர்க்கது கருத்தன்றென்க என இளம்பூரணரை மறுத்துள்ளார். இக்கூற்றிலிருந்து, இந்நூற்பாவில் 'எனவைக் கண்ணிமை யென்பதனோடும் கூட்டுக' என்னும் தொடர் ஒன்று இருந்து விடுபட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. (7)

8. ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப.

இது, மேற்கூறிய குறிலையும் நெடிலையும் தொகுத்து வேறு ஓர் குறியிடுதல் நுதலிற்று.

இ—ள்: ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும்-ஔகாரமாகிய இறுதியையுடைய பன்னிரண்டு எழுத்தினையும், உயிர் என மொழிப-உயிரென்னும் குறியினை யுடைய என்று சொல்லுவர் எ—று. (8)

9. னகார இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப.

இது மேற்கூறிய உயிரல்லா எழுத்திற்கும் ஓர் குறியிடுதல் நுதலிற்று.

இ—ள்: னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும்-னகரமாகிய இறுதியையுடைய பதினெட்டு எழுத்தினையும், மெய் என மொழிப - மெய்யென்னும் குறியினையுடைய என்று சொல்லுவர் எ—று.

(வி—ரை) இந்நூற்பாவையும் இதற்கு முன்னுள்ள நூற்பாவையும் இணைத்தே நன்னூலார் 'அம்முதல், ஈரா றுவி கம்முதல், மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்' என யாத்தனர். (9)

10 மெய்யோ டியையினும் உயிரியல் திரியா.

இஃது, உயிர்மெய்க்கு அளபு கூறுதல் நுதலிற்று.

இ—ள் : மெய்யோடு இயையினும் – (உயிர்மெய்யாவன) மெய்களோடு உயிர் இயையப் பிறந்த நிலைமையவாயினும், உயிரியல் திரியா – (அவ்வுயிர் மெய்கள் அவ்வியைபின் கண்ணே வேறு ஓர் எழுத்தாய் நின்றமையின், மெய்யோடு இயைபின்றி நின்ற) உயிர்களது இயல்பில் திரியா எ-று.

உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க் கூட்டத்தினை, 'மெய்யோடியையினும்' என உயிர்மேல் வைத்துக் கூறியது, அவ்வுயிரின் மாத்திரையே இதற்கு மாத்திரையாகக் கூறுகின்றமை நோக்கிப்போலும். 'இயல்' என்றது பெரும்பான்மை மாத்திரையினை. சிறுபான்மை குறியும் எண்ணும் கொள்க.

எ-டு: க எனவும், கா எனவும் அவ்வாறு நின்றமை அறிக.

(வி-ரை) உயிரெழுத்துக்களுள் குற்றெழுத்துக்கள் ஒரு மாத்திரையும், நெட்டெழுத்துக்கள் இருமாத்திரையும் பெறுவனவாகும். மெய்யெழுத்துக்கள் அரைமாத்திரை பெறுவன. ஆனால் மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்துக்களுடன் கூடி உயிர் மெய்யாய் நின்ற காலத்து, உயிரெழுத்துக்களின் மாத்திரையையே தனக்குரிய மாத்திரையாகப் பெறுவதன்றி, இரண்டெழுத்திற்கும் உரிய மாத்திரையைக் கூட்டிப் பெறுவதில்லை. க்—அரைமாத்திரை. அ — ஒரு மாத்திரை. க் + அ = க — ஒன்றரை மாத்திரையென்பதின்றி, ஒரு மாத்திரையே யாகும். நன்னூலாரும் 'உயிரளவாய்' எனக் கூறுதல் காண்க. குறி—பெயர். எண்—ஒருமை, பன்மை. அ-இது ஓரெழுத்தேயாகும். குற்றெழுத்தென்று பெயர் பெறும். க-இதுவும் ஓரெழுத்தென்றும், குற்றெழுத்தென்றும் பெயர் பெறும். (10)

11. மெய்யின் [1]அளபே அரையென மொழிப.

இது. தனிமெய்க்கு அளபு கூறுதல் நுதலிற்று.

---

1. 'அளவே' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இ-ள் : மெய்யின் அளபு-மெய்யது மாத்திரையினை, அரை என மொழிப- (ஒரோ வொன்று) அரை மாத்திரை யுடையவென்று சொல்லுவர் எ-று.

எ-டு: காக்கை, கோங்கு எனக் கண்டு கொள்க.

ஈண்டு வேற்றுமை நயமின்றி ஒற்றுமை நயம் கருதப்பட்டது.

(வி-ரை) 'ஈண்டு வேற்றுமை நயமின்றி ஒற்றுமை நயம் கருதப்பட்டது' என்ற தொடர் இதற்கு முன்னுள்ள நூற்பா வுரையின் இறுதியில் இருப்பின் பொருத்தம் என்பர் திரு. பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார். அங்ஙனம் இருப்பின், பின்வருமாறு பொருள்கொள்ளவேண்டும். உயிர் மெய்யினை உயிர், மெய் எனத் தனித்தனியாகப் பிரித்துக் காணின் அது வேற்றுமை நயமாகும். உயிர் மெய்யை ஒரெழுத்தாகக் காணின் ஒற்றுமை நயமாகும்.

இந்நூற்பாவில் அத்தொடர் உள்ளதற்கேற்பப் பொருள் கூறின் காக்கை, கோங்கு என்பவற்றிலுள்ள ககர ஙகர ஒற்றுக்கள் இடத்தானும் முயற்சியானும் வேறுபடுதல் நோக்கி வேற்றுமை நயமாகவும், மாத்திரை வகையான் ஒரு தன்மைப்பட நிற்பது பற்றி ஒற்றுமை நயமாகவும் நின்றது எனப்பொருள் காண வேண்டும். (11)

12. அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.

இது, சார்பிற்றோற்றத்து எழுத்து மூன்றற்கும் அளபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அ இயல் நிலையும்-மேற் கூறிய அரை மாத்திரை யாகிய அவ்வியல்பின்கண்ணே நிற்கும், ஏனை மூன்று - ஒழிந்த சார்பிற் றோற்றத்து மூன்றும் எ - று.

எ-டு : கேண்மியா, நாகு, எஃகு எனக் கண்டு கொள்க. (12)

13. [1]அரையளபு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை.

இது, மெய்களுள் ஒன்றற்கு மாத்திரைச் சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அரை அளபு குறுகல் மகரம் உடைத்து - அரையளபாகிய எல்லையிற் குறுகிக் கால்மாத்திரையாதலை மகரமெய் உடைத்து; (அஃது யாண்டோவெனின்) இசையிடன் அருகும்- வேறு ஓர் எழுத்தினது ஒலியின்கண் அது சிறுபான்மையாகி வரும், தெரியுங்காலை – ஆராயுங்காலத்து எ – று.

எ – டு: போன்ம், வரும்வண்ணக்கண் எனவரும்.

கால்மாத்திரை யென்பது உரையிற்கோடல்.

(வி – ரை) னகர வொற்றின் பின்னும், வகரத்தின் முன்னும் வரும் மகரவொற்று, தன் மாத்திரையினின்றும் குறுகும். இதனை ஆசிரியர் 32, 33 ஆம் நூற்பாக்களில் தெளிவாகக் கூறியுள்ளார். நன்னூலார் இவ்விரு நூற்பாக்களையும் தொகுத்துத் தொல்காப்பியர் கூறாத ணகரவொற்றையும் சேர்த்து,

'ணனமுன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்' (எழுத்-41) எனக் கூறுவர்.

இசை - எழுத்து; 'இசை திரிந்து இசைப்பினும்' (தொல் - பொருளியல், 1-ஆம் நூற்பா) எனப் பிறண்டும் இப்பொருளில் வழங்குதல் காண்க. நச்சினார்க்கினியரும் இக்கருத்தினரே. பேராசியர் இசை என்பதற்கு இசைநூலின்கண் எனப்பொருள் காண்பர்.

மகரவொற்றுத் தன் மாத்திரையினின்றும் குறுகும் என்று ஆசிரியர் கூறினரேயன்றி எத்துணையளவு குறுகும் எனக் கூறினா ரல்லர். கால்மாத்திரை குறுக, எஞ்சிய கால் மாத்திரை பெறும் என்பதை உரையிற்கோடலால் கொண்டனர் இளம்பூரணர். (13)

---

[1] 'அரையளவு' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

14. உட்பெறு புள்ளி உருவா கும்மே.

இது, பகரத்தின் மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

இ - ள் : உள்பெறு புள்ளி உருவு ஆகும் - புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும் புள்ளி மகரத்திற்கு வடிவாம் (அஃ தின்மை பகரத்திற்கு வடிவாம்.) எ - று.

எ - டு: ப், ப எனக் கண்டுகொள்க.

(வி - ரை) பண்டைக் காலத்தில் பகர வொற்றிற்கும் மகரத் திற்கும் வரிவடிவில் அதிக வேற்றுமை யில்லை. ப் - இது பகர வொற்று. ப் - இது மகரமாகும். இதனையே இந்நூற்பாவிற்குரிய உரையாகக் கொள்கின்ருர் இளம்பூரணர். நச்சினுர்க்கினியரும் இவரையே தழுவி யுரைத்தனர். எனினும் இது பொருந்துவ தன்ரும்.

நூற்பாவில் ' உட்பெறு புள்ளி உருவாகும்மே ' என்றிருக் கிறதேயன்றி எதனுடைய உட்பெறுபுள்ளி என்றில்லை. இதற்குப் பகரத்தின் உட்பெறுபுள்ளி எனக்கொண்டனர் உரையாசிரியர்கள் இருவரும். ஆனல், இதற்கு முன்னைய நூற்பா மகரக்குறுக்கம் கூறுவதாகும். எனவே இம்மகரக் குறுக்கமே அதிகாரத்தால் இந் நூற்பாவிற்கு எழுவாயாக நிற்றல் பொருத்தமாகும். ஆதலின் மகரக் குறுக்கத்தின் வரிவடிவையே ஆசிரியர் இந்நூற்பாவில் விளக்குகின்ருர் எனக்கொள்ளல் வேண்டும்.

(மகரஒற்று புறத்தே பெறும்புள்ளியோடு, அதன் உட்புறத்தும் ஒரு புள்ளி பெறுமாயின் அது மகரக் குறுக்கத்தின் வடிவமாகும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும்.) (மகரவொற்றின் வடிவம் ' ம் ' என்பது. மகரக்குறுக்கத்தின் வடிவம் ம் என்பதாகும்.)

எகர ஒகரங்கள் புள்ளியின்றி நிற்பின் நெட்டெழுத்துக்களாக வும், புள்ளிபெறின் குற்றெழுத்துக்களாகவும் பண்டைக்காலத்து வழங்கப்பட்டதுபோல, மகரவொற்றும் புறத்துப்பெறும் புள்ளியோடு

நிற்பின் மகரவொற்றுகவும், அதன் உட்புறத்தும் ஒரு புள்ளிபெறின் அது மகரக் குறுக்கமாகவும் கொள்ளப்பட்டது என்பது போதரும்.

வீரசோழிய உரையாசிரியர், 'வருமொழிமுதல் வகரம் வந்து புணர்ந்தால் அந்த மகரமானது குறுகிக் கால் மாத்திரையாய், உட்புள்ளி பெறும்' (வீரசோழி – 19) எனக் கூறியிருத்தலும் இதற்கு அரணாகும். (14)

15. மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்.

இஃது, உயிர்மெய்யோடு தனிமெய்யிடை வடிவு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

இ – ள்: மெய்யின் இயற்கை – தனிமெய்யினது இயல்பு, புள்ளியோடு நிலையல் – புள்ளியோடு நிற்றல் (உயிர் மெய்யினது இயல்பு புள்ளியின்றி நிற்றல்) எ – று.

எ–டு: க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் எனக் கண்டு கொள்க. (15)

16. எகர ஒகரத்தியற்கையும் அற்றே.

இஃது, எகர ஒகரங்கட்கு ஏகார ஒகாரங்களோடு வேற்றுமை செய்தல் நுதலிற்று.

இ–ள்: எகர ஒகரத்து இயற்கையும் அற்று-எகர ஒகரங்களது இயல்பும் அவ்வாறு புள்ளி பெறும் இயல்பிற்று) (ஏகார ஒகாரங்களது இயல்பு அப்புள்ளி பெரு இயல்பிற்று) எ-று.

எ–டு: ெ, ொ.

(வி-ரை) 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் எகர ஒகர மெய் புள்ளி'.

என நன்னூலாரும் கூறுதல் காண்க. (16)

17. புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே.

இஃது, உயிரும் மெய்யும் கூடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: எல்லா மெய்யும் புள்ளி இல்லா - எல்லா மெய்களும் புள்ளி இல்லையாம்படியாக, உருவு உருவு ஆகி-தத்தம் முன்னை வடிவே பின்னும் வடிவாக, அகரமோடு உயிர்த்தலும் - அகரத்தோடு கூடி ஒலித்தலும், ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும் - ஒழிந்த உயிர்களோடு வடிவு வேறுபட்டு ஒலித்தலுமாகிய, அஈர் இயல-அவ்விரண்டு இயல்பினையுடைய, உயிர்த்தல் ஆறு-அவை ஒலிக்கு முறைமை எ-று.

'தன்னின முடித்தல்' என்பதனான், அளபெடை உயிரோடும் சார்பிற்றோற்றத்து உயிரோடும் கூடும் உயிர்மெய்யும் கொள்க.

எ-டு: உருவு உருவாகி உயிர்த்தல் க ங எனக் கண்டுகொள்க. உருவு திரிந்து உயிர்த்தல் கா ஙா எனக் கண்டு கொள்க.

ஈண்டு உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க் கூட்டத்தினை 'எல்லா மெய்யு' மென்று மெய்மேல் வைத்துக் கூறியது, அது முன் கூறிக் கூறப்படுதல் நோக்கிப் போலும் உயிர்மெய் யென்பதனை ஒற்றுமை கொள்வழி உம்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை யெனவும், வேற்றுமைகொள்வழி உம்மைத் தொகை யெனவும் கொள்க. 'இல்லாத' என்பது 'இல்லா' என நின்றது.

உருவு திரிந்து உயிர்த்தல் மேலும் கீழும் விலங்குபெறுவன விலங்குபெற்று உயிர்த்தலும், கோடுபெறுவன கோடு பெற்று உயிர்த்தலும், புள்ளிபெறுவன புள்ளிபெற்று உயிர்த்தலும், புள்ளியும் கோடும் உடன் பெறுவன புள்ளியும் கோடும் உடன் பெற்று உயிர்த்தலும் எனக் கொள்க.

(வி-ரை) உயிர்மெய் – உயிரும் மெய்யுமாகிய எழுத்து எனப் பொருள் படுதலின் உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை யாயிற்று.

மேல்விலங்கு பெறுவன	— கி கீ
கீழ் விலங்கு பெறுவன	— கு கூ
கோடு பெறுவன	— கெ கே
புள்ளி பெறுவன	— எ், ஒ், ம், நாகு், க.
புள்ளியும் கோடும் உடன் பெறுவன	— கெ., செ.

எனவே, கா என்பதன் பழைய வடிவம் க. என்றும், கொ என்பதன் பழைய வடிவம் கெ. என்றும் வழங்கப்பட்டன எனத் தெரிகிறது.

உயிர்த்தல்-ஒலித்தல் எனப்பொருள் காண்பது பொருத்தமன்று; வெளிப்படுதல் என உரைகாண்பதே பொருத்தம் என்பர் சிவஞானமுனிவர்.

உயிர்மெய் யெழுத்துக்களின் வரிவடிவ அமைப்பினை இந்நூற் பாவானும், அதற்குரிய அளவினை 10-ஆம் நூற்பாவானும், ஒலிக்கும் முறையினை அடுத்த நூற்பாவானும் ஆசிரியர் கூறு கின்றார். நன்னூலார் இவற்றையெல்லாம் தொகுத்து.

'புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோடு உருவு திரிந்தும்
உயிரளவாய் அதன் வடிவொழித்து இருவயிற்
பெயரொடும் ஒற்றுமுன் னய்வரும் உயிர்மெய்'

எனக் கூறினர். (17)

18\. மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே.

இஃது, உயிர்மெய்யுள் உயிரும்மெய்யும் நிற்குமாறு உணர்த் துதல் நுதலிற்று.

இ-ள்: உயிர் - உயிர், மெய்யின் வழியது - மெய்களின் பின்னவாம், தோன்றும் நிலை - உயிர்கள் தோன்றும் நிலைமைக் கண் எ-று.

'தோன்று நிலை' என்றதனான், உயிர்மெய்களைப் பிரிக்கு மிடத்தும் கூட்டுமிடத்தும், அவ்வாறே முன்னும் பின்னும் ஆதலைக் கொள்க. மெய்யும் உயிரும் முன்னும் பின்னும் பெற நிற்கு மென்றமையால், அக்கூட்டம் பாலும் நீரும்போல உடன்கலந்த தன்றி, விரல்நுனிகள் தலைப்பெய்தாற்போல வேறுநின்று கலந் தனவல்ல என்பது பெறுதும்.

ஈண்டு வேற்றுமை நயம் கருதப்பட்டது.

(வி-ரை) உயிர்மெய் யெழுத்துக்களில் ஒற்று முன்னும் உயிர் பின்னும் ஆக நிற்கும் என்பது இந்நூற்பாவின் கருத் தாகும். மெய்யெழுத்துக்கள் தன்னளவில் அரை மாத்திரை பெறுமேனும், உயிருடன் சேர்ந்துழி தாம் ஏறிய உயிரின் மாத்திரையே தமக்குரிய மாந்திரையாகப் பெற்றுவிடுகின்றது. எதுபோலவெனில், நீர் பாலுடன் சேர்ந்துழி பாலின் குணமே தனக்குரிய குணமாய்த் தன் தன்மையை இழந்து விடுதல் போலாகும். இங்ஙனமின்றி இவ்வுயிர்மெய்க் கூட்டத்தை விரலும் விரலும் சேர நின்றாற்போன்றது எனக்கருதுதல் ஆகாது என்பது உரையாசிரியர் கருத்தாகும். நச்சினார்க்கினியர் இவ் வுவமையைச் சிறிதுமாற்றி இக்கருத்தினை நன்கு விளக்குவர். அவர்கருத்து வருமாறு:

'முன்னின்ற சூத்திரத்தான் மெய் முன்னர் நிற்ப, உயிர் பின்வந்து ஏறுமென்றார். அம்முறையே ஓசையும் பிறக்கு மென்றார். இதனானே மாத்திரை கொள்ளுங்கால் 'உப்பும் நீரும் போல' ஒன்றேயாய் நிற்றலும், வேறுபடுத்துக் காணுங்கால் 'விரலும் விரலுஞ் சேர நின்றாற் போல' வேறாய் நிற்றலும் பெற்றாம். நீர் உப்பின் குணமே யாயவாறு போல, உயிரும் மெய்யின் குணமேயாய் வன்மை மென்மை இடைமை எய்தி நிற்றல் கொள்க.'

உயிர்மெய் யெழுத்துக்கள் மாத்திரை வகையால் இங்ஙனம் ஒன்றுபட்டு நிற்பினும், ஒலிக்கும் முறையில் ஒற்று முன்னும் உயிர்பின்னுமாக நிற்கும் என உயிர்மெய்யைப் பிரித்து இந் நூற்பா விளக்கம் தருதலின், 'ஈண்டு வேற்றுமை நயம் கருதப் பட்டது' என்றார் உரையாசிரியர். (18)

19. வல்லெழுத் தென்ப கசட தபற.

இது, தனிமெய்களுள் *சிலவற்றிற்கு வேறு ஓர் குறியிடுதல் நுதலிற்று.*

இ-ள், வல்லெழுத்து என்ப-வல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், க ச ட த ப ற - க ச ட த ப ற என்னும் தனி மெய்களை எ – று.

வல்லென்று இசைத்தலானும், வல் என்ற தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்து எனப்பட்டது. மொழிக்கு முதலா மெழுத்து நான்கு உளவாகலானும், அவற்றால் வழக்குப்பயிற்சி பெரிதாகலானும் வல்லினம் முன் கூறப்பட்டது. (19)

20. மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன.

இதுவும் அது.

இ-ள்: மெல்லெழுத்து என்ப-மெல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், ங ஞ ண ந ம ன - ங ஞ ண ந ம ன என்னும் தனிமெய்களை எ – று.

மெல்லென்று இசைத்தலானும், மெல் என்ற மூக்கின் வளியாற் பிறத்தலானும், மெல்லெழுத்து எனப்பட்டது. மொழிக்கு முதலாமெழுத்து மூன்று உளவாகலானும் அவற்றின் வழக்குப் பயிற்சியானும் மெல்லினம், முதலாமெழுத்துச் சிறுபான்மை வழக்கினவாய் இரண்டாகிய இடையினத்தின் முன்வைக்கப்பட்டது.

வன்மை மென்மை கூறலின், எழுத்து அருவன்றி உருவாதல் பெறப்பட்டது. உயிருக்கும் குறுமை நெடுமை கூறலின் உரு வென்பது பெறுதும். (20)

21. இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள

இதுவும் அது.

இ-ள்: இடையெழுத்து என்ப — இடையெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், ய ர ல வ ழ ள — ய ர ல வ ழ ள என்னும் தனிமெய்களை எ-று.

இடைநிகரவாகி ஒலித்தலானும், இடைநிகர்த்தாய மிடற்று வளியாற் பிறத்தலானும் இடையெழுத்து எனப்பட்டது.

(வி·ரை) வல்லினத்தில் மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் :— க, ச, த, ப. மெல்லினத்தில் மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் :— ஞ, ந, ம. இடையினத்தில் மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் :— ய, வ.

இவ்வல்லின, மெல்லின, இடையினங்களை இம்முறையே கூறற்குரிய காரணத்தைச் சிவஞானமுனிவர் பிறவாறு விளக்குவர். அவர் கருத்து வருமாறு:—

'மெய்களுள், வலியாரை முன்வைத்து மெலியாரைப் பின் வைத்தல் மரபாகலின், அச்சிறப்பு நோக்கி வல்லெழுத்துக்கள் முன்னும், அவ்வவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துக்கள் அவ்வவற்றின் பின்னுமாக வைக்கப்பட்டன. அவ்விரண்டும் நோக்கியல்லது இடைநிகரனவாய் ஒலித்தல் அறியப்படாமையின், அதுபற்றி இடையெழுத்துக்கள் அவ்விரு கூற்றிற்கும் பின் வைக்கப் பட்டன'. (21)

22. அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்
[1]மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை.

இது, தனிமெய்ம் மயக்கத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

---

1. 'மெய்ம்மயக் குடனிலை' என்பதும் பாடம்.

இ-ள் அமூ ஆறும்-மேற்சொல்லப்பட்ட (மூவாறு) பதினெட்டு மெய்யும், வழங்கு இயல் மருங்கின் - தம்மை மொழிப்படுத்தி வழங்கும் இயல்பு உளதாமிடத்து, மெய் மயங்கு - மெய்ம் மயக்கம் என்றும், உடன்நிலை - உடன்நிலை மயக்கம் என்றும் இருவகைய, தெரியும் காலை - (அவை மயங்கு முறைமை) ஆராயும் காலத்து எ-று

[1]உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூன்றனையும் உறழ்ச்சி வகையான் உறழ ஒன்பது உளவாமன்றே, அவற்றுள் தனிமெய் யோடு தனிமெய்ம் மயக்கம் ஒன்றே கூறிய தென்னெனின் மற்ற வற்றிற்கு வரையறை யின்மையின் வரையறையுடைய தனிமெய்ம் மயக்கமே கூறியொழிந்தார் என உணர்க.

'மெய்' என்றதனால், தனிமெய்யோடு உயிர்மெய்ம் மயக்க மன்றி, தனிமெய்யோடு தனிமெய்ம் மயக்கமாதல் கொள்க.

(வி-ரை) மயக்கம் — கூட்டம். எழுத்துக்கள் ஒன்றனோடு ஒன்று கூடி வருங்கால் தம்மொடு தாமே கூடி வருவனவும், தம்மொடு பிறவே கூடி வருவனவும், தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் கூடிவருவனவும் என முத்திறமாகக் கூறப்படும்.

எழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய் என மூன்று வகைப் படும். இவற்றுள் உயிருடன் உயிர் கூடிவருதல் இல்லை. உயிர் மெய்முன் உயிர்மெய் கூடிவருவதற்கு வரையறை யில்லை. ஆதலின் இடைநின்ற மெய்யெழுத்துக்களே தம்மொடுதாமும், தம்மொடு பிறவும், தம்மொடு தாமும் பிறவும் மயங்கும். இம்மயக்கத்தையே (கூடும் கூட்டத்தையே) வரையறை செய்கின்றார் ஆசிரியர். இவற்றுள், தம்மொடு தாம் மயங்கும் மயக்கத்தை 'உடனிலை மயக்கம்' என்றும், தம்மொடு பிறமயங்கும் மயக்கத்தை 'வேற்று நிலை மெய்ம் மயக்கம்' என்றும் கூறுவர்.

மெய்யெழுத்துக்கள் பதினெட்டனுள் க, ச, த, ப என்ற நான்கும் தம்மொடு தாமே மயங்கும். ர, ழ என்னும் இரண்டும்

---

1. இப்பகுதி கன்னியப்ப முதலியார் பதிப்பில் சிறிது வேறுபடவுள்ளது.

15 JAN CHENNAI-600 008

தம்மொடு பிறவே மயங்குதல் (வேற்றுநிலை மெய்ம் மயக்கம்). ஏனைய 12 மெய்யெழுத்துக்களும் தம்மொடு தாமும் பிறவும் மயங்கும். இதனை 23 முதல் 30 வரையுள்ள நூற்பாக்களால் அறியலாம்.)

ஆனால் நச்சினார்க்கினியர் இம்மயக்கத்தை வேறு மூவகையாகப் பிரிக்கின்றார். (1) தனிமெய் தன்மெய்யோடும், பிறமெய்யோடும் மயங்கும் மயக்கம். (2) உயிர்மெய் உயிர்மெய்யோடும், தனிமெய்யோடும் மயங்கும் மயக்கம். (3) உயிர், உயிர்மெய்யோடும் தனிமெய்யோடும் மயங்கும் மயக்கம். (இது 'தெரியுங் காலை' என்ற மிகையினால் கொள்ளப்பட்டது.)

இம்மூன்றனுள் முதற்கண்ணுள்ள மெய்ம்மயக்கமே ஆசிரியரால் கூறப்படுகின்றது. ஏனைய இரண்டும் கூறப்பட்டில. ஆதலின், இவ்விரு மயக்கங்களையும் இந்நூற்பாவில் அடக்கிக்கூறுவது வேண்டுவதின்றாம். இவ்விரண்டனுள்ளும் முன்னையதை நூற்பாவிலேயே அடக்கிக்கூற முற்பட்ட நச்சினார்க்கினியர் 'மெய்ம் மயங்கு உடனிலை' என்ற தொடரை மெய்ம்மயங்குநிலை, உடன் மயங்குநிலை என இரண்டாகப் பிரித்தும், 'உடன்' என்பதற்கு அப்பதினெட்டு மெய்யும் உயிருடன் நின்று என்று பொருளுணர்த்தியும் இடர்ப்படுகின்றனர். ஆயினும் இளம்பூரணர் கூறுமாறுபோல 'மேற்சொல்லப்பட்ட பதினெட்டு மெய்களும் தம்மை மொழிப் படுத்து வழங்குமிடத்துத் தம்மொடு பிறமெய் மயங்கும் மயக்கமும் (மெய்ம்மயக்கம்–அதாவது வேற்றுநிலை மயக்கம்), தம்மொடு தாம் மயங்கும் மயக்கமும் (அதாவது உடனிலை மயக்கம்) என இரு வகைய' என உரைகாண்பதே அமைவுடையதாகும். நன்னூலாரும் இக்கருத்தினைத் தழுவியே,

> 'கசதப வொழித்த ஈரேழன் கூட்டம்
> மெய்ம்மயக் (கு), உடனிலைரழ வொழித்(து) ஈரெட்(டு)
> ஆகும், இவ்விருபால் மயக்கும் மொழியிடை
> மேவும், உயிர்மெய் மயக்கு அளவின்றே' (22)

என்றனர்.

23. டறலள வென்னும் புள்ளி முன்னர்க்
கசப வென்னு மூவெழுத் துரிய.

இது, மெய்ம்மயக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: டற லள என்னும் புள்ளி முன்னர் - டறலள என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னர், கச ப என்னும் மூ எழுத்து உரிய - க ச ப என்று சொல்லப்படும் மூன்றெழுத்தும் மயங்குதற்கு உரிய எ – று.

எ-டு: 'கட்க, கற்க, செல்க' கொள்க எனவும்; கட்சிறூர், கற்சிறூர், செல்சிறூர், கொள்சிறூர் எனவும்; கட்ப, கற்ப, செல்ப, கொள்ப எனவும் வரும்.

மேல் 'தெரியுங்காலை' (22) என்றதனுன், இம்மெய்ம்மயக்கம் கூறுகின்ற சூத்திர மெல்லாம் பலபடியால் மயக்கம் கொள்ளச் சொல்நோக்கு உடையவெனினும், வழக்கினோடு பொருந்த ஒன்றனோடு ஒன்றன்றி மயங்காதென்பது கொள்க. மெய்ம்மயக்கம் ஒரு மொழிக்கும் புணர்மொழிக்கும் பொதுவாகலின், மேற் கூறும் புணர்மொழிச் செய்கையெல்லாம் தலையாய அறிவினோரை நோக்க ஒருவாற்ருற் கூறியவாருயிற்று.

(வி-ரை) ட, ற, ல, ள என்ற நான்கு மெய்களுள் ஏதேனும் ஒன்று இடையில் நிற்ப, அதனுடன் க, ச, ப ஆகிய மூன்று எழுத்துக்களும் தனித்தனியே மயங்கிவரும் என்பது நூற்பாவின் கருத்தாகும். ஆயினும் நூற்பாவின் சொல்நோக்கைப் பார்க்கும் பொழுது, ட, ற, ல, ள ஆகிய நான்கு மெய்களுமே சேர்ந்து நிற்ப, அவற்றின்முன் க, ச, ப ஆகிய மூன்று மெய்களும் சேர்ந்து நிற்கும் எனப்பொருள்படுமாறும் உள்ளது. இங்ஙனமே அடுத்த நூற்பாவிலும்கூடப் பொருள்கொள்ளுமாறு சொற்கள் உள எனினும் டகரமெய் ஒன்றுடன் ககரமெய்யோ, அன்றிச் சகரமெய்யோ, அன்றிப் பகரமெய்யோ தான் மயங்கி நிற்கும்; இங்ஙனமே ஏனை யெழுத்துக்களுடனும் ஒன்று ஒன்றுடன் தான் மயங்கும். இதனை விளக்கவே ஆசிரியர் 'தெரியுங்காலை' என்று கூறினுர் என்பது இளம்பூரணர் கருத்தாகும்.

இம்மயக்கம் ஒருமொழி, தொடர்மொழி ஆகிய இரண்டற்கும் பொது என்பது இளம்பூரணர் கருத்தாகும். நச்சினார்க்கினியர் ஒரு மொழிக்கு மட்டுமே உரியது என்பர். எனினும் இளம்பூரணர் கருத்தே பொருத்தம் உடையதாகும். இங்ஙனமாகவே கட்சிறார், கற்சிறார் என்புழி டகாரறகர மெய்யுடன் சகரமெய் மயங்கி வருதலைக் காண்கிறோம். எனவே கள்+சிறார் என்பது கட்சிறார் என்றும், கல்+சிறார் என்பது கற்சிறார் என்றும் ஆகிறது என்பதையும் இவற்றான் அறியமுடிகின்றது. இங்ஙனம் உய்த்துணருங்கால் புணர்மொழிச் செய்கையும் ஒருவாறு கூறினார் எனத் தெரிகிறதன்றோ! இதுபற்றியே இளம்பூரணர் மேற்கூறும் புணர்மொழிச் செய்கையெல்லாம் தலையாய அறிவினோரை நோக்க ஒருவாற்றாற் கூறியவாறாயிற்று என்றனர். இக்கருத்துப் பற்றியே நச்சினார்க்கினியரும் ஈண்டு இருமொழிப் புணர்ச்சி காட்டில், கூறியது கூறல் என்னும் குற்றமாம் என மறுத்தனர், அது பொருந்தாமையை அப்பதிப்பில் விளக்கியுள்ளேன்; ஆண்டுக் காண்க. இலக்கண விளக்க ஆசிரியரும் இளம்பூரணர் கருத்தையே தழுவுவர்.

இந்நூற்பாவையும் அடுத்த நூற்பாவையும் ஒத்து நோக்கிய நன்னூலார்,

'டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்'.

என்றும்,

'லளமுன் கச பவயஒன் றும்மே'.

என்றும் கூறினர். (23)

23-24. அவற்றுள்
லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்.

இதுவும் அது.

இள்-: அவற்றுள் மேற்கூறிய நான்கனுள்ளும், லளஃகான் முன்னர்-லகார ளகாரங்களின் முன்னர், யவவும் தோன்றும்-கசபக்களேயன்றி யகர வகரங்களும் தோன்றிமயங்கும் எ-று.

எ-டு: கொள்யானை, வெள்யானை, கோல்வளை, வெள்வளை என வரும். (24)

25. ஙஞண நமன வெனும்புள்ளி முன்னர்த்
தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே.

இதுவும் அது.

இ-ள்: ங ஞ ண ந ம ன எனும் புள்ளிமுன்னர்-ங ஞ ண ந ம ன என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னர், தத்தம் மிசைகள் ஒத்தன-(நெடுங்கணக்கினுள்) தத்தமக்கு மேல் நிற்கும் எழுத்தாகிய க ச ட த ப றக்கள் பொருந்தின, நிலை-மயங்கி நிற்றற்கண் எ-று.

எ-டு: தெங்கு, மஞ்சு, வண்டு, பந்து, கம்பு, கன்று என வரும். (25)

26. அவற்றுள்
ணனஃகான் முன்னர்க்
க ச ஞ ப ம ய வ வ் வேழு முரிய.

இதுவும் அது.

இ-ள்: அவற்றுள்-மேற்கூறப்பட்ட மெல்லெழுத்து ஆறனுள், ணனஃகான் முன்னர்-ணகார னகாரங்களின் முன்னர், க ச ஞ ப ம ய வ ஏழும் உரிய-(டறக்களே யன்றி) க ச ஞ ப ம ய வ என்று சொல்லப்படும் ஏழும் மயங்குதற்கு உரிய எ-று.

எ-டு: வெண்கலம், புன்கண்; வெண்சாந்து, புன்செய்; வெண்ஞாண், பொன்ஞாண்; வெண்பலி, பொன்பெரிது; வெண்மாலை, பொன்மாலை; மண்யாது; பொன்யாது; மண்வலிது, பொன்வலிது என வரும். (26)

27. ஞ ந ம வ வென்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே.

இதுவும் அது.

இ-ள்: ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர் – ஞ ந ம வ என்று சொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர், யஃகான் நிற்றல் மெய்பெற்றன்று–யகரம் மயங்கி நிற்றல் பொருண்மை பெற்றது எ-று.

எ-டு: உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது என வரும். (27)

28. [1] மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்.

இதுவும் அது.

இ-ள்: மஃகான் புள்ளிமுன்–மகரமாகிய புள்ளி முன்னர் வ உம் தோன்றும் - (பகரயகரங்களேயன்றி) வகரமும் தோன்றி மயங்கும் எ-று.

எ-டு: நிலம் வலிது எனவரும். (28)

29. யரழ வென்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்.

இதுவும் அது.

இ-ள்: யரழ என்னும் புள்ளி முன்னர் – யரழ என்று சொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர், முதல் ஆகு எழுத்து ஙகரமொடு தோன்றும் - மொழிக்கு முதல் ஆம் என்னப்பட்ட ஒன்பது மெய்யும் (முதலாக) ஙகரத்தோடு தோன்றி மயங்கும் எ–று.

எ-டு: வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது, சிறிது, தீது, பெரிது; ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என வரும். வேய்ஙனம், வேர்ஙனம், வீழ்ஙனம் எனவும் ஒட்டுக. வேய்யாது என்புழி, உடனிலையாதலான் யகரம் ஒழித்து ஒட்டுக.

(வி-ரை) 25-ஆம் நூற்பா முதல் இந்நூற்பா வரையி லுள்ள கருத்துக்களை நன்னூலார் தொகுத்தும் வகுத்தும் ஏழு

1. இதற்கு உதாரணம் இக்காலத்து இறந்தன என்பர் நச்சினார்க் கினியர்.

நூற்பாக்களில் கூறினர். அவற்றை அப்படியே தழுவினர் இலக்கண விளக்க நூலார்.

'ஙம்முன் கவ்வும், வம்முன் யவ்வும்,
ஞநமுன் ஙினமும் யகரமும், டறமுன்
கசபவும், ணனமுன் இனமும் கசஞப
மயவவும், மம்முன் பயவவும், யரழமுன்
மொழிமுதல் மெய்யும், லளமுன் கசப
வயவு நின்று மயங்கும் என்ப.'

என்பது இலக்கண விளக்கம். (29)

30. மெய்ந்நிலை சுட்டின் எல்லா வெழுத்தும்
தம்முன் தாம்வரூஉம் ரழஅலங் கடையே.

இது, நிறுத்த முறையானே உடனிலை மயக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மெய்ந்நிலை சுட்டின் - பொருள் நிலைமைக் கருத்தின் கண், எல்லா எழுத்தும் தம்முன் தாம் வரும் – எல்லா மெய் யெழுத்தும் தம்முன்னே தாம் வந்து மயங்கும், ர ழ அலங்கடை- ரகார ழகாரங்கள் அல்லாத இடத்து எ-று.

எ-டு: காக்கை, எங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பட்டை, மண்ணை, தத்தை, வெந்நோய், அப்பை, அம்மி, வெய்யர், எல்லி, எவ்வி, கொள்ளி, கொற்றி, கன்னி என வரும்.

'மெய்ந்நிலை சுட்டின்' என்றதனால், 'தம்முன்தாம் வரும்' என்றது, மெய்ம்முன்னர் மெய்யென்னும் மாத்திரையன்றி, உடனிலைமெய் மேலதாம் என்பதுகொள்க. 'எல்லாம்' என்றது, மேல் ய ர ழ என்ற அதிகாரம் மாற்றிவந்து நின்றது.

(வி-ரை) 'ரழ வல்லன தம்முன் தாம்உடன்நிலையும்' (எழுத்-63) என்பது இதனைத் தழுவிய நன்னூல் நூற்பாவாகும். (30)

31. அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு.

இ-ள்: அ இ உ அம் மூன்றும் சுட்டு — (குற்றெழுத்து என்னப் பட்ட) அ இ உ என்னும் அம்மூன்றும் சுட்டு என்னும் குறியவாம் எ-று.

எ-டு : அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் என வரும். (31)

32. ஆ ஏ ஓ அம் மூன்றும் வினஅ.

இ-ள் ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா - (மேல் நெட்டெழுத்து என்னப்பட்ட) ஆ ஏ ஓ என்னும் அம் மூன்றும் வினா என்னும் குறியவாம் எ-று.—

எ-டு: உண்கா, உண்கே, உண்கோ, சாத்தா எனவரும்.

'தன்னின முடித்தல்' என்பதனால் எகரமும் யகர ஆகாரமும் வினாப் பெறுமெனக் கொள்க.

இக்குறிகளையும் முன் குறிலென்றும் நெடிலென்றும் கூறிய வழியே கூறுகவெனின், இவை சொல் நிலைமையிற் பெறும் குறி யாகலின், ஆண்டு வையாது மொழிமரபினைச் சாரவைத்தார் என்க. இக்குறி மொழிநிலைமைக்கேல் எழுத்தின்மேல் வைத்துக் கூறியது என்னையெனின், இவ்வதிகாரத்துப் பெயர் வினையல்லனவற்றிற்குக் கருவி செய்யாமையின் என்க.

(வி-ரை) நூற்பாவினாலும் உத்தியாலும் கொள்ளப்பட்ட வினா எழுத்துக்களைக் கூட்டி, இவை எவ்வெவ்விடத்து வினாப்பொருளில் வழங்கும் என்பதையும் தெளியுமாறு,

'எயா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏஇரு வழியும் வினாவா கும்மே' (எழுத் – 12)

என நன்னூலார் யாத்துரைத்த திறம் இன்புறுதற்குரியதாகும்.

முன்னர் 3, 4 –ஆம் நூற்பாக்களில் குற்றெழுத்துக்களையும் நெட்டெழுத்துக்களையும் ஆசிரியர் முறையே கூறியுள்ளார். இவ் வினாவெழுத்துக்களையும் ஆண்டே வைக்காதது என்னை? யென வினவிக்கொண்டு, அதற்குத்தாமே விடைதருகின்றார் இளம்பூரணர்.

இவை சொல்லாம் நிலையிலேயே வினாப்பொருண்மை பெறு கின்றன. அவற்றிற்குக் குறுமையும், நெடுமையும் கூறுவது எழுத்தாந்தன்மையில் ஆகும்; ஆதலால் இதனை ஆண்டு வையாது

ஈண்டு மொழி மரபினைச் சாரவைத்தார் ஆசிரியர் என்பது இளம்பூரணர் தரும் விடையாகும். நச்சினார்க்கினியரும் இக்கருத்தினையே தழுவினர்.

இளம்பூரணர் இங்ஙனம் எழுப்பிய வினாவே, நன்னூலாருக்குக் குறில் நெடில் கூறிய வழியே தொடர்ந்து சுட்டும் வினாவும் உடன் கூறுதற்கு ஏதுவாயிற்று எனலாம். நன்னூல் 64 முதல் 67 வரையுள்ள நூற்பாக்களைக் காண்க. எனினும் குற்றெழுத்துக்களும் நெட்டெழுத்துக்களும் எழுத்தாந்தன்மையில் நின்று பெயர் பெறுதல் போல, சுட்டு, வினாக்கள் எழுத்தாந்தன்மையில் நின்று பெயர் பெறுதலின்மையின் அவற்றோடு ஒருங்கு ஓதியது குற்றமேயாகும். சங்கரநமச்சிவாயர் இதற்கு அமைதிகூறுவார் போல இம்மூன்று எழுத்தும் சுட்டுப்பொருள் உணர்த்தவரின் சுட்டெழுத்தாம் எனக் கூறியிருப்பினும், அவரே 163, 276ஆம் நூற்பாக்களில் இவற்றை இடைச்சொல் எனக் கூறியிருத்தலால் அவ்வமைதி பொருந்தாதாம். அன்றியும் ஆசிரியர் தொல்காப்பியர் 'குற்றெழுத்தென்ப ; நெட்டெழுத்தென்ப' என அவற்றைக் கூறினார்போல இச்சுட்டு. வினாக்களை எழுத்தெனக் கூறாமையும் காண்க.

'முதலும் சினையும் பொருள்வேறு படாஅ'

என்றும்,

'கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ'

என்றும் ஆசிரியர் யாத்துள்ளவாறு, ஈண்டும்

'ஆ ஏ ஓ அம் மூன்றும் வினாஅ'

என இறுதிச்சீர் ஈரசையாகவே நிற்கவேண்டும் என்பர் திரு. வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள். இது பற்றி விரிவாக அவ்வாசிரியர் விளக்கியுள்ளார். ஆண்டுக் காண்க. (தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி - பக். 32, 33).

இங்ஙனம் இவை சொல்லாக நிற்கும் நிலைமையில் வினாப்பொருண்மையும், சுட்டுப் பொருண்மையும் படும் எனில், இவற்றைச்

சொல்லாகக் கூருது எழுத்தாக வைத்துக் கூறுவானேன் என்பது அடுத்த வினு. எழுத்ததிகாரத்தில் கூறப்படும் கருவிகள் எல்லாம் பெயர்ச்சொல் வினைச் சொற்களுக்கேயாகும். இச் சுட்டு வினுக்களை மொழியாகக் கூறின் இவை இடைச் சொற்கள் எனப்படும். எனவே இச்சொற்களுக்கும் கருவி கூறினுர் எனப்பட்டு மேற்கூறிய வரையறை தவறும். ஆதலின் எழுத்தாந்தன்மையில் வைத்துக் கூறினுர் என்பது அவர் தரும் விடையாகும். (32)

33. அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனுர் புலவர்.

இஃது, எழுத்துக்கள் முற்கூறிய மாத்திரையின் நீண்டு நிற்கும் இடம் இதுவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அளபு இறந்து உயிர்த்தலும் - (உயிரெழுத்துக்களெல்லாம்) தமக்குச் சொன்ன அளவினைக் கடந்து ஒலித்தலையும், ஒற்று இசை நீடலும் - ஒற்றெழுத்துக்கள் தம்மொலி முன்கூறிய அளபின் நீடலையும், இசையொடு சிவணிய நரம்பின் மறைய - (இந்நூலுட்கூறும் விளியின் கண்ணேயன்றிக்) குரல்முதலிய ஏழிசையோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசை நூற்கண்ணும், உள என மொழிப என்மனுர் புலவர் - உள எனச் சொல்லுவர் அவ்விசை நூலாசிரியர் என்று சொல்லுவர் புலவர் எ - று.

'ஒற்றிசை நீடலும்' என்றனர், 'அளபிறந்துயிர்த்த' லென்றது அதிகாரத்தால் நின்ற உயிர்மேற் சேறலின். 'உள' வென்றது அந்நீட்டிப்பு ஒருதலையன்றென்பது விளக்கிற்று. இசை நூலாசிரியரும் முதனூலாசிரியர் தாமே யெனினும், 'மொழிப' என வேறொருவர் போலக் கூறியது, அதுவும் வேறு ஒரு நூலாகச் செய்யப்படும் நிலைமை நோக்கிப்போலும்.

'மறையும்' என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது. அகரம் செய்யுள் விகாரம்.

(வி - ரை) 'ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலும்
மேவும் இசைவிளி பண்டமாற் றாதியின்'

என்னும் நன்னூல் நூற்பா (எழுத் – 46) இந்நூற்பாவின் உரையை நன்கு விளக்குவதாகும். (33)

நூன்மரபு முற்றிற்று.

3

மொழிமரபு

பொருளமைப்பு

இதுகாறும் தனி நின்ற எழுத்துக்களின் இலக்கணம் கூறினர், இனி மொழியிடை நிற்கும் எழுத்துக்களின் இலக்கணம் கூறுகின்றாராதலின், இது மேலதனோடு இயைபுடைத்தாயிற்று. நன்னூலார் இவ்விரு இயலிலும் கூறப்பட்டுள்ள கருத்தைத் தொகுத்து ‘எழுத்தியல்’ என்ற ஓர் இயலிலேயே கூறுவர். இது மொழியின் மரபினை யுணர்த்துதலின் ‘மொழி மரபு’ எனப் பெயர் பெற்றது. ஈண்டு மொழியின் மரபாவது மொழிக்கண் நிற்கும் எழுத்துக்களின் மரபாகும்.

இவ்வியலில் கூறப்படும் செய்திகளை ஆறு வகையாகப் பிரிக்கலாம். அவை 1. நூன்மரபின் ஒழிபு. 2. மொழியாக்கம். 3. மெய்களின் இயக்கம். 4. போலி. 5. மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள். 6. மொழிக்கு ஈறாகும் எழுத்துக்கள் என்பன.

1. நூன்மரபின் ஒழிபு :

இவ்வியலின் ஒழிபாகக் கூறப்படுவன இரு திறப்படும். அவை சார்பெழுத்துக்கள், அளபெடை என்பன.

(அ) சார்பெழுத்துக்கள் :

(i) குற்றியலிகரம் : மியா என்ற உரையசைக் கிளவியில் உள்ள இகரம் தன் மாத்திரையில் குறுகி வரும். இது ஒருமொழிக் குற்றியலிகரமாகும். அறுவகைக் குற்றியலுகரமும் நிலைமொழியாய் நிற்க, வருமொழியில் யகரம் வரின் அவ்வுகரம் இகரமாகத் திரிந்து தன் மாத்திரையில் குறுகும். இது புணர்மொழியிடத்து வரும் குற்றியலிகரமாகும்.

(ii) குற்றியலுகரம் : நெட்டெழுத்து, உயிரெழுத்து, இடையெழுத்து, ஆய்தஎழுத்து, வல்லெழுத்து, மெல்லெழுத்து ஆகிய இவற்றில், ஏதாவது ஒன்றன்பின் வல்லொற்றை ஊர்ந்து உகரம் வரின் அது தன் மாத்திரையிற் குறுகி வரும். இதனைத் தனி மொழிக்கண் வரும் குற்றியலுகரம் என்பர். நிலை மொழியில் வல்லொற்றுத் தொடர்மொழி நிற்க, வருமொழியில் வல்லெழுத்து வரின் அப்பொழுது அவ்வுகரம் குறுகி வரும். இதனைப் புணர் மொழியிடத்து வரும் குற்றியலுகரம் என்பர்.

(iii) ஆய்தம் : குற்றெழுத்தின் பின்னரும், உயிரொடு புணர்ந்த வல்லெழுத்து ஆறின் மேலதுமாக இவ்வாய்தம் வரும். இது தனி மொழிக்கண் வரும் ஆய்தமாகும். நிலை மொழியும் வருமொழியுமாகப் புணரும் பொழுது விகார வகையால் வரும் ஆய்தமும் உண்டு. அது புணர் மொழியிடத்து வரும் ஆய்தமாகும். இது அரை மாத்திரை பெறும். நிறத்தின் மிகுதியையும் ஓசையின் மிகுதியையும் குறிக்கின்றபொழுது, அவ்வழி வரும் ஆய்தம் தன் அரை மாத்திரையனின்றும் மிக்கு ஒலிக்கும். அங்ஙனம் மிக்கு ஒலிக்குங்கால், மாத்திரை மிகுதி தோன்றுதற்காக ஆய்தம் இரண்டிட்டு எழுதப்படுவதில்லை.

(ஆ) அளபெடை ;

செய்யுட்கண் இசை குன்றின் அவ்விடத்து நின்ற நெட்டெழுத்துக்கள் ஏழும் தத்தமக்கு இனமொத்த குற்றெழுத்துக்களைக் கொண்டு அவ்விசையை நிறைக்கும். இதற்கு 'அளபெடை' என்று பெயர். நெட்டெழுத்துக்களுக்குரிய இனமான குற்

றெழுத்துக்களாவன: ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ, ஐ இ, ஓ ஒ, ஔ உ என்பன.

2. மொழியாக்கம் :

எழுத்துக்கள் தனித்தோ அன்றித் தொடர்ந்தோ பொருள் தருமாயின் அது மொழி எனப்படும். அது ஓரெழுத்தொரு மொழி ஈரெழுத்தொருமொழி, இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களுடன் கூடிய தொடர்மொழி என மூவகைப்படும். நெட்டெழுத்துக்கள் ஏழும் தனியே நின்று ஓரெழுத்தொரு மொழியாக வரும். குற்றெழுத்துக்கள் தாமே தனி நின்று மொழியாதல் இல்லை. எனினும் சில மெய்யோடு கூடி மொழியாகும்.

3. மெய்களின் இயக்கம்:

தனிமெய்கள் ஒலி வடிவிலும், வரிவடிவிலும் அகரத்தோடு பொருந்தியே நடக்கும். மெய்ம்மயக்கத்துள் இன்னின்ன எழுத்துக்கள் இன்னின்ன எழுத்துக்களோடு கூடி வரும் எனக் கூறப்படினும் அவை தத்தம் பெயர் கூறுமிடத்து அம்மயக்க நெறியினின்றும் மாறியும் வரும்.

ய, ர, ழ என்ற மூன்று ஒற்றுக்களுடன் க, ச, த, ப, ங, ஞ, ந, ம, என்ற ஒற்றெழுத்துக்கள் கூடி ஈரொற்றாய் நிற்கும். இவற்றுள் ர, ழ என்பன மட்டும் தனிக் குற்றெழுத்துக்களுடன் ஒற்றாக வாரா; நெடிற் கீழ் மட்டுமே ஒற்றாக வரும். புகர் புகழ் எனக் குறிலிணைக் கீழ் ரகார ழகாரங்கள் வந்த தொடர் மொழிகளெல்லாம் தார் தாழ் என்றாற் போல ஓசை யொத்து நெட்டெழுத்தின் தன்மையவாம். செய்யுளின் இறுதிக்கண் 'போலும்' என்னும் சொல்லின் இறுதியில் வரும் மகரவொற்றின் அயலெழுத்தாகிய லகர உகரம், னகர வொற்றாகத் திரிந்து 'போன்ம்' என ஈரொற்றாய் நிற்பதும் உண்டு. இங்ஙனம் திரிந்த னகர வொற்றின் பின் வந்த மகர வொற்றுத் தன் அரை மாத்திரையிற் குறுகி நிற்கும். இவ்வெழுத்துக்களை (மெய், உயிர்) மொழிப்படுத்து வழங்கினும், தனித்து வழங்கினும் தத்தம் மாத்திரையினின்றும் திரியா.

4 போலி

அகரமும் இகரமும் சேர்ந்து ஐகாரம்போல் இசைக்கும். அகரத்தின் பின்னே இகரமே யன்றி யகரமாகிய ஒற்றெழுத்து வரினும் ஐகாரம்போல் இசைக்கும். அகரமும் உகரமும் சேர்ந்து ஒளகாரம்போல இசைக்கும். மொழியிறுதிக்கண் யகரவொற்றிற்கு மாருக இகரம் போலியாக வரும். அஃறிணைப் பெயர்களின் இறுதியிலுள்ள னகரத்திற்கு மகரம் போலியாக நிற்கும். ஆயினும் இவற்றுள் சில சொற்கள் மட்டும் இந்நிலைக்கு ஏலா. அவை யாவன: எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் என்பன.

5. மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் :

உயிரெழுத்துப் பன்னிரண்டும் மொழிக்கு முதலாக வரும். தனி மெய்கள் உயிரோடு கூடி முதலாகுமே யன்றித் தனித்து முதலாகா. க, த, ந, ப, ம என்ற ஐந்தெழுத்துக்களும் எல்லா வுயிருடனும், சகரம் அ, ஐ, ஒள ஆகிய மூன்று மல்லாத உயிர் களுடனும், வகரம் உ, ஊ, ஒ, ஓ ஆகிய நான்கு மல்லாத உயிர் களுடனும், ஞகரம் ஆ, எ, ஒ ஆகிய மூன்றுயிர்களுடனும், யகரம் ஆகாரத்தோடும் கூடி மொழிக்கு முதலாகும். மொழிக்கு முதலாகா என்ற ஒன்பது (ங, ட, ண, ர, ல, ழ, ள, ற, ன) மெய் களும், தத்தம் பெயர் கூறுமளவில் மொழிக்கு முதலாக வரும். நுந்தை என்னும் முறைப் பெயரில் உள்ள குற்றுகரமும் மொழிக்கு முதலாகும். இக்குற்றுகரத்தை முற்றுகரமாக ஒலித்துக் கூறினும் பொருள் வேறுபடாது.

6. மொழிக்கு ஈருகும் எழுத்துக்கள் :

உயிரெழுத்துக்களுள் குற்றுயிர், அளபெடையின்கண் ஈருகும். நெட்டுயிர் தனித்தே ஈருகும். எகரம் தனித்தன்றி மெய்களுடன் கூடி ஈருகாது. ஒளகாரம் ககர வகரத்தோடும், ஒகரம் நகரத்தோடும், ஏகார ஓகாரம் ஞகரமல்லாத பிற மெய்களுடனும், உகர ஊகாரங் கள் ஞகர வகரமல்லாத மெய்களுடனும் கூடி ஈருகும். மொழிக்கு

ஈருகாதெனப்பட்ட எழுத்துக்களும், இன்னின்ன எழுத்துக்களுடன் கூடித்தான் ஈருகும் என வரையறுக்கப்பட்ட எழுத்துக்களும் தத்தம் பெயர்கூறும் வழி வரையறையின்றி எல்லாவுயிர்களுடனும் கூடி ஈருகும். சகர உகரம் இருமொழிக்கண்ணும், பகரவுகரம் ஒரு மொழிக்கண்ணும் ஈருகும்.

இது பொருள்படுங்கால் தன்வினை, பிறவினை ஆகிய இரண்டிலும் வரும். மெய்யெழுத்துக்களில் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்ற பதினொன்றும் மொழிக்கு ஈருய் வரும். நகரவொற்று இருமொழிக்கண்ணும், ஞகர வொற்று ஒருமொழிக் கண்ணும், வகர வொற்று நான்கு மொழிக்கண்ணும் ஈருகி வரும்.

மொழிமரபு

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மொழிகளுக்கு எழுத்தான் வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப் பட்டது. இதனுள் கூறுகின்றது தனிநின்ற எழுத்திற்கு அன்றி மொழியிடை (நின்ற) எழுத்திற்கு எனவுணர்க.

34 குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு
ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே.

இத்தலைச்சூத்திரம் என்நுதலிற்றோ வெனின், சார்பின் தோற்றத்து எழுத்துக்களிற் குற்றியலிகரத்தில் ஒரு மொழிக் குற்றியலிகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: குற்றியலிகரம் – ஒருமொழிக் குற்றியலிகரம், உரையசைக் கிளவிக்கு – உரையசைச் சொல்லாகிய மியா என்பதற்கு, ஆவயின் வரூஉம் – (சினையாக) அச்சொல் தன்னிடத்துவருகின்ற, யா என் சினைமிசை - யா என் சினைமிசை, மகரம் ஊர்ந்து நிற்றல் வேண்டும்-மகர ஒற்றினை ஊர்ந்து நிற்றலை வேண்டும் (ஆசிரியன்) எ. று.

எ-டு: கேண்மியா எனவரும்.

மியா என்னும் சொல் இடம். மகரம் பற்றுக்கோடு. யா என்னும் சினையும் மகரம்போலக் குறுகுதற்கு ஒரு சார்பு.

(வி-ரை) இக்குற்றியலிகரம் முதலிய மூன்றும் மேல் (2). நூன்மரபிற் பெயரளவாகக் கூறப்பட்டன. ஈண்டு அவை தனி மொழியிலும் புணர்மொழியிலும் சார்ந்து வருமாற்றை ஆசிரியர் கூறுகின்றார்.

இம்மூன்றும் அகரம் முதலியனபோலத் தனித்தானும், ககரம் முதலியனபோல அகரமொடு சிவணியானும் இயங்கும் இயல் பின்றி ஒருமொழியைச் சார்ந்து வருதலே தமக்கு இலக்கணமாக வுடைமையின் மொழிமரபில் கூறப்படுவனவாயின. எனினும் இவை ஒருபுடை எழுத்தாதல் தன்மை நோக்கி நூன்மரபினைச் சார வைத்தார் ஆசிரியர்.

உரையசைச் சொல் மியா என்பதாகும். இச்சொல்லின் இறுதியில் அதற்கு உறுப்பாக நிற்கும் எழுத்து 'யா' என்ப தாகும். இதற்கு மேல் உள்ள (முன்னுள்ள) எழுத்து 'மி' என்ப தாகும். இதன்கண் உள்ள இகரமே குற்றியலிகரமாகும்.

நச்சினார்க்கினியர் 'கேள்' என்பதே உரையசைச் சொல் என்பர். 'ஏவல் குறித்த உரையசை மியாவும்' (தொல்-எழுத்து-225), 'மியா இக மோமதி இகும்சின் என்னும், ஆவயின் ஆறும், முன்னிலை யசைச்சொல்' (தொல்-சொல்–274) என்ற இடங்களில் எல்லாம் மியா என்பதையே உரையசைச் சொல்லாக ஆசிரியர் கூறுதலின் இக்கருத்துப் பொருந்துவதன்றாம். நன்னூலாரும் 'அசைச் சொல் மியா' எனக் கூறுதல் காண்க.

உரையசை - உரையின்கண் (வழக்கின்கண்) வரும் அசைச் சொல். இது செய்யுட்கண் வரினும் அச்செய்யுளின் பொருட் டன்றித் தான் அடைந்த சொல்லின் பொருட்டு வருதலின் உரை யசை யாயிற்று என்பர் சங்கரநமச்சிவாயர்.

உரையசை - சிறிது பொருள் உணர்த்தும். அசைநிலை — பொருளுணர்த்தாது சொற்களை அசைத்து (சார்ந்து) நிற்கும். (நச்சினார்க்கினியர்). (1)

35. புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.

இது, குற்றியலிகரம் புணர்மொழியுள்ளும் வருமென்று உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: புணர் இயல்நிலை இடையும் - இருமொழி தம்மிற் புணர்தல் இயன்ற நிலைமைக்கண்ணும், குறுகல் உரித்து -அவ் விகரம் குறுகுதலுடைத்து, உணரக் கூறின் - (ஆண்டை இடத் தினையும் பற்றுக்கோட்டினையும் ஈண்டு) உணரக் கூறப்புகின், முன்னர் தோன்றும் - (அது வேண்டுவதில்லை) குற்றியலுகரப் புணரியலுள் (அவ்விடனும் பற்றுக்கோடும்) தோன்றும் எ - று.

'புணரியல் நிலை யிடையும்' என மொழிமாற்றி உரைக்க. முன்னர்த் தோன்றுமாறு:

'யகரம் வரும்வழி யிகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது
(குற்றியலுகரப் புணரியல் - 5)

என்பதனுள் அறிக. உகரம் சார்ந்த வல்லெழுத்துப் பற்றுக் கோடு.

எ-டு: நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது, கொக்கியாது, குரங்கியாது எனவரும்.

(வி - ரை) 34, 35, 411 ஆகிய மூன்று நூற்பாக்களையும் தொகுத்தே நன்னூலாரும்,

'யகரம் வரக்குறள் உத்திரி யிகரமும்
அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய'

என யாத்தனர். (2)

36. நெட்டெழுத்து இம்பருந் தொடர்மொழி ஈற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே.

இஃது, ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக் கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: நெட்டெழுத்து இம்பரும் – நெட்டெழுத்தினது பின்னும், தொடர்மொழி ஈற்றும்–தொடர்மொழியது இறுதியினும், குற்றியலுகரம் வல்லாறு ஊர்ந்து (நிற்றல் வேண்டும்) - குற்றிய லுகரம் வல்லெழுத்து ஆறினையும் ஊர்ந்து (நிற்றலை வேண்டும் ஆசிரியன்) எ - று.

'தந்து புணர்ந்துரைத்தல் (மரபு-110) என்னும் தந்திரவுத்தி யான், முன்னின்ற 'நிற்றல் வேண்டும்' என்பது ஈண்டும் புணர்க் கப்பட்டது.

எ – டு: நாகு, வரகு என வரும்.

நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீறும் இடம். வல் லெழுத்துப் பற்றுக்கோடு. இவ்வாறு இடமும் பற்றுக்கோடும் கூறவே, மொழிக்கு ஈருதலும் கூறியவாருயிற்று.

(வி·ரை) ஈண்டு நெட்டெழுத்து என்றதை மேல் குற்றிய லுகரப் புணரியலுள் (407) ஈரெழுத் தொருமொழி என்பர் ஆசிரியர். ஈண்டுத் தொடர்மொழி என்றதை ஆண்டு ஐவகை யாகப் பகுத்து உயிர்த்தொடர், ஆய்தத்தொடர், வன்ருெடர், மென்ருெடர், இடைத்தொடர் என விளக்குவர் ஆசிரியர். நன் னூலார் இவற்றைத் தொகுத்தே,

'நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும், பிறமேல் தொடரவும் பெறுமே.'

(எழுத் - 36) என்றனர். (3)

37. இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான.

இது, குற்றியலுகரம் புணர்மொழியுள்ளும் வருமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : இடைப்படினும் குறுகும் இடன் உண்டு-(அவ்வு கரம்) புணர்மொழி இடைப்படினும் குறுகும் இடமுண்டு, (அதன் இடமும் பற்றுக்கோடும் யாண்டோ பெறுவதெனின்), கடப்பாடு அறிந்த புணரியலான-அதன் புணர்ச்சி முறைமை அறியும் குற்றியலுகரப் புணரியலின்கண்ணே எ-று.

'இடைப்படினும் குறுகும்' என மொழிமாற்றி உரைக்க. அக்குற்றியலுகரப் புணரியலுள்,

'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை யியற்கை நிலையலு முரித்தே.'

(குற்றியலுகரப் புணரியல் — 4)

என்பதனுள் வல்லொற்றுத் தொடர்மொழியும் வல்லெழுத்து வருவழியும் இடம். அவ்வல்லொற்றுத் தொடர்மொழி யீற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

எ-டு: செக்குக்கணை, சுக்குக்கோடு என வரும்

'இடன்' என்றதனான், இக்குறுக்கம் சிறுபான்மை என்றுணர்க. (4)

38. [1]குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

இஃது ஒருமொழி ஆய்தம் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : ஆய்தப் புள்ளி-ஆய்தமாகிய புள்ளி, குறியதன் முன்னர்-குற்றெழுத்தின் முன்னர், உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்து-உயிரொடு புணர்ந்த வல்லெழுத்து ஆறன் மேலது எ-று.

---

1. நன்னூலார் இதனைக் கொண்டெடுத்து மொழிவர். (எழுத். 90)

எ-டு: எஃகு, கஃசு எனவரும்.

குறியதன் முன்னரும் வல்லெழுத்து மிசையும் இடம். இஃது உயிரன்மையின், இதற்குப் பற்றுக்கோடு என்பதில்லை. கஃறிது என்பதனை மெய்பிறிதாகிய புணர்ச்சி (புணரியல்–7) என்பவாகலின், 'புள்ளி' என்றதனான் ஆய்தத்தை மெய்ப்பாற் படுத்துக்கொள்க. ஈண்டுப் பெரும்பான்மையும் உயிரென்றது. மேல் 'ஆய்தத் தொடர் மொழி' (குற்றியலுகரப் புணரியல்–1) என்றோதலின் குற்றிய லுகரத்தினை. வெஃகாமை முதலிய பிற உயிர் வரவு சிறுபான்மை யெனக் கொள்க. (5)

39. ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்.

இஃது, அவ்வாய்தம் புணர்மொழியுள்ளும் வருமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஈறு இயல் மருங்கினும் – நிலைமொழியீறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்கும் இடத்தினும், இசைமை தோன்றும்– ஆய்த ஒலி தோன்றும் எ-று.

எ – டு: கஃறீது, முஃடீது எனவரும்.

ஈண்டும் இடங்கள் அவை.

(வி – ரை) இங்ஙனம் ஆய்தம் புணர்மொழிக்கண் வருதலை நன்னூலார் ஆய்தக் குறுக்கம் என்பர். கல் + தீது = கஃறீது. முள் + தீது = முஃடீது. இங்ஙனம் லகர, ளகரங்களின் இயைபினால் ஆய்தம் வரும் என்றும், அங்ஙனம் வரும் ஆய்தம் தன் மாத்திரையில் குறுகும் என்றும் கண்ட நன்னூலார்,

'லளவீற்று இயைபினும் ஆய்தம் அஃகும்' (எழுத் – 42)

என்றனர். எனினும் இவருக்கு முற்பட்ட தொல்காப்பியரோ, பிற்பட்ட இலக்கண விளக்க நூலாரோ, ஆய்தக் குறுக்கம் என ஒன்று கொண்டிலராதலின் நன்னூலார் கருத்துப் பொருத்தம் இன்று என்பர் திரு.வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள். (6)

40. உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தி னியலா
ஆய்தம் அஃகாக் காலை யான.

இஃது, அவ்வொருமொழி ஆய்தத்திற்கு ஓர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ – ள்: உருவினும் – ஒரு பொருளினது உருவத்தின் கண்ணும், இசையினும்-ஓசையின் கண்ணும், அருகித் தோன்றும்–சிறுபான்மையாய்த் தோன்றும், குறிப்பு மொழியெல்லாம் - குறிப்பு மொழிகளெல்லாம், எழுத்தின் இயலா – ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டு நடவா, (அஃது எக்காலத்துமோ வெனின், அன்று), ஆய்தம் அஃகாக் காலையான – அவ்வாய்தம் தன் அரைமாத்திரை அளபாய்ச் சுருங்கி நில்லாது (அவ்வுருவம் இசையது மிகுதியும் உணர்த்துதற்கு) நீண்டகாலத்து அந்நீட்சிக்கு எ – று.

எ – டு: 'கஃறென்றது' என்பது உருவு. 'சுஃறென்றது' என்பது இசை.

(வி – ரை) நிறத்தின் மிகுதியையும் ஓசையின் மிகுதியையும் குறிக்கின்றபொழுது, அவ்வழிவரும் ஆய்தம் தன் அரை மாத்திரையினின்றும் மிக்கு ஒலிக்கும். அங்ஙனம் மிக்கு ஒலிக்குங்கால், மாத்திரை மிகுதி தோன்றுதற்காக ஆய்தம் இரண்டிட்டு எழுதப்படுவதில்லை என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

உயிரும் ஒற்றும் தத்தம் மாத்திரையினின்றும் மிக்கு ஒலிக்க நேரின் அவற்றிற்கு அறிகுறியாகத் தத்தம் இனமொத்த குற்றெழுத்துக்கள் ஆண்டு எழுதிக் காட்டப்படும். என்னை? 'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டியெழுஉதல் என்மனார் புலவர்' என்றாராகலின். ஆனால் அதுபோல ஆய்தம் தன் மாத்திரையினின்றும் மிக்கு ஒலிக்குங்கால் அதற்கு அறிகுறியாக ஆய்தம் இரண்டு இட்டுக் காட்டப்படுமோ? எனின், காட்டப்படாது என்பது இதன் கருத்தாகும்.

உரையில் 'எழுத்தி னியலா' என்ற தொடருக்கு எழுதப் பட்டுள்ள உரை தெளிவில்லாதிருக்கிறது. எனினும் இவரை யடுத்துத் தோன்றிய நச்சினார்க்கினியர், இவர் உரையை எடுத்து மறுப்பதிலிருந்து இவ்வுரை தெளிவாகின்றது. 'இவ்வாறின்றி இக்குறிப்புச் சொற்கள் ஆய்தம் இரண்டிட்டு எழுதப்படா என்று பொருள் கூறிற், செய்யுளியலோடு மாறுபட்டு மாறுகொளக் கூறல் என்னும் குற்றம் தங்கும் என்று உணர்க' என்பது அவர் தம் மறுப்பாகும். இம்மறுப்பிலிருந்து 'எழுத்தி னியலா' என்பதற்கு ஆய்த எழுத்துக்கள் இரண்டிட்டு எழுதப்படா என்பது இளம்பூரணர் உரையாக இருக்கும் என்று தெரிகிறது. இங்ஙனம் கொள்ளவே இவ்விடத்து உரைச் சிதைவுண்மை புலனாகின்றது. அதனை அடுத்து 'அஃது எக்காலத்துமோவெனில் அன்று' என்றுள்ள தொடர்கூட இயைபின்றிச் சேர்க்கப்பட்டுள்ளதோ! என ஐயம் தோன்றுகின்றது. எங்ஙனமாயினும் நச்சினார்க்கினியரின் மறுப்பிலிருந்து இவ்விடம் விளக்கம் பெறுகின்றது என்பது ஒருதலை.

நச்சினார்க்கினியர் உரு, இசைபற்றிய மொழிகளிலும், பிற மொழிகளிலும் வரும் ஆய்தம் சிறுபான்மை தன் அரைமாத்திரை யினின்றும் மிக்கொலிக்கும்; அது போழ்து ஆய்தம் இரண்டிட்டு எழுதப்படும் என இந்நூற்பாவிற்குப் பொருள் காண்பர். (7)

41. குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே.

இது, 'நீட்டம் வேண்டின்' (நூன்மரபு—6) என்பதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: குன்று இசை மொழிவயின் நின்று இசைநிறைக்கும்— (அளபெடை யோசையாகச் சொல்லாதொழியில்,) குன்றுவதான ஓசையையுடைய அவ்வளபெடை எழுத்தாகிய மொழிக்கண்ணே நின்று அவ்வோசையை நிறைக்கும், (அவை யாவையெனின்,) நெட்டெழுத்து இம்பர் ஒத்த குற்றெழுத்து-நெட்டெழுத்துக்களின் பின்னாக (அவற்றிற்குப் பிறப்பானும் புணர்ச்சியானும் ஓசை யானும்) இனமொத்த குற்றெழுத்துக்கள் எ-று.

எ—டு : ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ எனவரும்.

ஈண்டு 'மொழி'யென்றது, அவ்வளபெடை எழுத்து ஒரு பொருள் உணர்த்தி ஓரெழுத் தொருமொழியாய் நிற்கும் நிலைமையினை. இவையும் மொழிமேற் காணப்படுதலிற் சார்பின் தோற்றத்து எழுத்து எனப்படுமாலெனின், பெரும்பான்மையும் அம்மொழிதானே அவ்வெழுத்தாய் வருதலானும், அம்மொழி நிலைமை ஒழிய வேறெழுத்தாகவும் சொல்லப்படுதலானும், அவ்வாறு ஆகாதென்பது. சிறுபான்மையும் அம்மொழிதானே எழுத்தாய் வாராதெனக் கொள்க.

எ—டு : எருது காலுறுஅது என்றாற்போல்வன. (8)

42. ஐ ஔ என்னும் ஆயி ரெழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும்.

இது, மேலதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஐ ஔ என்னும் ஆ ஈர் எழுத்திற்கு – (ஒத்த குற்றெழுத்து இல்லா) ஐ ஔ என்று சொல்லப்படும் அவ்விரண்டெழுத்திற்கு முன், இகரம் உகரம் இசை நிறை ஆகும் – (ஈகார ஊகாரங்கட்கு ஒத்த குற்றெழுத்தாகிய) இகர உகரங்கள் (அக் குன்றிசை மொழிக்கண் நின்று) ஓசையை நிறைப்பனவாகும் எ – று.

எ-டு : ஐஇ, ஔஉ எனவரும்.

ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் என நிரல் நிறையாகக் கொள்க. இத்துணையும் நூன்மரபின் ஒழிபு.

(வி-ரை) : 'ஐ ஔ இஉச் செறிய முதல்எழுத்து
இவ்விரண் டோரினம் ஆய்வரல் முறையே.'

என்னும் நன்னூல் நூற்பா இதனைத் தழுவி எழுந்ததாகும். (9)

43. நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி.

இஃது, எழுத்தினால் மொழியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : நெட்டெழுத்து ஏழும் – நெட்டெழுத்தாகிய ஏழும், ஓர் எழுத்து ஒரு மொழி - ஓர் எழுத்தாகும் ஒரு மொழியாம் எ-று.

எ-டு : ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவரும்.

இதுவும் உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது. ஔகாரத்தில் உயிர்மெய்யினையே கொள்க. 'ஏழும்' என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது.

(வி-ரை) : நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கருத்தையே தழுவி, ஔகாரம் உயிர்மெய்க்கண் அல்லது வாராது எனக் கூறி 'கௌ' என எடுத்துக்காட்டுக் காட்டினர். ஆனால் நன்னூலாரோ ஔகாரத்தை நீக்கி உயிர் வருக்கத்தில் ஆறு எழுத்துக்களே (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ) ஓரெழுத்துக்களால் ஆய பதமாக வரும் என்பர். (10)

44. குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே.

இது, குற்றெழுத்துக்கள் ஓரெழுத்தொருமொழி ஆகா வென்பதும், அவற்றுள் ஒரு மொழியாவன உளவென்பதும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : குற்றெழுத்து ஐந்தும் - குற்றெழுத்தாகிய ஐந்தும், மொழி நிறைபு இல – ஓரெழுத்தாய் நின்று ஒரு மொழியாய் நிறைதல் இல; அவற்றுட் சில நிறைக்கும் எ-று.

ஒகரம் ஒழிந்த நான்கும் சுட்டாயும் வினாவாயும் மொழி நிறைக்குமன்றோ? வெனின், அவை இடைச்சொல்லாதலின், அவற்றிற்குக் கருவி செய்யார் என்க. இதுவும் உயிர்க்கும் உயிர் மெய்க்கும் பொது. ஐந்தும் என்பதன் உம்மை ஈண்டு எச்சப்பட நின்றது.

எ-டு : து, நொ எனவரும்.

(வி-ரை) 'குற்றெழுத்து ஆகிய உயிர் ஐந்தும்தாமே நிறைந்து நின்று மொழியாதல் இல. சில மெய்யோடு கூடி நிறைந்து நின்று மொழியாம்' எனப் பொருள்கூறி, 'து' 'நொ' ஆகிய இரண்டையும் எடுத்துக்காட்டினர் நச்சினார்க்கினியர். நன்னூலாரும் 'நொது ஆம்குறில் இரண்டோடு ஒரெழுத்தியல் பதம் ஆறேழ் சிறப்பின' (பத — 2) என்றனர்.

இவ்வதிகாரம் பெயர், வினை இரண்டிற்கு மட்டுமே கருவி கூற வந்தது என்பதை 32-ஆம் நூற்பாவுரையிலும் உரையாசிரியர் விளக்கியுள்ளார். (11)

45. ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.

இஃது, எழுத்தினன் ஆகும் மொழிகளின் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஓர் எழுத்து ஒரு மொழி - ஓரெழுத்தான் ஆகும் ஒருமொழி, ஈர் எழுத்து ஒருமொழி - இரண்டெழுத்தான் ஆகும் ஒருமொழி, இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி - இரண்டிறந்து பலவற்றான் இசைக்கும் தொடர்மொழி, உளப்பட மூன்று உட்பட்ட மொழிகளின் நிலைமை மூன்றும், தோன்றிய நெறி - அவை தோன்றிய வழக்கு நெறிக்கண் எ-று.

எ-டு: ஆ, மணி, வரகு, கொற்றன் எனவரும்.

(வி ரை): ஒன்று இரண்டு பலவென்பது வடநூல் வழக்கு ஆதலின், அதுபற்றியே தொல்காப்பியரும் 'ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொரு மொழி இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி' என்றனர் என்பர் சங்கரநமச்சிவாயர். வட மொழியில் ஒன்று பல என்றது வழக்கிற்கேயன்றி மொழியின் எழுத்துகட்கு அன்று; ஆதலின், வடநூல் வழக்குபற்றிச் செய்தார் என்றல் பொருந்தாது. சங்கரநமச்சிவாயர் இரண்டிறந்திசையாத ஈரெழுத்தொரு மொழியினையும் தொடர்மொழி என்றலே ஆசிரியர் கருத்தென்பர்.

ஆசிரியர் 'தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்' என்னும் நூற்பாவில் ஈரெழுத்தொரு மொழியாகிய பல சில என்பனவற்றைத் 'தொடரல் இறுதி' எனக் குறித்தலின் அதுவும் பொருந்தாது. நச்சினார்க்கினியர் கூறுமாறுபோலச் சிலபல என்னும் தமிழ்வழக்கு நோக்கி ஈரெழுத்தொரு மொழி என்றும், இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி என்றும், ஆசிரியர் கூறினார் என்றல் அமைவுடையதாகும்.

மூவெழுத் தொருமொழிக்கு வரகு என்பதையும், நாலெழுத் தொரு மொழிக்கு கொற்றன் என்பதையும் எடுத்துக்காட்டினர் இளம்பூரணர்.

இம்மொழிகளில் உள்ள குற்றுகரத்தையும், ஒற்றெழுத்துக் களையும் எழுத்தாக எண்ணலாகாது என மறுப்பர் நச்சினார்க்கினியர். எனினும் அம்மறுப்புப் பொருந்துவதன்றாம். இதனை அப்பதிப்பில் விளக்கியுள்ளேன்; ஆண்டுக்காண்க. (12)

46. மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.

இது, தனி மெய்களைச் சொல்லும் முறைநிலை இதுவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மெய்யின் இயக்கம்-தனி மெய்களினது இயக்கம், அகரமொடு சிவணும்-அகரத்தோடு பொருந்தும் எ-று.

எ-டு: 'ட ற ல ள வென்னும் புள்ளி' (நூன்மரபு-23) என வரும்.

இது மொழியிடை (நின்ற) எழுத்துக்கள் அன்மையின் நூன் மரபில் வைக்க வெனில் தன்னை உணர்த்தாது வேறு பொருள் உணர்த்தும் சொல் நிலைபோல 'ட ற ல ள' வென்றது உயிர் மெய்யை உணர்த்தாது தனிமெய்யை உணர்த்தலானும், ஒற்றினை உயிர்மெய் போலச் சொல்லுகின்ற வழுவமைதி யிலக்கணத் தானும் மொழிமரபின்கண்ண தாயிற்றென உணர்க.

(வி–ரை) மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணுதல் ஒலி வடிவு, வரிவடிவு ஆகிய இரண்டிற்கும் ஒக்கும் என்பர் நச்சினார்க் கினியர். அவர்தரும் விளக்கம் வருமாறு :—

'ஒருவன் தனிமெய்களை நாவாற் கருத்துப் பொருளாகிய உருவாக இயக்கும் இயக்கமும், கையாற் காட்சிப் பொருளாகிய வடிவாக இயக்கும் இயக்கமும் அகரத்தோடு பொருந்தி நடக்கும்.

எ-டு: 'வல்லெழுத் தென்ப கசட தபற' (எழுத்–19), 'ககார ஙகார முதனா வண்ணம்' (எழுத்-89) என்றாற்போல்வன நாவால் இயக்கியவாறு காண்க. எழுதிக்காட்டுமிடத்துக் ககரம் முதலியன உயிர்பெற்று நின்ற வடிவாக எழுதிப் பின்னர்த் தனி மெய்யாக்குவதற்குப் புள்ளியிட்டுக் காட்டுகின்றவாற்றான் வடிவை இயக்குமிடத்தும் அகரங் கலந்து நின்றவாறு காண்க'.

நூன்மரபில் தனி எழுத்துக்களின் இயல்பையும், மொழி மரபில் மொழியிடை நிற்கும் எழுத்துக்களின் இயல்பையும் ஆசிரியர் கூறுவர். அம்முறையில் தனி மெய்களைப் பற்றிக் கூறும் இந்நூற்பாவை நூன்மரபிலேயே வைத்தல் வேண்டும். அங்ஙன மாக மொழிமரபில் இதனை வைத்தற்குக் காரணம் யாது? என ஆராய்கின்றார் உரையாசிரியர். அவ்வாய்வின் பயனாக அவர் தரும் காரணம் இரண்டாகும் (1) எழுத்துக்கள், தன்னை யுணர்த்தும் பொழுது எழுத்துக்கள் என்றும், பிறபொருளை உணர்த்தும் பொழுது சொல் என்றும் பெயர் பெறும். இங்குக் காட்டிய எடுத்துக்காட்டான 'டறலள' என்பன உயிர் மெய்யாக உள்ளன. இவை தம்மை யுணர்த்தின் உயிர்மெய்யாக நிற்கும் தம்மையே உணர்த்த வேண்டும். அங்ஙனமின்றி ட், ற், ல், ள் என்னும் மெய்களையே இவை யுணர்த்தலின் பிறபொருளுணர்த்தும் சொல் நிலை பெற்றனவாயின, (2) இங்ஙனம் ஒற்றினை (ட், ற், ல், ள்) உயிர்மெய் போலக் (ட, ற, ல ள) கூறலின் வழுவாயிற்று. எனினும் சான்றோர்களால் ஏற்றுக் கொள்ளப்படுதலின் வழுவமைதி யாயின. இவ்வாற்றான் இந்நூற்பா இவ்வியலில் இடம் பெற்றது என்பது. (13)

47. தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மான மில்லை

இது, மெய்ம்மயக்கத்திற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: எல்லா எழுத்தும் தம் இயல் கிளப்பின்-எல்லா மெய்யெழுத்தும் மொழியிடையின்றித் தம் வடிவின் இயல்பைச் சொல்லுமிடத்து, மெய்ம்மயக்கநிலை மானம் இல்லை-மெய்ம்மயக்க நிலையின் மயங்கிவருதல் குற்றம் இல்லை எ-று.

எ-டு: 'வல்லெழுத் தியையின் டகார மாகும்' (புள்ளி மயங்-7) என வரும்.

இதனை அம்மெய்ம்மயக்கத்து வைக்கவெனின்' இது வழு வமைதி நோக்கி மொழிமரபின்கண்ண தாயிற்று.

(வி-ரை) மேல் நூன்மரபில், 22முதல்30-ஆம் நூற்பாக்கள் வரை மெய்ம்மயக்கம் கூறப்பட்டது. அதற்குப் புறனடையாக இந்நூற்பா அமைந்துள்ளது.

மேல் மெய்ம்மயக்கத்துள் இன்னின்ன எழுத்துக்கள் இன்னின்ன எழுத்துக்களோடு கூடிவரும் எனக் கூறப்படினும், அவை தத்தம் பெயர் கூறுமிடத்து அம்மயக்க நெறியினின்றும் மாறியும் வரும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். நன்னூலாரும் இக்கருத்தினைத் தழுவியே 'தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும், இம்முறை மாறியும் இயலும் என்ப' (எழுத்-66) எனக் கூறினர்.

அற்றேல், இந்நூற்பா மெய்ம்மயக்கத்திற்குப் புறனடையாயின், மெய்ம்மயக்கம் கூறிய நூற்பாக்களையடுத்து நூன்மரபின் கண்ணேயே வைக்க வேண்டுமெனின், இஃது அம்மெய்ம்மயக்கம் கூறிய இலக்கணத்தினின்றும் பிறழ்ந்து வருதலானும், சென்ற நூற்பாவில் தனிமெய்யை ஏனைய உயிர் மெய்போலச் சொல்லும் (க் என்பதையே ககரம் என்றல்) வழுவமைதி யிலக்கணம் கூறப்

படுதலானும், இவ்வழுவமைதியாம் இலக்கணமும் அதனோடியைய ஈண்டுக் கூறினர் என்பர். எனினும் நன்னூலார் கூறியவாறு போல, மெய்ம்மயக்கம் கூறும் நூற்பாக்களையடுத்து நூன்மரபி லேயே இந்நூற்பாவும் அமைந்திருப்பின் சிறப்பாக இருக்கும்.

நச்சினார்க்கினியர் இதற்குப் பிறவாறு பொருளுணர்த்தி இளம்பூரணர் கருத்தை மறுப்பர். எனினும் இளம்பூரணர் கருத்தே வலியுடைத்தாம்.

நச்சினார்க்கினியர் மறுப்பிலிருந்து இந்நூற்பாவிலுள்ள எடுத்துக்காட்டு, 'அவற்றுள் லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்' என்பதாக இருக்க வேண்டும் எனத்தெரிகிறது. சங்கரநமச்சிவாயரும் இவ்வெடுத்துக் காட்டினையே காட்டியுள் ளமை ஈண்டு நினைவு கூர்தற்குரியது. இவ்வாற்றான் ஈண்டுக் காட்டப்பட்டிருக்கும் 'வல்லெழுத் தியையின் டகாரம் ஆகும்' என்னும் எடுத்துக்காட்டு எப்படியோ பிறழ்ந்து வந்துள்ளது என அறியலாம். (14)

48. யரழ என்னும் [1]மூன்றுமுன் னொற்றக்
கசதப ஙஞநம ஈரொற் றாகும்.

இஃது, ஈர்ஒற்று உடனிலை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ ள்: யரழ என்னும் மூன்று—யரழ என்று சொல்லப் படுகின்ற மூன்றனுள் ஒன்று, முன் ஒற்ற—(குறிற்கீழும் நெடிற் கீழும்) முன்னே ஒற்றாய் நிற்ப (அவற்றின் பின்னே), கசதப ஙஞ நம ஈர் ஒற்றாகும்-கசதபக்களில் ஒன்றுதல் ஙஞநமக்களில் ஒன்றுதல் ஒற்றாய்வர அவை ஈரொற்றுடனிலையாம் எ – று.

எ – டு: வேய்க்குறை, வேய்ங்குறை, வேர்க்குறை, வேர்ங் குறை, வீழ்க்குறை, வீழ்ங்குறை சிறை, தலை, புறம் என ஒட்டுக.

1. 'மூன்றும் ஒற்ற' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இவ்விதிமேல் ஈற்றகத்து உணர்ந்துகொள்ளப்படுமாலெனின், இது 'ஈர்க்கு', 'பீர்க்கு' என ஒரு மொழியுள்ளும் வருதலானும், இரண்டு [1]மொழிக்கண்ணும் வருதல் விகாரமாதலானும் ஈண்டுக் கூறப்பட்டது

அஃதேல், இதனை நூன்மரபினகத்து மெய்ம்மயக்கத்துக்கண் கூறுகவெனின், ஆண்டு வேற்றுமை நயம் கொண்டதாகலின் ஈரொற்று உடனிலையாதல் நோக்கி ஒற்றுமைநயம் பற்றிக் ஈண்டுக் கூறப்பட்டது.

(வி - ரை) குறிற்கீழோ அன்றி நெடிற்கீழோ யரழக்களில் ஒன்று ஒற்றாய்நிற்ப, அவற்றின் பின்னே கசதபக்களில் ஒன்றோ, அன்றி, ஙஞநமக்களில் ஒன்றோ ஒற்றாய் வந்து பின்னிற்கும். இங்ஙனம் வரும்பொழுது இவை ஈரொற்றுடனிலை என்று பெயர் பெறும் என்பது இளம்பூரணர் கருத்தாகும். 'யரழ முன்றும் முன் ஒற்ற' என்று உள்ளதேயன்றி எவற்றின் முன் என நூற்பாவில் இல்லை. இளம்பூரணர் குறிற்கீழும் நெடிற்கீழும் எனக்கொள்கின்றனர். எனினும் எடுத்துக்காட்டில் நெடிற்கீழ் வருதலை மட்டுமே காட்டியுள்ளார். நச்சினார்க்கினியர் குறிற்கீழ் என்றோ, நெடிற்கீழ் என்றோ வரையறை கூறிற்றிலர் ஆயினும், நெடிற்கீழ் வருமாறே எடுத்துக் காட்டினைக் காட்டியுள்ளார். நன்னூல் உரையிலும் இளம்பூரணர் உரையில் உள்ளவாறே எடுத்துக் காட்டுக்கள் உள்ளன ஆதலின் 'குறிற்கீழ்' இவை ஈரொற்றாய் வரும் என்றல் ஆராயத்தக்கதாகும்.

வேய் + குறை = வேய்க்குறை, வேய்ங்குறை என்றாகும். வேர் + குறை = வேர்க்குறை, வேர்ங்குறை என்றாகும். வீழ் + குறை = வீழ்க்குறை, வீழ்ங்குறை என்றாகும். இவ்வெடுத்துக் காட்டுக்கள் மேல் புள்ளி மயங்கியலில் முறையே மெல்லெழுத் துறழும் மொழியுமாருளவே' (361), 'ஆரும் வெதிரும் சாரும் பீரும், மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்' (364),

1. 'மெய்க்கண்ணும்' என்பதும் பாடம்.

'பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே' (388) எனக் கூறப்படும் நூற்பாக்களால் நிறுத்தசொல்லும் குறித்து வருகிளவியுமாய் நிறுத்தப்பட்டு, இவ்வல்லெழுத்து மெல்லெழுத்துக்களைப் பெற்று நிற்குமாறு உணரப்படுதலின் ஈண்டுக் கூறவேண்டுவதின்று' அங்ஙனமாயினும் ஈண்டுக் கூறற்குக் காரணம் என்னை? என ஆராய்கின்றார் உரையாசிரியர். அவ்வாய்வின் பயனாக இரு அமைதி கூறுகின்றார். (1) இங்ஙனம் யரழக்களின் முன்பு கசதப முதலியன வருதல் இருமொழியுள்ளன்றி ஈர்க்கு, பீர்க்கு என ஒரு மொழியுள்ளும் வருதலான் இம்மொழிமரபின் கண் கூறப்பட்டது. (2) இவை இருமொழிக்கண் வரினும் ஓரொற்றுடன் பிறிதோ ரொற்று இணைந்து வருதல் விகாரமாதலான் ஈண்டுக் கூறப் பட்டது. மேல் இருநூற்பாக்களும் வழுவமைதியாக இருத்தலின், ஈரொற்றுக்கள் இணைந்து வரும் இவ்விகாரமாகிய வழுவமைதி யையும் ஈண்டுக் கூறினர் என்பது.

அடுத்து இவ்வொற்றுக்கள் ஒன்று ஒன்றுடன் சேர்ந்து வருதலின் இதனை முன்னர் (நூன்மரபு-22-30) மெய்ம்மயக்கம் கூறும் நூற்பாக்களோடு இணைத்து வைத்தல் வேண்டும்; அங்ஙன மின்றி ஈண்டு வைத்தற்குக் காரணம் யாது? என ஆராய்கின்றார். இதற்கு அவர் தரும் விடை:—மெய்ம் மயக்கத்துள் எழுத்துக்கள் வேற்றுமை நயம்பற்றி எடுத்தாளப்பட்டன. ஈண்டு எழுத்துக்கள் ஒற்றுமை நயம்பற்றி எடுத்தாளப்பட்டுள்ளன. இவ்வேற்றுமை பற்றி ஆண்டு வையாது ஈண்டு வைத்தார் என்பர்.

ஒற்றுமை நயம்:— யாதொரு எழுத்து யாதொரு வடிவாகக் கூறப்பட்டதோ, அதனை அவ்வாறே இலக்கணம் கூறும் வகை யிலும் எடுத்தாளுவது ஒற்றுமை நயம்.

வேற்றுமை நயம்: யாதொரு எழுத்து யாதொரு வடிவில் கூறப்பட்டதோ, அதனை இலக்கணம் கூறுங்கால் அவ்வடிவி லன்றிப் பிறவடிவாக வைத்து வழங்குவது வேற்றுமை நயம்.

மெய்ம்மயக்கத்துள் 'கசப என்னும் மூவெழுத்துரிய' என்றும், 'யவவும் தோன்றும்' என்றும் கூறிய இடங்களிலெல்லாம் உயிர்,

மெய் வடிவாகக் கசப, யவ எனக் கூறப்படினும், இலக்கண நெறியில் அவற்றை மெய்யாகவே வைத்து வழங்கியுள்ளார் ஆசிரியர். இன்றேல் கட்க, கொல்யானை என்பன போல்வன வெல்லாம் மெய்யுடன் உயிர்மெய் மயங்குவதாகுமேயன்றி இடைநிலை மெய்ம்மயக்கமாகா. எனவே உயிர்மெய்வடிவாகக் கூறப் பட்டவற்றைப் பிரித்து இலக்கண நெறிக்காக மெய்யாக வைத்து வழங்குதலின் வேற்றுமை நயமாயிற்று. ஈண்டுக் 'கசதப ஙஞ நம ஈரொற்றாகும்' எனக் கூறப்பட்டன ஒற்றுக்களே. அவ்வொற்றுக்களைக் கூறப்பட்ட வடிவிலேயே இலக்கண நெறிக்கும் கொள்கின்றமையின் ஒற்றுமை நயம் ஆயிற்று.

மெய்ம்மயக்கத்துள் மெய்யும் மெய்யுமாக மயங்கினும் எடுத்துக் காட்டும்பொழுது, ஒற்றும் உயிர்மெய்யுமாகவே காட்சியளிக்கின்றன. ஈண்டோ மெய்யும் மெய்யுமாகவே நின்று ஈரொற்றுடனிலையாகக் காட்சி யளிக்கின்றன. ஆதலின் அதனின் வேறாக ஈண்டுக் கூறினார் என்பர் நச்சினார்க்கினியர்.

நன்னூலார் இவ்வாய்வுக்கெல்லாம் இடனின்றி, மெய்ம்மயக்கம் கூறிய வழியே இவ்வீரொற்றுட னிலையையும் உடன் கூறியுள்ளமை ஈண்டு நினைவு கூர்தற்குரியது. (15)

49 அவற்றுள்
ரகார ழகாரங் குற்றொற் றாகா.

இது, ரகார ழகாரங்கட்கு எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ - ள்: அவற்றுள் - மேற்கூறப்பட்ட மூன்றனுள்ளும், ரகாரம் ழகாரம் குற்று ஒற்று ஆகா - ரகாரமும் ழகாரமும் குறிற்கீழ் ஒற்றாகா. அவை நெடிற்கீழ் ஒற்றாம்; குறிற்கீழ் உயிர் மெய்யாம் எ - று.

எ - டு· தார், தாழ் என நெடிற்கீழ் ஒற்றாய் நின்றன. கரு, மழு எனக்குறிற்கீழ் உயிர்மெய்யாய் நின்றன. இவ்வாறு விலக்கினமையின், யகரம் பொய் எனவும் நோய் எனவும் இரண்டிடத்தும் ஒற்றாயிற்று.

குற்றொற்று என்பது குறிதாகிய ஒற்று எனப் பண்புத்தொகை. குறிற்கீழ் நிற்றலான் குறியது எனப்பட்டது. ஈண்டுக் குறில் நெடில் என்கின்றது மொழிமுதல் எழுத்தினை என உணர்க.

இது, மேல் வரையறை இல எனப்பட்ட உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு ஒரு வரையறை கண்டு கூறினவாறு.

(வி - ரை) : மேல் என்றது 22-ஆம் நூற்பா உரையை நோக்கியதாகும். தார், தாழ் என்புழி முன்னிற்கும் உயிர்மெய் யெழுத்தைப் பிரிப்பின் ஆகார உயிர் நிற்பதை அறியலாம். ஆகார வுயிருடன் ரகர, ழகர வொற்றுக்கள் மயங்கி நிற்றலின் இது உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கமாயிற்று.

குற்றொற்று : குறியதன் கீழ் உள்ள ஒற்று எனப் பொருள் படுதலின் வேற்றுமைத் தொகை என்றலே பொருத்தம். நச்சினார்க் கினியரும் 'கீழ் என்னும் உருபு தொகுத்துக் கூறினார்' என்றல் காண்க.

இதனையும், முன்னைய நூற்பாவையும் இணைத்தே நன்னூ லாரும், 'ய ர ழ வொற்றின்முன் க ச த ப ங ஞ ந ம ஈரொற்றும், ரழத் தனிக்குறில் அணையா' (எழுத் - 64) என்றனர். (16)

50. குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத்தியல.

இ - ள் : குறுமையும் நெடுமையும் அளவின் கோடலின் - உயி ரெழுத்திற்குக் குறுமையும் நெடுமையும் அளவிற் கொள்ளப் படுதலின், தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல-தொடர் மொழிக் கீழ் நின்ற ரகார ழகாரங்களெல்லாம் நெடிற் கீழ் நின்ற ரகார ழகாரங்களின் இயல்பையுடைய (என்றுகொள்ளப்படும்) எ-று.

எ - டு: அகர், புகர், அகழ், புகழ் எனக்கொள்க.

'புலவர்' என்றாற்போல இரண்டு மாத்திரையை இறந்ததன் பின்னும் வருமாலெனின், அவையும் 'தன்னின முடித்தல்' என்ப தனால் 'நெடிற்கீழ் ஒற்று' எனப்படும்.

'எல்லாம்' என்றதனான், ரகார ழகாரங்களையன்றி, பிற ஒற்றுக்களும் 'நெடிற்கீழ் ஒற்று' எனப்படும். இதனானே, விரல் தீது என்புழி லகரம் 'நெடிற்கீழ் ஒற்று' என்று கெடுக்கப்படும்.

(வி–ரை) அளவிற் கோடலின் – மாத்திரை என்னும் அளவு கருவியாகக் கொள்ளப் படுதலின். இந்நூற்பாவிற்கு நச்சினார்க் கினியர் வேறு பொருளுரைப்பர். அது பொருந்தாமையை அப் பதிப்பில் விளக்கியுள்ளேன்; ஆண்டுக்காண்க. இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையே பொருத்தம் உடைத்து. (17)

51. செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றுகும்.

இது, செய்யுட்கண் ஈரொற்று உடனிலை ஆமாறு உணர்த் துதல் நுதலிற்று.

இ - ள்: செய்யுள் இறுதி போலி மொழிவயின் - செய்யுள் இறுதிக்கண் 'போலும்' என்னும் மொழிக்கண், னகாரம் மகாரம் ஈர் ஒற்று ஆகும் - னகாரமும் மகாரமும் வந்து ஈரொற்று உடனிலையாய் நிற்கும் எ – று.

எ – டு : 'எம்மொடு தம்மைப் பொரூஉங்காற் பொன்னொடு, கூவிளம் பூத்தது போன்ம்' என வரும்.

(வி – ரை) செய்யுளிறுதிக்கண் போலும் என்னும் மொழிக் கண் னகாரமும், மகாரமும் வந்து ஈரொற்றுடனிலையாய் நிற்கும் என இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் பொருளுரைத்தனர். இங்ஙனம் உரைப்பின் செய்யுளின் இறுதியில் நிற்கும் போலும் என்னும் சொல்லே போன்ம் என வரும் எனக்கொள்ளக் கிடக்கும். 'பெருங்கல்லடாரும் போன்ம் என விரும்பி' (புறம் - 19) எனவும், 'மழையுள் மாமதி போன்ம் எனத் தோன்றுமே' (சிந் – நாமகள் - 98) எனவும், சான்றோர் செய்யுட்களில் இடையில் வரும் போலும் என்ற சொல்லும் போன்ம் என வந்துள்ளதைக் காண்கிறோம். இது பற்றியே நச்சினார்க்கினியரும் செய்யுட்போலி

மொழி இறுதிவயின் எனக் கொண்டு கூட்டி, செய்யுட்கண் வரும் போலும் என்னும் சொல்லின் இறுதியில் வரும் னகாரமும் மகாரமும் ஈரொற்றுடனிலையாய் நிற்கும் எனப் பொருளுரைத்தனர். இந்நுண்மை பாராட்டத்தக்கதாம்.

நன்னூலாரும் செய்யுள் இறுதியில் மட்டும் வரும் 'போலும்' என்றது பொதுப்பட, 'ல ள மெய் திரிந்த ன ண முன் மகாரம், நைந்து ஈரொற்றும் செய்யு ளுள்ளே' (எழுத் - 95) என்றனர். இவ்வருமையும் நினைந்து இன்புறுதற்குரியதாகும். (18)

52. [1]னகாரை முன்னர் மகாரங் குறுகும்.

இஃது, 'அரையளபு குறுகல் மகர முடைத்து' (நூன்மரபு-13) என்பதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: னகாரை முன்னர் மகாரம் குறுகும் - (மேற்கூறப் பட்ட) னகாரத்து முன் வந்த மகாரம் மாத்திரை குறுகி நிற்கும் எ-று. (19)

53. மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினும்
எழுத்தியல் திரியா என்மனார் புலவர்.

இஃது, எழுத்துக்கட்கு மொழிக்கண் மாத்திரை காரணமாகப் பிறப்பதோர் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

இ-ள்: மொழிப்படுத்து இசைப்பினும்–மொழிக்கண் படுத்துச் சொல்லினும், தெரிந்து வேறு இசைப்பினும் – தெரிந்துகொண்டு வேறே சொல்லினும், எழுத்து இயல் திரியா என்மனார் புலவர் - உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்கள் (பெருக்கம் சுருக்கம் உடையனபோன்று இசைப்பினும்,) தத்தம் மாத்திரை இயல்பில் திரியா என்று சொல்லுவர் புலவர் எ-று.

எ-டு: அஃகல், அ எனவும், ஆல், ஆ எனவும், கடல், க எனவும், கால், கா எனவும் கண்டுகொள்க.

---

1. 'னகார முன்னர்' என்பதும் பாடம்.

'வேறு' என்றதனன், எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேற்றுமைக்கண்ணும் எழுத்தியல் திரியா வென்பது கொள்க.

(வி·ரை) 'மொழியாய்த் தொடரினும் முன்னனைத் தெழுத்தே' (எழுத் - 72) என்னும் நன்னூல் நூற்பா இந்நூற்பாவின் கருத்தை முகந்து நிற்றல் காண்க. (20)

54. அகர இகரம் ஐகாரம் ஆகும்.

இது, போலி எழுத்து ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அகரம் இகரம் - அகரமும் இகரமும் கூட்டிச்சொல்ல, ஐகாரமாகும் - ஐகாரம்போல ஆகும் எ - று.

எ-டு: ஐயர், அஇயர் எனவரும். அது கொள்ளற்க. (21)

55. அகர உகரம் ஔகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ - ள்: அகரம் உகரம் - அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல, ஔகாரம் ஆகும் - ஔகாரம்போல ஆகும் எ - று

எ - டு: ஔவை, அஉவை எனக் கண்டுகொள்க. அது கொள்ளற்க.

(வி-ரை) பிரயோக விவேகம் 5-ஆம் நூற்பாவுரையில், 'இளம்பூரணர் உரையில் போலி எழுத்தைக் கொள்ளற்க என்று கூறுமை அவருரையில் காண்க' என்ற தொடர் ஒன்று உளது. அதனை நோக்க இந்நூற்பாவிலும், முன்னைய நூற்பாவிலும் உள்ள 'அது கொள்ளற்க' என்ற தொடர் நச்சினார்க்கினியர் உரையிலிருந்து தவறி இதற்கும் எழுதப்பட்டுவிட்டதோ என ஐயம் தோன்றுகிறது.

இங்ஙனமன்றி 'அது கொள்ளற்க' என்ற தொடரை இளம் பூரணர் பெய்திருப்பின், கொள்ளா எழுத்திற்கு இலக்கணம் கூறின் அந்நூற்கு 'நின்று பயனின்மை' என்னும் குற்றம்தங்கும் என்றுணர்க. சிவஞானமுனிவரும் இக்கருத்தையே தழுவுவர். (22)

56. அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

இதுவும் அது.

இ-ள்: அகரத்து இம்பர் யகரப் புள்ளியும் - அகரத்தின் பின்னர் இகரமேயன்றி யகரமாகிய புள்ளியும், ஐ என் நெடுஞ் சினை - ஐ எனப்பட்டநெட்டெழுத்தாம், மெய்பெறத்தோன்றும் - அவை வடிவுபெறத் தோன்றும் எ - று.

எ-டு: ஐவனம், அய்வனம் எனவரும்.

'மெய்பெறத் தோன்றும்' என்றதனான், அகரத்தின் பின்னர் உகரமேயன்றி, வகரப்புள்ளியும் ஔகாரம் போல வருமெனக் கொள்க.

எ-டு: ஔவை, அவ்வை எனக் கண்டு கொள்க.

(வி - ரை) 54, 55, 56, ஆகிய மூன்று நூற்பாக்களையும் தொகுத்து நன்னூலார், 'அம்முன் இகரம் யகரம் என்றிவை. எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வொடு, உவ்வும் வவ்வும் அவ்வோரன்ன' (எழுத் - 70) என்றனர்.

இந்நூற்பாவைப்பற்றித் திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:-
இச் சூத்திரம்

'அகரத் திம்பர் யவகரப் புள்ளியும்
ஐயௌ நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்'.

என்றிருத்தல் வேண்டும்.

இ-ள்: அகரத்து இம்பர் யவகரப் புள்ளியும் - அகரத்தின் பின்னர் யகர வொற்றும் வகர வொற்றும், ஐ ஔ நெடுஞ்சினை- ஐகாரம் ஔகாரம் என்னும் நெட்டெழுத்தாம், மெய்பெறத் தோன்றும்-அவை வடிவுபெறத் தோன்றும்.

உ - ம்: ஐயவி, அய்யவி; ஔவை, அவ்வை.

'மெய்பெறத் தோன்றும்' என்றதனால், அவற்றைக் கொள்க என்றவாறு.

காலப் பழமையில் ஏடு பெயர்த்து எழுதினோர் 'யவகரப்புள்ளி' என்பதனை 'யகரப்புள்ளி' எனவும் 'ஐயௌ நெடுஞ்சினை' என்பதனை 'ஐயெனெடுஞ்சினை' எனவும்' பிழையாக எழுதினர் போலும். அப்பிழை பாடத்தைப் பிழையற்ற பாடமெனக் கருதி உரையாசிரியர் 'அதற்குத் தக்கவாறு உரையெழுதிச் சென்றனர்போலும்.'

'அகரத்து இம்பர் வகரப் புள்ளியும்
ஔ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்,

என்ற ஒரு சூத்திரம் ஏடெழுதுவோரால் விடப்பட்டிருக்க வேண்டும் என்பர் திரு. பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் அவர்கள்.

இவையெல்லாம் ஆராய்தற்குரியவாகும். (23)

57. ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான.

இஃது, என்நுதலிற்றோ வெனின் உயிர்களுள் ஒன்றற்கு மாத்திரைச் சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

இ - ள்; தேருங்காலை மொழிவயின் ஓர் அளவு ஆகும் இடனும் உண்டு- ஐகாரம் ஆராயுங்காலத்து மொழிக்கண் ஓர் அளபாய் நிற்கும் இடமும் உண்டு எ-று.

எ - டு: இடையன், மடையன் எனவரும்.

'தேருங்காலை' என்றதனான், முதற்கண் சுருங்காதென்பது கொள்க. 'இடன்' என்றதனான் இக்குறுக்கம் சிறுபான்மையென்பது கொள்க.

(வி-ரை) மேல் அதிகாரத்தால் நின்ற ஐகாரம் தன் மாத்திரை யில் குறுகியும் வரும் என இந் நூற்பாவில் ஆசிரியர் கூறுகின்றார்.

'தேருங்காலை' என்பதால் ஐகாரம் முதற்கண் சுருங்காது என்றார் உரையாசிரியர். எனவே ஏனைய இடை, கடை ஈரிடத்தும் குறுகும் என்பது கருத்தாகின்றது. ஆயினும் இடைக்கண் குறுகு தற்கு மட்டுமே எடுத்துக்காட்டு உள்ளது.

நச்சினார்க்கினியர் உரையிற் கோடலால் ஐகாரம், மொழி முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்தும் குறுகும் என்றும், அதிகாரத்தால் (55-ம் நூற்பா) நின்ற ஔகாரமும் மொழி முதற் கண் குறுகும் என்றும் கூறுவர். நன்னூலாரும் 'தற்சுட்டளபொழி ஐம்மூவழியும், நையும் ஔவும் முதலற் றாகும்' (எழுத்-40) என்று கூறுவர்.

எனினும் சிவஞான முனிவர் ஐகாரம் மொழி முதற்கண் சுருங்குவதில்லை என்றும் 'ஔகாரக் குறுக்கம்' என்பதொன்றில்லை என்றும் கூறி அவர் கருத்தைமறுப்பர்.

இந்நூற்பாவின் உரை பொருத்தமற்றது எனக் கூறித் திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் பின்வருமாறு உரை கூறியுள்ளார்:—

இஃது உயிர்களுள் இரண்டற்கு மாத்திரைச் - சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தேருங்காலை மொழிவயின் ஆன-ஆராயுங் காலத்து மொழிக்கண் நின்ற ஐகார ஔகாரங்கள், ஓர் அளபு ஆகும் இடனும் உண்டு – ஓர் அளபாய் நிற்கும் இடமும்உண்டு.

'தேருங்காலை' என்றதனான், தனியே நின்ற ஐகாரமும் ஔகாரமுமே ஒரு மாத்திரையாகுமென்று கொள்க.

உ-ம்: பை, மை, கை; கௌ, சௌ. வௌ. 'இடனும்' என்றதனான் இக் குறுக்கம் சிறுபான்மை யென்பது கொள்க. ஆர், ஏ என்பன அசைகள்.

மேல், 'யகரப் புள்ளியும் ஐயெனெடுஞ்சினை' என்ற பிழை பாடத்தைப் பிழையற்ற பாடமெனக் கொண்டதால் உரை யாசிரியர் ஈண்டு ஔகாரத்தைக் கூறுது ஐகாரம் ஒர் அளபாய் நிற்கும் இடமும் உண்டு என்று உரைத்துச் சென்றனர் போலும்'.

இக்கருத்தும் இன்னும் ஆய்தற்குரியதே யாகும். (24)

58. இகர யகரம் இறுதி விரவும்.

இதுவும் ஒரு போலியெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இறுதி இகர யகரம் விரவும் – இகரவீற்று மொழிக்கண் யகரமும் (அதுபோல) இகரமும் விரவிவரும் எ-று

எ-டு: நாய், நாஇ எனக் கண்டுகொள்க[1].

(வி-ரை) இந்நூற்பா மொழியிறுதிக்கண் வரும் போலியை உணர்த்துகின்றது. சிவஞான முனிவர் இதனை 54–ஆம் நூற்பாவோடு இயைபுடையதாக்கி வேறு பொருள் கூறுவர். எனினும் உரையாசிரியர் கருத்தே வலியுடைத்தாம். (25)

59. பன்னீர் உயிரும் மொழிமுத லாகும்.

இஃது, உயிரெழுத்து மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும் – பன்னிரண்டு உயிரெழுத்தும் மொழிக்கு முதலாம் எ-று.

எ-டு: அடை, ஆடை, இடை, ஈயம், உரல், ஊர்தி, எழு, ஏணி, ஐவனம், ஒளி, ஓளி, ஔவியம் என வரும். (26)

60. உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா.

இது, மெய்யெழுத்து மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

1. 'விரவும்' என்றதனுல் அவையிரண்டும் கொள்க என்றவாறு என்ற தொடர் வ. உ. சி. அவர்கள் பதிப்பில் காணப்படுகிறது.

இ-ள்: உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா - உயிரோடு கூடிய மெய்யல்லாதனவாகிய தனிமெய்கள் மொழிக்கு முதலாகா; உயிரோடுகூடிய மெய்கள் மொழிக்கு முதலாம் எ - று.

ஈண்டு உயிர்மெய் யென்பது வேற்றுமை நயம் கருதி யென வுணர்க. ஈண்டு ஒற்றுமை கருதில்,

'கதந பமஎனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே'
(மொழிமரபு - 28)

எனச் சூத்திரம் சுருங்க [1] வருவதன்றி, இதனுற் சொல்லப்பட்ட அறுபது உயிர்மெய்யினை [2] எடுத்தோத வேண்டிச் சூத்திரம் பரக்க வருமென்பது.

(வி-ரை) இதற்கு முன்னைய நூற்பாவில் மொழிக்கு முதலாக உயிரெழுத்தெழுக்கள் பன்னிரண்டும் வரும் என, மெய்யெழுத்துக் களும் அவ்வாறு வருமோ? என, ஐயம் நேர்ந்தது. அதனை விலக்கவே இந்நூற்பா எழுந்தது ஆதலின் 'இது மெய்யெழுத்து மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று' எனக் கருத் துரை கூறினர் உரையாசிரியர்.

மெய்யெழுத்துக்கள் உயிரோடுகூடி உயிர்மெய்யாய வழியே மொழிக்கு முதலாவதல்லது, தனி மெய்யாக நின்று மொழிக்கு முதலாகா என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

உயிர்மெய்யை உயிரும் மெய்யுமாகப் பிரித்துக் கூறுதலின் இது வேற்றுமை நயம் கருதிற்று என்றனர். உயிர்மெய்யைப் பிரிக்காது ஒன்ருகக்கூறின் அது ஒற்றுமை நயமாம். ஒற்றுமை நயங்கருதி மொழிக்கு முதலாகும் உயிர் மெய்யினை ஒவ்வொன் ருகக்கூறின் க த ந ப ம என்ற ஐந்து மெய்களும், ஒவ்வொன்றும் 12 உயிரோடு வருதலின் ($5 \times 12 = 60$) அறுபதாகின்றது. அவ்

1. 'ஓதுமதன்றி' என்பதும் பாடம்.
2. 'எடுத்தோத வேண்டில்' என்பதும் பாடம்.

வறுபதையும் எடுத்தோத வேண்டில் நூற்பா பல்குமாகலின் வேற்றுமை நயம்பற்றி ஆசிரியர் கூறினர் என்றார். (27)

61. கதந பமஎனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே.

இது, மேல் முதலாம் என்னப்பட்ட உயிர்மெய்கட்கு வரையறை கூறுதல் நுதலிற்று.

இ-ள்: க த ந ப ம எனும் அ ஐந்து எழுத்தும் க த ந ப ம என்று சொல்லப்பட்ட ஐந்து தனிமெய்யெழுத்தும், எல்லா உயிரொடும் முதல் செல்லும் – பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதலாதற்குச் செல்லும் எ-று.

எ-டு: கலை, காளி, கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கேழல், கைதல், கொண்டல், கோடை, கௌவை எனவும்; தந்தை, தாடி, திற்றி, தீமை, துணி, தூணி, தெற்றி, தேவர், தையல், தொண்டை, தோடு, தௌவை எனவும்; நடம், நாரை, நிலம், நீர், நுழை, நூல், நெய்தல், நேயம், நைகை, நொய்யன, நோக்கம், நௌவி எனவும்; படை, பாடி, பிடி, பீடம், புகழ், பூமி, பெடை, பேடி, பைதல், பொன், போதகம், பௌவம் எனவும்; மடம், மாலை, மிடறு, மீனம், முகம், மூதூர், மெலிந்தது, மேனி, மையல், மொழி, மோதகம், மௌவல் எனவும் வரும்.

'முதற்கு' என்பதன் நான்காம் உருபு விகாரத்தால் தொக்கது. (28)

62. சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔஎனும் மூன்றலங் கடையே.

இதுவும் அது.

இ - ள்: சகரக் கிளவியும் அவற்று ஓர் அற்று – சகரமாகிய எழுத்தும் மேற்சொல்லப்பட்டவைபோல எல்லா உயிரோடும் மொழிக்கு முதலாம், அ ஐ ஔ எனும் மூன்று அலங்கடை – அ ஐ ஔ என்னும் மூன்றும் அல்லாவிடத்து எ-று.

எ-டு: சாலை, சிலை, சீறுக, சுரும்பு, சூழ்க, செய்கை, சேவடி, சொறிக, சோறு என வரும்.

சகடம் எனவும், சையம் எனவும் விலக்கினவும் வருமா லெனின், அவற்றுள் ஆரியச்சிதை வல்லாதன 'கடிசொல் இல்லை' (சொல் – 452) என்பதனாற் கொள்க.

(வி-ரை) இந்நூற்பாவின்படி சகரக்கிளவி அ, ஐ, ஒள என்னும் மூன்று எழுத்துக்களுடனும் வாராது எனத் தெரிகிறது. ஆனால் சங்க இலக்கியங்களிலோ 'சடை' (புறம்-1), 'சதுக்கம்' (திருமுருகு-25), 'சந்து' (மலைபடு-392), 'சமம்' (புறம்-14, குறள்-99), 'சமன்' (குறள் – 118), 'சவட்டி' (பெரும்பாண்-217), 'சகடம்' (அகம்-136, புறம்-102) எனச் சகரம் அகரத் தோடு கூடி வருதற்குப் பல சொற்கள் காணப்படுகின்றன. இவையனைத்தும் இலக்கியங்களில் பயின்று வரும் அளவிற்கு வந்திருத்தலின், இவை அக்காலத்திற்கு முன்னமேயே வழக்கில் பயின்று வந்திருக்க வேண்டுமெனத் தெரிதலானும், பயின்று வந்திருக்கும் இச்சொற்களுக்கு இலக்கண விதி கூருதிருத்தல் பொருந்துவதன்ரு மாதலானும் இவ்விதிபற்றிய கருத்து இன்னும் ஆராய்தற்குரியதாகவே இருக்கிறது. இங்ஙனம் சகரம் அகரத் தோடு வருதற்குச் சங்க இலக்கியங்களில் சொற்கள் உள்ளனவே யன்றி, ஏனைய ஐகார ஒளகாரங்களோடு அச்சகரம் கூடி வருதற் கான சொற்கள் இல்லையே யெனில், சகரம் ஐகார ஒளகாரங்களுடன் கூடிவரும் சொற்கள் பெரும்பாலும் வடசொற்களாகவே இருத்த லின் காணப்படவில்லை யெனத் துணியலாம்.

இது பற்றியே இலக்கண விளக்க நூலாரும் சகரம், ஐகாரம், ஒளகாரம் ஆகிய இரண்டொடுமட்டும் வாராது என்ருர். ஆனல் நன்னூலாரும் பிரயோக விவேக நூலாரும் சகரம் அ, ஐ, ஒள ஆகியமூன்றுடனும் வரும் என்பர். அவர்கள் வடநூல் வழக்கைப் பெரிதும் தழுவியவர்கள் ஆதலின், இங்ஙனம் கூறினர். இதனைச் சிவஞான முனிவர் 'இனிச்சகரக் கிளவியும் அவற்ருே ரற்றே, அ ஐ ஒள வெனும் மூன்றலங் கடையே' என்பது முதலாக

இன்னோரன்ன சிலவெழுத்துக்களை மொழிக்கு முதலாகாவென ஆசிரியர் தொல்காப்பியர் விலக்கினாராலோ வெனின், இவ்வட மொழிகளும் திசைச்சொற்களும் அக்காலத்து இவ்வாறு தமிழின்கட் பயின்று வாராமை பற்றியென்க' எனக்கூறுமாற்றானும் நன்கு அறியலாம்.

இங்ஙனமே யகரமெய் ஆகார வுயிரோடல்லது, ஏனைப் பதி னோருயிர்களோடும் மொழிக்கு முதலாகாதெனத் தொல்காப்பியர் கூறுவர். இவ்வரையறைக்கு மாறுக 'யவனர்' என்னும் சொல் சங்கச் செய்யுட்களிற் பெருக வழங்கியுள்ளது.

ஞகரமெய் ஆ, எ, ஒ என்னும் மூன்று உயிரோடு மட்டுமே மொழிக்கு முதலாம் எனத் தொல்காப்பியர் கூறுவர். இதற்கு மாறுக, 'ஞமலி' (புற-74' அகம்-140, 388, பட்டினப்-140) 'ஞரல' (திருமுருகு-120, பதிற்று-30) 'ஞமன்' (புறம்-6)என ஞகரமெய் அகரத்தோடு முதலாகும் சொற்களும், 'ஞிமிறு' (புறம் -93, அகம்-59) என இகரத்தோடு முதலாகிய சொல்லும் சங்கநூல்களில் வழங்கப் பெற்றுள்ளன.

இவற்றிற்குரிய காரணம் ஆராய்தற்குரியதாகும். அறிஞர்கள் ஆராய்வார்களாக. (29)

63. உ ஊ ஒஓ என்னும் நான்குயிர்
வ என் எழுத்தோடு வருத லில்லை.

இதுவும் அது.

இ-ள்: உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிர் - உ ஊ ஒ ஓ என்று சொல்லப்படுகின்ற நான்கு உயிரும், வ என் எழுத்தோடு வருதல் இல்லை - வ என்னும் மெய்யெழுத்தோடு மொழி முதலில் வருதலில்லை; பிற உயிர்கள் வரும் எ - று.

எ - டு: வளை, வாளி, விளரி, வீடு, வெள்ளி, வேர், வையம், வெளவு எனவரும்.

(வி - ரை) 'உ ஊ ஒ ஓ அலவோடு வம்முதல்' (எழுத்தியல் -48) என்பர் நன்னூலாரும். (30)

64. ஆ எ
ஒ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய.

இதுவும் அது.

இ-ள்: ஆ எ ஒ எனும் மூ உயிர் ஞகாரத்து உரிய-ஆ எ ஒ என்று சொல்லப்படும் மூவுயிர்கள் ஞகார ஒற்றோடு முதலா தற்கு உரிய; பிற உயிர் உரியவல்ல எ - று.

எ – டு: ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று எனவரும்.

ஞழியிற்று என்றாற்போல்வன விலக்கினவும் வருமாலெனின், அவை [1]இழிவழக்கென்று மறுக்க.

(வி – ரை) நன்னூலார் ஞமலி என்பது போன்ற சொற்கள் வருதலைக் கண்டு, ஞகரம் அகரத்தோடும் வரும் என்பாராக, 'அ ஆ எ ஒவ் வோடாகும் ஞம்முதல்' (எழுத்–50) என்றனர்.

நச்சினார்க்கினியர் இளம்பூரணர் கருத்தினையேதழுவி ஞமலி என்பது திசைச்சொல் ஆகலானும், ஞழியிற்று என்பது இழிவழக் காகலானும் ஆசிரியர் ஞகரம் அகரத்தொடு வரும் எனக்கூற வில்லை என்பர். நேமிநாத ஆசிரியரும், இலக்கண விளக்க ஆசிரியரும் தொல்காப்பியர் கருத்தையே தழுவுவர். (31)

65. ஆவோ டல்லது யகர முதலாது.

இதுவும் அது.

இ – ள்: ஆவோடு அல்லது யகரம் முதலாது- ஆகாரத்தோடு அல்லது யகரம் முதலாகாது எ – று.

எ – டு: யான் எனவரும்.

யவனர் என்றாற்போல்வன விலக்கினவும் வருமாலெனின், அவை ஆரியச் சிதைவென்று மறுக்க.

(வி-ரை) யகரம், ஆகாரம் ஒன்றொடு மட்டுமே மொழிக்கு முதலில் வரும் எனத் தொல்காப்பியர் கூற, நன்னூலார்

---

1. 'அழிவழக்கென்று மறுக்க' என்பதும் பாடம்.

'அ ஆ உ ஊ ஒ ஔ யம்முதல்' (எழுத் - 49) என ஆறெழுத்தோடும் வரும் என்றார். நேமிநாத நூலார் யகரம் ஆ, ஊ, ஓ ஆகிய மூன்றெழுத்துக்களோடும் வரும் என்றார். எனினும் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறுமாறு போல யகரம் ஆகாரத்தோடு கூடி வரும் சொற்களே தமிழ்ச் சொற்களன்றி, ஏனைய எழுத்துக்களுடன் வரும் சொற்கள் தமிழ்சொற்கள் அன்று ஆதலின், அவற்றை ஆசிரியர் கூறுதொழிந்தார் எனக்கூறுதலே அமைவுடைத்தாகும். (32)

66. முதலா ஏன தம்பெயர் முதலும்.

இது, மொழிக்கு முதலாகாதனவும் ஒரோவழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: முதலா ஏன - மொழிக்கு முதலாகாத ஒழிந்த மெய்களும், தம் பெயர் முதலும் - (அவ்வெழுத்துக்கள்) தம் பெயர் கூறுதற்கு முதலாம் எ - று.

முதலாயின மெய் கதநபமக்களும், வகரமும், சகரமும், ஞகரமும், யகரமும் என இவை. முதலாகாத மெய் ஙகரமும், டகரமும், ணகரமும், ரகரமும், லகரமும், ழகரமும், ளகரமும், றகரமும், னகரமும் என இவை.

எ - டு: அவை தம் பெயர்க்கு முதலாமாறு; ஙக்களைந்தார், டப்பெரிது, ணந்நன்று என்றாற்போல ஒட்டிக்கொள்க.

இனி 'ஏன' என்றதனான், முதலாம் என்னப்பட்ட ஒன்பது உயிர்மெய்யும் பன்னிரண்டு உயிரும் தம் பெயர் கூறும் வழியும் மொழிக்கு முதலாம் எனக்கொள்க.

எ - டு : கக்களைந்தார், தப்பெரிது, அக்குறிது, ஆவலிது என்றாற்போல ஒட்டிக்கொள்க.

(வி - ரை) எழுத்துக்கள் 'தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும், இம்முறை மாறியும் இயலும் என்ப' (எழுத்-66) என்று நன்னூலாரும் இங்ஙனம் கூறுதல் காண்க. (33)

67. குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.

இது, குற்றியலுகரம் மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ – ள்: குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின் - குற்றிய லுகரம் முறைப் பெயரிடத்து, ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் - ஒற்றாய் நின்ற நகரத்தின் மேலாய நகரத்தோடு மொழிக்கு முதலாம் எ. று.

எ – டு: நுந்தை எனவரும்.

இவ்வாறு முதலாக்கம் கூறவே, மொழிமுதற் குற்றியலுகரத் திற்கு இடமும் பற்றுக்கோடும் கூறியவாறாயிற்று. இடம் நுந்தை என்னும் முறைப் பெயர். பற்றுக்கோடு நகரமிசை நகரம். (34)

68. முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான.

இது, மேலதற்கு ஒரு புறனடை.

இ - ள்: முற்றியலுகரமொடு பொருள் வேறுபடாது - (அம் முதற்கட் குற்றியலுகரம் ஆண்டு இதழ்குவித்துக் கூறும் வழி) முற்றுகரத்தோடு பிற உகரம்போலப் பொருள் வேறு படாது; (யாண்டெனின்,) அப்பெயர் மருங்கின் நிலை இயலான - அம் முறைப்பெயரிடத்துத் தான் நிற்றற்கண் எ.று.

எ–டு: நாகு எனவும், நகு எனவும் குறுகியும், குறுகாதும் நின்ற உகரங்கள்போல, நுந்தை என்று குறுக்கமாய வழியும், இதழ் குவித்துக்கூறக் குறுகாதவழியும், பொருள் வேறுபடாதவாறு அறிக.

இனி 'இரட்டுறமொழிதல்' என்பதனால், பொருள் என்றதனை இடனும் பற்றுக்கோடும் ஆக்கி, பிற உகரங்கள்போல ஈண்டை உகரங்கள் இடனும் பற்றுக்கோடும் வேறுபடா என்பது கொள்க.

(வி-ரை) உகர ஈற்றுச்சொற்களில் சிலவற்றைக் குற்றிய லுகரமாக ஒலிப்பின் ஒரு பொருளும், அவற்றையே முற்றியலுகர மாக ஒலிப்பின் பிறிதொரு பொருளும் தரும். எடுத்துக்காட்டாகக் காது, கட்டு என்பனவற்றைக் குற்றியலுகரமாக ஒலிப்பின் அவை தொழிற்பெயராகவும், முற்றியலுகரமாக ஒலிப்பின் அவை ஏவல் வினையாகவும் பொருள்படுதலைக் காணலாம். ஆனால் இந்நுந்தை என்னும் மொழிமுதல் குற்றியலுகர ஈற்றுச்சொல்லைக் குற்றிய லுகரமாக ஒலிப்பினும், முற்றியலுகரமாக ஒலிப்பினும் பொருள் வேறுபடாது என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

மொழிக்கு முதலாகும் எழுத்து உயிர் பன்னிரண்டும், க ச த ந ப ம வ ய ஞ என்னும் உயிர்மெய் ஒன்பதும், மொழி முதற்கண் வரும் குற்றுகரம் ஒன்றுமாக இருபத்திரண்டாகும். நன்னூலார், தொல்காப்பியர் கூறிய மொழி முதற்கண் வரும் குற்றுகரத்தை நீக்கி, அவர் கூறாத ஙகரத்தைச் சேர்த்து மொழி முதலாகும் எழுத்து இருபத்திரண்டு என்பர். அதனைப் ''பன்னீருயிரும் கசதந பமவய, ஞ ங ஈ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்'' (எழுத்-47) என்பதனான் அறிக. எனினும் ஙகரம் தனித்து மொழிக்கு முதலாவதன்றி 'முடவன் கோலூன்றி வந்தாற் போலச்' சுட்டு வினாவாகிய இடைச் சொற்களையே முன்னிட்டு வருதலான், அதனை மொழிமுதற்கண் வரும் எழுத்துக்களுள் ஒன்றாகக் கோடல் பொருந்துவதன்றாம். இலக்கண விளக்க நூலாரும், மொழிக்கு முதலாகாத ஙகரமும் சுட்டு வினாக்களை முதற்கொண்டு முதலாகு மெனின், ஏனைய ளகர னகரம் முதலாயினவும், ஏனைய எழுத்துக் களை முதற்கொண்டு முதலாமெனக் கூறவேண்டுதலின் அது பொருந்தாது என்பர் (இ. வி. 27 ஆம் நூற்பா உரை காண்க).

இங்ஙனம் மொழி முதற்கண் வரும் எழுத்துக்கள் இருபத் திரண்டு என்றாரேனும் பன்னீருயிரையும், அவை கூடி வரும் உயிர்மெய்யையும் தனித்தனி எண்ணுழித் தொண்ணூற்று நான் காகும். அவையாவன :

உயிரெழுத்து	12	பகர வரிசையில்	12
ககர வரிசையில்	12	மகர ,,	12
சகர ,,	9	யகர ,,	1
ஞகர ,,	3	வகர ,,	8
தகர ,,	12	மொழிமுதற் குற்றுகரம்	1
நகர ,,	12	ஆக எழுத்துக்கள்	94

இலக்கண விளக்க ஆசிரியரும் இத்தொகையே கொண்டனர். நன்னூலாசிரியரும், சின்னூலாசிரியரும் பிற்காலத்து வந்த வட சொல் திசைச் சொற்களையும் சேர்த்து மொழிமுதற்கண் வரும் எழுத்துக்களைக் கணக்கிட்டமையான் முறையே நூற்று மூன்று என்றும், தொண்ணூற்றெட்டு என்றும் கூறினர். (35)

69. உயிர்ஔ எஞ்சிய இறுதியாகும்.

இஃது, உயிர் மொழிக்கு ஈருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: உயிர் ஔ எஞ்சிய இறுதியாகும் - உயிரெழுத்துக் களுள் ஔகாரம் ஒழிந்தவை மொழிக்கு ஈரும், ஔகாரந்தான் ஈருகாது எ.று.

இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது.

எ-டு: ஆஅ, ஆ, ஈஇ, ஈ, ஊஉ, ஊ, ஏஎ, ஏ, ஐஇ, ஐ, ஓஒ, ஓ, என உயிர் ஈருயின. இவற்றுட் குற்றெழுத்தைந்தும் அளபெடை வகையான் ஈருயின.

உயிர்மெய்களும், மேல்வரையறை கூறுதனவாகிய அகர ஆகார இகர ஈகார ஐகாரங்களோடு இயைந்தன ஈண்டே கொள்க.

எ-டு: விள, பலா, கிளி, குரீ, பனை என வரும். (36)

70. கவவோ டியையின் ஔவு மாகும்

இஃது ஈருகாதென்ற ஔகாரம் இன்னுழி ஆம் என்கின்றது.

இ-ள்; க வ ஒடு இயையின் – ககர வகரமாகிய மெய்களோடு பொருந்தின், ஔவும் ஆகும் – முன் ஈருகா தென்ற ஔகாரமும் ஈரும் எ.று.

எ-டு: கௌ, வௌ என வரும். (37)

71. எஎன வருமுயிர் மெய்யீ ருகாது,

இஃது எகரம் தானே நின்றவழியன்றி மெய்யோடுகூடி ஈருகாதென வரையறை கூறுதல் நுதலிற்று.

இ-ள்: எ என வரும் உயிர் - எ என்று சொல்ல வரும் உயிர், மெய் ஈறு ஆகாது - தானே ஈருவதன்றி மெய்யோடு இயைந்து ஈருகாது எ. று. (38)

72. ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே.

இதுவும் வரையறை.

இ-ள் ஒவ்வும் அற்று – ஒகரமும் தானே நின்று ஈருவ தன்றி மெய்யோடு இயைந்து ஈருகாது, ந அலங்கடை – நகர மெய்யோ டல்லாத விடத்து எ. று.

(வி-ரை) 69 முதல் 72 வரையுள்ள நூற்பாக்களின் கருத்துக் களைத் தொகுத்தே நன்னூலாரும்,

‘குற்றுயிர் அளபின் ஈரும் எகரம்
மெய்யோடு ஏலாது ஒ நவ்வொடு ஆம்ஔ
ககர வகரமொடு ஆகும் என்ப’ (எழுத் – 53) என்றனர்.
(39)

73 ஏ ஓ எனுமுயிர் ஞகாரத் தில்லை.

இதுவும் வரையறை.

இ - ள்: ஏ ஓ எனும் உயிர் ஞகாரத்து இல்லை – ஏ ஓ என்று சொல்லப்படும் உயிர் (தாமே நின்றும் பிறமெய்களோடு நின்றும் ஈருவதன்றி) ஞகரத்தோடு ஈருவதில்லை எ. று.

தாமே யாதல் முன்னே காட்டப்பட்டன. பிறமெய்களோடு ஈருவனவற்றுள் வழக்கிறந்தன வொழிய இறவாதன வந்தவழிக் கண்டு கொள்க. (40)

74. உ ஊ காரம் நவவொடு நவிலா.

இதுவும்வரை யறை.

இ – ள்: உ ஊகாரம் நவ ஒடு நவிலா - உகர ஊகாரங்கள் (தாமே நின்றும் பிற மெய்களோடு நின்றும் பயில்வதன்றி) நகர வகரங்களோடு பயிலா எ. று.

தாமே ஈருதல் மேலே காட்டப்பட்டன. பிற மெய்களோடு ஈருமவற்றுள் வழக்கிறந்தன வல்லாதன வந்தவழிக் கண்டு கொள்க.

'நவிலா' என்றதனாற் சிறுபான்மை நொவ்வும் கவ்வும் என (உகரம்) வகாரத்தோடு ஈருதல் கொள்க. இன்னும் இதனானே சிறுபான்மை நகரத்தோடு வரவு உண்டேனும் கொள்க.

(வி - ரை) உ ஊ என்பன ஒவ்வொன்றுமே நகரத்தொடும் வகரத்தொடும் வாரா எனப் பொருள் கூறினர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும்.

ஆனால் தொல்காப்பியரே 'செலவினும் வரவினும் தரவினும்' என்றும், 'அளவும் நிறையும்' என்றும், 'களவினுட் டவிர்ச்சி' என்றும் நூற்பா செய்துள்ளமையானும், 'புன்கண் உடைத்தாற் புணர்வு' (குறள் - 52) எனச் சான்றோர் செய்யுளில் வருதலானும், இவர்கள் கருத்து இந்நூற்பாவிற்குப் பொருந்துவதன்றும்.

ஆதலின் இந்நூற்பாவிற்கு 'உகரம் நகரத்தோடும், ஊகாரம் வகரத்தோடும் வாராது' என நிரனிறையாகப் பொருள் உரைப்பின் ஒருவாறு பொருந்துவதாகும்.

அரசன் சண்முகனார் தாம் எழுதிய பாயிர விருத்தியில் இக் கருத்தே வலியுடையது எனக்கூறல் காண்க. எனினும் 'பொருநுக்கடிது' என உகரம் நகரத்தோடு வருதலின் இதுவும் ஆராயத்தக்கதேயாம். (41)

75. உச்ச காரம் இருமொழிக் குரித்தே.

இதுவும் ஒரோவழி வரையறை.

இ - ள்: உச்சகாரம் இருமொழிக்கு உரித்து - உகரத்தோடு கூடிய சகரம் [1]இருமொழிக்கு ஈறாகும்; பலமொழிக்கு ஈறாகாது எ - று.

எ - டு: உசு, முசு என வரும். பசுவென்பது ஆரியச் சிதைவு.

(வி – ரை) உசு - இஃது உளுவின் பெயர். முசு - இது குரங்கினுள் ஒரு சாதி.

'கச்சு குச்சு என்றாற்போல்வன குற்றுகரம். உகரம் ஏறிய சகரம் இரு மொழிக்கு ஈறாமெனவே ஏனை உயிர்கள் ஏறிய சகரம் பன்மொழிக்கு ஈறுமாயிற்று. உச, உசா, விசி, சே, கச்சை, சோ எனப் பெயராயும்; துஞ்ச, எஞ்சா, எஞ்சி, மூசி, மூசு என எச்ச மாயும் வரும். 'அச்சோ' என வியப்பாயும் வரும். இன்னும் இவை வழக்கின்கட் பலவாமாறும் உணர்க' என உரைப்பர் நச்சினார்க் கினியர். (42)

76. உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயி னிலையும் பொருட்டா கும்மே.

இதுவும் மொழி வரையறையும் மொழியது பொருள்பாடும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: உப்பகாரம் ஒன்று என மொழிப - உகரத்தோடு கூடிய பகரம் ஒரு மொழிக்கு ஈறும் என்று சொல்லுவர், இரு

1. 'இருமொழிக்கு அல்லாது' என்பதும் பாடம்.

வயின் நிலையும் பொருட்டு ஆகும் - அதுதான் தன்வினை பிறவினை என்னும் இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத்தாம் எ.று.

எ-டு: தபு என வரும். இது படுத்துச் சொல்ல நீ சா எனத்தன் வினையாம். எடுத்துச்சொல்ல, நீ ஒன்றனைச் சாவி எனப் பிறவினையாம். (43)

77. எஞ்சிய வெல்லாம் எஞ்சுதல் இலவே.

இது, மொழிக்கு ஈருகா உயிர்மெய்யும் ஒரோவழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இல - மொழிக்கு ஈருகாது நின்ற உயிர்மெய்களெல்லாம் தம்பெயர் கூறும்வழி ஈருதற்கு ஒழிபு இல எ. று.

எஞ்சிய உயிர்மெய்யாவன: ஔகாரம் ககர வகாரங்களை ஒழிந்த மெய்யோடு இயைந்த உயிர்மெய்யும், எகரம் எல்லா மெய்யோடும் இயைந்த உயிர்மெய்யும், ஒகரம் நகரம் ஒழிந்த மெய்யோடு இலயந்த உயிர்மெய்யும், ஏகார ஓகாரம் ஞகாரத் தோடு இயைந்த உயிர்மெய்யும், உ ஊகாரம் நகர வகரங்களோடு இயைந்த உயிர்மெய்யும் என இவை.

எ-டு: தம் பெயர்க்கு ஈறு ஆமாறு: ஙௌக் களைந்தார் எனவும், கெக்களைந்தார் எனவும், கொக் களைந்தார் எனவும், ஞேக் களைந்தார் எனவும், ஞோக்களைந்தார் எனவும், நுக் களைந் தார் எனவும், நூக் களைந்தார் எனவும், வுக்களைந்தார் எனவும், வூக் களைந்தார் எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனுன், மொழிக்கு ஈருய் நின்ற உயிர் மெய் களும் தம் பெயர் கூறும் வழியும் ஈரும் என்று கொள்க.

எ-டு: கக் களைந்தார், கா வலிது எனவும், அக்களைந்தார், ஆ வலிது எனவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க.

தன்னை உணர நின்றவழி, மொழிகட்கு இது கருவியாக ஈற்ற கத்து முடிபு 'ஒன்றின முடித்தலாற்' கொள்க. (44)

78. ஞணநம னயரல வழள வென்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி.

இது, தனிமெய்களுள் மொழிக்கு ஈறுவன கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் அப்பதி னொன்றே - ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்று கூறப்பட்ட அப் பதினொன்றுமே, புள்ளி இறுதி - புள்ளிகளில் மொழிக்கு ஈறுவன எ. று.

எ-டு: உரிஞ், மண், பொருந், திரும், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வேள் என வரும்.

னகாரத்தை ஈற்று வையாது, மகரத்தோடு வைத்தது அதன் மயக்க இயைபு நோக்கி என்றுணர்க.

(வி-ரை) இந்நூற்பாவில் னகரத்தை, எழுத்துக்களின் முறை வைப்பை நோக்க ஈற்றிலேயே வைத்தல் வேண்டும். அங்ஙனமாக, னகரத்தை மகரத்தோடு வைத்தது மயக்க இயைபு நோக்கி என்றார் இளம்பூரணர். மயக்க இயைபு என்பது னகரம் நின்ற நிலைக்களத்து மகரம் நிற்பினும் பொருள் வேறுபடுதலின்றி இருப்பதைக் குறிப்பதாகும். நிலன் நிலம்; கலன் கலம்; பிலன் பிலம் என மயங்குதல் காண்க.

நச்சினார்க்கினியர் மயக்க இயையுடன் வழக்குப் பயிற்சியும் நோக்கி இங்ஙனம் வைத்தார் என்பர். புள்ளி மயங்கியலுள் மெல்லினத்தை முன்னரும் இடையினத்தைப் பின்னரும் நிறுத்திப் புணர்ச்சி விதி கூறுகின்றார் ஆசிரியர். ஈண்டும் அதுபற்றியே கூறினார் எனில் அதுவும் பொருந்துவதாகும். (45)

79. உச்ச காரமொடு நகாரம் சிவணும்.

இதுவும் மொழிவரையறை.

இ - ள் : உச்சகாரமொடு நகாரம் சிவணும் - உகரத்தோடு கூடிய சகாரத்தோடே நகாரம் பொருந்தி அஃது இருமொழிக்கு ஈருயவாறுபோலத் தானும் இருமொழிக்கு ஈரும் எ.று.

எ - டு : பொருந், வெரிந் எனவரும். (46)

80. உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே
அப்பொருள் இரட்டா திவணை யான.

இதுவும் மொழிவரையறை.

இ - ள் : உப்பகாரமொடு ஞகாரையும் அற்று - உகரத்தோடு கூடிய பகரத்தோடு ஞகாரமும் அத்தன்மைத்தாய் ஒருமொழிக்கு ஈரும், இவணையான அ பொருள் இரட்டாது - இவ்விடத்து அதன் பொருள் அவ்வுப்பகாரம் போல இருபொருள் படாது எ.று.

எ - டு : உரிஞ் என வரும்.

ஞகாரம் ஒருமொழிக்கு ஈருதலின், நகரத்தின்பின் கூறப் பட்டது.

(வி - ரை) மேல் 78 ஆம் நூற்பாவில் கூறிய முறைப்படி ஞகரம் பற்றிய இந்நூற்பா முன்னும், நகாரம் பற்றிக் கூறப்படும் முன்னைய நூற்பா இதனையடுத்தும் இருத்தல்வேண்டும். எனினும் நகரத்தின் பின் ஞகரம் கூறப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் முன்னைய நூற்பாவில் கூறப்பட்டிருக்கும் நகரம் இருமொழிக் கண்ணும், ஈண்டுக் கூறப்பட்டிருக்கும் ஞகரம் ஒரு மொழிக் கண்ணும் வருவதனாலாகும் என்பர். இங்ஙனம் கூறின், நான்கு மொழியில் வரும் வகரம், இருமொழிக்கண் வரும் நகரத்தின் முன்னன்றே இருத்தல்வேண்டும். அதனை ஈற்றில் வைத்தது ஏன்? என்ற வினவெழும். எழுத்துக்களின் முறை வைப்பு நோக்காது, இனம்பற்றி மெல்லின இடையினங்களை அடைவே கூறுவது ஆசிரியர் கருத்தாகலின் அவ்வாறு வைத்தார் என்பது. இது பற்றியே இளம்பூரணரும் மெல்லினங்களுள் ஞகர நகர முறை வைப்பிற்குக் காரணம் கூறி, இடையினத்துள் ஒன்றாய வகரம் ஈற்றில் வைத்ததற்குக் காரணம் கூறாது ஒழிந்தார். (47)

81. வகரக் கிளவி நான்மொழி ஈற்றது.

இதுவும் மொழிவரையறை.

இ-ள் : வகரக் கிளவி நான்மொழி ஈற்றது - வகரமாகிய எழுத்து நான்குமொழி ஈற்றதாம் எ.று.

எ-டு: அவ், இவ், உவ், தெவ் எனவரும். (48)

82. மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன.

இதுவும் ஒரோவழி மொழி வரைறை.

இ-ள் : புகர் அறக் கிளந்த அஃறிணைமேன - குற்றம் அறச் சொல்லப்பட்ட அஃறிணையிடத்து, மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த - மகரவீற்றுத் தொடர்மொழியோடு மயங்காதென்று வரையறுக்கப்பட்ட, னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப - னகரவீற்றுத் தொடர்மொழி ஒன்பதென்று சொல்லுவர் எ.று.

எ-டு: நிலன் நிலம், பிலன் பிலம், என்றாற்போல்வன மயங்குவன. இனி மயங்காதன : உகின், செகின், விழன், பயின், அழன், புழன், குயின், கடான், வயான் என வரும்.

இவற்றுள் திரிபுடையன களைக. ஒன்பஃது என்னும் ஆய்தம் செய்யுள் விகாரம். அஃறிணை யென்றது ஈண்டு அஃறிணைப் பெயரினை.

(வி-ரை) அஃறிணைப் பெயர்களுள் னகர ஈற்றுச்சொற்களாக வருவனவற்றுள் ஒன்பது சொற்கள் தவிர, ஏனையவெல்லாம் மகரத்தோடு மயங்குமென்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

எனவே நிலன், பிலன், கலன் முதலிய சொற்களே பழைமை வாய்ந்தன என்பதும், அவையே பிற்காலத்து னகரம் மகரமாகத் திரிந்து நிலம், பிலம் கலம் என ஆயின என்பதும் தெரிய

வருகிறது. இங்ஙனம் பல்வேறு னகர ஈற்றுச் சொற்கள் மகர மாக மயங்கின வெனினும், மயங்காதனவும் ஒரு சில உள எனவும், அவை ஒன்பதேயாம் எனவும் ஆசிரியர் கூறுகின்றார். ஆயினும் மயிலைநாதர், இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் காட்டும் இவ்வொன்பது சொற்களேயன்றி மயங்காத வேறுபிற சொற்களும் உள என்றும், அவை அலவன், கலுவன், வலியன் முதலியன என்றும் கூறுவர்.

நன்னூலார், அஃறிணைப் பெயர்களுள் மகர ஈற்றுச் சொற் களாய நிலம், சலம் முதலியனவே பழமை வாய்ந்தனவென்றும், அம்மகர ஈற்றுச் சொற்களே பிற்காலத்து னகர ஈற்றுச் சொற் களாகத் திரிந்தனவென்றும் தொல்காப்பியருக்கு மாறாகக் கூறினர். அந்நூற்பா 'மகர இறுதி அஃறிணைப் பெயரின், னகரமோடு உறழா நடப்பன உளவே' (எழுத்-67) என்பதாகும்.

ஆயினும் இலக்கண விளக்க நூலார் இது தவறு என்றும், தொல்காப்பியர் கருத்தே வலியுடையது என்றும் கூறுவாராக, 'னகர இறுதி அஃறிணைப் பெயருள், மகரமொடு மயங்கி வருநவும் உளவே' (30) எனக் கூறினர். எனினும் அவர் தொல்காப்பியர் வரையறை கூறியவாறுபோல இவ்வொன்பது நகர ஈற்றுச் சொற்களே மயங்காது வரும் என வரையறை கூறினாரல்லர். எனவே னகர இறுதியே மகரமாக மயங்கிற்று என்பதும் அங்ஙனம் மயங்காதன ஒன்பது என்று வலியுறுத்தலிலேயே கருத்து வேற்றுமையுளது என்பதும் தெரியவருகிறது. இஃது இன்னும் ஆராயத்தக்கதாம். (49)

மொழிமரபு முற்றிற்று

4

பிறப்பியல்

பொருளமைப்பு

தனியெழுத்துக்களின் இலக்கணத்தை நூன்மரபினும், மொழிகளில் வைத்து அறியக்கூடிய சார்பெழுத்துக்களின் இலக்கணத்தையும், மொழிகளின் முதலிலும் இறுதியிலும் நிற்கும் எழுத்துக்களின் இலக்கணத்தையும் மொழி மரபிலும் கூறிய ஆசிரியர், இனி அவ்வெழுத்துக்களின் பிறப்பிலக்கணத்தை இவ்வியலில் கூறுகின்றாராதலின், இது மேலதனோடு இயைபுடைத்தாயிற்று.

1. எழுத்துக்களின் பொதுப்பிறப்பு:

தமிழ் எழுத்துக்களின் பிறப்பிடத்தைச் சொல்லுமிடத்துக் கொப்பூழ் அடியாகத் தோன்றி மேலெழுந்த காற்று, தலை, மிடறு, நெஞ்சு ஆகிய மூன்றிடங்களிலும் நிலைபெற்றுப் பின்பு பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்னும் உறுப்புக்கள் ஒன்றோடொன்று இயையப் பிறப்பனவாம் என்பர். இப்பிறப்பு முறையை மனம் ஒன்றி ஆராய அப்பிறப்பினுடைய நுண்மைகள் எல்லாம் நன்கு விளங்கும்.

2. உயிரெழுத்துக்களின் பிறப்பிடம்:

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் மிடற்றின் கண் நிலைபெற்ற காற்றால் ஒலிக்கும். அவற்றுள் அ, ஆ என்பன வாய் திறந்து

கூறும் முயற்சியால் பிறப்பனவாகும். இ, ஈ, எ, ஏ, ஐ என்பன அங்ஙனம் வாய்திறந்து கூறும் முயற்சியுடன் மேற்பல்லும், நாவின் அடி விளிம்பும் பொருந்தப் பிறப்பனவாம். உ, ஊ, ஒ, ஓ, ஔ என்பன இதழ் குவித்துக் கூறும் முயற்சியால் பிறப்பனவாம்.

3. மெய்யெழுத்துக்களின் பிறப்பிடம்:

முதல் நாவும் முதலண்ணமும் பொருந்தக் ககர ஙகரமும், இடைநாவும் இடையண்ணமும் பொருந்தச் சகர ஞகரமும், நுனி நாவும், நுனியண்ணமும் பொருந்த டகர ணகரமும் பிறக்கும். மேற்பல்லின் அடியை நாவின் நுனி பொருந்தத் தகர நகரமும், மேலிதழும் கீழிதழும் பொருந்தப் பகர மகரமும், மேற்பல்லின் அடியை நாவின் அடி பொருந்த யகரமும், நாவினது நுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவ ரகர ழகரமும், மேற் பல்லின் அடியை நாவிளிம்பு பொருந்த லகரமும், மேலண்ணத்தை நாவின் நுனி அழுத்தித் தடவ ளகரமும் பிறக்கும். மேற் பல்லும் கீழிதழும் கூட வகரமும், அண்ணத்தை நுனிநா வருட றகர னகரமும் பிறக்கும்.

மெல்லெழுத்துக்கள் ஆறும் மேற்கூறிய இடமாகப் பிறப்பினும் மூக்கின் உளதாய ஓசையிலேயே பெரிதும் பிறக்கும். இடை யெழுத்துக்கள் ஆறும் மிடற்றில் எழும் வளியினாலும், வல் லெழுத்துக்கள் ஆறும் தலையில் எழும் வளியினாலும் பிறக்கும். உயிர் எழுத்துக்களுக்கும், மெய்யெழுத்துக்களுக்கும் பிறப்பிடம் இதுகாறும் கூறப்பட்டதாயினும் அவற்றை எடுத்தும், படுத்தும், நலிந்தும், உறழ்ந்தும் கூறும் முயற்சியால் கூறிய நெறியில் சிறிது வேறுபட்டும் வரும்.

சார்பெழுத்துக்களின் பிறப்பிடம்:

பிற எழுத்துக்களைச் சார்ந்தன்றித் தாமாகத் தோன்ற இயலாத குற்றியலிகரமும், குற்றியலுகரமும் தத்தம் முதலெழுத்துக்களின் பிறப்பிடத்தையே தாமும் பெற்று வரும். ஒழிந்த ஆய்தம் தலைவளியாற் பிறத்தலின், உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கும்.

5. இவ்வியலில் கூறப்படும் காற்றியக்கம்:

உள்ளத்தில் எழும் காற்றியக்கம், உள்ளத்திலேயே நிலை பெற்றுப் பரை, பைசந்தி, மத்திமை எனப் பெயர் பெற்றியங்கலும் உண்டு. அதுபற்றி வேதத்துள் கூறப்படும். ஆனால் ஈண்டுக் கூறப்படும் காற்றியக்கமெல்லாம் புறத்துத் தோன்றி எழுத்துக்களாக வடிவம் பெறும் நிலையில் உள்ள அமைப்பையே யாகும்.

பிறப்பியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், எழுத்துக்களது பிறப்பு உணர்த்தினமையின் பிறப்பியல் என்னும் பெயர்த்து. இதனை நூன்மரபின் பின்னே வைக்கவெனின், சார்பில் தோற்றத் தெழுத்தும் தனிமெய்யும் மொழிமரபிடை உணர்த்திப் பிறப்பு உணர்த்த வேண்டுதலின், மொழிமரபின் பின்னதாயிற்று.

83. உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான.

இத்தலைச் சூத்திரம் என்நுதலிற்றோவெனின், எழுத்துக்களது பொதுப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: எல்லா எழுத்தும் நெறிப்பட நாடி சொல்லும் காலை – தமிழெழுத்துக்களெல்லாம் ஒருவன் முறைப்பட ஆராய்ந்து தம்மைச் சொல்லுங்காலத்து, உந்தி முதலா முந்துவளி தோன்றி– கொப்பூழ் அடியாக மேலே கிளர்கின்ற உதானன் என்னும் பெயரையுடைய வாயுத் தோன்றி, தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ – தலையின் கண்ணும் மிடற்றின் கண்ணும்

நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான் உறுப்பு உற்று அமைய -(தலையும் மிடறும் நெஞ்சும் என்னும் மூன்றனோடும்) பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எட்டாகிய முறைமையையுடைய இடங்களில் ஓர் உறுப்போடு ஓர் உறுப்புத் தம்மிற்பொருந்தி அமைதிபெற பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல - பிறப்பினது ஆக்கம் வேறு வேறுபுலப்பட்டு வழங்குதலை யுடைய, திறப்படத் தெரியும் காட்சியான - கூறுபாடுளதாக ஆராயும் அறிவிடத்து எ. று.

இதழ்போறலான் வாய் இதழெனப்பட்டது. 'எல்லா எழுத்தும்' என்னும் எழுவாய்க்குப் 'பிறப்பினுக்கம் வேறு வேறு இயல' என்பதனை ஒருசொன் னீர்மைப்படுத்திப் பயனிலையாக்குக.

(வி - ரை) 'நிறையுயிர் முயற்சியின்உள்வளி துரப்ப
எழும்அணுத் திரள்உரம் கண்டம் உச்சி
மூக்குற்(று) இதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே'
(எழுத்தியல்—19)

என நன்னூலாரும் இந்நூற்பாவைத் தழுவி உரைத்தல் காண்க. இவர் கூறிய அணுத்திரளைத் தொல்காப்பியனார் கூறிற்றிலர்.

84. அவ்வழிப்
பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.

இஃது, உயிரெழுத்திற்குப் பொதுப்பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அ வழி - அவ்விடத்து, பன்னீர் உயிரும் தம் நிலை திரியா - பன்னிரண்டு உயிரெழுத்தும் தத்தம் நிலையில் திரியா வாய், மிடற்று பிறந்த வளியின் இசைக்கும் - மிடற்றின்கட் பிறந்த வளியான் ஒலிக்கும் எ. று.

'தந்நிலை திரியா' என்றதனால், குற்றியலுகரம், குற்றியலிகரம் தந்நிலை திரியுமென்பது பெறப்பட்டது.

(வி – ரை) இந்நூற்பா, 100 - வது நூற்பா, அதன் உரை அனைத்தையும் தொகுத்தே நன்னூலார், 'அவ்வழி, ஆவி இடைமை இடம்மிட றுகும், மேவு மென்மைமூக்கு உரம் பெறும் வன்மை' (எழுத்-20) என்றனர். வல்லினம் தலையினிடமாய்ப் பிறக்கும் என்பர் இளம்பூரணர். நன்னூலார் நெஞ்சினிடமாகப் பிறக்கும் என்பர். (2)

85. அவற்றுள்
அ ஆ ஆயிரண் டங்காந் தியலும்.

இஃது, உயிரெழுத்துக்களுட் சிலவற்றிற்குச் சிறப்புப்பிறவி உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட உயிர் பன்னிரண் டினுள், அ ஆ ஆ இரண்டும் அங்காந்து இயலும் – அகர ஆகாரங் களாகிய அவ்விரண்டும் அங்காந்து சொல்ல அஃது இடமாகப் பிறக்கும் எ - று.

(வி-ரை) 'அவற்றுள், முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய' (எழுத் – 21) என்பர் நன்னூலாரும். (3)

86. இஈ எஏ ஐயென இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய.

இதுவும் அது.

இ - ள்: இ ஈ எ ஏ ஐ என இசைக்கும் அ பால் ஐந்தும் – இ ஈ எ ஏ ஐ என்று சொல்லப்படும் அக்கூற்று ஐந்தும், அவற்று ஓர் அன்ன - மேற்கூறிய அகர ஆகாரங்கள் போல அங்காந்து சொல்லப் பிறக்கும், அவைதாம் பல்அண் நாமுதல் விளிம்பு உறல் உடைய – அவைதாம் (அவ்வாறு சொல்லப் பிறக்கு மிடத்துப்) பல்லினது அணிய இடத்தினை நாவினது அடியின் விளிம்பு சென்று உறுதலை யுடைய எ. று.

(வி-ரை) 'இஈ எஏ ஐஅங் காப்போடு, அண்பல் முதல்நா விளிம்புற வருமே' என்பர் நன்னூலாரும். இ, ஈ, எ, ஒ என்பன நாவின் முன்னேக்கிய எழுச்சியால் பிறத்தலின் இவை முன் னண்ண உயிர் (Front vowles) என்பர் மொழிநூலார். (4)

87. உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும்.

இதுவும் அது.

இ-ள்: உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும் அ பால் ஐந்தும் - உ ஊ ஒ ஓ ஔ எனச் சொல்ல இசைக்கும் அக்கூற்று ஐந்தும், இதழ் குவிந்து இயலும் - இதழ் குவித்துச் சொல்ல நடக்கும் எ ' று.

(வி-ரை) 'உஊ ஒஓ ஔவிதழ் குவிவே' என்பர் நன் னூலாரும். இவை நாவின் பின்னேக்கிய எழுச்சியால் பிறத்தலின் பின்னண்ண உயிர் (Back vowles) என்பர் மொழிநூலார். இதழ் குவிதலால் பிறத்தலின் இவற்றை இதழ்குவுயுயிர் (Rounded vowles) என்றும் கூறுவர். (5)

88. தந்தந் திரிபே சிறிய வென்ப.

இது, முற்கூறிய உயிர்க்கும் மேற்கூறும் மெய்க்கும் ஒரு புறனடை கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தம்தம் திரிபு சிறிய என்ப - (எழுத்துக்கள் ஒரு தானத்துக் கூடிப் பிறக்கு மெனப்பட்டன; அவ்வாறு கூடிப் பிறப்பினும்,) தத்தம் வேறுபாடுகளைச் சிறிய வேறுபாடுகளென்று சொல்லுவர். அவ்வேறுபாடு அறிந்து கொள்க எ. று.

(வி-ரை) உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் இன் னின்ன இடத்துப் பிறக்கும் என ஆசிரியர் கூறியிருப்பினும், அவை எடுத்தல் படுத்தல் நலிதல்களால் சிறிது வேறுபடப் பிறத்தலும் உண்டு என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இந்நூற்பா முற்கூறிய உயிர்க்கும், பிற்கூறும் மெய்க்கும் புறனடையாக அமைந்திருத்தல் பற்றி நச்சினார்க்கினியர் இது சிங்க நோக்காகக் கிடந்தது என்பர். 'எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில், திரிபும் தத்தமிற் சிறிதுளவாகும்' (எழுத் - 33) என நன்னூலாரும் இந்நூற்பாவைத் தழுவி உரைத்தல் காண்க. (6)

89. ககார ஙகாரம் முதல்நா அண்ணம்.

இது, மெய்களுட் சிலவற்றிற்குப் பிறவி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ககாரம் ஙகாரம் நாமுதல் அண்ணம் (முதல்)— ககாரமும் ஙகாரமும் நாமுதலும் அண்ணமுதலும் உறப்பிறக்கும் எ.று. (7)

90. சகார ஞகாரம் இடைநா அண்ணம்.

இதுவும் அது.

இ-ள்: சகாரம் ஞகாரம் நாஇடை அண்ணம் (இடை)— சகாரமும் ஞகாரமும் நாவது இடையும் அண்ணத்தது இடையும் உறப் பிறக்கும் எ. று. (8)

91. டகார ணகாரம் நுனிநா அண்ணம்.

இதுவும் அது.

இ-ள்: டகாரம் ணகாரம் நாநுனி அண்ணம் (நுனி)- டகாரமும் ணகாரமும் நாவது நுனியும் அண்ணத்தது நுனியும் உறப் பிறக்கும் எ. று.

(வி-ரை) 89. 90, 91 ஆகிய மூன்று நூற்பாக்களையும் தொகுத்தே நன்னூலாரும், 'கஙவும் சஞவும் டணவும் முதலிடை, நுனிநா அண்ணம் உறமுறை வருமே' (எழுத்தியல்-24) என்றனர்.

டண இரண்டும் நுனிநாவும் நுனி அண்ணமும் உறப்பிறக்கும் என்றாரேனும், நாநுனி மடிக்கப்பட்டு அண்ணத்தைத் தொடு

தலாலேயே இவை பிறக்கின்றன என்பதைத் தெரிதல் வேண்டும். இது கருதியே ஆசிரியர் 'தத்தம் திரிபே சிறிய' என்றார். (9)

92. அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பின.

இது மேலனவற்றிற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அ ஆறு எழுத்தும் மூவகை பிறப்பின - மேற் கூறப் பட்ட ஆறு எழுத்தும் நிரனிறை வகையான் (அறுவகைப் பிறப்பின அல்ல) மூவகைப் பிறப்பின எ. று.

(வி – ரை) 89, 90, 91 ஆகிய மூன்று நூற்பாக்களுக்கும், ககாரம் முதல் நாவினும், ஙகாரம் முதல் அண்ணத்தினும், சகாரம் இடை நாவினும், ஞகாரம் இடையண்ணத்தினும், டகாரம் நுனி நாவினும், ணகாரம் நுனியண்ணத்தினும் பிறக்கும் என நிரனிறை வகையால் பொருள் கொள்ளினும் அமையுமாகலின், அங்ஙனம் கொள்ளலாகாது என்பதை விளக்கவே இந்நூற்பா வேண்டுவ தாயிற்று. இங்ஙனம் நிரனிறையாகப் பொருள் கொள்ளின் ஆறு எழுத்துக்களும் அறுவகைப் பிறப்பிடத்தன வாகின்றன. ஆனல் க, ங ஆகிய இரண்டுமே முதல் நாவும் முதல் அண்ணமும் உறப் பிறப்பன என்றும், சகார ஞகாரம் ஆகிய இரண்டுமே இடை நாவும் இடையண்ணமும் உறப்பிறப்பன என்றும், டகார ணகாரம் ஆகிய இரண்டுமே நுனிநாவும் நுனியண்ணமும் உறப்பிறப்பன என்றும் பொருள் கோடலின், எழுத்துக்கள் ஆறிருப்பினும், அவை பிறக்குமிடம் மூவகையே என விளக்க வேண்டுவதாயிற்று.

இதுபற்றியே 'இது மேலனவற்றிற்கு ஒரு புறனடை உணர்த் துதல் நுதலிற்று' எனக் கருத்துரை கூறினர் இளம்பூரணர். நச்சிஞர்க்கினியரும் இவ்வுரையையே தழுவுவர். (10)

93. அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்குந் தகார நகாரம்.

இதுவும் மெய்களிற் சிலவற்றிற்குப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அண்ணம் நண்ணிய பல் முதல் மருங்கின் — அண்ணத்தைப் பொருந்திய பல்லினது அணிய இடத்தின் கண்ணே, நாநுனி பரந்து மெய் உற ஒற்ற - நாவினது நுனி பரந்து வடிவை உறும்படி ஒற்ற, தாம் இனிது பிறக்கும் - தாம் இனிதாகப் பிறக்கும், தகாரம் நகாரம் - தகாரமும் நகாரமும் எ. று.

முன்னே 'உறுப்புற்றமைய' (83) என்று வைத்துப் பின்னும் 'மெய்யுற' என்றதனன், எல்லா எழுத்துக்களும் மெய்யுற்றபோதே இனிது பிறப்பதென்பது கொள்க.

(வி-ரை) முன்னர் 'உறுப்புற்றமைய' என்று கூறி ஈண்டு 'மெய்யுற ஒற்ற' என்ருர், சிறிது ஒற்றவும் வருடவும் பிறப்பன உளவாதலின் என உரைப்பர் நச்சிஞர்க்கினியர்.

லகர ளகரங்கள் சிறிது ஒற்றவும், ரகர ழகரங்கள் சிறிது வருடவும் பிறத்தல் காண்க.

'அண்பல் அடிநா முடியுறத் தநவரும்' (எழுத் - 25) என்பர் நன்னூலாரும். (11)

94. அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ-ள்: அணரி நுனிநா அண்ணம் ஒற்ற - அணர்ந்து நுனிநா அண்ணத்தை சென்று ஒற்ற, றஃகான் னஃகான் அ இரண்டும் பிறக்கும் - றகார னகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும் எ. று.

இங்குநின்றும் நெடுங்கணக்கு முறைமை விட்டு நா அதிகாரம் பட்டது கண்டு கூறுகின்றதென வுணர்க.

(வி-ரை) நெடுங்கணக்கு முறையில் தகர நகரத்தை அடுத்துப் பகர மகரமே கூறப்படுகின்றது. ஆதலின், சென்ற நூற்பாவில் தகர நகரத்தைக் கூறியவர் இந்நூற்பாவில் பகர மகரத்தைக்

கூறவேண்டும். அங்ஙனமின்றி ற, ன, ர, ழ, ல, ள ஆகியவற்றை இது முதலாக மூன்றுநூற்பாவில் கூறுகின்றார். அதற்குக் காரணம் மேலைய நூற்பாவில் கூறப்படும் தகர நகரங்கள் நாவினடியாகப் பிறப்பதைப் போன்றே ஈண்டுக் கூறப்படும் ற, ன முதலிய ஆறு எழுத்துக்களும் அந்நாவினடியாகப் பிறக்கும் இயைபு பற்றியேயாம். இது பற்றியே 'இங்கு நின்றும் நெடுங்கணக்கு முறைமை விட்டு நா அதிகாரம் பட்டது கண்டு கூறுகின்றது என உணர்க' என்றனர் உரையாசிரியர்.

அணரி - மேல் நோக்கிச் சென்று.

'அண்ணம் நுனிநா நனியுறிற் றனவரும்' (எழுத்தியல் - 31) என்பர் நன்னூலாரும். (12)

95. நுனிநா அணரி அண்ணம் வருட
[1]ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ - ள்: நுனிநா அணரி அண்ணம் வருட-நுனிநா அணர்ந்து அண்ணத்தைத் தடவ, ரகார ழகாரம் அ இரண்டும் பிறக்கும் - ரகார ழகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும் எ . று.

(வி – ரை) 'அண்ணம் நுனிநா வருட ரழவரும்' (எழுத்தியல் - 28) என்பர் நன்னூலாரும். (13)

96. நாவிளிம்பு வீங்கி யண்பல் முதலுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ – ள்: நா விளிம்பு வீங்கி பல் அண் முதல் உற - நாவினது விளிம்பு தடித்துப் பல்லினது அணிய இடத்தைப் பொருந்த, அ வயின் அண்ணம் ஒற்ற லகாரமும் வருட ளகாரமும் அ இரண்டும்

1. 'ரகாரம் ழகாரம்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

பிறக்கும் - அவ்விடத்து (முதல்நா) அவ்வண்ணத்தை ஒற்ற லகாரமும் அதனைத் தடவ ளகாரமுமாக அவ்விரண்டும் பிறக்கும் எ . று.

(வி - ரை) 'அண்பல் முதலும் அண்ணமும் முறையின், நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும், லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்' (எழுத்தியல் – 29) என்பர் நன்னூலாரும். (14)

97. இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்.

இதுவும் இது.

இ - ள்: இதழ் இயைந்து பிறக்கும் பகாரம் மகாரம் – கீழ் இதழும் மேல் இதழும் தம்மில் இயையப் பிறக்கும் பகாரமும் மகாரமும் எ . று.

(வி–ரை) 'மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும்' (எழுத்தியல் – 26) என்பர் நன்னூலாரும். (15)

98. பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்.

இதுவும் அது.

இ – ள்: பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும் - மேற்பல் லும் கீழ் இதழும் தம்மில் இயைய வகாரம் பிறக்கும் எ . று.

(வி–ரை) 'மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே' (எழுத்தியல் - 30) என்பர் நன்னூலாரும். (16)

99. அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்.

இதுவும் அது.

இ-ள்: அண்ணம் சேர்ந்த மிடற்று எழு வளிஇசை கண் உற்று அடைய யகாரம் பிறக்கும் - அண்ணத்தை நாச்சேர்ந்த

விடத்து மிடற்றினின்றும் எழும் வளியானுய இசை அவ்வண்ணத்தை அணைந்து செறிய யகாரம் பிறக்கும் எ . று.

(வி-ரை) 'அடிநா அடியணம் உறயத் தோன்றும்' (எழுத்தியல் – 27) என்பர் நன்னூலாரும். (17)

100. மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.

இது, மெல்லெழுத்திற்கு ஒரு புறனடை கூறுதல் நுதலிற்று.

இ - ள்: மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம் சொல்லிய பள்ளி நிலையின ஆயினும் – மெல்லெழுத்துக்களாறும் தத்தம் பிறப்பினது ஆக்கம் மேற்சொல்லப்பட்ட இடத்தே நிலை பெற்றன வாயினும், மூக்கின் வளி இசை யாப்புற தோன்றும் – அவை மூக்கின்கண் ணுளதாகிய வளியது இசையான் யாப்புறத் தோன்றும் எ . று.

' யாப்புற ' என்றதனுன், இடையெழுத்திற்கு மிடற்றுவளியும், வல்லெழுத்திற்குத் தலைவளியும் கொள்க. (18)

101. சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றும்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியின் தம்மியல் பியலும்

இது, சார்பில் தோற்றத்து எழுத்திற்குப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்பு இல என தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும் – சிலவற்றைச் சார்ந்து வரின் அல்லது தமக்குத்தாமே வரும் இயல்பு இலவென்று ஆராய்ந்து வெளிப்படுத்தப்பட்ட ஒழிந்த மூன்றும், தம்தம்

சார்பின் பிறப்பொடு சிவணி ஒத்த காட்சியில் தம் இயல்பு இயலும் – தத்தமக்குச் சார்பாகிய எழுத்துக்களது பிறப்பிடத்தே பிறத்தலொடு பொருந்தி அவ்விடத்தே தமக்குரிய இயல்பில் நடக்கும் எ. று.

'ஒத்தகாட்சி' என்றதனுன், ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச் சார்பேயெனினும் தலை வளியாற் பிறத்தலின், உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்குமென்பது கொள்க. 'தம்மியல் பியலும்' என்றதனுன், அளபெடையும் உயிர்மெய்யும் தமக்கு அடியாகிய எழுத்துக்களது பிறப்பிடமே இடமாக வருமென்பது கொள்க.

(வி–ரை) இந்நூற்பாவையும் இவ்வுரையையும் தழுவியே நன்னூலாரும்,

'ஆய்தக் கிடந்தலை அங்கா முயற்சி
சார்பெழுத் தேனவும் தம்முத லனைய' (எழுத்தியல்–32)

என்றனர்: எனினும், தலைவளியால் பிறக்கும் எழுத்துக்கள் எவையும் இல்லை என்பது இக்காலத்து ஆய்வாளர் கருத்தாகும்.

102 [1]எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்(து)
அகத்தெழு வளியிசை யரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே.

இஃது எல்லா எழுத்திற்கும் ஆவதொரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: எல்லா எழுத்தும் – எல்லா எழுத்துக்களும், வெளிப்படக் கிளந்து சொல்லிய பள்ளி – வெளிப்பட விதந்து சொல்லப்பட்ட இடத்தின்கண்ணே, எழுதரு வளியின் – எழுகின்ற வளியானே,

1. இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் நச்சினார்க்கினியர்.

பிறப்பொடு விடுவழி – தாம் பிறக்குந் தொழிலுடைய வாதலொடு தம்மைச் சொல்லும் இடத்து, உறழ்ச்சி வாரத்து அகத்து எழுவளி இசை - திரிதருங் கூற்றையுடைய உள்நின்று எழும் வளியானுய இசையை, அரில் தப நாடி - பிணக்கமற ஆராய்ந்து, அளபின் கோடல் – மாத்திரை வரையறையாற் கோடல், அந்தணர் மறைத்து - பார்ப்பார் வேதத்துக் கண்ணது எ. று.

'உறழ்ச்சி வாரம்' என்றது, உந்திமுதலா எழும் வளி தலை காறும் சென்று மீண்டு நெஞ்சின்கண் நிலைபெறுதலை எனக் கொள்க. 'வளி' என்னுது 'வளியிசை' என்றது, அவ்வாறு நெஞ்சின்கண் நிலைபெறும் அளபும் வளி எனப்படுவது பின்னை நெஞ்சினின்றும் எழுவுழியெல்லாம் வளித்தன்மை [1]திரிந்து எழுத்தாம் தன்மையதாம் என்பது விளக்கி நின்றது.

(வி – ரை) உறழ்ச்சி – உள் எழும் காற்று மேலும் கீழுமாய்த் திரிதல். வாரம் - கூறு; தன்மை.

அளபிற் கோடல் – மாத்திரை கூறல் என உரை கண்டனர் இளம்பூரணரும் நச்சினுர்க்கினியரும். எனினும் அளபு என்பதற்குந் தன்மை எனப்பொருள் காணின் சிறப்பாக இருக்கும். (20)

103. அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை [2]அளபுநுவன் றிசினே.

இது மேற்சூத்திரத்திற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அஃது இவண் நுவலாது – ('அகத்தெழு வளியிசை அளபிற் கோடலாகிய') அதனை இந்நூலிடத்துச் சொல்லாது எழுந்து புறத்து இசைக்கும் - (அகத்தினின்று) எழுந்து புறத்துப் போந்து இசைக்கும், மெய் தெரி வளி இசை அளபு - பொருண்மை தெரிகின்ற வளியானுய இசையது மாத்திரையினை, நுவன்றிசின்— யான் ஈண்டுக் கூறினேன் எ. று.

---

1. 'சார்ந்து' என்பதும் பாடம்.

2. 'அளவு' எனப் பாடங்கொள்வர் நச்சினுர்க்கினியர்.

மற்று, இஃது 'அளபிற் கோட லந்தணர் மறைத்து' (பிறப்பியல் - 20) எனவே பெறப்பட்டதன்றேவெனின், 'அந்தணர் மறைத்து' என்பது பிறன்கோட் கூறுதற்கும், பிறன்கோட் கூற்று நேர்ந்து உடம்படுதற்கும் ஒப்பக்கிடந்தமையின் அவ்வையம் தீர்தற்குக் கூறினுரென்பது. புறத்து இசைப்பதன் முன்னர், அகத்து இசைக்கும் வளி இசையை அம்மறைக்கண் ஓர் எழுத்திற்கு மூன்று நிலை உளதாகக் கூறும் (அதன் ஆசிரியன்) ; அஃது ஆமாறு அறிந்துகொள்க.

'மெய்தெரி' என்றதனுன், மூற்கு முதலியன முயற்சியாற் பிறக்குமெனினும், பொருள் தெரியா நிலைமைய வாகலின் அவற்றிற்கு அளபு கூருராயினுரென்பது பெறப்பட்டது.

'நுவன்றிசின்' என்பது ஈண்டு இறந்தகாலத் தன்மை வினை.

(வி - ரை) அகத்தின்கண் உண்டாம் எழுத்துக்களின் நிலை மூவகைப்படும் எனவும், அவை பரை, பைசந்தி, மத்திமை எனவும், பரை நிலையில் எழுத்துக்கள் எல்லாம் ஒரே தன்மையவாய் இருக்கும் எனவும், அஃது மூலாதாரத்தில் நிகழும் எனவும், பைசந்தி உந்தியில் தோன்றுமெனவும், அது யோகிகளுக்கே புலப்படும் எனவும், மத்திமை நெஞ்சில் தோன்று மெனவும் வடமொழி யிலக்கணங்கள் கூறும்.

அந்நிலையினைக்கூருது, உந்தியில் தோன்றி வரும் காற்றுத் தலை, மிடறு, நெஞ்சு ஆகிய இடங்களில் நிலைபெற்றுப், புறத்து வந்து பொருளுணர்ச்சி தரும் எழுத்துக்களாக வருவனவற்றையே ஈண்டுக் கூறினுர் தொல்காப்பியர்.

உள்ளத்தின் கண்ணே எழும்வளியின் நிலைமை அந்தணர் மறையில் கூறப்பட்டுள்ளது என்பதே முன்னைய நூற்பாவின் பொருளாகும். இங்ஙனம் கூறின் அக்கருத்துப் பிறன்கோள் கோடலாக மட்டும் கூறப்பட்டதா? அன்றித் தமக்கும் உடன் பாடாதல்பற்றிக் கூறப்பட்டதா? என்ற ஐயம் எழும்.

இந்நூற்பாவில் அந்தணர் மறைக்கண்ணுள்ள கருத்து ஈண்டுக் கூறப்படவில்லை, உள்நின்று எழும் காற்றுப் புறத்தே தோன்றிச் செவிப்புலனாகக் கேட்கப்படும் எழுத்தாம் தன்மை பெறும் நிலைமையே கூறப்படும் எனக் கூறுவதன் மூலம் அவ்வையம் அகற்றியதாயிற்று. எனவே முன்னைய நூற்பாவில் கூறப்பட்ட கருத்து பிறன் கோட் கூறலாகவே கூறப்பட்டது என்பது இதனால் விளங்கும். (21)

பிறப்பியல் முற்றிற்று.

5

புணரியல்

பொருளமைப்பு

இதுகாறும் எழுத்துக்களையும் அவற்றின் பிறப்பிடத்தையும் பற்றி உணர்த்திய ஆசிரியர், இனி அவ்வெழுத்துக்கள் கூடிய மொழிகள் புணருமாறு கூறுகின்றாராதலின், இது மேலதனோடு இயைபுடைத்தாயிற்று. மொழிமரபில் கூறப்படும் மூவகை மொழிகளும் தம்முட் புணருமாறு கூறுகின்றாராதலின் இது 'புணரியல்' எனப் பெயர் பெற்றது.

இவ்வியலில் கூறப்படும் செய்திகளை ஆறு வகையாகப் பிரிக்கலாம். அவை 1. மொழிமரபின் ஒழிபு, 2. மொழி புணர் இயல்பு, 3. வேற்றுமைப்புணர்ச்சி, 4. சாரியைகளும் அவற்றின் திரிபுகளும், 5. எழுத்துச் சாரியைகள், 6. எழுத்தோரன்ன பொருள் தெரிபுணர்ச்சி என்பன.

1. மொழிமரபின் ஒழிபு :

மொழி முதலாகும் எழுத்துக்கள் இருபத்திரண்டு என்றும், மொழிக்கு ஈறாகும் எழுத்துக்கள் இருபத்துநான்கு என்றும் கூறப் பட்டன வேனும், அவையெல்லாம் முற்கூறிய முப்பத்துமூன்று எழுத்துக்களில் அடங்கிவிடும். இவையும் மெய், உயிர் என்ற இரண்டில் அடங்கும். இவை புணர்மொழி யகத்து மெய் முதல்,

மெய்யீறு, உயிர்முதல், உயிரீறு என நான்கு வகையாகப் பிரிக்கப்படும். இவற்றுள் மெய்யெழுத்துக்கள் எல்லாம் புள்ளி பெற்று நிற்கும். இவை வருமொழியில் உயிர்வரின் தன்னியல்பு கெட்டு அவ்வுயிரோடு புணரும். குற்றியலுகரமும் மெய்யீறு போல உயிரேற இடங்கொடுக்கும். மொழியிறுதியிலும் இடையிலும் வரும் உயிர் மெய்யெழுத்துக்களை உயிரீறாகவே கொள்ள வேண்டும். உயிர் மெய்யெழுத்துக்களில் உயிர் நீங்கின் மீண்டும் தன்னுருவோடு புள்ளி பெற்றே நிற்கும். உயிரீற்றின் முன் உயிர் முதல் வரின் உயிரோடு உயிர்க்கு மயக்கமின்மையின் புணர்ச்சியின்றி விட்டிசைக்கும், அங்ஙனம் உடம்படாத அவ்வீருயிரையும் உடம்படுத்தற்கு ஆண்டு யாதானும் ஒரு மெய்யெழுத்து வரும். அதனை 'உடம்படு மெய்' என்பர்.

2. மொழிபுணர் இயல்பு :

சொற்கள் புணருங்கால் பெயரொடு பெயரும், பெயரொடு வினையும், வினையொடு வினையும், வினையொடு பெயருமாகப் புணரும். இங்ஙனம் சொற்கள் நிற்பினும் அச்சொற்களுக்குரிய எழுத்துக்களே புணர்தற்குரியவாய் நிற்கும். அவை உயிர் முதல் உயிரீறு, உயிர்முதல் மெய்யீறு, மெய்முதல் உயிரீறு, மெய்முதல் மெய்யீறு என நான்கு வகையாகப்பிரிக்கப்படும். நிலைமொழியை நிறுத்த சொல்லென்றும், வருமொழியைக் குறித்து வருகிளவி யென்றும் கூறுவர். இச்சொற்கள் புணருங்கால் இடையில் எழுத்துக்கள் தோன்றலும், திரிதலும், கெடுதலுமாகிய விகாரங்களைப் பெறும். இம்முறையில் வருவனவற்றை 'விகாரப்புணர்ச்சி' என்பர். இவ்விகாரங்களின்றி இயல்பாகப் புணர்வனவற்றை 'இயல்புப் புணர்ச்சி' என்பர். நிலைமொழிகளும் வருமொழிகளும் தாமே தனித்து நின்று புணர்தலும் உண்டு. அடைமொழிகளுடன் நின்று புணர்தலும் உண்டு. இவை வேற்றுமைப் பொருளிலோ அல்லது அல்வழிப் பொருளிலோ புணரும்பொழுது இடையில் எழுத்துக்கள் தோன்றுதலும் உண்டு; சாரியைகள் தோன்றுதலும் உண்டு. இலக்கண வழக்கேயன்றி, இலக்கணத்தொடு பொருந்திய மரூஉச் சொற்களும் புணர்தற்குரியனவே யாகும்.

3. வேற்றுமைப் புணர்ச்சி :

ஐ முதலிய ஆறு உருபுகளும் தொக்கும் விரிந்தும் நிற்ப, அவற்ருேடு நிலைமொழிகள் புணரும் புணர்ச்சி 'வேற்றுமைப் புணர்ச்சி' ஆகும், இவ்வுருபுகள் பெயருக்குப் பின்னே நின்று புணரும். அப்பெயர்கள் உயர்திணைப் பெயராகவோ, அஃறிணைப் பெயராகவோ, விரவுப் பெயராகவோ இருக்கும். இவ்வாறுருபு களுள் வல்லெழுத்து உருபாகிய கு, கண் ஆகிய இரண்டும் வரின் இடையில் வல்லெழுத்துக்களோ அன்றி மெல்லெழுத்துக்களோ தோன்றும். நெடுமுதல் குறுகும் மொழிகள் அகரம் பெற்று நிற்க, வருமொழியில் அதுவென்னுருபுவரின் அவ்வுருபு அகரம் கெடும். பெயர்களின் பின்ருக இவ்வுருபுகளோ அன்றிப் பிற பெயர்களோ வரும்பொழுது இடையில் சாரியைகள் வரும்.

4. சாரியைகளும் அவற்றின் திரிபுகளும் :

வேருகி நின்ற இருமொழிகளும் தம்மில் சார்தற்பொருட்டு இயைந்து நிற்கும் எழுத்துக்களைச் சாரியை என்பர். இவை சார்ந்துவரும் மொழிப்பொருட்கு உபகாரமாய் நிற்கும். இச் சாரியைகள் பெயரும் வினையும் பிரிந்திசைப்பவும், அவை ஒருங் கிசைப்பவும், வேற்றுமையுருபுகள் விரிந்தவழியும், அன்றித் தொக்க வழியும் தாம் பொருந்துதற்கேற்ற சொற்களிடத்து வரும் அச்சாரியைகள் புணர்மொழியின் இடையிலேயே பெரும்பான்மை யும் வரும். சிறுபான்மை தனி மொழியிடத்தும் வரும். மூன்ரும் வேற்றுமையாகிய ஒடு உருபு அச்சாரியையைப் பெற்றும் வரும்; அன்றிப் பெருதும் வரும். இங்ஙனம் வரும் சாரியைகளாவன—: இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் என்பனவும் பிறவுமாம்.

இன் : ஆ என்னும் சொல்லின் முன் இன் என்பதுவரின் இகரம் கெட்டு னகரமெய்மட்டும் நிற்பதும் உண்டு; னகரம் கெட்டு இகரஉயிர் மட்டும் நிற்பதும் உண்டு. னகரம் றகரமாய்த் திரிதலும் உண்டு.

வற்று : இது சுட்டெழுத்தை முதலாகவுடைய ஐகார ஈற்றுச் சொல் முன்வரின் அற்றாய்த் திரியும்.

அத்து : இது அகர ஈற்றுச் சொல்முன் வரின் அகரம் கெட்டு நிற்கும்.

அத்து, வற்று : இவற்றைப் பெறும் சொற்கள் வருமொழியில் வல்லெழுத்துவர இறுதியொற்றுக் கெடும். இச்சாரியைகளின் பின்னர் வந்த வல்லொற்று மிகும்.

அம் : நிலைமொழி ஈற்றில் அம் நிற்ப. வருமொழியில் க, ச, த வரின் முறையே ங, ஞ, ந வாகத் திரியும். மெல்லினமும் இடையினமும் வருமொழியாய் வரின் அம்மின் இறுதி மகரம் கெடும்.

இன், ஒன், ஆன், அன் : இவை நான்கனுருபு வருவழி றகரமாய்த் திரியும். ஐந்தனுருபு வருமேல் இன் என்னும் சாரியை முழுவதுமே கெடும்.

அக்கு : இது நிலைமொழியில் எவ்வகையான பெயர்ச்சொல் நிற்பினும் வருமொழியில் வல்லெழுத்து வருவழி, அகரம் மட்டுமே நிற்கும்; ஏனைய கெடும்.

இக்கு : இது இகர ஐகார ஈற்றுச் சொற்களின் முன் வரின் இகரம் கெட்டு நிற்கும்.

5. எழுத்துச் சாரியைகள் :

காரம், கரம், கான் ஆகியவை எழுத்துச் சாரியைகளாகும். இம்மூன்று சாரியைகளையும் குற்றெழுத்துக்கள் பெற்று வரும். காரச்சாரியையை நெட்டெழுத்துக்கள் பெற்று வரும். கான்சாரியை ஐ, ஔ ஆகிய இரண்டும் பெற்றுவரும்.

6. எழுத்தோரன்ன பொருள்தெரி புணர்ச்சி :

எழுத்தினது இயல்பு வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்கும் தொடர்மொழிகள் பலவுள.

அவை எடுத்தல், படுத்தல் முதலிய ஓசை வேறுபாட்டாலேயே பொருளுணரப்படும். இவை சொல்லுவான் குறிப்பின்வழி நின்று பிரித்துப் பொருளுணர நிற்றலின், நிலைமொழியும் வருமொழியும் வைத்துப் புணர்க்கப்படா என்பதாம்.

புணரியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மொழிகள், (மேற் செய்கை யோத்துக்களுள்) புணர்தற்குரிய கருவியின் இயல்பு கூறினமையின் புணரியல் எனப்பட்டது. மேல் மொழி மரபிற் கூறிய மொழிகள் புணருமாறு உணர்த்தினமையின் மொழி மரபினேடு இயைபுடைத் தாயிற்று.

104. மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலா கிருபஃது
[1]அறுநான் கீறொடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே யுயிரென்று ஆயீ ரியல.

இத்தலைச் சூத்திரம் என்நுதலிற்றோ வெனின், மொழி மரபினுள் முதலும் ஈறும் கூறியவழி உயிரும் மெய்யும் உயிர் மெய்யும் என மூன்றாய் விரிந்து நின்றதனை உயிரும் மெய்யும் என இரண்டாகத் தொகுத்தலானும், அவ்வழி இருபத்திரண்டு எழுத்து மொழிக்கு முதல், இருபத்துநான்கு எழுத்து மொழிக்கு ஈறு எனக் கூறலின், முப்பத்து மூன்று எனப்பட்ட எழுத்து நாற் பத்தாறு ஆவனபோல் விரிந்ததனை அவையெல்லாம் முப்பத்து மூன்றினுள்ளனவே எனத் தொகுத்தலானும், விரிந்தது தொகுத்தல் நுதலிற்று.

இ-ள் : மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின் - மூன்றனை முடிவிலே யிடப்பட்ட முப்பதாகிய எழுத்தினுள், இரண்டு தலை யிட்ட முதல் ஆகு இருபஃது - அவ்விரண்டினை முடிவிலே யிடப் பட்ட மொழிக்கு முதலாய இருபதும், அறு நான்கு ஈறொடு நெறி

1. 'அறுநான் கீற்றொடு' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

நின்று இயலும் - இருபத்து நான்கு ஈற்றோடு வழக்கு நெறிக்கண் நின்று நடக்கும், எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும் - மூவகை மொழிக்கும் ஈறும் முதலுமாவன, மெய் உயிர் என்று அ ஈர் இயல - மெய்யும் உயிருமாகிய அவ்விரண்டு இயல்பினை யுடைய எ. று.

எ - டு: மரம், இலை, ஆல், விள என மெய்யும் உயிரும் முதலும் ஈறும் ஆயின.

இருபத்திரண்டு எழுத்து முதலாவன பன்னிரண்டு உயிரும் ஒன்பது உயிர்மெய்யும் மொழிமுதற் குற்றியலுகரமும் என இவை. இருபத்து நான்கு எழுத்து ஈறுவன பன்னிரண்டு உயிரும் பதினொரு புள்ளியும் ஈற்றுக் குற்றியலுகரமும் என இவை.

'ஈற்றொடு' என்பது விகாரத்தால் தொக்கது. மெய் முதற் கூறியவதனால், நால்வகைப் புணர்ச்சியும் மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழாதென்பது கொள்க. (1)

105. அவற்றுள்
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்.

இது, மேற்கூறியவாற்றான் தனிமெய்யும் முதலாவான் சென்ற தனை விலக்கலின், எய்தியது விலக்கல் நுதலிற்று.

இ - ள்: அவற்றுள் - மேல் மெய்யும் உயிரும் என்று கூறிய இரண்டினுள், ஈறு மெய்யெல்லாம் புள்ளியொடு நிலையல் - மொழிக்கு ஈறாய மெய்யெல்லாம் புள்ளி பெறுதலோடு நிற்கும்; முதலாயவை யெல்லாம் புள்ளியிழந்து நிற்கும் எ. று.

எ - டு: மரம் என வரும்.

'மொழிமுதல் மெய் புள்ளியொடு நில்லாது' என்னாது, 'ஈறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என ஈற்றின்மேல் வைத்துக் கூறிய வதனான், அவ்வீற்றின் மெய் உயிர் முதன்மொழி வந்த இடத்து அஃது ஏற இடங்கொடுக்குமென்பது பெறப்பட்டது.

(வி - ரை) மேல் நூன்மரபில் 'மெய்யி னியற்கை புள்ளி யொடு நிலையல்' என்ருர், ஈண்டும் 'அவற்றுள், மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' எனக் கூறுவதற்குரிய காரணத்தை நச்சிஞர்க்கினியர் விளக்குவர்.

நூன்மரபில், மெய்களின் இயல்பு புள்ளிபெற்று நிற்றல் என்பதையே கூறினர். ஈண்டுப் புணர்ச்சி உயிர்முதல் உயிரீறு, உயிர்முதல் மெய்யீறு, மெய்முதல் மெய்யீறு, மெய்முதல் உயிரீறு என நான்கு வகைப்படும் எனக் கூறுகின்ருர். அங்ஙனம் கூறுகின்றபொழுது மெய் மொழிக்கு முதலில் வரும்பொழுதும், புள்ளிபெற்று வருமோ? என்ற ஐயம் உண்டாகின்றது. அதனை நீக்கி, ஈற்றில் வரும் மெய்யே புள்ளி பெற்று நிற்பதன்றி, மொழிக்கு முதலில் வரும் மெய்யெழுத்துப் புள்ளிபெற்று நிற்காது என்பதை விளக்க ஈண்டுக் கூறினர். ஆதலின் இது கூறியது கூறலன்ரும் என்பது அவர்தரும் விளக்கமாகும்.

'ஈறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என ஈற்றின் மேல் வைத்துக் கூறியதற்குத் தரும் விளக்கம், மேல்

'புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே'
(புணரியல் – 36)

என்னும் நூற்பாவால் பெறப்படுதலின், ஈண்டுக் கூறல் வேண்டு வதன்ரும். நச்சிஞர்க்கினியரும் இளம்பூரணர் தரும் விளக்கமே கூறுவர். (2)

106. குற்றிய லுகரமும் அற்றென மொழிப.

இஃது, ஈற்றிற் குற்றியலுகரத்திற்கு ஒரு கருவி கூறுதல் நுதலிற்று.

இ – ள்: குற்றியலுகரமும் அற்று என மொழிப - ஈற்றிற் குற்றியலுகரமும் (புள்ளி யீறுபோல உயிரேற இடம் கொடுக்கும்) அத்தன்மைத்து என்று சொல்லுவர் எ. று.

இம்மாட்டேறு ஒருபுடைச்சேறல் எனவுணர்க.

(வி – ரை) இந்நூற்பாவிற்கு, ஈற்றுக் குற்றியலுகரமும் மெய் யீற்றைப் போலப் புள்ளி பெற்று நிற்கும் என்பதே பொருந்திய உரையாகும். என்னை? ‘அற்று’ என்னும் மாட்டேறு அதற்கு முன்னுள்ள நூற்பாவைத் தழுவுதலே இயற்கையன்றிப் பின்னருள்ள இவ்வியல் 36-ஆம் நூற்பாவைத் தழுவுதல் பொருந்தாமையானும், மேல் ‘எகர ஒகரத் தியற்கையும் அற்றே’ என்ற மாட்டேற்றிற்கு அதற்கு முன்னருள்ள ‘மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்’ என்ற நூற்பாவைக் கோடல் போல, ஈண்டும் முன்னருள்ள நூற்பாவை இம்மாட்டேற்றிற்கு உரித்தாகக் கோடலே பொருந்துவ தாகலானும், குற்றியலுகரமும் புள்ளியீறு போல உயிரேற இடங் கொடுக்கும் என்ற கருத்தைப் ‘புள்ளியீற்றுமுன்’ (மொழி - 35) என்ற நூற்பாவில் கோடலின், ஈண்டும் அதனைக் கூறல் மிகை படக் கூறலாய் முடிதலானும், இளம்பூரணர் கூறும் கருத்துப் பொருந்தாது.

பேராசிரியர் ‘ஒற்றெழுத் தியற்றே குற்றியலுகரம்’ என்னும் செய்யுளியல் நூற்பாவின் உரையில், ‘எழுத்தோத்தினுள் மெய் யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்’ எனக்கூறி, ‘குற்றியலுகரமும் அற்றென மொழிப’ எனக் குற்றுகரத்திற்குப் புள்ளி பெறுதலும் கூறினர் எனக் கூறியிருப்பதும்; சங்கர நமச்சிவாயர் நன்னூல் 164-ஆம் நூற்பா உரையில் இவரை மறுத்திருப்பதும்; சிவஞான முனிவர் ‘குற்றிய லுகரமும் அற்றென மொழிப’ என்னும் நூற்பாவில் குற்றியலுகரமும் புள்ளி பெற்று நிற்கும் எனக் குற்றுகரத்தோடு இதனிடை வரிவடிவினும் வேற்றுமை தோன்றக் கூறினர்’ என்றுரைத்திருப்பதும் இதனை வலியுறுத்துவதாகும்.

குற்றியலுகர ஈற்று மொழிக்குமுன் உயிர்வரின், ஆண்டுக் குற்றியலுகரம் கெடாதே உயிர் ஏறிமுடியும் என்றனர் நச்சினார்க் கினியர். ஆனல் நன்னூலார் ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்’ (உயிரீற்றுப் - 14) என்பர்.

நிலைமொழி யிறுதியில் குற்றியலுகரம் நிற்ப, வருமொழி முதலில் உயிர்வரின் நிலைமொழி யிறுதியிலுள்ள குற்றுகரம் கெட,

நின்ற மெய்யுடன் உயிர் ஏறி ஒலிக்கும். நிலைமொழி யிறுதியில் மெய்யீறு நிற்ப வருமொழி முதலில் உயிர்வரின் யாதொரு கேடும் இன்றி மெய்யும் உயிரும் ஒருங்கு ஒலிக்கும். இவ்விருவகைப் புணர்ச்சியிலும் மெய்யுடன் உயிர் ஏறி முடிதல் ஒத்துள்ளது. குற்றியலுகரப் புணர்ச்சியில் உயிர் கெடுவதும் மெய்யீற்றுப் புணர்ச்சியில் நின்றவாறே உயிர் ஏறி முடிவதும் வேற்றுமையாகத் தெரிகிறது. ஆதலின், இளம்பூரணர் இம்மாட்டேற்றினை ஒரு புடைச்சேறல் என்றார். (3)

107. உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே.

இது, மேல் 'மெய்யே யுயிரென் றாயீ ரியல' (புணரியல் – 1) என்றதற்கு ஒரு புறனடை கூறுதல் நுதலிற்று.

இ-ள் : உயிர்மெய் ஈறும் உயிர் ஈற்று இயற்று - உயிர்மெய் மொழியீற்றில் நின்றதுவும் உயிரீற்றின் இயல்பை யுடைத்து, இடையில் நின்றதுவும் உயிரின் இயல்பை யுடைத்து எ. று.

ஈறும் இடையும் உயிருள் அடங்குமெனவே, முதல் மெய்யுள் அடங்கும் என்பதாயிற்று.

இதனால், விள முதலிய உயிர்மெய் ஈறெல்லாம் அகரவீறு முதலிய உயிரீற்றுள் அடங்கிப் புணர்ச்சிபெறுவன வாயின. வரகு என்புழி இடைநின்ற ரகரஉயிர்மெய் அகரமாய் உயிர்த் தொடர் மொழி யெனப்பட்டது,

ஈண்டு உயிர்மெய் ஒற்றுமை நயத்தான் உயிர்மெய்யென வேறு ஓர் எழுத்தாவதன்றி, ஈறும் இடையும் உயிரென ஓரெழுத்தாயும், முதல் மெய்யென ஓரெழுத்தாயும் நின்றதாயிற்று.

இத்துணையும் ஒருமொழி யிலக்கணங் கூறலின் மொழிமரபின் ஒழிபாயிற்று.

(வி - ரை) மொழிமுதற்கண் வரும் உயிர்மெய் யெழுத்துக் களை மெய்யீருகவும், இடையிலும் இறுதியிலும் வரும் உயிர்மெய் யெழுத்துக்களை உயிரீருகவும் கருதுக என்பது இந்நூற்பாவின் கருத்தாகும், (4)

108. உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்
உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியுமென்(று)
இவ்வென அறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்(று)
ஆயீ ரியல புணர்நிலைச் சுட்டே.

இது, மேற்கூறும் புணர்ச்சி மும்மொழிப் புணர்ச்சியாகாது இருமொழிப்புணர்ச்சி யாமென்பதூஉம், அவை எழுத்துவகையான் நான்காமென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: உயிர் இறு சொல்முன் உயிர்வரு வழியும் — உயிரீற்றுச் சொல்முன் உயிர்முதல்மொழி வரும் இடமும், உயிர் இறு சொல்முன் மெய் வரு வழியும் — உயிரீற்றுச் சொல்முன் மெய்ம்முதல் மொழி வரும் இடமும், மெய் இறு சொல்முன் உயிர்வரு வழியும் - மெய்யீற்றுச் சொல்முன் உயிர்முதல் மொழி வரும் இடமும், மெய் இறு சொல்முன் மெய் வரு வழியும் - மெய் யீற்றுச் சொல்முன் மெய்ம்முதல் மொழி வரும் இடமும், இவ் என அறிய - (என்று அப்புணர்ச்சிவகை) இவையென அறிய, கிளக்கும் காலை - ஆசிரியர் சொல்லுங்காலத்து, நிறுத்த சொல் குறித்து வரு கிளவி என்று அ ஈர் இயல - அவை நிறுத்த சொல்லும் அதன் பொருண்மையைக் குறித்துவரும் சொல்லுமாகிய அவ்விரண்டு இயல்பையுடைய, புணர் நிலைச் சுட்டு - புணரும் நிலைமைக்கண் எ. று.

எ-டு: ஆ ஈ, ஆ வலிது, ஆல் இலை, ஆல் வீழ்ந்தது எனக் கண்டு கொள்க.

விளவினைக் குறைத்தான் என்பது அவ்வுருபு குறித்துவரு கிள வியை நிலைமொழியுள் அடக்கி இருமொழிப்புணர்ச்சியாய் நின்ற வாறு அறிக.

(வி-ரை) ஆ ஈ — ஆவினைக்கோடு என்னும் பொருளது. உயிரிறு சொல்முன் உயிர் வந்தது. விளவினைக் குறைத்தான்

என்பதில் உள்ள இன்சாரியையும் ஐயுருபையும் பிரித்து ஒரு சொல்லாக்காது நிலைமொழியுள் அடக்குக என்பதாம்.

மேல் (104) 'மெய்யே உயிர்' என்றது நிலை மொழிக்கு; இஃது இருமொழிக்கென்று உணர்க. (5)

109. அவற்றுள்
நிறுத்த சொல்லின் ஈறு கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே.

இது, மேற்கூறும் புணர்ச்சி புணர்ச்சிவகையான் நான்கா மென்பதூஉம், அவை சொல்வகையான் நான்காமென்பதூஉம், புணர்வது சொல்லும் சொல்லுமேயன்று, எழுத்தும் எழுத்தும் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : அவற்றுள் - நிலைமொழி வருமொழியெனப் பட்டவற்றுள், நிறுத்த சொல்லின் ஈறு ஆகு எழுத்தொடு குறித்து வரு கிளவி முதல் எழுத்து இயைய - நிறுத்த சொல்லினது ஈருகின்ற எழுத்தினோடு அதனைக்குறித்து வருகின்ற சொல்லினது முதலெழுத்துப் பொருந்த, பெயரொடு பெயரை புணர்க்கும் காலும் - பெயர்ச் சொல்லொடு பெயர்ச் சொல்லைப் புணர்க்கும் காலத்தும், பெயரொடு தொழிலை புணர்க்கும் காலும் - பெயர் சொல்லொடு வினைச் சொல்லைப் புணர்க்கும் காலத்தும், தொழிலொடு பெயரை புணர்க்கும் காலும்-வினைச் சொல்லொடு பெயர்ச்சொல்லைப் புணர்க்கும் காலத்தும், தொழிலொடு தொழிலைப் புணர்க்கும் காலும் - வினைச் சொல்லொடு வினைச்சொல்லைப் புணர்க்கும் காலத்தும், திரிபு மூன்று இயல்பு ஒன்று என அ நான்கே மொழிபுணர் இயல்பு - திரியும் இடம் மூன்றும் இயல்பு ஒன்றும் ஆகிய அந் நான்கே மொழிகள் தம்மிற் புணரும் இயல்பு எ. று.

எ - டு : சாத்தன் கை, சாத்தன் உண்டான், வந்தான் சாத்தன், வந்தான் போயினான் எனக் கண்டு கொள்க,

இடையும் உரியும் பெயர் வினைகளை அடைந்தல்லது தாமாக நில்லாமையின், பெயர் வினைகட்கே புணர்ச்சி கூறப்பட்டது. (6)

110. அவைதாம்
மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்று
இவ்வென மொழிப திரியு மாறே.

இது, மேற்கூறிய திரிபுமூன்றும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : அவைதாம் - அத் திரிபுதான், மெய்பிறிது ஆதல் மிகுதல் குன்றல் என்று இவ் என மொழிப திரியும் ஆறு - மெய் பிறிதாதலும் மிகுதலும் குன்றலுமாகிய இவை எனச் சொல்லுவர் திரியும் நெறியினை எ. று.

இம்மூன்றும் அல்லாதது இயல்பென்று கொள்க.

எ-டு: பொற்குடம், யானைக்கோடு, மரவேர் எனவரும்.

குவளை மலர் என்பது இயல்பு.

இப்புணர்ச்சி மூன்றும் ஒரு புணர்ச்சிக்கண்ணே நிகழ்வு பெறு மென்பது உரையிற்கொள்க.

மேல் [1]'இடம்' (புணரியல்-6) என்றதனால், திரிபு மூன்றனுள் யாதாயினும் ஒன்றாயினும், ஒரு புணர்ச்சிக்கு இரண்டும் மூன்றும் ஒருங்கு வரப்பெறும் எனக்கொள்க.

எ - டு: 'மகத்தாற் கொண்டான்' என்பது அம்மிகுதி இரண்டு வந்தது, 'நீயிர் குறியிர்' என்பது அம்மிகுதி மூன்று வந்தது, பிறவும் அன்ன.

(வி - ரை) ஈண்டு உரையிற் கோடலால் கொண்ட பொருளைத் தழுவியே நன்னூலாரும் 'ஒரு புணர்க்கு இரண்டும் மூன்றும் உறப் பெறும்' (உயிரீற்றுப் -7) என்றனர்.

---

1. 'இடம்' என்றதனால் ஒரு புணர்ச்சிக்குத் திரிபு மூன்றனுள் ஒன்றா யினும் இரண்டாயினும் மூன்றாயினும் வரப்பெறும் எனக்கொள்க, என்பது வ.உ.சி. அவர்கள் பதிப்பிலுள்ள பாடம்.

மகத்தாற் கொண்டான் என்பது 'நாட்பெயர்க் கிளவி' (எழுத் - 332) என்னும் நூற்பாவால் அத்தும் ஆனும் பெற்று வருதலின் மிகுதியாகிய இரண்டு வந்தது என்றார். நீயிர் குறியிர் என்பது 'அல்லதன் மருங்கில்' (எழுத் - 327) என்னும் நூற்பாவால் ஈகாரம், இகரம், ரகரவொற்று ஆகிய மூன்று மிகுதியும் பெற்று நிற்றலின் அம்மிகுதி மூன்று வந்தது என்றார்.

வ.உ.சி. அவர்கள் பதிப்பில் 'முதல் உதாரணத்தில் (மகத்தாற் கொண்டான்) அத்திரிபு மூன்று வந்தது என்றிருத்தல் வேண்டும். இரண்டாம் உதாரணம் (நீயிர் குறியிர்) பிழை. இப் பிழைகள் ஏடு பெயர்த்து எழுதினோரால் நேர்ந்தன போலும்' என்றுளது. இக்குறிப்பு அத்துணைப் பொருத்தம் உடையதாகத் தோன்றவில்லை.

ஒரு புணர்ச்சியில் மெய் பிறிதாதல் முதலிய திரிபுகள் ஒவ்வொன்றும் இரண்டும் மூன்றும் வரப்பெறுதலும் உண்டு. அன்றி அவை விரவி இரண்டும் மூன்றும் வரப்பெறுதலும் உண்டு என்பது கருத்தாகக் கொள்க.

நன்னூலார் மெய் பிறிதாதலைத் 'திரிதல்' என்றும், மிகுதலைத் 'தோன்றல்' என்றும், குன்றலைக் 'கெடுதல்' என்றும் கூறுவர். இம்மூவகைத் திரிபும் இல்லாததை இயல்பு என, 'விகாரமனைத்தும் மேவலதியல்பே' என்னும் நூற்பாவால் அவர் கூறுவர். (7)

111. நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய

இது, 'நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவி' (புணரியல்–5) என்பதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும் - நிலைமொழியாக நிறுத்தின சொல்லும் அதனைக்குறித்து வருசொல்லும், அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய - (தாமே வந்து புணர்வதன்றி,) அவையிரண்டினும் [1]ஒரோர் சொல்லடை வந்து ஒன்றித்தோன்றினும் புணர்நிலைக்கு உரிய எ. று.

---

1. 'ஒரோர் சொல் இடைவந்து ஒன்றினும் அவையும் புணர்நிலைக் குரிய' என்பது க. ப. பாடம்.

எ - டு: பதினுயிரத்தொன்று, ஆயிரத்தொருபஃது, பதினு யிரத்தொருபஃது என வரும்.

ஈண்டு அடையென்றது உம்மைத்தொகையினையும், இரு பெயரொட்டுப் பண்புத்தொகையினையும் என உணர்க. அவை யல்லாத தொகைகளுள் வினைத்தொகையும், பண்புத்தொகையும் பிளந்து முடியாமையின், ஒருசொல் எனப்படும். அன்மொழித் தொகையும் தனக்கு வேறு ஓர் முடிபு இன்மையின் ஒருசொல் எனப் படும். இனி ஒழிந்த வேற்றுமைத் தொகையும் உவமைத்தொகை யும் 'தன்னின முடித்தல்' என்றதனுன் ஈண்டு ஒருசொல் எனப்படும்.

உண்டசாத்தன் வந்தான். உண்டுவந்தான் சாத்தன் என்பன வும் அவ்வாறே ஒருசொல் எனப்படும். பிறவும் அன்ன.

(வி – ரை) தனிச்சொற்களே யன்றித் தொகைச் சொற்களும் நிலைமொழி வருமொழிகளாக வைத்துப் புணர்க்கப்படும் என்பது இதன் கருத்தாகும்.

உரையாசிரியர் கருத்தால், அங்ஙனம் நிலைமொழி வருமொழி களை வைத்துப் புணர்த்தல் எல்லாத்தொகைக்கும் பொருந்துவ தன்று; உம்மைத்தொகையும், இருபெயரொட்டுப் பண்புத் தொகையுமே அந்நிலைக்குரிய எனத்தெரிகின்றது. ஏனைய தொகை கள் அங்ஙனம் வாராமைக்குக் காரணம் அவை பிளவுபட்டிசை யாமையே ஆகும் என்பது அவர் கருத்து. நச்சினர்க்கினியரும் இக்கருத்தினரே. 'எல்லாத் தொகயையும் ஒரு சொன்னடைய' என ஆசிரியர் ஓதுதலின் அறுவகைத் தொகைச் சொற்களுமே ஒரு சொல்லாகக் கொள்ளற்குரியனவாகும். அங்ஙனமாக உம்மைத் தொகையும், இருபெயரொட்டுப் பண்புத்தொகையும் மட்டுமே பிளவுபட்டிசைக்கும் என்றும், ஒழிந்தன பிளவுபட்டிசையா என்றும் கூறியதன் காரணம் விளங்கிற்றிலது. தொல்காப்பியர் வினைத் தொகையும், பண்புத்தொகையும் நிலைமொழி வருமொழி யென வைத்துப் புணர்க்கப்படா என (482) விலக்கி யிருப்பதும் ஈண்டு நினைத்தற் குரியதாகும்.

உண்டசாத்தன், உண்டுவந்தான் என்பன முறையே பெய ரெச்சமும், வினையெச்சமும் ஆகும். இவையும் ஒரு சொல்லாக நிற்றலின் பிரித்துப் புணர்க்கப்படா என்பது உரையாசிரியர் கருத்து ஆகும். (8)

112. மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே.

இஃது, இலக்கணவழக்கேயன்றி மரூஉக்களும் புணர்க்கப் படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மருவின் தொகுதி மயங்கு இயல் மொழியும் - (இலக்கண வழக்கேயன்றி) மரூஉத்திரளாகிய தலைதடுமாறுக மயங்கின இயல்பையுடைய இலக்கணத்தொடு பொருந்தின மரூஉவழக்கும், உரியவை உள புணர் நிலைச் சுட்டு - உரியன உள புணரும் நிலைமைக்கண் எ. று.

எ - டு: மீகண், முன்றில் என வரும்.

'நிலை' என்றதனான், இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கல்லா மரூஉ வழக்கும் புணர்க்கப்படும் எனக்கொள்க. (9)

113. வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை.

இது, நால்வகைப் புணர்ச்சியுள் மிக்கபுணர்ச்சி இத்தன்மைத் தென்பதூஉம், அந்நால்வகைப் புணர்ச்சியும் வேற்றுமை யானும் அல்வழியானும் ...

இ-ள்: வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும் - வேற்றுமையது பொருண்மையினைக் குறித்த புணர் மொழியது நிலைமையும், வேற்றுமை அல்வழி புணர்மொழி நிலையும் - வேற்றுமையல்லாத அல்வழியிடத்துப் புணர்மொழியது நிலைமை யும், எழுத்து சாரியை அ இரு பண்பின் ஒழுக்கல் வலிய -

(மிக்க புணர்ச்சிக்கண்) எழுத்து மிகுதலும் சாரியை மிகுதலு மாகிய அவ்விரண்டு இலக்கணத்தானும் நடாத்துதலைத் தமக்கு வலியாக உடைய, புணருங்காலை – அவை புணருங்காலத்து எ. று.

எ–டு : விளங்கோடு, மகவின்கை, விளக்குறிது, பனையின் குறை எனக் கண்டுகொள்க.

'ஒழுக்கல் வலிய' என்றதனுன், எழுத்தும் சாரியையும் உடன் பெறுதல் கொள்க.

எ–டு : அவற்றுக்கோடு, கலத்துக்குறை எனவரும்.

அல்வழி முற்கூருதது, வேற்றுமையல்லாதது அல்வழியென வேண்டலின் என்பது. முன்னே 'புணர்மொழி' என்று வைத்துப் 'புணருங்காலை' எனறதனுற் புணர்ச்சிக்கண்ணே வேற்றுமை அல்வழி என இரண்டாவது, அல்லாக்கால், வேற்றுமையெனவே படுமென்பது கொள்க. ஈண்டு 'அல்வழி' யென்றது பெரும்பான் மையும் எழுவாயினை.

(வி–ரை) நூற்பாவில் வேற்றுமை, அல்வழி எனக் குறித்துக் கூறும் பொழுது 'புணர்மொழி நிலையும்' எனக் கூறப்பட்டுள்ளது. அங்ஙனமாக ஈற்றடியில் மீண்டும் 'புணருங்காலை' எனக் கூற வேண்டுவதின்று. ஆயினும் ஆசிரியர் கூறியுள்ளார். ஏன்? பின்னர் ஆசிரியர் கூறிச் செல்லும் விதிகள் எல்லாம் வேற்றுமைக்கென்றே அன்றி அல்வழிக்கென்றே விதந்துகூறின் அவ்வவற்றிற்கே கொள்ள வேண்டும். அங்ஙனம் இன்னதற்கு என விதந்து கூருராயின் அவ்விதி வேற்றுமைக்கே ஏற்கும் எனக் கொள்ளல் வேண்டும் என்பதாம்.

இந்நூற்பாவினையும் முன்னர்க் கூறப்பட்ட 108, 109 ஆம் நூற்பாக்களையும் இணைத்தே நன்னூலாரும்,

'மெய்யுயிர் முதலீ ரூமிரு பதங்களும்
தன்னெடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே'

என்றனர். (உயிரீற்றுப்—1) (10)

114. ஐஒடு குஇன் அதுகண் ணென்னும்
அவ்வா றென்ப வேற்றுமை யுருபே.

இது, மேல் வேற்றுமை யென்னப்பட்ட அவற்றது பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : ஐ ஒடு கு இன் அது கண் என்னும் - ஐ ஒடு கு இன் அது கண் என்று சொல்லப்படும், அ ஆறு என்ப வேற்றுமை உருபு- அவ்வாறும் என்று சொல்லுவர் வேற்றுமையுருபுகளை எ. று.

இவ்வாறும் அல்லன வெல்லாம் அல்வழி எனப்படும். அவை எழுவாயும், விளியும், உவமத்தொகையும், உம்மைத்தொகையும், பண்புத்தொகையும், இருபெயரொட்டுப் பண்புத்தொகையும், முற்றும், இருவகை எச்சமும், இடையும், உரியும் என இவை.

(வி - ரை) இந்நூற்பாவையும் உரையையும் இணைத்தே நன்னூலாரும்,

'வேற்றுமை ஐம்முதல் ஆறும் அல்வழி
தொழில்பண் புவமை யும்மை அன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சம்முற்(று) இடையுரி
தழுவு தொடரடுக் கென ஈ ரேழே, (உயிரீற்றுப்—2)

என யாத்தனர். (11)

115. வல்லழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்(கு)
ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்.

இது, நான்காவதற்கும் ஏழாவதற்கும் உருபியலை நோக்கிற் றோர் கருவி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு — வல்லெழுத்து முதலாகவுடைய வேற்றுமை யுருபிற்கு, ஒல்வழி ஒற்று இடை மிகுதல் வேண்டும் — பொருந்தின இடத்து வல்லொற்றாயினும் மெல்லொற்றாயினும் இடைக்கண் மிகுதல் வேண்டும் எ. று.

எ - டு : ஊர்க்கு, நீர்க்கு, ஊர்க்கண், நீர்க்கண் என வல்லெழுத்துமிக்கன. தங்கண், எங்கண் என மெல்லெழுத்து மிக்கன.

'ஒல்வழி' என்றதனால், அரசர்கண், பார்ப்பார்கண் என ஒற்று மிகாதனவும் கொள்க.

'மெய்பிறிதாதல்' (புணரியல் - 7) முதலாய நான்கு புணர்ச்சியும் உருபு புணர்ச்சிக்கண்ணும் எய்தலின், மெய்பிறிதாதலை எடுத்தோதாது மிக்கதனை எடுத்தோதிய வதனான், மிக்க புணர்ச்சியல்லனவும் ஈண்டே கொள்க.

எ - டு : பொற்கு, பொற்கண், ஆங்கண், ஈங்கண், ஊங்கண், அவற்கு, இவற்கு, நுங்கண், கொற்றற்கு, சாத்தற்கு என வரும்.

அவன்கண், சாத்தன்கண் என்புழி இயல்பும் இதனானே கொள்க. குன்றிய புணர்ச்சி வந்தவழிக் கண்டுகொள்க.

(வி - ரை) பொற்கு என்பது முதல் ஊங்கண் என்பது வரையில் உள்ளன அஃறிணைப் பெயர்க்கும், அவற்கு, இவற்கு என்பன உயர்திணைப் பெயர்க்கும், நுங்கண் கொற்றற்கு சாத்தற்கு என்பன விரவுப்பெயர்க்கும் எடுத்துக்காட்டாக உள்ளன.

ஆங்கண், ஈங்கண், ஊங்கண் என்பனவற்றில் ஆன், ஈன், ஊன் என்னும் நிலை மொழிகள் ஙகரமாய்த்திரிந்தன. எனினும் நச்சினார்க்கினியர் ஆங்கண், ஈங்கண், ஊங்கண் என்பனவற்றிற்கு நிலைமொழி முறையே அகர இகர உகரங்களே யாகும் என்றும், அச்சுட்டுக்கள் நீண்டு மெய்யெழுத்துப் பெற்று ஆங்கண், ஈங்கண், ஊங்கண் என ஆயிற்று என்றும் கூறுவர். அன்றியும் இவற்றிற்கு ஒற்றுக்கேடு கூறற்கு ஒற்றின்று என்றும் கூறி இளம்பூரணர் கருத்தையும் மறுப்பர். எனினும் 'மன்னும் சின்னும் ஆனும் ஈனும்' (எழுத் - 334), 'ஆன் வந்தியையும் வினைநிலை யானும்' (சொல் - 232), 'வாரேனார் மருங்கிற் காண்டல் அல்லதை, ஈனோர் மருங்கிற் காண்டல் இல்லென' (சிலம்பு - பதிகம்) எனவரும் வழக்குண்மை நோக்க ஆன், ஈன், ஊன் என்பனவே உரிய சொற்கள் எனத் தெரிகின்றது. இவற்றுள் ஊன் என்பது மட்டும்

தொல்காப்பியனார் காலத்தையடுத்தே இறந்து பட்டிருக்க வேண்டும் எனத்தெரிகிறது.

நும்கண் என்பது மகரம் ஙகரமாகத் திரிந்தது. இதற்கும், பதப்பொருளை யடுத்துக் காட்டப்பட்டுள்ள தங்கண் எங்கண் என்பனவற்றிற்கும் வேறுபாடின்மையின், தங்கண், எங்கண் என்ற எடுத்துக்காட்டுக்களுடன் இதுவும் இருப்பது பொருத்தமாக இருக்கும். நச்சினார்க்கினியரும் இவற்றை ஒருங்கு காட்டி யுள்ளமை ஈண்டு அறியத்தக்கதாகும்.

ஏனைய ணகரம் றகரமாய்த் திரிந்தன. 'குன்றிய புணர்ச்சி வந்த வழிக்கண்டு கொள்க' என்னும் தொடர் அரசாங்க ஓலை யேட்டில் (D - 15) கண்டது. (12)

116. ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈரு(கு) அகரமுனைக் கெடுதல் வேண்டும்.

இஃது, ஆறுவதற்குத் தொகைமரபினை நோக்கியதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஆறன் உருபின் அகரக் கிளவி - ஆறும் வேற்றுமை யாகிய அது [என்னும் சொல்லிடத்து அகரமாகிய எழுத்து, ஈறு ஆகு அகரமுனை கெடுதல் வேண்டும் - (நெடுமுதல் குறுகும்) மொழியீற்று உளதாகின்ற அகரத்தின் முன்னர்த் தான் கெடுதல் வேண்டும் எ. று.

எ-டு: நமது, எமது, தனது, எனது, நினது எனவரும்.

மேல் ஈருகு அகரம் இதற்குத் தாராது, இவ்வுருபகரமே ஏறி முடிய அமைதலின், அது கேடாதல் வேண்டா எனின், நெடுமுதல் குறுகி விகாரப்பட்டு நின்ற மொழியாகலின் அதன்மேல் உருபகர மேறி முடியல் வேண்டா ராயினார் போலுமென்பது.

(வி - ரை) இந்நூற்பாவின் விளக்கவுரையில் இளம்பூரணர் ஐயுற மொழிந்திருக்கும் ஆய்வினை நச்சினார்க்கினியர் எடுத்துக் கொண்டு மிக அழகாக விளக்கம் தந்துள்ளார். அது வருமாறு:—

இது நிலைமொழிக்கு ஓர் அகரம் பெறுமென விதியாது உருபு அகரம் ஏறி முடியுமென விதித்தால் வருங்குற்றம் உண்டோ எனின், 'நினவ கூறுவலெனவ கேண்மதி' (புறம்-35) என்றாற் போல ஆறுவதற்குரிய அகர உருபின் முன்னரும் ஓர் அகர எழுத்துப்பேறு நிலைமொழிக்கண் வருதலுளதாகக் கருதினு ராதலின், ஆறனுருபிற்கும், நான்கனுருபிற்கும் பொதுவாக நிலைமொழிக்கண் அகரப்பேறு விதித்து, அதுவென்னும் ஒருமை உருபு வந்தால் ஆண்டுப் பெற்று நின்ற அகரத்தின் முன்னர் அதுவென்பதன்கண் அகரங்கெடுகவென்று ஈண்டுக் கூறினு ராதலின் அதற்குக் குற்றம் உண்டென்று உணர்க. (13)

117. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே.

இது, வேற்றுமையுருபு பெயர்க்கண் நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : வேற்றுமை பெயர் வழிய புணர் நிலை - வேற்றுமை பெயர்களின் பின்னிடத்தன அவற்றோடு புணரும் நிலைமைக்கண் எ . று.

எ-டு : சாத்தனை, சாத்தனொடு என வரும்.

மேல் 'உருபுநிலை திரியாது ஈறுபெயர்க் காகும்' (வேற்றுமை யியல் – 8) என்கின்றாரன்றே வெனின், பெயரொடு பெயர் முதலிய நால்வகைப் புணர்ச்சியையும் வேற்றுமை அல்வழியென இரண்டாக அடக்கலின், வினைவழியும் உருபு வருமென்பதுபட நின்றதாகலின் ஈண்டு இது கூறப்பட்டது.

(வி-ரை) வினை உருபினை ஏலாது என்பதை 'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது' நினையும் காலைக் காலமொடு தோன்றும்' (சொல் - 198) என்னும் நூற்பாவாலும் ஆசிரியர் நன்குணர்த்துவர். நச்சினார்க்கினியர் ஈண்டு (198) வினை யென்றது அவற்றின் முதனிலையை என்பர். எனினும் அது பொருந்துவதன்று. (14)

118. உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்
றாயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே.

இது, வேற்றுமையோடு புணரும் பெயர்கட்குப் பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: உயர்திணைப்பெயரே அஃறிணைப் பெயர் என்று அ இரண்டு என்ப - உயர்திணைப்பெயரும் அஃறிணைப் பெயருமாகிய அவ்விரண்டுமென்று சொல்லுப, பெயர் நிலை சுட்டு - பெயராகிய நிலைமையது கருத்தினை எ. று.

எ-டு: ஆடூஉ, மகடூஉ என்பன உயர்திணைப் பெயர். ஒன்று பல என்பன அஃறிணைப் பெயர்.

மற்று விரவுப்பெயர் கூறாராயது என்னை யெனின், மற்றது *சாத்தன் வந்தான்; வந்தது* எனப் புணர்ச்சிக்கண் பெரும்பான்மையும் ஒரு திணைப்பாற் படுதலின், அவ்விரண்டாக அடக்கிக் கூறினரென்பது. (15)

119. [1]அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே.

இது, சாரியை வரும் இடம் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அவற்றுவழி மருங்கின் சாரியை வரும் - அப்பெயர்களின் பின்னாகிய இடத்தின் கண்ணே சாரியை வரும் எ. று.

எ-டு: ஆடூஉவின் கை, மகடூஉவின் கை, பலவற்றுக்கோடு என வரும். (16)

120. அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே.

இது, சாரியைகட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

---

1. ''அவற்றுள்வழி'' எனவும் பாடம்.

இ - ள் : அவைதாம் – மேற்சாரியை யென்னப்பட்டவைதாம், இன்னே வற்றே அத்தே அம்மே ஒன்னே ஆனே அக்கே இக்கே அன் என் கிளவி உளப்பட பிறவும் – இன்னும் வற்றும் அத்தும் அம்மும் ஒன்னும் ஆனும் அக்கும் இக்கும் அன் என்னும் சொல்லு மாகிய அவ்வொன்பதும் உளப்படப் பிறவும், அன்ன என்ப சாரியைமொழி - அச்சாரியையாம் தன்மைய என்று சொல்லுவர் சாரியையாகிய மொழிகளை எ. று.

'பிறவும்' என்றதனால் தம், நம், நும், எம், கெழு, ஏ, ஐ, ஞான்று என்பனவுங் கொள்க.

'எடுத்த நறவின் குலையலங் காந்தள்' (கலி - 40) என்புழி 'அலம்' என்பதோர் சாரியையும் உண்டாலெனின், அதனை 'அலங்கு காந்தள்' என்பதன் விகாரமென்ப.

இன் சாரியை வழக்குப் பயிற்சியானும், நூலுட் பலகாலும் எடுத்தோதப்படலானும், வாளா ஓதியவழித் தானே சேறலானும் முன் வைக்கப்பட்டது. அன் சாரியையும் அதுபோலச் சிறப்புடை மையின் பின் வைக்கப்பட்டது. இடை நின்றவற்றியல்பும் அறிந்து கொள்க.

(வி - ரை) உரையாசிரியர், பிற என்பதால் கூறப்பட்ட சாரியைகளுள் தம், நம், நும், உம், கெழு, ஏ, ஐ என்பனவற்றை ஆசிரியர் 191, 190, 52, 481, 164 ஆம் நூற்பாக்களில் எடுத் தாளுவர். இளம்பூரணர் கூறிய சாரியைகளுள் 'எம்' என்பதற்கு மாறாக நச்சினார்க்கினியர் 'உம்' எனக் கூறியுள்ளார். இதனால் உம் என்பதே இளம்பூரணத்தில் தவறி 'எம்' எனக் குறிக்கப் பட்டுள்ளதோ என நினைய இடந்தருகின்றது.

அலங்கு காந்தள் - அசையும் காந்தள். இங்ஙனம் பொருள் படுதலின் இது வினைத்தொகை; சாரியையன்று என விளக்குவர் நச்சினார்க்கினியர்.

ஆசிரியர் கூறிய சாரியைகள் இம்முறையே நிற்றற்குரிய காரணத்தை நச்சினார்க்கினியர் முற்ற விளக்குவர். அது வருமாறு :—

'இன்' சாரியை வழக்குப் பயிற்சியும் பலகால் எடுத்தோதப் படுதலும் பொதுவகையான் ஓதியவழித் தானே சேறலுமாகிய சிறப்பு நோக்கி முன் வைத்தார். 'வற்றும்' 'அத்தும்' இன்போல முதல் திரியுமாகலானும் செய்கை யொப்புமையானும் அதன் பின் வைத்தார். 'அம்' ஈறு திரியுமாதலின் திரிபு பற்றி அதன் பின் வைத்தார். 'ஒன்' ஈறு திரியுமேனும் வழக்குப் பயிற்சி யின்றி நான்காமுருபின்கண் திரிதலின் அதன் பின் வைத்தார். 'ஆன்' பொருட் புணர்ச்சிக்கும் உருபு புணர்ச்சிக்கும் வருமென்று அதன் பின் வைத்தார். 'அக்கு' ஈறு திரியுமேனும் உருபு புணர்ச்சிக்கண் வாராமையின் அதன் பின் வைத்தார். 'இக்கு' முதல் திரியுமேனுஞ் சிறுபான்மைபற்றி அதன்பின் வைத்தார். 'அன்' இன் போலச் சிறத்தலிற் பின் வைத்தார்.

ஆனுருபிற்கும் ஆன் சாரியைக்கும், இன்னுருபிற்கும் இன் சாரியைக்கும் வேற்றுமை யாதெனின், அவை சாரியையான இடத்து யாதானும் ஓர் உருபேற்று முடியும். உருபாயின இடத்து வேறோர் உருபினை ஏலாவென்று உணர்க.

ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய சாரியைகளுள் சிலவற்றை நன்னூலார் மாற்றியும், கூட்டியும் நீக்கியும் கொண்டுள்ளார். அம்மாறுபாடுகளாவன :—

(அ) மாற்றியன:

தொல்காப்பியர்	நன்னூலார்
(1) வற்று	அற்று
(2) அக்கு	அ
(3) இக்கு	கு

(ஆ) நீக்கியது: ஒன்

(இ) புதிதாகக்கொண்டது: அல்

இளம்பூரணர் பிற என்றதனல் கூறிய சாரியைகளை நச்சினார்க் கினியரும் ஏற்பர்.

இவற்றை யெல்லாம் தொகுத்தே நன்னூலாரும்,

'அன் ஆன் இன் அல் அற்(று) இற்(று) அத்(து) அம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே' (உருபு-5)

எனக் கூறினர். (17)

121. அவற்றுள்
இன்னின் இகரம் ஆவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்து மாகும்.

இது, அவற்றுள் இன்சாரியை முதல் திரியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அவற்றுள்-மேற்கூறப்பட்ட சாரியைகளுள், இன்னின் இகரம் ஆவின் இறுதிமுன்னர் - இன்சாரியையினது இகரம் ஆ என்னும் சொல்லீற்றுமுன்னர், கெடுதலும் உரித்தாகும் - கெடாமை யேயன்றிக் கெடுதலும் உரித்தாம் எ . று.

எ - டு: ஆனை, ஆவினை, ஆன்கோடு, ஆவின்கோடு என வரும்.

'முன்னர்' என்றதனான், 'மா' என்னும் சொல்லின் முன்னும் அவ்விரு விதியும் எய்தும்.

எ - டு: மானை, மாவினை, மான்கோடு, மாவின்கோடு என வரும். (18)

122. [1]அளபாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே.

இஃது, இன் இறுதி திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அளபாகும் மொழி முதல் - அளபுப் பெயராகும் மொழி முதற்கண், நிலைஇய உயிர்மிசை னஃகான் - நிலைபெற்ற

1. 'அளவாகு' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

உயிருக்குமேலாய் நின்ற இன்சாரியையது னகாரம், றஃகான் ஆகிய நிலைத்து - றகாரமாகிய நிலைமைத்து எ . று.

எ - டு: பதிற்றகல், பதிற்றுழக்கு என்புழி அவ்வாறு வருதல் அறிக.

'நிலைத்து' என்றதனால், பிறவழியும் இன்னின் னகரம் றகர மாதல் கொள்க.

எ - டு: பதிற்றொன்று, பதிற்றேழு எனவரும்.

(வி - ரை) பத்து + அகல் = பதிற்றகல். 'குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே' (434) என்பதால் நிலைமொழியிலுள்ள தகரவுகரம் கெடுத்து, 'நிறையும் அளவும்' (437) என்பதால் இன் சாரியை கொடுத்து, இந்நூற்பாவால் இன்சாரியையின் னகரத்தை றகரமாக்கி அதிகாரப் புறனடையால் (483) றகர வொற்றிரட்டித்து புள்ளியீற்றுமுன் (139) என்பதால் பதிற்றகல் என முடிக்க. (19)

123. வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே.

இது, வற்று முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: சுட்டு முதல் ஐமுன் - சுட்டெழுத்தினை முதலாக வுடைய ஐகார ஈற்றுச் சொல்முன்னர், வஃகான் மெய் கெட அஃகான் நிற்றல் ஆகிய பண்பு - வற்றுச்சாரியை தன் வகரமாகிய மெய்கெட அகரம் நிற்றலாகிய பண்பினையுடைய எ . று.

எ - டு: அவையற்றை, இவையற்றை, உவையற்றை, எனவும், அவையற்றுக்கோடு எனவும் வரும்.

'ஆகிய பண்பு' என்றதனால், சுட்டு முதலாகிய ஐ என் இறுதி ஐகாரத்தோடு நில்லாதவழி வற்றின் வகரம் அகரம் நிற்கக் கெடாது வற்றே நிற்றல் கொள்க.

மற்றிது, 'திரிந்ததன்திரிபு பிறிது' என்னும் நயத்தாற் கெடாதே நிற்குமாகலின், இது கூறவேண்டா எனின், 'சுட்டு

முதல் ஐ ஈற்றுச் சொல்லின் ஐ முன்' என ஓதாது, 'சுட்டு முதல் ஐம்முன்' என அச்சொல்முன் எல்லாம் கெடுவதுபோல ஓதினமையின், வேண்டிற்றென்பது.

(வி - ரை) அவை + ஐ = அவையற்றை. 'சுட்டு முதலாகிய ஐயென்னிறுதி' (178) என்பதால் வற்றுக் கொடுத்து, இந்நூற் பாவால் வற்றின் வகரவொற்றுக் கெடுத்து அவையற்றை என முடிக்க. 'ஆகிய பண்பு' என்பதால் அவ் + ஐ = அவற்றை என முடிக்க. இதற்கு நிலைமொழி வகரக் கேடு 134 ஆம் நூற்பாவால் கொள்க. (20)

124. னஃகான் றகாஃன் நான்க னுருபிற்கு.

இது, னகர ஈற்றுச் சாரியை நான்கற்கும் ஈறு திரிபு கூறுதல் நுதலிற்று.

இ – ள்: நான்கன் உருபிற்கு னஃகான் றஃகான்– நான்காம் உருபிற்கு (னகார ஈற்றுச் சாரியையெல்லாம்) னகாரம் றகாரமாம் எ . று.

எ - டு: விளவிற்கு, கோஒற்கு, ஒருபாற்கு, அதற்கு என வரும்.

(வி–ரை) னகார ஈற்றுச் சாரியைகள் நான்கு. அவை இன், ஒன், ஆன், அன் என்பன. இந்நான்கீறுகளும் நான்கனுருபு வருவழி றகரமாகத் திரியும் என்பதாம். (21)

125. ஆனின் னகரமும் அதனோ ரற்றே
நாள்முன் வருஉம் வல்முதற் றொழிற்கே.

இஃது, ஆன்சாரியை பொருட்புணர்ச்சிக்கண் ஈறு திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: நாள்முன் வரும் வல் முதல் தொழிற்கு ஆனின் னகரமும் – நாட்பெயர் முன்னர் வரும் வல்லெழுத்தை முதலாக வுடைய வினைச்சொற்கண் வரும் ஆன்சாரியையின் னகரமும், அதன் ஓர் அற்று - அந் நான்கனுருபின்கண் வரும் ஆன்சாரியை யோடு ஒரு தன்மைத்தாய் னகாரம் றகாரமாம் எ. று.

'தொழிற்கு' என்பதனைத் 'தொழிற்கண்' என மயக்கமாகக் கொள்க.

எ - டு : பரணியாற் கொண்டான் என வரும்.

உம்மையை இரட்டுற மொழிதலானே எதிரது தழீஇயதாக்கி, அதனுன் நாளல்லவற்றுமுன் வரும் வன்முதற் ருெழிற்கண் இன்னின் னகரமும் றகாரமாய்த் திரிதல் கொள்க.

எ - டு : பனியிற் கொண்டான் என வரும்.

தொழிற்கண் இன்னின் னகரம் திரியுமென பெயர்க்கண் இன்னின் னகரம் திரிதலும் திரியாமையுமுடைய வென்பது ஞாபகத்தாற் கொள்ளப்படும்.

எ - டு : பறம்பிற் பாரி, வண்டின் கால் என வரும்.

(வி – ரை) ஞாபகம்—இது ஞாபகம் கூறல் என்னும் உத்தியாகும். ஞாபகம் கூறல்—நூற்பா செய்யுங்கால் அதற்கு ஓதிய இலக்கண வகையானே சில்வகை யெழுத்தின் செய்யுட்டாகவும், நாடுதலின்றிப் பொருள் நனி விளங்கவும் செய்யாது, அரிதும் பெரிதுமாக நலிந்து செய்து மற்று அதனுனே வேறு பல பொருளுணர்த்தலாகும். (665 : பேரா—உரை)

இந்நூற்பாவில் ' நாள்முன் வரும் வன்முதற்ருெழிற்கு ' ஆன் சாரியையின் னகரம் றகரமாய்த் திரியும் என்பதே ஆசிரியர் கருத்தாக உள்ளது.

இதன்கண் உரையாசிரியர் உம்மையை எதிரது தழீஇய தாக்கிக் கூறுதலும், பெயர்க்கண்ணும் இன்னின் னகரம் திரிதலும் திரியாமையும் உடைத்து எனக் கூறுவதும் இவ்வுத்தியானுகும். (22)

126. [1]அத்தின் அகரம் அகரமுனையில்லை.

இஃது, அத்து முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

1. இந்நூற்பாவை நன்னூலார் கொண்டெடுத்து மொழிவர். (நன்.252)

இ - ள் : அத்தின் அகரம் அகரமுனை இல்லை - அத்துச் சாரியையின் அகரம் அகரவீற்றுச் சொல்முன்னர் இல்லையாகும் எ. று.

எ – டு : மகத்துக்கை என வரும்.

(வி-ரை) : 'அத்தவண் வரினும் வரைநிலை இன்றே' (220) என்பதால் மக என்பது அத்துப் பெற்றது. இந்நூற்பாவால் அத்தின் அகரம் கெட்டது. 'அத்தே வற்றே' (134) என்பதால் வல்லெழுத்து மிக்கது.

ஒழிக + இனி = ஒழிகினி ; உற்ற + உழி = உற்றுழி ; செய்க + என்றான் = செய்கென்றான் ; நாடாக + ஒன்றோ = நாடாகொன்றோ என்புழியெல்லாம் நிலைமொழியீற்று அகரம் கெட்டதுபோல, ஈண்டும் நிலைமொழியீற்று அகரம் கெட்டது என்றலே பொருத்தம் உடைத்து என்பர் திரு. வேங்கடராசுலு ரெட்டியார். (23)

127. இக்கின் இகரம் இகரமுனை யற்றே.

இஃது, இக்குச் சாரியை முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ – ள் : இக்கின் இகரம் இகரமுனை அற்று - இக்குச் சாரியையினது இகரம் இகரஈற்றுச்சொல் முன்னர் மேற்கூறியவாறு போலக் கெடும் எ. று.

எ - டு : ஆடிக்குக் கொண்டான் என வரும்.

(வி–ரை) : 'திங்கள் முன்வரின் இக்கே சாரியை' (249) என்பதால் ஆடி என்பது இக்குப் பெற்றது. (24)

128. ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்.

இதுவும் அது.

இ – ள் : ஐயின் முன்னரும் அஇயல் நிலையும் - (இக்கின் இகரம்) இகரவீற்றுச்சொல் முன்னன்றி ஐகாரவீற்றுச்சொல் முன்னரும் மேற்கூறப்பட்ட கெடுதலியல்பிலே நிற்கும் எ. று.

எ - டு : *சித்திரைக்குக் கொண்டான் என வரும்.*

(வி - ரை) 'திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன' (287) என்பதால் இக்குப் பெற்றது. (25)

129. எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத்தோன் ருது.

இஃது, அக்கீறு திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ ள் : எ பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முற்றத் தோன்ருது - எவ்வகைப்பட்ட பெயர் முன்னும் வல்லெழுத்து வருமிடத்து அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முடியத் தோன்ருது, மெய்மிசையொடும் கெடும்– அதனுற் பற்றப்பட்ட வல்லெழுத்தாகிய மெய் தனக்கு மேல் நின்ற மெய்யோடும் கெடும் எ. று.

எ - டு : குன்றக் கூகை, மன்றப்பெண்ணை, ஈமக்குடம், அரசக்கன்னி, தமிழகூத்து என வரும்.

'முற்ற' என்றதனுல் வன்கணமன்றி மற்றக் கணங்கட்கும் கொள்க.

எ - டு: தமிழநூல், தமிழயாப்பு, தமிழவரையர் என வரும்.

வி - ரை : 'ஒற்றுநிலை திரியாது' (419) என்பதால் குன்று, மன்று என்பன அக்குப் பெற்றன. 'வேற்றுமையாயின்' (330) என்பதால் ஈம் என்பதும், 'தமிழென் கிளவியும்' (386) என்பதால் தமிழ் என்பதும் அக்குப் பெற்றன.

கன்னியப்ப முதலியார் பதிப்பில் உரையும் காட்டும் வேறு படவுள்ளது. அது வருமாறு :— 'எவ்வகைப்பட்ட பெயர் முன்னும் தாம் வருமிடத்து அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முடியத் தோன்ருது ; அதனுல் பற்றப்பட்ட வல்லெழுத்தாகிய மெய் தனக்கு மேனின்ற மெய்யொடும் கெடும் என்றவாறு.

எ-டு: தமிழக் கூத்து, தமிழநூல், தமிழயாழ், தமிழ வெழுத்து என வரும். (26)

130. அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந ஆகும்.

இது, அம்மின் இறுதி திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அம்மின் இறுதி க ச தக் காலை-அம்மின் இறுதி யாகிய மகரவொற்று க ச தக்கள் வருமொழியாக வந்த காலத்து, தன் மெய் திரிந்து ங ஞ ந ஆகும் - தன் வடிவு திரிந்து ங ஞ நக்களாம் எ. று.

எ-டு: புளியங்கோடு, புளியஞ்செதிள், புளியந்தோல் என வரும்.

'தன்மெய்' என்றதனால், அம்மின் இறுதி மகரமேயன்றி, தம் நம் நும் உம் என்பனவற்றின் இறுதி மகரமும் திரியுமென்பது கொள்க.

எ – டு: எல்லார் தங்கையும், எல்லார் நங்கையும், எல்லீர் நுங்கையும், வானவரி வில்லுந் திங்களும் என வரும்.

(வி-ரை) 'புளிமரக் கிளவிக் கம்மே சாரியை' (245) என்பதால் அம்சாரியை பெற்றது. 'வானவரிவில்லுந் திங்களும்,' என்றவிடத்து மகரம் நகரமாகத் திரிந்தது. (27)

131. மென்மையும் இடைமையும் வருஉம் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர்.

இதுவும் அது.

இ-ள்: மென்மையும் இடைமையும் வரும்காலை—அம்மின் இறுதி மென்மையும் இடைமையும் வருமொழியாய் வருங் காலத்து; இன்மை வேண்டும் என்மனார் புலவர் – இன்றிமுடிதலை வேண்டும் என்று சொல்லுவர் புலவர் எ. று.

எ - டு: புளிய ஞெரி, நுனி, முரி, யாழ், வட்டு என வரும்.

உரையிற் கோடல் என்பதனுல், புளிய விலே எனவும் உயிர் வருவழிக் கேடும் கொள்க.

(வி – ரை) ஈண்டும் 245-ஆம் நூற்பாவால் அம்முப் பெறுதல் கொள்க.

இன்மை வேண்டும் - அம் என்பதிலுள்ள இறுதி மகரவொற்று இன்றி முடிதலே வேண்டும் என்பது கருத்தாகக் கொள்க. (28)

132. இன்னென வருஉம் வேற்றுமை யுருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும்.

இஃது, இன் சாரியை முழுவதூஉம் கெடும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: இன் என வரும் வேற்றுமை உருபிற்கு - இன் என்று சொல்ல வருகின்ற வேற்றுமை யுருபிற்கு, இன் என் சாரியை இன்மை வேண்டும் - இன் என்னும் சாரியைதான் இன்றி முடித்தல் வேண்டும் எ. று.

எ - டு: விளவின், பலாவின் என வரும்.

'அவற்றுள் இன்னின் இகரம்' (புணரியல்—18) என்றதன் பின் வையாததனுல், சிறுபான்மை இன் சாரியை கெடாது நிற்றல் கொள்க.

எ - டு: பாம்பினிற் கடிது தேள் என வரும்.

(வி–ரை) இன்சாரியை கெடாது வந்ததற்குக் 'கற்பினின் வழாஅ நற்பல வுதவி' (அகம் – 86), 'அகடு சேர்பு பொருந்தி அளவினின் திரியாது' (மலேபடு - 33) என்ற செய்யுள் வழக்கையும் எடுத்துக் காட்டுவர் நச்சினர்க்கினியர். (29)

133. பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை யுருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்கா(து)
இடைநின் றியலுஞ் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்.

இது, சாரியைகட்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பெயரும் தொழிலும் பிரிந்து ஒருங்கு இசைப்ப - பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பெயரும் வினையுமாய்ப் பிரிந்தும் பெயரும் பெயருமாய்க் கூடியும் இசைப்ப, வேற்றுமை உருபு நிலை பெறு வழியும் - வேற்றுமை யுருபு தொகாது நிலை பெற்ற இடத்தினும், தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண்ணும்- அவை தோற்றுதல் வேண்டாத தொகுதிக்கண்ணும், ஒட்டு தற்கு ஒழுகிய வழக்கொடு சிவணி - தாம் தாம் பொருந்துதற் கேற்ப நடந்த வழக்கோடு பொருந்தி, சொல் சிதர் மருங்கின் - சாரியை பெறும் புணர்மொழிகளைப் பிரித்துக் காணுமிடத்து, வழி வந்து விளங்காது இடைநின்று இயலும் - அவற்றின் பின் வந்து விளங்காது அவற்றிடையே நின்று நடக்கும், சாரியை இயற்கை - சாரியையின் இயல்பு, உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும் - அவைதாம் உண்டாதலும் இல்லையாதலும் ஒடு உருபினிடத்து ஒக்கும் எ . று.

எ - டு: விளவினைக் குறைத்தான், விளவினைக்குறைத்தவன் எனவும், நிலாத்துக் கொண்டான், நிலாத்துக் கொண்டவன் எனவும் வரும்.

ஒட்டுதற்கொழுகிய வழக்கன்மையின், நிலாக்கதிர் நிலா முற்றம் என்பன சாரியை பெருவாயின. எல்லா நம்மையும் எனச் சாரியை ஈற்றின்கண்ணும் வருதலின், இடைநின்றியறல் பெரும்பான்மையெனக் கொள்க.

பூவினெடு விரிந்த கூந்தலெனவும், பூவொடு விரிந்த கூந்த லெனவும், உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒத்தவாறு.

'இயற்கை' என்றதனன் ஒடுவுருபின்கண் சாரியை பெறு தலும் பெருமையும் ஒழிய, ஒரோவழிப் பெற்றே வருமென்பது கொள்க.

எ - டு: பலவற்ருேடு என வரும்.

(வி – ரை) பெயர்ச் சொல்லிற்கும் வினைச் சொல்லிற்கும் இடையே வேற்றுமையுருபு விரிந்து நிற்பின் அவை பிரிந் திசைக்கும். அவற்றிடையே வேற்றுமையுருபு தொக்குநிற்பின் அவை ஒருங்கு இசைக்கும். இச்சொற்களில் சாரியை பெறுவன பெற்று நிற்கும். அச்சாரியைகள் அவற்றினிடையே பெரும் பான்மையும் வரும்; ஒரோவழி ஈற்றிலும் வரும். ஒருசொல் ஒடு உருபு ஏற்கும் போது அச்சொல் சாரியை பெற்றும் வரும்; பெருதும் வரும் என்பது இந்நூற்பாவின் தெளிந்த கருத்தாகும். சேனவரையரும் இக்கருத்தினராதலே சொல்—420ஆம் நூற்பா வின் உரையால் அறியலாம்.

எல்லா நம்மையும் என்புழி ஈற்றிலுள்ளது சாரியையன்று; முற்றும்மை என்பர் ஆய்வாளர்கள்.

134. அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வருஉம் வல்லெழுத்து மிகுமே.

இஃது, அத்தும் வற்றும் வருமிடத்து நிலைமொழியினும் வரு மொழியினும் வருஞ் செய்கை கூறுதல் நுதலிற்று.

இ - ள்: அத்தே வற்றே அ இருமொழிமேல் ஒற்று மெய் கெடுதல் தெற்றென்றற்று - அத்தும் வற்றுமாகிய அவ்விருமொழி மேல்நின்ற [1] ஒற்றுத் தன்வடிவு கெடுதல் தெளியப்பட்டது,

1. எழுத்து என்பது க.மு.ப. பாடம்

அவற்று முன்வரும் வல்லெழுத்து மிகும் – அவ்விருசாரியை முன்னும் வரும் வல்லெழுத்து மிகும் எ - று.

எ - டு : கலத்துக்குறை, அவற்றுக்கோடு என வரும்.

கலன் என னகாரமாக நிறுத்திக்கெடுக்கவே, 'ஒன்றின முடித்தல்' என்பதனுல், புள்ளியீறல்வழி விகாரவகையான் நின்றனவும் அவற்றின் மிசையொற்றென்று கெடுக்கப்படுமெனக் கொள்க.

எ - டு: அவற்றுக்கோடு என வரும். இஃது ஐகார ஈறு.

ஈண்டு 'வல்லெழுத்து மிகு' மென்றது, ஈற்றுவல்லெழுத்தின்றித் திரிந்து முடியும் னகரமும் ணகரமும் லகரமும் ளகரமும் என இவற்றை நோக்கி யென வுணர்க.

அத்து முற்கூறிய முறையன்றிக் கூற்றினுன், அத்தின்மிசை யொற்றுக் கெடாது நிற்கவும் பெறும்.

எ - டு : விண்ணத்துக் கொட்கும், வெயிலத்துச் சென்ருன், இருளத்துக் கொண்டான் என வரும்.

'மெய்' எனறதனுல், அத்தின் அகரம் பிறவுயிரின் முன்னும் கெடுதல் கொள்க.

எ - டு: அண்ணுத்தேரி என வரும்.

'தெற்று' என்றதனுல், அத்தின் அகரம் கெடாது நிற்றலும் கொள்க.

எ - டு : விளவத்துக்கண் என வரும்.

(வி - ரை :) 'அத்திடை வரூஉம்' (169), 'சுட்டுமுதல் வகரம்' (184) என்பனவற்ருல் கலம் அவை என்னும் சொற்கள் அத்தும் வற்றும் பெற்றன.

அவை + கோடு = அவற்றுக்கோடு (123)

அவ் + கோடு = அவற்றுக்கோடு (184)

அண்ணு + அத்து + ஏரி = அண்ணுத்தேரி. ஈண்டு ஆகார ஈருதல் காண்க. (31)

135. காரமுங் கரமுங் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை.

இஃது, எழுத்துச் சாரியைகட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: காரமும் கரமும் கானொடு சிவணி–காரமும் கரமும் கானொடு பொருந்தி, நேரத்தோன்றும் எழுத்தின் சாரியை - எல்லா ஆசிரியரானும் உடன்படத் தோன்றும்; எழுத்துச்சாரியை யாதற்கு எ . று.

'நேரத்தோன்றும்' என்றதனான், நேரத்தோன்றுதன ஆனம், ஓனம் என இவை.

(வி-ரை) காரமும் கரமும் என அடுத்துச் சொல்லியவழி இனிதிசைத்தலானும், வழக்குப் பயிற்சி யுடைமையானும், வடவெழுத்திற்கும் உரியவாதலானும் சேரக் கூறினர். கான் அத் தன்மை யின்மையினாற் பின் வைத்தார் என்பர் நச்சினார்க்கினியர். எனினும் வடவெழுத்திற்குக் காரம் என்ற சாரியையே உளது என்பர் அறிஞர்கள்.

இளம்பூரணர் கூறிய ஆனம், ஓனம் என்னும் சாரியை களுடன் ஏனம் என்பதையும் கூட்டிக் கூறுவர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும். (சொல் - 296 : சேனா. உரை - காண்க) (32)

136. அவற்றுள்
கரமுங் கானும் நெட்டெழுத் திலவே.

இஃது, அவற்றுட் சில சாரியை சில எழுத்தோடு வாரா என எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ - ள்: அவற்றுள் கரமும் கானும் நெட்டெழுத்து இல - மேற் சொல்லப்பட்டவற்றுள் கரமும் கானும் நெட்டெழுத்திற்கு இல. காரம் நெட்டெழுத்திற்கு உண்டு எ. று.

எ - டு: ஆகாரம், ஈகாரம் என வரும்.

(வி-ரை) ஐகாரம் ஔகாரம் என (138, 281, 296) ஆசிரியரும் குறித்தல் காண்க. (33)

137. வரன்முறை மூன்றுங் குற்றெழுத் துடைய.

இது, நெட்டெழுத்திற்குச் சில சாரியை விலக்கினமையின் குற்றெழுத்திற்கும் சில விலக்குவதுண்டுகொல்! என்னும் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

இ-ள் : வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய - வரலாற்று முறைமையை யுடைய மூன்று சாரியையும் குற்றெழுத்து உடைய எ. று.

எ-டு: அகாரம், அகரம், அஃகான் என வரும்.

'வரன்முறை' என்றதனுன், அஃகான் என்புழி ஆய்தமிக்கு முடியுமென்பது கொள்க.

(வி-ரை) ஆசிரியர் 'அகர இகரம்' (54) என்றும், 'வகாரமிசையும்' (331) என்றும், 'வஃகான்மெய் கெட' (113) என்றும் கூறுதல் காண்க. (34)

138. ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும்.

இஃது, அவற்றுள் காரமுங் கானும் என்பதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஐகாரம் ஔகாரம் கானொடும் தோன்றும் - நெட்டெழுத்துக்களில் ஐகாரமும் ஔகாரமும் முன் விலக்கப்பட்ட கானொடும் தோன்றும் எ-று.

எ-டு: ஐகான், ஔகான் என வரும்.

(வி-ரை) 135 முதல் 138 - ஆம் நூற்பா வரையிலுள்ள கருத்துக்களைத் தொகுத்தே நன்னூலாரும் 'மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும், ஐ ஔக் கானும் இருமைக் குறில் இவ் விரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்பிற. (நன்—126)

எனக் கூறினர். இதன்கண் மெய்கள் அகரம் பெறும் என்றது 'மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்' (46) என்பதைத் தழுவியதாகும். (35)

139. புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே.

இஃது, உயிர்முதல்மொழி புள்ளியீற்றுமுன் வருங்காற் பிறப்பதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

இ – ள்: புள்ளி ஈற்றுமுன் உயிர் தனித்து இயலாது - புள்ளியீற்றுச் சொல்முன் உயிர் தனித்து நடவாது, மெய்யொடு சிவணும் அ இயல் கெடுத்து - அப்புள்ளியோடும் கூடும் தான் தனிநின்ற அவ்வியல்பினைக் கெடுத்து எ. று.

எ - டு: ஆல் + அடை = ஆலடை என வரும்.

'ஒன்றென முடித்தல்' என்பதனல், இயல்பல்லாத புள்ளிமுன் உயிர்வந்தாலும் இவ்விதி கொள்க.

எ - டு: அதனை எனவும், நாடுரி எனவும் வரும்.

புள்ளியீற்று முன்னும் என, தொகுத்து நின்ற உம்மையை விரித்ததனனே குற்றியலுகரத்தின் முன்னும் இவ்விதி கொள்க.

எ - டு: நாகரிது என வரும்.

(வி - ரை) குற்றியலுகர வீறும் புள்ளியீறு போலத் தன் வடிவம் கெடாது உயிரேற இடங்கொடுக்கும் என்பது இளம்பூரணருக்கும், நச்சினர்க்கினியருக்கும் கருத்தாகும். ஆசிரியருக்கும் இதுவே கருத்தாதலை,

'ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே' (459)

'ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மரபே' (470)

என்னும் நூற்பாக்களால் தெரியலாம். ஆயினும் திரு. கணேச ஐயர் அவர்கள் 'யகரம் வருவழி இகரம் குறுகும், உகரக்கிளவி துவரத் தோன்ருது' என்ற நூற்பாவை உற்று நோக்கின், குற்றியலுகரம் கெட்டு உயிரேறி முடியும் எனத் தெரிகின்றது என்பர். எனினும், முற்றியலுகரம் வருமொழியில் உயிர் வரக் கெட்டு முடியும் என உருபியல் 4 - ஆம் நூற்பாவானும், புள்ளி மயங்கியல் – 96 – ஆம் நூற்பாவானும் கூறியது போலக் குற்றிய லுகரமும் வருமொழியில் உயிர்வரக் கெட்டு முடியும் என ஆசிரியர் கூருதது ஆய்தற்குரியதே யாகும்.

நன்னூலார் 'உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்' என்பர். தொல்காப்பிய உரையாசிரியர்கள் உயிர்வரின் உக் குறள் மெய்விட்டு ஓடாது, குற்றியலுகரவீறும், வரும் உயிரும் ஒன்றுபட்டு நிற்கும் என்பர்.

'உடல்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே' (நன் – 204) என்பர் நன்னூலாரும். (36)

140. மெய்யுயிர் நீங்கின் தன்னுரு வாகும்.

இது, புணர்ச்சியிடத்து உயிர்மெய் உயிர்நீங்கியவழிப் படுவ தொரு விதி கூறுதல் நுதலிற்று.

இ– ள்: மெய் உயிர் நீங்கின் தன் உரு ஆகும் – மெய் தன்ளெடு கூடிய உயிர் புணர்ச்சியிடத்து நீங்கிய வழித் தன் புள்ளி வடிவு பெறும் எ. று.

எ - டு: அதனை - அதன் + ஐ என வரும். (37)

141. எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் [1]உருபுகொளல் வரையார்.

இஃது, உயிரீறு உயிர்முதன் மொழியொடு புணரும்வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

---

1. உருவுகொளல் என்பது நச்சினர்க்கினியர் பாடம்.

இ-ள் : எல்லா மொழிக்கும் – மூவகைப்பட்ட மொழிக்கும், உயிர் வரு வழி - உயிர் முதன்மொழி வரும் இடத்து, உடம்படு மெய்யின் உருபு கொளல் வரையார் - இடை உடம்படு மெய் வடிவு கோடலை நீக்கார் எ . று.

எ-டு : புளியங்கோடு, எருவங்குழி, விளவத்துக்கொட்கும் என வரும்.

'உரையிற் கோடல்' என்பதனால், உடம்படுமெய்யாவன யகரமும் வகரமும் எனக்கொள்க. இகரவீறும் ஈகாரவீறும் ஐகாரவீறும் யகரவுடம்படுமெய் கொள்வன ; அல்லன வெல்லாம் வகரமெய் கொள்வன.

'ஒன்றென முடித்தல்' என்பதனான், விகாரப்பட்ட மொழிக்கண்ணும் உடம்படுமெய் கொள்க.

எ – டு : மரவடி, ஆயிருதிணை என வரும்.

'வரையார்' என்றதனால், உடம்படுமெய்கோடல் ஒருதலை அன்றென்பது கொள்ளப்படும்.

எ - டு : கிளி அரிது, மூங்கா இல்லை என வரும்.

(வி – ரை) உயிரீற்றின் முன் உயிர் முதல்வரின், உயிரோடு உயிர்க்கு மயக்கமின்மையின் உடம்படாத அவ்விரண்டையும் உடம்படுத்தற் பொருட்டு இடையே வரும் மெய்யை உடம்படு மெய் என்பர், ஆசிரியர் தொல்காப்பியர் பொதுவாக உடம்படு மெய்வரும் என்றனரேயன்றி, இன்னின்ன உயிர்முன் இன்னின்ன எழுத்துக்கள் உடம்படு மெய்யாக வரும் என்றாரல்லர். இளம் பூரணர், 'உரையிற் கோடலால்' இதனை விளக்கினர். நச்சினார்க் கினியரும் அவரையே தழுவி உரைத்தனர். நன்னூலாரும் இளம்பூரணர் கருத்தைத் தழுவியே,

> 'இஈ ஐவழி யவ்வும், ஏனை
> உயிர்வழி வவ்வும், ஏமுன் இவ்விருமையும்,
> உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.
>
> (உயிரீற்றுப் - 12)

என்றுரைத்தனர். (38)

142. எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையில் திரிதல் நிலைஇய பண்பே.

இஃது, எழுத்துக்கள் ஒன்று பலவாதல் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: எழுத்து ஓர் அன்ன பொருள் தெரி புணர்ச்சி - எழுத்து ஒரு தன்மையான பொருள் விளங்கிநிற்கும் புணர் மொழிகள், இசையில் திரிதல் நிலைஇய பண்பு - ஓசை வேற்றுமை யால் புணர்ச்சி வேறுபடுதல் நிலைபெற்ற பண்பு எ. று.

எ-டு: செம்பொன்பதின்றொடி, குன்றேறுமா என வரும்.
(39)

143. அவைதாம்
முன்னப் பொருள புணர்ச்சி வாயின்
இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே.

இது, மேலதற்கு ஒரு புறனடை கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அவைதாம் - மேற்சொல்லிய புணர்மொழிகள் தாம், முன்னப் பொருள - முன்னத்தினுல் உணரும் பொருண்மையை யுடைய; புணர்ச்சிவாயின் இன்ன என்னும் எழுத்துக்கடன் இல - அவை புணர்ச்சியிடத்து இத்தன்மைய வென்னும் எழுத்து முறைமையை உடையவல்ல எ. று.

செம்பொன்பதின்றொடி என்றவழி, பொன்னுராய்ச்சி உள் வழிப் பொன்னெனவும், செம்பாராய்ச்சி உள்வழிச் செம்பெனவும் குறிப்பால் உணரப்பட்டது.

மற்று, இதன்மேல் 'இசையில் திரிதல் நிலைதல்' என அறியுமாறு கூறினுனன்றேவெனின், ஓசை என்றமையான் அஃது ஒலியெழுத்திற்கெனவும், 'இன்னவென்னுமெழுத்துக் கடனில' என்றதனுன் இது வரிவடிவிற்கெனவுங் கொள்க.

(வி-ரை) 142, 143-ஆம் நூற்பாக்களைத் தொகுத்தே நன்னூலாரும், 'எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி, இசைத்திரி பால்தெளி வெய்தும் என்ப' (பொது-40) என்றனர்.

செம்பொன்பதின்தொடி என்பது செம்பொன் + பதின் தொடி என்றும், செம்பு + ஒன்பதின் தொடி என்றும் பிரிந்து பொருள் படுதல் காண்க. குன்றேருமா என்பதும் குன்று ஏரு + மா எனவும், குன்று ஏறு + ஆமா எனவும் பிரிந்து பொருள்படுதல் காண்க. (40)

புணரியல் முற்றிற்று.

6

தொகைமரபு

பொருளமைப்பு

மொழிகள் தம்முட் புணரும் இயல்பினையும், அவை புணரும் இடத்து வரும் சாரியைகளையும், அவற்றின் திரிபுகளையும் மேல் புணரியலில் கூறிய ஆசிரியர், இனி அம்மொழிகள் புணருமாற்றைத் தொகுத்து இவ்வியலில் கூறுகின்றாராதலின் இது மேலதனோடு இயைபுடைத்தாயிற்று.

உயிரீறு 12, மெய்யீறு 11, குற்றியலுகர ஈறு 1 ஆக இவ் விருபத்து நான்கு ஈறுகளும் ஒரே விதமான புணர்ச்சிவிதிகள் பெறுவதைத் தொகுத்து, அவற்றைத் தொன்றுதொட்டு வரும் மரபிற் பிழையாது கூறுதலின், இது 'தொகை மரபு' எனப்பெயர் பெற்றது. இவ்வீறுகள் இருபத்து நான்கும் ஒரேவிதி பெறுதல் இன்றித் தனித்தனியே புணர்ச்சிவிதி பெறுமாற்றை மேல் உயிர் மயங்கியல் முதலாகவுள்ள மூன்றியல்களிலும் கூறுவர் ஆசிரியர். இவ்வியலில் கூறப்படுவன எல்லாம் 2 ஈறுகள் முதல் 24 ஈறுகள் வரையில் உள்ள ஒரே விதி பெறும் பல எழுத்துக்களுக்காகும்.

இவ்வியலில் கூறப்படும் செய்திகளை ஐந்து வகையாகப் பிரித்து அறியலாம். அவை: 1. பொதுப்புணர்ச்சி, 2. வேற்று

மைப் புணர்ச்சி, 3. சாரியை பெறும் மொழிகள், 4. மரூஉ முடிபு, 5. புறனடை என்பன.

1. பொதுப்புணர்ச்சி :

(அ) ஈறுபற்றியன :

உயிரீறும் புள்ளியீறும் ஆகிய இருபத்து நான்கு ஈறுகளும் நிலைமொழிகளாய் நிற்க, வருமொழியில் க, ச, த, பக்கள் வரின், அவற்றிற்கு இனமாய ங, ஞ, ந, ம என்னும் எழுத்துக்கள் தோன்றும். இந்நிலைமொழிகளின்பின் ஞ, ந, ம என்னும் மென் கணமும், ய. வ என்னும் இடைக்கணமும், உயிர்க்கணமும் வரு மொழிகளாய் வரின் திரிபின்றி இயல்பாகும். முற்கூறிய மூன்று கணத்துள் மென்கணம் வரின் இயல்பாதலேயன்றி மிக்கு முடிவன வும் உள. ணகர னகர ஈறுகள் : இவ்வீறுகள் நிலைமொழியில் நிற்ப, வருமொழியில் யகர ஞகரங்கள் வரின், வருமொழியில் யகரம் நிற்கும் நிலைக்களத்து ஞகரம் நிற்பினும் பொருந்தும். இவ்வீறுகளின் முன்னர் மொழி முதலாகும் இருபத்திரண்டு ஈறுகளும் வருமொழியாய் வரின், அல்வழியில் திரியாவாம். வேற்றுமையிலும் வன்கணம் அல்லாத பிறகணம்வரின் திரியா வாம். லகர னகர ஈறுகள் : இவ்வீற்றின் முன் தகர நகரங்கள் வரின் அவை முறையே றகர னகரங்களாகும். ணகர ளகர ஈறுகள்: இவ்வீறுகளின் முன் தகர நகரங்கள் வரின் அவை முறையே டகர, ணகரங்களாகத் திரியும். நெட்டெழுத்துக்களின் பின்னின்ற ஒற்றுக்கெடுதலும், குற்றெழுத்துக்களின் பின்னின்ற ஒற்று இரட்டித்தலும் விதியாம்.

(ஆ) சொல்பற்றியன :

உயிரும் புள்ளியும் இறுதியாகவுடைய முன்னிலைச் சொற்கள் நிலைமொழியாய் நிற்க, வருமொழியில் வல்லெழுத்துவரின் இயல் பாதலும் உண்டு; உறழ்ந்து வருதலும் உண்டு. மேற்கூறிய முன்னிலைச் சொற்களில் ஔகார வுயிரை இறுதியாகவுடைய

சொற்களுக்கும், ஞ, ந, ம, வ, என்பவற்றை இறுதியாகவுடைய சொற்களுக்கும், குற்றியலுகரத்தை இறுதியாகவுடைய சொற்களுக்கும் இவ்விதி பொருந்தா.

(இ) பெயர்பற்றியன :

(i) உயர்திணைப்பெயர் : உயிரையும் புள்ளியையும் இறுதியாக வுடைய உயர்திணைப் பெயர்கள் நிலைமொழியாய் நிற்க, வருமொழியில் நாற்கணமும் வரின், வேற்றுமை அல்வழி ஆகிய ஈறிடத்தும் இயல்பாம். இவற்றுள் இகர ஈற்றுப்பெயர்களுட் சில திரிந்தும் வரும்.

(ii) அஃறிணைப்பெயர் : இகர ஐகார ஈற்று அஃறிணைப் பெயர்கள் வருமொழியில் வல்லினம் வர இயல்பாய் முடிதலும் வல்லெழுத்து மிக்கு முடிதலும், உறழ்ச்சியாய் முடிதலும் ஆகிய இலக்கணங்களை யுடையனவாம்.

(iii) விரவுப்பெயர் : அஃறிணை விரவுப் பெயர்களில் இயல்பாய் முடிவனவும் உள. திரிந்து முடிவனவும் உள.

2. வேற்றுமைப்புணர்ச்சி :

(i) இரண்டாம் வேற்றுமை : மெல்லெழுத்து வருமிடத்து வல்லெழுத்து வருதலும், வல்லெழுத்து வருமிடத்து மெல்லெழுத்து வருதலும், இயல்பாக வருமிடத்து ஒற்று மிகுந்து வருதலும், உயிர் மிக வருமிடத்து மிகாது வருதலும், சாரியை பெறுமிடத்துப் பெருது வருதலும், சாரியை நின்றவிடத்துத் தன்னுருபாகிய ஐயுருபைப் பெற்று வருதலும் சாரியை வருமிடத்து அது வாரா திருத்தலேயன்றி இயல்பாயும், மிக்கும், உறழ்ந்தும் வருதலும், உயர்திணையிடத்தும், விரவுப் பெயரிடத்தும் தன்னுருபு விரிந்து வருதலும், ஒற்றுத் திரியுமிடத்துத் திரியாது வருதலும், இவை போல்வன பிறவும் ஐகார வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் இலக்கணங்களாகும்.

(ii) மூன்றும் வேற்றுமை: உயிரையும் புள்ளியையும் இறுதியாகவுடைய சொற்களின்முன், மூன்றும் வேற்றுமைப் பொருட்குரிய வினைமுதற்பொருளான் உளவாகிய தொழிற் சொல்வரின் இயல்பாய் முடிவனவும் உள; உறழ்ந்து முடிவனவும் உள.

(iii) ஆறனுருபும் நான்கனுருபும்: நெடுமுதல் குறுகும் மொழிகளின்முன் இவ்வீருருபுகளும் வரின், 'குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும்' என்னும் விதியைப் பெறாது, அவ்விடத்து ஒரு அகரம் மட்டும் பெறும். நும் என்னும் சொல்லும் இவ் விதியைப் பெறும்.

(iv) ஏழாம் வேற்றுமை: சுட்டையும் வினாவையும் முதலாக வுடைய இகர வீற்றுச் சொற்களும், சுட்டெழுத்தை முதலாக வுடைய ஐகாரஈற்றுச் சொற்களும், யா வினாவை முதற்கண் உடைய ஐகாரஈற்றுச் சொற்களும், ஏழாம்வேற்றுமை இடப் பொருள்பட நிற்பனவாம். இவை வல்லெழுத்து வருவழி வல் லெழுத்து மிகுந்தும், உறழ்ந்தும் வரும் இயல்பினவாம்.

3. சாரியை பெறும் மொழிகள் :

உயிரையும் புள்ளியையும் இறுதியாகவுடைய அளவுப்பெயர் களும், நிறைப்பெயர்களும், எண்ணுப்பெயர்களும், தத்தமக்குக் குறைவான அளவும் நிறையும் எண்ணும் உடைய சொற்களோடு புணருங்கால், ஏ என்னும் சாரியை பெறும். இம்மூவகைப் பெயர் முன்னும் அரையென்னும் சொல் வருமேல், அவ்வேகாரம் பெறாது வரும். குறை என்னும் சொல்வரின் வல்லெழுத்து மிக்கு முடியும். இம்மூவகைப் பெயர்களும் குற்றியலுகரத்தை இறுதியாகப் பெற்றுக் குறையென்னும் சொல்லொடு புணரின், இன்சாரியை பெறும். கலம் என்னும் பெயர் குறை என்பதனோடு புணரின் அத்துச்சாரியை பெறும். பனை, கா என்னும் பெயர்கள் குறை என்பதனோடு புணரின் இன்சாரியை பெறும். அளவிற்கும் நிறை யிற்கும் மொழி முதலாக வரும் எழுத்துக்கள் க,ச, த, ப, ந, ம, வ, அ, உ என்ற ஒன்பதாம்.

4. மரூஉ முடிபு :

யாவர் என்னும் பெயரின் இடையிலுள்ள வகரம் கெடுதலும், யாது என்னும் பெயரின் இடையில் வகரம் தோன்றுதலும் இயற்கையாகும்.

5. புறனடை :

இதுகாறும் உயிரும் புள்ளியும் இறுதியாகவுடைய சொற்கள் பலவற்றிற்கும் கூறப்பட்ட முடிபினும் வேறுபட்ட முடிபு வருமாயின் அவற்றுள் வழக்கொடு பொருந்தியவற்றை ஏற்றுக் கொள்க என்பதாம்.

தொகைமரபு

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மேல் அகத்தோத்தினுள் இருபத்துநான்கு ஈற்றினும் விரிந்து முடிவனவற்றை யெல்லாம் தொகுத்து முடித்தலின் தொகைமரபு எனப்பட்டது. மேல் புணரியலுட் கூறிய கருவிகளாற் செய்கைகூறும் வழி, தொக்குப்புணருஞ் செய்கை கூறலிற் புணரியலோடு இயைபுடைத்தாயிற்று.

144. கசதப முதலிய மொழிமேல் தோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ங ஞ ந ம வென்னும் ஒற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான.

இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அல்வழியும் வேற்றுமையுமாகிய இருவழிக்கண்ணும், உயிர்மயங்கியலையும் (218), புள்ளி மயங்கியலையும் (301, 315) நோக்கியதோர் வருமொழிக் கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் : க ச த ப முதலிய மொழிமேல் தோன்றும் மெல்லெழுத்து இயற்கை - உயிரீற்றினும் புள்ளியீற்றினும் இருவழியும் க ச த ப க்களை முதலாகவுடைய மொழிகளின்மேல் தோன்றும்

மெல்லெழுத்தினது இயல்புகூறின், சொல்லிய முறையான் ங ஞ ந ம வென்னும் ஒற்றாகும்-மெல்லெழுத்து மேற்சொல்லும் முறைமையான் க ச த பக்களுக்கு நிரனிறை வகையானே ங ஞ ந ம வென்னும் ஒற்றாகும். அன்ன மரபின் மொழிவயின் ஆன - அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய மொழிகளிடத்து எ. று.

எ - டு: விளங்கோடு, செதிள், தோல், பூ எனவரும்.

'தோன்றும்' என்றதனால், தோன்றி நின்றனவும் அவ்வாறே திரிந்து மெல்லெழுத்தா மென்பது.

எ - டு: மரங்குறிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

அன்னமரபின் மொழியன்மையின், விளக்குறுமை என்புழி மெல்லெழுத்து மிகாதாயிற்று. (1)

145. ஞ ந ம ய வ வெனும் முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட
அன்றி யனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொன்முன் இயல்பா கும்மே.

இஃது, இருபத்துநான்கு ஈற்றின் முன்னும், வன்கண மொழிந்த கணங்கட்கு இருவழியும் வருமொழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஞ ந ம ய வ எனும் முதல் ஆகு மொழியும் - ஞ ந ம ய வ என்று சொல்லப்படும் முதலெழுத்து உளவாகும் மொழியும், உயிர்முதலாகிய மொழியும் உளப்பட - உயிர்முதலாகிய மொழியு மாக, அன்றி அனைத்தும் எல்லா வழியும் - அவ்வனைத்துமொழியும் அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லாவிடத்தும், நின்ற சொல் முன் இயல்பாகும் - இருபத்துநான்கு ஈற்றுப் பெயராகிய நிலை மொழி முன்னர் இயல்பாகி முடியும் எ. று.

ஈண்டு 'உளப்பட' வென்பது ஆகவென்னும் பொருண்மைத்து.

எ - டு: விள, தாழ் என நிறுத்தி ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, அடைந்தது, ஆடிற்று, இடிந்தது,

ஈரிற்று, உடைந்தது, ஊறிற்று, எழுந்தது, ஏறிற்று, ஐது, ஒடிந்தது, ஓடிற்று, ஔவியத்தது, நுந்தையது எனவும்; ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு, ஆட்டம், இடிபு, ஈட்டம், உடைபு, ஊற்றம், எழு, ஏணி, ஐயம், ஒடுக்கம், ஓக்கம், ஔவியம், நுந்தை எனவும் ஒட்டிக்கொள்க.

'எல்லாம்' என்றதனுன், ஒற்றிரட்டலும், உடம்படுமெய் கோடலும் உயிரேறி முடிதலும் எனவரும் இக்கருவித்திரிபு (மூன்று திரிபும் அன்மையின்) திரிபெனப் படாவென்பது கொள்க. இஃது இருபத்துநான்கு ஈற்றிற்கும், அல்வழியினும், வேற்றுமையினும், அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரத்தான் முடிவதனை, ஈண்டு ஒரு சூத்திரத்தான் தொகுத்து முடித்ததாயிற்று, மேலும் இவ்வாறே தொகுத்து முடிக்கின்றவாறு அறிக.

(வி - ரை) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் இருபத்து நான்கு ஆகும். அவை யனைத்தும் ஒரே விதிபெறின், அவ் விதிகளை இவ்வியலில் கூறுவர். உயிர் மயங்கியல் முதலானவற்றில் இவ்விதிகளைக் கூறின், அவை ஒரே விதிபெறினும், அல்வழியிலும் வேற்றுமையிலும் தனித்தனியே விதிகூற வேண்டும். 24 ஈறுகட்கும் அல்வழி வேற்றுமை ஆகிய இரண்டிலும் பெறும் புணர்ச்சியைத் தனித்தனியே கூறின்; நூற்பா 48- ஆகப் பல்கும். அதனை விலக்கவே இங்ஙனம் ஒரே விதி பெறும் ஈறுகளைத் தொகுத்துச் சுருங்கச் சொல்லியுள்ளார் ஆசிரியர். (2)

146. அவற்றுள்
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி இறுதி யான.

இது, மேற்கூறிய முடிபிற் சிலவற்றிற்கு, அம்முடிபு விலக்கிப் பிறிது விதி எய்துவித்தல் நுதலிற்று.

இ - ள்: அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட மூன்று கணத்தினும், மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார் - மெல்

லெழுத்தினது இயல்பு இயல்பாதலே யன்றி உறழ்ந்துமுடியினும் நீக்கார், சொல்லிய தொடர்மொழி இறுதியான - சொல்லப்பட்ட தொடர்மொழி ஈற்றுக்கண் எ. று.

எ - டு: கதிர்ஞெரி, கதிர்ஞ்ஞெரி, நுனி, முரி என வரும்.

வருமொழி முற்கூறியவதனால், ஓரெழுத்தொரு மொழியுள்ளும், ஈரெழுத்தொரு மொழியுள்ளும் சிலவற்றிற்கு உறழ்ச்சி முடிபு கொள்க.

எ – டு: பூஞெரி, பூஞ்ஞெரி, நுனி, முரி எனவும்; காய்ஞெரி, காய்ஞ்ஞெரி நுனி, முரி எனவும் வரும்.

'சொல்லிய' என்றதனன், ஓரெழுத்தொரு மொழியுள்ளும் ஈரெழுத்தொரு மொழியுள்ளும் சிலவற்றிற்கு மிக்கு முடிதல் கொள்க.

எ - டு: கைஞ்ஞெரித்தார், நீட்டினர், [1]முறித்தார் எனவும், மெய்ஞ்ஞானம், மெய்ந்நூல், மெய்ம்மறந்தார் எனவும் வரும்.

(வி - ரை) இதற்கு முன்னேய நூற்பாவையும், இந்நூற்பாவில் 'சொல்லிய' என்பதால் கூறப்பட்ட உரையையும் தழுவியே நன்னூலாரும்,

'எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரும் ஞநமய வக்கள் இயல்பும்
குறில்வழி யத்தனி ஐந்நொது முன்மெலி
மிகலுமாம்' (உயிரீற்றுப் — 8)

எனக் கூறினர்.

இந்நூற்பா உரையில் சங்கரநமச்சிவாயர் 'மெலி மிகலுமாம்' என எண்ணின்கண் நிற்கும் எச்சவும்மையானே, நொ, து என்னும் இரண்டு சொல் முன்னும் இடையினம் மிகலுமாம் எனக் கூறினுராயிற்று எனக்கூறி அதற்கு அரணுக இடையினம் மிகுதலே

1. மடித்தார் என்பதும் பாடம்.

ஆசிரியர் தொல்காப்பியரும், 'அவற்றுள் மெல்லெழுத்தியற்கை யுறழினும் வரையார்' என உம்மையால் தழீஇயினுர் என்பர். எனினும் இது தொல்காப்பியருக்குக் கருத்தன்ரும். (3)

147. ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினை யோரனைய என்மனார் புலவர்.

இது, யகர ஞகரங்கள் முதலாம்வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

இ - ள்: ண ன என் புள்ளிமுன் - ண ன என்று சொல்லப் படும் புள்ளிகளின்முன், யாவும் ஞாவும் வினை ஓர் அனைய என்மனார் புலவர் - யாவும் ஞாவும் வினைச்சொற்கண் முதலாதற்கு ஒரு தன்மைய வென்று சொல்லுவர் [1]புலவர் எ. று.

எ - டு: மண்யாத்த எனவும், பொன்யாத்த எனவும், மண் ஞாத்த எனவும், பொன்ஞாத்த எனவும் வரும்.

ஞா முற்கூருது யா முற்கூறியவதனுன், யா முதன் மொழிக் கண் ஞா வருமென்று கொள்க.

(வி - ரை) நெடுங்கணக்கு முறைப்படி ஞகரத்தின் பின்பே யகரம் வரும். அங்ஙனமாகவும் யாமுற்கூறியதற்குக் காரணம் யா நின்றவிடத்து ஞா நிற்குமேயன்றி, ஞாநின்றவிடத்து யா நிற்காது என்பது அறிவித்தற்கே யாகும். மண்யாத்த என்பது மன்ஞாத்த எனவரும்; ஆனல் 'மண்ஞான்றது' என்பது 'மண் யான்றது' என வாராது.

இந் நூற்பாவின் கருத்தை நன்னூலார் ஏற்றுச் செய்யா மைக்குக் காரணம் இறந்தது விலக்கலாம் என்பர் சங்கரநமச் சிவாயர். (நன்-எழுத்-124: உரை காண்க.) (4)

148. மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்
வருவழிநின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிடன் இலவே.

---

1. ஆசிரியர் என்பதும் பாடம்.

இது, ணகாரவீற்றிற்கும் னகாரவீற்றிற்கும் அல்வழிக்கண் நிலைமொழி முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள்: மொழிமுதல் ஆகும் எல்லா எழுத்தும் வருவழி - மொழிக்கு முதலாமென்று சொல்லப்பட்ட இருபத்திரண்டெழுத்தும் வருமிடத்து, நின்ற அ இரு புள்ளியும் வேற்றுமை அல்வழி திரிபு இடன் இல - [1]மேற்சொல்லி நின்ற ண னக்களாகிய அவ்விரு புள்ளியும் வேற்றுமையல்லாத அல்வழியினிடத்துத் திரியும் இடம் இல எ. று.

எ-டு: மண், பொன் என நிறுத்தி, கடிது, சிறிது, தீது, பெரிது என வன்கணத்தோடு ஒட்டுக. பிற கணத்துக்கண்ணும் அவ்வாறே ஒட்டுக.

வருமொழி முற்கூறிய வதனுன், ணகாரத்திற்குச் சிறுபான்மை திரிபும் உண்டெனக் கொள்க.

எ-டு: சாட்கோல் என வரும்.

(வி-ரை) மேல் 'நின்ற சொல்முன் இயல்பாகும்மே' (145) என்றது வருமொழி பற்றித் திரியாமை கூறியதாகும். இது நிலை மொழி பற்றித் திரியாமை கூறியதாகும். (5

149. வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி
மேற்கூ றியற்கை யாவயி னான.

இஃது, அவ்விரண்டு ஈற்றிற்கும் வேற்றுமைக்கண் நிலைமொழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமைக்கண்ணும் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும், வல்லெழுத்து அல்வழி - வல்லெழுத்து அல்லாதவிடத்து, மேல்கூறு இயற்கை ஆவயின் ஆன - மேற் கூறிய இயல்பு முடிபாம் அவ்விரண்டு புள்ளியிடத்தும் எ.று.

எ-டு: மண், பொன் என நிறுத்தி, ஞாற்சி, நீட்சி என வன்கணம் ஒழித்து எல்லாவற்றோடும் ஒட்டுக.

---

1. ''பெயர்சொல்லினின்ற'' என்பதும் பாடம்.

(வி-ரை) 148, 149, 303, 333 ஆகிய நான்கு நூற்பாக்களின் கருத்தையும் தொகுத்தே நன்னூலாரும்,

ணன வல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்(கு) அல்வழிக்(கு)
அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.
(நன்—209)

எனக் கூறினர். (6)

150. லனவென வரூஉம் புள்ளி முன்னர்
த ந எனவரிற் றனவா கும்மே.

இது, புள்ளி மயங்கியலை நோக்கியதோர் வருமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் : ல ன என வரும் புள்ளி முன்னர் – ல ன என்று சொல்ல வருகின்ற புள்ளிகளின் முன்னர், த ந என வரின் - த ந என வருமொழி வரின், ற ன ஆகும் – அத் தகர நகரங்கள் நிரனிறையானே றகர னகரங்களாம், எ. று.

எ-டு: கஃறீது, கன்னன்று, பொன்றீது, பொன்னன்று என வரும்.

(வி - ரை) கல் + தீது = கஃறீது. கல் + நன்று = கன்னன்று இவற்றிற்கு வருமொழித்திரிபே ஈண்டுக் கூறப்பட்டுள்ளது. நிலைமொழித்திரிபு முறையே 370, 368 ஆம் நூற்பாக்களால் கூறப்படும் பொன் + தீது = பொன்றீது; பொன் + நன்று = பொன்னன்று என்பன வருமொழித்திரிபேயுடைய வாகலின் ஈண்டே அடங்கின. (7)

151. ணளவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்.

இதுவும் அது.

இ-ள்: ண ள என் புள்ளிமுன் - ண ள என்னும் புள்ளிகளின் முன்னர் (அதிகாரத்தினல் தகர நகரங்கள் வரின்), டண எனத் தோன்றும் – அவை நிரனிறையால் டகார ணகரங்களாய்த் தோன்றும் எ. று.

எ - டு : மண்டீது, மண்ணன்று, முஃடீது, முண்ணன்று என வரும்.

(வி - ரை) மண் + தீது = மண் டீது; மண் + நன்று = மண் ணன்று. இவை இந்நூற்பாவால், வரும் எழுத்துத் திரிந்து முடிந்தது. முள் + தீது = முஃடீது; முள் + நன்று = முண்ணன்று. இவற்றிற்கு வருமொழித்திரிபு இந்நூற்பாவால் அமைந்தது. நிலைமொழித்திரிபு முறையே 400, 398 - ஆம் நூற்பாக்களால் கூறப்படும்.

150, 151 ஆகிய இரு நூற்பாக்களையும் தொகுத்தே நன்னூலாரும்,

'னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே' (மெய்யீற்றுப் - 34)

என்றனர். (8)

152. உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பா குநவும் [1]உறழ்பா குநவுமென்று
ஆயீ ரியல வல்லெழுத்து வரினே.

இது, முன்னிலை வினைச்சொல் வன்கணத்துக்கண் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : உயிர் ஈருகிய முன்னிலைக் கிளவியும் புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும் - உயிர் ஈருகிய முன்னிலைச் சொற்களும் புள்ளி இறுதியையுடைய முன்னிலைச் சொற்களும், வல்லெழுத்து வரின் - வல்லெழுத்து முதல்மொழி வரின், இயல்பு ஆகுநவும் உறழ்பு ஆகுநவும் என்று அ ஈர் இயல - இயல்பாவனவும் உறழ்ச்சியாவனவும் என அவ்விரண்டு இயல்பினையுடைய எ . று.

உயிரீறு புள்ளியீறு என்றமையான், முன்னிலை வினைச்சொல் என்பது கொள்க.

1. 'உறழாகுநவும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

எ - டு : எறிகொற்று, கொணகொற்று, சாத்தா, தேவா, பூதா, எனவும்; உண்கொற்று, தின்கொற்று எனவும் வரும். இவை இயல்பு. நடகொற்று, நடக்கொற்று எனவும், ஈர்கொற்று, ஈர்க்கொற்று எனவும் வரும். இவை உறழ்ச்சி.

(வி-ரை) தொல்காப்பியர் முன்னிலைவினை எனக் கூறியதை ஏவல்வினை, முன்னிலைவினை எனப் பிரித்தும், 'புள்ளியிறுதி' எனப் பொதுப்படக்கூறியதை யரழ இறுதி என விதந்தும் நன்னூலார்,

'ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே'
(உயிரீற்றுப் - 11)

எனக் கூறினர்.

தொழிலுணர்த்துவன முன்னிலை வினையென்றும், தொழிற் படுத்துவன ஏவல்வினையென்றும் வேற்றுமை காண்பர் நச்சினார்க் கினியர். (9)

153. ஔவென வருஉம் உயிரிறு சொல்லும்
ஞ ந ம வ வென்னும் புள்ளி யிறுதியும்
குற்றிய லுகரத் திறுதியும் உளப்பட
முற்றத் தோன்று முன்னிலை மொழிக்கே.

இது, மேல் முடிபு கூறியவற்றுட் சிலவற்றிற்கு அம்முடிபு விலக்குதல் நுதலிற்று.

இ - ள் : ஔ எனவரும் உயிர் இறு சொல்லும் - ஔ என வருகின்ற உயிரீற்றுச் சொல்லும், ஞ ந ம வ என்னும் புள்ளி இறுதியும் - ஞ ந ம வ என்று சொல்லப்படும் புள்ளியீற்றுச் சொல்லும், குற்றியலுகரத்து இறுதியும் உளப்பட - குற்றிய லுகரமாகிய இறுதியையுடைய சொல்லுமாகிய இவை, முன்னிலை மொழிக்கு முற்றத் தோன்று - முன்னிலைமொழிக்குக் கூறிய இயல்பும் உறழ்வுமாகிய முடிவிற்கு முற்றத்தோன்று எ . று.

'முற்ற' என்றதனான், ஈண்டு விலக்கப்பட்டவற்றுட் குற்றிய லுகர ஈறு ஒழித்து, ஒழிந்தனவெல்லாம் நிலைமொழி உகரம்

பெற்று, வருமொழி வல்லெழுத்து உறழ்ந்து முடிதலும், குற்றிய லுகர ஈறு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலுங் கொள்க.

எ – டு: கௌவுகொற்ரு, கௌவுக்கொற்ரு, உரினுகொற்ரு, உரினுக்கொற்ரு, பொருநுகொற்ரு, பொருநுக்கொற்ரு, திருமுகொற்ரு, திருமுக்கொற்ரு, தெவ்வுகொற்ரு, தெவ்வுக்கொற்ரு எனவும்; கூடுகொற்ரு, [1]கூடுக்கொற்ரு எனவும் வரும். (10)

154. உயிரீ ருகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப.

இஃது, உயர்திணைப் பெயர் நான்கு கணத்துக்கண்ணும், இருவழியும் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உயிர் ஈருகிய உயர்திணைப் பெயரும் - உயிர் ஈருகிய உயர்திணைப் பெயர்களும், புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும் - புள்ளி இறுதியையுடைய உயர்திணைப் பெயர்களும், எல்லா வழியும் இயல்பு என மொழிப – நான்கு கணத்திலும் அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லாவிடத்தும் இயல்பாம் என்று சொல்லுவர் எ. று.

எ - டு: நம்பி எனவும் அவன் எனவும் நிறுத்தி, அல்வழிக்கண் குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும்; ஞான்ருன், நீண்டான், மாண்டான் என்வும்; யாவன் வலியன் எனவும்; அடைந்தான், ஔவியத்தான் எனவும்; வேற்றுமைக்கண் கை, செவி, தலை, புறம் எனவும்; ஞாற்சி, நீட்சி, மாட்சி எனவும்; யாப்பு, வலுமை எனவும்; அடைபு, ஔவியம் எனவும் ஒட்டுக. ஒருவென் என நிறுத்தி, குறியென், சிறியயென் எனவும்; கை, செவி, தலை, புறம் எனவும் தன்மைப்பெயர்க் கண்ணும் ஒட்டுக.

'உயிரீறு' 'புள்ளியிறுதி' என்றதனல், உயர்திணைப்பெயருள் இயல்பன்றி முடிவனவெல்லாம் கொள்க.

1. 'கூட்டுக் கொற்ரு' என்பதும் பாடம்.

எ - டு : பல்சான்றூர், கபிலபரணர், இறைவநெடு வேட்டுவர், மருத்துவமாணிக்கர், பல்லரசர் என இவை ஈறுகெட்டு முடிந்தன. கோலிகக்கருவி, வண்ணாரப்பெண்டிர், ஆசீவகப்பள்ளி என இவை ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்கன. குமரகோட்டம், குமரக் கோட்டம், பிரமகோட்டம், பிரமக்கோட்டம் என இவை ஈறுகெட்டு வல்லெழுத்து உறழ்ந்து முடிந்தன. பிறவும் அன்ன.

'எல்லாம்' என்றதனால், உயர்திணைச்சொல் இயல்பாயும் திரிந்தும் முடிவன கொள்க.

எ – டு : உண்ப சான்றூர், உண்டார் சான்றூர், உண்பேன் பார்ப்பேன் என இவை இயல்பு [1]உண்டேஞ் சான்றேம், உண்டே நாம் என இவை திரிந்தன. பிறவும் அன்ன. (11)

155. அவற்றுள்,
[2]இகரஈற் றுப்பெயர் திரிபிட னுடைத்தே.

இஃது, உயர்திணைப்பெயருட் சிலவற்றிற்கு எய்தாதது எய்து வித்தல் நுதலிற்று.

இ - ள் : அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட உயர்திணைப் பெயருள், இகர ஈற்றுப் பெயர் திரிபு இடன் உடைத்து - இகர மாகிய இறுதியையுடைய பெயர் திரிந்து முடியும் இடமும் உடைத்து எ . று.

உறையிற்கோடல் என்பதனான், இது மிக்க திரிபென்பது கொள்ளப்படும்.

எ - டு : எட்டிப்பூ, எட்டிப்புரவு; காவிதிப்பூ, காவிதிப்புரவு ; நம்பிப்பூ, நம்பிப்பேறு என வரும்.

'இடனுடைத்து' என்பதனான், இகர ஈறன்றிப் பிற ஈறும் ஈறு திரியாது வல்லெழுத்து மிக்கு வருவன ஈண்டுக்கொள்க.

1. உண்டனெம் சான்றேம் என்பதும் பாடம்.
2. 'இகர இறுபெயர்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

எ - டு : *திணைப்பூ, திணைப்புரவு* என வரும். (12)

156. அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே.

இது, விரவுப்பெயர் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள் : அஃறிணை விரவுப்பெயர் இயல்பும் உள - உயர் திணையோடு அஃறிணை விரவும் விரவுப்பெயர் இயல்பாய் முடிவனவும் உள ; இயல்பின்றி முடிவனவும் உள எ . று.

இயல்பின்றி முடிவன இன்னவாறு முடியுமென, மேல் (348 - 352) அகத்தோத்தினுட் கூறப்படும்.

எ - டு: சாத்தன்குறியன், சாத்தன்குறிது எனவும்; சாத்தன்கை எனவும் ; இவ்வாறு அல்வழியினும் வேற்றுமையினும் நான்கு கணத்தோடும் ஒட்டிக்கொள்க.

(வி – ரை) அஃறிணை விரவுப் பெயர் – உயர்திணையோடு அஃறிணை விரவும் பெயர். இங்ஙனம் கூறுதற்குரிய காரணத்தை நச்சினார்க்கினியர் நன்கு விளக்குவர். அவர்கருத்து வருமாறு :—

உயர்திணைப் பெயரோடு அஃறிணை சென்று விரவிற் றென்றது என்னை ? சொல்லதிகாரத்து 'இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமையின்' (சொல் - 172) என்று சூத்திரஞ் செய்வாரால் எனின், அதுவும் பொருந்துமாறு கூறுதும். சாத்தன் சாத்தி, முடவன் முடத்தி எனவரும் விரவுப் பெயர்க்கண் உயர் திணைக்கு உரித்தாக ஓதிய ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தி நின்ற ஈற்றெழுத்துக்களே அஃறிணையாண்பாலும் பெண்பாலும் உணர்த்திற்றென்றல் வேண்டும் ; என்னை ? அஃறிணைக்கு ஒருமைப் பாலும் பன்மைப்பாலும் உணர்த்தும் ஈறன்றி ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தும் ஈறுகள் உளவாக ஆசிரியர் ஓதாமையின்; அங்ஙனம் உயர்திணை இருபாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணை யாண்பாலையும் பெண்பாலையும் உணர்த்துதலின், அஃறிணை உயர்திணையோடு சென்று விரவிற்றென்று அவற்றின் உண்மைத்தன்மைத் தோற்றங் கூறுவான் ஈண்டுக்கூறினர். இவ்வாறே விளிமரபின்கட் 'கிளந்த இறுதியஃறிணை விரவுப் பெயர்'

(சொல் - 150) என்புழியும் ஆசிரியர் உயர்திணையோடு அஃறிணை விரவிய விரவுப்பெயரென ஆண்டும் உண்மைத் தன்மைத் தோற்றங் கூறுவர். மாணுக்கன் இனிது உணர்தற்கு இவ்வாறு விரவுப்பெயரினது உண்மைத்தன்மைத் தோற்றம் இரண்டு அதிகாரத்துங் கூறி, அவ்விரவுப்பெயர் வழக்கின்கண் இருதிணைப் பொருளும் உணர்த்தி இருதிணைச் சொல்லாய் நிற்றற்கும் ஒத்த உரிமையவாமெனப் புலப்பட நிற்குமாறு காட்டினுரென்று உணர்க.

154 – ஆம் நூற்பாவையும், இந்நூற்பாவையும் இணைத்தே நன்னூலாரும்,

'பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன்
வன்மை மிகா ; சில விகாரமாம் உயர்திணை'
(நன்—159)

என்றனர். (13)

157. புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்
தம்மி ணுகிய தொழிற்சொல் முன்வரின்
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம்முறை இரண்டும் உரியவை உளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்

இது, மூன்றும் வேற்றுமைத் திரிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : புள்ளி இறுதியும் உயிர் இறு கிளவியும் - புள்ளி யீற்றுச் சொல்லும் உயிரீற்றுச் சொல்லும், வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையான் - வல்லெழுத்தினது மிகுதி மேற்சொல்லும் முறைமையான், தம்மின் ஆகிய தொழிற்சொல் முன்வரின் – அம் மூன்ருவதன் பொருளாகிய வினைமுதற் பொருள்கள் தம்மான் உள வாகிய வினைச்சொற்கள் தாம் அவற்றுமுன் வரின், மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும் அ முறை இரண்டும் உரியவை உள-இயல்பாகலும் உறழத் தோன்றுதலுமாகிய அம்முறைமையினை

யுடைய இரண்டு செய்கையும் உரியன உள, வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்-அவற்றை மேலே வேற்றுமைப் பொருட் புணர்ச்சி முடிபு சொல்லுமிடத்துப் போற்றியறிதல் வேண்டும் எ.று.

எ-டு: நாய்கோட்பட்டான், புலிகோட்பட்டான், சாரப் பட்டான், தீண்டப்பட்டான், பாயப்பட்டான் என இவை இயல்பு. சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான், வளிகோட்பட்டான், வளிக்கோட்பட்டான் என இவை உறழ்ச்சி.

'புள்ளியீறு உயிரீறு' என்றதனால், பேஎய்கோட்பட்டான் பேஎய்க்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் எகரப்பேறு கொள்க. 'உரியவை யுள' என்றதனன், பாம்புகோட்பட்டான், பாப்புக் கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலைமொழியொற்றுத் திரியாமையும் திரிதலும் கொள்க.

(வி-ரை) பின்னர் வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுந்து வரும் எனக்கூறப்பட்ட மெய், உயிர் ஈற்றுச் சொற்களான மூன்றும் வேற்றுமைக்குரிய வினைமுதற் பொருள் நிலைமொழியாய் நிற்ப, அவற்றன் ஆகிய வினையைக் குறிக்கும் சொற்கள் வருமொழியாக வரின் இயல்பாதலும் உண்டு; உறழ்ந்து வருதலும் உண்டு. ஆயினும் இவை பின்னர் உயிர் மயங்கியலிலும் புள்ளி மயங்கியலி லும் வேற்றுமைக்கண் மிகுந்தே வரும் என்று கூறப்படும். அவற்றின் இயல்பு போற்றியறிதல் வேண்டும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

நாய், புலி என்னும் மெய், உயிரீற்றுச் சொற்கள் வேற்றுமைக் கண் வல்லினம் வர, அவ்வெழுத்து மிகும் என்பதை முறையே 358, 236 ஆம் நூற்பாக்களால் ஆசிரியர் கூறுவர். ரகரவீற்றுச் சொற்கள் வல்லினம் வர அவ்வல்லெழுத்து மிகும் என்பதை 363 ஆம் நூற்பாவால் ஆசிரியர் கூறுவர். ஆண்டெல்லாம் நிலை மொழியும் வருமொழியும் பெயராக நிற்கும். ஈண்டோ நிலைமொழி மூன்றும் வேற்றுமைக்குரிய வினை முதலாகவும், வருமொழி அதனல் ஆகிய தொழிற்சொல்லாகவும் நிற்கும். இவ்வேறுபாடு நன்கறியத்தக்கதாகும்.

தம்மினுகிய தொழில் - தம்மாலாகிய தொழிலைக் குறிக்கும் சொல். ஈண்டுத் 'தம்' என்றது மூன்றும் வேற்றுமைக்குரிய வினை முதலையாகும். நாய் கோட்பட்டான் என்பது நாயால் கோட்பட்டான் என விரியும். எனவே நாய், வினை முதலாகவும், அதனுலாகிய தொழில் கோட்படுதலாகவும் தெளியப்படும்.

மெய்ம்மை - உள்ளவாறு. எனவே இயல்பாயிற்று. சேனு வரையர் 'வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்' என்பதற்கு இயல்பாகின்ற இடம், உறழத்தோன்றும் இடம் ஆகிய இவற்றின் வேறுபாடு; போற்றியுணர வேண்டும் எனப் பொருள் காண்பர். (சொல்-115-உரை நோக்குக) இளம்பூரணரும், நச்சினுர்க்கினியரும் இத்தொடருக்கு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் எனப் பொருள் காண்கின்றனர்.

ஈண்டு யகர, ரகர ஈற்றுப் புள்ளியீறுகளும், லகர இகரமும், ளகர இகரமும் ஆகிய உயிரீறுகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவ்வீறுகள் ஈண்டு மூன்றும் வேற்றுமைக்குரிய வினைமுதற் பொருளில் நின்று அவற்றுலாகிய தொழிலை யுணர்த்தும் சொல்லை வருமொழியாக ஏற்றுள்ளன. இங்ஙனம் வருமிடத்தே தான் இயல்பும் உறழ்ச்சியுமாக நிற்கும் இவ்வீறுகளே பின்னர் புள்ளி மயங்கியலில் பொருட் புணர்ச்சியாக நிற்கும் பொழுது இயல் பின்டு மிகுந்தே வரும் எனக் கூறப்படுகின்றது. 'வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்' என்ற தொடருக்கு மேற் கூறிய வேற்றுமைப் புணர்ச்சி, பொருட் புணர்ச்சி ஆகிய இரண்டிடத் திற்கும் உள்ள வேற்றுமையைப் போற்றியறிதல் வேண்டும் எனப்பொருள்காணின் சிறப்புடைத்தாகும் என்பது என் கருத்து.

நன்னூலார் இந்நூற்பாவின் கருத்தைத் தழுவியே.

> 'புள்ளியும் உயிரும் ஆயிறு சொல்முன்
> தம்மின் ஆகிய தொழில்மொழி வரினே
> வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்.' (உருபு-17)

என்றனர். (14)

158. மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலும்
சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலும்
சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலும்
சாரியை யியற்கை உறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க் கவ்விய னிலையலும்
மெய்பிறி தாகிடத் தியிற்கை யாதலும்
அன்ன பிறவுந் தன்னியல் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப.

இஃது, இரண்டாம் வேற்றுமைத் திரிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்: மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும் - மெல்லெழுத்து மிகுமிடத்து வல்லெழுத்தாதலொடு தோன்றுதலும், வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும் - வல்லெழுத்து மிகுமிடத்து மெல்லெழுத்தாதலொடு தோன்றுதலும், இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும் - இயற்கையிடத்து மிகுதி தோன்றுதலும், உயிர் மிக வருவழி உயிர் கெட வருதலும் - உயிர்மிக வருமிடத்து அவ்வுயிர் கெட வருதலும், சாரியை உள்வழிசாரியை கெடுதலும் - சாரியையுள்ள இடத்துச் சாரியை கெடுதலும், சாரியை உள்வழி தன் உருபு நிலையலும் - சாரியை உள்ளவிடத்துச் சாரியையொடு தன்னுருபு நிற்றலும், சாரியை இயற்கை உறழத் தோன்றலும் - சாரியை பெறுக என்றவழிச் சாரியை பெறுது இயல்பாகிய மொழிகள் வருமொழியினும் நிலைமொழியினும் மிக்கும் திரிந்தும் வருமொழி வல்லெழுத்துக்கள் உறழ்ச்சியாகத் தோன்றுதலும், உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும் - உயர்திணைப் பெயரிடத்துத் தன்னுருபு தொகாதே விரிந்து வருதலும், அஃறிணை விரவுப்பெயர்க்கு அ இயல் நிலையலும் - உயர்திணையோடு அஃறிணை விரவுப் பெயர்க்கும் அவ்வுருபு அவ்வியல்பிலே நிற்றலும், மெய்பிறிது

ஆகு இடத்து இயற்கை ஆதலும் – மெய் பிறிதாய் முடியுமிடத்து இயல்பாய் முடிதலும், அன்ன பிறவும் – அத்தன்மையன பிற முடிபுகளும், தன் இயல் மருங்கின் மெய்பெற கிளந்து பொருள் வரைந்து இசைக்கும் - தனது இயல்பாகிய கூற்றால் அகத்தோத்தி னுட்பொருள் பெற எடுத்தோதப்பட்ட வேற்றுமைப் பொருட் புணர்ச்சியது பொது முடிவினைத் தான் வரைந்து வேறு முடிபிற்றாய் நின்று ஒலிக்கும், ஐகார வேற்றுமைத்திரிபு என மொழிப - ஐகார வேற்றுமையினது வேறுபாட்டுப் புணர்ச்சி என்று சொல்லுவர் புலவர் எ. று.

எ – டு : விளக்குறைத்தான் என்பது மெல்லெழுத்து மிகுவழி (218) வல்லெழுத்து மிக்கது. மரங்குறைத்தான் என்பது வல் லெழுத்து மிகுவழி (311) மெல்லெழுத்து மிக்கது. தாய்க்கொலை என்பது இயல்பாமிடத்து (359) மிக்கது. பலாக்குறைத்தான் என்பது உயிர்மிக வருவழி (227) உயிர் கெட்டது. வண்டு கொணர்ந்தான் என்பது சாரியை உள்வழிச் (421) சாரியை கெட்டது. வண்டினைக் கொணர்ந்தான் என்பது சாரியை உள்வழித் (421) தன்னுருபு நிலையிற்று. புளிகுறைத்தான், புளிக்குறைத்தான், [1]பூல்குறைத்தான், பூற்குறைத்தான் என இவை (245, 376) சாரியை யியற்கை உறழத் தோன்றின. நம்பியைக் கொணர்ந்தான் (154) என்பது உயர்திணை மருங்கின் ஒழியாது வந்தது. கொற்றனைக் கொணர்ந்தான் என்பது விரவுப்பெயர்க்கு அவ்வியில் நிலையது. மண்கொணர்ந்தான் என்பது மெய்பிறிதாகிடத்து (303) இயற்கையாய்வந்தது.

'அன்ன பிறவும்' என்றதனாற் கொள்வன: கழிகுறைத்தான் [2]தினைபிளந்தான் என்பன. பிறவும் அன்ன.

'ஒழியாது' என்றதனான் ஒரோவழி ஒழிந்தும் வரும்.

எ - டு: 'அவற்கண்டு' (அகம் 48) எனவும், 'ஒன்னார்த் தெறலும்' (குறள் 264) எனவும் இவை உயர்திணையுள் ஒழிந்து

1. ஆல்குறைத்தான், ஆற்குறைத்தான் என்பதும் பாடம்.
2. பனைபிளந்தான் என்பதும் பாடம்.

வந்தன. மகற்பெற்ருன், மகட்பெற்ருன் என இவை விரவுப் பெயருள் ஒழிந்து வந்தன.

இவ்விலேசுதன்ஞனே, இவற்றின் முடிபு வேற்றுமையும் கொள்க.

'மெய்பெற' என்றதனன், உறழ்ச்சியாய் முடிவனவும் கொள்க.

எ-டு: மைகொணர்ந்தான், மைக்கொணர்ந்தான் எனவும்; வில்கோள், விற்கோள் எனவும் வரும்.

இவ்வாறு திரிந்துமுடியாது, அகத்தோத்தில் பொதுமுடிபே (255) முடிபாய்க் கடுக்குறைத்தான், செப்புக்கொணர்ந்தான் என்ருற்போல்வன முடிவன அறிந்து கொள்க.

இவ்வாறு வேறுபட முடிவது பெரும்பான்மையும் இரண்டாவது வினையோடு முடியும் வழிப்போலும். அது 'தம்மிஞகிய தொழிற் சொன் முன்வரின்' (தொகை மரபு - 14) என நின்ற அதிகாரத் தாற் கொள்ளவைத்தார் போலும்.

'தன்னின முடித்தல்' என்பதனன் ஏழாம் வேற்றுமை வினை யொடு முடியும்வழித் திரிபும் கொள்க.

எ-டு: 'வரைபாய் வருடை' (மலைபடு - 503), 'புலம்புக் கனனே புல்லணற் காளை' (புறம் - 258) என வரும்.

(வி - ரை) இவர் 'போலும்' என்று ஐயுற்றுரைத்ததை நச்சினர்க்கினியர் துணிபாகக் கொண்டுரைப்பார். கடுக்குறைத் தான், செப்புக்கொணர்ந்தான் என்பன 'தம்மிஞகிய தொழிற் பெயர் முன்வரின்' (157) என்ற அதிகாரத்தால், வினைவந்துழியே இங்ஙனம் பெரும்பான்மை திரிவதென்றுணர்க என்பது அவர் உரையாகும்.

நம்பியைக் கொணர்ந்தான், நங்கையைக் கொணர்ந்தான் என உயர்திணையிடத்து ஐயுருபு விரிந்தே வருதலின் 'உயர்திணை

யிடத்து ஒழியாது வருதலும்' என்றார் ஆசிரியர். எனினும் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'அவற்கண் டெம்முன்' (அகம் - 48), 'ஒன்னார்த்தெறலும்' (குறள் – 264), 'ஆடூஉ வறி சொல் மகடூஉ வறிசொல்' (சொல் – 3) என வரும் வழக்குகளைக் கண்டு, 'ஒழியாது' என்பதால் இரண்டாம் உருபு ஒரோவழி ஒழிந்தும் வரும் எனக் கொண்டனர்.

நூலாசிரியர் கருத்துடன் இக்கருத்தினையும் ஏற்ற நன்னூலார்,

'இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்தும் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவும் ஆகும்ஐ உருபே' (உருபு—16)

என்றனர். (15)

159. வேற்றுமை யல்வழி இ ஐ யென்னும்
ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை [1]நிலைஇய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர்.

இஃது, இகரவீற்றுப் பெயர்க்கும் ஐகாரவீற்றுப் பெயர்க்கும் அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமை அல்வழி இ ஐ என்னும் ஈற்றுப் பெயர்க் கிளவி மூவகை நிலைய – வேற்றுமையல்லாத அல்வழியிடத்து இ ஐ என்னும் ஈற்றையுடைய பெயர்ச்சொற்கள் மூவகை முடிபு நிலைமையுடைய, அவைதாம் இயல்பாகுநவும் வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும் என்மனார் புலவர் – அவைதாம் இயல்பாய் முடிவனவும் வல்லெழுத்து மிகுவனவும் உறழ்ச்சியாய் முடிவனவும் இவையென்று சொல்லுவர் புலவர் எ. று.

---

1. 'நிலைய' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

எ-டு: பருத்தி குறிது, [1]அரைகுறிது; சிறிது, தீது, பெரிது என இவை இயல்பு. அலிக்கொற்றன், [2]புலேக்கொற்றன் என இவை மிகுதி. கிளிகுறிது, கிளிக்குறிது, தினைகுறிது, தினைக் குறிது என இவை உறழ்ச்சி.

'பெயர்க்கிளவி மூவகை நிலைய' எனவே, பெயர்க்கிளவி யல்லாத கிளவி மிகுதியும் இயல்பும் என இருவகைய எனக் கொள்க.

எ-டு: ஒல்லைக் கொண்டான் என்பது ஐகாரவீற்று வினைச் சொல்மிகுதி. இகரவீற்று மிகுதி வந்தவழிக் கண்டுகொள்க. 'தில்லைச்சொல்லே' (சொல் - 253) 'மன்னைச்சொல்லே' (சொல் - 252) என்றது ஐகாரவீற்றிடைச் சொல்மிகுதி. இவற்றியல்பு வந்தவழிக் கண்டுகொள்க. கடிகா என்பது இகரவீற்று உரிச் சொல்லியல்பு. இவ்வீற்றுமிகுதி வந்தவழிக் கண்டுகொள்க. பணைத்தோள் என்பது ஐகாரவீற்று உரிச்சொல் மிகுதி. இவற் றியல்பு வந்தவழிக் கண்டுகொள்க.

(வி - ரை) இந்நூற்பாவில் உள்ள முதல் இரண்டு அடிகளும் ஒரு நூற்பாவாகவும், ஏனைய அடிகள் பிறிதொரு நூற்பாவாகவும் இருத்தல் கூடும் என்பர் திரு. பி. சா. சு. அவர்கள்.

'அல்வழி இஐம் முன்னர் ஆயின்
இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்' (நன் - 176)

என்பர் நன்னூலாரும். (16)

160. சுட்டுமுத லாகிய இகர இறுதியும்
எகரமுதல் வினாவின் இகர இறுதியும்
சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்
யாவென் வினாவின் ஐயென் இறுதியும்
வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும்
சொல்லிய மருங்கின் உளவென மொழிப.

---

1. கரைகுறிது என்பதும் பாடம்.
2. புலிக்கொற்றன் என்பதும் பாடம்.

இஃது, அவ்விகர ஐகாரவீற்றுள் ஏழாம் வேற்றுமை இடப் பொருள் உணரநின்ற இடைச்சொல் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்: சுட்டு முதலாகிய இகர இறுதியும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய இகரவீற்று இடைச்சொல்லும், எகர முதல் வினாவின் இகர இறுதியும் - எகரமாகிய மொழிமுதல் வினா வினுடைய இகரவீற்று இடைச் சொல்லும், சுட்டுச்சினை நீடிய ஐஎன் இறுதியும் - சுட்டாகிய உறுப்பெழுத்து நீண்ட ஐகார வீற்று இடைச்சொல்லும், யா என் வினாவின் ஐ என் இறுதியும் - யா என்னும் வினாவினை முதற்கண்ணுடைய ஐகாரவீற்று இடைச் சொல்லும், வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும் சொல்லிய மருங்கின் உள என மொழிப - வல்லெழுத்து மிக்கு முடிவனவும் உறழ்ச்சியாய் முடிவனவும் மேற்சொல்லப்பட்ட இடத்தின்கண்ணே உள வென்று சொல்லுவர் புலவர் எ. று.

எ - டு: [1]அதோளிக்கொண்டான், [2]இதோளிக்கொண்டான், உதோளிக்கொண்டான், எதோளிக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்; ஆண்டைக்கொண்டான், ஈண்டைக்கொண்டான், ஊண்டைக்கொண்டான், யாண்டைக் கொண்டான் எனவும் இவை மிக்கு முடிந்தன.

அவ்வழிகொண்டான், அவ்வழிக்கொண்டான்; இவ்வழி கொண்டான்; இவ்வழிக்கொண்டான், உவ்வழிகொண்டான், உவ்வழிக்கொண்டான்; எவ்வழிகொண்டான், எவ்வழிக்கொண் டான் எனவும், ஆங்கவைகொண்டான், ஆங்கவைக்கொண்டான்; ஈங்கிவைகொண்டான், ஈங்கிவைக்கொண்டான்; ஊங்குவை கொண்டான், ஊங்குவைக்கொண்டான்; யாங்கவைகொண்டான், யாங்கவைக்கொண்டான் எனவும் இவை உறழ்ந்து முடிந்தன. இவற்றுள் ஐகாரவீற்றுள் உறழ்ந்து முடிந்தன திரிபுடையன. திரிபில்லன பெற்றவழிக் கண்டுகொள்க.

---

1. அதோளி—அவ்விடம்.
2. 'ஈதோளிக் கண்டேனால்' என்பது முல்லைக்கலி.

'சொல்லியமருங்கு' என்றதனால், பிற ஐகாரவீறு மிக்கு முடிவன கொள்க.

எ-டு: பண்டைச்சான்றார், ஒருதிங்களைக்குழவி எனவரும். (17)

161. நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறியதன் முன்னர்த் [1]தன்னுரு பிரட்டலும்
அறியத் தோன்றிய நெறியிய லென்ப.

இது, புள்ளி மய்ங்கியலை நோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நெடியதன் முன்னர் ஒற்று மெய் கெடுதலும் – நெட்டெழுத்தின்முன் நின்ற ஒற்றுத் தன்வடிவு கெடுதலும், குறியதன் முன்னர் தன்உருபு இரட்டலும் – குற்றெழுத்தின் முன்னர் நின்ற ஒற்றுத் தன்வடிவு இரட்டுதலும், அறியத்தோன்றிய நெறி இயல் என்ப – இவை அறியும்படி தோன்றிய முறைமையான இயல்புடையனவென்று சொல்லுவர் எ. று.

எ-டு: கோறீது, கோனன்று என இவை நெடியதன் முன்னர் ஒற்றுக்கெட்டன. மண்ணகல், பொன்னகல் என இவை குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டின.

[2]மேலைச்சூத்திரத்து (162) ஆறனுருபு முற்கூறியவதனான், ஒற்று இரட்டுதல் உயிர்முதன்மொழிக் கண்ணதென்று கொள்க.

குறியது பின்கூறிய முறையன்றிய கூற்றினால் நெடியன குறுகிநின்ற வழியும் குறியதன் முன்னர் ஒற்றாய் இரட்டுதலும், குறியது திரிந்து நெடியதாயவழி அதன் முன்னர் ஒற்றுக் கெடுதலும் கொள்க.

எ-டு: தம்மை, நம்மை என இவை நெடியன குறுகிநின்று ஒற்று இரட்டின. மற்றையது வந்தவழிக் கண்டுகொள்க.

---

1. 'தன்னுரு இரட்டலும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.
2. நான்கனுருபு பிற்கூறியதனால் இக்கருத்தினைக் கொள்வர் நச்சினார்க்கினியர்.

'அறிய' என்றதனான், நெடியதன் முன்னர் ஒற்றுக்கெடுவது தகார நகாரங்கள் வந்து திரிந்தவழி யென்பதூஉம், ஆண்டெல்லாம் கெடாதென்பதூஉம் கொள்க. தேன்றீது என்பது ஆண்டுக் கெடாதது

'நெறியியல்' என்றதனாற் குறியதன் முன்னர் நின்ற ஒற்றின்றிய புணர்ச்சியாற் பெற்றதும் இரட்டுமென உணர்க.

எ - டு: அவ்வடை எனவரும். (18)

162. ஆறன் உருபினும் நான்கன் உருபினும்
கூறிய குற்றொற் றிரட்ட லில்லை
ஈறுகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகு மொழிமுன் னன.

இஃது, உருபியலை நோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

இ - ள்: ஆறன் உருபினும் நான்கன் உருபினும் ஈறு ஆகு புள்ளி அகரமொடு நிலையும் - ஆறனுருபின்கண்ணும் நான்கனுருபின்கண்ணும் ஈறுகு புள்ளிகள் அகரத்தோடு நிலைபெறும், நெடுமுதல் குறுகும் மொழிமுன்கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை - நெடிதாகிய முதலெழுத்துக் குறுகிமுடியும் மொழிக்கண் மேற்கூறிய குற்றொற்று இரட்டல் (ஆறனுருபின்கண்ணும் நான்கனுருபின்கண்ணும்) இல்லை எ று.

எ - டு: தமது, தமக்கு ; நமது, நமக்கு எனவரும்.

'கூறிய' என்றதனானே நெடுமுதல் குறுகாதமொழிக்கு இவ்விருவிதியும் கொள்க.

எ - டு : எல்லார் தமதும், எல்லார் தமக்கும் எனவரும்.

(வி - ரை) தாம் + கு = தமக்கு. 'தாம் நாம்' (189) என்பதால் நெடுமுதல் குறுகி, இந்நூற்பாவால் அகரம் பெற்று, 'வல்லெழுத்து முதலிய' (115) என்பதால் ககரவொற்றுப் பெற்று முடிந்தது.

நாம் + அது = நமது. 'தாம் நாம்' (189) என்பதால் நெடு முதல் குறுகி, இந்நூற்பாவால் அகரம் பெற்று, 'ஆறனுருபின்' (116) என்பதால் அகரம் கெட்டு முடிந்தது.

எல்லார் தமதும், எல்லார் தமக்கும் என்பவற்றிலுள்ள தம் என்னும் சொற்கள் சாரியைகளாகும். இவை இயல்பாகவே தம் என நிற்பன. ஆதலின் இவற்றை 'நெடுமுதல் குறுகாத மொழிகள்' என்றார்.

எல்லாரும் + அது = எல்லார் தமதும், 192, 116, இந்நூற்பா ஆகிய மூன்றன் துணைக் கொண்டு இதனை முடிக்க. எல்லாரும் + கு = எல்லார் தமக்கும். 192, 195, இந்நூற்பா ஆகியவற்றின் துணைக்கொண்டு இதனை முடிக்க.

'குவ்வின் அவ் வரும் நான்காறு இரட்டல' நன்-(247) என்பர் நன்னூலாரும். (19)

163. நும்மென் இறுதியும் அந்நிலை திரியாது.

இதுவும் அது.

இ-ள்: நும் என் இறுதியும் அ நிலை திரியாது - நும் என்னும் மகரவிறுதி மேற்கூறிய ஈருகு புள்ளி அகரமொடு நிலையலும் குற்றொற்றிரட்டாமையுமாகிய அந்நிலைமையில் திரியாது எ. று.

எ - டு: நுமக்கு, நுமது என வரும். (20)

164. உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமும் உயிரும் வருவழி இயற்கை

இது, புள்ளி மயங்கியலை நோக்கியதோர் நிலைமொழிச்செய்கை கூறுதல் நுதலிற்று.

இ-ள்: உகரமொடு புணரும் புள்ளி இறுதி - உகரப்பேற்றோடு புணரும் புள்ளியிறுதிகள், யகரமும் உயிரும் வருவழி இயற்கை - யகரமும் உயிரும் வருமொழியாய் வருமிடத்து அவ்வுகரம் பெறாது இயல்பாய் முடியும் எ. று.

எ - டு: உரிஞ் யாறு. உரிஞ் அனந்தா; பொருந் யாறு. பொருந் அனந்தா; உறிஞ் ஆதா, பொருந் ஆதா என ஒட்டுக.

(வி - ரை) புள்ளிமயங்கியலுள் உகரம் பெறும் என விதிக்கும் ஈறுகள் ஞ (297), ண (307), ம (328), ந (299), ன (346), ல (374), வ (383), ள (402) என்பன. நன்னூலார் இவற்றைத் தொகுத்து 'ஞணநம லவளன ஒற்றிறு தொழிற்பெயர், ஏவல் வினைநனி யவ்வல் மெய்வரின், உவ்வுறும்' (மெய்யீ 4) எனக் கூறுவர். (21)

165. உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தங் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வருஉங் காலந் தோன்றின்
ஒத்த தென்ப ஏயென் சாரியை.

இஃது, அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயரும் தம்மிற் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உயிரும் புள்ளியும் இறுதியாகி அளவும் நிறையும் எண்ணும் சுட்டி உள எனப்பட்ட எல்லா சொல்லும் - உயிரும் புள்ளியும் ஈறாய் அளவையும் நிறையையும் எண்ணையும் கருதி உளவென்று சொல்லப்பட்ட எல்லாச் சொற்களும், தம் தம் கிளவி தம் அகப்பட்ட முத்தைவரும் காலம் தோன்றின் ஏ என்சாரியை ஒத்தது என்ப - தமக்கு இனமாகிய சொற்களாய்த் தமக்கு அகப் படும் மொழியாயுள்ளன தம்முன்னே வரும் காலம் தோன்றுமாயின் ஏ என்னுஞ் சாரியை பெற்று முடிதலைப் பொருந்திற்று என்ப எ. று.

எ - டு: உழக்கேயாழாக்கு, கலனேபதக்கு என இவை அளவுப் பெயர். தொடியேகஃசு, கொள்ளேஐயவி என இவை நிறைப்பெயர். காணியேமுந்திரிகை, காலேகாணி என இவை எண்ணுப்பெயர்.

'உயிரீறு புள்ளியீறு' என்றதனுனே, ஏ என் சாரியை பெருதன வும் உளவென்று கொள்க.

எ - டு: குறுணி நானழி என வரும்.

(வி - ரை) இதற்கு முன்னுள்ள நூற்பா புள்ளியீற்றைக் கூறுவதனுல் இடையறவு படாது ஈண்டும் புள்ளியீற்றை முற்கூற வேண்டும். அங்ஙனமாகவும் உயிரீற்றை முற்கூறியதனுல் ஏ என் சாரியை பெருதனவும் உளவென்று கொள்கின்ருர் இளம்பூரணர். நச்சினர்க்கினியரும் இங்ஙனமே உரைப்பர்.

எனினும் 153, 154, 482 ஆகிய நூற்பாக்களில் எல்லாம் உயிரீற்றையே முற்கூறியிருத்தலின், ஈண்டும் உயிரீற்றை முற் கூறினர் என்றும், 'ஒத்த தென்ப' என இந்நூற்பாவில் கூறி யிருப்பதைக் கொண்டு இக்கருத்தினைப் பெறுதலே பொருத்தம் என்றும் ஆய்வாளர்கள் கூறுவர்.

தம்மகப்பட்ட-தம்மிற் குறைந்த சொற்கள். உழக்கே ஆழாக்கு என்பதில் உழக்கினும் ஆழாக்கு குறைந்த சொல்லாய் நிற்றல் காண்க. (22)

166. அரையென வருஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவ தன்ருற் சாரியை யியற்கை.

இஃது, எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ - ள்: அரை என வரும் பால்வரை கிளவிக்கு புரைவது அன்று சாரியை இயற்கை - அரை என்று சொல்ல வருகின்ற பொருட்கூற்றை யுணரநின்ற சொல்லிற்குப் பொருந்துவதன்று மேற்கூறிய ஏ என் சாரியை பெறும் இயல்பு எ. று.

எ - டு: உழக்கரை, தொடியரை, ஒன்றரை என வரும்.

இது 'ஒட்டுதற் கொழுகிய வழக்கு' (புணரியல் - 30) அன்று என்பதனுன் விலக்குண்ணுதோவெனில், 'தம்மகப்பட்ட' என்று

வருமொழியையும் வரைந்தோதினமையின் இதற்கு அவ்விதி செல்லாதென்பது.

(வி - ரை) உழக்கு+அரை=உழக்கரை. ஈண்டு நிலைமொழியாகிய உழக்கினும் அரையென்பது குறைந்த (தம்மகப்பட்ட) சொல்லே. ஆயினும் இந்நூற்பாவால் ஏகாரம் பெருதாயிற்று.

சாரியை தாம்தாம் பொருந்துதற்கேற்ற வழக்கிடத்து (ஒட்டுதற்குரிய வழக்கு) வருமேயன்றிப் பிருண்டு வாராது என்பதால் இவ்விடத்தும் வருதல் பொருந்திய வழக்கன்ருயிருத்தலின், அவ்விலக்கே அமையாதோ எனில், சென்ற நூற்பாவில் நிலைமொழியினும் வருமொழி குறைந்த அளவுடையசொல்லாய்வரின், ஏகாரம் பெறும் எனச்சிறப்புவிதி கூறியிருத்தலின் இவ்விலக்கும் சிறப்பு விதியாகவே கூறவேண்டும் என்பதாம். (23)

167. குறையென் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிதுவிதி உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: குறை என் கிளவி முன் வருகாலை - குறை என்னும் சொல் அளவு முதலியவற்றின்முன் வருங்காலத்து, நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை - நிறையத் தோன்றும் மேல் (236) வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபிற்குச் சொல்லும் இயல்பு எ. று,

எ - டு: உரிக்குறை, கலக்குறை, தொடிக்குறை, கொட்குறை, காணிக்குறை, காற்குறை என வரும்.

'முன்' என்றதனன், பொருட் பெயரோடு புணரும் வழியும் வேற்றுமை முடிபு எய்துகவென்பது.

எ - டு: கலப்பயறு என வரும்.

'நிறைய' என்பதனால், கூறு என்பதன்கண்ணும் வேற்றுமை முடிபு எய்துமென்பது.

எ-டு: நாழிக்கூறு என வரும். (24)

168. [1]குற்றிய லுகரக் கின்னே சாரியை.

இது, வேற்றுமை முடிபு விலக்கி இன் வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: குற்றியலுகரக்கு - குற்றுகரவீற்று அளவுப் பெயர் முதலியவற்றிற்கு, சாரியை இன் - குறையொடு புணரும்வழி வரும் சாரியை இன் எ. று.

எ-டு: உழக்கின்குறை, கழஞ்சின்குறை, ஒன்றின்குறை என வரும். (25)

169. அத்திடை வருஉங் கலமென் அளவே.

இதுவும் அது.

இ-ள்: கலம் என் அளவு இடை அத்து வரும் - கலம் என்னும் அளவுப் பெயர் (குறையொடு புணரும்வழி) இடையில் அத்து வரும் எ. று.

எ-டு: கலத்துக்குறை என வரும்.

இது, 'கலன்' என்னும் னகரவீறேல், நிலைமொழி ஒற்றுக் கேடும், வருமொழி ஒற்றுப்பேறும் 'அத்தே வற்றே' (புணரியல்-31) என்பதனாற் கொள்ளப்படும்.

'கலனென் அளவு' என ஓதாதது செய்யுளின்பம் நோக்கிப் போலும்.

சாரியை முற்கூறியவதனான், இன்சாரியை பெற்றவழி முன் மாட்டேற்றான் (167) எய்திய வல்லெழுத்து வீழ்க்க.

---

1. 'குற்றிய லுகரத் தின்னே சாரியை' என்பதும் பாடம் என்பர் நச்சினார்க்கினியர்.

(வி - ரை) கலன் + குறை = கலத்துக்குறை. இந்நூற்பாவில் அத்துப் பெற்ற கலன் என்னும் சொல், 'அத்தே வற்றே' (134) என்பதால் நிலைமொழி னகர வொற்றுக் கெட்டு, 'அத்தின் அகரம்' (129) என்பதால் அத்தின் அகரம் கெட்டு, 'அவற்றுமுன் வரும் வல்லெழுத்து மிகுமே' (134) என்பதால் வல்லெழுத்து மிக்கு முடிந்தது.

கலம் என்பது மகர ஈற்றுச் சொல்லே என்பர் நச்சினார்க்கினியர். 'மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை' (186) என்பதால், கலம் என்ற சொல்லும் அத்துச்சாரியை பெற இருக்க, இந்நூற்பா மிகையெனின் அற்றன்று. மேல் 'குறையென் கிளவி' (167) என்பதால் 'சாரியைப்பேறு விலக்கி வல்லெழுத்து மிகுதலே கூறினமையின், இக்கலம் என்பதும் வல்லெழுத்து மிகுதல் ஒன்றே பெறும் என்பது பட்டு நிற்றலின் இது கூறவேண்டும் என்க. அன்றியும் ஆண்டுக் கூறப்படுவது பொருட் பெயராத லாலும், ஈண்டுக் கூறப்பட்டிருப்பது அளவுப் பெயராதலாலும், தனித் தனியே கூறவேண்டும் என்க. அளவுப் பெயர்க்கும், பொருட்பெயர்க்கும் விதியொன்றுயிருப்பினும் இலக்கணம் தனித் தனியே கூறுதல் இவ்வாசிரியர் கருத்தாம். அன்ன கருத்தின ராதலை 167, 196, ஆகிய இருநூற்பாக்களையும் ஒப்பிட்டுணர்க. (26)

170. பனையென் அளவுங் காவென் நிறையும்
நினையுங் காலை இன்னொடு சிவணும்.

இதுவும் அது.

இ - ள்: பனை என் அளவும் கா என் நிறையும்-பனை என்னும் அளவுப் பெயரும் கா என்னும் நிறைப்பெயரும், நினையும் காலை இன்னொடு சிவணும் - (குறை என்பதனோடு புணருமிடத்து) ஆராயுங்காலத்து இன்சாரியையொடு பொருந்தும் எ . று.

எ - டு : பனையின்குறை, காவின்குறை என வரும்.

'நினையுங் காலை' என்றதனான், வல்லெழுத்துப்பேறும் சிறு பான்மை கொள்க.

எ - டு : பனைக்குறை, காக்குறை என வரும். (27)

171. அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி
உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே
அவைதாம்
க ச த ப என்று ந ம வ என்று
அகர உகரமோ டவையென மொழிப.

இஃது, அளவுப்பெயர்க்கும் நிறைப்பெயர்க்கும் முதலாம் எழுத்துக்கு வரையறை கூறுதல் நுதலிற்று.

இ - ள் : அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி உள எனப்பட்ட ஒன்பதிற்று எழுத்து - அளவுப்பெயர்க்கும் நிறைப் பெயர்க்கும் மொழி முதலாய் உளவென்று சொல்லப்பட்டன ஒன்பதெழுத்து, அவைதாம் - அவை (யாவையோவெனின்), க ச த ப என்று ந ம வ என்று அகரமோடு உகரமோடு அவை என மொழிப - க ச த ப க்களும் ந ம வ க்களும் அகரமும் உகரமுமாகிய அவை என்று சொல்லுவர் எ . று.

எ - டு : கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு எனவும் ; கழஞ்சி, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை எனவும் வரும்.

'உளவெனப் பட்ட' என்றதனான், உளவெனப் பாடதனவும் அளவை உளவென்பது.

எ - டு : இம்மி, ஓரடை, ஒரெடை என வரும்.

மற்று இவ்வரையறை கூறிப் பயந்தது என்னை? யெனின், மேல் அகத்தோத்தினுள் (390) அவற்றிற்கு முடிபு கூறும் வழி, அதிகாரத்தான் வன்கணத்தின்மேற் செல்லாது, ஒழிந்த கணத் தினும் சேறற்கு என்பது. (28)

172. ஈறியல் மருங்கின் இவைஇவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே.

இஃது, இவ்வோத்துப் புறனடை.

இ-ள்: ஈறு இயல் மருங்கின் – உயிரும் புள்ளியும் இறுதி யானவை வருமொழியொடு கூடி நடக்குமிடத்து, இவை இவற்று இயல்பு என கூறிய கிளவிப் பல் ஆறு எல்லாம் - இம்மொழிகளின் முடிபு இவையெனக் கூறி முடிக்கப்பட்ட சொற்களின் (அவ்வாற்றான் முடியாது நின்ற) பலவகை முடிபுகளெல்லாம், மெய் தலைப்பட்ட வழக்கொடு சிவணி ஒத்தவை உரிய புணர் மொழிநிலை– உண்மையைத் தலைப்பட்ட வழக்கொடு கூடிப் பொருந்தினவை உரியவாம் புணரும் மொழிகள் நிலைமைக்கண் எ. று.

எ–டு: விள ஞான்றது என்புழி நிலைமொழிப் பெயரது இயல் பும், ஞான்ற ஞாயிறு என நிலைமொழி வினையாயவழி இருமொழி இயல்புமாகிய 'ஞ ந ம ய வ (தொகை - 2) என்பதன் ஒழிபும், மண் கடிது என்புழி வருமொழி வன்கணத்து இயல்பாகிய 'மொழி முதலாகும்' (தொகை-5) என்பதன் ஒழிபும், நடஞெள்ளா என்னும் இயல்பு கணத்து இருமொழி இயல்பும், நில்கொற்றா என்புழி நில்கொற்றா, நிற்கொற்றா என நிலைமொழி திரிந்த உறழ்ச்சியும், துக்கொற்றா, துஞ்ஞெள்ளா என்னும் மிகுதியும், உரினுஞெள்ளா என்னும் இயல்பு கணத்து உகரப்பேறும், உரிஞ்யாறு. உரிஞ் அனந்தா என்னும் இருமொழி இயல்பும், மண்ணுகொற்றா, மண்ணுக்கொற்றா, ஞெள்ளா என வரும்.

'ஔவென வரூஉம்' (தொகை - 10) என்பதனுள் விலக்கப் படாத ணகர னகர லகரமாகிய புள்ளியிறுதிகளின் நிலைமொழி உகரப்பேறுமாகிய 'உயிரீறாகிய முன்னிலைக் கிளவி' (தொகை–9) என்பதன் ஒழியும், விரவுப்பெயர்த் திரிபின்மேல் எடுத்து ஓதப் படாதன்வாய நின்ஞாண் என்றாற்போல வரும்.

'அஃறிணை விரவுப்பெயர்' (தொகை - 13) என்பதன் ஒழிபும், காவிக்கண், குவளைக்கண் என்றாற்போல அல்வழி முடிபாகிய 'வேற்றுமை யல்வழி' (தொகை - 13) என்பதன் ஒழிபும், பதக்கு நானாழி, சீர்கரை, ஒருமாவரை என்னும் 'உயிரும் புள்ளியு மிறுதியாகி' (குற்றியலுகரப் புணரியல் – 79) என்பதன் ஒழிபும், பிறவற்றின் ஒழிபுமெல்லாம் ஈண்டே கொள்க. (29)

173. பலரறி சொன்முன் யாவ ரென்னும்
பெயரிடை வகரங் கெடுதலும் ஏனை
ஒன்றறி சொன்முன் யாதென் வினைவிடை
ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்
மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே.

இது, மரூஉ முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள் : பலர் அறிசொல்முன் யாவர் என்னும் பெயரிடை வகரம் கெடுதலும் – பலரை அறியும் சொல்முன்னர் வருகின்ற யாவர் என்னும் பெயரிடையில் வகரம் கெடுதலும், ஏனை ஒன்று அறி சொல்முன் யாது என் வினை இடை ஒன்றிய வகரம் வருதலும் – ஒழிந்த ஒன்றனை அறியும் சொல்முன்னர் வரும் யாது என்னும் வினை மொழியிடை உயிரொடு பொருந்திய வகரம் வருதலும், இரண்டும் மருவின் பாத்தியில் பயின்று திரியும் – இரண்டும் மரூஉக்களது முடிபினிடத்துப் பயின்று வழங்கும் எ. று.

எ - டு : அவர் யார் எனவும், அது யாவது எனவும் வரும்.

'ஒன்றிய' என்றதனான், வகரஉயிர்மெய் என்று கொள்க. இன்னும் அதனானே, யாரென்பதும் யாவதென்பதும் நிலைமொழி யாய்ப் பிற வருமொழியொடு புணரும் வழியும் இம்முடிபு கொள்க.

எ - டு : 'யார் யார்க்கண்டே யுவப்பர்' எனவும், 'யாவது நன்றென வுணரார் மாட்டும்' (குறுந் - 78) எனவும் வரும்.

'பயின்று' என்றதனால், பலரறிசொல்லும் ஒன்றறிசொல்லும் வருமொழியாய வழியும் இம்முடிபு கொள்ளப்படும்.

எ–டு: யாரவர், யாவதது என வரும்.

(வி–ரை) யாவர் என்பதற்கும் யார் என்பதற்கும் வேற்றுமை யுண்டு. யாவர் என்பது தொடர்புடைய வினாப் பெயராய் வரும், இத்திருக்குறளை உனக்குத் தந்தவர் யாவர் அவரை எனக்குக் காட்டுக என்றாற்போல வருவது. இது பலர்பாலுக்கு மட்டுமே வரும். யார் என்பது வினாவினைக் குறிப்பாக வரும். உயர்திணை முப்பால்கட்கும் வரும். (30)

தொகைமரபு முற்றிற்று.

7

உருபியல்

பொருளமைப்பு

இதுகாறும் இருபத்து நான்கு ஈறுகளும், வேற்றுமை அல்வழி ஆகிய இரண்டிலும் ஒரே விதியைப் பெறுவது பற்றித் தொகுத்துக் கூறிய ஆசிரியர், இனிச் சில பெயர்கள் உருபுகளோடு புணருங்கால் ஏற்படும் திரிபுகளை இவ்வியலில் கூறுகின்றாராதலின், இது மேலதனோடு இயைபுடைத்தாயிற்று.

பெயர்கள் உருபொடு புணருங்கால் ஏற்படும் இயல்பினை இவ்வியல் விவரித்தலின் இது 'உருபியல்' எனப்பெயர் பெற்றது.

இவ்வியலில் கூறப்படும் கருத்துக்களை நான்கு வகையாகப் பிரித்து அறியலாம். அவை 1. சாரியை பெறுவன, 2 சாரியை பெறாது இயல்பாயும், திரிந்தும் வருவன, 3. எழுத்துப்பேறு பெறுவது, 4. புறனடை.

1. சாரியை பெறுவன :

அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ என்னும் ஆறு ஈறுகளையும் இறுதி யாகவுடைய பெயர்கள் உருபேற்குங்கால் இடையில் இன்

சாரியை பெறும். பன்மைப் பொருளையுணர்த்தும் பலசில முதலிய பெயர்களும், யாவென்னும் பெயரும் வற்றுச்சாரியை பெறும் சுட்டெழுத்தை முதலாகவுடைய அது, இது, உது ஆகிய பெயர்கள் உகரம் கெட்டு அன்சாரியையும், சுட்டெழுத்தை முதலாகவுடைய அவை, இவை, உவை ஆகிய பெயர்களும், யாவை என்னும் பெயரும் வற்றுச்சாரியையும் பெறும். அவ்வழி யாவை என்பதிலுள்ள வகர ஐகாரம் கெடும். ஓகாரத்தை இறுதியாகவுடைய சொற்கள் உருபேற்குங்கால் ஒன் சாரியை பெறும். அகர, ஆகாரத்தை இறுதியாகவுடைய மரப்பெயர்கள் ஏழனுருபொடு புணருங்கால் அத்துச்சாரியை பெறும். ஞகர நகர ஈற்றுச் சொற்கள் இன்சாரியை பெறும். சுட்டெழுத்தை முதலாக வுடைய அவ், இவ், உவ் என்னும் சொற்கள் வற்றுச் சாரியையும், ஏனை வகரமாய தெவ் என்னும் சொல் இன் சாரியையும் பெறும். மகரத்தை இறுதியாகவுடைய சொற்கள் பெரும்பாலும் அத்துச் சாரியையும், சிறுபான்மை இன்சாரியையும் பெறும். எல்லாம் என்னும் சொல் அஃறிணைக்காங்கால் இடையில் வற்றுச்சாரியை யும், இறுதியில் உம் சாரியையும் பெறும். இச்சொல்லே உயர் திணைக்கண் வருவழி இடையில் நம் சாரியையும், இறுதியில் உம் சாரியையும் பெறும். எல்லாரும் என்னும் படர்க்கைப் பெயரும், எல்லீரும் என்னும் முன்னிலைப் பெயரும் உருபேற்புழி இறுதியில் நிற்கும் ஒற்றும் உகரமும் கெட, அவ்விடத்து ரகரவொற்று நிற்கும். அவை முறையே தம் சாரியையும் நும் சாரியையும் ஏற்று உருபிற்குப் பின் உம் சாரியையும் பெறும். அழன், புழன் ஆகிய சொற்கள் உருபேற்புழி அத்துச் சாரியையோ அன்றி இன் சாரியையோ பெறும். ஏழ் என்னும் எண்ணுப்பெயர் அன்சாரியை யும், குற்றியலுகர ஈற்று எண்ணுப்பெயர்கள் இன்சாரியையும், பஃது என்பதை இறுதியாகவுடைய ஒருபஃது முதல் எண்பஃது வரையிலுள்ள பெயர்கள் முற்கூறிய அன்சாரியையே அன்றி ஆன் சாரியையும் பெறும். அவை ஆன் சாரியை பெறுங்கால் பஃது என்பதிலுள்ள பகரமெய் மட்டும் நிற்க, அஃது என்பது கெட்டு விடும். அஃது, இஃது, உஃது முதலிய சொற்களும், யாது என்னும் பெயரும், அன்சாரியை பெறும். அவ்வழி அஃது முதலிய சொற்களில் இடையில் உள்ள ஆய்தம் கெடும். குற்றிய

னுகர ஈற்றுத் திசைப் பெயர்களின் முன் ஏழனுருபு வரின் முற் கூறிய இன்சாரியை பெற்றும் முடியும்; பெருதும் முடியும்.

2. சாரியை பெருது இயல்பாயும், திரிந்தும் வருவன :

நும், தாம், யாம், நாம், தான், யான் ஆகிய பெயர்கள் உருபேற்குங்கால் சாரியை பெருவாம். யாம், யான் என்பன உருபேற்குங்கால் முறையே எம் என்றும் என் என்றும் திரியும். தாம், நாம், தான் என்பன உருபேற்குங்கால் முறையே தம், நம், தன் எனக் குறுகும். நெடிற்றொடர்க் குற்றுகரங்களுள் ஒற்று இரட்டிக்கும் சொற்கள் (ட, ற) உருபேற்குங்கால் இன் சாரியை பெருவாம்.

3. எழுத்துப்பேறு பெறுவது :

நீயென்னும் பெயர் உருபேற்கும் பொழுது நி எனக் குறுகும். அவ்விடத்து னகரவொற்றுத் தோன்றும். இன்னகரவொற்றே எழுத்துப்பேறு என்று கூறப்படும்.

4. புறனடை:

இதுகாறும் கூறப்பட்ட பெயர்கள் அல்லாதன எல்லாம் உருபேற்குங்கால், சாரியை பெற்றே வரவேண்டும் என்ற வரை யறையில்லை; அவை சாரியை பெற்றும் வரும்; பெருதும் வரும்.

உருபியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், உருபுகளோடு பெயர் புணரும் இயல்பு உணர்த்தினமையின், உருபியல் என்னும் பெயர்த்து. மேல் தொகுத்துப் புணர்த்த செய்கை ஈண்டு நின்றும் விரித்துப் புணர்க்கின்ருராகலின், தொகைமரபினேடு இயைபு உடைத்தாயிற்று.

174. அ ஆ உ ஊ ஏ ஔ என்னும்
அப்பா லாறன் நிலைமொழி முன்னர்
வேற்றுமை உருபிற் கின்னே சாரியை.

இத்தலைச் சூத்திரம் என்நுதலிற்றோவெனின். அகர ஆகார உகர ஊகார ஏகார ஔகார ஈறுகள் உருபினொடு புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அ ஆ உ ஊ ஏ ஔ என்னும் அப்பால் ஆறன் நிலை மொழி முன்னர் - அ ஆ உ ஊ ஏ ஔ என்று சொல்லப்படுகின்ற அக்கூற்று ஆறனையும் ஈருகவுடைய நிலைமொழிகளின் முன்னர், வேற்றுமை உருபிற்கு சாரியை இன் - வேற்றுமை யுருபுகள் வரு மொழியாய் வந்த நிலைமைக்கு இடைவரும் சாரியை இன்சாரியை எ. று.

எ-டு: விளவினை, விளவினொடு, விளவிற்கு, விளவின் விளவினது, விளவின்கண் எனவும்; பலாவினை, பலாவினொடு எனவும்; கடுவினை, கடுவினொடு எனவும்; கழூஉவினை, கழூஉவி னொடு எனவும்; சேவினை, சேவினொடு எனவும்; வெளவினை வெளவி னொடு எனவும் கருவி அறிந்து ஒட்டுக.

(வி-ரை) தழூஉவினை தழூவினொடு எனக் காட்டுவர் நச்சினார்க் கினியர். (1)

175. பல்லவை நுதலிய அகர இறுபெயர்
வற்றொடு சிவணல் எச்ச மின்றே.

இது, மேற்கூறிய ஈற்றுள் அகரஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பல்லவை நுதலிய பெயர் இறு அகரம் - பன்மைப் பொருளைக் கருதின பெயர்களின் இறுதி அகரம், வற்றொடு சிவணல் எச்சம் இன்று - வற்றுச்சாரியையொடு பொருந்துதலை ஒழிதல் இல்லை எ. று.

எ - டு: பல்லவற்றை, பல்லவற்றோடு; உள்ளவற்றை, உள்ள வற்றோடு; இல்லவற்றை, இல்லவற்றோடு; சில்லவற்றை, சில்ல வற்றோடு என ஒட்டுக.

'எச்சமின்று' என்றதனான் [1]'ஈண்டு மூன்றும் உருபின்கண் சாரியை பெற்றே முடியுமென்று கொள்க. இன்னும் இதனானே மேல் இன்பெற்றன பிறசாரியையும் பெறுமெனக்கொள்க.

எ - டு: மகத்தை, நிலாத்தை எனவரும். (2)

176. யாவென் வினாவும் ஆயியல் திரியாது

இஃது, ஆகார வீற்றுள் ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ – ள்: யா என் வினாவும் அ இயல் திரியாத – யா என்று சொல்லப்படும் ஆகாரவீற்று வினாப் பெயரும் மேற்கூறப்பட்ட வற்றுப்பெறும் அவ்வியல்பில் திரியாது எ . று.

எ-டு : யாவற்றை, யாவற்றோடு என ஒட்டுக. (3)

177. சுட்டுமுத லுகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே.

இஃது, உகரம்வீற்றுட் சிலமொழிக்கு எய்திது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்: சுட்டு முதல் உகரம் அன்னொடு சிவணி - சுட்டெழுத் தினை முதலாகவுடைய உகரஈற்றுச் சொல் அன்சாரியை யொடு பொருந்தி, ஒட்டிய மெய் ஒழித்து உகரம் கெடும் - தான் பொருந்திய மெய்யை ஒழித்து உகரம் கெடும் எ - று.

எ - டு: அதனை, அதனொடு; இதனை, இதனொடு; உதனை, உதனொடு என ஒட்டுக.

---

1. 'ஈண்டும் உருபு இன் சாரியை பெற்றே' என வ.உ.சி. பதிப்பில் உள்ளது.

178. சுட்டுமுதலாகிய ஐயென் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே.

இஃது, ஐகாரவீற்றுட் சிலமொழிக்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள்: சுட்டு முதலாகிய ஐ என் இறுதி - சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுச் சொல், வற்றொடு சிவணி நிற்றிலும் உரித்து - வற்றுச்சாரியையொடு பொருந்தி அவ்வீற்று ஐகாரம் நிற்றலு முரித்து; நில்லாமையு முரித்து. எ-று.

எ-டு: அவையற்றை, அவையற்றோடு; இவையற்றை, இவையற்றோடு; உவையற்றை, உவையற்றோடு என ஒட்டுக.

ஐகாரம் கெட்டவழி, நின்ற வகரத்தினை வற்றின்மிசை ஒற்றென்று கெடுத்து அவற்றை, இவற்றை உவற்றை என ஒட்டுக.

மற்று, இம்முடிபு சுட்டுமுதல் வகர வீற்றோடு ஒத்தமையின், ஈண்டு இது கூறல் மிகைபடக் கூறலாம் பிற எனின், அஃது ஒக்கும்; இவ்வாறு கூறுவன மேலும் உள; அவற்றிற்கெல்லாம் ஆசிரியன் கருத்து அறிந்து கொள்ளப்படு மென்பது.

(வி-ரை) மேல் 123-ஆம் நூற்பாவால் அவை இவை உவை என்பன, வற்றுச் சாரியையொடு பொருந்தும்வழி வற்று என்பதிலுள்ள முதல் எழுத்தாகிய வகர உயிர்மெய்யில் வகர ஒற்றுக் கெட அகரம் மட்டுமே நிற்கும் என்றார். ஈண்டு அவை இவை உவை என்பன வற்றுச்சாரியொடு பொருந்தும் வழி, நிலைமொழியிலுள்ள ஐகாரம் கெட்டு நிற்றலும், கெடாது நிற்றலும் உரித்து என்றார். எனவே மேல் 123-ஆம் நூற்பா வால் கூறியது வருமொழித்திரிபும், இந்நூற்பா நிலைமொழித் திரிபும் கூறியதாகும் இளம்பூரணர் இந்நூற்பாவிற்குக் கூறும் உரையைத் தழுவி இவ்வேறுபாடு காணலாம்.

எனினும், வற்றொடு சிவணுதல் என்னும் பயனிலைக்குச் 'சுட்டு முதலாகிய ஐயென் இறுதியை' (அவை, இவை, உவை) முதற்கண் எழுவாயாகக்கொண்டவர் பின்னர் நிற்றலும் உரித்தே, என்னும் பயனிலைக்கு ஐயென் இறுதியை மட்டும், (அதாவது அவை, இவை, உவை என்பவற்றின் இறுதிலுள்ள ஐகாரத்தை மட்டும்) எழுவாயகக் கொண்டு உரைவகுத்தல் பொருந்ததுவதன்றும். இங்ஙனம் கொண்டதால்தான், அவை இவை உவை என்பன ஈறுதிரியாது நின்று வற்றுச் சாரியையொடு பொருந்தவும் பொருந்தலாம்; அவற்றின் ஈறுகெட்டு அவ், இவ், உவ் என நின்றும் வற்றுச் சாரியையொடு பொருந்தலாம் என உரைகண்டனர். அவ், இவ், உவ் என்பன வற்றுப் பெறுதலை மேல் 184-ஆம் நூற்பாவில் கூறுதலின் இவ்வுரை பொருந்துவதன்றும்.

இங்ஙனம் உரைப்பின் வழுவாதலை யுணர்ந்த நச்சினார்க் கினியர், அவை இவை உவை என்பன வற்றுச் சாரியையோடு பொருந்தி நிற்றலும் உரித்து; உம்மையான் வற்றொடு சில உருபின்கண் இன் சாரியை பெற்று நிற்றலும் உரித்து என உரை கண்டனர்.

எனினும், நூற்பாவின் அமைப்பை நோக்கும்பொழுது, சுட்டு முதலிய ஐயென் இறுதி வற்றொடு பொருந்தி நிற்றலும் உரித்து; உம்மையான் வற்றொடு பொருந்தி நில்லாமையும் உரித்து என உரை காண்பதே பொருத்தம் உடையதாய்த் தெரிகின்றது.

நிற்றலும் உரித்தே என்பதற்கு நிலைமொழியாகிய அவை, இவை, உவை என்பவற்றிலுள்ள ஐயென் இறுதி நிற்றலும் நில்லாமையும் உரித்தே எனப் பொருள் கண்டதால்தான், ஐகாரம் கெட்டு நின்ற அவ், இவ், உவ் என்பனவும் வற்றுப் பெறுதலை ஈண்டுக் கொள்ளவேண்டியதாயிற்று. இங்ஙனம் கொள்ளின் 184-ஆம் நூற்பா தேவையற்றதாகி விடுகின்றது, ஆயின் ஒரேவிதி பெறுதற்கு ஈரிடங்களில் விதிகூறின் மிகை

யாகக் கூறுவதாகுமே எனக்கண்ட இளம்பூரணர், அதற்குச் சமா தானம் கூறுவார் போல இவ்வாறு கூறுவன மேலும் உள; அவற்றிற்கெல்லாம் ஆசிரியன் கருத்தறிந்து கொள்ளப்படும் எனக் கூறினர். இவ்வுரையை ஏற்பின் ஆசிரியர் தொல்காப்பியர் பலவிடத்தும் மிகைபடக் கூறல் என்னும் குற்றந்தங்க யாத் துள்ளனர் என்றும், அதற்கு யாதானும் ஓராற்ருன் அமைதி கூறிக் கொள்ள வேண்டும் என்றும் கருத்துக் கொள்ள வேண்டி வரும். இங்ஙனம் கொள்ளுதல் பொருந்துவதன்ருகலின், இளம் பூரணர் கருத்தும் பொருந்துவதன்ரும்.

எனவே அவை, இவை, உவை என்பனவற்றை வேருகவும், அவ், இவ், உவ் என்பனவற்றை வேருகவும் கொள்ளுதலே ஆசிரியர் துணிவாகும் என்றும், இவற்றில் முன்னையதற்கு உரிய முடிவை 123–ஆம் நூற்பாவாலும், இந்நூற்பாவாலும் கூறி, ஏனையதை 183–ஆம் நூற்பாவால் கூறுவதே ஆசிரியர் கருத்து எனவும் துணியப்படும். (5)

179. யாவென் வினவின் ஐயென் இறுதியும்
ஆயியல் திரியா தென்மனர் புலவர்
ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே.

இதுவும் அது.

இ–ள் : யா என் வினவின் ஐ என் இறுதியும்-யா என்னும் வினவினையுடைய ஐகாரவீற்றுச்சொல்லும், ஆ இயல் திரியாது என்மனர் புலவர்-மேற்கூறிய சுட்டுமுதல் ஐகாரம் போல வற்றுப்பெறும் இயல்பில் திரியாதென்று சொல்லுவர் ஆசிரியர்; ஆ வயின் வகரம் ஐயொடும் கெடும்-அவ்விடத்து வகரம் ஐகாரத் தோடுகூடக் கெடும் எ-று.

எ-டு : யாவற்றை, யாவற்ரேடு என ஒட்டுக.

வகரம் வற்றின்மிசை ஒற்றென்று (134) கெடுவதனை, ஈண்டுக் கடோதியவதனல் பிற ஐகாரமும் வற்றுப்பெறுதல் கொள்க.

எ-டு : கரியவற்றை, செய்யவற்றை எனவரும்.

(வி·ரை) யாவை + ஐ = யாவற்றை. 'ஆவயின் (யாவை என்பதில்) வகரம் ஐயொடும் கெடுமே' என்பதால் வகர ஐகாரம் கெட்டு யா என நின்று மேல்நின்ற வற்றொடும் பொருந்தி யாவற்றை என ஆயிற்று.

ஈண்டு நிலைமொழியிலுள்ள வகர ஒற்றும், ஐகார வுயிரும் கெடுதற்கு விதிகூறப்பட்டுள்ளது. இவற்றுள் வகரவொற்றுக் கெடுதல் மேல் 134-ஆம் நூற்பாவால் பெறப்படும். ஆதலின் ஈண்டு ஐகாரம் கெடுதற்கு மட்டுமே விதி கூறின் அமையும்.

அங்ஙனமாகவும், 'வகரம் ஐயொடும் கெடுமே' என்று கூறியது, பிற ஐகாரமும் வற்றுப் பெறுமென அறிதற்கேயாம் எனக் கூறியது நுண்மை யுடையதாகும். நச்சினார்க்கினியரும் இங்ஙனமே உரைப்பர். (6)

180. நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றா கும்மே.

இஃது, ஈகாரவீற்றுள் ஒருமொழிக்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் : நீ என் ஒருபெயர் நெடுமுதல் குறுகும் - நீ என்னும் ஒரு பெயர் நெடிதாகிய முதல் குறுகும்; ஆ வயின் னகரம் ஒற்றாகும்-அவ்விடத்து வரும் னகரம் ஒற்றாகும் எ.று.

எ-டு : நின்னை, நின்னொடு என ஒட்டுக.

'ஒருபெயர்' என்றது, நின் என்பதும் வேறொரு பெயர் போறலை விலக்கிற்று. 'பெயர்குறுகும்' என்னாது 'முதல்குறுகும்' என்றது, அப்பெயரின் நெட்டெழுத்து நிலையது அக்குறுக்க மென்றற் கென்பது. 'நெடுமுதல்' என்றது அம்மொழிமுதலின் நகரம் குறுகுதலை விலக்கிற்று. ஈண்டு, உயிர்மெய் யொற்றுமை பற்றி நெடியது முதலாயிற்று.

சாரியைப்பேற்றிடை எழுத்துப்பேறு கூறியது. மூன்றும் உருபின்கண் சாரியை பெற்றே வந்த அதிகாரம் மாற்றி நின்றது.

(வி-ரை) நீ என்பது உருபேற்குங்கால், 'நி' எனக் குறுகி னகர வொற்றுப் பெற்றுப் பின் உருபேற்கும் என்றார் ஆசிரியர். இதில் வரும் னகரவொற்றுச் சாரியை யன்று; எழுத்துப் பேறாகும். ஆனால் இதற்கு முன்னைய நூற்பாக்களிலும், பின்னைய நூற்பாக்களிலும் சாரியைப் பேற்றினையே கூறுகின்றார் ஆசிரியர். அங்ஙனமாக இவ்வெழுத்துப் பேற்றினைச் சாரியைப் பேறு கூறும் நூற்பாக்களிடையே வைத்ததற்குக் காரணம் என்னை? என்பதை விளக்குகின்றார் இளம்பூரணர். அது வருமாறு:—

மேல் 133-ஆம் நூற்பாவில் ஒடு உருபு வருமிடத்துச் சாரியை வருதலும் உண்டு; வாராமையும் உண்டு எனக் கூறினார் ஆசிரியர். ஆயினும் இளம்பூரணர் அந்நூற்பாவில் 'இயற்கை' என்றதனால் ஒடு உருபின்கட் சாரியை பெற்றும் பெறாமலும் வருதலின்றிப் பெற்றே வருதலும் கொள்க என்றார். ஆனால் இந்நூற்பாவில் 'நின்னொடு' என ஒடு உருபு வருமிடத்துச் சாரியை பெறாமலே வந்துள்ளது. இங்ஙனம் முன் சாரியை பெற்றே வரும் என்ற நிலை 171 முதல் 179 வரை கடைப்பிடிக்கப்பட்டது. இந்நூற்பாவில், அதனை மாற்றுதற்காகவே ;சாரியைப் பேற்றிடை எழுத்துப்பேறு கூறினார் ஆசிரியர் என்பது இவர் தரும் காரணம் ஆகும்.

நீ என்பதும் நின் என்பதும் வேறு வேறு பெயரன்று; நீ என்பதே திரிந்து நின் என ஆயிற்று என்பார் 'நீயென் ஒரு பெயர்' என்றார். பெயர் குறுகும் என்னாது 'முதல் குறுகும்' என்பது நீ என்பதிலுள்ள நெடிலைக் குறிப்பதற்காகும். நகரம் குறுகும் என்பதற்கே இடமின்மையான் நெடுமுதல் என்பது னகரம் குறுகுதலை விலக்கிற்று என்ற தொடர் வேண்டுவதின்று.

நச்சினார்க்கினியர் இவர் கருத்தை அப்படியே ஏற்று மொழிவர். (7)

181. ஒகார இறுதிக்கு ஒன்னே சாரியை.

இஃது, ஒகார ஈறு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : ஒகார இறுதிக்குச் சாரியை ஒன்-ஒகாரவீற்றுக்கு இடைவரும் சாரியை ஒன்சாரியை எ.று.

எ-டு: கோஒனே, கோஒனொடு என ஒட்டுக.

(வி-ரை) நன்னூலார் ஒன் சாரியை கொண்டிலர். கோஒனை கோஒனொடு என்பன ஒகரங் கெட்டு கோனை, கோனொடு என வழங்கும் பிற்கால வழக்கு நோக்கி அவர், னகர ஒற்று ஒன்றுமே பெறும் என்பர். இந்நூற்பாவையும், 232 ஆம் நூற்பாவில் 'னகரம் ஒற்றும் ஆவும் மாவும்' என்ற தொடரையும் இணைத்து அவர் 'ஆமா கோனவ் வணையவும் பெறுமே' (நன்-248) என்பர். (8)

182. அ ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்(கு)
அத்தொடுஞ் சிவணும் ஏழன் உருபே.

இஃது, அகர ஆகாரவீற்றுச் சிலமொழிக்கு, உருபின்கண் எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் : அ ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு-அ ஆ என்று சொல்லப்படும் மரத்தை உணரநின்ற பெயராகிய சொற்கு, அத்தொடும் சிவணும் ஏழன் உருபு-முன்கூறிய இன்னோடன்றி (174) அத்தோடும் பொருந்தும் ஏழாம் உருபு எ.று.

எ-டு: விளவத்துக்கண், பலாவத்துக்கண் எனவரும்.

(வி-ரை) விள, பலா என்பன இந்நூற்பாவில் அத்துச் சாரியை பெற்றன. 'வல்லெழுத்து முதலிய' (115) என்பதனால் வல்லெழுத்துக் கொடுத்துத் 'தெற்றென்றற்றே' (134) என்பதனால் 'அத்தினகரம் அகரமுனைக்' (126) கெடாமை செய்து முடிக்க. (9)

183. ஞ ந என் புள்ளிக்(கு) இன்னே சாரியை.

இது, புள்ளியீற்று ஞகாரவீறும் நகாரவீறும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஞ ந என் புள்ளிக்கு இன்னே சாரியை- ஞ ந என்று சொல்லப்படுகின்றபுள்ளியீறுகட்குவரும் சாரியை இன்சாரியை எ.று.

எ-டு: உரிஞினை, உரிஞினொடு; பொருநினை பொருநினொடு என ஒட்டுக. (10)

184 சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்
கெட்ட இறுதி யியல்திரி பின்றே.

இது, வகரவீறு நான்கனுள்ளும் சுட்டுமுதல் வகரவீற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: சுட்டுமுதல் வகரம்-சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகரவீற்றுச்சொல், ஐயும் மெய்யும் கெட்ட இறுதி இயல்திரிபு இன்று-ஐகாரமும் அதனூற் பற்றப்பட்ட மெய்யும் கெட்டு வற்றுப் பெற்று முடிந்த சுட்டுமுதல் ஐகாரவீற்றியல்பில் திரிபின்றி வற்றுப் பெற்று முடியும் எ.று.

எ-டு: அவற்றை, அவற்றொடு; இவற்றை, இவற்றொடு; உவற்றை, உவற்றொடு என ஒட்டுக.

(வி-ரை) 'வகரக் கிளவி நான்மொழி யீற்றது' (81) என்பதால் வகர ஈற்றுச் சொற்களில் அவ், இவ், உவ், தெவ் என்னும் நான்கு சொற்கள் உளவாதல் பெறுதும். அவற்றுள் முதல் மூன்றினை இந்நூற்பாவிலும், ஏனையதை அடுத்த நூற்பாவிலும் ஆசிரியர் கூறுகின்றார்.

அவ், இவ், உவ் என்பன வற்றுப் பெறும். அங்ஙனம் அவை பெறுவது நிலைமொழியின் இறுதியிலுள்ள 'ஐயும் மெய்யும்' (அதாவது 'வை' என்பது) கெட்ட சொல் வற்றுப் பெற்றதைப் போலாம் என்பதே இந்நூற்பாவின் கருத்து ஆகும்.

வற்றுப் பெறுங்கால் நிலைமொழி யிறுதியிலுள்ள 'வை' கெடுவது யாவை (179) என்பதேயன்றி, இளம்பூரணர் கூறுமாறுபோல, சுட்டு முதல் ஐகார ஈற்றுச் சொல்லாகிய அவை இவை என்பன

அல்ல. ஆதலின் இளம்பூரணர் கூறும் உரை பொருந்தாது. ஐயும் மெய்யும் கெட்ட இறுதியையுடைய சொல் 'யாவை' என்பதே யாகும். நச்சினார்க்கினியரும் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

நன்னூலார் வற்றுச்சாரியைக்கு மாறாக அற்றுச்சாரியை யென்பதொன்றைக் கொண்டவராதலின், 'வவ்விறு சுட்டிற்கு அற்றுறல் வழியே' (நன்-250) என்றனர். (11)

185. ஏனை வகரம் இன்னொடு சிவணும்.

இது, வகரவீற்றுள் ஒழிந்த வகரவீற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ஏனை வகரம் இன்னொடு சிவணும்-ஒழிந்த வகர வீறு இன்சாரியையோடு பொருந்தி முடியும் எ. று.

எ-டு: தெவ்வினை, தெவ்வினொடு என ஒட்டுக.

மற்று இது உரிச்சொல்லன்றோவெனின், உரிச்சொல்லேயெனி னும் படுத்தலோசையாற் பெயராயிற்றெனக் கொள்க. (12)

186. மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை.

இது, மகரஈறு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மஃகான் புள்ளிமுன் அத்து சாரியை-மகரமாகிய புள்ளியீற்றுச் சொல்முன் வரும் சாரியை அத்துச் சாரியை எ. று.

எ-டு: மரத்தை, மரத்தொடு என வரும்.

(வி-ரை) மரம்+ஐ=மரத்தை. மரம் என்னும் சொல் இந் நூற்பாவில் அத்துப்பெற்றது. 'ஒற்று மெய் கெடுதல் தெற் றென்றற்றே' (134) என்பதால் மகரவொற்றுக் கெடுத்து, அத்தி னகரம் (126) என்பதால் அகரம் கெடுத்து, மரத்தை என முடிக்க. நுகத்தை, நுகத்தொடு என்பனவற்றையும் இவற்றான் முடித்துக் கொள்க. (13)

187. இன்னிடை வருஉம் மொழியுமா ருளவே.

இது, மகரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: இன் இடைவரும் மொழியும் உள-மகரவீறு அத்துச் சாரியை யொழிய இன்சாரியை இடைவந்து முடியும் மொழிகளும் உள எ. று.

எ-டு: உருமினை, உருமினொடு என ஒட்டுக.

(வி-ரை) 'மறத்திறனும்' (புறம் 24) என வரும் ஆசிரியர் வழக்கால் அத்தும் இன்னும் ஒருங்கு வருதலும் கொள்க. (14)

188. நும்மென் இறுதி இயற்கை யாகும்.

இது, மகரவீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: நும் என் இறுதி இயற்கை ஆகும்-நும் என்னும் மகரவீறு மேற்கூறிய அத்தும் இன்னும் பெறாது இயல்பாய் முடியும் எ. று.

எ-டு: நும்மை, நும்மொடு என ஒட்டுக.

(வி-ரை) நும்மை, நும்மொடு என்பன ஒற்று இரட்டித்த வேனும் அவை சாரியை பெறாமை கருதி 'இயற்கை யாகும்' என்றார். (15)

189. தாம்நாம் என்னு மகர இறுதியும்
யாமென் இறுதியும் அதனோ ரன்ன
[1]ஆ எ ஆகும் யாமென் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை யிரண்டும் நெடுமுதல் குறுகும்.

1. 'ஆ எவ் வாகும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம். 'ஆ எய் யாகும்' என்பதும் பாடம்.

இது, மகரவீற்றுள் முன்கூறிய முடிபு ஒவ்வாதனவற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தாம் நாம் என்னும் மகர இறுதியும் யாம் என் இறுதியும் அதன் ஓர் அன்ன-தாம் நாம் என்று சொல்லப்படும் மகரவீறும் யாம் என்னும் மகரவீறும் மேற்கூறிய நும் என்னும் மகரவீறுபோல அத்தும் இன்னும் பெறுது முடிதலையுடையவாம்; யாம் என் இறுதி ஆ எ ஆகும்-யாம் என்னும் மகரவீற்று மொழி ஆகாரம் எகாரமாம்; அ வயின் யகரமெய் கெடுதல் வேண்டும்-அவ்விடத்து யகரமாகிய மெய் கெடுதல் வேண்டும்; ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும்-ஒழிந்த இரண்டும் நெடியவாகிய முதல் குறுகி நின்று முடியும் எ. று.

எ-டு: தம்மை, தம்மொடு; நம்மை, நம்மொடு; எம்மை, எம்மொடு என ஒட்டுக.

'ஆவயின் மெய்' என்றதனுல், பிறவயின்மெய்யும் கெடுமெனக் கொள்க.

எ-டு: தங்கண், நங்கண், எங்கண் என வரும்.

(வி-ரை) 161, 162, 180, 189, 193 ஆகிய நூற்பாக்களின் கருத்துக்களைத் தொகுத்தே நன்னூலாரும்,

'தான்தாம் நாம் முதல் குறுகும் யான்யாம்
நீநீர் என் எம்நின்நு மாம்பிற
குவ்வின் அவ்வரும் நான்காறு இரட்டல்'

நன்-247 என யாத்தனர்.

தாம்+ஐ=தம்மை. இந்நூற்பாவால் தாம் என்பது தம் எனக் குறுகிற்று. 'நெடியதன் முன்னர்' (161) என்பதனுள் குறியது பிற்கூறிய முறையன்றிக் கூற்றினுல், நெடுமுதல் குறுகி நின்ற இத் தாம் என்பதும், குறியதன் முன்னர் ஒற்றுய் இரட்டித்துத் தம்மை என முடிந்தது.

தாம்+கண்=தங்கண். இந்நூற்பாவால் நெடியது குறுகி நின்ற தம் என்பது, 'ஆவயின் மெய்' என்பதால் மகரவொற்றுக் கெட்டு, 'ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்' (115) என்பதால் ஙகரவொற்றுப் பெற்றுத் தங்கண் என முடிந்தது. (16)

190. [1]எல்லா மென்னும் இறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதி யான.

இது, மகரவிற்றுள் ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: எல்லாம் என்னும் இறுதிமுன்னர்-எல்லாம் என்னும் மகரவீற்றுச் சொல்லின்முன்பு, வற்று என் சாரியை முற்றத் தோன்றும்-மேற்கூறிய அத்தும் (186) இன்னுமன்றி (187) வற்று என்னும் சாரியை முடியத்தோன்றி முடியும். உம்மை நிலையும் இறுதியான-உம் என்னும் சாரியை நிலைபெறும் இறுதிக்கண் எ. று.

எ-டு: எல்லாவற்றையும், எல்லாவற்றோடும் என ஒட்டுக.

'முற்ற' என்றதனான், மூன்றும் உருபின்கண்ணும் நான்காம் உருபின்கண்ணும் ஆறும் உருபின்கண்ணும் உம்மின் உகரக்கேடு கொள்க.

(வி-ரை) 'முற்ற' என்பதனால் 3, 4, 6 ஆகிய உருபின் கண் உம்மின் உகரக்கேடு கொள்க' என்னும் இளம்பூரணர் உரையைத் தழுவிய நச்சினார்க்கினியர் எல்லாவற்றொடும், எல்லாவற்றுக்கும், எல்லாவற்றதும் என எடுத்துக்காட்டுக்காட்டி 'இவை முற்றுகரமாதலின் ஏறி முடியா' எனக் காரணமும் கூறினர்.

எல்லாம்+ஒடு=எல்லாவற்றொடும். இந்நூற்பாவால் எல்லாம் என்பது இடையில் வற்றுச்சாரியையும், 'உம்மை நிலையும் இறுதி

1. இதனை 'வாராத தனால் வந்தது முடித்தல்' என்னும் உத்திக்கு எடுத்துக்காட்டாகக் காட்டுவர் பேராசிரியர்.

யான' என்பதால் ஒடு உருபின்கண் உம்மும் பெற்று எல்லா வற்றொடும் என முடிந்தது. எல்லாம் என்பதில் உள்ள மகர வொற்று வற்றின்மிசை யொற்றாகக் கெடுக்கப்பட்டது. இங்ஙனம கூறுங்கால், எல்லாம்+வற்று+ஒடு+உம் என்பவற்றில் இறுதியில் உள்ள ஒடு+உம்=ஒடும் என ஆயதற்கு விதி கிடைத்திலது. அதனையே இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'முற்ற' என்ப தால் உம்மின் உகரக்கேடு கொள்க என்றனர். எல்லாவற்றொடு, எல்லாவற்றிற்கு, எல்லாவற்றது என்பவற்றைக் குற்றியலுகர மாகக் கொள்ளின் 139 ஆம் நூற்பாவினாலேயே உம்மின் உகரம் கெட்டுவிடும். இம் 'முற்ற' என்பதனால் கொள்ள வேண்டுவ தின்று. (17)

191. உயர்திணை யாயின் நம்மிடை வருமே.

இதுவும் அது.

இ-ள்: உயர்திணையாயின் நம் இடைவரும்-எல்லாம் என்னும் விரவுப்பெயர் அஃறிணைப் பெயரன்றி உயர்திணைப் பெயராய் நிற்குமாயின், நம் இடைவரும்-நம் என்னும் சாரியை இடை வந்து புணரும் எ. று.

நிலைமொழியொற்றும் மேல் 'வற்று மிசையொற்று' என்று கெட்டுநின்ற அதிகாரத்தாற் கெடுக்க. இன்னும் அதனானே உம்முப் பெறுதலும், அதன்கண் உகரம் சில உருபின்கண் கெடுத லும் கொள்க.

எ-டு: எல்லாநம்மையும், எல்லாநம்மொடும் என ஒட்டுக.

(வி-ரை) இன்னும் அதனானே என்பது வற்றின் மிசை யொற்று என்னும் நூற்பாவைக் குறியாது 'அதிகாரத்தால்' என்னும் சொல்லையே குறிக்கும். எனவே இதற்குமுன் 'உம்மை நிலையும் இறுதியான' என்னும் நூற்பாவின் பகுதியும், 3, 4, 6 ஆகிய உருபுகளின் முன் உம்மின் உகரம் கெடுதலாகிய உரைப் பகுதியும் அதிகாரத்தால் இதற்கும் கொள்ளப்பட்டது.

இந்நூற்பாவையும் இதற்கு முன்னுள்ள நூற்பாவையும் இணைத்தே நன்னூலாரும், 'எல்லாம் என்பது இழிதிணை யாயின், அற்றேடு உருபின் மேல்உம் உறுமே, அன்றேல் நம்மிடை அடைந்து அற்றாகும்' (நன்–245) என்றனர். (18)

192. எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும்
எல்லீரு மென்னு முன்னிலை இறுதியும்
ஒற்றும் உகரமுங் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையும் இறுதி யான
தம்மிடை வருஉம் படர்க்கை மேன
நும்மிடை வருஉம் முன்னிலை மொழிக்கே.

இது, மகரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும் எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்-எல்லாரும் என்று சொல்லப்படும் படர்க்கையிடத்து மகரவீற்றுச் சொல்லும் எல்லீரும் என்று சொல்லப்படும் முன்னிலையிடத்து மகரவீற்றுச் சொல்லும், ஒற்றும் உகரமும் கெடும் என மொழிப-இவற்றின் மகரவொற்றும் அதன் முன் நின்ற உகரமும் கெட்டு முடியுமென்று சொல்லுவர், ரகரப் புள்ளி நிற்றல் வேண்டும்-அவ்வுகரம் கெடுவழி அதனால் ஊரப் பட்ட ரகரப்புள்ளி கெடாது நிற்றல் வேண்டும், இறுதியான உம்மை நிலையும்-அவ்விரு மொழிக்கும் இறுதிக்கண் உம் என்னும் சாரியை நிலைபெறும், படர்க்கை மேன தம் இடைவரும்-படர்க்கை யிடத்துத் தம்முச் சாரியை இடைவரும்; முன்னிலை மொழிக்கு நும் இடைவரும்-முன்னிலை மொழிக்கு நும்முச் சாரியை இடை வரும் எ. று.

எ–டு: எல்லார்தம்மையும், எல்லார் தம்மொடும்; எல்லீர் நும்மையும், எல்லீர் நும்மொடும் என ஒட்டுக.

'படர்க்கை' 'முன்னிலை' என்ற மிகுதியான், மகரவீற்றுத் தன்மைப் பெயரிடைக்கண் நம்முச்சாரியையும், ஈற்றுக்கண் உம்முச் சாரியையும் பெற்றுமுடிவன கொள்க.

எ-டு: கரியே நம்மையும், கரியே நம்மொடும் என ஒட்டுக.

படர்க்கைப்பெயர் முற்கூறியவதனால், ரகாரவீற்றுப் படர்க்கைப் பெயரும் முன்னிலைப்பெயரும் இறுதிக்கண் உம்மொடு தம்முச் சாரியையும் நும்முச்சாரியையும் பெற்று முடிவன கொள்க.

எ-டு: கரியார்தம்மையும், சான்றீர்நும்மையும் என ஒட்டுக.

உகரமும் ஒற்றும் என்னாத முறையன்றிய கூற்றினான், அம் மூன்று உருபின்கண் உம்மின் உகரக்கேடு எடுத்தோதியவற் றிற்கும் இலேசினாற் கொண்டவற்றிற்கும் கொள்க.

(வி-ரை) 'எல்லாரும் எல்லீரும் என்பவற் றும்மை, தள்ளி நிரலே தம்நும் சாரப், புல்லும் உருபின் பின்னர் உம்மே' (நன்-246) என்பர் நன்னூலாரும். (19)

193. தான்யான் என்னும் ஆயீ ரிறுதியும்
மேன்முப் பெயரொடும் வேறுபா டிலவே.

இது, னகரவீற்றுச் சிலவற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தான் யான் என்னும் ஆ ஈர் இறுதியும்-தான்யான் என்று சொல்லப்படும் அவ்விரண்டு னகர வீறும், மேல்முப்பெய ரொடும் வேறுபாடு இல-மேல் மகரவீற்றுச் சொல்லப்பட்ட (189) மூன்று பெயரோடும் வேறுபாடின்றித் தானென்பது நெடுமுதல் குறுகியும் யான் என்பதன்கண் ஆகாரம் எகாரமாய் யகரங்கெட்டும் முடியும் எ.று.

எ-டு: தன்னை, தன்னொடு; என்னை, என்னொடு என ஒட்டுக. (20)

194. அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப உணரு மோரே.

இதுவும் அது.

இ-ள் : அழன் புழன் அ இரு மொழிக்கும்-அழன் புழனாகிய அவ்விரு மொழிக்கும், அத்தும் இன்னும் உறழத் தோன்றல் ஒத்தது என்ப உணருமோர்-அத்துச் சாரியையும் இன்சாரியையும் மாறிவரத் தோன்றுதலைப் பொருந்திற்றென்ப உணருவோர் எ.று.

எ-டு: அழத்தை, அழத்தொடு; அழனினை, அழனினொடு; புழத்தை, புழத்தொடு; புழனினை, புழனினொடு என ஒட்டுக.

'தோன்றல்' என்றதனான், எவன் என்றும், என் என்றும் நிறுத்தி, வற்றுக்கொடுத்து வேண்டும் செய்கை செய்து எவற்றை, எவற்றொடு எனவும், எற்றை, எற்றொடு எனவும் முடிக்க.

'ஒத்தது' என்றதனால், எகின் என நிறுத்தி, அத்தும் இன்னும் கொடுத்துச் செய்கை செய்து எகினத்தை, எகினத்தொடு, எகினினை, எகினினொடு எனவும் முடிக்க.

அத்து முற்கூறியவதனான், அத்துப் பெற்றவழி இனிது இசைக்குமெனக் கொள்க.

அழன்-பிணம்.

(வி-ரை) 120-ஆம் நூற்பாவில் கூறிய முறைப்படி இன் சாரியை முற்கூறப்படவேண்டும். அங்ஙனமின்றி அத்துச்சாரியை முற்கூறியது இனிது இசைத்தற்கே யாகும். (21)

195. அன்னென் சாரியை ஏழன் இறுதி
முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப.

இது, மகாரவீற்று ஒருமொழிக்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் : அன் என் சாரியை ஏழன் இறுதி முன்னர்த் தோன்றும் இயற்கைத்து என்ப-அன் என்னும் சாரியை ஏழென்னும் சொல் லிறுதியின் முன்னே தோன்றும் இயல்பினை யுடைத்தென்று சொல்லுவர் எ. று.

எ-டு: ஏழனை, ஏழனொடு என ஒட்டுக.

சாரியை முற்கூறியவதனால், பிறவும் அன்பெறுவன கொள்க.

எ-டு: பூழனை, பூழனொடு; யாழனை, யாழனொடு என ஒட்டுக.

(வி-ரை) ஏழென்பது உயிரீறு, அல்லது மெய்யீறு என்பது பற்றிக் கருத்து வேறுபாடு உளது. எனினும் அது மெய்யீறு என்றலே பொருந்துவதாகும். அதற்குரிய காரணங்கள் வருமாறு:— (1) இந்நூற்பாவில் ஏழ் என்பதை மெய்யீற்றுச் சொல்லாகவே வைத்துப் புணர்ச்சிவிதி கூறியுள்ளார். (2) இது உயிரீறுயின் உயிர்மயங்கியலிலோ, அன்றிக் (ஏழு எனக் கொள்ளின் இயைபுபற்றிக்) குற்றியலுகரப் புணரியலிலோ கூறி யிருக்கவேண்டும். அங்ஙனம் கூறவில்லை. (3) புள்ளிமயங்கியலுள் ழகர ஈற்றுச் சொற்களோடியைய இதனையும் சேர்த்துப் புணர்ச்சி விதி கூறியுள்ளார். 389ஆம் நூற்பா காண்க. ஆதலின் இது மெய்யீறேயாம். (22)

196. குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்னென் சாரியை.

இது, குற்றியலுகர ஈற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: குற்றியலுகரத்து இறுதிமுன்னர் முற்றத்தோன்றும் இன் என் சாரியை-குற்றியலுகரமாகிய ஈற்றின் முன்னர் முடியத் தோன்றும் இன் என் சாரியை எ-று.

எ-டு: வரகினை, வரகினொடு; நாகினை, நாகினொடு என ஒட்டுக.

'முற்ற' என்றதனால், பிறசாரியை பெறுவனவும் கொள்க.

எ-டு: வழக்கத்தாற் பாட்டாராய்ந்தான், கரியதனை, கரிய தனொடு என வரும்.

(வி-ரை) மேல் தொகைமரபில் 'குற்றிய லுகரக் கின்னே சாரியை' என்றார். ஈண்டும், 'குற்றிய லுகரத் திறுதி முன்னர், முற்றத் தோன்றும் இன்னென் சாரியை' எனக்கூறிய தென்னை?

யெனின், ஆண்டு அளவுப் பெயரும், நிறைப்பெயரும் நிலை மொழியாய் நிற்க, வருமொழியில் குறையென்னும் சொல்வர, இன்சாரியை பெறும் என்றார்; ஈண்டோ பொருட்பெயர்கள் நிலைமொழிகளாய் நிற்க, வருமொழியில் உருபுவரின் இன்சாரியை வரும் என்றார். இவ்வேற்றுமை யுடைமையின் கூறியது கூறல் ஆகாது. (23)

197. நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்
அப்பால் மொழிகள் அல்வழி யான.

இஃது, அவற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ-ள்: நெட்டெழுத்து இம்பர் ஒற்று மிகத் தோன்றும்-நெட்டெழுத்தின் பின்னாக (இடை) இனவொற்று மிகத் தோன்றும், அப்பால் மொழிகள் அல்வழியான-அக் கூற்றுமொழிகள் அல்லாத இடத்தின்கண்ணே எ. று.

அவ்வீறு இன்சாரியை பெறுவது ஆண்டாயின் பெறுது.

எ-டு: யாட்டை, யாட்டொடு என வரும்.

அப்பான்மொழிகளாவன க ச த ப க்கள். இவை இன வொற்று மிகாதென்று கொள்க.

'தோன்றும்' என்றதனான், உயிர்த்தொடர் மொழியும் இன் பெருது இனவொற்று மிகுதல்கொள்க.

எ-டு: முயிற்றை, முயிற்றொடு என வரும்.

(வி-ரை) ஈண்டு அப்பால் மொழிகள் எனக் கூறப்படுவன வற்றை ஆசிரியர், 'ஒற்றிடை யினமிகா மொழியுமாருளவே, அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே' எனப் பின்னும் கூறுவர்.

இந்நூற்பாவையும் உரையையும் தழுவியே நன்னூலாரும், 'நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள், டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே' (நன்-183) என்றனர். (24)

198. அவைதாம்
இயற்கைய வாகுஞ் செயற்கைய என்ப.

இது, மேற் சாரியை விலக்கப்பட்டவற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அவைதாம்-மேற் சாரியை பெருவென விலக்கப்பட்ட அவைதாம், இயற்கையவாகும் செயற்கைய என்ப-இயல்பாய் முடிதலை யுடையவாகும் செய்தியையுடைய வென்று சொல்லுவர் எ.று.

எ-டு: யாட்டை, யாட்டொடு என ஒட்டுக.

'செயற்கைய' என்றதனுன், இனவொற்றுமிக்கன சிறுபான்மை இன்பெறுதலும் கொள்க.

எ-டு: யாட்டினை, யாட்டினெடு, முயிற்றினை, முயிற்றினெடு என வரும்.

(வி-ரை) இனவொற்று மிகுவனவாகிய யாடு, முயிறு என்பன இன்சாரியை பெருது இயல்பாக முடியும் செய்தியுடையவாம். செயற்கை-செய்தி. (25)

199. எண்ணின் இறுதி அன்னெடு சிவணும்.

இஃது, அவ்விற்று எண்ணுப்பெயர் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: எண்ணின் இறுதி அன்னெடு சிவணும்-எண்ணுப் பெயர்களினது குற்றுகர வீறு அன்சாரியையொடு பொருந்தும் எ.று.

எ-டு: ஒன்றனை, ஒன்றனோடு; இரண்டனை, இரண்டனோடு என ஒட்டுக. (26)

200. ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வருஉம்
எல்லா எண்ணுஞ் சொல்லுங் காலை
ஆனிடை வரினும் மான மில்லை
அஃதென் கிளவி ஆவயிற் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே.

இதுவும் அது.

இ-ள்: ஒன்று முதலாகப் பத்து ஊர்ந்து வரும் எல்லா எண்ணும் - ஒன்று என்னும் எண்ணுப் பெயர் முதலாகப்பத்து என்னும் எண்ணுப் பெயரால் ஊரப்பட்டு வரும் எல்லா எண்ணுப் பெயர்களும், சொல்லுங்காலை-முடிபு சொல்லுங்காலத்து, ஆன் இடைவரினும் மானம் இல்லை-அவ்விற்றிற்கு மேற்கூறிய அன்னே யன்றி ஆன்சாரியை இடைவரினும் குற்றமில்லை, அ வரின் அஃது என் கிளவி கெடும்-அவ்வான்சாரியை பெற்றவழி அஃது என்னும் சொல் கெடும், பஃகான்மெய் உய்தல் வேண்டும்-அதுகெடுவழி அவ்வகரத்தான் ஊரப்பட்ட பகரமாகிய மெய் கெடாது நிற்றலை வேண்டும் எ.று.

எ-டு: ஒருபானை, ஒருபானொடு; ஒருபஃதினை, ஒருபஃதினொடு; இருபஃதினை இருபஃதினொடு என ஒட்டுக.

'சொல்லுங் காலை' என்றதனான், ஒன்பதென்னும் எண்ணுப் பெயரும் ஆன் பெற்று, அவ்விற்றின் அது என்னும் சொற்கெட்டு முடிதல் கொள்க.

எ-டு: ஒன்பானை, ஒன்பானொடு என ஒட்டுக

(வி-ரை) ஒருபஃது + ஐ = ஒருபானை. ஒன்பது + ஐ = ஒன்பானை 'ஒன்று, முதல்எட்டு ஈறும் எண் ஊர், பத்தின்முன் ஆன்வரின் பவ்வொற் றொழியமேல் எல்லாம் ஓடும் ஒன்பதும் இற்றே' (நன்-249) என்பர் நன்னூலாரும். 'ஒன்பதும் இற்றே' என்பது 'சொல்லுங்காலை' என்ற மிகையால் கூறப்பட்ட பொருளைத் தழுவியதாகும். (27)

201. யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தங் கெடுதல் ஆவயி னான.

இதுவும், அக்குற்றுகர வீற்றுட் சிலவற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: யாது என் இறுதியும்-யாது எனவரும் குற்றுகர ஈறும், சுட்டு முதலாகிய ஆய்த இறுதியும்-சுட்டெழுத்தினை முதலாக

வுடைய ஆய்தத்தொடர்மொழிக் குற்றுகர ஈறும், அன்னொடு சிவணும்-அன்சாரியையொடு பொருந்தும், ஆ வயினான ஆய்தம் கெடுதல்-அவ்விடத்து ஆய்தம் கெடுக எ. று.

எ-டு: யாதனை, யாதனொடு; அதனை, அதனொடு; இதனை, இதனொடு; உதனை. உதனொடு என ஒட்டுக.

(வி-ரை) யாது+ஐ=யாதனை. அஃது+ஐ=அதனை. அது என்னும் முற்றுகரம் அன் பெற்று முடிதலை மேல் 177ஆம் நூற்பாவால் கூறினார். ஈண்டு அஃது, இஃது, உஃது என்னும் குற்றியலுகர ஈறுகள் அன்பெற்று முடிதலைக் கூறுகிறார். 'சுட்டின் முன் ஆய்தம் அன்வரிற் கெடுமே' (உருபு-12) என நன்னூலாரும் கூறுதல் காண்க. (28)

202. ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக் கிளவி இயற்கையு மாகும்
ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடுமே.

இதுவும் குற்றுகரவீற்றுட் சிலவற்றிற்கு ஏழாம் உருபோடு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஏழன் உருபிற்கு-ஏழாம் வேற்றுமைக்கு, திசைப் பெயர் முன்னர்-திசையை உணரநின்ற பெயர்களின் முன்னர், சாரியைக் கிளவி இயற்கையும் ஆகும்-இவ்வீற்றிற்கு முன்கூறிய இன்சாரியையாகிய சொல் நின்று முடிதலேயன்றி நில்லாது இயல்பாயும் முடியும்; ஆ வயின் இறுதி மெய்யொடும் கெடும்-இயல்பாயவழிப் பெயர் இறுதிக் குற்றுகரம் தன்னால் ஊரப்பட்ட மெய்யொடும் கெடும் எ.று.

எ-டு: வடக்கின்கண், கிழக்கின்கண், தெற்கின்கண், மேற்கின்கண் எனவும்; வடக்கண், கிழக்கண், தெற்கண், மேற் கண் எனவும் வரும்.

உருபு முற்கூறியவதனால், கீழ்சார், கீழ்புடை; மேல்சார், மேல் புடை; தென்சார், தென்புடை; வடசார், வடபுடை என இவ்வாறு சாரியை பெறாது திரிந்து முடிவனவெல்லாம் கொள்க. (29)

203. புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
சொல்லிய அல்ல ஏனைய வெல்லாம்
தேருங் காலை உருபொடு சிவணிச்
சாரியை நிலையுங் கடப்பா டிலவே.

இஃது, இவ்வோத்திற்கெல்லாம் புறனடை கூறுதல் நுதலிற்று.

இ-ள்: புள்ளி இறுதியும் உயிர் இறு கிளவியும் சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்-புள்ளியீற்றுச் சொல்லும் உயிரீற்றுச் சொல்லுமென முடிபு சொல்லியவை அல்லாத ஒழிந்தவை யெல்லாம், தேரும் காலை-ஆராயுங்காலத்து, உருபொடு சிவணி சாரியை நிலையும் கடப்பாடு இல-உருபுகளொடு பொருந்தி இன் சாரியை நின்று முடியும் முறைமையை யுடைய வல்ல (நின்றும் நில்லாதும் முடியும்) எ.று.

புள்ளியீற்றுள் ஒழிந்தன ஐந்து; உயிரீற்றுள் ஒழிந்தது ஒன்று. இவையும் எடுத்தோதிய ஈற்றுள் ஒழிந்தனவுமெல்லாம் ஈண்டுக் கொள்ளப்படும்.

எ-டு: மண்ணினை, மண்ணை; வேயினை வேயை; நாரினை, நாரை; கல்லினை, கல்லை; முள்ளினை, முள்ளை எனவும்; கிளியினை, கிளியை எனவும்; பொன்னினை, பொன்னை எனவும்; தாழினை, தாழை; தீயினை, தீயை; கழையினை, கழையை எனவும் ஒட்டுக.

'புள்ளியீற்றுள் ஒழிந்தன பலவாகலின், அது முற்கூறப்பட்டது. 'தேருங்காலை' என்றதனான், உருபுகள் நிலைமொழியாக நின்று தம் பொருளோடு புணரும்வழி முடியும் முடிபுவேற்றுமையெல்லாம் கொள்க.

எ-டு: மண்ணினைக் கொணர்ந்தான், நம்பியைக் கொணர்ந்தான், கொற்றனைக் கொணர்ந்தான்; மலையொடு பொருதது மால்யானை, மரத்தாற் புடைத்தான், மரத்துக்குப் போனான்; காக்கையிற் கரிது; காக்கையது பலி; மரத்துக்கண் கட்டினான் என ஒட்டுக.

இஃது உருபியலாகலின், 'உருபொடு சிவணி' என வேண்டா வன்றே, அதனுன், உருபு புணர்ச்சிக்கண் சென்ற சாரியை களெல்லாம் ஈற்றுப்பொதுமுடிபு உள்வழிப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் செல்லுமென்பது கொள்க.

இன்னும் அதனுனே, உயிரீறும் மெய்யீறும் சாரியை பெருது இயல்பாய் முடிவன கொள்க.

எ-டு: நம்பியை, கொற்றனை என வரும்.

(வி-ரை) புள்ளியீற்றுள் சொல்லாது ஒழிந்தன ண, ய, ர, ல, ள என்பன. உயிரீற்றுள் சொல்லாது ஒழிந்தது இகர ஈறு மட்டும்.

எடுத்தோதிய ஈறுகளுள் சொல்லாது ஒழிந்தன (1) உயிரீற்றுள் நீ என்னும் பெயர் நீங்கலாக ஏனைய ஈகார ஈற்றுப் பெயர்கள். (2) அவை, இவை, உவை, யாவை என்னும் நான்கு சொற்கள் நீங்கலாக ஏனைய ஐகார ஈற்றுப் பெயர்கள் (3) மெய் ஈற்றுள் தான், யான் என்னும் இரண்டு பெயர்கள் ஒழிந்த ஏனைய னகரவீற்றுப் பெயர்கள். (4) ஏழ் என்னும் பெயர் ஒழிந்த ஏனைய ழகர ஈற்றுப் பெயர்கள். இவை யனைத்தும் உருபொடு புணர்ந்துழி சாரியை பெற்றும் வரும்; பெருமலும் வரும்.

அ ஆ உ ஊ ஏ ஓ ஔ ஆகிய ஏழு உயிரீற்றுப் பெயர்களும், ஞ், ந், ம், வ் ஆகிய நான்கு மெய்யீற்றுப் பெயர்களும், ஒற்று மிகும் நெடில்தொடர் ஒழிந்த ஏனைய குற்றியலுகர ஈற்றுத் தொடர்ப்பெயர்களும் உருபொடு புணர்ந்துழி சாரியை பெற்றே வரும்.

நும், தாம், நாம், யாம் என்னும் மகர ஈற்றுப் பெயர்களும். தான், யான் என்னும் னகர ஈற்றுப் பெயர்களும் ஒற்று மிகும் நெடிற்றெடர்க் குற்றியலுகர ஈற்றுப் பெயர்களும் சாரியை பெருமல் வரும். (30)

உருபியல் முற்றிற்று.

8

உயிர் மயங்கியல்

பொருளமைப்பு

மேல் தொகை மரபில் அல்வழி வேற்றுமை ஆகிய இரண்டிலும் ஒரே விதி பெறும் பல ஈறுகளைத் தொகுத்துக் கூறிய ஆசிரியர், அடுத்து உருபுகளோடு பெயர் புணருமாற்றை உருபியலில் கூறி, இனி அல்வழியிலும் வேற்றுமையிலும் தனித் தனியே விதிபெறும் உயிர் ஈறுகளை இவ்வியலில் விதந்து கூறுகின்றாராதலின், இது மேலதனோடு இயைபுடைத் தாயிற்று.

உயிரீற்றுச் சொற்களோடு நாற்கணமும் புணருமாற்றை இவ்வியலில் ஆசிரியர் கூறுகின்றார். ஆதலின் இது 'உயிர் மயங்கியல்' எனப் பெயர் பெற்றது. உயிரீறுகள் பதினொன்றாதலின் அவற்றை நிரலே எடுத்துக்கொண்டு, அவை அல்வழி, வேற்றுமையாகிய ஈறிடத்தும் புணருமாற்றை முறையே கூறுகின்றார் ஆசிரியர்.

1. அகர ஈறு:

(அ) அல்வழி:

(i) வல்லெழுத்து மிகுதல்: அகரத்தை இறுதியாக வுடைய சொற்கள் வருமொழியில் வன்கணம் வரின் தத்தமக்குப்

பொருந்திய க ச த பக்களாகிய ஒற்றுக்களை இடையில் பெற்று வரும். அகர விற்றனவாகிய வினையெச்சங்களும், உவமச் சொற்களும், சுட்டின் இறுதியும், ஆங்கு என்னும் உரையசைச் சொல்லும் வருமொழியில் வன்கணம் வரின் முற்கூறியவாறே வல்லெழுத்துப் பெறும்.

(ii) ஏனைக் கணங்கள் மிகுதல்: அகர ஈற்றுச் சுட்டின் முன் ஞ ந மக்கள் வரின் தத்தமக்குப் பொருந்திய ஒற்றுக்களை இடையிலே பெற்று வரும். அகர ஈற்றுச்சுட்டின் முன் யகரமும் ஏனைய உயிர்க் கணமும் வரின் வகரம் மிக்கு முடியும்.

(iii) இயல்பாதல்: அன்ன என்னும் உவமச் சொல்லும், அண்மை விளிக்கண் வரும் சொற்களும், செய்ம்மன, செய்து, செய்யிய, அம்ம, பல ஆகிய சொற்களும் வருமொழியில் வன்கணம் வரின் இயல்பாக முடியும்.

(vi) பிறவாறு திரிதல்: அகரச்சுட்டும், பல என்னும் சொல்லும், செய்யுளிடத்து நீண்டுவரும். 'சாவ' என்னும் மொழியீற்று உயிர் மெய்யும், 'வாழிய' என்பதன் இறுதியிலுள்ள உயிர் மெய்யும் வன்கணம் வரின் கெட்டு முடிதலும் உண்டு. கெடாது முடிதலும் உண்டு. 'அம்ம' என்னும் உரையசைச் சொல் நீண்டு வருதலும் உண்டு. பல சில என்னும் சொற்கள் தம்முன் தாம் வரின் லகர வொற்று றகரவொற்ருகத் திரிந்தும் முடியும். அங்ஙனமின்றி லகர வொற்றின் மேல் நின்ற அகரம் கெட நிற்றலும் உண்டு. இயல்பாக நின்று ஒற்று மிகுந்து வருதலும், மிகாது வருதலும் ஆகிய நிலைமையும் உண்டு.

(ஆ) வேற்றுமை:

அகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் அல்வழியில் முற்கூறியவாறு க ச த ப முதல் மொழி வந்துழித் தத்தம் ஒத்த ஒற்று இடை மிகும். அகர வீற்று மரப் பெயர்கள் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

(இ) சாரியை பெறுவன:

அகரவீற்று மக என்னும் பெயர் இன் சாரியையோ அல்லது அத்துச் சாரியையோ பெற்றுவரும். பல என்னும் சொல் வற்றுப் பெற்று முடியும்.

2. ஆகாரஈறு

(அ) அல்வழி:

(i) மிகுதல்: ஆகார ஈற்றுச் சொற்களும், செய்யா என்னும் வினையெச்சமும், வல்லெழுத்து வந்துழித் தத்தம் ஒத்த ஒற்று இடை மிகும். உம்மை யெஞ்சிய இரு பெயர்த் தொகைச் சொற்களிடையே அகரம் மிக்கு வரும்.

(ii) இயல்பாதல்: ஆ, மா, யா, கேண்மியா ஆகிய பெயர் களும், விளித்தலையுடைய உயர்திணைச் சொல்லும், பன்மைப் பொருளை யுணர்த்தும் ஆகார ஈற்றுப் பெயரெச்ச மறையாகிய முற்று வினைச் சொல்லும், தன் தன்மையை யுணர்த்தும் ஆகார ஈற்று வினைச் சொல்லும், வன்கணம் வர இயல்பாய் முடியும்.

(ஆ) வேற்றுமை:

ஆகார ஈற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியில் வன் கணம் வர அவ்வல்லெழுத்து மிக்கு முடியும். குறியதன் பின் வரும் ஆகார ஈற்றுச் சொல்லிற்கும், ஓரெழுத்து ஒரு மொழியாகிய ஆகார ஈற்றிற்கும் வன்கணம் வர அகரம் தோன்றும். 'இரா' என்னும் சொல் அகரம் பெறுதலின்று. யா, பிடா தளா ஆகிய மரப் பெயர்கள் வன்கணம் வந்துழி மெல்லெழுத்துப் பெறும்; வல்லெழுத்துப்பெறினும் குற்றமின்று. 'மா' என்னும் மரப்பெயர் வன்கணம் வந்துழி மெல்லெழுத்துப் பெற்று முடியும். ஆ, மா ஆகிய பெயர்களின் முன் வன்கணம் வந்துழி னகர வொற்றுப் பெற்று முடியும். இவற்றுள் ஆ வென்னும் சொல்லின் பின்னின்ற னகர வொற்று அகரம் பெறுதலும் உண்டு. 'ஆன்'

என்னும் சொல்லின் முன் பகர ஈகாரம் வரின் இடையில் பகர வொற்றுப் பெற்று முடியும்.

(இ) செய்யுள் முடிபு:

குற்றெழுத்தின் பின்வரும் ஆகாரம் அகரமாகக் குறுகி, அத்துடன் உகரம் பெறுதலும் உண்டு.

(ஈ) சாரியை பெறுவது:

'நிலா' என்னும் சொல் வல்லெழுத்தோடு புணர்வுழி அத்துச்சாரியை பெறும்.

3. இகர ஈறு:

(அ) அல்வழி:

இவ்வீற்றுப் பெயர்க்கு அல்வழி முடிபு மேல் தொகை மரபில் (16) கூறியிருத்தலின் ஈண்டு வேற்றுமை முடிபே கூறப்படுகின்றது.

ஆ) வேற்றுமை:

இகர ஈற்றுப் பெயர்ச்சொல், வினையெச்சம், சுட்டு ஆகிய வற்றின் முன்னரும், இனி, அணி என்னும் சொற்களின் முன்னரும் வல்லெழுத்து வந்துழித் தத்தமக்குப் பொருந்திய வல்லெழுத்து மிக்கு முடியும். இகர ஈற்றுச் சுட்டின் முன்னர் மென்கணம் வரின் மெல்லெழுத்து மிக்கும், இடைக்கணமும் உயிர்க்கணமும் வரின் வகரம் பெற்றும், செய்யுட்கண்ணுயின் வகரம் கெட்டு சுட்டு நீண்டும் வரும். 'தூணி' யென்னும் பெயர் முன் பதக்கு என்னும் சொல் வரின் இடையில் வல்லெழுத்து மிகும். 'நாழி' என்னும் சொல்முன் உரியென்னும் சொல்வரின் இறுதியிலுள்ள ழகர இகரம் கெட்டு அவ்விடத்து டகரவொற்று வரும். மரத்தை யுணர்த்தும் 'உதி' என்னும் சொல் முன்னரும், சுவையை உணர்த்தும் புளிப்பெயரின் முன்னரும் வல்லெழுத்து வரின் அவ்விடத்து மெல்லெழுத்து மிக்கு முடியும். சுவைப்புளி முன்னர் மெல்லெழுத்து மிகுதலேயன்றி. வல்லெழுத்து மிகுதலும் உண்டு.

(இ) செய்யுள் முடிபு:

அன்றி இன்றி யென்னும் வினையெச்சங்கள் செய்யுட்கண் உகரமாகத் திரியும்.

(ஈ) சாரியை பெறுவன:

பனி, வளி என்னும் சொற்களின் முன் வல்லெழுத்து வரின் அத்தும் இன்னும் சாரியைகளாக வரும். மரத்தை யுணர்த்தும் புளி என்னும் சொல்முன் வன்கணம் வரின் அம் சாரியை வரும். நாட்பெயர்முன் (பரணி, சோதி) வன்கணம் வரின் ஆன் சாரியையும், திங்கட்பெயர்முன் (ஆடி, வைகாசி, பங்குனி) வன்கணம் வரின் இக்குச் சாரியையும் வரும்.

4. ஈகார ஈறு:

(அ) அல்வழி:

(i) மிகுதல்: ஈகார வீற்றுப்பெயர் முன் வன்கணம் வரின் வந்த வல்லெழுத்து மிக்கு முடியும். மீ என்னும் சொல்முன் வன்கணம் வரின் வல்லெழுத்து மிகுதலும் உண்டு.

(ii) இயல்பாதல்: நீ, பீ, மீ என்ற பெயர்களின் முன் வன் கணம் வரின் இயல்பாய் முடியும்.

(ஆ) வேற்றுமை

ஈகார ஈற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும். நீ என்னும் பெயர்முன் வன்கணம் வரின் 'நீ' என்பது 'நி' எனக் குறுகி அவ்விடத்து னகர வொற்றுப் பெற்று இயல்பாக முடியும்.

5. உகர ஈறு:

(அ) அல்வழி:

(i) மிகுதல்: உகர ஈற்றுப் பெயர் முன்னரும், இவ்வீற்றுச் சுட்டுப்பெயர் முன்னரும் வன்கணம் வரின் அவ்வல்லெழுத்து

மிக்கும், மென்கணம் வரின் மெல்லெழுத்து மிக்கும், இடைக் கணமும் உயிர்க்கணமும் வரின் வகரம் தோன்றியும் வரும்.

(ii) இயல்பாதல்: உகர ஈற்றுச் சுட்டுப் பெயர்முன் வல் லெழுத்து வரின் இயல்பாக முடியும்.

(ஆ) வேற்றுமை:

உகர ஈற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும். ழகரத் தோடு கூடிய உகர ஈற்றுச்சொல் நீண்டு முடிதலும் உண்டு. அவ்விடத்து ஒரு உகரமும் தோன்றும் 'ஒடு' என்னும் மரப்பெயர் முன் வல்லெழுத்து வந்துழி இடையே மெல்லெழுத்து மிக்கு முடியும்.

(இ) செய்யுள்முடிபு:

உகர ஈற்றுச்சொல் செய்யுளிடத்து நீண்டு முடியும். உகர வீற்றுச் சுட்டுப்பெயர் (அது, இது, உது) முன் அன்று என்னும் சொல்வரின், நிலைமொழியிலுள்ள தகர ஒற்றின் மேல் ஏறி நின்ற உகரம் ஆகாரமாய்த் திரிதலும், வருமொழியில் ஐ என்னும் சாரியை வரின் நிலைமொழியிலுள்ள தகரவொற்றின் மேல் ஏறி நின்ற உகரம் கெடுதலும் உண்டு.

(ஈ) சாரியை பெறுவன:

'எரு, செரு' ஆகிய சொற்களின் முன்னர் வல்லெழுத்து வந்துழி இடையே அம்முச்சாரியை பெறும். செரு முன் வந்த அம்முச்சாரியையில் இறுதி மகரம் கெட்டு வல்லெழுத்து மிக்கு முடியும். இவ்விரு சொற்களும் அம்முச் சாரியை பெறுதவழி, தத்தமக்கு இனமாய வல்லெழுத்தையும் மெல்லெழுத்தையும் பெற்று முடியும். சுட்டு முதலாகிய உகர ஈற்றுச் சொற்களின் (அது, இது, உது)முன்னர் வல்லெழுத்து வந்துழி நிலைமொழியில்

உள்ள உகரம் கெட்டு அன்சாரியை பெற்று முடியும். அவ்விடத்து வல்லெழுத்து மிகாது.

6. ஊகார ஈறு:

(அ) அல்வழி:

மிகுதல்: ஊகார ஈற்றுப் பெயர் முன்னரும், இவ்வீற்று வினையெச்சம், முன்னிலைச் சொற்கள் ஆகியவற்றின் முன்னரும் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும்.

(ஆ) வேற்றுமை:

ஊகார ஈற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வல்லெழுத்து வந்துழி வல்லெழுத்து மிக்கு முடியும். குற்றெழுத்தின் பின் வந்த ஊகார ஈற்றுச் சொற்கும், ஓரெழுத்தொருமொழியாகிய ஊகார ஈற்று மொழிக்கும் வருமொழியில் வன்கணம் வரின் உகரம் பெற்று முடியும். 'பூ' என்னும் பெயர் முன் வன்கணம் வரின் மெல்லெழுத்து மிக்கு முடிதலும் உண்டு. அன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உண்டு. 'ஊ' என்னும் பெயர் வன்கணத்தொடு புணருங்கால் இடையில் னகரவொற்றுப் பெறும்.

(இ) சாரியை பெறுவன:

மேற்கூறியவாறு ஊ என்னும் சொல் னகர வொற்றைப் பெறுங்கால் அக்குச் சாரியை பெறுதலும் உண்டு. ஆடூஉ, மகடூஉ ஆகிய பெயர்கள், வன்கணத்தோடு புணர்வுழி இடையே இன் சாரியை பெறும்.

7. எகர ஈறு, 8. ஒகர ஈறு

மிகுதலும் இயல்பாதலும்: முன்னிலை வினையில் ஈறாய் வரும் எகர ஒகரங்கள் வன்கணத்தொடு புணர்வுழி இடையே வல்லெழுத்து மிக்கு முடியும். தெளிவு, சிறப்பு ஆகிய பொருள்களில் வந்து பெயர்க்கு ஈருகும் எகர ஒகரங்கள் வன்கணத்தொடு புணர்வுழி வல்லெழுத்து மிகா.

9. ஏகார ஈறு:

(அ) அல்வழி:

மிகுதலும் இயல்பாதலும்: ஏகார வீற்றுப் பெயர்கள் வல்லெழுத்தொடு புணர்வுழி வந்த வல்லெழுத்து மிக்கு முடியும். மாறுகோடற் பொருளில் வரும் ஏகாரவீற்று இடைச் சொற்களும் வினைப்பொருளில் வரும் ஏகாரவீற்று இடைச் சொற்களும், வன்கணத்தொடு புணர்வுழி வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்.

(ஆ) வேற்றுமை:

ஏகார வீற்றுச் சொற்கள் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண் வல்லெழுத்தொடு புணருங்கால் வந்த வல்லெழுத்து மிக்கு முடியும். ஏயென்னும் இறுதியையுடைய பெயர் வன்கணத்தொடு புணர்வழி எகரம் பெறும். 'சே' என்னும் மரப்பெயர் மெல்லெழுத்துப் பெற்று முடியும்.

(இ) சாரியை பெறுவன:

பெற்றத்தை உணர்த்தும் சே என்னும் பெயர் வன்கணத்தொடு புணர்வுழி இடையில் இன்சாரியை பெறும்.

10. ஐகார ஈறு:

(அ) அல்வழி:

இவ்வீற்றுப் பெயர்கள் அல்வழிக்கண் முடியுமாற்றை மேல் தொகை மரபில் (16) ஆசிரியர் கூறியிருத்தலின் ஈண்டு வேற்றுமைக்கண் வரும் முடிபே கூறப்படுகின்றது.

(ஆ) வேற்றுமை:

ஐகார ஈற்றுப் பெயர்கள் வன்கணத்தொடு புணர்வுழி தத்தமக்குப் பொருந்திய வல்லெழுத்து மிக்கும், விசை, நமை, ஞெமை ஆகிய மரப் பெயர்கள் மெல்லெழுத்து மிக்கும் முடியும். பனை என்னும் சொல்முன் அட்டு என்னும் சொல் வரின் நிலைமொழியிலுள்ள ஐகாரம் கெட்டு அவ்விடத்து ஆகாரம் பெறும். பனை முன் கொடி என்னும் சொல்வரின் இடையில் வல்லெழுத்து மிகும்.

(இ) செய்யுள்முடிபு:

'வேட்கை' என்னும் சொல்முன் 'அவா' என்னும் சொல் வரின், நிலைமொழியிலுள்ள ஐகாரம் தான் ஊர்ந்து நின்ற ககர வொற்றொடும் கெடும். அதன் மேலுள்ள டகரம் ணகரமாகும்.

(ஈ) சாரியை பெறுவன:

ஐகார ஈற்றுச் சுட்டுப் பெயர் முன் (அவை, இவை, உவை) வன்கணம் வரின் இடையே வற்றுச்சாரியை பெற்று முடியும். 'பனை, அரை, ஆவிரை' என்னும் பெயர்கள் வன்கணத்தொடு புணர்வுழி இடையே அம்முச் சாரியை பெற்று முடியும். ஐகார ஈற்றுத் திங்கள் (சித்திரை) பெயரும், நாள் (கேட்டை) பெயரும் வன்கணத்தொடு புணர்வுழி அத்தும் இன்னும் பெற்று முடியும்.

11. ஓகார ஈறு:

(அ) அல்வழி :

மிகுதலும் இயல்பாதலும்: ஓகார ஈற்றுப் பெயர்கள் வன் கணத்தொடு புணர்வுழி இடையே வல்லெழுத்து மிக்கு முடியும். மாறுகோடற் பொருள், விரைவுப் பொருள், ஐயப் பொருள், ஒழியிசைப் பொருள் ஆகியவற்றில் வரும் ஓகார ஈற்றுச் சொற்களின் முன்னர் வல்லெழுத்து வந்துழி இயல்பாய் முடியும்.

(ஆ) வேற்றுமை:

ஓகார ஈற்றுச் சொற்கள் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண் வன்கணத்தொடு புணர்வுழி இடையே ஒகரம் பெற்று வல்லெழுத்து மிக்கு முடியும். 'கோ' என்னும் சொல், இல் என்னும் சொல்லொடு புணரின் இயல்பாய் முடியும்.

(இ) சாரியைபெறுவது:

மேற்கூறிய கோ என்னும் சொல் வன்கணத்தொடு புணர்வுழி இடையே ஒன் சாரியை பெற்று முடியும்.

12 ஔகார ஈறு:

ஔகாரத்தை இறுதியாகவுடைய பெயர்கள் இரு வழியிலும் வன்கணத்தொடு புணர்வுழி இடையே உகரம் பெற்று வல்லெழுத்து மிக்கு முடியும்.

உயிர் மயங்கியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், உயிரீறு வன்கணத்தொடும் சிறுபான்மை பிறகணத்தொடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தலின் உயிர்மயங்கியல் என்னும் பெயர்த்து. மேல் உருபு புணர்ச்சி கூறி ஈண்டுப் பொருட் புணர்ச்சி கூறுகின்றமையின், மேலதனோடு இயைபுடைத்தாயிற்று.

204. அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் க ச த ப த் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே.

இத்தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அகரவீற்றுப் பெயர்க்கு வன்கணத்தோடு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்-அகரமாகிய இறுதியையுடைய பெயர்ச்சொல் முன்னர், வேற்றுமை அல்வழிக் க ச த பத் தோன்றின்-வேற்றுமையல்லாத அல்வழிக்கண் க ச த ப முதல்மொழி வருமொழியாய்த் தோன்றின், தம் தம் ஒத்த ஒற்று இடைமிகும்-தத்தமக்குப் பொருந்தின அக் க ச த பக்களாகிய ஒற்று இடைக்கண் மிகும் எ.று.

எ-டு: விளக்குறிது, மகக்குறிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

'ஒத்த' ஒற்றென்னாது 'தத்தம்' என்றதனான், அகரவீற்று உரிச்சொல் வல்லெழுத்துமிக்கும் மெல்லெழுத்துமிக்கும் முடியும் முடிபும், இடைச்சொற்களுள் எடுத்தோதாவற்றின் முடிபும், அகரம் தன்னை உணர நின்றவழி முடியும் முடிபும் கொள்க.

எ-டு: தடக்கை, தவக்கொண்டான் என இவை உரிச்சொல் வல்லெழுத்துப்பேறு. தடஞ்செவி, தடந்தோள் என இவை மெல்லெழுத்துப்பேறு. 'மடவ மன்ற தடவு நிலைக் கொன்றை' (குறுந்-66) என்பது இடைச்சொல் முடிபு. அக்குறிது, சிறிதும் தீது, பெரிது என்பது தன்னை உணர நின்ற வழி வல்லெழுத்து மிகுதி. அவ்யாது என்பதும் இடையெழுத்து மிகுதி. அவ்வழகிது என்பது உயிர்க்கணத்து முடிபு.

(வி-ரை) இவ்விதியை மேல் 217, 222, 226, 250, 253, 255, 260, 265, 267, 275, 277, 290, 293 ஆகிய நூற்பாக்களோடு மாட்டெறிவர் ஆசிரியர். (1

205. வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்
எனவென் எச்சமும் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே.

இஃது, அகரஈற்று வினைச்சொல் முடிபும், இடைச்சொல் முடிபும் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும் - அகர விற்று வினையெச்சமாகிய சொல்லும் உவமச்சொல்லும். என என் எச்சமும் சுட்டின் இறுதியும்-என என்று சொல்ல வருகின்ற எச்சச்சொல்லும் சுட்டாகிய அகரவிறும், ஆங்க என்னும் உரையசைக் கிளவியும் - ஆங்க என்று சொல்லப்படும் உரையசை யாகிய சொல்லும், ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகும்-மேலைச் சூத்திரத்துச் சொன்ன வல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: உணக்கொண்டான், தினக்கொண்டான்; சென்றான். தந்தான், போயினான் என்பன வினையெச்சம். மேலனவெல்லாம் இடைச்சொல். புலிபோலக் கொன்றான் என்பது உவமம். கொள் ளெனக் கொண்டான் என்பது என என் எச்சம். அக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன் என்பன சுட்டின் இறுதி. ஆங்கக் கொண்டான் என்பது உரையசைக் கிளவி. (2)

206. சுட்டின் முன்னர் ஞ ந ம த் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்.

இஃது அகரச்சுட்டு மென்கணத்தோடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

(இ - ள்): சுட்டின் முன்னர் ஞ ந ம தோன்றின் - அகரச் சுட்டின் முன்னர் ஞ ந மக்கள் முதலாகியமொழி வருமொழியாய்த் தோன்றின், ஒட்டிய ஒற்று இடைமிகுதல் வேண்டும் - தத்தமக்குப் பொருந்திய ஒற்று இடைக்கண்ணே மிகுதலை வேண்டும் எ. று.

எ - டு: அஞ்ஞாலம், நூல், மணி என வரும். (3)

207. யவமுன் வரினே வகரம் ஒற்றும்.

இது. சுட்டு இடைக்கணத்தோடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ய வ முன் வரின் வகரம் ஒற்றும் - யகர வகரம் முதல் மொழியாகச் சுட்டின் முன்னே வரின் இடைக்கண் வகரம் ஒற்றும் எ. று.

எ-டு: அவ்யாழ், அவ்வளை என வரும். (4)

208. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.

இஃது, அச்சுட்டு உயிர்க்கணத்தொடு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : உயிர் முன் வரினும் ஆ இயல் திரியாது - உயிர் முதல்மொழி அகரச் சுட்டின் முன்னர் வரினும் மேற்கூறிய வகரம் மிக்கு முடியும் அவ்வியல்பில் திரியாது எ. று.

எ-டு: அவ்வாடை, அவ்வாண்டை என ஒட்டுக.

இடைமிக்க வகரத்தினை 'நெறியியல்' (161) என்ற இலேசினான் இரட்டுதல் கூறினமையின், அது நிலைமொழித் தொழிலென்பதுவே கூறப்பட்டது. 'திரியாது' என்றதனானே, மேற்சுட்டு நீண்டவழி யகரத்தோடு கொள்க.

(வி-ரை) 'திரியாது' என்றதனானே மேற் சுட்டு நீண்டவழி வகரக்கேடு கொள்க என நச்சினார்க்கினியத்தில் உள்ளது. அதே போன்று 'திரியாது' என்பதற்கு 'வகரக்கேடு' என்ற தொடர் தான் இளம்பூரணர் உரையிலும் இருந்திருக்கலாமோ! என நினைய இடந்தருகிறது. அன்றி 'யகரத்தோடு' என்பதே கருத்தாயின் யகரத்தோடு வருதல் கொள்க என்றிருக்க வேண்டும். (5)

209. நீட வருதல் செய்யுளுள் உரித்தே.

இஃது, அச்சுட்டுச் செய்யுளுள் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நீடவருதல் செய்யுளுள் உரித்து-அகரச் சுட்டிற்கு நீளும்படியாக வருதல் செய்யுளிடத்து உரித்து எ. று.

எ-டு: 'ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே' (கிளவியாக்கம்-1) என வரும்.

வருமொழி வரையாது கூறினமையின், இம்முடிபு வன்கண மொழிந்த கணமெல்லாவற்றோடும் சென்றது. உதாரணம் பெற்ற வழிக் கொள்க.

(வி-ரை) அ, இ, உ என்னும் மூன்று சுட்டெழுத்துக்களும் வன்கணத்தோடு புணரும்வழி, அவ்வல்லெழுத்து மிக்கு முடியும். இதனை ஆசிரியர் 204, 236, 255 ஆகிய நூற்பாக்களில் கூறியுள்ளார். அகரத்தின் முன்னர் ஞ, ந, ம என்பன வரின் வந்த மெல்லெழுத்து மிக்கு முடியும் என்பதனை 206-ஆம் நூற்பாவாலும், யவமுன் வரினும் உயிர்வரினும் வகரம் மிக்கு முடியும் என்பதனை 207, 208-ஆம் நூற்பாக்களாலும், செய்யுளுள் நீண்டு முடியும் என்பதை இந்நூற்பாவாலும் ஆசிரியர் கூறியுள்ளார். இவ்விதிகளையே இகரமும், உகரமும் பெறும் என்பதை மேல் 239, 257-ஆம் நூற்பாக்களால் ஆசிரியர் கூறுவர். இவற்றையெல்லாம் தொகுத்தே நன்னூலாரும்,

'எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்

பிறவரின் அவையும் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே'
(உயிரீற்றுப்-13) என்றனர். (6)

210. சாவ என்னுஞ் செயவென் எச்சத்து
இறுதி வகரங் கெடுதலும் உரித்தே.

இது மேல் 'வினையெஞ்சு கிளவியும்' (உயிர்மயங்கியல்-2) என்ற முடிபிற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்: சாவ என்னும் செய என் எச்சத்து இறுதி வகரம் கெடுதலும் உரித்து-சாவ என்று சொல்லப்படும் செய என் எச்சத்து இறுதிக்கண் அகரமும் அதனாற் பற்றப்பட்ட வகரவொற்றும் கெடாது நிற்றலேயன்றிக் கெட்டு முடிதலும் உரித்து எ. று.

எ-டு: சாக்குத்தினான், சீறினான், தகர்த்தான், புடைத்தான் என வரும்.

இதனை 'வினையெஞ்சு கிளவியும்' (உயிர்மயங்கியல்-2) என்ற தன்பின் வையாத முறையன்றிய கூற்றினான், இயல்பு கணத்தும் அந்நிலைமொழிக்கேடு கொள்க.

எ-டு: சாஞான்றார் என வரும்.

(வி-ரை) 'மிகச்செய்து தம்மெள் ளுவாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று'

என்ற திருக்குறளும் இவ்விதிபெற்று வருதல் காண்க.

'சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி'
(உயிரீற்றுப்-16) என்பர் நன்னூலாரும். (7)

211. அன்ன என்னும் உவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
செய்மன என்னுந் தொழிலிறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்
செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்

செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்
அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்
பலவற் றிறுதிப் பெயர்க்கொடை உளப்பட
அன்றி அனைத்தும் இயல்பென மொழிப.

இஃது, அகரவீற்றுள் ஒருசார்ப்பெயர்க்கும் வினைக்கும் இடைக்கும் முன் எய்தியது விலக்கியும், எய்தாதது எய்துவித்தும் முடிபு கூறுதல் நுதலிற்று. அன்னவென்பதும் செய்யியவென்பதும் பலவற்றிறுதிப் பெயர்கொடை யென்பதும் எய்தியது விலக்கின. மற்றையன எய்தாதது எய்துவித்தன.

இ-ள் : அன்ன என்னும் உவமக்கிளவியும்-அன்ன என்று சொல்லப்படும் உவம உருபாகிய இடைச்சொல்லும், அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்-அணியாரைக் கருதிய விளியாகிய நிலைமையையுடைய உயர்திணைப் பெயர்ச்சொல்லும், செய்ம்மன என்னும் தொழில் இறு சொல்லும்-செய்ம்மன என்று சொல்லப் படும் வினைச்சொல்லாகிய அகரவீற்றுச் சொல்லும், ஏவல் கண்ணிய வியங்கோல் கிளவியும்-ஏவலைக் கருதிய வியங்கோளாகிய வினைச் சொல்லும், செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்- செய்த என்று சொல்லப்படும் பெயரெச்சமாகிய வினைச்சொல்லும், செய்யிய என்னும் வினை எஞ்சு கிளவியும்-செய்யிய என்று சொல்லப்படும் வினையெச்சமாகிய வினைச்சொல்லும், அம்ம என்னும் உரைப் பொருள் கிளவியும்-அம்ம என்று சொல்லப்படும் உரையசைப் பொருண்மையையுடைய இடைச்சொல்லும், பலவற்று இறுதிப் பெயர்க்கொடை உளப்பட அன்றி அனைத்தும்-பன்மைப் பொருள் களின் அகரவீற்றுப் பலவென்னும் பெயர்ச்சொல்லுமாகிய அவ் வனைத்துச் சொல்லும், இயல்பு என மொழிப-இயல்பாய் முடியு மென்று சொல்லுவர் ஆசிரியர் எ. று.

எ-டு: பொன் அன்ன குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; ஊரகொள், செல், தா, போ எனவும்; உண்மன குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; செல்க குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; உண்ட குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; இதன் எதிர்மறை உண்ணாத குதிரை எனவும்; இதன் குறிப்பு

நல்ல குதிரை, செந்நாய் எனவும்; உண்ணிய கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்; அம்ம கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும்; பல குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும் வரும்.

'ஊரகொள்' என்பது 'உயிரீறாகிய உயர்திணைப் பெயர்' (154) என்பதனுள் அடங்காதோவெனின், ஊரன் என்பது ஊர என ஈறு திரிந்தமையின் ஆண்டு அடங்காதாயிற் றென்பது.

விளிநிலைக் கிளவியாகிய பெயரை முன்வைத்ததனால், செய்த வென்பதன் மறையன்றிச் செய்யும் என்பதற்கு மறையாகிய செய்யாத என்பதும் அவ்வியல்பு உடைத்தெனக் கொள்க.

எ-டு: வாராத கொற்றன் என வரும்.

'உரையிற்கோடல்' என்பதனால், வியங்கோள் முன் வைக்கற் பாலதனை முன்வையாது செய்ம்மன என்பதனை முன்வைத்ததனான், இவ்வியல்புமுடிபின்கண் செய்ம்மன என்பது சிறப்புடைத்தெனப் பெறப்பட்டது. அதனால், 'ஏவல்கண்ணாத வியங்கோளும்' இவ் வியல்பு முடிபு உடைத்தெனக் கொள்க.

எ-டு: 'மன்னிய பெருமநீ' (புறம்-6) என வரும்.

'பலவற்றிறுதிப் பெயர்க்கொடை' என்பதனை அம்ம என்பதற்கு முன் வையாததனால், பல என்பது மேற்கூறும் செய்யுள் முடிபில் திரிந்து முடிதல் ஈண்டை இயல்பிற் சிறப்பின் றென்பதூஉம், அகர வீற்றுள் முடிபு கூறாத முற்றுவினையும் வினைக்குறிப்பும் அவ் வியல்பின வென்பதூஉம் பெறப்படும்.

உண்டன குதிரை என்பது முற்றுவினை. கரிய குதிரை என்பது முற்றுவினைக் குறிப்பு.

'தன்னின முடித்தல்' என்பதனால், பல என்பதின் இனமாகிய சில என்பதற்கும் அவ்வியல்பு கொள்க.

எ-டு: சில குதிரை எனவரும்.

(வி-ரை) ஏவல் கண்ணிய வியங்கோள்—ஏவற்பொருண்மையை முற்றமுடிக்கின்ற சொல். ஏவியதை உணர்ந்து செய்யும் ஆற்றல் உயர்திணைக்கண் அல்லது, அஃறிணைக்கு இன்மையின் அஃறிணைக்கண் வருவனவற்றை ஏவல் கண்ணாதன என்பர் நச்சினார்க்கினியர். இளம்பூரணர் உயர்திணையாயினும் அல்லது அஃறிணையாயினும், ஏவற்பொருள் உடன் நிகழுமேல் அது ஏவல் கண்ணியது என்றும், அப்பொருண்மை உடன் நிகழாதேல் அது ஏவல் கண்ணாதது என்றும் கருதுவர்.

'மன்னிய பெரும' என வாழ்த்தின், அங்ஙனம் நிலைபெறுதல் வாழ்த்தப்படும் பொருட்கு உடன் நிகழாமையின், இது ஏவல் கண்ணாததாம் என்பது இளம்பூரணர் கருத்து. இதனையே, கூறுகின்றான் 'அவன் நிலைபெற்றிருத்தல் வேண்டும்' என்றே கருதிக்கூறலின் அதுவும் ஏவல் கண்ணிற்றேயாம் என மறுத்தனர் நச்சினார்க்கினியர். இதனைக் கருத்துட்கொண்டே அடுத்த நூற்பாவிலும், 'வாழிஞெள்ளா' என்ற இது வாழ்த்தப்படும் பொருள் மேல் வாழவேண்டும் என்னும் கருத்தினனாகக் கூறுதலின் ஏவல் கண்ணிற்றேயாம். அல்லாக்கால் 'வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே' (செய்யு–109) என்பதற்கும், வாழ்த்தியலாகச் சான்றோர் கூறிய செய்யுட்களுக்கும் பயனின்றாம் என்று உணர்க' எனக் கூறினர்.

'செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரின் எச்சம்முற்(று) ஆறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே'

(உயிரீற்றுப்-17) என்பர் நன்னூலாரும். (8)

212. வாழிய வென்னுஞ் [1]சேயென் கிளவி
இறுதி யகரங் கெடுதலும் உரித்தே.

இஃது, ஏவல்கண்ணாத வியங்கோட்களில் ஒன்றற்கு எய்திய இயல்பு விளக்கி விகாரம் கூறுதல் நுதலிற்று.

---

1. 'செயவென்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இ-ள்: வாழிய என்னும் சேய் என் கிளவி - வாழிய என்று சொல்லப்படுகின்ற அவ்வாழுங்காலம் அண்மையவன்றி சேய்மைய என்று உணர்த்தும் சொல், இறுதி யகரம் கெடுதலும் உரித்து-தன்னிறுதிக்கண் அகரமும் அதனாற் பற்றப்பட்ட யகர வொற்றும் கெடாது முடிதலேயன்றிக் கெட்டு முடிதலும் உரித்து எ. று.

எ-டு: வாழிகொற்றா என வரும்.

'சேயென் கிளவி' என்றதனான், அம்முடிபு இவ் 'வாழிய' என்பதற்கு ஏவல் கண்ணாத நிலையதென்பது விளக்கிய நின்றது 'ஒன்றென முடித்தல்' என்பதனால், பிற கணத்துக்கண்ணும் இவ் விதி கொள்க.

எ-டு: வாழிஞெள்ளா என வரும்.

(வி-ரை) 'வாழிய என்னும் சேயென் கிளவி' எனப்பாடங் கொள்வர் இளம்பூரணர். இதற்கு அவர் 'வாழிய என்று சொல்லப்படுகின்ற அவ்வாழுங்காலம் அண்மைய வன்றிச் சேய்மைய என்று உணர்த்தும் சொல்' எனப்பொருள் கண்டனர். ஆனால், நச்சினார்க்கினியர் 'வாழிய என்னும் செயவென் கிளவி' எனப் பாடங்கொண்டு 'வாழிய வென்னும் செயவெனெச்சக் கிளவி' எனப்பொருள் கண்டனர். சென்ற நூற்பாவில் செய வெனெச்சத்தைப் பற்றிக் கூறவில்லையாதலின், இந்நூற்பாவில் 'இஃது எய்தியன் மேற்சிறப்பு விதி வகுத்தது' எனக் கருத்துரை கூறல்பொருந்தாது ஆதலினாலும், இது செயவெனெச்சமேல், மேல் 'சாவ வென்னும் செயவென் எச்சத்தோடு' (எழுத்-209) இதனையும் ஒருங்கு வைத்தல் பொருந்து மாகலின், அவ்விடத்து வையாது ஈண்டு வைத்தல் பொருந்தாமையானும், 'சேயென் கிளவி' என்ற பாடமே சிறப்புடைத்தாதல் பெற்றாம். மகாலிங்கையர் பதிப்பில் நச்சினார்க்கினியர் பாடமும் 'சேயென் கிளவி' என்றே உள்ளது.

'வாழிய என்பதன் ஈற்றி னுயிர்மெய்
ஏகலும் உரித்தஃ தேகினும் இயல்பே'
(உயிரீற்றுப்—18)

என நன்னூலாரும் கூறுதல் காண்க. (9)

213. உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்.

இஃது, அம்ம என்பதற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்: உரைப்பொருள் கிளவி நீட்டமும் வரையார் – உரையசைப் பொருண்மையினையுடைய அம்ம என்னும் இடைச்சொல் தன் ஈற்றகரம் அகரமாய் நிற்றலேயன்றி ஆகாரமாய் நீண்டு முடிதலையும் வரையார் எ.று.

எ-டு: அம்மாகொற்றா என வரும்.

'ஒன்றெனமுடித்தல்' என்பதனான், அந்நீட்சி இயல்புகணத்தும் கொள்க.

எ-டு: அம்மாஞெள்ளா என வரும்.

(வி-ரை) உரைப்பொருட் கிளவி–எதிர்முகமாக்கும் பொருளையுடைய அம்ம என்னும் சொல். (10)

214. பலவற் றிறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான.

இது, மேற் 'பலவற்றிறுதிப் பெயர்க்கொடை' (உயிர்மயங்கியல்-8) என்று ஓதியதற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பலவற்று இறுதி நீடும் மொழி உள – பல என்னும் சொல்லின் இறுதி அகரம் நீண்டு முடியும் மொழிகளும் உள; (யாண்டு உளவெனில்), செய்யுள் கண்ணிய தொடர்மொழியான– செய்யுளாதலைக் கருதிய ஒன்றோடொன்று தொடர்ச்சிப்படும் செய்யுள் முடிபுடைய மொழிகளின் கண்ணே எ.று.

'செய்யுள் கண்ணியமொழி' என்னாது 'தொடர்மொழி' என்றதனான், இப்பலவென்பது நீளும்வழி வருமொழியாவது சிலவென்பதே என்று கொள்ளப்படும்.

'செய்யுளான' என்னாது 'செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான' என்றதனால், பல என்னும் மொழியீறு நீண்டவழி நிலை

மொழி அகரப்பேறும் வருமொழி ஞகாரமெல்லெழுத்துப்பேறும், வருமொழியீறு நீண்டவழி அகரப்பேறும் மகரமாகிய மெல்லெழுத்துப் பேறும் கொள்க.

'உண்டு' என்றது 'உள' என்றதனால், சிலவென்னும் வருமொழியிறுதி நீடலும் கொள்க.

எ-டு: 'பலாஅஞ் சிலாஅ மென்மனார் புலவர்' எனவரும். இதன் சொல்நிலை பலசில என்னும் செவ்வெண்.

(வி-ரை) இவ்வுரையில் கூறப்படும் பலாம் சிலாம் என்னும் வழக்கினைத் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருவாரூர்த் தியாகராச லீலையில் எடுத்தாளுவர். அப்பாடல் வருமாறு:—

'வெடிகொண் டெழுந்த பலாஞ்சிலா மீன்க ளோடை [காலேரி
கடிகொண் டலர்ந்த பூம்பொய்கை கலந்து திரிவ [கங்கைமதி
முடிகொண் டமரும் பிரான்கருணை முறையில் சிருட்டி யுறுமுயிர்கள்
படிகொண் டமர்தம் வினைக்கேற்ற பற்ப லுடலங் [கலப்பபோல்'
(திருநாட்டுப் படலம்—87)

செவ்வெண், பெயர் வினைகளில் எண்ணும்மை தொக்கு வருவது. (11)

215. தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் [1]றகரவொற் றாதலு முரித்தே.

இது, பல சில என்பவற்றிற்கு இயல்பேயன்றித் திரிபும் உண்டென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்- தொடர்மொழியல்லாத ஈரெழுத்தொருமொழியாகிய பல சில என்னும் அகர

1. 'றகரவொற் றாகலும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

வீற்றுச்சொல் தம்முன்னே தாம்வரின், லகரம் றகர ஒற்று ஆதலும் உரித்து-தம் ஈற்றில் நின்ற லகரவொற்று றகர வொற்றாய்த் திரிந்து முடிதலும் உரித்து எ. று.

எ-டு: பற்பல கொண்டான் எனவும், சிற்சில வித்தி எனவும் வரும்.

'தன்முன் தான்' என ஒருமையாற் கூறாது 'தன்முன் தாம் வரின்' என்ற பன்மையான், மேல் பல சில என நின்ற இரண்டும் தழுவப்பட்டன. 'தொடரலிறுதி தம்முன்வரின்' என்றது 'தாம்' என்றதனான், இம்முடிபின்கண் பலவென்ப தன்முன் பல வருக, சிலவென்பதன்முன் சில வருக என்பது கொள்ளப்பட்டது.

'லகரம் றகரமாம்' என்றது 'லகரம் றகரவொற்றும்' என்ற ஞாபகத்தான், அகரம் கெடுமென்றுணகக் கொள்க, அருத்தாபத்தி முகத்தால், தம்முன் தாம்வரின் லகரம் றகரவொற்றுமெனவே, தம்முன் பிற வந்தவிடத்து லகரம் றகரவொற்றாகாது அகரம் கெடுமென்பது கொள்ளப்படும்.

எ-டு: பல்படை, பல்யானை, சில்படை, சில்வேள்வி என வரும்.

'தொடரலிறுதி' என்பது சுட்டல்லது ஓரெழுத்தொருமொழி அகரமின்மையின், ஓரெழுத்தொருமொழிமேற் செல்லாதாயிற்று. உரித்தென்றது, அகரவீற்றொருமைபற்றி.

(வி-ரை) பல+பல=பற்பல. சில+சில=சிற்சில. ஈண்டு நிலைமொழியிலுள்ள லகரவொற்று றகரவொற்றாதற்கு ஆசிரியர் விதி கூறினரேயன்றி, அதன்மேல் ஏறிய அகரங்கெடுதற்கு விதி கூறவில்லை. இதனை ஞாபகத்தால் கொள்க என்றனர் இளம்பூரணர். ஞாபகம் இன்னதென்பது முன்னர் 125ஆம் நூற்பா விளக்கவுரை யில் கூறப்பட்டது.

'வாராததனால் வந்தது முடித்தல்' என்னும் உத்தியால் இக் கருத்தினைக் கொள்வர் நச்சினார்க்கினியர். பேராசிரியரும் இக் கருத்தினரே யாவர்.

'பொன்னென்கிளவி' (357) என்னும் நூற்பாவில் 'லகாரம் மகாரம்' என்புழி அவ்வவ் வுயிர்மெய் எழுத்துக்களையே குறித்தல் போல ஈண்டும் 'லகாரம்' என்பதற்கு லகர உயிர்மெய்யையே குறிக்கும் எனக்கொள்ளின், உரையாசிரியர்கள் கூறும் இவ்வுத்திகள் வேண்டற்பாலன வல்லவாம்.

அருத்தாபத்தி - சொல்லியதைக் கொண்டு சொல்லாததை யுணர்வதாகும். (12)

216. வல்லெழுத் தியற்கை உறழத் தோன்றும்.

இதுவும், மேற்கூறிய இரண்டிற்கும் இன்னும் ஒரு முடிபு வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: வல்எழுத்து இயற்கை உறழத்தோன்றும்-மேற்கூறிய பலசில என்னும் இரண்டிற்கும் அகரவீற்றுப் பொதுவிதியிற் (204) கூறிய வல்லெழுத்து மிகுதியது இயல்பு, மிகுதலும் மிகாமையுமாகி உறழ்ந்துவரத் தோன்றும் எ. று.

எ-டு: பலப்பல, சிலச்சில, பலபல, சிலசில என வரும்.

ஈண்டும் தம்முன்தாம் வருதல் கொள்க.

'இயற்கை' என்றதனான் முன்கூறிய பற்பல, சிற்சில என்னும் முடிபோடு பல்பல, சில்சில என்னும் முடிபுபெற்று உறழ்ச்சியாதல் கொள்க.

'தோன்றும்' என்றதனான், அகரம் கெட லகரம் ஆய்தமும் மெல்லெழுத்துமாய்த் திரிந்து முடிதல் கொள்க.

எ-டு: பஃறுளை, பன்மரம்; சிஃறுழிசை, சின்னூல் என வரும்.

(வி-ரை) 215, 216 ஆகிய இரு நூற்பாக்களையும் இவற்றின் உரையையும் தொகுத்தே நன்னூலாரும்,

'பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகரம் ஏக

'லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலும் உளபிற'

(உயிரீற்றுப்-20) என்றனர்.

நிலைமொழியில் லகரவொற்று நிற்ப வருமொழியில் தகரம் வரின், நிலைமொழியில் உள்ள லகரவொற்று றகரவொற்றாகத் திரிதலேயன்றி ஆய்தமாகவும் (கல்+தீது=கற்றீது; கஃறீது என) திரியும் என்பதே 370-ஆம் நூற்பாவின் கருத்தாகும். ஈண்டு வரும் பல+தாழிசை என்னும் சொற்கள் பஃறாழிசை என்றாயதும், சில+தாழிசை என்னும் சொற்கள் சிஃறாழிசை என்றாயதும் அந்நூற்பாவின்கண் கொள்ளப்படும் எனில், அன்று. 370-ஆம் நூற்பாவில் வரும் நிலைமொழியீறு இயல்பீறு ஆகும். ஈண்டுள்ள பஃறாழிசை என்பதிலுள்ள நிலைமொழியீறோ பல என்பதிலுள்ள அகரம் கெட்டு நின்ற லகரவொற்று ஆதலின் விதியீறாகும். ஆதலின் ஈண்டுத் 'தோன்றும்' என்பதால் கொண்டார் உரையாசிரியர். (13)

217. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

இஃது, அகர ஈற்றுப்பெயர்க்கு வன்கணத்தொடு வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று-அகர வீற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் மேற் கூறிய (204) அல்வழியோடு ஒரு தன்மைத்தாய்க் க ச த ப முதல்மொழி வந்தவழி தத்தம் ஒற்று இடைமிக்கு முடியும் எ-று.

எ-டு: இருவிளக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன் என வரும். விளக்குறுமை எனக் குணவேற்றுமைக்கண்ணும் கொள்க.

(வி-ரை) இருவிள என்பது ஓலை; வேணாட்டகத்து ஓரூர்; கருவூரிடத்து ஒரு சேரியும் என்ப. (நச்சினார்க்கினியருரை) (14)

218. மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே.

இஃது, அகரவீற்று மரப்பெயர்க் கிளவிக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகும்-அகரவீற்று மரப்பெயராகிய சொல் மெல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: விளங்கோடு, விளஞ்செதில்; தோல், பூ என வரும்.

(வி-ரை) 218, 230, 232, 244, 263, 283 ஆகிய நூற்பாக்களில் எல்லாம் மரப்பெயர்களைக்கூறி, அவை வல்லெழுத்து வருவழி மெல்லெழுத்து மிக்கு முடியும் என ஆசிரியர் கூறுகின்றார். இவையனைத்தும் தொகுத்தே நன்னூலாரும், 'மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து, வரப்பெறுவனவுமுள வேற்றுமை வழியே,' (நன்-166) என்றனர். ஈண்டு 'வரப்பெறுவனவும் உள' என்ற உம்மையால் மெல்லெழுத்து மிகுதலே யன்றி வல்லெழுத்து மிகுதலும் உள என்று கொள்ள வைத்தது 'வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை' (தொல். எழுத்து-231) எனவரும் நூற்பாவை நோக்கியே யாகும். (15)

219. மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை.

இஃது, அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: மகப்பெயர்க்கிளவிக்கு இன்சாரியை-அகரவீற்று மக என்னும் பெயர்ச்சொல்லிற்கு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வரும் சாரியை இன் எ. று.

எ-டு: மகவின்கை; செவி, தலை, புறம் என வரும்.

சாரியைப்பேறு வரையாது கூறியவழி நான்கு கணத்துக் கண்ணும் செல்லுமென்பதாகலின், மகவின்ஞாண் என இயல்பு கணத்துக்கண்ணும் கொள்க.

(வி-ரை) நான்கு கணம்: உயிர்க்கணம், வன்கணம், மென் கணம், இடைக்கணம். இவற்றுள் வன்கணம் ஒழிந்தவற்றை

இயல்புகணம் என்பர். இளம்பூரணர் இயல்புகணம் எனக்கூறி மென்கணம் ஒன்றிற்கே எடுத்துக்காட்டுத் தந்து இருப்பினும், ஏனைய இடைக்கணமும் உயிர்க்கணமும் இயல்புகணமே என்பது இவருக்குக் கருத்தாகும். 224-ஆம் நூற்பா உரை நோக்குக.

'சாரியைப்பேறு வரையாது கூறியவழி, நான்குகணத்துக் கண்ணும் செல்லும் என்பது ஆசிரியர்க்குக் கருத்தாகலின், மகவின் ஞாண், நூல், மணி, யாழ், வட்டு, அடை என ஒட்டுக' என்பர் நச்சினார்க்கினியர். வரையாது—இன்ன வருமொழி வரும் என வரையாது. (16)

220. அத்தவண் வரினும் வரைநிலை இன்றே.

இதுவும் அது.

இ—ள்: அத்து அவண் வரினும் வரை நிலை இன்று-மேற் கூறிய இன்னேயன்றி அத்து என்னும் சாரியை இயைபு வல் லெழுத்திேனாடு அம் மக என்னும் சொல்லிடத்து வந்து முடியினும் நீக்கும் நிலைமை இன்று எ.று.

எ-டு: மகத்துக்கை; செவி, தலை, புறம் எனச் செய்கை அறிந்து முடிக்க.

'அவண்' என்றதனால், மகப்பால் யாடு என வல்லெழுத்துப் பேறும், மகவின்கை என மேல் இன்சாரியை பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்வும், உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் வந்தவழி விளவின்கோடு என இயைபு வல்லெழுத்து வீழ்வும் கொள்க.

'நிலை' என்றதனால், மகம்பால்யாடு என மெல்லெழுத்துப் பேறும் கொள்க. (17)

221. பலவற் றிறுதி உருபியல் நிலையும்.

இஃது, அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: பலவற்று இறுதி உருபு இயல் நிலையும்-பல என்னும் அகரவீற்றுச் சொல் உருபு புணர்ச்சிக்கண் (175) வற்றுப் பெற்றுப் புணர்ந்த இயல்பின்கண்ணே நிற்கும் எ. று.

எ-டு: பலவற்றுக்கோடு; செவி, தலை, புறம் எனவரும்.

(வி-ரை) பலவற்றிறுதி – பல என்னும் அகர ஈற்றுச் சொல் என இளம்பூரணர் உரை கூறுகின்றார். மேல் 214-ஆம் நூற்பாவிலும் இங்ஙனமே கூறியுள்ளார். உருபியலில் (175) 'பல்லவை நுதலிய அகர இறுபெயர்' என்பதற்குப் பல்ல, உள்ள, இல்ல, சில்ல என்ற நான்கு பெயர்களையும் எடுத்துக்காட்டியுள்ளார். எனினும் நச்சினார்க்கினியர் இம்மூன்று இடங்களிலும் பன்மைப் பொருளைக் கருதின பல்ல, பல, சில, உள்ள, இல்ல என்னும் ஐவகைச் சொற்களையும் கொள்கின்றார். இதுவே பொருத்தம் உடைத்தாம். இவ் ஐவகைப் பெயர்களும் உருபொடு புணரும் வழி வற்றுச்சாரியை பெறும் என உருபியலில் (175) கூறினார் ஆசிரியர். ஈண்டு அவை பொருளொடு புணரும் வழியும் அங்ஙனமே வற்றுச்சாரியை பெறும் என்று கூறுகின்றார். (18)

222. ஆகார இறுதி அகர இயற்றே.

இஃது, ஆகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஆகார இறுதி அகர இயற்று–ஆகார வீற்றுப்பெயர் (அல்வழிக்கண்) அகர வீற்று (204) அல்வழியது இயல்பிற்றாய் வல்லெழுத்துப் பெற்று முடியும் எ. று.

எ-டு: தாராக்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும். (19)

223. செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்.

இஃது, அவ்வீற்று வினைச்சொல் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: செய்யா என்னும் வினை எஞ்சு கிளவியும் – (பெயரேயன்றி) செய்யா என்று சொல்லப்படும் ஆகாரவீற்று

வினையெச்சச் சொல்லும், அஇயல் திரியாது என்மனார் புலவர்-வல்லெழுத்து மிக்குமுடியும் அவ்வியலில் திரியாதென்று சொல்லுவர் புலவர் எ.று.

எ-டு: உண்ணக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'திரியாது' என்றதனால், 'செய்யா' என்னும் பெயரெச்சமும் அவ்வாறு முடியுமெனக் கொள்க.

எ-டு: உண்ணாக் கொற்றன் என வரும். (20)

224. உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக அகரம் மிகுமே.

இஃது, அவ்வீற்று அல்வழிக்கண் உம்மைத்தொகை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி-உம்மைதொக்க இருபெயராகிய தொகைச்சொல், மெய்ம்மை யாக அகரம் மிகும்-மெய்யாக நிலைமொழியீற்று அகரம் மிக்கு முடியும் எ.று.

எ-டு: உவாஅப் பதினான்கு.

'மெய்ம்மை யாக' என்றதனால் வல்லெழுத்துக் கொடுக்க.

'உம்மை தொக்க' என்னாது 'எஞ்சிய' என்ற வாய்பாட்டு வேற்றுமையான், இம்முடிபு இருபெயரொட்டுப் பண்புத் தொகைக்கும் கொள்க.

எ-டு: அராஅப் பாம்பு எனவரும்.

இன்னும் அதனான், எழுவாய் முடிபிற்கும் பெயரெச்சத்திற்கும் அகரப்பேறு கொள்க.

எ-டு: இராஅக்கொடிது; இராஅக்காக்கை[1] எனவரும்.

நிலைமொழி எழுத்துப்பேறு வருமொழிவரையாது கூறினவழி நான்கு கணத்துக்கண்ணும் செல்லுமாகலின், இயல்பு கணத்துக்கண்ணும் அகரப்பேறு கொள்க.

---

1. உவாஅக் கொடிது, உவாஅக் காக்கை என்பது வ. உ. சி. அவர்கள் பாடம். உவாக்காக்கை-பார்வைக்கு விருப்பமில்லாத காக்கை.

எ-டு: இருஅ வழுதுணங்காய் எனவரும்.

(வி-ரை) 'ஆகார இறுதி அகர இயற்றே' (222) என்னும் மாட்டேறு எழுவாய்த் தொடருக்காகும். ஆனல் இங்குக் கூறப் படுவதோ உம்மைத் தொகையாகும். ஆதலின் வல்லெழுத்துப் பெறுதலை 'மெய்ம்மையாக' என்ற மிகையினுல் அமைத்துக் கொண்டார் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியரும் இக்கருத்தினரே ஆவர். (21)

225. ஆவு மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாவென் வினவும் பலவற் றிறுதியும்
ஏவல் குறித்த உரையசை மியாவும்
தன்தொழில் உரைக்கும் வினவின் கிளவியோடு
அன்றி அனைத்தும் இயல்பென மொழிப.

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு இயல்புகூறி எய்தியது விலக்குதலும், எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ-ள்: ஆவும் மாவும் விளிப்பெயர்க்கிளவியும்-ஆ என்னும் பெயர்ச்சொல்லும் மா என்னும் பெயர்ச்சொல்லும், விளித்தலை யுடைய பெயராகிய உயர்திணைச்சொல்லும், யா என் வினவும் பலவற்று இறுதியும்-யா என்னும் வினப்பெயரும் அஃறிணைப் பன்மைப்பொருளை உணர்த்தும் ஆகாரவீற்று முற்று வினைச் சொல்லும், ஏவல் குறித்த உரையசை மியாவும்-முன்னிலையில் ஏவல் வினைச்சொல்லைக் குறித்துவரும் உரையசையாகிய மியா என்னும் ஆகாரவீற்று இடைச்சொல்லும், தன்தொழில் உரைக்கும் வினவின் கிளவியொடு அன்றி அனைத்தும்-தனது தொழிலினைச் சொல்லும் ஆகார வினவினையுடைய வினைச்சொல்லுமாகிய அவ்வனைத்தும், இயல்பு என மொழிப-இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர் எ-று.

எ-டு: ஆ குறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; மா குறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; ஊரா கொள், செல், தா, போ எனவும்; யா குறிய, சிறிய, தீய, பெரிய எனவும்; உண்ணு

குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; கேண்மியா கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும்; உண்கா கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் வரும்.

'விளிப்பெயர்க் கிளவியும்', 'பலவற் றிறுதியும்', 'ஏவல் குறித்த உரையசை மியாவும்', தன்தொழிலுரைக்கும் வினாவும்' எய்தாதது எய்துவிக்கப்பட்டன.

ஊரா கொள் என்பது 'உயிரீறாகிய உயர்திணைப்பெய' ரென் பதனுள் அடங்காதோ வெனின், முன் (உயிர்மயங்கியல்–8) கூறிற்றே கூறுக.

(வி–ரை) 'அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா' (உயி ரீற்றுப்–21) என்பர் நன்னூலாரும். (22)

226. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

இஃது, அவ்வீற்று வேற்றுமை கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று– (ஆகார வீற்றுப்பெயர் அல்வழிக்கண்ணேயன்றி) வேற்றுமைக்கண்ணும் அகரவீற்று (204) அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்குமுடியும் எ.று.

எ-டு: தாராக்கால்; சிறகு, தலை, புறம் எனவரும். (23)

227. குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி.

இஃது, அவ்வீற்றில் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ–ள்: குறியதன் முன்னரும் ஓர் எழுத்து மொழிக்கும்– குற்றெழுத்தின்முன் நின்ற ஆகாரவீற்றிற்கும் ஓரெழுத்தொரு மொழி ஆகாரவீற்றிற்கும், அகரக்கிளவி அறியத் தோன்றும்– (நிலைமொழிக்கண்) அகரமாகிய எழுத்து அறியத் தோன்றும் எ. று.

எ-டு: பலாஅக்கோடு; செதிள், தோல், பூ எனவும்; காஅக் குறை; செய்கை, தலை, புறம் எனவும் வரும்.

ஓரெழுத்தொருமொழி முற்கூறுதவதனால், அதன்கண் அகரப் பேறு சிறுபான்மையெனக் கொள்க.

'அறிய' என்றதனால், அவ்விருவழியும் அகரம் பொருந்திய வழியே வருதலும், அவ்வீற்று வேற்றுமையுள் எடுத்தோதாத வற்றின்முடிபும், இவ்வீற்றுள் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்வும், இவ் வுயிரீற்றில் வரும் உருபீற்றுச் செய்கையும் கொள்க.

எ-டு: அண்ணாஅத்துக் குளம், உவாஅத்து ஞான்று கொண்டான், உவாஅத்தாற் கொண்டான், யாவற்றுக்கோடு என இவை பிறமுடிபு. மூங்காவின்தோல் என்பது வல்லெழுத்து வீழ்வு. இடாவினுட் கொண்டான் என்பது உருபீற்றுச் செய்கை.

(வி-ரை) இடா—இறைகூடை. (24)

228. இராவென் கிளவிக் ககர மில்லை.

இஃது, அவ் அகரப்பேற்றிற்கு ஒருவளி எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ-ள்: இரா என் கிளவிக்கு அகரம் இல்லை-இரா என்னும் ஆகாரவீற்றுச் சொல்லிற்கு முன்கூறிய அகரப்பேறு இல்லை எ. று.

எ-டு: இராக்கொண்டான் எனவரும்.

(வி-ரை:) இராஅக்காக்கை என அகரம் பெற்றவழி இராத காக்கை என மறைப்பொருள்படும்; இராக்காக்கை என அகரம் பெறுதவழி இராவிடத்துக் காக்கை என வேற்றுமைப் பொருள் படும் என்பர் நச்சினார்க்கினியர். (25)

229. நிலாவென் கிளவி அத்தொடு சிவணும்.

இஃது, அவ்வீற்று ஒருவழி அகரம் விலக்கி அத்துவகுத்தல் நுதலிற்று.

இ-ள்: நிலா என் கிளவி அத்தொடு சிவணும்-நிலா என்னும் சொல் அத்துச் சாரியையொடு பொருந்தி முடியும் எ. று.

எ-டு: நிலாத்துக் கொண்டான்; சென்றான், தந்தான், போயினன் என வரும்.

[1]நிலைமொழித்தொழிலை நிலைமொழித்தொழில் விலக்குமாகலின், அத்து வகுப்ப அகரம் வீழ்ந்தது.

(வி-ரை) மேல் 227-ஆம் நூற்பாவில் குறியதன்பின் வந்த ஆகார ஈறு (அதாவது நிலாவென்னும் சொல்) அகரம் பெறும் என விதித்ததும் நிலைமொழித் தொழிலே யாகும். இந்நூற்பாவில் அத்துப் பெறும் என விதித்திருப்பதும் நிலை மொழிக்கே யாகும். எனவே, ஈண்டு விதித்த நிலைமொழிக்குரிய விதியால், ஆண்டு அகரம்பெறும் எனவிதித்த நிலைமொழிக்குரிய விதி விலக்கப் பெற்றது என்றார். (26)

230. யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே.

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ-ள்: யா மரக்கிளவியும் பிடாவும் தளாவும் ஆ முப் பெயரும்-யா என்னும் மரத்தை உணரநின்ற சொல்லும் பிடா என்னும் சொல்லும் தளா என்னும் சொல்லுமாகிய அம்மூன்று பெயரும், மெல்லெழுத்து மிகும்-வல்லெழுத்து மிகாது மெல் லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: யாஅங்கோடு, பிடாஅங்கோடு, தளாஅங்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

மெல்லெழுத்துப்பேறு வருமொழித் தொழிலாதலின், வரு மொழி வல்லெழுத்தை விலக்கிற்று. (27)

---

1. 'நிலைமொழித்தொழில் வருமொழித்தொழிலை' என்பது வ. உ. சி, அவர்கள் பதிப்பிலுள்ள பாடம்.

231. வல்லெழுத்து மிகினும் மான மில்லை.

இது, மேலனவற்றிற்கு வல்லெழுத்தும் சிறுபான்மை மிக்கு முடியும் என இறந்தது காத்தல் நுதலிற்று.

இ-ள்: வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை—மேற்கூறிய மூன்று பெயரும் மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை என்று.

எ-டு: யாஅக்கோடு, பிடாஅக்கோடு, தளாஅக்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

'மானமில்லை' என்றதனால், யா முதலிய மூன்றற்கும் உரு பிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி, இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

எ-டு: யாஅவின்கோடு, பிடாஅவின்கோடு, தளாஅவின் கோடு என வரும்.

இன்னும் அதனானே, யாஅத்துக்கோடு எனச் சிறுபான்மை அத்துப்பேறுண்டேனும் கொள்க, அவ்வகரப்பேற்றோடு வல்லெ ழுத்துப் பெறுதலின்.

'யாமரக்கிளவி' என்பதனைக், 'குறியதன் முன்னரும்' என்ப தன்பின் வையாத இதனால், இராவிற் கொண்டான், நிலாவிற் கொண்டான் என உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கண் சென்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. நிலாவிற் கொண்டான் என்பதற்கு நிலாத்துக் கொண்டான் என்பது ஈற்றுப்பொது முடிபாயினவாறு அறிக. (28)

232. மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத் தவையவண் நிலையா
ணகரம் ஒற்றும் ஆவும் மாவும்.

இஃது, அவ்வீற்றில் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மாமரக்கிளவியும் ஆவும் மாவும் ஆ முப்பெயரும் அவற்று ஓர் அன்ன-மாமரமாகிய சொல்லும் ஆ என்னும் சொல்லும் மா என்னும் சொல்லுமாகிய அம்மூன்று பெயர்ச் சொல்லும் மேற்கூறிய (230) யா முதலிய மூன்றனொடும் ஒரு தன்மையவாய வல்லெழுத்துப்பெறாது மெல்லெழுத்துப்பெற்று முடிதலுமுடைய, ஆவும் மாவும் அகரம் வல்லெழுத்து அவை அவண் நிலையா னகரம் ஒற்றும்-அவற்றுள் ஆவும் மாவும் முன் பெற்று நின்ற அகரமும் (227) வல்லெழுத்துமாகிய அவை அவ் விடத்து நிலைபெறாவாய் னகரம் ஒற்றாகப் பெற்று முடியும் எ-று.

எ-டு: மாஅங் கோடு; செதிள், தோல், பூ எனவும்; ஆன் கோடு, மான்கோடு; செவி, தலை, புறம் எனவும் வரும்.

'அறிய' (உயிர்மயங்கியல்-24) என்றதனால், சிறுபான்மை மாங்கோடு என அகரமின்றியும் வரும்.

இனி, 'அவண்' என்றதனால் காயாங் கோடு, ஆணங் கோடு, நுணாங் கோடு என்றாற்போலப் பிறவும் மெல்லெழுத்துப் பெறு தலும்; அங்காக் கொண்டான், இங்காக் கொண்டான், உங்காக் கொண்டான், எங்காக் கொண்டான் என இவ்வீற்று ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணரநின்ற இடைச்சொற்கள் வல்லெழுத்துப் பெறுதலும்; ஆவின்கோடு, மாவின்கோடு எனச் சிறுபான்கை இன்பெறுதலும், பெற்றவழி வல்லெழுத்து வீழ்வும் கொள்க.

'அவற்றோரன்ன' என்ற மாட்டேற்றால் பெற்றுநின்றது மெல்லெழுத்தாகலின், 'அகரம் வல்லெழுத் தவையவ ணிலையா' என்று ஓதற்பாலதன்றெனின், மேல் 'ஊவென் னொருபெயரா வொடு சிவணும்' (உயிர் மயங்கியல்-67) என்றவழி, அம் மாட்டேற்றானே அதன் வல்லெழுத்து வீழ்வும் கொளல் வேண்டித் 'திரிந்ததன் றிரிபது' என்னும் நயந்தானே மெல்லெழுத்தை வல்லெழுத்தாக ஓதினாரெனக் கொள்க.

(வி—ரை) நிலைமொழியும் வருமொழியுமாகப் புணர்க்கப்பட்ட புணர்மொழிகளில் ஒரெழுத்திற்குத் திரிபுகூறி, அதற்கு மீண்டும் திரிபுகூறுங்கால் அங்ஙனம் திரிந்த எழுத்தைக் கூருது, திரியப் பட்ட எழுத்திற்கே திரிபு கூறுதல் 'திரிந்ததன் திரிபு அது' என்பதாகும்.

'அவற்ருேரன்ன' என்னும் மாட்டேற்ருல் ஆ, மா என்னும் சொற்கள் மெல்லெழுத் தொன்றே பெற்று முடியும் என இளம் பூரணர் கருதுகின்ருர். ஆதலின் அவர் ஒரு ஐயத்தை எழுப்பு கின்ருர். மெல்லெழுத்து மட்டுமே பெற்றுமுடியும் ஆ, மா என்பனவற்றிற்கு, வல்லெழுத்து வாரா என விலக்க வேண்டியது ஏன்? என்னும் விஞவை எழுப்பிக்கொண்டு, அதற்கு விடை தருகின்ருர். 'னகரம் ஒற்றும் ஆவும் மாவும்' என்பதால் ஆ, மா என்பன ஆன், மான் என நிற்குமேனும், முன்னர் 'அவற்ருே ரன்ன' எனக்கூறும் மாட்டேற்ருன் ஆ, மா என்பன மெல்லெழுத்தும் பெறும் எனக்கொள்ளக் கிடக்கின்றது. ஆயினும் அவை னகரமே பெறும் எனப் பின்னர்க் கூறுதலின் மாட்டேற்ருன் பெற்று நின்ற மெல்லெழுத்தையே விலக்க வேண்டும். அங்ஙனமாகவும் ஆசிரியர் 'வல்லெழுத்து அவை யவண் நிலையா' என வல்லெழுத்து வருதலை விலக்குகிருர். ஏன்? இதற்கு அவர் தரும் விடை இரண்டு:— (1) பின்னர் 'ஊவென் ஒருபெயர் ஆவொடு சிவணும்' என்னும் நூற்பாவில், ஊகார இறுதிப் பெயரை இவ்வாகார இறுதிப் பெயரோடு மாட்டெறிகின்ருர் ஆசிரியர். இங்கு 'மெல்லெழுத்தியலா' என விலக்கின், இதனெடுமாட் டெறியப்படும். அவ்வூகார இறுதிப் பெயருக்கும் மெல்லெழுத்துப் பெறுதலே விலக்குண்ணும். ஆனல் அங்கு வல்லெழுத்து விலக்கப் பெறவேண்டும். அதனல் ஈண்டு 'வல்லெழுத்தியலா' எனக் கூறினர் என்பது. (2) 'ஆவும் மாவும் அவற்ருேரன்ன' என்னும் மாட்டேற்ருன் மெல்லெழுத்துப் பெறுமேனும் அம்மெல்லெழுத்து வல்லெழுத்தின் திரிபேயாகும். எனவே 'அவற்ருேரன்ன' என்ப தால், முதற்கண் மெல்லெழுத்து வரும் எனக்கூறிய ஆசிரியர், மீண்டும் அதற்குத் திரிபு கூறுங்கால் அங்ஙனம் திரிந்த மெல் லெழுத்தைக் கூருது, திரியப்பட்ட வல்லெழுத்திற்கே திரிபு

கூறினர். இங்ஙனம் கூறற்கு விதி 'திரிந்ததன் திரிபு அது' என்பதாகும்.

எனினும் இங்ஙனம் கூறுவதெல்லாம் ஆசிரியர் கருத்திற்கு முரண்படுவதாகும். இந்நூற்பாவில் கூறப்படும் சொற்கள் மா (மரம்), ஆ, மா (விலங்கு) என்னும் மூன்றுகும். இவற்றை இதற்கு முன்பு கூறிய யா, பிடா, தளா என்னும் மூன்று பெயர் களுடன் மாட்டெறிகின்றார் ஆசிரியர். யா, பிடா, தளா என்பன மெல்லெழுத்துப் பெறும் என 230-ஆம் நூற்பாவாலும், வல் லெழுத்துப்பெறினும் குற்றமில்லை என 231-ஆம் நூற்பா வாலும் கூறப்படுகின்றன. 227-ஆம் நூற்பாவால் அகரம் பெறுதலும் இவற்றிற்குரியது எனத்தெரிகின்றது. ஆதலின் 'அவற்றோரன்ன' என்ற மாட்டேற்றால் அ க ர ம் பெ று த ல் (227), மெல்லெழுத்துப் பெறுதல் (230), வல்லெழுத்துப் பெறுதல் (231) ஆகிய மூன்றுமே கொள்ளவேண்டுவதன்றி மெல்லெழுத்துப் பெறுதல் ஒன்றுமே கொள்ளுதல் தவறாகும். 'அவற்றோரன்ன' என்னும் மாட்டேற்றால் இம்மூன்றும் பெறுதல் ஆசிரியர் கருத்தாய் இருத்தலினால்தான், ஆவிற்கும் மாவிற்கும் அகரம் பெறுதலையும் வல்லெழுத்துப் பெறுதலையும் விலக்கு வாராயினர். எனவே ஆசிரியர் கருத்தின்படி இந்நூற்பாவிற்குப் பின்வருமாறு பொருள் கூறலே தக்கதாகும். மரத்தினையுணர நின்ற மா என்னும் சொல் மாஅக்கோடு, மாஅந்தோல் என வரும். ஏனைய ஆ, மா என்பன ஆன்கோடு, மான்கோடு என வரும் என்பதாம். (29)

233. ஆனொற் றகரமொடு நிலையிடன் உடைத்தே.

இஃது, அவ்வீற்றுள் ஆ என்றதற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஆன் ஒற்று அகரமொடும் நிலைஇடன் உடைத்து- முன்பு பெற்றுநின்ற [1]ஆன் என்னும் சொல்லினது னகரவொற்று. அகரத்தொடும் நிற்கும் இடனுடைத்து எ.று.

'இடனுடைத்து' என்றதனன், வன்கணம் ஒழிந்த கணத்து இம்முடிபெனக் கொள்க.

---

1. 'ஆவென்னும் சொல்லினது' என்பது க. ப. பாடம்.

எ – டு: 'ஆனநெய் தெளித்து நான நீவி' எனவரும்.

'அகரமொடும்' என்ற உம்மையான், அகரமின்றி வருதலே பெரும்பான்மை எனக் கொள்க. (30)

234. ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலு முரித்தே.

இஃது, இன்னும் ஆன் என்பதற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: ஆன்முன் வரும் ஈகார பகரம்-ஆன் என்னும் சொல் முன்னர் வருமொழியாய் வருகின்ற ஈகாரத்தொடுகூடிய பகர மாகிய மொழி, தான்மிகத் தோன்றி குறுகலும் உரித்து-அப்பகர மாகிய தான் மிகத் தோன்றி அவ்வீகாரம் இகரமாகக் குறுகி முடிதலையும் உடைத்து எ. று.

'தோன்றி' என்றதனால், நிலைமொழிப் பேருகிய னகர வொற்றின் கேடு கொள்க.

எ-டு: ஆப்பி என வரும்

உம்மையான், ஆன்பீ என்பதே பெருபான்மை யெனக் கொள்க.

(வி-ரை) 'ஆப்பி நீரோடு அலகு கைக்கொண்டிலர்' என்பது அப்பரடிகளின் அருள்மொழியாகும். 'ஆமுன் பகரவீ அனைத்தும் வரக்குறுகும், மேலன அல்வழி இயல்பா கும்மே' (உயிரீற்றுப்-27) என்பர் நன்னூலார். (31)

235. குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே.

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: குறியதன் இறுதிச்சினை கெட உகரம் அறிய வருதல் செய்யுளுள் உரித்து-குறியதன் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது சினையாகிய அகார மாத்திரை கெட ஆண்டு உகரம் அறிய வருதல் செய்யுளிடத்து உரித்து எ. று.

எ-டு: 'இறவுப் புறத்தன்ன பிணர்ப்படு தடவுமுதல்' (நற். 19) என வரும்.

'அறிய' என்றதனான், உகரம்பெறாது சினைகெடுதலும் கொள்க.

எ-டு: அரவணி கொடி என வரும்.

'பிணவுநாய் முடுக்கிய' என்றாற்போல வரும் அல்வழிமுடிபு 'கிளந்தவல்ல' (குற்றியலுகரப் புணரியல்-77) என்னும் புறனடையதெனக் கொள்க.

(வி ரை) குறியதன் கீழ் ஆக் குறுகலும் அதனோடு, உகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின்' (உயிரீற்றுப். 22) என்பர் நன்னூலாரும்.

236. இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.

இஃது, இகரவீற்றுப் பெயர்க்கு அல்வழி முடிபு தொகை மரபினுட் கூறி (159) நின்றமையின் அதன் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இகர இறுதிப் பெயர்நிலை முன்னர் வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகும்-இகரவீற்றுப் பெயர்ச்சொல் முன்னர் (204) அதிகாரத்தாற் க ச த ப முதல் மொழி வந்த வழி வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: கிளிக்கால்; சிறகு, தலை, புறம் எனவரும். (33)

237. இனிஅணி என்னுங் காலையும் இடனும்
வினையெஞ்சு கிளவியுஞ் சுட்டும் அன்ன.

இஃது, இவ்வீற்றுள் சில இடைச்சொல்லும் வினைச்சொல்லும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இனி அணி என்னும் காலையும் இடனும் வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன–இனி என்றும் அணி என்றும் சொல்லப் படுகின்ற காலத்தையும் இடத்தையும் உணர நின்ற இடைச் சொல்லும் இவ்விகரவீற்று வினையெச்சமாகிய சொல்லும் [1]இவ் வீற்றுச் சுட்டாகிய இடைச்சொல்லும் மேற்கூறியவாறே வல் லெழுத்து மிக்கு முடியும் தன்மைய எ. று.

எ-டு: இனிக்கொண்டான், அணிக்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்; தேடிக்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்; இக்கொற்றன், சாத்தன் தேவன், பூதன் எனவும் வரும். (34)

238. இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே.

இஃது இவ்வீற்றுள் வினையெச்சக் குறிப்பினுள் ஒன்றற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி நின்ற இகரம் உகரம் ஆதல்–இன்றி என்று சொல்லப்படும் வினையெச்சத்து இறுதிக்கண் நின்ற இகரம் உகரமாய்த் திரிந்து முடிதல், தொன்று இயல் மருங்கின் செய்யுளுள் உரித்து–பழக நடந்த கூற்றையுடைய செய்யுட்களிடத்து உரித்து எ.று.

எ-டு: 'உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே' என வரும்.

---

1. 'இவ்வீற்றுச் சுட்டாகிய' என்பது க. ப. பாடம்.

'நின்ற' என்றதன் முன் பெற்றுநின்ற வல்லெழுத்து வீழ்க்க. 'தோன்றியன் மருங்கு' என்றதனால், அன்றி என்பதும் செய்யுளுள் இம்முடிபிற்றாதல் கொள்க.

எ-டு: 'நாளன்று போகிப் புள்ளிடை தட்ப' (புறம்–124) என வரும்.

(வி-ரை) இந்நூற்பாவானும், 'தோன்றியல் மருங்கின்' என்ற மிகையானும் கூறப்பட்டுள்ள கருத்தைத் தொகுத்தே தன்னூலாரும்' 'அன்றி இன்றியென் வினையெஞ் சிகரம், தொடர் பினுள் உகர மாய்வரின் இயல்பே' (உயிரீற்றுப்-23) எனக்கூறினர். (35)

239. சுட்டி னியற்கை முற்கிளந் தற்றே.

இஃது, இவ்வீற்றுச் சுட்டுப்பெயர் இயல்புகணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: சுட்டின் இயற்கை முன்கிளந்த அற்று- இகர வீற்றுச் சுட்டினது இயல்பு இயல்புகணம் வரும்வழியும் உயிர்க் கணம் வரும்வழியும் முன் அகரவீற்றுச் சுட்டிற்குச் சொல்லப்பட்ட தன்மைத்தாம் எ.று.

என்றது மென்கணம் வரும்வழி அம்மெல்லெழுத்து மிக்கும் (உயிர்மயங்கியல்–3), இடைக்கணம் வரும்வழியும், உயிர்க்கணம் வரும்வழியும் நிலைமொழி வகரம் பெற்றும் (உயிர்மயங்கியல்–4, 5), செய்யுட்கண் வகரம்கெட்டுச் சுட்டுநீண்டும் (உயிர்மயங்கியல்-6) முடியும் என்றவாறு.

எ–டு: இஞ்ஞானம், இந்நூல், இம்மணி எனவும்; இவ்யாழ், இவ்வட்டு எனவும்; இவ்வடை, இவ்வாடை, இவ்வௌவியம் எனவும்; ஈவயின எனவும் வரும்.

(வி-ரை) 'கள்வனோ அல்லன் கணவன்என் காற்சிலம்பு, கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றாரே ஈதொன்று' (சிலம்பு-

ஊர்சூழ்வரி-7) என வருவதைப் புறனடையான் அமைக்க என்பர் நச்சினார்க்கினியர். இதுஒன்று என்பதே ஈதொன்று என ஆயிற்று. (36)

240. பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே.

இஃது, இவ்வீற்று அல்வழிகளில் அளவுப்பெயருள் ஒன்றற்கு மேல்தொகை மரபினுள் (22) எய்திய ஏ என் சாரியை விலக்கி வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பதக்கு முன் வரின் தூணிக்கிளவி முதல் கிளந்து எடுத்த வேற்றுமை இயற்று-பதக்கு என்னும் சொல் தன்முன் வரின் தூணி என்னும் சொல்லளவு முன்பு (236) விதந்தெடுத்த வேற்றுமை முடிபின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: தூணிப்பதக்கு என வரும்.

வருமொழி முற்கூறியவதனால், இருதூணிப்பதக்கு என அடையடுத்து வந்தவழியும் இவ்விதி கொள்க.

'கிளந்தெடுத்த' என்றதனால், தூணிமுன்னர்ப் பிறபொருட் பெயர் வந்தவழியும், ஆண்டு நிலைமொழி அடையடுத்து வந்த வழியும், தன்முன்னர்த் தான் வந்தவழியும் இம்முடிபு கொள்க. இன்னும் அதனானே, தன் முன்னர்த் தான் வந்தவழி இக்குச் சாரியைப் பேறும் கொள்க.

எ-டு: தூணிக்கொள், தூணிச்சாமை எனவும்; இரு தூணிக் கொள் எனவும்; தூணித்தூணி எனவும்; தூணிக்குத் தூணி எனவும் வரும். (37)

241. உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி இகர மெய்யொடுங் கெடுமே
[1]டகார மொற்றும் ஆவயி னான.

இதுவும் அது.

1. 'டகரம்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இ-ள்: உரி வரு காலை நாழிக்கிளவி இறுதி இகரம் மெய்யொடும் கெடும் - உரி என்னும் சொல் வருமொழியாய் வந்த காலத்து நாழி என்னும் சொல் தன் ஈற்றில் நின்ற இகரம் தான் ஊர்ந்து நின்ற மெய்யோடும் கெடும், அ வயின் டகாரம் ஒற்றும்- அவ்விடத்து டகரம் ஒற்ருய் வரும் எ.று

எ-டு: நாடுரி என வரும்.

வருமொழி முற்கூறியவதனுன், நிலைமொழி அடையடுத்து 'இருநாடுரி' என்ற வழியும் இம்முடிபு கொள்க.

'இகரம்' என்ஞது 'இறுதி இகரம்' என்றதனுல் ஈண்டை நிலைமொழியும் வருமொழியும் நிலைமொழிகளாய் நின்று பிறபொருட் பெயரோடு வல்லெழுத்து மிக்கு முடிதலும் கொள்க.

எ-டு: நாழிக்காயம், உரிக்காயம் எனவரும்.

(வி-ரை) ஆசிரியர் தொல்காப்பியர் கூறும் இத்திரிபோடு, உரி என்பதோடு 'நாழி' என்பதை வருமொழியாக நிறுத்தி வரும் புணர்ச்சியையும் சேர்த்து நன்னூலார், 'உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய்கெட, மருவும் டகரம் உரியின்வழியே, யகரவுயிர் மெய்யாம் ஏற்பன வரினே' (உயிரீற்றுப்-24) என்றனர். (38)

242. பனியென வருஉங் கால வேற்றுமைக்(கு)
அத்தும் இன்னும் சாரியை ஆகும்.

இஃது, இவ்வீற்று வேற்றுமையுள் ஒன்றற்கு வல்லெழுத்தினெடு சாரியை பெறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பனி என வரும் கால வேற்றுமைக்கு அத்தும் இன்னும் சாரியை ஆகும்-பனி என்று சொல்ல வருகின்ற பனிக் காலத்தை உணர நின்ற வேற்றுமை முடிபுடைய பெயர்க்கு வரும் சாரியை அத்தும் இன்னும் ஆகும் எ. று.

எ-டு: பனியத்துக் கொண்டான், பனியிற் கொண்டான்; சென்ருன், தந்தான், போயினுன் என வரும்.

'வேற்றுமை' என்றதனுன், இன்பெற்றவழி இயைபு வல்லெழுத்தை வீழ்க்க. (39)

243. வளியென வருஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

இதுவும் அது.

இ-ள்: வளி என வரும் பூதக் கிளவியும் அ இயல் நிலையல் செவ்விது என்ப-வளி என்று சொல்ல வருகின்ற இடக்கரல்லாத ஐம்பெரும் பூதங்களில் ஒன்றை உணர நின்ற சொல்லும் மேற் கூறிய அத்தும் இன்னும் பெறும் அவ்வியல்பின்கண் நிற்றல் செவ்விதென்று சொல்லுவர் புலவர் எ. று.

எ-டு: வளியத்துக் கொண்டான், வளியிற் கொண்டான்; சென்ருன், தந்தான், போயினுன் என வரும்.

'செவ்விது' என்றதனுல், இன்பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

(வி-ரை) வளியென வரும் இடக்கர்-மலவாய்க்காற்று. (40)

244. உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே.

இஃது, இவ்விற்று மரப்பெயர் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ-ள்: உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகும்-உதி என்னும் மரத்தினை உணர நின்ற சொல் வல்லெழுத்து மிகாது மெல் லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு : உதிங்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

(வி-ரை) உதிமரம் என்பது இக்காலத்து ஒதியமரம் என வழங்கும். (41)

245. புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை.

இஃது, இவ்வீற்று மரப்பெயர் ஒன்றற்கு மேல் எய்திய வல்லெழுத்து விலக்கிச் சாரியை விதித்தல் நுதலிற்று.

இ - ள் : புளிமரக்கிளவிக்கு சாரியை அம்—புளி என்னும் மரத்தினை உணர நின்ற சொல்லிற்கு வரும் சாரியை அம்முச் சாரியை எ. று.

எ-டு: புளியங்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

சாரியைப்பேற்றிடை எழுத்துப்பேறு கூறியவதனால், அம்முப் பெற்றவழி இயைபு வல்லெழுத்து (236) வீழ்க்க.

(வி—ரை) 242, 243, 245 ஆகிய நூற்பாக்களில் சாரியை பெறுதலைக் கூறுகின்றார் ஆசிரியர். 244—ஆம் நூற்பாவில் மட்டும் மெல்லெழுத்து மிகும் என எழுத்துப் பேறு கூறுகின்றார். ஆதலின் சாரியைப் பேற்றிடை எழுத்துப் பேறு கூறினார் ஆசிரியர் என்றார் இளம்பூரணர். (42)

246. ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே.

இஃது, அம்மரப்பெயரல்லாத புளிப்பெயர்க்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ஏனை புளிப்பெயர் மெல்லெழுத்து மிகும்—அம்மரப் பெயரன்றி ஒழிந்த சுவைப்புளி உணரநின்ற பெயர் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ—டு: புளிங்கூழ்; சோறு, தயிர், பாளிதம் எனவரும்.

(வி—ரை) புளிப்பாளிதம்—புளிக்கின்ற பாற்சோறு. (43)

247. வல்லெழுத்து மிகினு மான மில்லை
ஒல்வழி யறிதல் வழக்கத் தான.

இது, மேலதற்கு வல்லெழுத்து மிகுமென எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை—எனைப் புளிப் பெயர்முன் எய்திய மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை, ஒல்வழி அறிதல் வழக்கத்தான்—பொருந்தும் இடமறி வழக்கிடத்து எ. று.

எ-டு: புளிக்கூழ்; சோறு, தயிர், பாளிதம் எனவரும்.

'ஒல்வழியறிதல்' என்றதனால், புளிச்சோறு என்றதுபோல மற்றையவை வழக்குப் பயிற்சி இலவென்பதும் கொள்க.

'வழக்கத்தான' என்றதனான், இவ்வீற்றுள் எடுத்தோத்தும் இலேசும் இல்லாதனவற்றின் முடிபு வேற்றுமையெல்லாம் கொள்க.

எ-டு: கூதாளங்கோடு எனவும், கணவிரங்கோடு எனவும், துளியத்துக்கொண்டான் எனவும், பருத்திக்குச் சென்றான் எனவும், கப்பிதந்தை கப்பிந்தை எனவும், கட்டி அகல் கட்டகல் எனவும், குளிகுறுமை குளிக்குறுமை எனவும், இன்னினிக் கொண்டான் அண்ணணிக் கொண்டான் எனவும், புளியங்காய் எனவும் வரும்.

இன்னும் அதனானே, இவ்வீற்றுள் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி, இயைபு வல்லெழுத்து வீழ்தலும் கொள்க.

எ-டு: கிளியின்கால் என வரும்.

(வி-ரை) நன்னூலார் 'சுவைப்புளி முன் இனமென்மையும் தோன்றும்' (நன்-175) என்று கூறி, உம்மையால் வல்லெழுத்துப் பெறுதலையும் கொள்ள வைப்பர். (44)

248. நான்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு
ஆன்இடை வருதல் ஐயம் இன்றே.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்குச் சாரியை விதித்தல் நுதலிற்று.

இ-ள்: நாள் முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு-இகரவீற்று நாட்பெயர்களின் முன்னர்த் தோன்றும் வினைச் சொல்லிற்கு, ஆன்இடை வருதல் ஐயம் இன்று-ஆன்சாரியை இடைவந்து முடிதல் ஐயம் இல்லை எ.று.

எ-டு: பரணியாற் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

'ஐயமின்று' என்றதனான், இயைபு வல்லெழுத்து (236) வீழ்க்க.

(வி-ரை) பரணியாற் கொண்டான் - பரணி நாளின்கண் கொண்டான்.

249. திங்கள் முன்வரின் இக்கே சாரியை.

இதுவும் அது.

இ-ள்: திங்கள்முன் வரின் சாரியை இக்கு-திங்களை உணர நின்ற இகரவீற்றுப் பெயர்முன்னர்த் தொழில்நிலைக் கிளவிவரின் வரும் சாரியை இக்குச்சாரியை எ.று.

எ-டு: ஆடிக்குக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும்.

(வி-ரை) திங்கட்பெயர்க்கு இந்நூற்பாவால் இக்குச்சாரியை கொடுத்து, 236-ஆம் நூற்பாவால் வல்லெழுத்துக் கொடுத்து முடிக்க. (46)

250. ஈகார இறுதி ஆகார இயற்றே.

இஃது, ஈகார வீற்றுப்பெயர் அல்வழியின்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஈகார இறுதி ஆகார இயற்று- ஈகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண் ஆகாரவீற்று (222) அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வரும்வழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: தீக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும். (47)

251. நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்
மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நீ என் பெயரும் இடக்கர்ப் பெயரும் மீ என மரீஇய இடம்வரை கிளவியும்-நீ என்னும் பெயரும் இடக்கர்ப் பெயராகிய (பீ என்னும்) ஈகாரஈற்றுப் பெயரும் மீ என்று சொல்ல வருஉம் மருவாய் வழங்கின ஓர் இடத்தினை வரைந்துணர்த்தும் சொல்லும், ஆ வயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்-மேல் இவ்வீற்றுட் கூறிய வல்லெழுத்துப் பெறுது இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: நீ குறியை; சிறியை, தீயை, பெரியை எனவும்; பீ குறிது; சிறிது, தீது, பெரிது எனவும்; மீகண்; செவி, தலை, புறம் எனவும் வரும்.

'நீ குறியை' என்பது மேல் 'அஃறிணை விரவுப்பெய ரியல்புமா குளவே' (தொகை மரபு-13) என்றவழி அடங்காதோவெனின், மேல் (254) வேற்றுமைக்கண் நின்கை எனத் திரிந்து முடிதலின் அடங்காதாயிற்றென்க.

மீகண் என்பது அல்வழி முடிபன்றெனினும் இயல்பாதல் நோக்கி உடன்கூறப்பட்டது.

(வி-ரை) மீகண் - மேலிடத்துக்கண் எனப் பொருள்படும். ஆதலின் இது வேற்றுமை முடிபாயிற்று. ஈகார ஈற்றில் 250 முதல் 252 வரையுள்ள நூற்பாக்கள் அல்வழிக்கும், அடுத்த இரு நூற்பாக்களும் வேற்றுமைக்கும் உரியன. அங்ஙனமாக அல்வழி முடிபுகூறும் இவ்விடத்து வேற்றுமை முடிபும் கூறற்குக்காரணம்,

ஏனைய இருபெயரும் (நீ, பீ) போல இதுவும் இயல்பாதல் நோக்கி யாம். நச்சினார்க்கினியரும் இங்ஙனமே கூறுவர். எனினும் அல்வழி முடிபோடு வேற்றுமை முடிபை ஒருங்கு கூறுதல் ஆசிரியர் கருத்தன்றாதலின், இங்ஙனம் கூறுதல் பொருந்தாது என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். அவர்கள் மீகண் என்பதற்கு மேலாகிய இடம் என அல்வழியாகப் பொருள் காணவேண்டும் என்பர்.

மேற்கு என்னும் சொல் மீ என மரீஇயிற்று என்பர் நச்சினார்க் கினியர் (குற்றிய-27). மேல் என்பது மீ என மரீஇ யிற்று என்பர் திரு. வேங்கடராசுலு ரெட்டியார். (48)

252. இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்
உடனிலை மொழியும் உளவென மொழிப.

இது, மேற்கூறியவற்றுள் மீ என்பதற்கு வேறொரு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம் உடன்நிலைமொழியும் உள என மொழிப-இடத்தினை வரைந் துணர்த்தும் மீ என்னும் சொல்முன் இயல்பாய் முடிதலேயன்றி வல்லெழுத்து மிக்குமுடியும் தம்மில் இயைந்து நிற்றலையுடைய மொழிகளும் உளவென்று சொல்லுவர் எ.று.

எ-டு: மீக்கோள், மீப்பல் என வரும்.

'உடனிலை' என்றதனால், மீங்குழி, மீந்தோல் என மெல்லெ ழுத்துப் பெற்று முடிவனவும் கொள்க. (49)

253. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

இஃது, அவ்வீற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று-ஈகார வீற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் ஆகார

வீற்று (222) அல்வழியோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்துப்பெற்று முடியும் எ.று.

எ–டு: ஈக்கால்; சிறகு, தலை, புறம் எனவரும். (50)

254. நீஎன் ஒருபெயர் உருபியல் நிலையும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்

இஃது, அவ்வீற்று வேற்றுமை முடிபினுள் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நீ என் ஒரு பெயர் உருபுஇயல் நிலையும்- நீ என நின்ற ஒருபெயர் உருபு புணர்ச்சிக்கண் (180) நெடுமுதல் குறுகி னகர வொற்றுப்பெற்று முடிந்த இயல்பின் கண்ணே நின்று முடியும், ஆ வயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்- அவ்வாறு முடிந்தவிடத்து இயைபு வல்லெழுத்து மிகாது எ.று.

எ-டு: நின்கை; செவி, தலை, புறம் என வரும்.

(வி–ரை) மேல் 115-ஆம் நூற்பாவால் வல்லெழுத்துப் பெற வேண்டியது, இந்நூற்பாவால் இயற்கை யாயிற்று. (51)

255. உகர இறுதி அகர இயற்றே.

இஃது, உகரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: உகர இறுதி அகர இயற்று - உகர ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் அகரஈற்று (204) அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: கடுக்குறிது; சிறிது, தீது, பெரிது எனவரும். (52)

256. சுட்டின் முன்னரும் அத்தொழிற் றாகும்.

இஃது, இவ்வீற்றுச் சுட்டு வன்கணத்தொடு கூடி முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: சுட்டின் முன்னரும் அத்தொழிற்று ஆகும்-உகர வீற்றுச் சுட்டின் முன்னரும் வல்லெழுத்து வரும்வழி அவ் அகர வீற்று அல்வழியின் தொழிற்றாய் (205) வல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: உக்கொற்றன்; சாத்தன், தேவன், பூதன் என வரும். (53)

257. ஏனவை வரினே மேல்நிலை [1]யியல்பே.

இஃது அவ்வீற்றுச் சுட்டு ஒழிந்த கணத்தொடுமுடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஏனவை வரின் மேல் நிலை இயல்பு-உகரவீற்றுச் சுட்டின் முன் ஒழிந்த கணம் வருமொழியாகவரின் மேல் அகர வீற்றுச் சுட்டு முடிந்து நின்ற நிலைமையின் (206, 207, 208, 209) இயல்பை யுடையவாய் முடியும் எ. று.

எ-டு: உஞ்ஞாண், உந்நூல், உம்மணி எனவும்; உவ்யாழ், உவ்வட்டு எனவும்; உவ்வடை உவ்வாடை, உவ்வௌவியம் எனவும்; ஊவயினை எனவும் வரும். (54)

258. சுட்டுமுதல் இறுதி இயல்பா கும்மே.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி இயல்பு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: சுட்டு முதல் இறுதி இயல்பாகும்- சுட்டெழுத் தினை முதலாகவுடைய உகர ஈற்றுப்பெயர் மேற்கூறிய வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும் எ. று.

எ-டு: அதுகுறிது, இதுகுறிது, உதுகுறிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

(வி-ரை) இச்சுட்டொடு மூன்றனுருபாகிய ஒடு, ஆறனுருபாகிய அது, ஒரு, இரு, ஆறு ஏழு எனத்திரிந்த உகர ஈற்று

1. 'இயல' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

எண்ணுப்பெயர்கள், உகர ஈற்று வினைத்தொகை ஆகியவற்றையும் சேர்த்து நன்னூலார், 'மூன்றுஆறு உருபுஎண் வினைத்தொகை சுட்டீறு, ஆகும் உகரம் முன்னர் இயல்பாம்' (உயிரீற்றுப்—29) என மொழிந்தனர். (55)

259. அன்றுவரு காலை ஆவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப.

இஃது, இவ்வீற்றுச் சுட்டு முதற் பெயர்க்கு ஓர் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அன்று வருகாலை ஆ ஆகுதலும்-அதிகாரத்தான் நின்ற சுட்டு முதல் உகர வீற்றுப் பெயர் அன்று என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து அவ்வுகரம் ஆகாரமாகித் திரிந்து முடிதலும், ஐ வருகாலை மெய் வரைந்து கெடுதலும்-ஐ என்னும் சாரியை இடைவந்து முடியுங் காலத்து அவ்வுகரம்தான் ஊர்ந்த மெய்யை ஒழித்துக் கெட்டு முடிதலும் செய்யுள் மருங்கின் உரித்து என மொழிப-அவ்விரு முடிபும் செய்யுட்கண் உரித்தென்று சொல்வர் எ. று.

எ-டு: அதாஅன்றம்ம, இதாஅன்றம்ம, உதாஅன்றம்ம எனவும்; அதை மற்றம்ம, இதை மற்றம்ம, உதை மற்றம்ம எனவும் வரும்.

(வி-ரை) இந்நூற்பாவில் கூறப்பட்ட இருவிதிகளுள், முன்னைய விதியை மட்டும் ஏற்பர் நன்னூலார். அங்ஙனம் கூறுங்காலும் ஆசிரியர் கூறுமாறுபோல நிலைமொழித்திரிபு கூறாது, 'அதுமுன் வரும் அன்று ஆன்றும் தூக்கின்' (உயிரீற்றுப்-30) என வருமொழித் திரிபே கூறினர். இவ்வேற்றுமை அறியத் தக்கது.

திருமுருகாற்றுப்படையிலும், கலித்தொகையிலும் 'அதா அன்று' என்னும் சொல் பயின்று வருதலைக் காணலாம். (56)

260. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே

இஃது, இவ்வீற்றுப் பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - உகர வீற்றுப் பெயர் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்ணும் அவ் அகர வீற்று (204) அல்வழியோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: கடுக்காய்; செதிள், தோல், பூ என வரும். - (57)

261. எருவுஞ் செருவும் அம்மொடு சிவணித்
திரிபிடன் உடைய தெரியுங் காலை
அம்மின் மகரஞ் செருவயின் கெடுமே
தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை விதியும், ஒன்றற்கு வல்லெழுத்திணோடு சாரியை விதியும் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: எருவும் செருவும் அம்மொடு சிவணித் திரிபு இடன் உடைய தெரியும் காலை-எரு என்னும் சொல்லும் செரு என்னும் சொல்லும் அம்முச்சாரியையொடு பொருந்தி முன் சொன்ன வேற்றுமைப் பொதுவிதியின் வேறுபட்டு முடியும் இடனுடைய ஆராயுங் காலத்து; அம்மின் மகரம் செருவயின் கெடும் – அவ் அம்முச் சாரியையது ஈற்றின் மகரம் செரு என்னும் சொல்லிடத்துக் கெட்டு முடியும்; வல்லெழுத்து இயற்கை தம் ஒற்று மிகூஉம் அவ்வாறு கெட்டவிடத்துச் செரு என்பது வல்லெழுத்தாகிய இயல்பையுடைய தமது ஒற்று மிக்கு முடியும் எ. று.

எ-டு: எருவங்குழி; சேறு, தாது, பூழி எனவும்; செருவக் களம்; சேனை, தானை, பறை எனவும் வரும்.

'தெரியுங்காலை' என்றதனால், எரு என்பதற்குப் பெரும்பான்மை மெல்லெழுத்துப்பேறும், சிறுபான்மை வல்லெழுத்துப்பேறும், செரு என்பதற்குச் சிறுபான்மை வல்லெழுத்துப்பேறும் கொள்க.

எ-டு: எருங்குழி, எருக்குழி, செருக்களம் என வரும்.

'வல்லெழுத் தியற்கை' என்றதனான், உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி அவ்விருமொழிக்கும் அதிகார வல்லெழுத்து வீழ்வும் கொள்க.

எ-டு: எருவின் கடுமை, செருவின் கடுமை என வரும்.

இன்னும் அதனானே, 'அம்மொடு சிவணித் திரிபிட னுடைய' என வல்லெழுத்தின்கண்ணதாக வரைந்து கூறினமையின், அம் முச்சாரியை இயல்புகணத்துக்கண் பெறுவன கொள்க.

எ-டு: எருவ ஞாற்சி, செருவ ஞாற்சி என வரும். (58)

262. ழகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான.

இஃது, இவ்வீற்றில் சிலவற்றிற்குச் செய்யுளுள் எய்தியதன் மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ழகர உகரம் நீடுஇடன் உடைத்து-இவ்வீற்று மொழி களுள் ழகரத்தொடு கூடிய உகரவீற்றுமொழி அவ்வுகரம் ஊகார மாய் நீண்டு முடியும் இடன் உடைத்து; ஆவயின் உகரம் வருதல்-அவ்விடத்து உகரம் வந்து முடிக எ.று.

'இடனுடைத்து' என்றதனான், இது செய்யுளிடத்தெனக் கொள்க.

எ-டு: 'பழூஉப்பல்' லன்ன பருவுகிர்ப் பாவடி' (குறுந்-180) என வரும். (59)

263. ஒடுமரக் கிளவி யுதிமர இயற்றே.

இஃது, இவ்வீற்று மரப்பெயருள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஒடு மரக்கிளவி உதிமர இயற்று – ஒடு என்னும் மரத்தினை உணர நின்ற சொல் உதி என்னும் மரத்தின் இயல் பிற்றாய் (244) மெல்லெழுத்துப் பெற்று முடியும் எ.று.

எ-டு ஒடுங்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

(வி-ரை) ஒடு என்பது ஒருவகை நோயையும், வேற்றுமை யுருபையும் குறிக்குமாகலின், அவற்றினின்றும் வேறுபாடறிய 'ஒடுமரக்கிளவி' என்றார்.

உதிமரத்தின் பின்னர் அம்முப்பெறுகின்ற புளி மரம் வைத்த இயைபான், இதற்கு அம்முப்பேறுங் கொள்க எனக்கூறி, 'ஒடுவங் கோடு' எனக் காட்டும் தருவர் நச்சினார்க்கினியர். (60)

264. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்
ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தல் நுதலிற்று,

இ-ள்: சுட்டு முதல் இறுதி உருபு இயல் நிலையும்—சுட் டெழுத்தினை முதலாகவுடைய உகரவீற்றுச் சொற்கள் உருபு புணர்ச்சியிற் சொன்ன இயல்பிலே (177) நின்று அன்சாரியை பெற்று உகரம் கெட்டு முடியும்; வல்லெழுத்து இயற்கை ஒற்று இடைமிகா—அவ்விடத்து வல்லெழுத்து இயற்கையாகிய ஒற்று இடைக்கண் மிகா எ. று.

எ-டு: அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

'ஒற்று இடைமிகா' என்றதனால், சாரியை வகுப்ப வல் லெழுத்து வீழாதென்பது பெற்றாம்.

'வல்லெழுத் தியற்கை' என்றதனால், இவ்வீற்றுள் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க,

எ-டு: கடுவின்குறை, ஒடுவின்குறை எனவரும். (61)

265. ஊகார இறுதி ஆகார இயற்றே.

இஃது, ஊகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஊகார இறுதி ஆகார இயற்று-ஊகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் ஆகாரவீற்று (222) அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: கொண்மூக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும். (62)

266. வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்
நினையுங் காலை அவ்வகை வரையார்.

இஃது, [1]இவ்வீற்று வினைசொற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்-ஊகாரவீற்று வினையெச்சமாகிய சொல்லிற்கும், முன்னிலை மொழியாகிய வினைச்சொல்லிற்கும், நினையும்காலை அவ்வகை வரையார்-ஆராயுங்காலத்து அவ்வல்லெழுத்து மிக்கு முடியும் கூற்றினை நீக்கார் எ. று.

எ-டு: உண்ணூக் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்; கைதூக் கொற்றா; சாத்தா, தேவா, பூதா எனவும் வரும்.

'நினையுங்காலை' என்றதனான், இவ்வீற்று உயர்திணைப்பெயர் அல்வழிக்கண் வல்லெழுத்து மிக்கு முடிவன கொள்க.

எ-டு: ஆடூஉக் குறியன், மகடூஉக் குறியள் எனவரும்.

(வி-ரை) கைதூக் கொற்றா-கொற்றா செயலை ஒழிவாயாக என்பது இதற்குப் பொருளாகும். அஃது அன்னதாதல்,

'கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில்' (குறள்-1021)

என்பதனானும் அறிக. (63)

---

1 'இவ்வீற்று வினைச்சொல் முடியுமாறு கூறுதல்' என்பதும் பாடம்.

267. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

இஃது, ஊகாரவீறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று-ஊகார வீறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் அவ் ஆகார வீற்று (222) அல்வழியோடு ஒத்த இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: கொண்மூக்குழாம்; செலவு, தோற்றம், மறைவு என வரும். (64)

268. குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்
நிற்றல் வேண்டும் உகரக் கிளவி.

இஃது, இவ்வீற்றிற் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: குற்றெழுத்து இம்பரும் ஓர் எழுத்து மொழிக்கும் உகரக்கிளவி நிற்றல் வேண்டும்-குற்றெழுத்தின்பின் நின்ற ஊகாரவீற்றுமொழிக்கும் ஓரெழுத்தொரு மொழியாகிய ஊகார வீற்றுமொழிக்கும் உகரமாகிய எழுத்து நிற்றலை வேண்டும் எ.று.

எ-டு: உடூஉக்குறை, தூஉக்குறை; செய்கை, தலை, புறம் என வரும்

'நிற்றல்' என்றதனல் இவ்வீற்று உயர்திணைப்பெயர் வேற்று மைக்கண் வல்லெழுத்து மிகுவனவும் கொள்க.

எ-டு: ஆடூஉக்கை, மகடூஉக்கை; செவி தலை புறம் என வரும்.

(வி-ரை) 'நிற்றல்' என்பதால் உயர்திணைப்பெயர்க்கும் (ஆடூ, மகடூ) வல்லெழுத்தும் உகரமும் கொடுக்க என்பர் நச்சினார்க் கினியர், எனவே இவர் கருத்தின்படி ஆடூ மகடூ என்பதே இயற்

பெயர் எனத் தெரிகிறது. ஊகார ஈற்றுள் இப்பெயர்களை வைத்து விதி கூறுதலின் ஆசிரியருக்கும் இதுவே கருத்தாதல் துணியலாம். இங்ஙனமாகவே மேல் 272-ஆம் நூற்பாவிலும் ஆடூ, மகடூ எனப் பாடம் கொள்வதே சிறந்தது எனத் தெரியலாம்.

ஆடு, மகடு என்பன, 'நிகழூஉ நின்ற பலர்வரை கிளவி' என்றவிடத்து அளபெழுந்து நிற்றல்போல, இச்சொற்களும் அளபெடுத்து நிற்க, அவற்றையே இலக்கணமாகக் கொண்டு ஆடூஉ மகடூஉ என வழங்கினரோ எனவும் நினைய இடந்தரு கின்றது.

சொல்லதிகாரத்திலும் ஆடூஉ, மகடூஉ என்ற பாடமே உள்ளது. (65)

269. பூஎன் ஒருபெயர் ஆஇயல் பின்றே
ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே.

இஃது அவ்வீற்றுள் ஒன்றற்கு உகரமும் வல்லெழுத்தும் விலக்கிப் பெரும்பான்மை மெல்லெழுத்தும் சிறுபான்மை வல்லெழுத்தும் பெறுமென எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: பூ என் ஒரு பெயர் அ இயல்பு இன்று - பூ என்னும் ஊகாரவீற்றையுடைய ஒரு பெயர் மேற்சொன்ன உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் அந்த இயல்பில்லாமையை உடைத்து; எனவே வேறு ஓர் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும், ஆ வயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்து- அவ்விடத்து அம்மெல் லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உரித்து எ. று.

மெல்லெழுத்துப் பெறுமென்றது, உரையிற் கோடலாற் கொள்ளப்பட்டது.

எ-டு: பூங்கொடி, பூக்கொடி; செய்கை, தாமம், பந்து என வரும்.

(வி-ரை) நன்னூலார், 'பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்' (உயிரீற்றுப்- 50) எனக்கூறி உம்மையால் வல்லெழுத்து மிகுதலையும் கொள்வர்.

பூ என்பது பொலிவென்னும் வினைகுறிப்பை யுணர்த்தாது நிற்றற்கு 'ஒருபெயர்' என்றார். (நச்-உரை) (66)

270. ஊஎன் ஒருபெயர் ஆவொடுசிவணும்.

இஃது, இன்னும் அவ்வீற்றுள் ஒன்றற்கு உகரமும் வல்லெழுத்தும் விலக்கி நிலைமொழி னகரம் பெறுமென எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: ஊ என் ஒரு பெயர் ஆவொடு சிவணும் - ஊ என்று சொல்லப்படும் ஊகாரவீற்றை யுடைய ஒரு பெயர் ஆகார வீற்றில் ஆ என்னும் சொல்லோடு பொருந்தி உகரமும் (268) வல்லெழுத்தும் (265) பெறாது நிலைமொழி னகர வொற்றுப் பெற்று (232) முடியும் எ. று.

எ-டு: ஊன்குறை; செய்கை, தலை, புறம் என வரும்.

(வி-ரை) தொல்காப்பியர் காலத்தில் தசையைக்குறிக்க ஊ என்றே வழங்கினர். பிற்காலத்தேதான் ஊன் என வழங்கினர். பிற்கால வழக்கைத் தழுவிய நன்னூலார், இதனொடு, 336-ஆம் நூற்பாவில் கூறியிருக்கும் குயின் என்பதையும் இணைத்து 'குயின்ஊன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே' (மெய்யீற்றுப்- 13) என்றனர். (67)

271. அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே
தக்கவழி அறிதல் வழக்கத் தான.

இஃது, இன்னும் அதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அக்கு என் சாரியை பெறுதலும் உரித்து - அதிகாரத் தான் நின்ற ஊ என்னும் பெயர் மேற்கூறிய னகரத்தோடு அக்கு

என்னும் சாரியை பெற்று முடிதலும் உரித்து; வழக்கத்தான் தக்கவழி அறிதல்-வழக்கிடத்து அம்முடிபு தக்க இடம் அறிக எ. று.

'தக்கவழியறிதல்' என்றதனால், சாரியை பெற்றவழி நிலைமொழி ளகரம் விலக்குண்ணாது நிற்றலும், முன் (270) மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலும் கொள்க

எ-டு: ஊனக்குறை; செய்கை, தலை, புறம் என வரும்.

'வழக்கத்தான' என்றதனான் இவ்விற்று உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

எ-டு: கொண்மூவின் குழாம் என வரும். (68)

272. ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்
இன்னிடை வரினும் மான மில்லை.

இஃது, அவ்விற்று உயர்திணைப்பெயர்க்கு முன் எய்திய வல்லெழுத்தே யன்றி, சாரியையும் பெறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஆடூஉ, மகடூஉ ஆ இரு பெயர்க்கும்-ஆடூஉ மகடூஉ வாகிய அவ்விரண்டு பெயர்க்கும், இன் இடைவரினும் மானம் இல்லை-மேல் எய்திய (குற்றெழுத்திம்பரும்' (உயிர்மயங்கியல் 65) என்னும் சூத்திரத்தின் 'நிற்றல்' என்பதனால் வந்த) வல்லெழுத்தேயன்றி இன்சாரியை இடைவரினும் குற்றம் இல்லை எ. று.

எ-டு: ஆடூஉவின்கை, மகடூஉவின்கை; செவி, தலை, புறம் என வரும்.

'மானமில்லை' என்றதனான், இன் பெற்றவழி மேல் இலேசினானெய்திய வல்லெழுத்து வீழ்க்க. (69)

273. எகர ஒகரம் பெயர்க்கீ றாகா
முன்னிலை மொழிய என்மனார் புலவர்
தேற்றமுஞ் சிறப்பும் அல்வழி யான.

இஃது, எகரவீற்றிற்கும் ஒகரவீற்றிற்கும் ஈருகாத நிலையில் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: எகரம் ஒகரம் பெயர்க்கு ஈறு ஆகா—எகரமும் ஒகரமும் பெயர்ச்சொற்கு ஈறு ஆகா; முன்னிலைமொழிய என்மனார் புலவர்-வினைச்சொல்லுள் முன்னிலை மொழியிடத்தனவென்று சொல்லுவர் புலவர்; தேற்றமும் சிறப்பும் அல்வழியான-தேற்றப்பொருண்மையின் வரும் இடைச்சொல் எகாரவீறும் சிறப்புப் பொருண்மையின் வரும் இடைச்சொல் ஒகாரவீறும் அல்லாதவிடத்து எ. று.

எ-டு: ஏஎ எனவும், ஓஒ எனவும் வரும். இவை முன்னிலை வினை. ஏஎ கொண்டான், ஓஒ கொண்டான் இவை இடைச் சொல்.

(வி-ரை) தேற்றப் பொருளில் எகரமும், சிறப்புப் பொருளில் ஒகரமும் வாராத பொழுது அவை பெயர்க்கு ஈருகா; முன்னிலை வினைக்கே ஈருகும் என்பது இந்நூற்பாவின் கருத்து ஆகும். (70)

274. தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா.

இது, முன் ஈருகும் என்னப்பட்ட எகர ஒகர ஈற்று இடைச் சொற்கும், அவ்விற்று முன்னிலை வினைச்சொற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்-தேற்றப் பொருண்மையில் வரும் எகரவீற்று இடைச்சொல்லும் சிறப்புப் பொருண்மையில் வரும ஒகரவீற்று இடைச்சொல்லும், மேல்கூறு இயற்கை வல்லெழுத்து மிகா—மேலை முன்னிலை வினைச்சொற்குக் கூறப்படும் இயல்புடைய வல்லெழுத்து மிகாவாய் இயல்பாய் முடியும் எ று.

'மேற்கூறியற்கை வல்லெழுத்து மிகா' என்றதனுல், 'வந்தது கொண்டு வாராதது உணர்க' என்னும் தந்திரவுத்திவகையான் வல்லெழுத்து மிகுமென்பது கூறப்பட்டதாயிற்று.

எ-டு: யானே கொண்டேன், நீயோ கொண்டாய், அவனே கொண்டான் எனவும்; (ஒஒகொண்டேன், ஒஒ கொண்டாய்) ஒஒகொண்டான் எனவும் வரும். இவை இடைச் சொல். ஏஎக்கொற்று, ஓஒக்கொற்று; சாத்தா, தேவா, பூதா என இவை முன்னிலைவினை.

'இயற்கை' என்றதனான், அம்முன்னிலை வினைகளை அள பெடையாக நிறீஇக் கொள்க.

(வி-ரை) 'வந்தது கொண்டு வாராதது உணர்க' என்பது பெற்றதொரு விதியைக் கொண்டு பெறாத விதியை யுணர்க என்னும் கருத்தினை விளக்குவதாகும். இதனை 'அருத்தாபத்தி' என்றும கூறுவர்.

இவ்வுத்தியால் இரு கருத்தைப் பெறலாம். (1) தேற்றப் பொருளில் எகரமும், சிறப்புப் பொருளில் ஒகரமும் வாராத பொழுது, அவை பெயர்க்கு ஈறாகா என்பது முன்னைய நூற்பாவில் கூறப்பட்ட விதியாகும். இங்ஙனம் கூறப்பட்ட விதியால், அவ் எகர ஒகரங்கள் தேற்றப் பொருளிலும், சிறப்புப் பொருளிலும் வரும் பொழுது பெயர்க்கு ஈறாகும் என்ற விதியைப் பெற முடிகின்றது. (2) தேற்றப் பொருளிலும் சிறப்புப் பொருளிலும் எகர ஒகரங்கள் வரும்பொழுது (அதாவது பெயரில் வரும்பொழுது) வல்லெழுத்து மிகா என்பது இந்நூற்பாவில் கூறப்படுகின்ற விதி யாகும். இதைக்கொண்டு இவ் எகர ஒகரங்கள் முன்னிலை வினை யில் வரும்பொழுது வல்லெழுத்து மிகும் என்பதும் பெறப் படுகின்றது.

'வந்தது கொண்டு வாராதது உணர்க' என்னும் தந்திரவுத்தி வகையான் வல்லெழுத்து மிகும் என்பது முன்னிலை வினையாக வரும்பொழுதே யாகும்.

ஏஎக்கொற்று - கொற்று! எனக்கு ஒரு கருமம் பணி எனப் பொருள்படும். ஓஒக்கொற்று-கொற்று! இங்ஙனம் செய்கின்றதனை ஒழி எனப் பொருள்படும். (71)

275. ஏகார இறுதி ஊகார இயற்றே.

இஃது, ஏகாரவீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஏகார இறுதி ஊகார இயற்று-ஏகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண் ஊகாரவீற்று (265) அல்வழி இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: சேக்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும் (72)

276. [1]மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்

இஃது, அவ்வீற்று இடைச்சொற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும் - [2]மாறுபாடுகோடலையுடைய எச்சப் பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும், வினாப்பொருண்மைக்கண்வரும் ஏகாரவீற்று இடைச் சொல்லும், எண்ணுப்பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச் சொல்லும், கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும்-மேற்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும் எ. று.

எ-டு: யானே கொண்டேன்; சென்றேன்; தந்தேன், போயினேன் எனவும்; நீயே கொண்டாய்; சென்றாய், தந்தாய், போயினாய் எனவும்; கொற்றனே சாத்தனே தேவனே பூதனே எனவும் வரும்

'கூறிய' என்றதனால், பிரிநிலைப்பொருண்மைக்கண்ணும், ஈற்றசைக்கண்ணும் வரும் ஏகாரங்களின் இயல்பு முடிபு கொள்க.

எ-டு: அவனே கொண்டான் என்பது பிரிநிலை. 'கடலே பாடெழுந் தொலிக்கும்' என்பது ஈற்றசை. (73)

277. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

இஃது, இவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

---

1. 'மாறுகோள்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.
2. 'மாறு கோடலையுடைய' என்பதும் பாடம்.

இ-ள்: வேற்றுமைக் கண்ணும் அதன் ஓர் அற்று – ஏகார வீறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் அவ்வூகாரவீற்று (265) அல்வழியோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: வேக்குடம்; சாடி, தூதை, பானை எனவரும்.

(வி-ரை) வேக்குடம் – வேதலையுடைய குடம். தூதை – ஒரு வகைக் கலம். (74)

278 ஏயென் இறுதிக்கு எகரம் வருமே.

இஃது, அவ்வீற்றிற்கு எய்தியதன்மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஏ என் இறுதிக்கு எகரம் வரும்-அவ்வேற்றுமைக்கண் ஏ என்னும் இறுதிக்கு எகரம் வரும் எ. று.

எ-டு: ஏஎக்கொட்டில்; சாலை, துணை, புழை என வரும்.

'உரையிற்கோடல்' என்பதனான், அவ் எகரப்பேறு பொருந்தினவழிக் கொள்க. (75)

279. சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே.

இஃது, அவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல் லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ-ள்: சே என் மரப்பெயர் ஒடு மர இயற்று - சே என்னும் மரத்தினை உணரநின்ற பெயர் ஒடுமரத்தின் (293) இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: சேங்கோடு; செதிள், தோல், பூ என வரும். (76)

280. பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும்.

இஃது, அம்மரப்பெயரல்லாத சே என்பதற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும்-மேற்கூறிய சே என்பது பெற்றத்தினை உணர நின்ற பொழுதாயின் முடிகூடு. இன்சாரியை பெற்று முடியவேண்டும் எ. று.

எ-டு: சேவின்கோடு; செவி, தலை, புறம் எனவரும்.

'முற்ற' என்றதனான், இச் சே என்பது எடுத்தோத்தான் இன் பெற்றவழியும், அதுவே மரப்பெயராய் உருபிற்கு எய்திய சாரியை (இன்) பெற்ற வழியும், பிற சொல் அவ்வாறு இன் பெற்றவழியும் இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

எ-டு: சேவின்கோடு; செவி, தலை, புறம் எனவும்; சேவின் கோடு; செதின், தோல், பூ எனவும்; ஏவின்கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும். (77)

281. ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே.

இஃது, ஐகாரஈற்று அல்வழி முடிபு தொகை மரபினுட் கூறி நின்றமையின், அதன் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்-ஐகார ஈற்றுப் பெயர்ச்சொல் முன்னர், வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகும்-அதிகாரத்தாற் க ச த ப முதல்மொழி வந்தவழி வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்கு முடியும் எ. று.

எ-டு: யானைக்கோடு; செவி, தலை, புறம் என வரும். (78)

282. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்.

இஃது, இவ்வீற்றுட் சுட்டு முதற்பெயர்க்கு வல்லெழுத்தோடு வற்று வருத்தல் நுதலிற்று.

இ-ள்: சுட்டு முதல் இறுதி உருபு இயல் நிலையும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுப்பெயர் உருபு புணர்ச்சி

விற் (178) கூறிய இயல்பின்கண்ணே நின்று ஐகாரம் கெடாதும் கெட்டும் வற்றுப்பெற்று முடியும் எ. று.

எ-டு: அவையற்றுக்கோடு, இவையற்றுக்கோடு, உவையற்றுக்கோடு, செவி, தலை, புறம் எனவும்; அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு; செவி, தலை, புறம் எனவும் வரும்.

(வி-ரை) அவற்றுக்கோடு முதலியன வகரவொற்றை ஈற்றில் கொண்ட சொற்களாகும். இவற்றிற்கு மேல் 379-ஆம் நூற்பாவில் முடிபு கூறப்படுதலின் ஈண்டுக் கொள்ளவேண்டுவதின்று. நச்சினார்க்கினியரும் இவற்றை ஈண்டுக்கொள்ளாமை நினைத்தற்குரியதாகும். (79)

283. விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்
'அவைமுப் பெயருஞ்சேமர இயல.

இஃது, இவ்வீற்றுள் மரப்பெயர் சிலவற்றிற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: விசை மரக்கிளவியும் ஞெமையும் நமையும் அவை மூப்பெயரும்-விசை என்னும் மரத்தினை உணரநின்ற சொல்லும் ஞெமை என்னும் மரத்தினை உணரநின்ற சொல்லும் நமை என்னும் மரத்தினை உணரநின்ற சொல்லும் ஆகிய அம்மூன்று பெயரும், சேமர இயல-மேற்கூறிய வல்லெழுத்து மிகாது சே என்னும் மரத்தினது இயல்பினவாய் (279) மெல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: விசைங்கோடு, ஞெமைங்கோடு, நமைங்கோடு; செதிள், தோல், பூ என வரும். (80)

284. பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்
ஐயென் இறுதி யரைவரைந்து கெடுமே
மெய்அவண் ஒழிய என்மனார் புலவர்.

இதுவும் அது.

---

1. 'ஆமுப் பெயரும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இ-ள்: பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்-பனை என்னும் சொல்லும் அரை என்னும் சொல்லும், ஆவிரை என்னும் சொல்லும், நிலையுங்காலை அம்மொடு சிவணும்-ஆராயுங்காலத்து மேற்கூறிய வல்லெழுத்து மிகாது: அம் என்னும் சாரியையொடு பொருந்திமுடியும், ஐ என் இறுதி அரை வரைந்து கெடும்-அவ்விடத்து ஐ என்னும் ஈறு அரை என்னும் சொல்லை நீக்கி (எனையிரண்டிலும்) கெடும், மெய் அவண் ஒழிய என்மனார் புலவர்-தன்னானூரப்பட்ட மெய் அச்சொல்லிடத்தே ஒழியவென்று சொல்லுவர் புலவர் எ.று.

எ-டு: பனங்காய்; செதிள், தோல், பூ எனவும், அரையங் கோடு; செதிள், தோல், பூ எனவும்; ஆவிரங்கோடு; செதிள், தோல், பூ எனவும் வரும்.

'நிலையுங்காலை' என்றதனால் பிறவும் தூதுணை, வழுதுணை, தில்லை, ஒலை என வருவனவற்றிற்கும் அம்முக் கொடுத்து ஐகாரம் கெடுத்துத் தூதுணங்காய், வழுதுணங்காய், தில்லங்காய், ஓலம் போழ் என்று முடிக்க.

(வி-ரை) ஓலம் போழ்-ஓலையினது பிளவு. (81)

285. பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் றாகும் ஐயென் உயிரே
ஆகாரம் வருதல் ஆவயி னான.

இதுவும் அது.

இ-ள்: பனையின்முன்னர் அட்டு வருகாலை-மேற்கூறிய வழியே யன்றிப் பனை என்னும் சொல்லின் முன்னர் அட்டு என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து, நிலை இன்றாகும் ஐ என் உயிர்-நிற்றல் இன்றாம் ஐ என்னும் உயிர்; ஆ வயின் ஆன ஆகாரம் வருதல்-அவ்விடத்து ஆகாரம் வந்து அம்மெய்மேல் ஏறி முடிக எ.று.

எ-டு: பனாஅட்டு என வரும்.

'ஆவயின்' என்றதனால், விச்சாவாதி என்றாற்போல்வன வற்றது வேற்றுமை முடிபுகொள்க.

(வி-ரை) விச்சாவாதி என்றாற்போல்வனவற்றது முடிபை மேல் 289-ஆம் நூற்பாவில் உரையாசிரியர் அமைக்கின்றாராதலின், ஈண்டும் அதனை அமைப்பது பொருந்துவதன்றாம். ஆனால் நச்சினார்க்கினியர் இம்முடிபை இந்நூற்பாவில் முடித்துள்ளார். அவ்வுரையை நோக்கியவர்கள் தவறாக இந்நூற்பாவில் உரையாசிரியர் உரையாக அமைத்து விட்டனர் போலும்!

பனாட்டு – பனம்பழத்தினால் அடப்பட்டது. பனம்பழத்தை அவித்து, அதிலிருந்து பிழிந்தெடுத்த சாற்றினைக் காய்ச்சிய கட்டியைப் பனாட்டு என்பர். இது யாழ்ப்பாணத்து வழக்கு. இனிப் பதனீரைக் காய்ச்சி உண்டாக்கும் பனை வெல்லத்தைப் பனாட்டு என்பாரும் உளர். (82)

286. கொடிமுன் வரினே ஐயவண் நிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி.

இதுவும் அது.

இ-ள்: கொடிமுன் வரின் – கொடி என்னும் சொல் பனை என்னும் சொல்முன்னர் வரின், ஐ அவண் நிற்ப வல்லெழுத்து மிகுதி கடிநிலை இன்று–[1]மேற் (284) கெடுக்க எனப்பட்ட ஐகாரம் ஆண்டுக் கெடாதே நிற்ப வல்லெழுத்து மிகுதி நீக்கும் நிலைமை யின்று எ.று.

எ-டு: பனைக்கொடி என வரும்.

'கடிநிலை' என்றதனான், இவ்விரற்றுன் எடுத்தோத்தானும் இலேசினானும் அம்முச்சாரியையும் பிறசாரியையும் பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. இன்னும் இதனானே, உருபிற்குச் சென்ற சாரியை பொருட்குச் சென்றவழியும் இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

1. 'மேல் கெடுமெனப்பட்ட' என்பதும் பாடம்.

எ-டு: பனையின் காய், அரையின்கோடு, ஆவிரையின்கோடு எனவும்; விசையின்கோடு, ஞெமையின் கோடு, நமையின்கோடு எனவும்; தூதுணையின்காய், வழுதுணையின்காய் எனவும்; வழையின் கோடு, வழையின் பூ எனவும் வரும்.

'அவண்' என்றதனால், பனைத்திரள் என வல்லெழுத்துப் பேறும் கொள்க.

(வி-ரை) 'பனைத்திரள், பனந்திரள் என்னும் உறழ்ச்சி முடிபு தொகைமரபினுள் புறனடையால் (172) கொள்க: அல்வழியுமாதலின். அன்றி ஈண்டு 'அவண்' என்றதனால் கொள்வாரும் உளர்' என்ற தொடர் நச்சினார்க்கினியர் உரையில் காணப்படுகின்றது. இத்தொடர் உரையாசிரியர் உரையை நினைவு கொண்டே எழுந்ததாகும் என்பது தெளிவு. ஆதலின், ஈண்டு 'அவண்' என்றதனால் பனைத்திரள் என வல்லெழுத்துப் பேறும் கொள்க என்ற தொடரில், 'பனந்திரள் என மெல்லெழுத்துப் பேறும்' என்ற தொடர் விடுபட்டிருக்க வேண்டுமென நினைவ இடந்தருகின்றது. அன்றியும் தொல்காப்பியத்தையும், உரை யாசிரியர் உரையையும் பெரிதும் தழுவியே நன்னூலார் தம் நூலை யாத்துள்ளனர் என்பது இருநூலையும் ஒத்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும். நன்னூலில் 'பனைமுன் கொடிவரின்' என்னும் நூற்பாவில் 'திரள்வரின் உறழ்வும்' என்ற தொடர் காணப் படுகின்றது. அத்தொடர் ஈண்டு 'அவண்' என்பதால் உரை யாசிரியர் கூறிய கூற்றை நோக்கியே எழுந்ததாகும். ஆதலின் 'பனந்திரள் என மெல்லெழுத்துப் பேறும் கொள்க' என்ற தொடரும் ஈண்டிருக்க வேண்டும் என உறுதியாகக் கொள்ளலாம்.

284, 285, 286 ஆகிய மூன்று நூற்பாக்களையும், ஈண்டு 'அவண்' என்பதாற் கூறப்பட்ட உரையையும் தழுவியே நன்னூலார், 'பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின், ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும், அட்டுறின் ஐகெட்டு அந்நீள்வு மாம் வேற்றுமை' (உயிரீற்றுப்-53) என யாத்தனர். (83)

287. திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன.

இஃது, இயைபு வல்லெழுத்தினோடு சாரியைப்பேறும் வல் லெழுத்து விலக்கிச் சாரியைப்பேறும் கூறுகின்றமையின் எய்தியதன் மேற் சிறப்பு விதியும், எய்தியது விலக்கிப் பிறிது விதியும் வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன—ஐகார விற்றுத் திங்களை உணர நின்ற பெயரும் அவ்விற்று நாள் உணர நின்ற பெயரும் முன் இகர ஈற்றுத் திங்களும் (249) நாளும் (248) கிளந்த தன்மையவாய் இக்கும் ஆனும் பெற்று முடியும் எ-று.

எ-டு: சித்திரைக்குக் கொண்டான், கேட்டையாற் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும்.

நாள் முன்கூறுது திங்கள் முன்கூறியவதனால், கரியவற்றுக் கோடு எனவும்; அவையத்துக்கொண்டான் எனவும்; வழைங்கோடு, வழைக்கோடு எனவும்; கலங்கோடு, கலக்கோடு எனவும் இவ் விற்று முடியாதனவெல்லாம் கொள்க.

(விரை) 248-ஆம் நூற்பாவில் நாட்பெயரையும், 249-ஆம் நூற்பாவில் திங்கட்பெயரையும் முன்பு கூறியுள்ளார் ஆசிரியர். ஈண்டு அவற்றை முன்பின்னாக மாற்றிக் கூறியது கொண்டு சில சொற்களுக்கு அமைதி கூறுகின்றார் உரையாசிரியர். நச்சினார்க் கினியரும் இங்ஙனமே கூறுவர். (84)

288. மழையென் கிளவி வளியியல் நிலையும்.

இஃது, இயைபு வல்லெழுத்தினோடு அத்துப்பேறும் வல் லெழுத்து விலக்கி இன்னும் வருக்கின்றமையின் எய்தியதன்மேற் சிறப்பும், எய்தியது விலக்கிப் பிறிதுவிதியும் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மழை என் கிளவி வளி இயல் நிலையும்—மழை என்னும் ஐகாரவிற்றுச்சொல் இகரவிற்று வளி என்னும் சொல் (243) அத்தும் இன்னும் பெற்று முடிந்த இயல்பின் கண்ணே நின்று முடியும் எ-று.

எ-டு: மழையத்துக் கொண்டான், மழையிற் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும். (85)

289. செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்
ஐயென் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்
டகாரம் ணகார மாதல் வேண்டும்.

இஃது. இவ்விற்றுள் ஒன்றற்கு அல்வழிக்கண் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: செய்யுள் மருங்கின் வேட்கை என்னும் ஐ என் இறுதி-செய்யுளிடத்து அல்வழிக்கண் வேட்கை என்னும் ஐகார வீற்றுச் சொல், அவா முன்வரின்-அவா என்னும் சொல் தனக்கு [1]முன்வரின், மெய்யொடும் கெடுதல் என்மனார் புலவர்-அவ் ஐகாரம் தான் ஊர்ந்த மெய்யோடுங்கூடக் கெடுகவென்று சொல்லுவர் புலவர்; டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும்-அவ் விடத்து நின்ற டகாரவொற்று ணகாரவொற்றாய்த் திரிந்து முடிதல் வேண்டும் எ.று.

எ-டு: 'வேணவா நலிய வெய்ய வுயிரா' (நற்-91) என வரும்.

இதனை உம்மைத்தொகையாகக் கொள்க. அவாவென்பது அவ்வேட்கையின் மிகுதி.

இவ்வல்வழியை வேற்றுமை முடிபிற்கு முன் கூறுதலால், விச்சாவாதி என்றாற்போல வரும் உம்மைத்தொகை அல்வழி முடியும், பாறங்கல் என இருபெயரொட்டு அல்வழி முடியும் கொள்க.

(வி-ரை) வேட்கை-பொருள்கள்மேல் தோன்றும் பற்றுள்ளம். அவா- அப்பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன்மேல் நிகழும் ஆசை

---

1. 'முன்னர்' என்பதும் பாடம்.

வேட்கையால் உண்டாகிய அவா என வேற்றுமை முடிபு ஆக்குவர் நச்சினார்க்கினியர். (86)

290. ஓகார இறுதி ஏகார இயற்றே.

இஃது, ஓகாரவீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஓகார இறுதி ஏகார இயற்று-[1]ஓகாரவீற்று அல்வழிப் பெயர்ச்சொல் ஏகாரஈற்று (275) அல்வழி இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: ஒக்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும். (87)

291. மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது, இவ்வீற்று இடைச்சொல் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும் – மாறு பாட்டினைக் கொண்ட எச்சப்பொருண்மையினை யுடைய ஓகாரமும், வினாப்பொருண்மையை யுடைய ஓகாரமும், ஐயப்பொருண்மையினை யுடைய ஓகாரமும், கூறிய வல்லெழுத்து இயற்கைஆகும்–முன் பெயர்க்குக் கூறிய வல்லெழுத்தன்றி இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: யானோகொண்டேன் எனவும், நீயோ கொண்டாய் எனவும், பத்தோ பதினொன்றோ எனவும் வரும்.

'கூறிய' என்றதனால், பிரிநிலையும், தெரிநிலையும், சிறப்பும், எண்ணும், ஈற்றசையும் இயல்பாய் முடிதல் கொள்க.

எ-டு: அவனோகொண்டான் எனவும், நன்றோ தீதோவன்று எனவும், ஓஒ கொண்டான் எனவும், 'குன்றுறழ்ந்த களிறென்கோ கொய்யுளைய மாவென்கோ' (புறம்-387) எனவும், 'யானோதேறேன்' (குறந்-21) எனவும் வரும். (88)

292. ஒழிந்ததன் நிலையும் [2]ஒழிந்தவற் றியற்றே.

1. 'ஓகார ஈற்றுப் பெயர்ச்சொல்' என்பதும் பாடம்.
2. 'மொழிந்தவற் றியற்றே' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இதுவும் அது.

இ-ள்: ஒழிந்ததன் நிலையும் ஒழிந்தவற்று இயற்று-ஒழியிசை ஒகாரத்ினது நிலையும் மேற்சொல்லியொழிந்த ஒகாரங்களின் இயல்பிற்றாய் இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: கொளலோ கொண்டான் என வரும்.

(வி-ரை) 276-ஆம் நூற்பாவையும், இந்நூற்பாவையும் இணைத்தே நன்னூலாரும் 'இடைச்சொல் ஏஒ முன்வரின் இயல்பே' (உயிரீற்றுப்-51) என்றனர். (89)

293. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே
ஒகரம் வருதல் ஆவயி னான.

இஃது, அவ்விற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - ஒகார விற்று வேற்றுமைக்கண்ணும் 'அவ்வோகாரவிற்று (290) அல் வழியோடொத்து வல்லெழுத்துப் பெற்றுப் புணரும்; ஆவயின் ஆன ஒகாரம் வருதல்-அவ்விடத்து ஒகாரம் வருக எ.று.

எ-டு: ஓஒக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவரும். (90)

294. இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்.

இஃது, எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்: இல்லொடு கிளப்பின் இயற்கை ஆகும் - ஒகார விற்றுக் கோ என்னும் மொழியினை இல் என்னும் வருமொழியொடு சொல்லின் ஒகாரம் மிகாது இயல்பாய் முடியும் எ. று.

எ-டு: கோஇல் என வரும்.

நிலைமொழி ஒகரவெழுத்துப்பேறும் வரையாது கூறினவழி நான்கு கணத்துக்கண்ணும் செல்லுமென்பதனாற் பெற்றும்.

கோவென்றது உயர்திணைப் பெயரன்றோவெனின், கோவந்தது என அஃறிணையாய் முடிதலின் அஃறிணைப்பாற் பட்டது போலும்.

(வி-ரை) அஃறிணைப்பாற்பட்டது போலும் என ஐயுற்றுரைத்தலைத நச்சினார்க்கினியர் துணிவாக வுரைப்பர். அஃறிணையென்றது அஃறிணைப்பாற்பட்டது என்றார், கோ என்பது சொல்லால் அஃறிணையாயும் பொருளால் உயர்திணையாயும் இருத்தலின். (91)

295. உருபியல் நிலையும் மொழியுமா ருளவே
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது, அவ்விற்றிற் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: உருபுஇயல் நிலையும் மொழியுமார் உள-அவ்விற்றுட் சில உருபு புணர்ச்சியது இயல்பிலே (181) நின்று ஒன்சாரியை பெற்று முடியும் மொழிகளும் உள; ஆ வயின் வல்லெழுத்து இயற்கை ஆகும் - அவ்விடத்து வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும் எ. று.

எ-டு: கோஒன்கை; செவி, தலை, புறம் என வரும்.

இதனானும் பெற்றும், சாரியைப்பேறு வருமொழி வல்லெழுத்து விலக்காமை.

(வி-ரை) இதனானும் என்னும் உம்மை 254, 264 ஆம் நூற்பாக்களைத் தழுவும். (92)

296. ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே
அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்
செவ்வி தென்ப சிறந்திசி னோரே.

இஃது, ஒளகார ஈறு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஒளகார இறுதி பெயர்நிலை முன்னர் அல்வழியானும் வேற்றுமைக்கண்ணும் வல்லெழுத்து மிகுதல் வரைநிலை இன்று- ஒளகாரவீற்றுப் பெயர்ச்சொல் முன்னர் வல்லெழுத்து முதல்மொழி வரின் அவை அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்து மிக்குமுடிதல் நீக்கும் நிலையின்றும்; அ இரு ஈற்றும் உகரம் வருதல் செவ்விது என்ப சிறந்திசினோர் - அவ்விருகூற்று முடிபின்கண்ணும் நிலைமொழிக்கண் உகரம் வந்து முடிதல் செவ்விதென்று சொல்லுவர் சிறந்தோர் எ. று.

எ-டு: கௌவுக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்; கௌவுக் கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

'செவ்விது' என்றதனான், மென்கணத்துக்கண்ணும் இடைக் கணத்துக்கண்ணும் இருவழியும் உகரப்பேறு கொள்க.

எ-டு: கௌவு ஞான்றது, கௌவுஞாற்சி எனவும்; கௌவு வலிது, கௌவு வலிமை எனவும் வரும்.

'நிலை' என்றதனால், கௌவின் கடுமை என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி, இயைபு வல்லெழுத்து வீழ்வு கொள்க.

(வி-ரை) உயிர் எழுத்துக்களுள் இகரம், ஐகாரம், எகரம், ஒகரம் நீங்கலாக ஏனைய எழுத்துக்கள் எல்லாம் அல்வழி, வேற்றுமை ஈரிடத்தும் வல்லெழுத்து மிக்குமுடியும். 204, 217, 222, 226, 250, 253, 255, 260, 265, 267, 275, 277, 290, 293, 296, - ஆம் நூற்பாக்களால் இவ்வுண்மை புலனாகும். இகர ஐகாரம் வேற்றுமைக்கண் வல்லெழுத்துப் பெற்று முடியும் என்பதை 236, 281 ஆகிய நூற்பாக்களால் அறியலாம். எகர ஒகரம் பெயர்க்கு ஈருகாவேனும் முன்னிலை வினைக்கண் வரும்பொழுது வல்லெழுத்துப்

பெற்று முடியும். இதனை 274-ஆம் நூற்பாவால் அறியலாம். இவையன்றி 205, 223, 237, 240, 252, 256, 266 ஆகிய நூற்பாக்களாலும் வல்லெழுத்து மிகும் உயிரீற்றுச் சொற்களை ஆசிரியர் கூறியுள்ளார். இவற்றையெல்லாம் தொகுத்தே நன்னூலாரும், 'இயல்பினும் விதியினும் நின்றவுயிர்முன் கசதப மிகும்வித வாதன மன்னே' (உயிரீற்றுப்-15) என ஒரே நூற்பாவில் கூறினர். இந்நுண்மை பாராட்டுதற்குரியது. (93)

உயிர்மயங்கியல் முற்றிற்று.

---o---

9

புள்ளி மயங்கியல்

பொருளமைப்பு

இதுகாறும் உயிரீறு நின்று வருமொழிகளோடு புணருமாற்றை உணர்த்திய ஆசிரியர், இனிப் புள்ளியீறு நின்று வருமொழிகளோடு புணருமாற்றை இவ்வியலில் உணர்த்துகின்றாராதலின் மேலதனோடு இயைபுடைத்தாயிற்று.

மொழிக்கு ஈறாகும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள ஆகிய பதினொரு புள்ளியீறுகளும் பெரும்பாலும் வன்கணத்தொடும் சிறுபான்மை ஏனைக்கணத்தொடும் புணருமாற்றை இவ்வியல் கூறுதலின் இது 'புள்ளி மயங்கியல்' எனப் பெயர் பெற்றது.

1. ஞகர ஈறு:

ஞகரத்தை இறுதியாகவுடைய தொழிற் பெயர்கள், வேற்றுமை அல்வழி ஆகிய இருவழியிலும் வல்லெழுத்தொடு புணரின் உகரம் பெற்றுப் பின்பு வல்லெழுத்து மிக்கு முடியும். ஏனைய மென்கணமும் இடைக்கணமும் வரின் உகரம் மட்டும் பெற்று நிற்கும்.

2. ணகர ஈறு:

ணகர ஈற்றுப் பெயர் வல்லெழுத்தொடு புணரின் டகாரமாகும். ஆண், பெண் என்னும் பெயர்கள் வல்லெழுத்தொடு புணரின்

இயல்பாய் முடியும். 'ஆண்' என்னும் மரப்பெயர் வல்லெழுத்தொடு புணரின் அம்முச்சாரியை பெறும். அல்வழியில் உணவுப் பெயராகிய 'எண்' முன் வன்கணம் வரின் டகாரமாய்த் திரியும். ணகார ஈற்றுத் தொழிற்பெயரெல்லாம் வன்கணத்தொடு புணரின் வல்லெழுத்தும் உகரமும் பெறும். மென்கணத்தொடும், இடைக் கணத்து வகரத்தொடும் புணரின் உகரம் பெறும். ணகார ஈற்றுக் கிளைப் பெயரெல்லாம் வன்கணத்தொடு புணரின் இயல்பாய் முடியும். 'முரண்' என்னும் பெயர் வன்கணத்தொடு புணரின் அல்வழிக்கண் இயல்பாயும், வேற்றுமைக்கண் திரிந்தும் முடியும்.

செய்யுள் முடிபு: ஆகாயத்தை உணர்த்தும் 'விண்' என்னும் பெயர், தொழிற் சொல்லோடு புணர்வுழி அத்துச்சாரியை பெற்று வருதலும் உண்டு; பெறாது வருதலும் உண்டு.

3. நகர ஈறு:

நகர ஈறு அல்வழிக்கண் வல்லெழுத்தொடு புணரின் உகரம் பெற்றுப் பின்பு வல்லெழுத்துப் பெற்று மிக்கு முடியும். மென் கணமும் இடைக்கணமும் வரின் உகரம் பெற்று நிற்கும். வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணுயின் உகரங்கெட அகரம் பெறும் வெரிந் என்னும் சொல் வன்கணத்தொடு புணர்வுழி இறுதி நகரங்கெட்டு மெல்லெழுத்துப் பெறும்; அன்றி வல்லெழுத்தும் பெறும்.

4. மகர ஈறு

மகர விற்றுப்பெயர் வேற்றுமைப் புணர்ச்சிக் கண்ணுயின் இறுதி மகரங்கெட்டு வந்த வல்லெழுத்து மிக்கு முடியும். அப் பெயர்களின் முன்னர் அகர ஆகாரம் வரின் இறுதி மகரம் கெடுவதுடன், அயல் நின்ற அகரம் நீண்டு முடிதலும் உண்டு. ஒரோ வழி நீண்டு முடியாதிருத்தலும் உண்டு. சில மகரவிற்றுப் பெயர்கள் வன்கணத்தொடு புணர்வுழு வல்லெழுத்தேயன்றி மெல் லெழுத்துப் பெறுதலும் உண்டு. 'இல்லம்' என்னும் மரப்பெயர் மகரங்கெட்டு மெல்லெழுத்து மிக்குமுடியும். 'எல்லாரும்' என்னும்

சொல் வன்கணத்தொடு புணர்வுழி இறுதி மகர வொற்றும் உகரமும் கெட்டு ஆண்டு ரகர வொற்று நிற்க வருமொழியொடு இயைந்தபின் உம்முச்சாரியை பெற்று முடியும். 'எல்லீரும்' என்னுஞ்சொல் வன்கணத்தொடு புணர்வுழி இடையில் நும் சாரியையும், இறுதியில் உம் சாரியையும் பெற்று முடியும்.

'தாம், நாம்' என்பன வன்கணத்தொடு புணர்வுழி தம், நம் எனக்குறுகி மகரம் கெட்டு மெல்லெழுத்து மிக்கு முடியும். 'யாம்' என்பது வன்கணத்தொடு புணர்வுழி எம் எனத் திரித்து மகரம் கெட்டு மெல்லெழுத்து மிக்கு முடியும். உயர்திணைக்கண் வரும் 'எல்லாம்' என்பது வன்கணத்தொடு புணர்வுழி இடையில் நம்மும் இறுதியில் உம்மும் பெற்று முடியும். நம் என்பது வன்கணத் தொடு புணரின் மகரங்கெட்டு மெல்லெழுத்து மிகும்.

மகரவீற்றுச் சொற்கள் அல்வழியில் எல்லாம், வன்கணத் தொடு புணரின் இறுதி மகரவொற்று மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும் 'அகம்' என்னும் சொல்லின் முன், கை என்னும் சொல் வரின் நிலைமொழியில் அகரம் மட்டும் நிற்க ஏனைய கெட்டு மெல் லெழுத்து மிக்கு முடியும். அகம் என்னும் சொல் கெடாது நிற்பக் கையென்னும் சொல்லொடு புணரின் மகரவொற்று நகரவொற் றாகத் திரித்து முடியும். 'இலம்' என்னும் சொல் படு என்னும் சொல்லொடு புணர்வுழி, நிலைமொழியிலுள்ள மகர வொற்றுத் திரிதலும் கெடுதலும் இன்றி இயல்பாய் நிற்கும். 'ஆயிரம்' என்னுஞ்சொல் தனித்தேனும் அன்றி அடையடுத்தேனும் நிற்ப, அளவுப்பெயரிலும் நிறைப்பெயரிலும் உள்ள வல்லெழுத்து வரின் மகரம் கெட்டு வல்லெழுத்து மிக்கும், இயல்புணம் வந்துழி மகரம் கெட்டும் முடியும். 'எல்லாரும், எல்லீரும், தாம், யாம், நாம்' என்னும் பெயர்கள் அல்வழியில் வன்கணம் வரின் இயல் பாய் முடியும். இவற்றுள் எல்லாம் என்பதன்முன் வல்லெழுத்தே யன்றி மெல்லெழுத்து மிக்கு முடிதலும் உண்டு. 'நும்' என்பதன் முன்பு வல்லினம் வருமாயின் நிலைமொழியிலுள்ள உகரம் கெட ஈகாரம் வரும். அவ்விடத்து நின்ற மகரவொற்றுக்கெட இடையில் இகரமும், இறுதியில் ரகரவொற்றும் வந்து நீயிர்

என்றாகும். 'ஈம், கம், உரும்' என்பன வன்கணம் வரின் உகரமும் வல்லெழுத்தும், இயல்பு கணம்வரின் உகரமும் பெற்று முடியும்

'எல்லாம்' என்பது வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணாயின் வற்றும் உம்மும் பெற்று நிற்கும். அல்வழியாயின் உம்முப்பெற்று நிற்கும். மகரவீற்றுத் தொழிற் பெயரெல்லாம் வேற்றுமை, அல்வழி ஆகிய ஈரிடத்தும் வன்கணம் வரின் உகரமும், வல்லெழுத்தும், இயல்புகணம் வரின் உகரமும் பெற்று முடியும்.

சாரியை பெறுவன: 'ஆயிரம்' என்னும் எண்ணுப் பெயர் தனித்தோ அன்றி அடையடுத்தோ நிற்ப அதற்குக் கீழாய எண்ணுப் பெயர் வருமொழியாய் வரின் இடையில் அத்துச் சாரியை தோன்றும். 'ஈம், கம்' என்பனவற்றின் முன் வன்கணம் வரினும் ஏனைய இயல்புகணம் வரினும் இடையில் 'அக்கு' என்னும் சாரியை தோன்றும். மகரவீற்று நாட்பெயர் முன் (மகம், ஓணம்) வன்கணம் வரின், இடையில் அத்துச் சாரியையும், ஆன்சாரியையும் வரும். அவ்விடத்து நிலைமொழி ஒற்றும் கெடும்.

5. னகர ஈறு:

னகர ஈற்றுப் பெயர் முன்னரும், 'மன், சின், ஆன், ஈன், பின், முன்' ஆகிய பெயர்களின் முன்னரும், இவ்வீற்று வினையெச்சத்தின் முன்னரும், சுட்டை முதலாகவுடைய வயின் (அவ்வயின், இவ்வயின், உவ்வயின்) என்ற சொற்களின் முன்னரும் வன்கணம்வரின் னகரம் றகரமாய்த் திரியும். 'குயின்' என்னும் சொல்முன் வல்லினம் வரின் இயல்பாய் முடியும். மரமல்லாத 'எகின்' என்னும் சொல்முன் வல்லினம் வரின் அகரம் பெற்றும், வல்லெழுத்து மிக்கும் முடியும். னகார ஈற்றுக்கிளைப் பெயரெல்லாம் வன்கணம் வந்துழி இயல்பாய் முடியும்.

'மீன்' என்னும் சொல்முன் வல்லெழுத்து வரின் இயல்பாயும், னகரம் றகரமாய்த் திரிந்தும் முடியும். 'தேன்' என்னும் சொல் முன் வல்லெழுத்து வரின் முற்கூறியவாறு இயல்பாயும், னகரம் றகரமாய்த் திரிந்தும் வருதலேயன்றி, வல்லெழுத்து மிக்கு முடிதலும் உண்டு; அன்றி மெல்லெழுத்து மிக்கு முடிதலுமுண்டு.

அவ்விடத்து நிலைமொழியிலுள்ள னகரம் கெடும். தேன் என்னும் சொல்முன் மென்கணம் வரின் நிலைமொழியிலுள்ள னகரம் கெடுதலும் உண்டு; கெடாது நிற்றலும் உண்டு. இத்தேன் என்னும் சொல்முன் இறால் என்னும் சொல் வரின் நிலைமொழியிலுள்ள னகரம் கெடாது இயல்பாய் முடிதலும் உண்டு. அன்றி நிலைமொழி இறுதியிலுள்ள னகரம் கெட அவ்விடத்துத் தகர வொற்று நிற்றலும் உண்டு. 'மின், பின், பன், கன' ஆகிய நான்கு சொற்களும் வேற்றுமை, அல்வழி ஆகிய ஈரிடத்தும் வன்கணம் வர உகரம் வல்லெழுத்தும் பெற்றும், மென்கணமும், இடைக்கணத்து வகரமும் வர உகரமும் பெற்றும் முடியும். இவற்றுள் 'கன' என்னும் சொல் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் அகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும். னகர ஈற்று இயற்பெயர் (சாத்தன், கொற்றன்) முன் தந்தை என்னும் சொல்வரின், நிலைமொழியிலுள்ள தகர வொற்றுக் கெட அதன் மேல் ஏறி நின்ற அகரம் கெடாது நிற்கும். நிலைமொழியிலுள்ள அன்கெட சாத்தந்தை என்றாகும். 'ஆதன், பூதன்' ஆகிய சொற்கள் வருமொழிகளாக நிற்க வருமொழியில் தந்தை என்னும் சொல்வரின், நிலைமொழியில் முதற்கண் உள்ள ஆ, பூ என்னும் எழுத்துக்கள் மட்டும் நிற்ப ஏனைய கெட்டும், வருமொழியிலுள்ள தகரம் கெட்டும் ஆந்தை, பூந்தை யென முடியும். 'சாத்தன், கொற்றன்' முதலிய இயற்பெயர்கள் அடையடுத்து நிற்ப வருமொழியில் தந்தை என்னும் சொல்வரின் இயல்பாய் முடியும். 'தான், பேன், கோன்' என்னும் பெயர்கள் தந்தை என்னும் பெயரொடும், மக்கள் முறைமையுடைய பெயரொடும் புணருமிடத்து இயல்பாய் முடியும். 'தான்' என்னும் பெயரும் 'யான்' என்னும் பெயரும் வன்கணத்தொடு புணர்வுழி முறையே 'தன்' எனவும் 'என்' எனவும் திரியும். இவ்விரு பெயர்களும் அல்வழியில் குறுகுதலும் திரிதலும் இன்றி இயல்பாய் முடியும். 'அழன்' என்னும் சொல் வன்கணத்தொடு புணர்வுழி நிலைமொழியிலுள்ள னகரம் கெட்டு வல்லெழுத்து மிக்கு முடியும்.

சாரியை பெறுவன: 'எகின்' என்னும் மரப்பெயர் வன்கணத்தொடு புணர்வுழி அம்சாரியை பெறும். *சாத்தன்,* கொற்றன்

என்னும் இயற்பெயர் முன் மகனாகிய முறைப் பெயர் வரின் நிலை மொழியிறுதியிலுள்ள அன்கெட்டு அம்முச்சாரியை பெறும்.

மருஉ முடிபு: 'முன்' என்னும் சொல்முன் 'இல்' என்னும் சொல்வரின், இடையே றகர வொற்றுத் தோன்ற முன்றில் என்றாகும்.

செய்யுள் முடிபு: 'பொன்' என்னும் சொல்முன் வன்கணம் வரின், நிலைமொழியிலுள்ள னகரம் கெட்டு அவ்விடத்து லகரமும் மகரவொற்றும் தோன்றும்.

6. யகர ஈறு:

யகர ஈற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியிடத்து வன்கணம் வரின் வந்த வல்லெழுத்து மிக்கு முடியும். 'தாய்' என்னும் சொல்முன் வன்கணம் வரின் இயற்கையாய் முடியும். தாய் என்னும் சொல் மகன் என்னும் சொல்லை அடைமொழியாகக் கொண்டு நிற்ப, வருமொழியில் அம்மகனது வினையாகிய கலாம் முதலிய சொற்கள் வரின் இடையில் வல்லெழுத்து மிக்கு முடியும். யகர ஈற்றுச் சொற்களில் சிலவற்றின் முன்னர் வன்கணம் வந்துழி வல்லெழுத்து மிக்கு முடிதலேயன்றி மெல்லெழுத்து மிக்கு முடிதலும் உண்டு. அல்வழியில் யகர ஈற்றுச் சொற்கள் வன்கணத் தொடு புணர்வுழி இயல்பாய் முடியும்.

7. ரகர ஈறு:

ரகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும். 'ஆர், வெதிர், சார், பீர்' ஆகிய சொற்களின் முன்னர் வன்கணம் வந்துழி இடையே மெல்லெழுத்து மிக்கு முடியும். இவற்றுள் 'சார்' என்னும் சொல்முன் காழ் என்னும் சொல்வரின் இடையே வல்லெழுத்து மிக்கு முடியும். 'பீர்' என்னும் சொல்முன் வன் கணம் வந்துழி அம்முப்பெற்று முடியும்.

8. லகார ஈறு:

லகார ஈற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வன்கணம் வந்துழி லகரம் றகரமாய்த் திரிந்து முடியும். மென் கணம் வரின் லகரம் னகரமாய்த் திரியும்.

லகார ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் வன்கணம் வந்துழி இயல்பாயும், லகரம் றகரமாய்த் திரித்தும் முடியும். வருமொழி யில் தகரம் வந்துழி லகரம் ஆய்தமாகத் திரிதலும் உண்டு. நெட்டெழுத்தின் பின்நின்ற லகரவொற்று வன்கணம் வர இயல் பாய் முடியும். 'நெல், செல், கொல், சொல்' என்பன வன் கணம் வரின் லகரம் றகரமாய்த் திரிந்து முடியும். இன்மைப் பொருளையுணர்த்தும் 'இல்' என்னும் சொல், வன்கணத்தொடு புணர்வுழி அவ்வல்லெழுத்து மிக்கு முடிதலும், ஐகாரம் இடையே வருதலும், அவ்விரண்டுமின்றி இயல்பாய் முடிதலும், ஆகாரம் வந்து முடிதலும் ஆகிய இந்நான்கு முடிபினையும் பொருந்தும். 'வல்' என்னும் சொல் முன்னரும், ஏனைய தொழிற் பெயர் முன்னரும் வன்கணம் வரின் உகரமும் வல்லெழுத்தும், மென் கணமும் இடைக்கணத்து வகரமும் வரின் உகரமும் பெற்று முடியும். அவ் வல் என்னும் சொல்முன் நாய், பலகை என்னும் சொற்கள் வரின் உகரம் கெடாது நிற்றலேயன்றிக் கெட்டு முடியவும் பெறும். அங்ஙனம் உகரம் கெடுமிடத்து அகரம் பெற்று முடியும்.

சாரியை பெறுவன: 'பூல், வேல், ஆல்' ஆகிய பெயர்கள் வன்கணத்தொடு புணர்வுழி இடையே அம்முச் சாரியை பெற்று முடியும். வெயில் என்னும் சொல் வன்கணத்தொடு புணர்வுழி அத்துச்சாரியையும் இன்சாரியையும் பெறும்.

9. வகர ஈறு:

சுட்டுமுதல் வகரம் (அவ், இவ், உவ்) அல்வழிக்கண் வன் கணத்தொடு புணர்வுழி அவ்வகரம் ஆய்தமாகத் திரிந்தும், மென் கணத்தொடு புணர்வுழி அம்மெல்லெழுத்தாகத் திரிந்தும், ஏனைக்

கணங்களுடன் புணர்வுழி இயல்பாயும் முடியும். வகர ஈற்றுத் தொழிற் பெயர்கள் வன்கணத்தொடு புணர்வுழி உகரமும் வல் லெழுத்தும் பெற்றும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத் தொடும் புணர்வுழி உகரம் பெற்றும் முடியும்.

சாரியை பெறுவன: சுட்டு முதல் வகரம் வேற்றுமைக்கண் வன்கணத்தொடு புணர்வுழி வற்றுச் சாரியை பெற்று முடியும்.

10. ழகர ஈறு

ழகர ஈற்றுப் பெயர் வன்கணத்தொடு புணரின் வல்லெழுத்து மிக்கு முடியும். 'பாழ்' என்னும் சொல் வன்கணத்தொடு புணர் வுழி வல்லெழுத்தேயன்றி மெல்லெழுத்தும் பெறும். 'ஏழ்' என்னும் எண்ணுப் பெயர், அளவுப் பெயர் நிறைப் பெயர் எண்ணுப்பெயர்களோடு புணர்வுழி, நிலைமொழியிலுள்ள ஏகாரம், எகரமாகக் குறுகி, அடுத்து நின்ற பகரவொற்றில் உகரம் ஏறி முடியும். ஏழ் என்னும் சொல் பத்து என்பதனோடு புணரின் நிலைமொழி மேற்கூறிய விகாரம் பெற்று வருமொழியிலுள்ள இடையொற்று ஆய்தமாகத் திரியும். அச்சொல் ஆயிரத்தோடு புணரின் நெடுமுதல் குறுகி உகரம் பெறாது முடியும். அச்சொல் நூறாயிரம் என்னும் பெயரோடும், தாமரை, வெள்ளம் ஆம்பல் என்னும் பெயர்களுடனும், உயிர்க்கணத்தொடும் புணரின் இயல் பாய் முடியும். 'கீழ்' என்னும் சொல் வன்கணத்தொடு புணரின் வல்லெழுத்துப் பெற்றும், பெறாதும் உறழ்ச்சியாய் முடியும்.

சாரியை பெறுவன: 'தாழ்' என்னும் சொல், கோல் என்னும் சொல்லொடு புணரினும், 'தமிழ்' என்னும் சொல் வன்கணத் தொடு புணரினும் இடையே அக்குச்சாரியை பெற்று முடியும். 'குமிழ்' என்னும் சொல் வன்கணத்தொடு புணரின் மெல்லெழுத்துப் பெற்று முடிதலும் உண்டு; அம்முச்சாரியை பெற்று முடிதலுமுண்டு.

11. ளகர ஈறு

ளகர ஈற்றுப் பெயர் வேற்றுமைக்கண் வன்கணத்தொடு புணர்வுழி நிலைமொழியிலுள்ள ளகரம் டகரமாகத் திரியும். மென் கணத்தொடு புணரின் ணகரமாய்த் திரிந்து முடியும்.

ளகார ஈற்றுப் பெயர்கள் அல்வழியில் எல்லாம் வன்கணத் தொடு புணரின் இயல்பாயும் ளகரம் டகரமாகத் திரிந்தும் முடியும். வருமொழியில் தகரம் வரின் நிலைமொழியிலுள்ள ளகரம் ஆய்தமாகத் திரிதலும் உண்டு. நெடியதன் பின்னின்ற ளகர வொற்று வன்கணத்தொடு புணரின் இயல்பாயும், குறியதன் பின்னின்ற ளகரவொற்று வன்கணத்தொடு புணரின் ளகரம் டகரமாய்த் திரிந்தும் முடியும்.

ளகார ஈற்றுத் தொழிற்பெயரும் 'புள், வள்' என்ற சொற்களும், இருவழியிலும், வன்கணத்தொடு புணரின் உகரமும், வல்லெழுத்தும், மென்கணத்தொடும் இடைக்கணத்து வகரத் தொடும் புணரின் உகரமும் பெற்று முடியும். மக்கள் என்னும் பெயர் வன்கணத்தொடு புணரின் இயல்பாயும், ளகரம் டகரமாகத் திரிந்தும் முடியும்.

சாரியை பெறுவன: 'இருள்' என்னும் சொல் வன்கணத் தொடு புணரின் அத்துச் சாரியையும் இன்சாரியையும் பெற்று முடியும்.

புறனடை:

இதுகாறும் கூறிய புள்ளியீறுகள் வருமொழியொடு புணருங் கால் மேற்கூறியவாறன்றிப் பிறவாறு திரியினும் ஏற்றுக்கொள்க என்பதாம்.

9. புள்ளி மயங்கியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், புள்ளியீறு வன் கணத்தோடும் சிறுபான்மை பிறகணத்தோடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தினமையின் புள்ளிமயங்கியல் என்னும் பெயர்த்து.

297. ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே
உகரம் வருதல் ஆவயி னான.

இத்தலைச் சூத்திரம் என்நுதலிற்றோவெனின், ஞகாரஈறு வன் கணத்தோடு இருவழிக்கண்ணும் புணருமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஞகாரை ஒற்றிய தொழிற் பெயர் முன்னர் – ஞகாரம் ஈற்றின்கண் ஒற்றாக நின்ற தொழிற் பெயரின் முன்னர், அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும்–அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும், வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகும் – வல் லெழுத்து முதல்மொழி வருமொழியாய் இயையின் வல்லெழுத்து வருமொழிக்கண் மிக்கு முடியும். ஆவயின் ஆன உகரம் வருதல்– ஆண்டு நிலைமொழிக்கண் உகரம் வருக எ. று.

எ–டு: உரிஞுக் கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்; உரிஞுக் கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

(வி-ரை) ஞகரத்தை இறுதியாகவுடைய தொழிற்பெயர்கள், வருமொழியில் வன்கணம், மென்கணம், இடைக்கணம் ஆகிய மூன்று கணமும்வர, அல்வழி வேற்றுமை ஆகிய இருவழியிலும் உகரம் பெறும் என இந்நூற்பாவில் ஆசிரியர் கூறுகின்றார். இங்ஙனமே உகரம் பெறும் என நகரத்தையும் (299), ணகரத் தையும் (307), மகரத்தையும் (328, 329), லகரத்தையும் (374, 377), ளகரத்தையும் (402, 404), வகரத்தையும் (383), னகரத் தையும் (346) ஆசிரியர் கூறுகின்றார். இவற்றையெல்லாம் தொகுத்தே நன்னூலாரும்,

'ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினைநனி யவ்வல் மெய்வரின்
உவ்வுறும் ஏவ லுறுசில சில்வழி' (நன்—207)

என்றனர்.

உரிஞுதல் – தேய்த்தல். (1)

298. ஞ ந ம வ இயையினும் உகர நிலையும்.

இஃது, அவ்விறு மென்கணத்தோடும் இடைக்கணத்து வகரத் தோடும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஞ ந ம வ இயையினும் உகரம் நிலையும் – அந்த ஞகாரவிறு வன்கணமன்றி ஞ ந ம வ முதன்மொழி வருமொழி

வாய் இசையினும் நிலைமொழிக்கண் உகரம் நிலைபெற்று முடியும் எ. று.

எ-டு: உரிஞு ஞான்றது; நீண்டது, மாண்டது எனவும்; உரிஞு ஞாற்சி; நீட்சி, மாட்சி, எனவும்; உரிஞுவலிது; வலிமை எனவும் வரும்.

இடைக்கணத்து யகரத்தோடும் உயிரோடும் புணருமாறு தொகைமரபினுள் 'உகரமொடு புணரும் புள்ளி விறுதி' (21) என்பதனுட் கூறப்பட்டது. (2)

299. நகர இறுதியும் அதனோ ரற்றே.

இது, நகரவீறு மேற்கூறிய கணங்களோடு ஒருவழி முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நகர இறுதியும் அதன் ஓர் அற்று - நகர ஈற்றுப் பெயரும் மேற்கூறிய கணங்களொடு புணரும்வழி அஞ்ஞகார ஈற்றோடு ஓர் இயல்பிற்றாய் முடியும் எ. று.

எ-டு: பொருநுக் கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்; பொருநு ஞான்றது, நீண்டது, மாண்டது எனவும்; பொருநு வலிது எனவும் ஒட்டுக (3)

300. வேற்றுமைக்(கு) உக்கெட அகர நிலையும்.

இஃது, அவ்வீற்று வேற்றுமைக்கண் நிலைமொழி முடிபு வேறாய் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமைக்கு உ கெட அகரம் நிலையும்-அந்நகர வீறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் எய்திய நிலைமொழி உகரம் கெட அகரம் நிலைபெற்று முடியும் எ.று.

எ-டு: பொருநக் கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும்; பொருந ஞாற்சி; நீட்சி, மாட்சி எனவும்; பொருந வலிமை எனவும் வரும்.

'அகரம்நிலையும்' என்றது 'உகரங்கெட, என்றதனன், அவ்விரு விற்றின் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்வும் சிறுபான்மை உகரப்பேறும் கொள்க.

எ-டு: பொருநின்குறை, உரிஞின் குறை எனவும்; 'உயவல் யானை வெரிநுச் சென்றன்ன' (அகம்-65) எனவும் வரும்.

(வி-ரை) 'நவ்விரு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை' (மெய்யீற்றுப்-5) என்பர் நன்னூலாரும்.

301. வெரிந்என் இறுதி முழுதுங் கெடுவழி
வருமிடன் உடைத்தே மெல்லெழுத் தியற்கை.

இஃது, அந்நகரவீற்று ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: வெரிந் என் இறுதி முழுதும் கெடுவழி-வெரிந் என்று [1]சொல்லப்படும் நகரவீற்றுமொழி தன் ஈற்று நகரம் முன் பெற்ற அகரத்தோடு எஞ்சாமற் கெட்டவிடத்து, மெல்லெழுத்து இயற்கை வரும் இடன் உடைத்து-மெல்லெழுத்துப் பெறும் இயல்பு வந்து முடியும் இடனுடைத்து எ.று.

எ-டு: வெரிங் குறை; செய்கை, தலை, புறம் என வரும். (5)

302. ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே.

இஃது, இன்னும் அம்மொழிக்கு எய்தியது ஒரு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஆ வயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்து - அவ் வெரிந் என்னும் சொல் அவ்வாறு ஈறு கெட்டு நின்றவிடத்து மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உரித்து எ.று.

---

1. 'சொல்லப்பட்ட' என்பதும் பாடம்.

எ-டு: வெரிக் குறை; செய்கை, தலை, புறம் என வரும்.

ஞகாரவிற்றோடு நகாரவிறு ஒத்த முடிபிற்றாதலின் உடன் கூறப்பட்டது.

(வி-ரை) நெடுங்கணக்கு முறைப்படி ஞகரத்தின் பின்னர் ணகரம் கூற வேண்டும். அங்ஙனமாக நகாரஈற்று முடிபு கூறியது ஞகரத்திற்கும் நகரத்திற்கும் ஒத்த முடிபிற்றாய விதி உளவாதலே யாம். ஒத்த விதி என்றது மேல் 299-ஆம் நூற்பாவில் கூறிய விதியை யாகும். (6)

303. ணகார இறுதி வல்லெழுத் தியையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இது, ணகாரவிறு வேற்றுமைப் பொருட்கண் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ணகார இறுதி வல்லெழுத்து இயையின் - ணகார விற்றுப்பெயர் வல்லெழுத்து முதன்மொழி இயையின், டகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கு - டகாரமாய் முடியும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் எ.று.

எ-டு: மட்குடம்; சாடி, தூதை, பானை என வரும்.

(வி-ரை) ணகார ஈற்றுள் அல்வழிக்கண் நேரும் மாறுதல் களை மேல் 148-ஆம் நூற்பாவானும், ணகாரஈற்றுச் சொற்களின் முன்னர் மென்கணம் வர நிகழும் மாறுதல்களை மேல் 149-ஆம் நூற்பாவானும் ஆசிரியர் கூறினர். ஈண்டு வன்கணம் வர நேரும் மாறுதல்களைக் கூறுகின்றார். (7)

304. ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை.

இஃது, அவ்விற்று விரவுப்பெயருட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை - ஆண் என்னும் பெயரும் பெண் என்னும் பெயரும் மேல் தொகை

மரபினுள் 'மொழிமுத லாகும்' (148) என்பதன்கண் அஃறிணைப் பெயர் முடிந்த இயல்புபோலத் தாம் வேற்றுமைக்கண் இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: ஆண்கை, பெண்கை; செவி, தலை, புறம் என வரும்.

மற்றிது தொகைமரபினுள் 'அஃறிணை விரவுப்பெயர்' (சூத்திரம்-13) என்பதனுள் இயல்பாய் முடிந்ததன்றோவெனின், இவை ஆண்டு முடிந்தனபோலத் தத்தம் மரபின் வினையாற் பாலறியப்படுவன வன்றி, இருதிணைக்கண்ணும் அஃறிணையாய் முடிதலின் அவ்வஃறிணைப் பெயரது இயல்போடு மாட்டெறிந்து முடித்தான் எனக் கொள்க. இவ்வாறுதலின், ஆண்கடிது பெண் கடிது என்னும் அல்வழியும் 'மொழிமுத லாகும்' (தொகை மரபு-5) என்பதனுட் கொள்ளப்படும். (8)

305. ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே.

இது, திரிபு விலக்கிச் சாரியை வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: ஆண் மரக் கிளவி அரை மர இயற்று-ஆண் என்னும் மரத்தை உணரநின்ற பெயர்ச்சொல் அரைமரம் அம்முப் பெறும் இயல்பிற்றாய்த் (284) தானும் அம்முப் பெற்று முடியும் எ.று.

எ-டு: ஆணங்கோடு; செதிள், தோல், பூ என வரும். (9)

306. விண்ணென வருஉங் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை.

இது, செய்யுளுள் திரிபு விலக்கிச் சாரியை வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: விண் என வரும் காயப் பெயர்வயின்-விண் என்று சொல்ல வருகின்ற ஆகாயத்தை உணர நின்ற பெயர்க்கண், அத்து என் சாரியை உண்மையும் உரித்து அத்து என்னும்

சாரியை உண்டாதலும் உரித்து இல்லையாதலும் உரித்து. செய்யுள் மருங்கின் தொழில் வரு காலை - செய்யுளிடத்து வினை வரும் காலத்து எ.று.

எ-டு: விண்ணத்துக் கொட்கும் எனவும், 'விண்குத்து நீள்வரை' (நாலடி-226) எனவும் வரும்.

(வி-ரை) விண்+அத்து=விண்ணத்து. 'அத்தே வற்றே' (134) என்பதால் ஒற்றுமெய் கெடாது. 'குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும்' (161) என்பதால் ஒற்று இரட்டியது. (10)

307. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது; இவ்வீற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி உகரமும் வல்லெழுத்தும் வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: தொழிற் பெயரெல்லாம் தொழிற்பெயர் இயல- ணகாரவீற்றுத் தொழிற் பெயரெல்லாம் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஞகாரவீற்றுத் தொழிற்பெயரது இயல் பாய் (297, 298) வன்கணம் வந்தவழி வல்லெழுத்தும் உகரப் பேறும மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வந்தவழி உகரமும் பெற்று முடியும் எ.று.

எ-டு: மண்ணுக்கடிது எனவும்; மண்ணுக்கடுமை எனவும்; மண்ணுஞான்றது; ஞாற்சி எனவும்; மண்ணுவலிது; வலிமை எனவும் இருவழியும் ஒட்டுக.

'எல்லாம்' என்றதனான், தொழிற்பெயரல்லனவும் உகரமும் வல்லெழுத்தும் பெறுவன கொள்க.

எ-டு: வெண்ணுக்கரை, எண்ணுப்பாறு, மண்ணுச்சோறு என வரும்.

(வி-ரை) வெண்ணுக்கரை - வெண்ணாற்றங்கரை. எண்+ பாறு=எண்ணுப்பாறு. எண்ணேற்றிய மரக்கலம் என்பர் பாவாணர். 'தாழ்பெயல் கனைகுரல் கடுப்பப் பண்ணுப் பெயர்த்து,

(மதுரைக்-560) என்ற செய்யுள் வழக்கையும் காட்டுவர் நச்சினார்க் கினியர். (11)

308. கிளைப்பெய ரெல்லாம் கொளத்திரி பிலவே.

இஃது, இவ்விற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி இயல்பு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: கிளைப்பெயர் எல்லாம் கொள திரிபு இல - ணகர விற்றுன் ஓர் இனத்தை உணர நின்ற பெயரெல்லாம் திரிபுடைய வென்று கருதும்படியாகத் திரிதலுடையவன்றி இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: உமண்குடி; சேரி, தோட்டம், பாடி என வரும்.

'எல்லாம்' என்றதனான், இவ்விறு சாரியை பெற்று முடிவனவும் இயல்பாய் முடிவனவும் கொள்க.

எ-டு: மண்ணக்கடி, எண்ணநோலை எனவும்; பரண்கால், கவண்கால் எனவும் வரும்.

'கொள' என்றதனான், இவ்விற்று ஏழாம் வேற்றுமைப் பொருண்மை உணர நின்ற இடைச்சொல் திரிந்து முடிவன கொள்க.

எ-டு: அங்கட்கொண்டான், இங்கட்கொண்டான், உங்கட் கொண்டான் எனவும்; ஆங்கட்கொண்டான், ஈங்கட்கொண்டான், ஊங்கட்கொண்டான் எனவும்; அவட்கொண்டான், இவட் கொண்டான், உவட்கொண்டான் எனவும் ஒட்டுக. (12)

309. வேற்றுமை யல்வழி எண்ணெ னுணவுப்பெயர்
வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே.

இஃது, அவ்விற்றுள் ஒன்று அல்வழியுள் வேற்றுமை முடிபு போலத் திரிந்து முடிவது கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமை அல்வழி-வேற்றுமை அல்லாதவிடத்து, எண் என் உணவுப்பெயர் - எண் என்று சொல்லப்படுகின்ற

உணவினையுணர்த்தும் பெயர், வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்து-வேற்றுமையது திரிந்து முடியும் (303) இயல்பு நிற்றலும் உரித்து எ.று.

எ-டு: எட்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும்.

உம்மையால், எண்கடிது என்று இயல்பாதலே (148) பெரும்பான்மை. (13)

310. முரணென் தொழிற்பெயர் முதலியல் நிலையும்.

இஃது. இவ்விற்றுத் தொழிற்பெயர் ஒன்றற்குத் தொழிற் பெயர் முடிபு விலக்கி, இவ்விற்று அல்வழி முடியும் வேற்றுமை முடியும் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: முரண் என் தொழிற்பெயர் முதல் இயல் நிலையும்-முரண் என்று கூறப்படும் தொழிற்பெயர் இவ்விற்றிற்கு இரு வழியும் முன்கூறிய இயல்பும் (148), திரிபுமாகிய (303) இயல் பின்கண்ணேயே நின்று முடியும் எ.று.

எ-டு: முரண்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்; முரட் கடுமை; சேனை, தானை, பறை எனவும் வரும்.

இதனைத் 'தொழிற்பெய ரெல்லாம்' (307) என்பதன்பின் வையாத முறையன்றிய கூற்றினான், முரண்கடுமை என்னும் இயல்பும்; அரண்கடுமை, அரட்கடுமை என்னும் உறழ்ச்சியும் கொள்க. (14)

311. மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே.

இது, மகரவீற்றிற்கு மேற்கூறிய ணகரவீற்று வேற்றுமை முடிபோடு இயைய வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மகர இறுதி வேற்றுமை யாயின்-மகரவீற்றுப் பெயர்ச்சொல் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணாயின், துவரக் கெட்டு வல்லெழுத்து மிகும்-அம்மகரம் முற்றக்கெட்டு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: மரக்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

'துவர' என்றதனன், இயல்புகணத்துக்கண்ணும் உயர்திணைப் பெயர்க்கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும் மகரக்கேடு கொள்க.

எ-டு: மரஞான்; நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும்; நங்கை, எங்கை; செவி, தலை, புறம் எனவும்; நுங்கை, தங்கை எனவும் வரும். (15)

312. அகர ஆகாரம் வருஉங் காலை
ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே.

இஃது, அவ்வீற்று முடிபு வேற்றுமையுடையன கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அகரம் ஆகாரம் வருங்காலை-அகாமுதல்மொழியும் ஆகார முதல்மொழியும் வருமொழியாய் வருங்காலை, ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்து-நிலைமொழிக்கண் ஈற்றின்மேல் நின்ற அகரம் நீளாது நிற்பதேயன்றி நீண்டு முடிதலும் உரித்து எ.று.

எ-டு: மாாஅடி, குளாஅம்பல் எனவும்; மரவடி, குளவாம்பல் எனவும் வரும்.

வருமொழி முற்கூறியவதனன், இவ்வீற்றுட் பிறவும் வேறு பாட்டின் முடிபு கொள்க.

எ-டு: கோணாகோணம், கோணாவட்டம் என வரும்.

முன்னர்ச் 'செல்வழியறிதல்' (313) என்பதனால், குளாஅம்பல் என்புழி வருமொழி ஆகாரக்குறுக்கமும், கோணாகோணம் என்புழி வருமொழி வல்லெழுத்துக்கேடும் கொள்க.

(வி-ரை) 311, 312-ஆகிய இருநூற்பாக்களின் கருத்துக்களைத் தொகுத்தே நன்னூலாரும்

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும்'

(மெய்யீற்றுப்-16) என்றனர். (16)

313. மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே
செல்வழி யறிதல் வழக்கத் தான.

இஃது, இவ்விற்றுட் சிலவற்றிற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உள-மெல் லெழுத்தோடு உறழ்ந்து முடியும் மொழிகளும் உள; வழக்கத் தான செல்வழி அறிதல்-வழக்கின்கண் அவை வழங்கும் இடம் அறிக எ.று.

எ-டு: குளங்கரை, குளக்கரை; சேறு, தாது, பூமி என வரும்.

'செல்வழியறிதல்' என்றதனால், குளங்கரை, குளக்கரை என்றது போல, அல்லன ஒத்த உறழ்ச்சியல்ல வென்பது கொள்க.

'வழக்கத்தான' என்றதனான், இவ்விற்று வேற்றுமைக்கண் முடியாதன வெல்லாம் முடித்துக் கொள்க.

எ-டு: இலவங்கோடு எனவும், புலம்புக்கனனே' (புறம்-258) எனவும், சிலத்துக் கடந்தான் எனவும் வரும். (17)

314. இல்ல மரப்பெயர் விசைமர வியற்றே.

இஃது, இவ்விற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல் லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ-ள்: இல்ல மரப்பெயர் விசை மர இயற்று - இல்லம் என்னும் மரத்தினை உணர நின்ற பெயர் விசையென்னும் மரத்தின் இயல்பிற்றாய் (283) மெல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: இல்லங்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

இதன்கண் மகரக்கேடு முன்னர் 'எல்லாம்' (315) என்பதனாற் கொள்க. (18)

315. அல்வழி யெல்லாம் மெல்லெழுத் தாகும்.

இஃது, அவ்வீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அல்வழி எல்லாம் மெல்லெழுத்து ஆகும்-மகரவீறு அல்வழிக்கணெல்லாம் மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும் எ.று.

எ-டு: மரங்குறிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

'எல்லாம்' என்றதனான், இவ்வீற்று அல்வழி முடியில் முடியாதென வெல்லாம் கொள்க.

எ-டு: மரஞான்றது; நீண்டது, மாண்டது எனவும்; வட்டத்தழை, வட்டப்பலகை எனவும்; கலக்கொள், கலநெல் எனவும்; நீலக்கண், பவளவாய் எனவும்; நிலநீர் எனவும்; கொல்லுங்கொற்றன், பறக்குநாரை எனவும் வரும். (19)

316. அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே யாசிரி யர்க்க
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான.

இஃது, இவ்வீற்றுள் மருஉ முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அகம் என் கிளவிக்கு கை முன்வரின்–அகம் என்னும் சொல்லிற்கு கை என்னும் சொல் முன்வரின், முதல்நிலை ஒழிய முன்னவை கெடுதலும்–முன் 'மகரவிறுதி' (311) என்றதனால் மகரம் கெட்டு நின்ற நிலைமொழி முதல் நின்ற அகரம் ஒழிய அதன்முன் நின்ற அகரமும் அகரத்தாற் பற்றப்பட்ட ககரமெய்யும் கெட்டு முடிதலும் அவை கெடாது நின்று முடிதலும், வரைநிலை இன்று ஆசிரியர்க்கு–நீக்கும் நிலைமையின்று ஆசிரியர்க்கு; ஆவயின் ஆன மெல்லெழுத்து மிகுதல்–அவ்விரண்டிடத்தும் மெல்லெழுத்து மிக்கு முடிக எ.று.

எ-டு: அங்கை, அகங்கை என வரும்.

(வி-ரை) முன்னவை என்பதற்கு அகரத்தின் முன்னின்ற ககரமும், மகரவொற்றும் எனப்பொருள் காண்பர் நச்சினார்க்கினியர்.

'அகமுனர்ச் செவிகை வரின்இடை யனகெடும்' (மெய்யீற்றுப்-19) என்பர் நன்னூலார். (20)

317. இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலும் உரித்தே செய்யு ளான.

இஃது, அவ்விற்று உரிச்சொல்லுள் ஒன்றற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இலம் என் கிளவிக்கு படு வருகாலை - இலம் என்னும் சொல்லிற்குப் படு என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து, நிலையலும் உரித்து செய்யுளான-முன் 'மகரவிறுதி' (311) என்பதனாற் கெட்ட ஈறு கெடாது நின்று முடிதலும் உரித்துச் செய்யுட்கண் எ.று.

எ-டு: 'இலம்படு புலவ ரேற்றகை நிறைய' (மலைபடு - 576) என வரும்.

உரிச்சொல்லாகலான் உருபு விரியாதெனினும் இலத்தாற் பற்றப்படும் புலவரென்னும் பொருள் உணர நிற்றலின், வேற்றுமை முடிபாயிற்று. உம்மை மகரவிறு என்னும் சாதியொருமைபற்றி வந்த எதிர்மறை.

(வி-ரை) 'இலம்படு புலவர் மண்டை' (புறம்—155), 'இலம்படு புலவர் ஏற்றகை' (மலைபடு - 576, பரிபாடல் - 15) என்ற இடங்களில் எல்லாம் இலம் என்னும் சொல் வந்துள்ளது. ஆண்டெல்லாம் வறுமை, இன்மை எனப்பொருள் கூறப்படுதலின் இலம் என்பது பெயர்ச்சொல்லேயாம் என்பர் அறிஞர்கள்.

வேற்றுமை முடிபு என்பதனை மறுத்து, அல்வழி முடிபாகப் பொருள் உரைக்க வேண்டும் என்பர் நச்சினார்க்கினியர். (21)

318. அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி
ஒத்த எண்ணு முன்வரு காலை.

இஃது, இவ்விற்று எண்ணுப்பெயருள் ஒன்றற்குத் தொகை மரபினுள் எய்திய (165) ஏ என்சாரியை விலக்கி, அத்து வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: ஆயிரத்து இறுதி-ஆயிரம் என்னும் எண்ணுப் பெயரின் மகரமெய், ஒத்த எண்ணு முன் வருகாலை-தனக்கு அகப்படுமொழியாய்ப் பொருந்தின எண்ணுப்பெயர் தன்முன் வருங்காலத்து, அத்தொடு சிவணும்-தொகைமரபிற் கூறிய ஏ என் சாரியை ஒழித்து அத்துச்சாரியை பொருந்தி முடியும் எ.று.

எ-டு: ஆயிரத்தொன்று, ஆயிரத்திரண்டு; மூன்று, நான்கு என ஒட்டுக.

நிலைமொழி முற்கூறுது சாரியை முற்கூறியவதனான், இதன் முன்னர்க் குறை, கூறு, முதல் என்பன வந்தவழியும் இம்முடிபு கொள்க.

எ-டு: ஆயிரத்துக்குறை, கூறு, முதல் என ஒட்டுக. (22)

319. அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே.

இஃது, அவ்வெண்ணுப்பெயர் அடையடுத்தவழி முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அடையொடு தோன்றினும் அதன் ஓர் அற்று-அவ்வாயிரம் என்னும் எண்ணுப்பெயர் அடையடுத்த மொழியோடு தோன்றினும் மேற்சொன்னதனோடு ஒரு தன்மைத்தாய் அத்துப் பெற்று முடியும் எ.று.

எ-டு: பதினாயிரத்தொன்று; இரண்டு என ஒட்டுக.

மேல் இலேசினான் வந்தனவும் அடையடுத்து ஒட்டுக.

எ-டு: பதினாயிரத்துக்குறை, கூறு, முதல் என வரும். (23)

320. அளவும் நிறையும் வேற்றுமை யியல.

இஃது, அவ்வெண்ணின் முன்னர் அளவுப்பெயர் நிறைப் பெயர் வந்தால் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அளவும் நிறையும் வேற்றுமை இயல - ஆயிரத்து முன் அளவும் நிறையும் வந்தால் இவ்விற்று வேற்றுமை இயல் பாய் (311) மகரம்கெட்டு வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: ஆயிரக்கலம்; சாடி, தூதை, பானை எனவும்; ஆயிரக் கழஞ்சு; தொடி, பலம் எனவும் ஒட்டுக.

இம்மாட்டேற்றானே, மேல் 'துவர' (சூத்திரம்-15) என்ற இலேசினான், இயல்புகணத்துக்கட்கு எய்திய மகரம் ஈண்டும் கெடுத்துக் கொள்க.

எ-டு: ஆயிரநாழி; வட்டி, அகல் என வரும்.

பதினாயிரக்கலம் என்றாற்போல அடையடுத்து வந்த வழியும் ஒட்டுக. (24)

321. படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்
தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்
மெல்லெழுத்து மிகுத லாவயி னான.

'இஃது, இவ்விற்றுட் சில உயர்திணைப்பெயரும் விரவுப் பெயரும் உருபியலுள் முடிந்தவாறே ஈண்டுப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் முடியுமென உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: படர்க்கைப்பெயரும் முன்னிலைப் பெயரும் தொடக்கம் குறுகும் பெயர்நிலைக்கிளவியும் - எல்லாரும் என்னும் படர்க்கைப் பெயரும் எல்லீரும் என்னும் முன்னிலைப்பெயரும் கிளைத்தொடர்ச்சிப்

1. வேற்றுமைக்கண் உருபு புணர்ச்சி முடிபெய்தி முடிந்தவாறே பொருட் புணர்ச்சிக்கண் முடிதலுமுடைய என்பது உணர்த்துதல் நுதலிற்று என்பது சி. வி. ப. பாடம்.

பொருளவாய் நெடுமுதல் குறுகி முடியும் தாம் நாம் யாம் என்னும் பெயரும், வேற்றுமையாயின் உருபு இயல் நிலையும் – வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணுயின் உருபு புணர்ச்சிக்கண் சொன்ன இயல்பின்கண்ணே நின்று, சாரியை பெறுவன ஈறுகெட்டு இடையும் ஈறும் சாரியை பெற்றும் (192), நெடுமுதல் குறுகுவன நெடுமுதல் குறுகியும் (189) முடியும், அ வயின் மெல்லெழுத்து மிகுதல் ஆன – அந்நெடுமுதல் குறுகுமொழிக்கண் மெல்லெழுத்து மிகும் எ. று.

எ–டு: எல்லார்தங்கையும், எல்லீர்நுங்கையும்; செவியும், தலையும், புறமும் எனவும்; தங்கை, நங்கை, எங்கை; செவி, தலை, புறம் எனவும் ஒட்டுக.

'வேற்றுமையாயின்' என்றதனால், படர்க்கைப்பெயர்க்கும் முன்னிலைப்பெயர்க்கும் இயல்புகணத்து ஞகரமும் நகரமும் வந்த வழி தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் ஈறு கெடுதல் கொள்க.

'ஆவயினான' என்றதனால், படர்க்கைப்பெயர்க்கும் முன்னிலைப் பெயர்க்கும் ஞகரமும் நகரமும் வந்துழி அவை மிகுதலும், தொடக்கம் குறுகும் பெயர்க்கும் அஞ்ஞகரமும் நகரமும் வந்துழி மகரங்கெட்டு அவை மிகுதலுங் கொள்க.

எ–டு: எல்லார் தஞ்ஞாணும், எல்லீர் நுஞ்ஞாணும்; நூலும் எனவும்; தஞ்ஞாண், நஞ்ஞாண், எஞ்ஞாண்; நூல் எனவும் வரும்.

இன்னும் 'ஆவயினான' என்றதனால், படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் சாரியை பெறாது இறுதி உம்முப்பெறுதலும் கொள்க. எல்லார்கையும், எல்லீர்கையும்; செவியும், தலையும், புறமும் எனவரும்.

இன்னும் அதனானே, உருபீற்றுச் செய்கை யெல்லாம் கொள்க.

எ–டு: தமகாணம் என வரும். (25)

322. அல்லது கிளப்பின் இயற்கை யாகும்.

இது: மேலனவற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அல்லது கிளப்பின் இயற்கை ஆகும் - மேற்கூறிய படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் தொடக்கம் குறுகும் பெயர்நிலைக்கிளவியும் அல்வழியைச் சொல்லுமிடத்து இயல்பாய் முடியும் எ. று.

ஈண்டு இயல்பென்பது சாரியை பெருமை நோக்கி. இவற்றின் ஈறுதிரிதல் 'அல்வழியெல்லாம்' (சூத்திரம்-19) என்றதனுள் 'எல்லாம்' என்னும் இலேசினாற் கொள்க.

எ-டு: எல்லாருங் குறியர்; சிறியர், தீயர், பெரியர் எனவும்; எல்லீருங் குறியிர்; சிறியிர், தீயிர், பெரியிர் எனவும்; தாம் குறியர்; சிறியர், தீயர், பெரியர் எனவும்; நாம் குறியம்; சிறியம், தீயம், பெரியம் எனவும்; யாம் குறியேம்; சிறியேம், தீயேம், பெரியேம் எனவும் வரும்.

இன்னும் 'எல்லாம்' என்னும் இலேசினானே, இவ்விற்றுக் கண் மென்கணத்து மகரம் ஒழிந்தன வந்தவழி மகரம் அவ்வொற்றாய்த் திரிதலும் கொள்க.

எ-டு: எல்லாருஞ் ஞான்றார்; நீண்டார் எனவும்; எல்லீருஞ் ஞான்றீர்; நீண்டீர் எனவும்; தாஞ்ஞான்றார்; நீண்டார் எனவும்; நாஞ்ஞான்றாம்; நீண்டாம் எனவும்; யாஞ்ஞான்றேம்; நீண்டேம் எனவும் கொள்க. (26)

323. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா மெனும்பெயர் உருபியல் நிலையும்
வேற்றுமை அல்வழிச் சாரியை நிலையாது.

இஃது, அவ்விற்று விரவுப்பெயருள் ஒன்றற்கு அல்வழிக் கண்ணும் வேற்றுமைக்கண்ணும் உருபியலோடு மாட்டெறிந்து முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும்- அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சி யிடத்தும், எல்லாம் எனும் பெயர் உருபு இயல் நிலையும் -

எல்லாம் என்னும் விரவுப் பெயர் உருபு புணர்ச்சியின் இயல்பிலே நின்று (190) வற்றுச்சாரியையும் இறுதி உம்முச்சாரியையும் பெற்று முடியும், வேற்றுமை அல்வழி சாரியை நிலையாது – அப்பெயர் வேற்றுமையல்லாத இடத்துச் சாரியை பெறுதல் நிலையாதாயே முடியும் எ.று.

மாட்டேறு ஏலாத அல்வழியினையும் உருபியலோடு மாட்டெறிந்து விலக்கிய மிகுதியான், அல்வழிக்கண் வன்கணத்திறுதி உம்முப்பேறும், நிலைமொழி மகரக்கேடும், வருமொழி வல்லெழுத்துப்பேறும், மென்கணத்து மகரக்கேடும், பண்புதொகைக்கண் மகரக்கேட்டோடு இறுதி உம்முப்பேறும் கொள்க.

எ–டு: எல்லாக்குறியவும்; சிறியவும், தீயவும், பெரியவும் எனவும்; எல்லாவற்றுக்கோடும்; செவியும், தலையும், புறமும் எனவும்; எல்லாஞான்றன; நீண்டன, மாண்டன எனவும்; எல்லாஞானும்; நூலும், மணியும், யாப்பும், வலிமையும், அடையும், ஆட்டமும் எனவும்; எல்லாவற்றுஞானும்; நூலும், மணியும், யாப்பும், வலிமையும், அடையும், ஆட்டமும் எனவும் வரும்.

எல்லாக் குறியரும்; சிறியரும், தீயரும், பெரியரும் என உயர் திணைக்கண்ணும் ஒட்டுக.

ஈண்டுச் சாரியை பெற்றவழி, மகரக்கேடு வற்றின்மிசை ஒற்றுய்க் கெட்டது. இது விரவுப்பெயராகலின், ஈற்றுப் பொது முடிபிற்கு ஏலாதென்று சாரியை வல்லெழுத்துக் கொள்ளப் பட்டது. (27)

324. மெல்லெழுத்து மிகினு மானமில்லை.

இது, மேற்கூறிய எல்லாம் என்பதற்கு அல்வழிக்கண் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ–ள்: மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை – அவ்வெல்லாமென்பது அல்வழிக்கண் மேல் இலேசினாற் கூறிய வல்

லெழுத்தேயன்றி மெல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை எ.று.

மேற்கூறிய செய்கைமேலே இது கூறினமையின், மகரக் கேடும் இறுதி உம்முப்பேறுங் கொள்க.

எ-டு: எல்லாங்குறியவும்; சிறியவும், தீயவும், பெரியவும் எனவும்; எல்லாங்குறியரும்; சிறியரும், தீயரும், பெரியரும் எனவும் ஒட்டுக.

இனி, உரையிற்கோடல் என்பதனால், இறுதி உம்மின்றி எல்லாங்குறிய, எல்லாருங்குறியர் எனவும் வரும்.

மேல் இலேசினால் கூறிநின்ற வல்லெழுத்தினோடு மெல்லெழுத்து வகுத்தமையின், இஃது அல்வழியாயிற்று. (28)

325. உயர்திணை யாயின் உருபியல் நிலையும்.

இது, மேலதற்கு உயர்திணை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் உயர்திணையாயின் உருபு இயல் நிலையும் - அவ் வெல்லாமென்பது அஃறிணைப்பெயராயன்றி உயர்திணைப் பெயராய் நின்ற, நிலைமையாயின் உருபு புணர்ச்சியின் இயல்பிலே நின்று ஆண்டுக் (191) கூறிய நம்முச்சாரியை பெற்று முடியும் எ.று.

வற்று வகுத்த செய்கை மேல் வகுத்தமையின், மகரக்கேடு கொள்க. இறுதி உம்மையும் அச்செய்கை மேலே வகுத்தமையிற் கொள்க.

எ-டு: எல்லாநங்கையும்; செவியும், தலையும், புறமும் என வரும்.

மேல் மாணவில்லை (சூத்திரம்-28) என்றதனால், அல்வழிக் கண் வன்கணத்து மகரம்கெட்டு வல்லெழுத்து மிக்கு இறுதி உம்முப்பெற்று முடிதலும், இயல்புகணத்துக்கண் மகரம் கெட்டு இறுதி உம்முப்பெற்று முடிதலும் கொள்க.

எ-டு: எல்லாக்கொல்லரும்; சேவகரும், தச்சரும், புலவரும், எனவும்; எல்லாஞாயிறும்; நாயகரும், மணியகாரரும், வணிகரும், அரசரும் எனவும் வரும். (29)

326. நும்மெ னொருபெயர் மெல்லெழுத்து மிகுமே.

இதுவும், அவ்வீற்று விரவுப்பெயருள் ஒன்றற்கு வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நும் என் ஒரு பெயர் மெல்லெழுத்து மிகும் – நும் என்று சொல்லப்படுகின்ற ஒரு விரவுப்பெயர் வேற்றுமைக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ–டு: நுங்கை; செவி, தலை, புறம் என வரும்.

மகரம் 'துவர' (சூத்திரம்–15) என்ற இலேசினாற் கெட்டது

'ஒருபெயர்' என்றதனான், ஞகர நகரங்கள் வந்த இடத்தும் அவ்வொற்று மிகுதல் கொள்க.

எ–டு: நுஞ்ஞாண், நுந்நூல் என வரும்.

'ஒன்றினமுடித்தல்' என்பதனால், உங்கை என உம் என்பதன் முடிபும் இவ்வீற்றுக் கொள்க.

(வி·ரை) 313–ஆம் நூற்பாவின் கருத்தையும், இந் நூற்பாவின் கருத்தையும் ஒருங்கெண்ணியே நன்னூலாரும், 'வேற்றுமைமப்போய் வலிமெலி யுறழ்வும், அல்வழி உயிர் இடைவரின் இயல்பும்உள' (மெய்யீற்றுப்–17) என்றனர்.

உங்கை என்ற வழக்கு 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' எனவரும் திருவாசகத்துள்ளும் காணலாம். (30)

327. அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வரின் ஈவர
இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பால் மொழிவயி னியற்கை யாகும்.

இது, மேலதற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அல்லதன் மருங்கின் சொல்லும் காலே – அந்நும் என் ஒரு பெயர் தன்னை அல்வழியிடத்துச் சொல்லுங்காலே, உ கெட நின்ற மெய்வயின் ஈ வர இ இடைநிலைஇ ஈறு கெட ரகரம் புள்ளியொடு புணர்ந்து நிற்றல் வேண்டும் – நகரத்து உகரங்கெட அந்நின்ற மெய்யிடத்து ஈகாரம் வர, ஓர் இகரம் இடையிலே பெற மகரம் கெட அவ்விடத்து ஒரு ரகரம் புள்ளியோடு பொருந்தி நிற்றல்வேண்டும், அப்பால் மொழிவயின் இயற்கையாகும் – வருமொழியிடத்து அம்மொழிதான் இவ்வாறு திரியாது இயல் பாதல் வேண்டும் எ. று.

எ-டு: நீயிர்குறியிர்; சிறியீர், தீயீர், பெரியீர் என வரும்.

ஞான்றீர், நீண்டீர், மாண்டீர் என இயல்புகணத்தோடும் ஒட்டுக.

(வி-ரை) இந்நூற்பாவால் நும் என்பதே நீயிர் எனத் திரிந்தது என நன்கறியலாம். எனினும் சேனாவரையர், 'எல்லாம் நீயிர் நீ எனக் கிளந்து' (சொல்—174) என வருமிடத்து ஆசிரியர், இயற்பெயரோடு நீயிர் என்பதையும் வைத்திருப்பதால், நீயிர் என்பதன் திரிபே நும் எனத் திரியினும் அமையும் என்னும் கருத் தினராதல் வேண்டும் என்பர். நும் என்பதே நீயிர் எனத் திரிந்தது என்பதை இந்நூற்பாவில் ஆசிரியர் நன்கு விளக்குவதாலும், நீயிர் என்பதை 'நும்மின் திரிபெயர்' (சொல்—143) எனப் பின்னரும் கூறுவதாலும், நும் என்பதே நீயிர் எனத் திரிந்தது என்பது ஆசிரியர் கருத்தாதலே நன்கறியலாம். (31)

328. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கண் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் முடிபு வேற்றுமை கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தொழிற்பெயரெல்லாம் தொழிற்பெயர் இயல – மகர வீற்றுத் தொழிற்பெயரெல்லாம் அல்வழிக் கண்ணும் வேற்றுமைக்

கண்ணும் ஞகாரவிற்றுத் தொழிற்பெயர் இயல்பினவாய் (297, 298) வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், இயல்பு கணத்து உகரம் பெற்றும் வரும் எ.று.

எ-டு: செம்முக்கடிது; *சிறிது, தீது,* பெரிது எனவும்; செம்மு ஞான்றது; *நீண்டது,* மாண்டது, வலிது எனவும்; செம்முக்கடுமை *சிறுமை, தீமை,* பெருமை எனவும்; செம்முஞாற்சி; *நீட்சி,* மாட்சி; வலிமை எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனான், உகரம் பெறாது அல்வழிக்கண் நாட்டங்கடிது என, மெல்லெழுத்தாய்த் திரிவனவும்; வேற்றுமைக் கண் நாட்டங்கடுமை என மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கு வருவனவுங் கொள்க. (32)

329. ஈமுங் கம்மும் உருமென் கிளவியும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன.

இது, பொருட்பெயருட் சில அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் தொழிற்பெயரோடு ஒத்து முடியுமெனக் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஈமும் கம்மும் உரும் என் கிளவியும் ஆ முப்பெயரும்-ஈம் என்னும் சொல்லும் கம் என்னும் சொல்லும் உரும் என்னும் சொல்லுமாகிய அம்மூன்று பெயரும், அவற்று ஓர் அன்ன - அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் அத்தொழிற்பெயரோடு (297, 298) ஒரு தன்மையவாய் வன்கணம் வந்தவழி உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், இயல்பு கணத்து உகரம் பெற்றும் முடியும் எ.று.

எ-டு: ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது; *சிறிது, தீது,* பெரிது, எனவும்; ஞான்றது, *நீண்டது,* மாண்டது, வலிது எனவும்; ஈமுக்கடுமை, கம்முக்கடுமை, உருமுக்கடுமை; *சிறுமை, தீமை,* பெருமை எனவும்; ஞாற்சி, *நீட்சி,* மாட்சி, வலிமை எனவும்வரும். (33)

330. வேற்றுமை யாயின் ஏனை யிரண்டும்
தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை

இது, மேல் முடிபு கூறிய மூன்றனுள் இரண்டற்கு வேற்றுமைக்கண் வேறு ஒரு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ ள்: வேற்றுமை ஆயின் - வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின், ஏனை இரண்டும் அக்கு என் சாரியை தோற்றம் வேண்டும்- இறுதி உகரம் ஒழிந்த இரண்டும் அக்கு என்னும் சாரியை தோற்றி முடிதல் வேண்டும் எ. று.

'தோற்றம்' என்றதனுன் உகரம் நீக்குதல் வேண்டுமென்க.

எ-டு: ஈமக்குடம், கம்மக்குடம்; சாடி, தூதை, பானை என வரும்.

மேல் வேற்றுமை கூறிய முடிபு குணவேற்றுமைக் கண்ணதென்றும், ஈண்டுக் கூறிய முடிபு பொருட்பெயர்க்கண்ணதென்றும் கொள்க.

(வி-ரை) 'ஏனையிரண்டும்' என நூற்பாவிற் குறிப்பது ஈம், கம் என்னும் இரண்டையுமேயாம். எனினும் இதற்கு முன்னுள்ள நூற்பாவில் மூன்று சொற்களைக் கூறிய ஆசிரியர், இந்நூற்பாவில் ஏனையிரண்டும் என்பதால் முதலன இரண்டைமட்டும் குறிப்பாரா என்பது ஐயத்திற்கிடனுக உள்ளது. ஆதலின் 'உரும்' என்பது பற்றிய (இலக்கணம்) நூற்பா ஒன்று இருந்து தவறியிருக்கலாம் எனக் கருதுவார் ரெட்டியார் அவர்கள். நன்னூலார் இவ்விரு நூற்பாக்களின் கருத்துக்களைத் தொகுத்து 'ஈமும், கம்மும், உருமும் தொழிற்பெயர் மானும், முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே' (நன்-223) என்றனர். நன்னூலார் 'முதலன' என்று கூறுவதன் மூலம் இவ்வையத்திற்கே இடன் இல்லாது வைத்துள்ளார். தொல்காப்பியர் கொண்ட அக்குச்சாரியையை நன்னூலார் அகரச் சாரியையாகக் கொண்டிருப்பதால் 'அவ்வும் பெறுமே' என்றனர்.

(34)

331. வகார மிசையும் மகாரங் குறுகும்.

இது, பருந்துவிழுக்காடாய் 'அரையளபு குறுகல்' (நூன் மரபு-சூத்- 13) என்பதற்கு ஒரு புறனடை கூறுகின்றது.

இ-ள்: வகாரம் மிசையும் மகாரம் குறுகும் மேல் –ஒரு மொழிக்கண் கூறிய 'னகாரை முன்னர்' (மொழிமரபு – சூத் – 19) அன்றி ஈண்டுப் புணர்மொழிக்கண் வகரத்தின் மேலும் மகரங் குறுகும் எ.று.

எ-டு: நிலம் வலிது என வரும்.

(வி-ரை) முன்னர் நூன்மரபில் (13) மகரவொற்றுத் தன் மாத்திரையினின்றும் குறுகும் என்றார் ஆசிரியர். பின்னர் அது னகர வொற்றின் பின்னர் வரும்பொழுது குறுகும் என 52-ஆம் நூற்பாவில் கூறினர். இந்நூற்பாவில் வகர வொற்றின் முன்னர் வந்த மகரமும் குறுகும் எனக் கூறுகின்றார். நன்னூலார் இம்மூன்று நூற்பாக்களின் கருத்துக்களையும் இணைத்து, ஆசிரியர் கூறாத ணகர வொற்றையும் சேர்த்து 'ண ன முன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்' (எழுத்-41) என்றனர். (நூன்மரபு 13–ஆம் நூற்பா விளக்கவுரையில் 'ஆசிரியர் 32, 33–ஆம் நூற்பாக்களில் தெளிவாகக் கூறியுள்ளார்' என்ற பகுதியில் 32, 33 என்ற எண்களை 52, 331–ஆம் நூற்பாக்கள் எனத் திருத்திப் படித்துக் கொள்க. (35)

332. நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன
அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே
ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர்.

இஃது, இவ்வீற்று நாட்பெயர்க்கு வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நாள்பெயர்க் கிளவி மேல் கிளந்து அன்ன-மகரவீற்று நாட்பெயர்ச்சொல் மேல் (248) இகரவீற்று நாட்பெயரிற் கிளந்த தன்மையவாய் ஆன் பெற்று முடியும்; அத்து ஆன் மிசையும்

வரைநிலை இன்று - அத்துச்சாரியை அவ்வான்சாரியை மேலும் பிறசாரியை மேலும் நீக்கும் நிலைமையின்றும்; ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர்-அவ்விடத்து மகரவொற்றுத் தம் வடிவு கெடுக வென்று சொல்லுவர் புலவர் எ.று.

எ-டு: மகத்தாற் கொண்டான்; மகத்துஞான்று கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'ஒற்று' என்றது 'மெய்' என்றதனான், நாட்பெயரல்லாத பொருட்பெயர்க்கண்ணும் அம்முடிபு கொள்க.

எ-டு: மரத்தாற் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும். (36)

333. னகார இறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இது, னகார ஈற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: னகார இறுதி வல்லெழுத்து இயையின் - னகார வீற்றுப்பெயர் வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வந்து இயையின், றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கு - றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் எ.று.

எ-டு: பொற்குடம், சாடி, தூதை, பானை எனவரும்.

(வி-ரை) மேல் 303-ஆம் நூற்பாவில் கூறப்பட்ட ணகர இறுதியையும், இந்நூற்பாவில் கூறப்பட்ட னகர இறுதியையும் இணைத்தே ; நன்னூலாரும், 'ணன வல்லினம் வரட்டறவும்' (நன்.- 209) என்றனர். (37)

334. மன்னுஞ் சின்னும் ஆனும் ஈனும்
பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்.

இஃது, அவ்வீற்று அசைநிலை இடைச்சொல்லும், ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற இடைச்சொற்களும், வினையெச்சமும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மன்னும் சின்னும் ஆனும் ஈனும் பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும் - மன் என்னும் சொல்லும் சின் என்னும் சொல்லும் ஆன் என்னும் சொல்லும் ஈன் என்னும் சொல்லும் பின் என்னும் சொல்லும் முன் என்னும் சொல்லும் வினையெச்சமாகிய சொல்லும், அன்ன இயல என்மனார் புலவர்-மேற்கூறிய இயல்பினவாய் னகரம் றகரமாய் முடியும் என்று சொல்லுவர் புலவர் எ.று.

எ-டு: 'அதுமற்கொண்கன் தேரே,' 'காப்பும் பூண்டிசிற் கடையும் போகலெ' (அகம்-7) எனவும்; ஆற்கொண்டான், ஈற்கொண்டான், பிற்கொண்டான், முற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினன் எனவும்; வரிற்கொள்ளும்; செல்லும், தரும், போம் எனவும் வரும்.

பெயராந் தன்மையவாகிய ஆன், ஈன் என்பனவற்றை முற்கூறாததனான், ஆன்கொண்டான், ஈன்கொண்டான் எனத் திரியாது முடிதலும் கொள்க.

பின், முன் என்பன பெயர்நிலையும் வினையெச்சநிலையும் உருபு நிலையும் படும். அவற்றுள் வினையெச்சநிலை ஈண்டு 'வினையெஞ்சு கிளவியும்' என்பதனான் முடியும். உருபுநிலை உருபியலுள் முடியும். ஈண்டுப் பெயர் கூறுகின்றது. [1]அப்பெயரை முன் கூறாததனால், பின்கொண்டான், முன்கொண்டான் எனத் திரியாமையும் கொள்க.

'இயல' என்றதனான், ஊன் என்னும் சுட்டு ஊன்கொண்டான் என இயல்பாய் முடிதல் கொள்க.

(வி-ரை) ஆன் - அங்கு. ஈன் - இங்கு. ஊன்-உவ்விடம்; பின்னிடம். (38)

335. சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்
அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப.

1. அதனை என்பதும் பாடம்.

இஃது, இவ்விற்றுள் ஒருசார் ஏழாம் வேற்றுமை இடப் பொருள் உணர்த்தி நின்ற இடைச்சொல்லிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ–ள்: சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும் – சுட்டெழுத்தினை முதலாகவுடைய வயின் என்னும் சொல்லும் எகரமாகிய முதலையுடைய வயின் என்னும் சொல்லும், அ பண்பு நிலையும் இயற்கைய என்ப–மேல் றகரமாய் முடியுமென்ற அப் பண்பு நிலைபெற்று முடியும் இயற்கை யுடைய என்று சொல்லுவர் எ.று.

எ–டு: அவ்வயிற்கொண்டான், இவ்வயிற்கொண்டான், உவ்வயிற்கொண்டான், எவ்வயிற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'இயற்கைய' என்றதனால், திரியாது இயல்பாய் முடிவனவும் கொள்க.

எ-டு: கான்கோழி என வரும். (39)

336. குயினென் கிளவி இயற்கை யாகும்.

இஃது, இவ்விற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ–ள்: குயின் என் கிளவி இயற்கை யாகும்–குயின் என்னும் சொல் திரியாது இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: குயின்குழாம்; செலவு, தோற்றம், மறைவு என வரும்.

குயின் என்பது மேகம்.

(வி–ரை) மேல் 334-ஆம் நூற்பாவில் 'இயல' என்பதால் கொண்ட 'ஊன்' என்ற சொல்லுடன், இந்நூற்பாவில் கூறிய 'குயின்' என்னும் சொல்லையும் சேர்த்து நன்னூலார், 'குயின் ஊன் வேற்றுமைக் கண்ணும் இயல்பே' (நன்–216) என்றனர்.
(40)

337. எகின்மர மாயின் ஆண்மர இயற்றே

இது, திரிபு விலக்கி அம்மு வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: எகின் மரம் ஆயின் ஆண்மர இயற்று - எகின் என்னும் சொல்லும் மரப்பெயராயின் ஆண்மரத்தினது இயல் பிற்றாய் (305) அம்முப்பெற்று முடியும் எ.று.

எ-டு எகினங்கோடு; செதின், தோல், பூ என வரும். (41)

338. ஏனை யெகினே அகரம் வருமே
வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்.

இதுவும் அது.

இ-ள்: ஏனை எகின் அகரம் வரும்-ஒழிந்த மரமல்லா எகின் நிலைமொழிக்கண் அகரம் வந்து முடியும்; வல்லெழுத்து இயற்கை மிகுதல் வேண்டும்-அவ்விடத்து வருமொழி வல்லெழுத்து இயல்பு மிக்கு முடிதல் வேண்டும் எ.று.

எ-டு: எகினக்கால்; செவி, தலை, புறம் என வரும்.

மேலைச் சூத்திரத்தோடு இதனை ஒன்றாக ஓதாததனான், இயல்பு கணத்துக்கண்ணும் அகரப்பேறு கொள்க.

எ-டு: எகினஞாற்சி; யாப்பு, அடைவு என வரும்.

'இயற்கை' என்றதனான், அகரப்பேற்றோடு மெல்லெழுத்துப் பேறும் கொள்க.

எ-டு: எகினங்கால்; செவி, தலை, புறம் என வரும்.

(வி-ரை) இந்நூற்பாவையும் இதன் உரையையும் தழுவியே நன்னூலார், 'மரம்அல் எகின்மொழி இயல்பும் அகரம், மருவ வலிமெலி மிகலும் ஆகும்' (நன்-215) என்றனர். இயல்பும் என ஓதியது மேல் 345-ஆம் நூற்பாவில் 'தோற்றம் என்பதால் கூறப் பட்ட கருத்தைத் தழுவியதாகும். எகின்—அன்னம் (42)

339. கிளைப் பெயரெல்லாங் கிளைப்பெய ரியல.

இஃது, [1]இவ்வீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: கிளைப்பெயர் எல்லாம் கிளைப்பெயர் இயல-னகார ஈற்றுக் கிளைப்பெயரெல்லாம் ணகாரஈற்றுக் கிளைப்பெயர் போலத் (308) திரியாது இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: எயின்குடி; சேரி, தோட்டம், பாடி என வரும்.

'எல்லாம்' என்றதனான், அக்குச்சாரியையும் வல்லெழுத்தும் பெற்று எயினக்கன்னி என முடிதலும், பார்ப்பனக்கன்னி என நிலைமொழி திரிந்து அக்கும் வல்லெழுத்தும் பெறுதலும், இனிச் சாரியை பெருது திரிந்து வேளாண்குமரி, வேளாண் வாழ்க்கை என முடிதலும் கொள்க. (43)

340. மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே.

இதுவும், அவற்றுள் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மீன் என் கிளவி வல்லெழுத்து உறழ்வு-மீன் என்னும் சொல் தன் திரிபு வல்லெழுத்தினோடு உறழ்ந்து முடியும் எ.று.

எ-டு: மீன்கண், மீற்கண்; சினை, தலை, புறம் என வரும்.

(வி-ரை) 'மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே' (நன்-213) என்பர் நன்னூலாரும். (44)

341. தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை யிரண்டும் உரிமையு முடைத்தே
வல்லெழுத்து மிகுவழி இறுதி யில்லை.

இதுவும் அது.

---

1. 'இவ்வீற்றிற்கு எய்தியது' என்பதும் பாடம்.

இ-ள்: தேன் என் கிளவி வல்லெழுத்து இயையின்-தேன் என்னும் சொல் வல்லெழுத்து முதன் மொழியாய் வந்து பொருந்தின், மேல்நிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும் ஆ முறை இரண்டும் உரிமையும் உடைத்து-மேல் மீன் என்னும் சொல்லிற்குச் சொன்ன திரிபுறழ்ச்சியின் நிலைமையை யொத்து முடிதலும் வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலுமாகிய அம் முறையையுடைய இரண்டினையும் உரித்தாதலையும் உடைத்து; வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை-வல்லெழுத்து மிகுமிடத்து நிலைமொழியிறுதி னகரவொற்று நிலையின்றிக் கெடும் எ.று.

'உரிமையும்' என்ற வும்மை 'மெல்லெழுத்து மிகினும்' (சூத்-342) என மேல்வருகின்ற முடிவினை நோக்கி நின்றது.

எ-டு: தேன்குடம், தேற்குடம்; சாடி, தூதை, பானை எனவும்; தேக்குடம்; சாடி, தூதை, பானை எனவும் வரும். (45)

342. மெல்லெழுத்து மிகினும் மானமில்லை.

இது, மேலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை-மேற்கூறிய தேன் என் கிளவி வல்லெழுத்து வந்தால் வல்லெழுத்து மிகுதலே யன்றி மெல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை எ.று.

னகரக் கேடு அதிகாரத்தாற் கொள்க.

எ-டு: தேங்குடம்; சாடி, தூதை, பானை என வரும். (46)

343. மெல்லெழுத் தியையின்[1] இறுதியோ டுறழும்.

இது, மேலதற்கு மென்கணத்துக்கண் தொகைமரபிற் கூறிய முடிபு ஒழிய வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மெல்லெழுத்து இயையின் இறுதியோடு உறழும்-அத்தேன் என் கிளவி மெல்லெழுத்து முதல்மொழி வந்து இயையின்

---

1. 'இறுதியொ டுறழும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

நிலைமொழியிறுதி னகார வொற்றுக்கெடுதலும் கெடாமையுமாகிய உறழ்ச்சியாய் முடியும் எ.று.

எ-டு: தேன்ஞெரி, தேஞெரி; நுனி, முரி எனக் கொள்க.

மேல் 'மானமில்லை' (சூத்திரம்-46) என்றதனான், 'இறுதி யோடு உறழும்' என்றது ஈறுகெட்டு வருமொழி மெல்லெழுத்து மிக்கும் மிகாதும் உறழ்தற்கும், வருமொழி மிகாது இறுதி கெட்டும் கெடாதும் உறழ்தற்கும், அவ்விரண்டற்கும் உரித் தாய்ச் சென்றதனை விலக்கி வருமொழி மிகாதே நிற்ப அவ்வீறே கெட்டும் கெடாதும் நின்று உறழுமென்பது கொள்ளப்பட்டது.

அதன்மேல் 'ஆமுறை' (சூத்திரம்-45) என்றதனான், சிறு பான்மை ஈறு கெட்டுத் தேஞ்ஞெரி; நுனி, முரி என மெல்லெழுத்து மிகுதலும் கொள்க.

(வி-ரை) 341, 342, 343 ஆகிய மூன்று நூற்பாக்களின் கருத்துக்களையும் தொகுத்தே நன்னூலாரும்,

'தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி'

(நன்-214) என்றனர். (47)

344. இருஅல் தோற்றம் இயற்கையாகும்.

இஃது, இன்னும் அதற்கு உயிர்க்கணத்து ஒருமொழிக்கண் முடியும் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இருஅல் தோற்றம்-தேன் என்னும் சொல் இருல் என்னும் வருமொழியது தோற்றத்துக்கண், இயற்கை ஆகும்- நிலைமொழி னகாரங்கெடாதே நின்று இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: தேனிருல் என வரும். (48)

345. ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே.

இஃது, அதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்து – அத்தேன் என்பது இருல் என்னும் வருமொழிக்கண் பிறிதும் ஓர் தகர வொற்று உடன்மிகு தகரத்தோடு நின்று முடிதலும் உரித்து எ.று.

மேல் 'வல்லெழுத்து மிகுவழி யிறுதி யில்லை' (சூத்-45) என்றதனுன் நிலைமொழி யீறு கெடுக்க. 'தகரமிகும்' என்னுது, 'ஒற்றுமிகு தகரம்' என்றதனுல் ஈரொற்ருக்குக.

எ-டு: தேத்திருல் என வரும்.

மேலைச் சூத்திரத்தோடு இதனை ஒன்ருக ஓதாததனுல், பிற வருமொழிக்கண்ணும் இம்முடிபு கொள்க.

எ-டு: தேத்தடை, தேத்தீ என வரும்.

'தோற்றம்' என்றதனுல், தேனடை, தேனீ என்னும் இயல்பும் கொள்க. (49)

346. மின்னும் பின்னும் பன்னுங் கன்னும்
அந்நாற் சொல்லும் தொழிற்பெய ரியல.

இஃது, அவற்றுட் சிலவற்றிற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மின்னும் பின்னும் பன்னும் கன்னும் அ நால் சொல்லும் – மின் என்னும் சொல்லும் பின் என்னும் சொல்லும் பன் என்னும் சொல்லும் கன் என்னும் சொல்லுமாகிய அந் நான்கு சொல்லும், தொழிற்பெயர் இயல-வேற்றுமைக் கண்ணும் அல்வழிக்கண்ணும் ஞகரவீற்றுத் தொழிற்பெயர்போல (297, 298) வன்கணம் வந்தவழி உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், மென் கணத்துக்கண்ணும் இடைக்கணத்துக் கண்ணும் உகரம் பெற்றும் முடியும் எ. று.

எ-டு: மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக் கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது,

வலிது, யாது எனவும்; மின்னுக்கடுமை, பின்னுக்கடுமை, பன்னுக் கடுமை, கன்னுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, யாப்பு எனவும் வரும்.

'தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல' என்று ஓதாது இவ்வாறு எடுத்தோதியவதனால், இம்முடிபினைத் தொழிற் பெயர்க்கும் பொருட்பெயர்க்கும் உடன் கொள்க.

மின் என்பது ஓர் தொழிலுமுண்டு; பொருளுமுண்டு, பிறவும் அன்ன.

(வி-ரை) 'மின்' என்பது மின்னுதல் தொழிலையும்; 'பின்' என்பது பின்னுதல் தொழிலையும், பின்னிய கூந்தலையும்; 'பன்' என்பது சொல்லுதலையும், சொல்லையும்; 'கன்' என்பது கன்னார் தொழிலையும், கன்னாரையும் உணர்த்தும்.

கன்–சிறு தராசுத்தட்டு என்பர் சங்கர நமச்சிவாயர். (50)

347. வேற்றுமை யாயின் ஏனை யெகினொடு
தோற்ற மொக்குங் கன்னென் கிளவி.

இது, மேல் முடிபு கூறியவற்றுள் ஒன்றற்கு வேறு ஓர் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: கன் என் கிளவி வேற்றுமையாயின் – கன் என்னும் சொல் வேற்றுமைப்பொருட் புணர்ச்சியாயின், ஏனை எகினொடு தோற்றம் ஒக்கும் – ஒழிந்த மரமல்லா எகினொடு தோற்றம் ஒத்து (338) அகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் எ. று.

எ-டு: கன்னக்குடம்; சாடி, தூதை, பானை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை என வரும்.

சிறுபான்மை கன்னக்கடுமை எனக் குணவேற்றுமைக்கண்ணும் இம்முடிபு கொள்க.

'தோற்றம்' என்றதனால், அல்வழிக்கண் அகரமும், வன்கணத் துக்கண் மெல்லெழுத்தும் கொள்க.

எ-டு: கன்னங்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என வரும்.

இன்னும் 'தோற்றம்' என்றதனால், சிறுபான்மை கன்னங் கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனக் குணவேற்றுமைக் கண்ணும் அகரமும் மெல்லெழுத்தும் கொள்க.

இக்'கன்' என்பது வேற்றுமை முடிபிற்கு, மேற்கூறியது (346) குணவேற்றுமைக்கு எனவும், ஈண்டுக் கூறியது பொருட்பெயர்க்கு எனவும் கொள்க.

(வி-ரை) கன்னம் – நோய்தணியும் பொருட்டுக் கோயிற்கு நேர்த்திக்கடனாகச் செய்து கொடுக்கும் சிறு படிமம் என்பர். 346, 347 ஆகிய இரு நூற்பாக்களின் கருத்துக்களையும் தொகுத்தே நன்னூலாரும், 'மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய, கன்அவ் வேற்று மென்மையோடு உறழும்' (நன்–217) என்றனர். (51)

348. இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்
மெய்யொழித் தன்கெடும் அவ்வியற் பெயரே.

இஃது, இவ்வீற்று விரவுப்பெயருள் இயற்பெயர்க்குத் தொகை மரபினுள் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இயற்பெயர் முன்னர் தந்தை முறைவரின் – னகார வீற்று இயற்பெயர் முன்னர்த் தந்தை என்னும் முறைப் பெயர் வருமொழியாய் வரின், முதற்கண் மெய்கெட அகரம் நிலையும் – முதற்கண் மெய்கெட அதன்மேல் ஏறிநின்ற அகரம் கெடாது நிலைபெறும், அ இயற்பெயர் மெய் ஒழித்து அன்கெடும் – நிலை மொழியாகிய இயற்பெயர் அவ் அன் என்னும் சொல்லில் அகரம் ஏறிநின்ற மெய்யை ஒழித்து அவ் அன் தான் கெட்டு முடியும் எ. று.

எ-டு: சாத்தந்தை, கொற்றந்தை எனவரும்.

'முதற்கண் மெய்' என்றதனால், சாத்தன்றந்தை, கொற்றன் றந்தை என்னும் இயல்பு முடிபும் கொள்க. (52)

349. ஆதனும் பூதனுங் கூறிய இயல்பொடு
பெயரொற் றகரந் துவரக் கெடுமே.

இது, மேலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஆதனும் பூதனும் - மேற்கூறிய இயற்பெயருள் ஆதனும் பூதனும் என்னும் இயற்பெயர்கள், கூறிய இயல்பொடு பெயர் ஒற்று அகரம் துவரக்கெடும் - மேற்கூறிய செய்கையோடு நிலைமொழிப்பெயருள் அன் கெடநின்ற ஒற்றும் வருமொழியுள் ஒற்றுக்கெடநின்ற அகரமும் முற்றக்கெட்டு முடியும் எ. று.

எ-டு: ஆந்தை, பூந்தை என வரும்.

'இயல்பு' என்றதனால், பெயரொற்றும் அகரமும் கெடாதே நின்று முடிந்தவாறே முடிதலும் கொள்க.

எ-டு: ஆதந்தை, பூதந்தை எனவரும்.

'துவர' என்றதனால், அழான், புழான் என நிறுத்திப் பொருந்தின செய்கை செய்து அழாந்தை, புழாந்தை என முடிக்க. (53)

250. சிறப்பொடு வருவழி யியற்கையாகும்.

இஃது, எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: சிறப்பொடு வருவழி இயற்கை ஆகும் - அவ்வியற்பெயர் பண்படுத்து வருவழி முன்கூறிய இருமொழிச் செய்கையும் தவிர்ந்து இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: பெருஞ்சாத்தன்றந்தை, பெருங்கொற்றன்றந்தை என வரும். (54)

351. அப்பெயர் மெய்யொழித் தன்கெடு [1]வழியே
நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை
மக்கள் முறைதொகூஉம் மருங்கி னான.

இது, மேலதற்கு வேறு ஒரு வருமொழிக்கண் எய்தாதது எய்துவித்தது.

இ-ள்: அ பெயர் மக்கள் முறை தொகூஉம் மருங்கின் ஆன மெய் ஒழித்து அன்கெடு வழி – அவ்வியற்பெயர் மக்கள் என்னும் முறைப்பெயர் வந்துகூடும் இடத்தின்கண்ணும் பிறிதிடத்தும், தான் ஏறிய மெய்யை ஒழித்து அன்கெடும் அவ்வழி, அம் என் சாரியை நிற்றலும் உரித்து - அம் என்னும் சாரியை நிற்றலும் உரித்து எ. று.

எ-டு: சாத்தங்கொற்றன், கொற்றங்கொற்றன் எனவும்; சாத்தங்குடி, கொற்றங்குடி எனவும் வரும். (55)

352. தானும் பேனும் கோனும் என்னும்
ஆமுறை இயற்பெயர் திரிபிட னிலவே.

இது, மேலதற்கு ஒருவழி எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ–ள்: தானும் பேனும் கோனும் என்னும் ஆ முறை இயற்பெயர்–அவ்வியற் பெயருள் தானும் பேனும் கோனும் என்னும் முறைமையினையுடைய இயற்பெயர்கள் தந்தை மக்கள் என்னும் முறைப்பெயரொடு புணரும்வழி, திரிபு இடன் இல – மேற்கூறிய திரிபுகள் இன்றி இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: தான்றந்தை, பேன்றந்தை, கோன்றந்தை எனவும்; தான்கொற்றன், பேன்கொற்றன், கோன்கொற்றன் எனவும் வரும். (56)

353. தான்யா னெனும்பெயர் உருபியல் நிலையும்.

இது, விரவுப்பெயருள் தான் என்பதற்கும் உயர்திணைப் பெயருள் யான் என்பதற்கும், வேற்றுமைக்கண் தொகைமரபினுள் எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

1. ‘வழியும்’ என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இ-ள்: தான் யான் எனும் பெயர் உருபு இயல் நிலையும்—தான் என்னும் விரவுப்பெயரும் யான் என்னும் உயர்திணைப் பெயரும் மேல் தொகை மரபினுட் கூறிய இயல்புகள் (156, 154) ஒழித்து உருபு புணர்ச்சியிற் கூறிய இயல்பின்கண்ணே (393) நிலைபெற்றுத் தான் என்பது நெடுமுதல் குறுகித் தன் என்றாயும், யான் என்பது யகரம்கெட்டு ஆகாரம் எகாரமாய் என் என்றாயும், முடியும் எ.று.

எ-டு: தன்கை, என்கை; செவி, தலை, புறம் எனவும்; தன்ஞாண், என்ஞாண்; நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும் வரும். (57)

354. வேற்றுமை யல்வழிக் குறுகலுந் திரிதலும்
தோற்றம் இல்லை யென்மனார் புலவர்.

இது, மேலவற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமை அல்வழி – மேற்கூறிய தான் யான் என்னும் பெயர்கள் வேற்றுமைப்புணர்ச்சியல்லாதவிடத்து, குறுகலும் திரிதலும் தோற்றம் இல்லை என்மனார் புலவர் - தான் என்பது நெடுமுதல் குறுகலும் யான் என்பது அவ்வாறு திரிதலும் தோற்றமின்றி இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர் எ,று.

எ-டு: தான்குறியன்; சிறியன், தீயன், பெரியன், ஞான்றான், நீண்டான், மாண்டான் எனவும்; யான்குறியேன், சிறியேன், தீயேன், பெரியேன், ஞான்றேன், நீண்டேன், மாண்டேன் எனவும் வரும்.

'தோற்றம்' என்றதனான், வேற்றுமைக்கண் அவ்வாறன்றித் திரிதலும் கொள்க.

எ-டு: தற்புகழ், தற்பகை எனவும்; எற்பகை, எற்பாடி எனவும் வரும்.

(வி-ரை) 353–ஆம் நூற்பாவின் கருத்தையும், இந்நூற்பாவில் தோற்றம்' என்பதால் கூறப்பட்ட கருத்தையும் தொகுத்தே

நன்னூலாரும், 'தன்என் என்பவற்(று) ஈற்றுனவ் வன்மையோடு, உறழும் தின்னீறு இயல்பாம் உறவே' (நன்–218) என்றனர்.

(58)

355. அழனென் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்: அழன் என் இறுதிகெட வல்லெழுத்து மிகும்-அழன் என்னும் சொல் அழன் என்னும் னகரவீறுகெட வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ–டு: அழக்குடம்; சாடி, தூதை, பானை என வரும்.

அழன் என்பது, பிணம். (59)

356. முன்னென் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்லென் கிளவிமிசை றகர மொற்றல்
தொல்லியன் மருங்கின் மரீஇய மரபே

இஃது, இவ்வீற்றுள் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉக் களுள் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ–ள்: முன் என் கிளவி முன்னர்த் தோன்றும் இல் என் கிளவிமிசை றகரம் ஒற்றல்-முன் என்னும் சொல்லின் முன்னர்த் தோன்றும் இல் என்னும் சொல்லின்மேல் றகரவொற்று வந்து முடிதல், தொல் இயல் மருங்கின் மரீஇய மரபு-பழையதாகிய இயல்பினையுடைய விடத்து மருவி வந்த இலக்கண முடிபு எ.று.

எ–டு: முன்றில் என வரும்.

இது, கடைக்கண் என்றாற்போல வரூஉம் மரூஉ முடிபு போலன்றி, முன்னில் என ஒற்றிரட்டி முடியற்பாலது இரு மொழிக்கும் இயல்பிலதோர் ஒற்று மிக்கு முடிந்த மரூஉ முடிபு.

(வி–ரை) முன், இல் என்ற இருமொழிக்கும் இயல்பிலதோர் ஒற்று என்றது றகரவொற்றை யாகும். (60)

357. பொன்னென் கிளவி யீறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுள் மருங்கின் தொடரிய லான.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பொன் என் கிளவி ஈறு கெட முன்னர் முறையின் லகாரம் மகாரம் தோன்றும்-பொன் என்னும் சொல் பகர முதன் மொழி வந்தவிடத்துத் தன் ஈற்றின் னகரம்கெட அதன் முன்னர் முறையானே லகரமும் மகரமும் தோன்றி முடியும்; செய்யுள் மருங்கின் தொடர் இயலான-(யாண்டெனில்,) செய்யுளிடத்துச் சொற்கள் தம்மில் தொடர்ச்சிப் படும் இயல்பின்கண் எ.று.

'முறையின்' என்றதனால், லகரம் உயிர்மெய்யாகவும் மகரம் தனிமெய்யாகவும் கொள்க.

எ-டு: 'பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி' (மலைபடு-574) என வரும்.

'தொடரியலான' என்றதனான், பகரம் அல்லாத வன்கணத்துக் கண்ணும் சிறுபான்மை ஈறுகெட்டு லகரமும் வல்லெழுத்திற்கேற்ற மெல்லெழுத்தும் மிக்குமுடிதல் கொள்க.

எ-டு: பொலங்கலம், பொலஞ்சுடர், பொலந்தேர் என வரும்.

'ஒன்றின முடித்தல்' என்பதனால் 'பொலநறுந்தெரியல்' (புறம்-29) 'பொலமல ராவிரை' (கலி-138) என்றாற்போல வரும் பிற கணத்து முடிபும் கொள்க. (61)

358. யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே.

இது, யகாரவீற்றிற்கு வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின் - யகார வீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண், வல்லெழுத்து

இயையின் அ எழுத்து மிகும்-வல்லெழுத்து முதன் மொழி வந்து இயையின் அவ்வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: நாய்க்கால்; செவி, தலை, புறம் என வரும். (62)

359. தாயென் கிளவி யியற்கை யாகும்.

இஃது, இவ்வீற்று விரவுப்பெயருள் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தாய் என் கிளவி இயற்கை யாகும்- தாய் என்னும் சொல் வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும் எ.று.

எ-டு: தாய்கை; செவி, தலை, புறம் என வரும்.

இவ்வியல்பு மேல் (360) இன்னவழி மிகும் என்கின்றமையின், 'ஃறிணை விரவுப்பெயர்' (156) என்பதனுள் அடங்காதாயிற்று. (63)

360. மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே.

இது, மேலதற்கு அடையடுத்து வந்தவழி இன்னவாறு முடியு மெனா எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்: மகன் வினை கிளப்பின் முதல்நிலை இயற்று-அத்தாய் என்னும் சொல் மகனது வினையைக் கிளந்து சொல்லுமிடத்து இவ்வீற்று முதற்கண் (358) கூறிய நிலைமையின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும் எ.று.

எ-டு: மகன்றாய்க் கலாம்; செரு, தார், படை என வரும்.

'மகன்வினை' என்றது, மகற்குத் தாயாற் பயன்படும் நிலைமை யன்றி, அவளோடு பகைத்த நிலைமையை. (64)

361. மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே.

இஃது, இவ்வீற்றுச் சிலவற்றிற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்: மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உள—மேற் கூறிய வல்லெழுத்தினெடு மெல்லெழுத்து மிக்கும் உறழ்ந்தும் முடியும் மொழிகளும் உள எ.று.

எ-டு: வேய்ங்குறை; வேய்க்குறை; சிறை, தலை, புறம் என வரும். (65)

362. அல்வழி யெல்லாம் இயல்பென மொழிப.

இஃது. இவ்வீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அல்வழி எல்லாம் இயல்பு என மொழிப—யகரவீற்று அல்வழியெல்லாம் இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர் எ.று.

எ-டு: நாய்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

'எல்லாம்' என்றதனுல், இவ்வீற்று உருபு வாராது, உருபின் பொருள்பட வந்த இடைச்சொல் முடிபும், வினையெச்ச முடிபும், இருபெயரொட்டுப் பண்புத்தொகை முடிபும், அல்வழியுறழ்ச்சி முடிபும் கொள்க.

எ-டு: அவ்வாய்க்கொண்டான், இவ்வாய்க்கொண்டான், உவ் வாய்க்கொண்டான், எவ்வாய்க்கொண்டான்; சென்ருன், தந்தான், போயினன் எனவும்; தாய்க்கொண்டான்; சென்ருன், தந்தான், போயினன் எனவும்; பொய்ச்சொல், மெய்ச்சொல் எனவும்; வேய் கடிது, வேய்க்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும் வரும். (66)

363. ரகார இறுதி யகார இயற்றே.

இது, ரகாரவீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ரகார இறுதி யகார இயற்று—ரகார வீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் யகாரவீற்று இயல்பிற்ருய் (358) வல்லெழுத்து வந்தவழி மிக்கு முடியும் எ.று.

எ-டு: தேர்க்கால்; செய்கை, தலை, புறம் என வரும். (67)

364. ஆரும் வெதிருஞ் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஆரும் வெதிரும் சாரும் பீரும் – ஆர் என்னும் சொல்லும் வெதிர் என்னும் சொல்லும் சார் என்னுஞ் சொல்லும் பீர் என்னுஞ் சொல்லும், மெல்லெழுத்து மிகுதல் மெய்பெற தோன்றும் – மெல்லெழுத்து மிக்கு முடிதல் மெய்ம்மைபெறத் தோன்றும் எ.று.

எ-டு: ஆர்ங்கோடு, வெதிர்ங்கோடு, சார்ங்கோடு, பீர்ங் கோடு; செதிள், தோல், பூ என வரும்.

'மெய்பெற' என்றதனான், பிறவும் மெல்லெழுத்து மிகுதல் கொள்க.

எ-டு: குதிர்ங்கோடு, துவர்ங்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

இன்னும் அதனானே, பீர் என்பது மேல் (366) அம்முப் பெற்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்வும் கொள்க.

(வி-ரை) பீர் என்பதைச் செடி என்பர் நச்சினார்க்கினியர். (68)

365. சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்.

இது, மேலனவற்றுட் சார் என்பதற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: சார் என் கிளவி காழ்வயின் வலிக்கும்–சார் என்னும் சொல் காழ் என்னும் சொல்லொடு புணருமிடத்து வல்லெழுத்து மிக்குப் புணரும் எ.று.

எ-டு: சார்க்காழ் என வரும். (69)

366. பீரென் கிளவி அம்மொடுஞ் சிவணும்.

இஃது, அவற்றுட் பீர் என்பதற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பீர் என் கிளவி அம்மொடும் சிவணும்-பீர் என்னும் சொல் மெல்லெழுத்தேயன்றி அம்முச்சாரியையும் பெற்று வந்து முடியும் எ-று.

எ-டு: *பீரங்கோடு; செதிள், தோல், பூ* என வரும். (70)

367. லகார இறுதி னகார இயற்றே.

இது, லகார ஈற்றிற்கு னகார ஈற்று வேற்றுமையோடு இயைய வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: லகார இறுதி னகார இயற்று-லகார வீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வல்லெழுத்து முதன்மொழி வரின் னகாரவீற்றின் இயல்பிற்றாய் (333) லகாரம் றகாரமாய்த் திரிந்து முடியும் எ-று.

எ-டு: *கற்குறை; சிறை, தலை, புறம்* என வரும். (71)

368. மெல்லெழுத் தியையின் னகார மாகும்.

இஃது, அவ்வீறு மென்கணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மெல்லெழுத்து இயையின் னகாரம் ஆகும்-அவ்வீறு மென்கணம் வந்து இயையின் லகாரம் னகாரமாய்த் திரிந்து முடியும் எ-று.

எ-டு: கன்ஞெரி; நுனி, முறி என வரும்.

இச்சூத்திரத்தினை வேற்றுமையது ஈற்றுக்கண் அல்வழியது எடுத்துக்கோடற்கண் சிங்கநோக்காக வைத்தமையான், அல்வழிக்கும் இம்முடிபு கொள்க.

எ-டு: கன்ஞெரிந்தது; நீண்டது, மாண்டது என வரும். (72)

369. அல்வழி யெல்லாம் உறழெனா மொழிப.

இஃது, அவ்வீற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அல்வழி எல்லாம் உறழ் என மொழிப-அவ்வீறு அல்வழிக்கணெல்லாம் தந்திரிபு வல்லெழுத்தினேடு உறழ்ந்து முடியும் என்று சொல்லுவர் புலவர் எ-று.

எ-டு: கல்குறிது, கற்குறிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

'எல்லாம்' என்றதனல், கல்குறுமை, கற்குறுமை எனக் குணம் பற்றி வந்த வேற்றுமைக்கும் இவ்வுறழ்ச்சி கொள்க.

இன்னும் அதனனே, இவ்வீற்று வினைச்சொல்லீறு திரிந்தனவும் கொள்க.

எ-டு: வந்தாணற் கொற்றன் என வரும்.

இன்னும் அதனனே, அக்காற் கொண்டான், இக்காற் கொண்டான், உக்காற் கொண்டான், எக்காற் கொண்டான்; சென்ருன், தந்தான், போயினன் என உருபு வாராது உருபின் பொருள்பட வந்தவற்றின் முடிபும் ஈண்டே கொள்க.

இதனல், பிறவும் உள்ளவாறு அறிந்து ஒட்டிக்கொள்க. (73)

370. தகரம் வரும்வழி ஆய்தம் நிலையலும்
புகரின் றென்மனர் புலமை யோரே.

இது, மேலதனுள் ஒரு கூற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தகரம் வரும் வழி—அவ்வாறு றகாரமாய்த் திரிந்த லகாரம் தகர முதல்மொழி வருமொழியாய் வந்தவழி, ஆய்தம் நிலையலும் புகர் இன்று என்மனர் புலமையோர் – அவ்வாறு றகாரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாய்த் திரிந்து நிற்றலும் குற்றமின்றென்று சொல்லுவர் ஆசிரியர் எ-று.

எ-டு: கஃறீது, கற்றீது என வரும்.

'புகரின்று' என்றதனல், 'நெடியதன் இறுதி' (சூத்-75) என்பதனுள், வேறீது, வேற்றீது என்னும் உறழ்ச்சி முடிபும் கொள்க.

(வி-ரை) வருமொழியில் தகரம்வர, நிலைமொழியிலுள்ள லகரம் றகரமாய்த் திரிதலே யன்றி ஆய்தமாகவும் திரியும் என இந்நூற்பா கூறுகின்றது. இங்ஙனமே ளகர வீறும் திரியும் என மேல் 399, 400 ஆகிய இரு நூற்பாக்களிலும் கூறப்படுகின்றது. இவற்றையெல்லாம் இணைத்தே நன்னூலாரும், 'குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம், ஆகவும் பெறூஉம் அல்வழி யானே' (நன்-228) என்றனர். இவ்விரு (ல, ள) ஈறுகளிலும் திரியும். இத்திரிபு குறில்வழி வரும் லளக்களுக்கேயாம் என நன்னூலார் கூறியது 371 – ஆம் நூற்பாவிலும், 401 – ஆம் நூற்பாவிலும் 'நெடியதன் இறுதி' என ஆசிரியர் விதந்தோதுதலால் உணர்ந்த உய்த்துணர்வே யாகும். (74)

371. நெடியதன் இறுதி இயல்புமா ருளவே.

இது, மேலதற்கு ஒருவழி எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நெடியதன் இறுதி இயல்புமார் உள – நெடியதன் இறுதிக்கண் நின்ற லகாரவீறு குறியதன் இறுதிக்கண் நின்ற லகாரம்போலத் திரிந்து உறழ்தலேயன்றி இயல்பாய் முடிவனவும் உள எ–று.

எ-டு: பால்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

இயல்பாகாது திரிந்தன வேல்கடிது, வேற்கடிது என்றாற் போல்வன. (75)

372. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல.

இஃது, இவ்வீற்று அல்வழியுட் சிலவற்றிற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் - நெல் என்னும் சொல்லும் செல் என்னும் சொல்லும் கொல் என்னும் சொல்லும் சொல் என்னும் சொல்லும் ஆகிய இவை நான்கு சொல்லும், அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல – அல்வழியைச்

சொல்லுமிடத்தும் தம் வேற்றுமை முடிபின் இயல்பிற்ருய் (367, 333) லகாரம் றகாரமாய்த் திரிந்து முடியும் எ-று.

எ-டு: நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

(வி-ரை) 'நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்வழி யானும் றகரம் ஆகும்.' (நன்-232)
என்பர் நன்னூலாரும். (76)

373. இல்லென் கிளவி யின்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும்
இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்
கொளத்தகு மரபின் ஆகிட னுடைத்தே.

இஃது, இவ்வீற்று வினைக்குறிப்புச் சொல் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இல் என் கிளவி இன்மை செப்பின்–இல் என்னும் சொல் புக்குறையும் இல்லே உணர்த்தாது ஒரு பொருளது இல்லாமையை உணர்த்துமிடத்து, வல்லெழுத்து மிகுதலும் ஐ இடை வருதலும் இயற்கை ஆதலும் ஆகாரம் வருதலும்–அல்வழி வல்லெழுத்து மிகுதலும் ஐ இடை வருதலும் இயல்பாதலும் ஆகாரம் மிக்கு முடிதலும் ஆகிய இம்முடிபு நான்கும், கொளத் தகும் மரபின் ஆகு இடன் உடைத்து-இச்சொல்லிற்கு முடிபாகக் கொளத்தகும் மரபானே இதன் முடிபு ஆகும் இடன் உடைத்து எ–று.

'கொளத்தகு மரபு' என்றதனுன், வல்லெழுத்து மிக்கவழி ஐகாரம் வருதலும், ஆகாரம் மிக்கவழி வல்லெழுத்து மிகுதலும் கொள்க. இயல்பு முற்கூருது ஒழிந்ததனுல், வல்லெழுத்து மிகுதி ஆகாரம் வந்தவழி மிக்கே முடிதலின் சிறப்புடைத்தாதலும், ஐகாரம் வந்தவழி மிகுதலும் மிகாமையு முடைமையின் சிறப்பின் ருதலும் கொள்க.

எ-டு: இல்லேக்கல், இல்லேகல்; இல்கல்; இல்லாக்கல்; சுணே, துடி, பறை என வரும்.

இல்லைக்கல், இல்லைகல் என்பன இல்லை என்னும் ஐகார வீற்றுச் சொல் முடிபன்றோ? என்றும், இல்லாக்கல் என்பது உள்ள என்னும் பெயரெச்சத்து எதிர்மறையாகிய ஆகாரவீற்றுச் சொல்லது முடிபன்றோ? என்றும், இல்கல் என்பது பண்புத் தொகை முடிபன்றோ? என்றும் கூறின், அம்முடிபுகளோடு இம் முடிபுகள் எழுத்தொப்புமையன்றி, இவை ஓசை வேற்றுமை யுடைய வென்பது போலும் கருத்து.

அவ்வோசை வேற்றுமையாவன, ஐகார வீறுயவழி அவ் ஐகாரத்து மேல் ஒலியூன்றியும், லகாரவீறுயவழி அந்த லகார வொற்றின்மேல் ஒலியூன்றியும், அந்த லகாரவீறு இயல்பு முடிபாயவழிப் பண்புத்தொகைபோல ஒரு திரண்மையாக ஒலி யாது இடையற்று லகாரத்து மேல் ஒலியூன்றியும், ஆகார வீறுய வழி ஒரு திரண்மையாய் அவ்வாகாரத்துமேல் ஒலியூன்றியும், ஆண்டு லகார வீறுயவழி ஒரு திரண்மையாக ஒலியாது அந்த லகாரத்துமேல் ஒலியூன்றியும் வரும் வேறுபாடுகள் போலும்.

இல் என்பது எதிர்மறை வினைக்குறிப்புமுற்று விரவுவினை.

(வி–ரை) இல் என்னும் பண்படியே இல்லை என ஐகாரச் சாரியை பெற்றும், இல்லா என ஆகாரச் சாரியைப் பெற்றும் வருதலின், இளம்பூரணர் ஐயுற்றுரைக்கும் வினைப் பொருண்மை வேண்டுவதன்றும். இதனை நச்சினார்க்கினியர் உரையானும் (தொல்–எழுத்–372), சங்கரநமச்சிவாயர் உரையானும் (நன்–எழுத்–233) நன்கறியலாம். ஒருதிரண்மை – ஒருசொன்னீர்மை.

இந்நூற்பாவையும், 'கொளத்தகு மரபு' என்பதால் உரை யாசிரியர் கூறிய கருத்தையும் தொகுத்தே நன்னூலாரும், 'இல்லென் இன்மைச் சொற்(கு)ஐ அடைய, வன்மை விகற்பமும் ஆகா ரத்தொடு, வன்மை யாகலும் இயல்பும் ஆகும்' (நன்–233) என்றனர். (77)

374. வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: வல் என் கிளவி தொழிற்பெயர் இயற்று-வல் என்னும் சொல் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஞகாரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் (297, 298) வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்றும் முடியும் எ-று.

எ-டு: வல்லுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்; வல்லுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும். (78)

375. நாயும் பலகையும் வருஉங் காலை
ஆவயின் உகரங் கெடுதலும் உரித்தே
உகரங் கெடுவழி அகரம் நிலையும்.

இது, மேலதற்கு எய்தியது ஒருமருங்கு மறுத்துப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நாயும் பலகையும் வருஉம் காலை-மேல்நின்ற வல் என்பதன்முன் நாய் என்னும் சொல்லும் பலகை என்னும் சொல்லும் வருமொழியாய் வருங்காலத்து, ஆ வயின் உகரம் கெடுதலும் உரித்து-அவ்விடத்து உகரம் கெடாதே நின்று முடிதலேயன்றிக் கெட்டு முடியவும் பெறும், உகரம் கெடுவழி அகரம் நிலையும்-அவ்வுகரம் கெடுமிடத்து அகரம் நிலைபெற்று முடியும் எ-று.

எ-டு: வல்லநாய், வல்லப்பலகை என வரும்.

'அகரம் நிலையும்' என்னாது 'உகரம் கெடும்' என்றதனால், பிற வருமொழிக்கண்ணும் அவ் அகரப்பேறு கொள்க.

எ-டு: வல்லக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை என வரும்.

(வி-ரை) 374, 375 ஆகிய இரு நூற்பாக்களின் கருத்துக்களையும் தொகுத்தே நன்னூலாரும், 'வல்லே தொழிற்பெயர் அற்(று)

இரு வழியும், பலகைநாய் வரினும் வேற்றுமைக்(கு) அவ்வுமாம்' (நன்-231) என்றனர்.

வல்லப்பலகை, வல்லநாய் என்பன வல்லினது அறை வரைந்த பலகை எனவும், வல்லினுள் நாய் எனவும் விரிதலின் வேற்றுமை முடிபாம். இதனை யுளங்கொண்டே நன்னூலார், வேற்றுமைக்கு அவ்வுமாம்' என்றனர். 'இருவழியும்' என்றது, 374-ஆம் நூற்பாவின் பாயிரத்தை நோக்கியாகும். (79)

376. பூல்வே லென்று ஆலென் கிளவியொடு
ஆமுப் பெயர்க்கும் அம்மிடை வருமே.

இதுவும், அவற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பூல் வேல் ஆல் என் கிளவியொடு ஆ முப்பெயர்க்கும்- பூல் என்னும் சொல்லும் வேல் என்னும் சொல்லும் ஆல் என்னும் சொல்லும் ஆகிய அம்மூன்று பெயர்க்கும், அம் இடை வரும்- வேற்றுமைக்கண் திரிபின்றி அம்முச்சாரியை இடை வந்து முடியும் எ-று.

எ-டு: பூலங்கோடு, வேலங்கோடு, ஆலங்கோடு; செதிள், தோல், பூ என வரும். (80)

377. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெயர் இயல.

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல- லகாரவீற்றுத் தொழிற்பெயரெல்லாம் ஞகார வீற்றுத் தொழிற் பெயரின் இயல்பினவாய் (297, 298) அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்று முடியும் எ-று.

எ-டு: கல்லுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்; கல்லுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனுல், இவ்வாறு முடியாது பிறவாறு முடிவனவும் கொள்க.

எ-டு: பின்னல்கடிது; துன்னல்கடிது; பின்னற்கடுமை, துன்னற்கடுமை என வரும்.

இன்னும் அதனுனே, மென்கணம் வந்தவழி, பின்னன் ஞான்றது, பின்னன் ஞாற்சி என மெல்லெழுத்தாய்த் திரிந்து முடிவனவும் கொள்க. (81)

378. வெயிலென் கிளவி மழையியல் நிலையும்.

இதுவும், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: வெயில் என் கிளவி மழை இயல் நிலையும்-வெயில் என்னும் கிளவி மழை என்னும் சொல்லியல்பின்கண்ணே (288) நிலைபெற்று அத்தும் இன்னும் பெற்று முடியும் எ-று.

எ-டு: வெயிலத்துக் கொண்டான்; வெயிலிற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினுன் எனவரும். (82)

379. சுட்டுமுத லாகிய வகர விறுதி
முற்படக் கிளந்த உருபியல் நிலையும்.

இது, வகாரவீற்றுப் பெயர் நான்கினும் சுட்டுமுதல் வகரம் மூன்றற்கும் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: சுட்டு முதலாகிய வகர இறுதி - சுட்டெழுத்தை முதலாகவுடைய வகர வீற்றுச்சொல், முற்படக்கிளந்த உருபு இயல் நிலையும் வேற்றுமைக்கண் முற்படச்சொன்ன (184) உருபு புணர்ச்சியின் இயல்பு நிலைபெற்று வற்றுப் பெற்றுப் புணரும் எ-று.

எ-டு: அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு; செவி, தலை, புறம் என வரும்.

'முற்படக் கிளந்த' என்றதனான், வற்றினோடு இன்னும் பெறுதல் கொள்க.

எ-டு: அவற்றின்கோடு, இவற்றின்கோடு, உவற்றின்கோடு; செவி, தலை, புறம் என வரும். (83)

380. வேற்றுமை அல்வழி ஆய்தமாகும்.

இது, மேலவற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வேற்றுமை அல்வழி ஆய்தம் ஆகும் - அச்சுட்டு முதலாகிய வகரவீறு வன்கணம் வந்தால் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியல்லாத அல்வழிக்கண் அவ்வகரம் ஆய்தமாய்த்திரிந்து முடியும் எ-று.

எ-டு: அஃகடிய, இஃகடிய, உஃகடிய; சிறிய, தீய, பெரிய என வரும்.

(வி-ரை) இவ்வழக்கு இக்காலத்து அரிது என்பர் நச்சினார்க் கினியர். (84)

381. மெல்லெழுத் தியையின் அவ்வெழுத் தாகும்.

இது, மேலனவற்றிற்கு மென்கணத்து முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மெல்லெழுத்து இயையின் அ எழுத்து ஆகும் - அச்சுட்டு முதலாகிய வகரவீறு மென்கணம் வந்து இயைந்தவிடத்து அவ்வகரம் அவ்வம்மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும் எ-று.

எ-டு: அஞ்ஞாண், இஞ்ஞாண், உஞ்ஞாண்; நூல், மணி என வரும். (85)

382. ஏனவை புணரின் இயல்பென மொழிப.

இது, மேலனவற்றிற்கு இடைக்கணத்தும் உயிர்க்கணத்தும் முடிபு கூறுகின்றது.

இ-ள்: ஏனவை புணரின் இயல்பு என மொழிப-அச்சுட்டு முதலாகிய வகரவீறு ஒழிந்த இடைக்கணமும் உயிர்கணமும் வந்து புணரின் அவ்வகரம் திரியாது இயல்பாய் முடியும் எ-று.

எ-டு: அவ்யாழ், இவ்யாழ், உவ்யாழ்; வட்டு, அடை, ஆடை என ஒட்டுக.

(வி-ரை) 380, 381, 382, ஆகிய மூன்று நூற்பாக்களின் கருத்துக்களையும் தொகுத்தே நன்னூலாரும், 'சுட்டு வகரம் மூவினம்உற முறையே, ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும் (நன்-235) என்றனர். (86)

383. ஏனை வகரந் தொழிற் பெயரியற்றே.

இஃது, இவ்வீற்றுள் ஒழிந்த ஒன்றற்கும் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் முடிபு கூறுகின்றது.

இ-ள்: ஏனை வகரம் தொழிற்பெயர் இயற்று-ஒழிந்த வகர வீறு ஞகரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் (297, 298) வன் கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், அல்லனவற்றுக்கண் உகரமே பெற்றும் முடியும் எ-று.

எ-டு: தெவ்வுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்; தெவ்வுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

(வி-ரை) நன்னூலார் 'தெவ்வென் மொழியே தொழிற் பெயர் அற்றே, மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும்' (நன்-236) என்பர். 'மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும்' என்றது, தெவ்+முனை=தெம்முனை என்றுவதைக் குறிப்பதாகும். இது இவ் விடத்துக் கூறப்படாததாகும். நச்சினார்க்கினியர் உரையிற் கோடலால் இவ்வமைதியைக் கொள்வர். (87)

384. ழகார இறுதி ரகார இயற்றே.

இது, ழகாரவீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ழகார இறுதி ரகார இயற்று-ழகார ஈற்றுப் பெயர் வன்கணம் வந்தால் வேற்றுமைக்கண் ரகார ஈற்று இயல்பிற்றாய் (363) வல்லெழுத்து மிக்கு முடியும் எ-று.

எ-டு: பூழ்க்கால்; சிறகு, தலை, புறம் என வரும்.

(வி-ரை) இந்நூற்பாவில் அல்வழிக்கென்றோ, வேற்றுமைக்கு என்றோ ஆசிரியர் விதந்து கூறாமையின், இருவழிக்கும் கோடலே பொருத்தம் ஆகும். (88)

385. தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்து மாகும்.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: தாழ் என் கிளவி கோலொடு புணரின்-தாழ் என்னும் சொல் கோல் என்னும் சொல்லொடு புணரும் இடத்து, அக்கு இடை வருதலும் உரித்து-வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்குச் சாரியை இடை வந்து முடிதலும் உரித்து எ-று.

எ-டு: தாழக்கோல் என வரும். (89)

386. தமிழென் கிளவியும் அதனோ ரற்றே.

இதுவும் அது.

இ-ள்: தமிழ் என் கிளவியும் அதன் ஓர் அற்று - தமிழ் என்னும் சொல்லும் அதனோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து மிகுதலே யன்றி அக்கும் பெற்றும் முடியும் எ-று.

எ-டு தமிழக்கூத்து; சேரி, தோட்டம், பள்ளி என வரும்.

(வி-ரை) 385, 386 ஆகிய இரு நூற்பாக்களின் கருத்துக்களை யும் தொகுத்தே நன்னூலாரும், 'தமிழ் அவ்வுறவும் பெறும் வேற்றுமைக்கே, தாழுங் கோல்வந் துறுமேல் அற்றே' (நன்-225) என்றனர். தமிழக்கூத்து என்பது தமிழையுடைய கூத்து என விரிதலின் 'வேற்றுமைக்கு' என விதந்தனர் நன்னூலார்.

தொல்காப்பியர் கூறும் அக்குச்சாரியையை நன்னூலார் அகரச் சாரியையாகக் கொள்வர் ஆதலின், 'தாழுங் கோல் வந்துறுமேல் அற்றே' என்றனர். தாழக்கோல்—தாழைத் திறக்கும் கோல். (90)

387. குமிழென் கிளவி மரப்பெய ராயின்
பீரென் கிளவியொ டோரியற் றாகும்.

இதுவும், அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்: குமிழ் என் கிளவி மரப்பெயர் ஆயின்—குமிழ் என்னும் சொல் குமிழ்த்தல் என்னும் தொழிலன்றி மரப்பெயராயின், பீர் என் கிளவியொடு ஓர் இயற்று ஆகும்-பீர் என் கிளவியோடு ஓர் இயல்பிற்றாய் (364, 366) மெல்லெழுத்தும் அம்முச்சாரியையும் பெற்று முடியும் எ—று.

எ—டு: குமிழங்கோடு; செதிள், தோல், பூ என வரும்.

'ஓர் இயற்று' என்றதனால், பிறவற்றிற்கும் இம்முடிபு கொள்க.

எ-டு: மகிழங்கோடு என வரும்.

(வி-ரை) உரையில் 'மெல்லெழுத்தும் அம்முச் சாரியையும் பெற்று முடியும்' என இருத்தலின் மெல்லெழுத்துப் பெற்றதற்கு எடுத்துக்காட்டாக, 'குமிழ்ங்கோடு' என்ற காட்டும் இருத்தல் வேண்டும். நச்சினார்க்கினியர் உரையில் இவ்வெடுத்துக்காட்டு இருப்பதும் ஈண்டறியத் தக்கதாகும். இதனை ஏடுபெயர்த் தெழுதினார் விழ எழுதினர் போலும்! (91)

388. பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே.

இதுவும், அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பாழ் என் கிளவி மெல்லெழுத்து உறழ்வு – பாழ் என்னும் சொல் வல்லெழுத்தோடு மெல்லெழுத்து உறழ்ந்து முடியும் எ-று.

எ-டு: பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு; சேரி, தோட்டம், பாடி என வரும். (92)

389. ஏழென் கிளவி உருபியல் நிலையும்.

இஃது, இவ்வீற்று எண்ணுப்பெயர்க்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஏழ் என் கிளவி-ஏழ் என்னும் எண்ணுப் பெயரது இறுதி, உருபு இயல் நிலையும்-உருபு புணர்ச்சிக்கண் சொன்ன இயல்பின்கண்ணே (195) நிலைபெற்று (அன்பெற்று) முடியும் எ-று.

எ-டு: ஏழன் காயம்; சுக்கு, தோரை, பயிறு என வரும்.

இயல்பு வல்லெழுத்து (384) இவ்வோத்தின் புறனடையான் (483) வீழ்க்க. (93)

390. அளவும் நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலை யின்றே ஆசிரி யர்க்க.

இது, மேலதற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்: அளவும் நிறையும் எண்ணும் வருவழி - (அவ்ஏழ் என்னும் எண்ணுப்பெயர்) அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயரும் (வருமொழியாய்) வருமிடத்து, நெடு முதல் குறுகலும் உகரம் வருதலும் ஆசிரியர்க்கு கடிநிலை இன்று - நெடுமுதல் குறுகுதலும் (ஆண்டு) உகரம் வருதலும் ஆசிரியர்க்கு நீக்கும் நிலைமை இன்று எ-று.

எ-டு: எழுகலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு எனவும்; எழுகழஞ்சு; தொடி, பலம் எனவும்; எழுமூன்று, எழுநான்கு எனவும் வரும்.

'நிலையின்று' என்றதனான், வன்கணத்துப் பொருட்பெயர்க்கும் இம்முடிபு கொள்க.

எ-டு: எழுகடல்; சிலை, திசை, பிறப்பு என வரும். (94)

391. பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி

இது, மேலதற்கு ஒருவழி எய்தியதன்மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பத்து என் கிளவி இடைஒற்று கெடுவழி ஆய்தப் புள்ளி நிற்றல் வேண்டும் - (அவ்) ஏழ் என்பதனோடு பத்து என்பது புணரும் இடத்து அப்பத்து என்னும் கிளவியின் இடை ஒற்றுக் கெடுவழி ஆய்தமாகிய புள்ளி நிற்றல் வேண்டும் எ-று.

எ-டு: எழுபஃது என வரும். (95)

392. ஆயிரம் வருவழி உகரங் கெடுமே.

இது, மேலதற்கு எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்: ஆயிரம் வருவழி உகரம் கெடும்- (அவ் ஏழ் என்பது) ஆயிரம் என்பது வருமிடத்து (முன்பெற்ற) உகரம் பெறாது முடியும் எ-று.

எ-டு: ஏழாயிரம் என வரும். (96)

393. நூறூர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே.

இதுவும், மேலதற்கு ஒருவழி எய்தியது முழுவதும் விலக்குகின்றது.

இ-ள்: நூறு ஊர்ந்து வரும் ஆயிரக் கிளவிக்கு- (அவ் ஏழ் என்பது) நூறு என்னும் சொல் ஊர்ந்து வருகின்ற ஆயிரக் கிளவியாகிய நூறாயிரம் என்பதற்கு, கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்று- (முன்) கூறிய நெடுமுதல் குறுகி உகரம் பெறுதல் இன்று எ-று.

எ-டு: ஏழ் நூறாயிரம் என வரும்.

'கூறிய' என்றதனான், நெடுமுதல் குறுகி, உகரம் பெற்று எழுநூறாயிரம் என்றும் ஆம். இவ்விலேசினானே ஏழாயிரம் என்றும் ஆம்.

இன்னும் அதனானே, இயல்புகணத்து முடிபு கொள்க.

எ-டு: எழுஞாயிறு, எழுநாள் என வரும். (97)

394. ஐஅம் பல்லென வரூஉம் இறுதி
[1]அல்பெய ரெண்ணு மாயியல் நிலையும்.

இதுவும், மேலதற்கு ஒருவழி எய்தியது முழுவதும் விலக்குகின்றது.

இ-ள்: ஐ அம் பல் என வரும் இறுதி அல் பெயர் எண்ணும்- (அவ் ஏழ் என்னும் எண்தான்) ஐ என்றும் அம் என்றும் பல் என்றும் வருகின்ற இறுதிகளையுடைய பொருட்பெயர் அல்லாத எண்ணுப்பெயராகிய தாமரை வெள்ளம் ஆம்பல் என்பனவும் (வந்தால்) ஆ இயல் நிலையும்- (நெடுமுதல் குறுக்கம் இன்றி உகரம் பெறாது) அவ்வியல்பின்கண்ணே நின்று முடியும் எ-று.

எ-டு: ஏழ்தாமரை, ஏழ்வெள்ளம், ஏழாம்பல் என வரும். (98)

395. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.

இதுவும், மேலதற்கு எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள்: உயிர் முன் வரினும்- (அவ் ஏழ் என்பது அளவு முதலிய பெயர்களுள்) உயிர் முதல்மொழி (முன்) வரினும், ஆ இயல் திரியாது- (நெடுமுதல் குறுகி உகரம் வராது முடியும்) அவ்வியல்பில் திரியாது முடியும் எ-று.

எ-டு: ஏழகல், ஏழுழக்கு, ஏழொன்று. ஏழிரண்டு என வரும். (99)

---

1. 'அல்பெய ரெண்ணினும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

396. கீழென் கிளவி உறழத் தோன்றும்.

இஃது, இவ் ஈற்றுள் ஒன்றற்கு வேற்றுமைக்கண் வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: கீழ் என் கிளவி உறழ தோன்றும்-கீழ் என்னும் சொல் உறழ்ச்சியாகத் தோன்றி முடியும் எ-று.

எ-டு: கீழ்குளம், கீழ்க்குளம் என வரும்.

'தோன்றும்' என்றதனான் நெடுமுதல் குறுகாது உகரம் வருதலும் கொள்க. ஆங்கு இயைபு வல்லெழுத்து (384) இவ் வோத்தின் புறனடையான் (483) வீழ்க்க.

எ-டு: கீழுகுளம்; சேரி, தோட்டம், பாடி என வரும்.

(வி-ரை) 'கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும்' (நன்-226) என்பர் நன்னூலாரும்.

358, 360, 363, 384 ஆகிய நூற்பாக்களால் யரழ முன்னர்க் க ச த ப மிகும் என்றும், 359, 362, 393, 394, 395 ஆகிய நூற்பாக்களால் ய, ழக்கள் இயல்பாகும் என்றும், 361, 388 ஆகிய நூற்பாக்களால் ய, ழக்கள் உறழும் என்றும் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவற்றையெல்லாம் தொகுத்தே நன்னூலாரும், 'யரழ முன்னர்க் கசதப அல்வழி, இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை, மிகலும் இனத்தோ(டு) உறழ்தலும் விதிமேல்' (நன்-224) என்றனர். (100)

397. ளகார இறுதி ணகார இயற்றே.

இது, ளகார ஈற்றிற்கு ணகார ஈற்று வேற்றுமை முடிபோடு இயைய வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ளகார இறுதி ணகார இயற்று-ளகார (ஈற்றுப் பெயர் வேற்றுமைக்கண்) ணகார ஈற்று இயல்பிற்றாய் (303) (வன்கணம் வந்தால் ளகாரம் டகாரமாய்த் திரிந்து) முடியும் எ-று.

எ-டு: முட்குறை; சிறை, தலை, புறம் என வரும். (101)

398. மெல்லெழுத் தியையின் ணகார மாகும்.

இது, மேலதற்கு மென்கணத்து முடிபு கூறுகின்றது.

இ-ள்: மெல்லெழுத்து இயையின் ணகாரம் ஆகும்-(ளகார ஈறு) மெல்லெழுத்து (வருமொழியாய் வந்து) இயையின் ணகாரமாய்த் திரிந்து முடியும் எ-று.

எ-டு: முண்ஞெரி; நுனி, முறி என வரும்.

இதனை வேற்றுமை இறுதிக்கண் அல்வழியது எடுத்துக் கோடற்கண் சிங்கநோக்காக வைத்தலின், அல்வழிக்கும் இம் முடிபு கொள்க.

எ-டு: முண்ஞெரிந்தது; நீண்டது, மாண்டது என வரும் (102)

399. அல்வழி யெல்லாம் உறழெனு மொழிப.

இது, மேலதற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அல்வழி எல்லாம் உறழ் என மொழிப - (ளகார ஈற்று) அல்வழிகளெல்லாம் (திரிந்தும் திரியாதும்) உறழ்ந்து முடியும் என்று சொல்லுவர் புலவர் எ-று.

எ-டு: முள்கடிது, முட்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

'எல்லாம்' என்றதனால், குணவேற்றுமைக்கண்ணும் இவ் வுறழ்ச்சி கொள்க.

எ-டு: முள்குறுமை, முட்குறுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும்; கோள்கடுமை, கோட்கடுமை எனவும் வரும்.

இன்னும் அதனானே, உருபு வாராது உருபின் பொருள்பட வந்தவற்றின் முடிபும் கொள்க.

எ-டு: அதோட்கொண்டான், இதோட்கொண்டான், உதோட் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும்.

(வி-ரை) ல, ள என்பன வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின் முறையே றகரமாகவும் டகரமாகவும் திரியும் என்பதை ஆசிரியர் 367, 397 ஆகிய நூற்பாக்களால் கூறுகின்றார். ல, ள என்பதன் முன் மெல்லினம் வரின் னகரமாகவும் ணகரமாகவும் திரியும் என்பதை 368, 398, ஆகிய நூற்பாக்களால் கூறுகின்றார். ல, ள என்பன அல்வழியிலாயின் உறழ்ந்து முடியும் என்பதை 369, 399 ஆகிய நூற்பாக்களால் கூறுகின்றார். இந்நூற்பாக்களின் கருத்துக்களைத் தொகுத்தே நன்னூலாரும், 'லளவேற் றுமையில் றடவும் அல்வழி, அவற்றோடு உறழ்வும் வலிவரின் ஆம்மெலி, மேவின் னணவும் இடைவரின் இயல்பும், ஆகும் இருவழி யானும் என்ப' (நன்-227) என்றனர். 'இடை வரின் இயல்பும்' என்பது தொல்காப்பியத்துட் கூறப்படாத தாகும். (103)

400. ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வருஉங் காலை யான.

இது, மேலதற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: ஆய்தம் நிலையலும் வரை நிலை இன்று-(ளகாரம் டகாரமாயே திரியாது) ஆய்தமாய்த் திரிந்து நிற்றலும் வரையும் நிலைமை இன்று, தகரம் வரும் காலை-தகர முதல்மொழி வரும் காலத்து எ-று.

எ-டு: முஃடீது, முட்டீது என வரும். (104)

401. நெடியத னிறுதி இயல்பா குநவும்
வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையலும்
போற்றல் வேண்டும் மொழியுமா ருளவே.

இது, மேலதற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: நெடியதன் இறுதி இயல்பாகுநவும்- (ளகாரம்) நெடியதன் இறுதி திரியாது இயல்பாய் முடிவனவற்றையும், வேற்றுமை அல்வழி வேற்றுமை நிலையலும்-வேற்றுமை அல்லாத

அல்வழியிடத்து வேற்றுமையின் இயல்புடையனவாய்த் திரிந்து முடிதலையும், போற்றல் வேண்டும் மொழியுமார் உள—போற்றுதல் வேண்டும் மொழிகளும் உள எ—று.

எ-டு: வாள்கடிது, கோள்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்; தோட்கடிது, நாட்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும் வரும்.

'போற்றல் வேண்டும்' என்றதனன், உதளங்காய்; செதின், தோல், பூ என அம்முப்பெற்று முடிவன கொள்க. (105)

402. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கு வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல—(ளகார ஈற்றுத்) தொழிற்பெயரெல்லாம் வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் ஞகாரஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் (297, 298) வன்கணம் வந்தவழி வல்லெழுத்தும் உகரமும் பெற்றும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வந்தவழி உகரம் பெற்றும் முடியும் எ—று.

எ-டு: துள்ளுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்; துள்ளுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனல், தொழிற்பெயர்கள் இருவழியும் இவ்வாறன்றிப் பிறவாறு முடிவனவும் கொள்க.

எ-டு: கோள்கடிது, கோட்கடிது; வாள்கடிது, வாட்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்; கோள் கடுமை, கோட்கடுமை; வாள்கடுமை, வாட்கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

கண்டு, வாள் என்றது கொல்லுதலை. (106)

403. இருளென் கிளவி வெயிலியல் நிலையும்.

இதுவும், அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: இருள் என் கிளவி வெயில் இயல் நிலையும் - இருள் என்னும் சொல் (வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்) வெயில் என்னும் சொல்லின் இயல்பிலே (378) நின்று, அத்தும் இன்னும் பெற்று முடியும் எ-று.

எ-டு: இருளத்துக் கொண்டான், இருளிற் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும். (107)

404. புள்ளும் வள்ளுந் தொழிற்பெய ரியல.

இதுவும், அவ்வீற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் இயல-புள் என்னும் சொல்லும் வள் என்னும் சொல்லும் வேற்றுமைக்கண்ணும் அல் வழிக்கண்ணும் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் (297, 298) வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்றும் முடியும் எ-று.

எ-டு: புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்; புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

இதனைத் 'தொழிற்பெயரெல்லாம் என்றதன்பின் வையாத முறையன்றிய கூற்றினான், இருவழியும் வேற்றுமைத்திரிபு எய்தி முடிவனவும் கொள்க.

எ-டு: புட்கடிது, வட்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்; புட்கடுமை, வட்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

இன்னும் அதனானே, பள் என்பதன்கண்ணும், கள் என்பதன் கண்ணும் இருவழியும் இவ்விரு முடிபு பெற்றவழிக் கொள்க.

எ-டு: பள்ளுக்கடிது, கள்ளுக்கடிது; பள்ளுக்கடுமை, கள்ளுக் கடுமை எனவும்; பட்கடிது, கட்கடிது; பட்கடுமை, கட்கடுமை எனவும் ஒட்டுக.

(வி-ரை) 'புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் மானும்' (நன்-234) என்பர் நன்னூலாரும். (108)

405. மக்க ளென்னும் [1]பெயர்நிலைக் கிளவியும்
தக்கவழி அறிந்து வலித்தலு முரித்தே.

இது, மக்கள் என்னும் உயர்திணைப் பெயருக்கு 'உயிரீறாகிய வுயர்திணைப் பெயரும்' (தொகை மரபு-சூத்திரம்-11) என்பதனுள் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: மக்கள் என்னும் பெயர்நிலை கிளவி-மக்கள் என்னும் பெயர்ச்சொல்லின் இறுதி, தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்து-இயல்பே யன்றித் தக்க இடம் அறிந்து வல்லொற்றாய்த் திரிந்து முடிதலும் ஆம் எ-று.

'தக்கவழி' என்றதனால் அம்மக்கள் உடம்பு, உயிர் நீங்கிய காலத்து இம்முடிபு எனக் கொள்க.

எ-டு: மக்கட்கை; செவி, தலை, புறம் எனவரும்.

(வி-ரை) இந்நூற்பாவில் 'தக்கவழி' என்பதற்கு இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும், உயிர் உடம்பினின்று நீங்கிய மக்கள் உடம்பைக் குறிக்கின்றபொழுதே இங்ஙனம் வல்லொற்றாகத் திரியும் என்றனர். நச்சினார்க்கினியர் பெரும்பாலும் இவ்விடத்தே தான் வல்லொற்றாகத் திரியுமென்று கூறிச் சிறுபான்மை உயிரோடு கூடிய உடம்பைக் குறிக்கும் மக்கள் என்ற சொல்லும், வருமொழி யில் வல்லினம் வர வல்லொற்றாகத் திரியும் என்று கூறி மக்கட் பண்பு, மக்கட் சுட்டு என்பனவற்றைக் காட்டினர்.

---

1. 'பெயர்ச்சொல் இறுதி' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

ஆசிரியர் தொல்காப்பியர் மக்கள் என்று பொதுவாகவே குறித்தலானும், 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' (சொல்–1), 'அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' (குறள்–61), 'பண்புடைய மக்கட்பெறின்' (குறள்-62) மக்கட் பண்பில்லாதவர் (குறள்–997) என்றெல்லாம் தொல்காப்பியத்துள்ளும் சான்றோர் செய்யுட்களிலும் பயின்று வருதலானும், உயிர் நீங்கிய மக்கள் என்ற சொல்லைக் குறித்துழியே பெரும்பாலும் வல்லினமாகத் திரியுமென்றல் பொருந்தாதாம். (109)

406. உணரக் கூறிய புணரியல் மருங்கின்
கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே.

இஃது, இவ்வோத்திற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: *உணரக் கூறிய* – உணரக் கூறப்பட்ட புள்ளியீறுகள், *புணர் இயல் மருங்கின்*–(வருமொழியோடு) புணரும் இயல்பிடத்து, *கண்டு செயற்கு உரியவை கண்ணினர் கொளல்* – (மேல் முடித்த முடிபுகளேயன்றி வழக்கினுள்) கண்டு முடித்தற்குரிய பிற முடிபுகளைக் கருதிக்கொண்டு முடிக்க எ–று.

எ–டு: விழன்குளம்; சேறு, தரை, பழனம் என இவை, *ணகார ஈற்று* வேற்றுமைக்கண் திரியாது இயல்பாய் முடிந்தன. பொன்னப்பத்தம் என்பது அவ்வீறு அக்குப்பெற்று முடிந்தது.

நீர் குறிது; சிறிது, தீது, பெரிது என்பது ரகார ஈற்று அல்வழி முடிபு. வேர் குறிது; வேர்க்குறிது என்பது அவ்வீற்று அல்வழி உறழ்ச்சி.

அம்பர்க்கொண்டான், இம்பர்க்கொண்டான், உம்பர்க்கொண்டான், எம்பர்க் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என்பன அவ்வீற்றுள் உருபு வாராது உருபின் பொருள்பட வந்தவற்றின் முடிபு. தகர்க்குட்டி என்பது அவ்வீற்று இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகிய அல்வழி முடிபு. வடசார்க்கூரை, தென்சார்க்கூரை என்பன அவ்வீற்று இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ முடிபு.

உசிலங்கோடு, எலியாலங்கோடு என்பன லகார ஈற்று அம்முப்பேறு. கல்லம்பாறை என்பது அவ்வீற்று அல்வழி அம்முப்பேறு.

அழலத்துக் கொண்டான் என்பது அவ்வீற்று அத்துப்பேறு. அழுக்கற்போர் என்பது அவ்வீற்று அல்வழித் திரிபு.

யாழ்குறிது; சிறிது, தீது, பெரிது என்பன ழகார ஈற்று அல்வழி முடிபு. விழ்குறிது, விழ்க்குறிது என்பன அவ்வீற்று அல்வழி உறழ்ச்சி. தாழப்பாவை என்பது அவ்வீற்று அல்வழி அக்குப்பேறு.

இனி 'உணரக்கூறிய' என்றதனால், குளத்தின்புறம், மரத்தின் புறம் என உருபிற்கு எய்திய அத்தோடு இன்பெறுதலும் கொள்க.

இனிக் 'கண்ணினர்' என்றதனால், ஒருநாளைக் குழவி என ளகர ஈறு ஐ என்னும் சாரியையும் வல்லெழுத்தும் பெற்று முடிந்தன கொள்க.

பிறவும், இவ்வோத்தின் வேறுபட வருவனவெல்லாம் இதன் அகத்து முடித்துக் கொள்க.

(வி-ரை) 321, 323, 324, 325, 353, 379, 389 ஆகிய நூற் பாக்களை உருபியலோடு மாட்டெறிகின்றார் ஆசிரியர். இவற்றை யெல்லாம் தொகுத்தே நன்னூலாரும், 'உருபின் முடிபவை ஒக்கும் அப்பொருளினும்' (நன் – 238) என்றனர்.

ஆந்தை (349), முன்றில் (356) என வரும் மரூஉ முடிபுகளை யும், இன்னும் இவ்வியலில் இந்நூற்பாவானும், பிற நூற்பாக் களானும் பரந்தும் விரிந்தும் கூறப்பட்ட முடிபுகளையும் உளங் கொண்ட நன்னூலார்,

'இடை உரி வடசொல்லின் இயம்பிய கொளாதவும்
போலியும் மரூஉவும் பொருந்திய ஆற்றிற்கு
இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே'

(நன்-239) எனப் புறனடை கூறி முடிப்பர். முன்றில் என்பதை இலக்கணப்போலி எனக்கூறுவர் நன்னூல் உரையாசிரியர்கள். வட சொல்லிற்கும் முடிபு கோடல் பின்னோன் வேண்டும் விகற்பம் கூறல் என்னும் விதி பற்றியதாகும்.　(110)

புள்ளிமயங்கியல் முற்றிற்று.

10

குற்றியலுகரப் புணரியல்

பொருளமைப்பு

குற்றியலுகரங்கள் எல்லாம் மெய்யெழுத்துக்களின் விகார மாதலானும், புள்ளி பெறுதல் ஒப்புமை யானும் இவ்வீற்றுப் புணர்ச்சியைப் புள்ளி மயங்கியலின் பின்வைத்தார் ஆசிரியர்.

குற்றியலுகரம் பொருட் பெயரொடும் எண்ணுப்பெயர் முதலிய வற்றேடும் புணருமாற்றை இவ்வியல் உணர்த்துதலின், இது குற்றியலுகரப் புணரியல் எனப் பெயர் பெற்றது.

1. குற்றியலுகரத்தின் வகை:

மேல் (36) நெட்டெழுத்திம்பர் வரும் என்றவற்றை, ஈண்டு ஈரெழுத்தொருமொழி என்றுகூறி, தொடர்மொழியீற்று வரும் என்றவற்றை உயிர்த்தொடர், ஆய்தத்தொடர், மென்ருெடர், வன்ருெடர், இடைத்தொடர் என ஐவகையாக்கி ஈண்டுக் குற்றிய லுகரம் 'அறுவகைப்படும்' என்ருர் ஆசிரியர். அவ்வாறிடத்தும் உகரம் குறுகும்.

இதற்குரிய மாத்திரை: வேற்றுமை அல்வழி ஆகிய ஈரிடத்தும் மேற்கூறிய அறுவகை ஈற்றிலும் வரும் உகரம் அரை மாத்திரை பெற்று நிற்கும். புணர்மொழியகத்து வரின் ஒரு மாத்திரை

பெறும். வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி அரை மாத்திரை பெறும். குற்றியலுகரத்தின் முன் யகரம் வருவழி, அவ்வுகரம் இகரமாகத் திரியும். இது அரை மாத்திரை பெறும்.

(i) ஈரெழுத்தொரு மொழி (ii) உயிர்த்தொடர் மொழி:

ஈரெழுத்தொரு மொழியும், உயிர்த்தொடர் மொழியும் வேற்றுமைக்கண் வன்கணத்தொடு புணர்வுழி இடையே ட, ற ஒற்றிரட்டி வல்லெழுத்து மிகும். இவ்விரு தொடரிலும் ட, ற ஒற்று இரட்டாதனவும் உள. அவ்விடத்து வல்லொற்று மிகா.

(iii) இடைத்தொடர் மொழி (iv) ஆய்தத்தொடர் மொழி:

இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும் வன்கணத்தொடு புணர்வுழி இயல்பாய் முடியும். குற்றுகரங்களுள் ஈரொற்றுக்கள் இடையே தொடர்ந்து வருங்கால், அவற்றுள் முன்னையது இடையெழுத்தாக இருப்பின், அதுகொண்டே இடைத்தொடர்க் குற்றுகரம் என்றல் கூடாது; அதன்பின் வரும் வல்லெழுத்துக்களையோ அன்றி மெல்லெழுத்துக்களையோ கொண்டுதான் வன்றொடர்க் குற்றுகரம் என்றும், மென்றொடர்க் குற்றுகரம் என்றும் பெயர் கூறப்படும். எனவே குற்றுகரங்களுக்குப் பெயர் கூறும்பொழுது, ஈற்றயல் நின்ற எழுத்தைக் கொண்டே பெயர் கூற வேண்டும் என்பது பெறப்படும். சுட்டு முதலாகிய ஆய்தத் தொடர் மொழிகள் அல்வழிக்கண் உயிர் முதல் மொழியொடு புணர்வுழி ஆய்தம் கெடாது இயல்பாய் முடியும். ஏனைக்கணங்களொடு புணரின் அவ்வாய்தம் கெட்டு முடியும்.

(v) வன்றொடர் மொழி:

வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்தொடு புணரின் இடையில் வல்லெழுத்து மிக்கு முடியும்.

(vi) மென்றொடர் மொழி:

சுட்டெழுத்து நீண்ட மென்றொடர் மொழிகளும், யா வினாவை முதலாகக் கொண்ட மென்றொடர் மொழிகளும் வல்லெழுத்தொடு

புணர்வுழி வல்லெழுத்து மிக்கு முடியும். இவற்றுள் யா விஞவை முதலாகக் கொண்ட மென்றொடர் மொழிகள் வல்லெழுத்தொடு புணர்வுழி வல்லெழுத்து மிகுதலின்றி இயல்பாயும் முடியும். சுட் டெழுத்து நீளாத மென்றொடர் மொழிகளும், யா விஞவை முதலாக வுடைய மென்றொடர் மொழிகளும் வல்லெழுத்தொடு புணர்வுழி, இடையே வல்லெழுத்து மிக்கு முடியும். உண்மைத் தன்மையை உணர்த்தும் உண்டு என்னும் சொல்முன் வன்கணம் வரின், நிலை மொழி யிறுதியிலுள்ள உகரம் தான் ஏறிய மெய்யொடும் கெடும்; ஆண்டுள்ள ணகரம் ளகரமாகத் திரியும்.

வன்றொடர் மொழிகளும் மென்றொடர் மொழிகளும் வன் கணத்தொடு புணர்வுழி வந்த வல்லெழுத்து மிக்கு முடியும். இவற்றுள் மென்றொடர் மொழிகள் வன்கணத்தொடு புணர்வுழி வந்த வல்லொற்று மிக்கும், குற்றுகரத்தையடுத்து நின்ற எழுத்து கிளையொற்ருகத் திரிந்தும் முடியும்.

அறுவகைக் குற்றுகரமும் அல்வழிக்கண் வன்கணத்தொடு புணர்வுழி இயல்பாய் முடியும்.

2. சாரியை பெறுவன:

குற்றுகர ஈற்று மரப்பெயர்கள் வன்கணத்தொடு புணர்வுழி இடையே அம்முச் சாரியை பெறும். அச்சாரியை பெறும் மென் ருெடர்க் குற்றுகர ஈற்று மரப்பெயர்களுள் சில வல்லொற்ருகத் திரியாது மெல்லொற்ருகவே நிற்பனவும் உள. ஈரெழுத்து மொழி யும், வல்லொற்றுத் தொடரும் வன்கணத்தொடு புணர்வுழி இடையே, அம்முச் சாரியை பெறுதலும் உண்டு. மென்றொடர் மொழிகளுட் சில வன்கணத்தொடு புணர்வுழி நிலைமொழியிலுள்ள ஒற்றுத் திரியாது அக்குச் சாரியையும் பிற சாரியையும் பெறுதலும் உண்டு. 'வண்டு, பெண்டு' என்னும் சொற்கள் வன்கணத்தொடு புணர்வுழி இன்சாரியை பெறும். இவற்றுள் 'பெண்டு' என்னும் சொல் இன்சாரியையே யன்றி அன்சாரியையும் பெறும். 'யாது, அஃது, இஃது. உஃது' என்னும் சொற்கள் வன்கணத்தொடு புணர் வுழி இடையே அன்சாரியை பெறும்.

3. திசைப் பெயர்கள்:

இரண்டு பெருந்திசைகள் தம்முட் புணரின் இடையே ஏ என்னும் சாரியை வரும். 'வடக்கு' என்பதனொடு கிழக்கு அல்லது மேற்கு என்னும் திசைகள் புணரின் நிலைமொழியிலுள்ள ககர வுகரம் கெடும். 'தெற்கு' என்னும் திசையொடு கிழக்கு அல்லது மேற்கு என்னும் திசைகள் புணரின் நிலைமொழியிலுள்ள ககர வுகரம் கெடுவதுடன் அடுத்துநின்ற ஒற்றும் னகரமாகத் திரியும்.

4. எண்ணுப் பெயர்கள்:

'பத்து' என்னும் பெயர் முன் ஒன்று முதல் எட்டு ஈருன எண்கள் வரின் நிலைமொழியிலுள்ள தகரவுகரம் கெடும். வரு மொழியில் இரண்டு என்னும் சொல்வரின் நிலைமொழியிலுள்ள னகரம் இரட்டும். ஏனைய பெயர்கள் வரினும் ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் வரினும் இடையே இன்சாரியை வரும். பத்து என்னும் சொல்முன் நிறைப்பெயர், அளவுப்பெயர்கள் வருங்காலும் இவ்விதியையே பெறும்.

ஒன்று முதல் ஒன்பது ஈருகவுள்ள எண்கள் நிலைமொழிகளாக நிற்க வருமொழியில் பத்து என்னும் பெயர் வருமாயின், பத்து என்னும் சொல்லிலுள்ள இடையொற்றுக் கெட அவ்வழி ஆய்தம் வரும். நிலைமொழியில் ஆறு என்னும் சொல் தவிர ஏனைய எண்ணுப் பெயர்களிலெல்லாம் குற்றுகரம் தான் ஏறிய மெய்யொடும் கெடும். இவற்றுள் ஒன்று, இரண்டு என்னும் எண்ணுப் பெயர்களிலுள்ள னகர ணகரங்கள் ரகரவுகரமாகத்திரியும். மூன்றும் ஆறும் நெடு முதல் குறுகி முடியும். மூன்று என்பதிலுள்ள னகரவொற்றுப் பகர வொற்றாகத் திரியும். நான்கண் ஒற்று றகரமாகவும், ஐந்த னொற்று மகரமாகவும், எட்டன் ஒற்று ணகரமாகவும் திரியும்.

ஒன்பது என்னும் எண்ணுப்பெயர்முன் பஃது என்னும்சொல் வரின் நிலைமொழியிலுள்ள ஒகரத்தின் முன் தகரவொற்றுத் தோன் றும். பது என்பது கெட்டு னகரவொற்று ணகரவொற்றாக இரட்டித்து ஊகாரம் பெற்று நிற்கும். வருமொழியாய பஃது என்பதிலுள்ள பகரவுயிர் மெய்யும் ஆய்தமும் கெட இறுதியிலுள்ள 'து' என்பது றகரவொற்றாகத் திரிந்து தொண்ணூறு என்றாகும்.

ஒன்று முதல் ஒன்பான் எண்களின் முன்னர் அளவுப் பெயரும், நிறைப்பெயரும் வரின் மேல் பத்து என்னும் பெயரொடு புணருங் கால் பெற்ற விதியையே பெறும். இவற்றுள் மூன்று என்னும் சொல்முன் அளவுப் பெயரும் நிறைப்பெயருமாய க ச த ப க்கள் வருமொழியில்வரின் வந்த வல்லொற்று மிக்கு முடியும். ஐந்து என்னும் சொல்லிலுள்ள ஒற்று மகரமாகவும் திரியும். எட்டு என்பதன்முன் ந ம வ என்பன வரினும், உயிர்க்கணமும், வன் கணமும் வரினும், டகரம் ணகரமாய்த் திரிந்து வேறு விகாரமின்றி முடியும். ஐந்தும் மூன்றும் ந ம வருகாலை வந்த தொக்கும். மூன்றனொற்று வகரம் வருவழி வந்த வகரத்தின் வடிவாய்த் திரியும். நான்கனொற்று லகரமாயும், ஐந்து என்பதில் ஐ நீங்கலாக ஏனைய கெட்டும் முடியும். ஒன்று இரண்டு என்னும் பெயர்முன் உயிர்முதன் மொழிவரின் நிலைமொழியிலுள்ள உகரம் கெட்டும் முதனிலை நீண்டும் முடியும். மூன்று என்பதிலுள்ள னகரம் வகரமாகவும், நான்கு என்பதிலுள்ள னகரம் லகரமாகவும், ஐந்து என்பதிலுள்ள நகரம் கெட்டும் முடியும். 'மூன்று' என்னும் சொல்முன் உழக்கு என்பது வரின் முதனிலை நீண்டும், முன்னர்க் குறுகி நின்ற ஆறு என்னும் சொல் நீண்டும் முடியும். ஒன்பது என்னும் சொல்முன் அளவுப் பெயர் வரினும், நிறைப் பெயர் வரினும் இடையே இன்சாரியை பெற்று முடியும். ஒன்றுமுதல் ஒன்பான் எண்ணுப் பெயர்களின் முன் நூறு என்பது வரின் மேல் பத்து என்பதனோடு புணரும் வழிக் கூறிய புணர்ச்சி விதி யையே பெறும். மூன்று என்பதிலுள்ள ஒற்று நகரமாயும் நான்கு ஐந்து என்ற பெயர்களிலுள்ள ஒற்றுத் திரியாமலும் இருக்கும்.

'ஒன்பது' என்னும் சொல்முன் நூறு என்பது புணரின் ஒன்பது என்னும் எண்ணின்முன் தகரவொற்று வரும். னகரவொற்று ளகரமாக இரட்டும். பது என்பது கெடும். வருமொழியிலுள்ள 'நூ' என்பதிலுள்ள நகரம் கெட்டு அவ்வழி ஊகாரம் ஆகார மாய்த் திரியும். அதன் பின்னர் இகரமும் ரகரமும் வந்து இறுதியி லுள்ள 'று' என்பது கெட்டு மகரவொற்றுப் பெற்றுத் தொள் ளாயிரம் என்றாகும்.

ஒன்று முதல் ஒன்பது எண்களின் முன் ஆயிரம் என்பது வரின் முதல் ஈரெண்களாய ஒரு, இரு என்பவற்றிலுள்ள உகரம் கெடும். அம்முதனிலைகள் நீண்டு வரினும் இழுக்கில்லை. மூன்றன் ஒற்று வகாரமாயும், நான்கன் ஒற்று லகாரமாயும், ஐந்தனொற்று யகார மாயும் திரியும். ஒன்பது என்னும் எண்ணுயின் தந்நிலை திரியாது இன்சாரியை ஏற்று முடியும்.

ஒன்றுமுதல் ஒன்பது வரையுள்ள எண்களின்முன் நூறுயிரம் என்னும் எண்ணுப்பெயர் வரின் முன் நூறு என்பதனோடு புணர்ந்தாற் போன்றே அப்புணர்ச்சி விதிகளைப் பொருந்தும். 'நூறு' என்னும் பெயர்முன் ஒன்றுமுதல் ஒன்பது வரையிலுள்ள பெயர்கள் புணரினும் ஒருபஃது முதலிய பெயர்கள் புணரினும் நிலைமொழியில் ஒரு றகரவொற்று மிகும் அளவுப்பெயர் நிறைப் பெயர் புணரினும் அவ்வியல்பிற்றாய் முடியும், ஒருபஃது முதலிய சொற்களின் முன்னர் ஒன்றுமுதல் எட்டுஈரும் எண்கள்வரின், நிலைமொழியிலுள்ள ஆய்தம் கெட்டுத் தகரவொற்று மிகும். அந் நிலைமொழிகளின் பின்னர் ஆயிரம் என்னும் சொல்வரினும் அளவுப் பெயரும், நிறைப் பெயரும் வரினும் இடையே இன் சாரியை பொருந்தும். ஒன்று என்னும் எண்ணின்முன் வல்லெழுத்துத் தோன்றினும், ஞ, ந, ம வந்தியையினும், ய, வ, வந்தியையினும் முற்கூறிய முடிபையே பெறும். ஒன்று என்னும் எண்முன் உயிர் முதல் மொழியும் யாமுதல் மொழியும் வரின் நிலைமொழி ஒகரம் ஓவாகும். அவ்விடத்துள்ள ரகரத்தில் ஏறிய உகரம் கெடும். இரண்டு முதல் ஒன்பது வரையிலுள்ள எண்முன் அளவுப் பெய ராகிய 'மா' என்னும் சொல்வரின் முற்கூறியவாறு விகாரமாயும் முடிபும்; இயல்பாயும் முடியும்.

5: செய்யுள் முடிபு:

'ல ண' எனவரும் புள்ளியீற்றுச் சொற்கள் வேற்றுமைக்கண் வன்கணத்தோடு புணர்வுழி இடையே, 'கெழு' 'உம்' என்னும் சாரியைகளைப் பெற்று முடியும்.

6. புணரியல் நிலையிடை உணரத் தோன்றுதன :

இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்குரிய உரிச்சொற்களும், பண்புப்பெயரொடு சேர்ந்த ஐம்பாற்சொற்களும், வினைத்தொகைகளும், தம்முன் தாம்வரும் எண்ணுப்பெயர்களும், உலகத்து மருவி நடந்த இலக்கணத்தைக் கடப்பாடாகவுடையன ; ஆதலின் இவைபிரித்துப் புணர்க்கப்படாவாம்.

7. புறனடை :

இதுகாறும் வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் கூறிய முடிபுகளன்றிப் பிறவாறு திரிந்துவரினும், அறிஞர்களின் வழக்கு முடிபுகொண்டு ஆராய்ந்து ஏற்றுக்கொள்க என்பதாம்.

குற்றியலுகரப் புணரியல்

இவ்வோத்து என்னபெயர்த்தோ எனின், குற்றியலுகர ஈறு வருமொழியோடு புணரும் இயல்பு உணர்த்தினமையின் குற்றியலுகரப் புணரியல் எனப்பட்டது.

407. ஈரெழுத்தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்.

இத்தலைச் சூத்திரம் என்நுதலிற்றோ எனின், இக்குற்றியலுகரம் வரும் இடத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: ஈர் எழுத்து ஒரு மொழி – இரண்டு எழுத்தாலாகிய ஒரு மொழியும், உயிர்த்தொடர் – உயிர்த்தொடர் மொழியும், இடைத்தொடர் – இடைத்தொடர் மொழியும், ஆய்தத்தொடர் - ஆய்தத்தொடர் மொழியும், வன்தொடர் – வன்தொடர் மொழியும், மென்தொடர் – மென்தொடர்மொழியும், ஆ இரு மூன்று – ஆகிய அவ் ஆறு என்று சொல்லப்படும்; உகரம் குறுகு இடன் - உகரம் குறுகி வரும் இடன் எ–று.

எ-டு: நாகு, வரகு, தெள்கு, எஃகு, கொக்கு, குரங்கு என வரும்.

(வி-ரை) மொழி மரபினகத்துக் குற்றியலுகரம் நெட்டெழுத்திம்பரும் தொடர் மொழியீற்றிலும் ஆக இருவழியும் வரும் என்றார் ஆசிரியர். ஈண்டு நெட்டெழுத்திம்பர் வருவதை ஈரெழுத்தொருமொழி யென்றும், ஏனைய தொடர்மொழியீற்றில் வருவதை உயிர்த்தொடர்மொழி முதலாக ஐவகைத் தொடர் மொழியிலும் வரும் என்றும் கூறுகின்றார். (1)

408. அவற்றுள்
ஈரொற்றுத் தொடர்மொழி யிடைத்தொட ராகா.

இஃது, அவ்ஆறனுள் ஓர் ஈற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: அவற்றுள் ஈர் ஒற்று தொடர்மொழி – அவற்றுள் ஈர் ஒற்றுத்தொடர் மொழிகளில், இடைத்தொடர் ஆகா – இடைத் தொடர் ஆகா, வன்றொடர், மொழியும் மென்றொடர் மொழியும் ஆம் எ-று.

எ-டு: ஈர்க்கு; மொய்ம்பு என வரும்.

(வி-ரை) தொடர்மொழிக் குற்றுகரங்களுள் ஈரொற்றுக்கள் இடையே தொடர்ந்து வருங்கால், அவற்றுள் முன்னையது இடையெழுத்தாக இருப்பின் அதுகொண்டே இடைத்தொடர்க் குற்றுகரம் என்றல் கூடாது: அதன்பின் வரும் வல்லெழுத்துக்களையோ அன்றி மெல்லெழுத்துக்களையோ கொண்டுதான் வன்றொடர்க் குற்றுகரம் என்றும், மென்றொடர்க்குற்றுகரம் என்றும் பெயர் பெறும் என்பது இளம்பூரணர் கருத்தாகும்.

தொடர்மொழிக் குற்றுகரங்களுள் ஈரொற்றுக்கள் இடையே தொடர்ந்து வரின், அவற்றுள் முதல் ஒற்று இடையின ஒற்றாக இருப்பின், அதற்குப் பின்வரும் ஒற்று இடையினமாக இராது; வல்லினமாகவோ அல்லது மெல்லினமாகவோ தான் இருக்கும் என்பது இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் கூறும் கருத்தாகும்.

ஆர்க்கு, ஈர்க்கு என்பனவற்றில், இடையில் வந்த ஈரொற்றுக்களில் முன்னையன இடையினமாக இருக்கப் பின்னையன வல்லினமாதலையும், நொய்ம்பு, மொய்ம்பு என்பனவற்றில் இடையில் வந்த ஈரொற்றுக்களில் முன்னையன இடையினமாக இருக்கப் பின்னையன மெல்லின மாதலையும் காண்க.

ஆயினும் இக்கருத்து 'யரழ என்னும் மூன்றும் முன் ஒற்றக், க ச த ப ங ஞ ந ம ஈரொற் றாகும்' என்னும் நூற்பாவிலேயே பெறப்படுதலின் இது பொருந்தாது; ஆதலின் இளம்பூரணர் கருத்தே இந்நூற்பாவிற்குப் பொருத்தம் உடைத்தாம். (2)

409. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகர[1] நிறையும்.

இஃது, எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்: அல்லது கிளப்பினும் - அல்வழியைச் சொல்லும் இடத்தும், வேற்றுமைக்கண்ணும்—வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும், எல்லா இறுதி உகரமும் நிறையும் - ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும் எ-று.

எ—டு: நாகு கடிது, நாகு கடுமை; வரகு கடிது, வரகு கடுமை என வரும்.

(வி-ரை) அறுவகைக் குற்றுகரங்களும் தனிமொழிக்கண் வருங்கால் குறுகி அரைமாத்திரையும், அவைபுணர் மொழிக்கண் வருங்கால் குறுகாது ஒருமாத்திரையும் பெற்று நிற்கும் என்பது இளம்பூரணர் கூறும் பொருளாகும். நச்சினார்க்கினியர் 'உகரம் நிலையும்' எனப்பாடம் ஓதி அறுவகைக் குற்றுகரங்களும் தனி மொழியில் நிற்குங்கால் அரை மாத்திரை பெற்றது போலவே, புணர்மொழிக்கண் வரினும் அவ்வரை மாத்திரை பெற்றே நிற்கும் எனப் பொருள் கூறி இளம்பூரணர் கருத்தை மறுப்பர்.

1. 'நிலையும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

எனவே 'நாகு' என்ற விடத்தும், 'நாகு கடிது' என்றவிடத்தும் உகரம் அரைமாத்திரையே பெறும் என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகின்றது. 'நாகு' என்றவிடத்து உகரம் அரைமாத்திரையும், 'நாகுகடிது' என்றவிடத்து ஒரு மாத்திரையும் பெறும் என்பது இளம்பூரணர் கருத்தாகின்றது. இளம்பூரணர் கருத்தின்படி நாகு கடிது என்றவிடத்து உகரம் முற்றுகரமாக ஆகின்றது.

நச்சினார்க்கினியர் இளம்பூரணர் கருத்தை மறுப்பது பொருத்தம் இல்லை யெனினும், 'நாகுகடிது' என்றவிடத்து உள்ள உகரத்தை முற்றுகரமாகக் கொள்வது பொருத்தமாகுமா? என்பதும் ஆராயத் தக்கதே யாகும். (3)

410. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை இயற்கை நிலையலு முரித்தே.

இஃது, எய்தியது ஒரு மருங்கு மறுக்கின்றது.

இ-ள்: வல்லொற்றுத் தொடர்மொழி - (அவ்வாறீற்றுள்ளும்) வல்லொற்றுத் தொடர்மொழி, வல்லெழுத்து வருவழி-வல்லெழுத்து முதல்மொழி வருமொழியாய் வரும் இடத்து. தொல்லை இயற்கை நிலையலும் உரித்து-முன் (எழுத்-12) கூறிய இயற்கை நிற்றலும் உரித்து எ-று.

எ-டு: கொக்குக் கடிது, கொக்குக்கடுமை என வரும்.

(வி-ரை) முன்னைய நூற்பாவில் அறுவகைக் குற்றுகரமும் புணர் மொழியிடைப்படின் அவ்வுகரம் நிறைந்து வரும் என்றார் இளம்பூரணர். ஈண்டு அவ்வறுவகைக் குற்றுகரத்துள்ளும் வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரம் மட்டும் புணர் மொழியிடைப்படின் அவ்வுகரம் ஒரு மாத்திரையாக நிறையாது அரை மாத்திரையே பெற்று நிற்கும் என்று கூறுகின்றார். 'தொல்லை இயற்கை' என்றது அரைமாத்திரை பெறுதலையாகும். நச்சினார்க்கினியர் அரை மாத்திரையினும் குறுகி நிற்கும் என்பர். (4)

411. யகரம் வருவழி இகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது.

இது, குற்றியலிகரம் புணர்மொழியுள் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: யகரம் வருவழி உகரக்கிளவி துவரத் தோன்றாது-யகர முதல்மொழி வரும் இடத்து நிலைமொழி உகரம் முற்றத் தோன்றாது இகரம் குறுகும்-ஆண்டு ஓர் இகரம் வந்து குறுகும் எ-று.

எ-டு: நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது, கொக்கியாது, குரங்கியாது என வரும்.

இதனானே, ஆகார ஈறு அகரம் பெற்றாற் (உயிர்மயங்கியல்-24) போல ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் இகரம் பெற்று யகர முதல்மொழியோடு புணருமாறு கூறிற்றாயிற்று.

(வி-ரை) 34 - ஆம் நூற்பாவையும், இந்நூற்பாவையும் தொகுத்தே நன்னூலாரும் 'யகரம் வரக்குறள் உத்திரி இகரமும், அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய' (நன்-93) என்றனர். (5)

412. ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.

இது, மேற்கூறிய ஆறினுள்ளும் முன் நின்ற இரண்டிற்கும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபு கூறுகின்றது.

இ-ள்: ஈர் எழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்-ஈர் எழுத்து ஒருமொழிக் குற்றியலுகர ஈறும் உயிர்த் தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், வேற்றுமை ஆயின்-வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயின், இனவொற்று இடைமிக வல்லெழுத்து மிகுதி தோற்றம் வேண்டும்-இனமாகிய ஒற்று இடையிலே மிக வல் லெழுத்து மிகுதி தோன்றி முடிதல் வேண்டும் எ-று.

எ-டு: யாட்டுக்கால்; செவி, தலை, புறம் எனவும்; முயிற்றுக் கால்; சினை, தலை, புறம் எனவும் வரும்.

'தோற்றம்' என்றதனால், இவ்விரண்டிற்கும் இயல்பு கணத்து முடிபு கொள்க.

எ-டு: யாட்டு ஞாற்சி, முயிற்று ஞாற்சி; நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு, ஆட்டம் என வரும்.

(வி-ரை) 'நெடிலோ(டு) உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள், டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே' (நன்–183) என்பர் நன்னூலாரும். (6)

413. ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே.

இஃது, எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்: இன ஒற்று இடை மிகா மொழியுமார் உள–இன ஒற்று இடையில் மிக்கு முடியாத மொழிகளும் உள; வல்லெழுத்து மிகல் அ திறத்து இல்லை-வல்லெழுத்து மிக்கு முடிதல் அக்கூற்றுள் இல்லை எ-று.

எ-டு: நாகுகால்; சினை, தலை, புறம் எனவும்; வரகுகதிர்; சினை, தலை, புறம் எனவும் வரும்.

'அத்திறம்' என்றதனால், உருபிற்கு எய்திய சாரியை பொருட்கு எய்தியவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

எ-டு: யாட்டின்கால், முயிற்றின்கால், நாகின்கால், வரகின் கால் என வரும்.

(வி-ரை) உருபியலுள் 'குற்றிய லுகரத் திறுதி முன்னர், முற்றத் தோன்றும் இன்னென் சாரியை' (23) எனப் பொதுப்பட விதிப்பினும், 'நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும், அப்பால் மொழிகள் அல்வழி யான' (24) என அடுத்த நூற்பாவில் ஒற்று இடையில் மிகும் யாடு முதலிய ஈரெழுத்து மொழிகளுக்கு அச்சாரியை ஆசிரியர் விலக்கி யிருத்தலின், ஈண்டு யாட்டின்கால் முயிற்றின்கால் எனக் காட்டுதல் சிறப்பின்றும். (7)

414. இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடைஆ இயல என்மனார் புலவர்.

இஃது, இடைநின்ற இரண்டிற்கும் முடிபு கூறுகின்றது.

இ-ள்: இடை ஒற்றுத் தொடரும் ஆய்தத்தொடரும் நடை–இடை ஒற்றுத் தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் நடக்கும் இடத்து, ஆ இயல என்மனார் புலவர்–மேற்கூறிய இயல்பு முடிபினை உடைய என்று சொல்லுவர் புலவர் எ-று.

எ–டு: தெள்குகால்; சிறை, தலை, புறம் எனவும்; எஃகுகால்; சிறை, தலை, புறம் எனவும் வரும்.

(வி-ரை): இந்நூற்பாவையும் இதற்கு முன்னைய நூற்பாவையும் இணைத்தே நன்னூலாரும், 'இடைத்தொடர் ஆய்தத்தொடர் ஒற்(று) இடையில், மிகாநெடில் உயிர்த்தொடர் முன் மிகா வேற்றுமை' (நன்–182) என்றனர். (8)

415. வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்.

இது, பின் நின்ற இரண்டிற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் – வன்றொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் மென்றொடர் மொழிக்குற்றியலுகர ஈறும், வந்த வல்லெழுத்து ஒற்று இடை மிகும் – வருமொழியாய் வந்த வல்லொற்று இடையிலே மிக்கு முடியும்; மெல்லொற்று தொடர்மொழி மெல்லொற்று எல்லாம் – அவ்விரண்டு ஈற்றினுள் மெல்லொற்றுத் தொடர்மொழிக்கண் நின்ற மெல்லொற்றெல்லாம், இறுதி வல்லொற்று கிளை ஒற்று ஆகும்–இறுதி வல்லொற்றும் கிளை வல்லொற்றும் ஆய் முடியும் எ–று.

எ–டு: கொக்குக்கால்; சிறகு, தலை, புறம் எனவும்; குரக்குக் கால்; செவி, தலை, புறம் எனவும்; எட்குக் குட்டி; செவி, தலை, புறம் எனவும் வரும்.

'வந்த' என்றதனால், இவ்விரண்டிற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கு எய்தியவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

எ-டு: கொக்கின்கால், குரங்கின்கால் என வரும்.

'எல்லாம்' என்றதனால், பறம்பிற்பாரி என்றாற் போல்வன மெல்லொற்றுத் திரியாமையும் கொள்க.

'ஒற்று' என்ற மிகுதியான், இயல்புகணத்துக்கண்ணும் குரக்கு ஞாற்சி; நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு, ஆட்டம் என மெல்லொற்றுத் திரிதலும் கொள்க.

(வி-ரை) இந்நூற்பாவில் கூறப்படும் கருத்துக்கள் மூன்று ஆகும். (1) வன்றொடர்க் குற்றுகரத்தின் முன்னும், மென்றொடர்க் குற்றுகரத்தின் முன்னும் வல்லினம் வரின் வந்த வல்லெழுத்து மிகும்.

எ-டு: கொக்கு+கால் = கொக்குக்கால். குரங்கு + கால் = குரங்குக்கால்.

மென்றொடர் முன் வல்லினம் வர, அவ்வல்லெழுத்து மிகும் என்றற்கு, குரங்குக்கால், செவி, தலை, புறம் என்ற எடுத்துக் காட்டுக்கள் உரையில் இருக்கவேண்டும். அது தவறிவிட்டது போலும். ஆனால் நச்சினார்க்கினியத்தில் இவ்வெடுத்துக் காட்டுக் கள் உள்ளன. நன்னூலார் வன்றொடர்க் குற்றுகரம் முன் வரும் வல்லினமே மிகும் என்பர். 'வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி' (நன்-181) என்பது நன்னூல்.

(2) மென்றொடர்க் குற்றுகரத்தின் முன் வல்லினம் வரின் அம்மெல்லெழுத்து வல்லெழுத்தாகத் திரியும். (எ-டு) குரங்கு+ கால்=குரக்குக்கால். (3) மென்றொடர்க் குற்றுகரத்தின் முன் வல்லினம் வரின், அம்மெல்லெழுத்துத்தமக்கு இனமான வல்லொற் றாகத்திரியும். (எ-டு) எண்கு+குட்டி = எட்குக்குட்டி, அன்பு+ தளை=அற்புத்தளை. ணகரத்திற்கு டகரமும், னகரத்திற்கு றகரமும் புணர்ச்சியும் பிறப்பும் நோக்க இன (கிளை) வெழுத்தாக இருத்த லின் இவை கிளை வல்லொற்றாகத் திரிந்தமைக்குக் காட்டு ஆகிற்று.

இங்ஙனம் சில மென்றொடர்க்குற்றுகர ஈற்றுச் சொற்கள் வல்லினம் வரக் கிளையொற்றாகத்திரியினும் எல்லாச் சொற்களும் இங்ஙனம் திரியவேண்டும் என்ற நியதியில்லை. திரியாதன வருமாறு:

வண்டு + கால் = வண்டுக்கால்; பந்து + திரட்சி = பந்துத்திரட்சி என்பன. இவற்றை நோக்கியே நன்னூலாரும் 'மென்றொடர் மொழியுள் சிலவேற்றுமையில், தம்மின வன்றொடர் ஆகாமன்னே' (நன்–184) என்றனர்.

'ஒற்று' என்ற மிகுதியான், இயல்பு கணத்துக்கண்ணும் மெல்லொற்றாகத் திரியும் எனக்கூறிச் 'சிலப்பதிகாரம்' என்ற சொல்லை எடுத்துக் காட்டுவர் நச்சினார்க்கினியர். (9)

416. மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை.

இஃது, அவ்விற்று இரண்டிற்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ–ள்: மரப்பெயர் கிளவிக்கு சாரியை அம்–வன்றொடரின் கண்ணும் மென்றொடரின் கண்ணும் மரப்பெயராகிய சொல்லிற்கு வரும் சாரியை அம்முச் சாரியை எ–று.

எ–டு: தேக்கங்கோடு; செதிள், தோல், பூ எனவும்; வேப்பங் கோடு; செதிள், தோல், பூ எனவும் வரும். (10)

417. மெல்லொற்று வலியா மரப்பெயரு முளவே.

இது, மென்றொடர் மொழிக்கு எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

இ–ள்: மெல்லொற்று வலியா மரப்பெயரும் உள–மெல்லொற்று வல்லொற்றாய்த் திரியாது முடியும் மரப்பெயரும் உள எ–று.

எ–டு: குருந்தங்கோடு; செதிள், தோல், பூ எனவும்; புன்கங் கோடு; செதிள், தோல், பூ எனவும் வரும்.

மற்று, இது நிலைமொழித்தொழிலை நிலைமொழி விலக்குமாதலின் (எழுத்-229) சாரியை வகுப்பவே முடியும் பிற எனின், இது நிலைமொழியின் உள் தொழிலாகலின் அவ்வாறு விலக்குண்ணாதென்பது கருத்து.

(வி-ரை) மேல் 415 – ஆம் நூற்பாவில் 'மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம் வல்லொற்றாகும்' என்றும், 'கிளையொற்றாகும்' என்றும் கூறப்பட்ட விதியால், குருந்து என்பது குருக்து என்றும், புன்கு என்பது புற்கு என்றும் ஆதல் வேண்டும். இவ்விதி நிலைமொழிக்கே கூறப்பட்டன. ஆனால் ஈண்டு மெல்லொற்று வல்லொற்றாகத் திரியாத மரப் பெயருமுள என்பதால், குருந்து, புன்கு என்பன வல்லொற்றாக ஆகாது இயல்பாகவே இருக்கும் எனப் பெறப்படுகின்றது. இதுவும் நிலைமொழி பற்றிய விதியே யாகும். இவ்விரு நூற்பாக்களுக்கும் இடையில் 'மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை' என்னும் நூற்பா உளது. அந்நூற்பாவால் மரப்பெயர்கள் அம்முச்சாரியை பெறும் என்பது பெறப்படுகிறது. இதுவும் நிலைமொழித் தொழில் பற்றிய விதியே யாகும். நிலைமொழித் தொழிலை நிலைமொழித் தொழில் விலக்கும் என்பது பொதுவானதொரு நியதி. இதனை 227, 229-ஆம் நூற்பாக்களில் இளம்பூரணர் கூறுவதால் அறியலாம். 227–ஆம் நூற்பாவால் அகரம் பெறும் என விதித்த விதி, 229--ஆம் நூற்பாவில் அத்துச்சாரியை பெறும் என விதித்த விதியால் விலக்குண்டது. அதுபோன்றே ஈண்டும் (445) வன்றொடர் மொழிக்கும், மென்றொடர் மொழிக்கும் விதித்த விதி 416–ஆம் நூற்பாவில் அம்சாரியை பெறும் என விதித்த விதியால் (மெல்லொற்றுக்கள் வல்லொற்றாகத் திரியும் என்பது) விலக்குண்ணும். அங்ஙனமாக இந்நூற்பா வேண்டுவதில்லையே! என்பது வினா. இதற்கு மிக நுண்மையாக விடை தருகின்றார் உரையாசிரியர். 227, 229–ஆம் நூற்பாக்களுக்கும், இங்குக் கூறப்பட்டிருக்கும் 415, 416, 417–ஆம் நூற்பாக்களுக்கும் வேற்றுமையுண்டு. ஆண்டு அகரம் பெறும் என விதித்ததும், அத்துப்பெறும் என விதித்ததும் நிலைமொழி விறுதி பற்றியதாகும். ஆதலின் நிலைமொழித் தொழிலை நிலைமொழித் தொழில் விலக்கிற்று. ஈண்டு

மெல்லொற்று வல்லொற்ருகத் திரியும் என்றது, நிலைமொழியின் இடையில் ஏற்படும் மாறுதலாகும். குரங்கு குரக்கு என்ருதலாகும். அம்முச்சாரியை பெறும் என விதித்ததோ நிலைமொழி இறுதி பற்றிய விதியாகும். எனவே நிலைமொழியின் இடையில் ஏற்படும் மாறுதலே, நிலைமொழியின் இறுதி பெறும் மாறுதல் விலக்காது என்பதால், இந்நூற்பா இன்றியமையாதாயிற்று என்பது இளம்பூரணர் தரும் விடையாகும். நிலைமொழித்தொழில்— நிலைமொழிக்குரிய புணர்ச்சி விதி. (11)

418. ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்
அம்மிடை வரற்கும் உரியவை உளவே
அம்மர பொழுகு மொழிவயி னான.

இஃது, ஈரெழுத்து ஒரு மொழிக்கும் வன்ருெடர் மொழிக்கும் எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்: ஈர் எழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்— ஈரெழுத்து ஒருமொழிக் குற்றியலுகரமும் வன்ருெடர் மொழிக் குற்றியலுகரமும், அம் இடை வரற்கும் உரியவை உள-முன் முடித்துப் போந்த முடிபுகளன்றி அம்முச்சாரியை இடைவந்து முடித்தற்கு உரியனவும் உள. யாண்டெனின், அம்மரபு ஒழுகும் மொழிவயின் ஆன-அவ் இலக்கணம் நடக்கும் மொழியிடத்து எ-று.

எ-டு: ஏறங்கோள், வட்டம்போர் என வரும்.

'உள' என்றதனுல், தெங்கங்காய், பயற்றங்காய் என வன்ருெடர் அல்லனவற்றிற்கு அம்முப்பேறு கொள்க.

'அம்மரபொழுகும்' என்றதனுல், அரசக்கன்னி, முரசக்கடிப்பு என அக்குப்பேறும் கொள்க. இன்னும் அதனுனே, இருட்டத்துக் கொண்டான் என்னும் அத்துப்பேறும் கொள்க. இன்னும் அதனுனே, மயிலாப்பிற் கொற்றன், பறம்பிற்பாரி என இன்பேறும் கொள்க. இன்னும் அதனுனே, கரியதன்கோடு என அன்பேறும் கொள்க. (12)

419. ஒற்றுநிலை திரியா தக்கொடு வருஉம்
அக்கிளை மொழியும் உளவென மொழிப.

இது, மென்றொடர் மொழியுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்குதலும் எய்தியதன்மேல் சிறப்பும் கூறுகின்றது.

இ-ள்: ஒற்றுநிலை திரியாது அக்கொடு வரும் அ கிளைமொழியும் உள என மொழிப-ஒற்று முன் நின்ற நிலை திரியாது அக்குச் சாரியையோடும் பிற சாரியையோடும் வரும் அக்கிளை யெழுத்து மொழியும் உள என்று சொல்லுவர் ஆசிரியர் எ-று.

எ-டு: குன்றக் கூகை, மன்றப் பெண்ணை என வரும்.

'உம்மையால்', கொங்கத்துழவு, வங்கத்து வாணிகம் என அத்துப் பெற்றன.

'நிலை' என்றதனான், ஒற்றுநிலை திரியா அதிகாரத்துக்கண் இயைபு வல்லெழுத்து விலக்குக.

'அக்கிளைமொழி' என்றதனல், பார்ப்பனக்கன்னி, பார்ப்பனச் சேரி என அன்னும் அக்கும் வந்தன கொள்க.

(வி-ரை) கிளையெழுத்து மொழி என்பதற்குக் குன்று, மன்று என்பனவற்றைக் காட்டும் பொருத்தம் விளங்கவில்லை. மேல் ணகர னகர ஈற்றுக் கிளைப்பெயர்களுக்கு உமண், எயின் என்பனவற்றைக் காட்டியதுபோல, குற்றியலுகர ஈற்றுக் கிளைப்பெயர்களுக்கும் அத்தகைய பெயர்கள் உளவாகக் காட்டின் பொருத்தமாக இருக்கும். ஆனல் அத்தகைய கிளைப் பெயர்கள் எவையென அறிய இயலவில்லை. (13)

420. எண்ணுப் பெயர்க்கிளவி உருபியல் நிலையும்.

இது, குற்றுகர ஈற்று எண்ணுப்பெயரொடு பொருட்பெயர் முடிக்கின்றது,

இ-ள்: எண்ணுப்பெயர் கிளவி உருபு இயல் நிலையும்- எண்ணுப்பெயராகிய சொற்கள் உருபு புணர்ச்சியின் இயல்பின் கண்ணே (199) நின்று அன்பெற்று முடியும் எ-று.

எ-டு: ஒன்றன்காயம், இரண்டன்காயம்; சுக்கு, தோரை, பயறு என வரும். (14)

421. வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்.

இது, மென்றொடர் மொழியுள் சிலவற்றிற்குப் பிற முடிபு கூறுகின்றது.

இ-ள்: வண்டும் பெண்டும் இன் ஒடு சிவணும் – வண்டு என்னும் சொல்லும் பெண்டு என்னும் சொல்லும் இன்சாரியை யோடு பொருந்தி முடியும் எ – று.

எ – டு வண்டின்கால், பெண்டின்கால் எனவரும், (15)

422. பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்.

இது மேற்கூறியவற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ – ள் பெண்டும் என் கிளவிக்கு அன்னும் வரையார் – பெண்டு என்னும் சொல்லிற்கு (இன்னேயன்றி) அன் சாரியையும் வரையார் எ – று.

எ – டு பெண்டன்கை என வரும். (16)

423. யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் உருபியல் நிலையும்.

இஃது, ஈரெழுத்து ஒருமொழியுள் ஒன்றற்கும், சுட்டு முதல் ஆய்தத் தொடர்மொழிக்கும் வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: யாது என் இறுதியும் சுட்டுமுதல் ஆகிய ஆய்த இறுதியும் – யாது என்னும் ஈறும் சுட்டு முதலாகிய ஆய்த தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், உருபு இயல் நிலையும்– உருபு புணர்ச்சியின் இயல்பின்கண்ணே (201) நின்று அன் பெற்று, சுட்டு முதல் மொழிகள் ஆய்தம் கெட்டு முடியும் எ–று.

எ-டு: யாதன்கோடு, அதன்கோடு, இதன்கோடு, உதன் கோடு என வரும். (17)

424, முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழி யான.

இது, மேற்கூறிய ஈற்றுள் சுட்டுமுதல் ஈற்று உகரத்திற்கு ஒருவழி அல்வழி முடிபு கூறுகின்றது.

இ-ள்: முன் உயிர் வரும் இடத்து – (அவற்றுள் சுட்டு முதல் ஆய்தத் தொடர்மொழி உகர ஈறு தன்) முன்னே உயிர் வரும் இடத்து, ஆய்தப்புள்ளி மன்னல் வேண்டும்– ஆய்தப்புள்ளி (முன்பு போலக் கெடாது) நிலைபெற்று முடிதல் வேண்டும், அல்வழியான - அல்வழிக்கண் எ–று.

எ–டு: அஃதடை, இஃதடை, உஃதடை; ஆடை, இலை என ஒட்டுக,

'முன்', என்றதனுன், வேற்றுமைக்கண்ணும் உயிர் முதல் மொழி வந்த இடத்து அஃதடைபு, அஃதாட்டம் என ஆய்தம் கெடாமை கொள்க. (18)

425. ஏனைமுன் வரினே தானிலை யின்றே.

இது, மேலனவற்றிற்குப் பிறகனத்தோடு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ–ள் ஏனை முன்வரின் தான் நிலையின்று – (அச்சுட்டு முதல் உகர ஈறு உயிர்க்கணம் ஒழிந்த) பிற கணங்கள் முன் வரின் அவ் ஆய்தம் நிலையின்றி முடியும் எ – று.

எ-டு: அதுகடிது, இதுகடிது, உதுகடிது சிறிது, தீது, பெரிது. ஞான்றது, நீண்டது, மாண்டது; யாது, தீது, வலிது என வரும். (19)

426. அல்லது கிளப்பின் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை யாகும்.

இஃது, ஆறு ஈற்றுக் குற்றியலுகரத்திற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: அல்லது கிளப்பின் - அல்வழியைச் சொல்லும் இடத்து, எல்லா மொழியும் - ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் சொல்லிய பண்பின் இயற்கை ஆகும் - மேற்சொல்லிய பண்பினை யுடைய இயல்பாய் முடியும் எ - று.

எ-டு: நாகு கடிது, வரகு கடிது, தெள்கு கடிது, எஃகு கடிது, குரங்கு கடிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

எல்லா மொழியும் என்றதனால் வினைச்சொல்லும் வினைக் குறிப்புச் சொல்லும் இயல்பாய் முடிந்தன கொள்க.

எ-டு: கிடந்தது குதிரை, கரிது குதிரை என வரும்.

'சொல்லிய' என்றதனான், இருபெயரொட்டுப் பண்புத் தொகை முடிபு கொள்க.

எ-டு: காட்டுக்காணம், குருட்டெருது என வரும்.

'பண்பின்' என்றதனான் ஐ என்னும் சாரியை பெற்று வரும் அல்வழி முடிபும் கொள்க.

எ-டு: அன்றைக் கூத்தன், பண்டைச் சான்றார், ஓர் யாட்டை யானை, மற்றை யானை என வரும்.

(வி-ரை) 'பண்பின்' என்ற மிகையால் கொள்ளப்பட்ட கருத்தை ஏற்றே நன்னூலாரும், 'ஐயீற் றுடைக்குற் றுகரமும் உளவே' (நன்-185) என்றனர். (20)

427. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே

இஃது, அவ்வாறீற்றில் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: வல்லொற்றுத் தொடர்மொழி - வல்லொற்றுத்தொடர் மொழிக் குற்றியலுகரம், வல்லெழுத்து மிகும் - (வல்லெழுத்து வருவழி) வல்லெழுத்து மிக்கு முடியும் எ - று.

எ-டு: கொக்குக்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும். (21)

428. சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினா முதலிய மென்றொடர் மொழியும்
ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை.

இதுவும், அவ்வாறீற்றில் ஒன்றன்கண் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணரநின்ற இடைச்சொற்கு முடிபு கூறுகின்றது.

இ-ள்: சுட்டு சினை நீடிய மென்றொடர் மொழியும்–சுட்டாகிய சினையெழுத்து நீண்ட மென்றொடர் மொழிக் குற்றியலுகர ஈறும், யா வினா முதலிய மென்றொடர் மொழியும் – யா என்னும் வினா முதலாகிய மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், வல்லெழுத்து இயற்கை அ இயல் திரியா – மேற்கூறிய வல்லெழுத்து இயற்கை யாகிய அவ்இயல்பில் திரியாது முடியும் எ–று.

எ-டு: ஆங்குக்கொண்டான், ஈங்குக்கொண்டான், ஊங்குக் கொண்டான், யாங்குக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'இயற்கை' என்றதனான், அக்குற்றுகர ஈற்று வினையெச்ச முடிபு கொள்க.

எ-டு: செத்துக்கிடந்தான், இருந்துகொண்டான் என வரும். (22)

429. யாவினா மொழியே இயல்பு மாகும்.

இது, மேலவற்றுள் ஒன்றன்மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: யா வினா மொழி இயல்பும் ஆகும் – (அவற்றுள்) யா வினா மொழி (மேற்கூறிய விகாரமே யன்றி) இயல்பாயும் முடியும் எ–று.

எ-டு: யாங்கு கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும். (23)

430. அந்நான் மொழியுந் தந்நிலை திரியா.

இது, மேலவற்றிற்கு நிலைமொழிச் செய்கை கூறுகின்றது.

இ-ள்: அ நால் மொழியும்- (சுட்டு முதல் மூன்றும் யா முதல் மொழியுமாகிய) அந்நான்கு மொழியும், தம் நிலை திரியா- தம் மெல்லொற்று நிலை திரிந்து வல்லொற்று ஆகாது முடியும் எ-று.

'தந்நிலை' என்றதனால், மெல்லொற்றுத் திரியாது மிக்கு முடிவன பிறவும் கொள்க.

எ-டு: அங்குக்கொண்டான், இங்குக்கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என வரும்.

'யாமொழி' என்னாது 'வினா' என்றதனால், பிற இயல்பாய் முடிவனவும் கொள்க.

எ-டு: முந்து கொண்டான், பண்டுகொண்டான், இன்று கொண்டான், அன்றுகொண்டான் என வரும். (24)

431. உண்டென் கிளவி உண்மை செப்பின்
முந்தை இறுதி மெய்யொடுங் கெடுதலும்
மேனிலை யொற்றே ளகாரம் ஆதலும்
ஆமுறை யிரண்டும் உரித்தே.
வல்லெழுத்து வருஉங் காலை யான.

இது, மென்றொடர் மொழியுள் ஒரு வினைக்குறிப்பு மொழிக்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: உண்டு என் கிளவி உண்மை செப்பின் - உண்டு என்னும் சொல் (உண்டு என்னும் தொழில் ஒழிய) உண்மை என்னும் பண்பு உணர நிற்கும் இடத்து, முந்தை இறுதி மெய் யொடும் கெடுதலும் மேல் நிலை ஒற்ற ளகாரம் ஆதலும் - முற் பட்ட ஈற்றுக் குற்றியலுகரம் (தான் ஏறி நின்ற) மெய்யொடும் கெடுதலும் அதற்கு மேல் நின்ற ணகார ஒற்று ளகாரம் ஆதலு மாகிய, ஆ முறை இரண்டும் உரிமையும் உடைத்து - அம்

முறைமையுடைய இரண்டினையும் உரித்தாதலும் உடைத்து. வல்லெழுத்து வருங்காலை - வல்லெழுத்து முதல்மொழி வருங் காலத்து எ – று.

வல்லெழுத்ததிகாரம் வாரா நிற்ப, ('வல்லெழுத்து வருஉங் காலை என்பதனான்) இவ் இருமுடிபும் உள்ளது. பகர முதல் மொழி வந்தால் மற்றை மூன்று எழுத்தின் கண்ணும் ஈறு கெடாதே நின்று முடியும் என்று கொள்க.

இன்னும் அதனானே, இயல்பு கணத்து இறுதி கெடாதே முடிதல் கொள்க.

எ–டு: உள்பொருள், உண்டு பொருள் எனவும்; உண்டு காணம், உண்டு சாக்காடு, உண்டு தாமரை எனவும்; உண்டு ஞாண்; நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும் வரும்.

'உள்பொருள்' என்பது பண்புத்தொகை முடிபு அன்றோ எனின், அஃது ஓசை ஒற்றுமைப்படச் சொல்லும் வழியது; இஃது ஓசைஇடையறவுபடச் சொல்லும் வழியது போலும். (25)

432. இருதிசை புணரின் ஏயிடை வருமே.

இது, குற்றுகர ஈற்றுத் திசைப்பெயர்க்கு அல்வழிக்கண் வேறு முடிபு கூறுகின்றது.

இ–ள்: இருதிசை புனரின் ஏ இடை வரும் - இரண்டு பெருந்திசைகள் தம்மிற் புணரின் ஏ என்னும் சாரியை இடை வந்து புணரும் எ – று.

எ–டு: வடக்கே தெற்கு, கிழக்கே மேற்கு என வரும். (26)

433. திரிபுவேறு கிளப்பின் [1]ஒற்றும் இறுதியும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய்த் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணருங் காலை யான.

1. 'ஒற்றும் உகரமும்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இஃது, அப்பெருந்திசையோடு கோணத்திசை புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: திரிபு வேறு கிளப்பின்-(அப் பெருந்திசைகளோடு) கோணத்திசைகளை வேருகப் புணர்க்கும் இடத்து, ஒற்றும் இறுதியும் கெடுதல் வேண்டும் என்மனர் புலவர்-(அவ் உகரம் ஏறி நின்ற) ஒற்றும் அவ் ஈற்று உகரமும் கெட்டு முடிதல் வேண்டுமென்று சொல்லுவர் புலவர், தெற்கொடு புணருங் காலை-தெற்கு என்னும் திசையோடு புணரும் காலத்து, ஒற்று மெய் திரிந்து னகாரம் ஆகும்- (அதன்கண் நின்ற) றகார ஒற்றுத் தன் வடிவு திரிந்து னகாரமாய் முடியும் எ-று.

'திரிந்து' என்றதனன், வடக்கு என்பதன்கண் இடை நின்ற ககர ஒற்றுக் கெடுக்க.

எ-டு: வடகிழக்கு, வடமேற்கு; தென்கிழக்கு, தென்மேற்கு என வரும்.

'வேறு' என்றதனல், திசைப்பெயரோடு பொருட்பெயர்க்கும் இவ்விதி கொள்க.

எ-டு: வடகடல், வடவரை, என வரும்.

'மெய்' என்றதனன், அத்திசைப் பெயரோடு பொருட்பெயர் புணருமிடத்து இறுதியும் முதலும் திரிந்து முடிவனவெல்லாம் கொள்க.

எ-டு: கீழ்கூரை, மேல்கூரை என வரும்.

(வி-ரை) 'திசையொடு திசையும் பிறவும் சேரின், நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும், றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற என்பர் நன்னூலாரும். (27)

434. ஒன்றுமுத லாக எட்ட னிறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகரம் மெய்யொடுங் கெடுமே
முற்றஇன் வருஉம் இரண்டலங் கடையே.

இஃது, இவ்வீற்று எண்ணுப்பெயரோடு எண்ணுப்பெயருக்கு முடிபு கூறுகின்றது.

இ-ள்: ஒன்று முதலாக எட்டு என் இறுதி எல்லா எண்ணும்- ஒன்று என்னும் சொல் முதலாக எட்டு என்னும் சொல் இறுதியாகவுள்ள எல்லா எண்ணுப் பெயரும், பத்தன் முன்வரின் - பத்து என்னும் எண்ணுப்பெயர் முன்வரின், குற்றியலுகரம் மெய்யொடும் கெடும்-(அப் பத்து என்னும் சொல்லில்) குற்றியலுகரம் தான் ஏறி நின்ற மெய்யொடும் கெட்டு முடியும், இரண்டு அலம் கடை முற்ற இன் வரும்-இரண்டாகிய எண்ணுப்பெயர் அல்லாத எண்ணுப் பெயரிடத்து முடிய இன் வந்து புணரும் எ-று.

எ-டு: பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு எனவரும்.

'நிலைமொழி முற்கூறுததனால்' பிறமொழியும் அவ் இன்பேறு கொள்க.

எ-டு: ஒன்பதின்பால், ஒன்பதின்கூறு என வரும்.

'முற்ற' என்றதனான், மேல் எடுத்தோத்தானும் இலேசானும் இன்பெற்றவழி பின், பதிற்றொன்று பதிற்றிரண்டு என்றாற்போல முடிபுகள் வேறுபட வருவனவெல்லாம் கொள்க. (28)

435. பத்தனொற் றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்த தென்ப இரண்டுவரு காலை.

இது, மேல் இன் பெறுதென்று விலக்கிய அதற்குப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: பத்தன் ஒற்று கெட னகாரம் இரட்டல்-பத்து என்னும் சொல்லில் நின்ற தகர ஒற்றுக் கெட னகர ஒற்று வந்து இரட்டுதல், ஒத்தது என்ப - பொருந்திற்று என்று சொல்லுப புலவர், இரண்டு வரு காலை - இரண்டு என்னும் எண் வரும் காலத்து எ - று.

எ-டு: பன்னிரண்டு என வரும்.

(வி-ரை) பத்து + இரண்டு = பன்னிரண்டு. மேல் (434) 'குற்றியலுகரம் மெய்யொடும் கெடுமே' என்பதால் 'து' கெட்டது. இந்நூற்பாவால் தகர வொற்று னகர வொற்றாகத்திரிந்து இரட்டித்தது.

'இரண்டு முன் வரின் பத்தின் ஈற்றுயிர் மெய், கரந்திட ஒற்றுனவ்வாகும் என்ப' (நன் - 198) என்பர் நன்னூலாரும். (29)

436. ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது.

இதுவும், எண்ணுப்பெயர்க்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்: ஆயிரம் வரினும் - (மேற்கூறிய பத்து என்னும் எண்ணுப்பெயர் முன்னர், ஒன்று முதலாகிய எண்ணுப்பெயரே யன்றி) ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் வந்தாலும், ஆ இயல் திரியாது - மேல் (434) ஈறு கெட்டு இன் பெற்ற இயல்பில் திரியாதே முடியும் எ - று.

எ-டு: பதினாயிரம் என வரும். (30)

437. நிறையு மளவும் வருஉங் காலையும்
குறையா தாகும் இன்னென் சாரியை.

இஃது, எண்ணுப் பெயரோடு நிறைப்பெயரும் அளவுப் பெயரும் புணர்க்கின்றது.

இ-ள்: நிறையும் அளவும் வருஉம் காலையும் - மேல் நின்ற பத்து என்பதன்முன் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் வரும் காலத்தும், இன் என் சாரியை குறையாது ஆகும் - (அவ்) இன் என்னும் சாரியை குறையாது வந்து முடியும் எ-று.

எ-டு: பதின்கழஞ்சு; தொடி, பலம் எனவும்; கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும் வரும்.

'குறையாதாகும்' என்றதனால், பத்து என்பதன் முன்னர்ப் பொருட்பெயர்க்கு வரும்முடிபும் கொள்க.

எ-டு: பதின்றிங்கள், பதிற்று முழம், பதிற்று வேலி, பதிற்றிதழ் என வரும்.

(வி-ரை) 434, 436, 437, 439, 470 ஆகிய நூற்பாக்களின் கருத்துக்களையும், உரையையும் தொகுத்தே நன்னூலாரும்

'ஒன்றுமுதல் ஈரைந் தாயிரங் கோடி
எண்நிறை அளவும் பிறவரின் பத்தின்
ஈற்றுயிர் மெய் கெடுத் தின்னும் இற்றும்
ஏற்ப தேற்கும் ஒன்பதும் இனைத்தே' (நன்-197)

என்றனர். (31)

438. ஒன்றுமுத லொன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்த னொற்றுக்கெட ஆய்தம்
வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப
கூறிய [1]இயற்கைக் குற்றிய லுகரம்
ஆற னிறுதி அல்வழி யான.

இஃது, எண்ணுப் பெயரோடு எண்ணுப்பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

இ-ள்: ஒன்று முதல் ஒன்பான் இறுதி முன்னர் நின்ற பத்தன் ஒற்றுகெட ஆய்தம் வந்து இடைநிலையும் இயற்கைத்து என்ப- ஒன்று முதலாக ஒன்பது ஈருகச் சொல்லப்படுகின்ற எண்ணுப் பெயர்களின் முன்னர் வருமொழியாய் வந்து நின்ற பத்து என்னும் சொல்லினது தகர ஒற்றுக் கெட ஆய்தமானது வந்து இடையில் நிலைபெறும் இயல்பையுடைத்தென்று சொல்லுவர் புலவர், ஆறன் இறுதி அல்வழி குற்றியலுகரம் கூறிய இயற்கை - அவற்றுள் ஆறு என்னும் ஈறு அல்லாத இடத்துக் குற்றியலுகரம் மேற்கூறிய இயற்கையாய் மெய்யோடும் கெட்டு முடியும் எ-று.

எ-டு: ஒருபஃது, இருபஃது என ஒட்டுக.

'வந்த' என்றதனால், ஆய்தமாய்த் திரியாது கெட்டு ஒருபது என்றுமாம்.

---

1. 'இயற்கை குற்றியலுகரம்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

(வி-ரை) இந்நூற்பாவையும் 'வந்து' என்பதால் கொண்ட உரையையும் தழுவியே நன்னூலாரும், 'முதலிரு நான்காம் எண் முனர்ப்பத்தின், இடை ஒற்றேகல் ஆய்தம் ஆகல் என இருவிதியும் ஏற்கும் என்ப' (நன்–195) என்றனர். (32)

439. முதலீ ரெண்ணினொற்று ரகரம் ஆகும்
உகரம் வருதல் ஆவயி னான.

இது. மேற்கூறிய முடிபிற்கு உரியதொன்று உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: முதல் ஈர் எண்ணின் ஒற்று ரகரம் ஆகும் – (அவற்றுள்) முதற்கண் நின்ற இரண்டு எண்ணின் ஒற்று ரகார ஒற்றாய், ஆ வயின் உகரம் வருதல் – அவ்விடத்து உகரம் வருக எ–று.

எ–டு: ஒருபஃது என வரும். (33)

440. இடைநிலை ரகரம் இரண்டென் [1]எண்ணிற்கும்
நடைமருங் கின்றே பொருள்வயி னான.

இதுவும் அது.

இ-ள்: இரண்டு என் எண்ணிற்கு இடைநிலை ரகரம் பொருள் வயின் நடை மருங்கு இன்று – அவ் இரண்டு என்னும் எண்ணிற்கும் இடை நின்ற ரகாரம் அம்மொழி பொருளாமிடத்து நடக்கும் இடம் இன்றிக் கெடும் எ–று.

எ–டு: இருபஃது என வரும்.

(வி ரை) 439, 440 ஆகிய இரு நூற்பாக்களின் கருத்துக்களைத் தொகுத்தே நன்னூலாரும், 'ஒன்றன் புள்ளி ரகரம் ஆக, இரண்டன் ஒற்று உயிர் ஏக உவ்வருமே' (நன்–189) என்றனர். தொல்காப்பியர் 'இரண்டு' என்பதில் உள்ள 'ணகரம்' ரகரம் ஆக, ரகரவுயிர்மெய் கெடும் என்றார். நன்னூலார் ணகரவொற்றும், ரகரத்தில் உள்ள மெய்யும் கெடும் என்றார். (34)

---

1. 'எண்ணிற்கு' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

441. [1]மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்
மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: மூன்றும் ஆறும் நெடு முதல் குறுகும் - மூன்று என்னும் எண்ணும் ஆறு என்னும் எண்ணும் நெடு முதல் குறுகி முடியும். மூன்றன் ஒற்று பகாரம் ஆகும் - மூன்று என்னும் எண்ணின்கண் நின்ற னகார ஒற்றுப் பகர ஒற்றாய் முடியும் எ-று.

எ-டு: முப்பஃது அறுபஃது என வரும். (35)

442. நான்க னொற்றே றகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: நான்கன் ஒற்று றகாரம் ஆகும் - நான்கு என்னும் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று றகர ஒற்றாய் முடியும் எ-று.

எ-டு: நாற்பஃது என வரும்.

(வி-ரை) 442, 453, 467 ஆகிய மூன்று நூற்பாக்களின் கருத்துக்களைத் தொகுத்தே நன்னூலாரும் 'நான்கன் மெய்யே லறவா கும்மே' (நன்-191) என்றனர். (36)

443. ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: ஐந்தன் ஒற்று மகாரம் ஆகும் - ஐந்து என்னும் எண்ணின்கண் நின்ற நகார ஒற்று மகர ஒற்றாய் முடியும் எ-று.

எ-டு: ஐம்பஃது என வரும்.

ஆறன் நெடுமுதல் குறுகியவாறே நின்று அறுபஃது என வரும். 'ஏழு' குற்றுகர ஈறு அன்றாம்.

1. இதனை இரண்டு நூற்பாவாகக் கொள்வர் நச்சினார்க்கினியர்.

(வி-ரை) 443, 448, 451, 454, 456, ஆகிய நூற்பாக்களின் கருத்துக்களைத் தொகுத்தே நன்னூலாரும், 'ஐந்தன் ஒற்று அடைவதும் இனமும் கேடும்' (நன் 192) என்றனர்.

ஆறு என்பது நெடுமுதல் குறுகும் என்பது மேல் 441 ஆம் நூற்பாவில் கூறப்பட்டுள்ளது. அங்ஙனம் குறுகியவாறே நின்று பஃது என்பதனொடு புணரும் என ஈண்டு விளக்குகின்றார் உரையாசிரியர். ஏழு என்ற எண்ணுப் பெயர் வருமொழியோடு புணருமாற்றை உருபியல் 195 ஆம் நூற்பாவாலும், புள்ளிமயங்கியலில் 389 முதல் 395 வரையுள்ள நூற்பாக்களானும் ஆசிரியர் கூறியுள்ளார். (37)

444, எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: எட்டன் ஒற்று ணகாரம் ஆகும்-எட்டு என்னும் எண்ணின்கண் நின்ற டகார ஒற்று ணகார ஒற்றாய் முடியும் எ - று.

எ - டு: எண்பஃது என வரும்.

(வி - ரை) 'எட்டன் உடம்பு ணவ்வாகும் என்ப' (நன் -193) என்பர் நன்னூலாரும். (38)

445. ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி யாய்தபக ரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் [1]றகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: ஒன்பான் ஒகர மிசை தகரம் ஒற்றும்-(நிலைமொழியாகிய) ஒன்பது என்னும் சொல்லின் ஒகரத்திற்கு மேலாகத்

---

1. 'றகரம்' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

தகரம் ஒற்றாய் மிக்கு வரும், முந்தை ஒற்று ணகாரம் இரட்டும்- முன் சொன்ன ஒகரத்தின் முன்னர் ணகர ஒற்று இரண்டு ணகார ஒற்றாய் மிக்கு வரும், பத்து என் கிளவி பகரம் ஆய்தம் கெட ஊகாரக் கிளவி நிற்றல் வேண்டும் - (வருமொழியாகிய) பத்து என்னும் சொல் தன்கண் பகரமும் ஆய்தமும் கெட (நிலைமொழி யில் இரட்டிய ணகரத்தின் பின்னர்) ஊகாரமாகிய எழுத்து நிற்றல் வேண்டும்; ஒற்றிய தகரம்றகாரம் ஆகும்-(வருமொழி யாகிய பத்து என்பதன் ஈற்றதன்மேல் ஏறிய உகரம் கெடாது பிரிந்து நிற்ப) ஒற்றாய் நின்ற தகரம் றகார ஒற்றாகும் எ-று.

இஃது ஒன்பதும் பத்தும் என நின்றால் முடியற்பால (இன்ன) வென்பது பகர ஆய்தம் என்றாத முறையன்றிய கூற்றினான், நிலைமொழிக்கண் பகரக்கேடும் கொள்க. குற்றியலுகரமும் அஃது ஏறிய மெய்யும் முன்னர் மாட்டேற்றாற் கெட்டன.

எ-டு: தொண்ணூறு என வரும்.

(வி - ரை) குற்றியலுகரமும் அஃது ஏறிய மெய்யும் கெடும் என மாட்டெறிந்தது 463 ஆம் நூற்பா ஆகும். மாட்டெறியப் பட்ட நூற்பா 434 ஆம் நூற்பா ஆகும்.

ஒன்பது + பத்து = தொண்ணூறு. இப்புணர்ச்சியில் நிலை மொழியும் வருமொழியும் புணருங்கால் ஒகரம் நீங்கலாக ஏனைய வெல்லாம் மாறிவிடுகின்றது. நன்னூலாரும், இலக்கண விளக்க நூலாரும், நேமிநாதரும் இச்சொற்களுக்கு ஒவ்வொரு விதமாகப் புணர்ச்சிவிதி கூறுவர். எனினும் இவையெல்லாம் பொருந்து வதன்று என்றும், தொண்டு + நூறு = தொண்ணூறு; தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம் என ஆயிற்று எனக் கொள் வதே சிறப்புடைத்து என்றும் கூறுவர் திரு ஞா. தேவநேயப்ப வாணர் அவர்கள். 9-தொண்டு, 90 – தொண்பது; 900 - தொண் ணூறு: 9000 தொள்ளாயிரம் என வழங்குவதே முறையென்றும், தொண்டு என்னும் வழக்கு அற்றுப்போக, தொன்பது 9 ஐயும் தொண்ணூறு 90 ஐயும், தொள்ளாயிரம் 900 ஐயும் வழங்கத் தொடங்கிவிட்டன என்றும் அவர் கூறுவர். ஒன்பது என்பதைத்

தொண்டு என வழங்கினர் என்பதற்குத் 'தொண்டு தலையிட்ட' (தொல்—1358) என்பதையும், 'தொண்டு படுதிவவு' (மலைபடு 21) என்பதையும் மேற்கோளாகக் காட்டுவர். (39)

446. அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியும்
கிளந்த இயல தோன்றும் காலை.

இது, மேற்கூறிய ஒன்று முதல் ஒன்பான்களோடு அளவுப் பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: அளந்து அறி கிளவியும் நிறை என் கிளவியும் தோன்றுங்காலை-(மேற்கூறிய ஒன்று முதல் ஒன்பான்களின் முன்னர்) அளந்து அறியப்படும் அளவுப் பெயர்ச்சொல்லும் நிறை என்னும் பெயர்ச்சொல்லும் தோன்றுங்காலத்து, கிளந்த இயல-அவ் ஒன்று முதல் ஒன்பான்கள் மேல் பத்து என்பதனோடு புணரும்வழிக் கிளந்த (438 - 444) இயல்பினவாய் முடியும் எ - று.

எ-டு: ஒரு கலம், இரு கலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி எனவும்; ஒருகழஞ்சு, இருகழஞ்சு; தொடி, பலம் எனவும் வரும்.

'தோன்றுங்காலை' என்றதனான், அவ்வெண்களின்முன் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்ற எண்ணுப்பெயரை யெல்லாம் இவ்விதியும் பிறவிதியும் எய்துவித்து முடித்துக் கொள்க.

எ-டு: ஒரொன்று, ஓிரண்டு; ஈரொன்று, ஈரிரண்டு; ஒரு முந்திரிகை, இரு முந்திரிகை; ஓரரைக்கால், ஈரரைக்கால்; ஒரு கால், இரு கால்; ஓரரை, ஈரரை; ஒரு முக்கால், இரு முக்கால் என ஒட்டிக்கொள்க. (40)

447. மூன்றன் ஒற்றே வந்த தொக்கும்.

இது, மாட்டேறு எய்தாததற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள். மூன்றன் ஒற்று வந்தது ஒக்கும் - மூன்றும் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று வருமொழியாய் வந்த அளவுப் பெயர் நிறைப்பெயரின் முதலில் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய் முடியும் எ - று.

எ-டு: முக்கலம்; சாடி, தூதை பானை எனவும்; முக்கழஞ்சு; தொடி, பலம் எனவும் வரும்.

மாட்டேற்றானே நாற்கலம்; சாடி, தூதை, பானை எனவும்; நாற்கழஞ்சு; தொடி, பலம் எனவும் வரும். (41)

448. ஐந்த னொற்றே மெல்லெழுத் தாகும்.

இதுவும் அது.

இ - ள்: ஐந்தன் ஒற்று மெல்லெழுத்து ஆகும் - ஐந்தாவதன் கண் நின்ற நகர ஒற்று (மேல் வருகின்ற வருமொழி முதல் வல் லெழுத்திற்கு ஏற்ற) மெல்லெழுத்தாய் முடியும் எ - று.

எ - டு: ஐங்கலம்; சாடி, தூதை, பானை எனவும்; ஐங் கழஞ்சு; தொடி, பலம் எனவும் வரும். (42)

449. க ச த ப முதன்மொழி வருஉங் காலை.

இது, மேற்கூறிய மூன்றற்கும் ஐந்தற்கும் வருமொழி வரையறுக்கின்றது.

இ - ள்: க ச த ப முதல்மொழி வரும் காலை - (மூன்றன் ஒற்று வந்ததுஒப்பதூஉம் (447) ஐந்தன் ஒற்று மெல்லெழுத் தாவதூஉம் (448), (அவ்வளவுப்பெயர் நிறைப்பெயர் ஒன்பதினும் வன்கணமாகிய) க ச த ப முதல் மொழிகள் வந்த இடத்து எ - று.

எ - டு: மேல் மாட்டேற்றானே, அறுகலம்; சாடி, தூதை, பானை எனவும்; அறுகழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

எழு குற்றுகர ஈறன்மையின், மாட்டேறு ஏலாதாயிற்று. (43)

450. நமவ என்னும் மூன்றொடு சிவணி
அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே.

இது, வேண்டா கூறி வேண்டியது முடித்தல் நுதலிற்று.

இ-ள்: ந ம வ என்னும் மூன்றொடு சிவணி அகரம் வரினும்-(அளவுப்பெயர் நிறைப்பெயர்களில் மென்கணத்து இரண்டும் இடைக்கணத்து ஒன்றுமாகிய) ந ம வ என்னும் மூன்றனோடும் பொருந்தி, (உயிர்க்கணத்து) அகர முதல்மொழி வரினும் (உம்மையால் அவ்வுயிர்க்கணத்து ஒழிந்த உகரமும் கூறாத வல்லெழுத்துக்களும் வரினும்), எட்டன்முன் இயல்பு-எட்டெடன்பதன் முன் (மேற்கூறி நின்ற விகாரமே விகாரமாக வேறோர் விகாரமின்றி) இயல்பாய் முடியும் எ-று.

எ-டு: எண்கலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும்; எண்கழஞ்சு; தொடி, பலம் எனவும் வரும்.

இவ்வேண்டாகூறலான், எண்ணகல் எனத் தொடர்மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்ளப்பட்டது. (44)

451. ஐந்தும் மூன்றும் [1]நமவருங் காலை
வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே.

இதுவும், மேல்மாட்டேற்றோடு ஒவ்வா வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: ஐந்தும் மூன்றும் நம வரும் காலை-ஐந்து என்னும் எண்ணும் மூன்று என்னும் எண்ணும் நகர முதல் மொழியும் மகர முதல்மொழியும் வருங்காலத்து, ஒற்று இயல் நிலை வந்தது ஒக்கும்-தங்கண் நின்ற ஒற்று நடக்கும் நிலைமை சொல்லின் அவ் வருமொழி முதலில் வந்த ஒற்றொடு ஒத்த ஒற்றாய் முடியும் எ-று.

எ-டு: முந்நாழி, மும்மண்டை; ஐந்நாழி, ஐம்மண்டை என வரும்.

மூன்றும் ஐந்தும் என்னாத முறையன்றிய கூற்றினான், நானாழி என்னும் முடிபின்கண் விகாரமாகிய னகரத்தின் முன்னர் வருமொழி நகரத் திரிபும், அது காரணமாக நிலைமொழி னகரக் கேடும் கொள்ளப்பட்டன. (45)

1. 'நமவகு காலை' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

452. மூன்றன் ஒற்றே [1]வகாரம் வரும்வழித்
தோன்றிய வகாரத் துருவா கும்மே.

இதுவும் அது.

இ-ள்: மூன்றன் ஒற்று வகாரம் வரும் வழி - மூன்றும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று வகர வருமொழி வரும் இடத்து, தோன்றிய வகாரத்து உருபு ஆகும் - வருமொழியாய வகரத்து உருவாய் முடியும் எ-று.

எ-டு: முவ்வட்டி என வரும்.

'தோன்றிய' என்றதனன், முதல் நீண்டு வகர ஒற்றின்றி மூவட்டி என்றுமாம்.

இன்னும் அதனனே, முதல் நீளாது ஒற்றின்றி முவட்டி என்றுமாம். (46)

453. நான்க னொற்றே லகார மாகும்.

இதுவும் அது.

இ-ள்: நான்கன் ஒற்று லகாரம் ஆகும் - நான்காம் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று வகரம் வந்தால் லகாரஒற்றாய்த் திரிந்து முடியும் எ-று.

எ-டு: நால்வட்டி என வரும். (47)

454. ஐந்த னொற்றே முந்தையது கெடுமே.

இதுவும் அது.

இ-ள்: ஐந்தன் ஒற்று முந்தையது கெடும் - ஐந்தாம் எண்ணின்கண் நின்ற நகர ஒற்று வகரம் வந்தால் முன் நின்ற வடிவு கெட்டு முடியும் எ-று.

எ-டு: ஐவட்டி என வரும்.

---

1. வகாரம் வரும் வழி என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

'முந்தை' என்றதனுல், நகர ஒற்றுக் கெடாது அவ்வகரமாய்த் திரிந்து ஐவ்வட்டி என்றும் ஆம். (48)

455. முதலீ ரெண்ணின் முன் உயிர்வரு காலைத்
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயி னான.

இதுவும் அது.

இ-ள்: முதல் ஈர் எண்ணின்முன் உயிர் வரு காலை-முற்பட்ட இரண்டு எண்ணின்முன் உயிர் முதல் மொழி வருங்காலத்து, உகரக் கிளவி தவல் என மொழிப - உகரமாகிய எழுத்துக் கெடும் என்று சொல்லுவர் புலவர், முதல் நிலை ஆவயின் நீடல் - அவ் வெண்ணின் முதற்கண் நின்ற எழுத்துக்கள் அவ்விடத்து நீண்டு முடியும் எ-று.

எ-டு: ஓரகல், ஈரகல்; ஓருழக்கு, ஈருழக்கு என வரும். (49

456. மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்
தோன்றிய வகரத் தியற்கை யாகும்.

இதுவும் அது.

இ-ள்: மூன்றும் நான்கும் ஐந்து என் கிளவியும் – மூன்று என்னும் எண்ணும் நான்கு என்னும் எண்ணும் ஐந்து என்னும் எண்ணுச் சொல்லும், தோன்றிய வகரத்து இயற்கையாகும்– (மேல்) தோன்றி முடிந்த வகரத்து இயற்கையாய் மூன்றன்கண் வகர ஒற்றுயும் நான்கின்கண் லகர ஒற்றுயும் ஐந்தன்கண் ஒற்றுக் கெட்டும் முடியும் எ-று.

எ-டு: முவ்வகல், முவ்வுழக்கு எனவும்; நாலகல், நாலுழக்கு எனவும்; ஐயகல், ஐயுழக்கு எனவும் வரும்.

'தோன்றிய' என்றதனுன், மேல் மூன்று என்பது முதல் நீண்ட இடத்து நிலைமொழி னகர ஒற்றுக் கெடுத்துக் கொள்க. (50)

457. மூன்றன் முதனிலை நீடலும் உரித்தே
உழக்கென் கிளவி வழக்கத் தான.

இதுவும் அது.

இ-ள்: மூன்றன் முதல் நிலை உழக்கு என் கிளவி வழக்கத் தான்-மூன்று என்னும் எண்ணின்கண் முதலில் நின்ற எழுத்து உழக்கு என்னுங் கிளவியது வழக்கிடத்து, நீடலும் உரித்து- குறுகாது நீண்டு முடிதலும் உரித்து எ-று.

எ-டு: மூவுழக்கு என வரும்.

'வழக்கத்தான்' என்றதனான், அகல் என்பதன்கண்ணும் இச் செய்கை கொள்க.

எ-டு: மூவகல் என வரும். (51)

458. ஆறென் கிளவி முதல்நீ டும்மே.

இதுவும் அது.

இ-ள்: ஆறு என் கிளவி முதல் நீடும்-ஆறு என்னும் சொல் (உயிர் முதல்மொழி வந்தால் முன் குறுகி நின்ற) முதலெழுத்து நீண்டு முடியும் எ-று.

எ-டு ஆறகல், ஆறுழக்கு என வரும். (52)

459. ஒன்பா னிறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே.

இதுவும் அது.

இ-ள்: ஒன்பான் இறுதி உருபு நிலை திரியாது சாரியை மொழி இன் பெறல் வேண்டும்-ஒன்பது என்னும் எண்ணின் இறுதி தன் வடிவு நிலை திரியாது சாரியை மொழியாகிய இன்பெற்று முடிதல் வேண்டும் எ-று.

எ-டு: ஒன்பதின்கலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும்; ஒன்பதின்கழஞ்சு தொடி, பலம் எனவும் வரும்.

'உருபு, என்றதனான், ஒன்பதிற்றகல் என்புழி இரட்டிய றகரமாகக் கொள்க. (53)

460. நூறுமுன் வரினுங் கூறிய இயல்பே.

இஃது, ஒன்று முதல் ஒன்பான்களோடு நூறு என்பதன் முடிபு கூறுகின்றது.

இ-ள்: நூறு முன் வரினும் கூறிய இயல்பு - நூறு என்பது ஒன்று முதல் ஒன்பான்கண் முன் வரினும் (மேல் பத்தென் பதனோடு புணரும் வழி) கூறிய இயல்பு எய்தி முடியும் எ - று.

எ-டு: ஒருநூறு, இருநூறு, அறுநூறு, எண்ணூறு என வரும். இவை மாட்டேற்றானே முடிந்தன. (54)

461. மூன்ற னொற்றே நகாரம் ஆகும்.

இது, மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மூன்றன் ஒற்று நகாரம் ஆகும் - மூன்றும் எண்ணின் கண் நின்ற ளகர ஒற்று நகர ஒற்றாகும்,

எ-டு: முந்நூறு என வரும். (55)

462. நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா.

இதுவும் அது.

இ - ள்: நான்கும் ஐந்தும் ஒற்று மெய் திரியா - நான்கு என்னும் எண்ணும் ஐந்து என்னும் எண்ணும் தம் ஒற்றுக்கள் நிலை திரியாது முடியும் எ - று.

எ-டு: நானூறு, ஐந்நூறு என வரும்.

'மெய்' என்றதனால், நானூறு என்புழி வருமொழி ஒற்றாகிய நகரக்கேடு கொள்க. இன்னும் அதனானே, ஒற்றின்றி ஐநூறு என வரும் முடிபும் கொள்க. (56)

463. ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்

நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்.

இதுவும் அது.

இ - ள்: ஒன்பான் முதல் நிலை முந்து கிளந்து அற்று - ஒன்பது என்னும் சொல்லின் முதல் நின்ற ஒகரம் மேல் பத்தென்பதனோடு புணரும் வழிக் கூறியவாறு போல (445) ஒகரமிசைத் தகர ஒற்று மிகும், முந்தை ஒற்று ளகாரம் இரட்டும்- அவ் வொகரத்தின் முன்னின்ற ளகர ஒற்று இரண்டு ளகர ஒற்றாம், நூறு என்கிளவி நகார மெய் கெட ஊ ஆ ஆகும் இயற்கைத்து என்ப - வருமொழியாகிய நூறு என்னும் சொல் லும் நகாரமாகிய மெய் கெட (அதன் மேல் ஏறிய) ஊகாரம் ஆகாரமாம் இயல்பையுடைத்து என்பர் புலவர், ஆ இடை இகாரம் ரகாரம் வருதல் - அம்மொழியிடை ஒரிகரமும் ரகாரமும் வரும், ஈறு மெய் கெடுத்து மகாரம் ஒற்றும் - இதற்கு ஈருகிய குற்றியலுகரத்தினையும் அஃது ஏறி நின்ற றகார ஒற்றினையும் கெடுத்து ஓர் மகரம் ஒற்றாய் வந்து முடியும் எ - று.

'மெய்' என்றதனான், நிலைமொழிக்கண் நின்ற பகரம் கெடுக்க.

எ - டு: தொள்ளாயிரம் என வரும். (57)

464 ஆயிரக் கிளவி வருஉங் காலை
முதலீ ரெண்ணின் உகரங் கெடுமே.

இஃது அவ்வொன்று முதல் ஒன்பான்கள்முன் ஆயிரம் என்பது வருங்கால் முடிபு கூறுகின்றது.

இ - ள்: ஆயிரக் கிளவி வரும் காலை முதல் ஈர் எண்ணின் உகரம் கெடும் - ஆயிரம் என்னும் சொல் ஒன்று முதல் ஒன்பான் முன் வருங்காலத்து முதல் ஈர் எண்ணின்கண் பெற்று நின்ற உகரம் கெட்டு முடியும் எ - று.

எ-டு: ஓராயிரம், இராயிரம் என வரும். (58)

465. முதனிலை நீடினும் மான மில்லை.

இஃது, எய்தியதன் மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்: முதல் நிலை நீடினும் மானம் இல்லை - அம் முதல் ஈர் எண்ணின் முதற்கண் நின்ற ஒகர இகரங்கள் நீண்டு முடியினும் குற்றம் இல்லை எ-று.

எ-டு: ஓராயிரம், ஈராயிரம் என வரும். (59)

466. மூன்ற னொற்றே வகாரம் ஆகும்.

இதுவும் மாட்டேற்றோடு ஒவ்வா முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மூன்றன் ஒற்று வகாரம் ஆகும் - மூன்றாம் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று வகர ஒற்றாய் முடியும் எ-று.

எ-டு: முவ்வாயிரம் என வரும்,

'முதனிலை' (465) என்றதனான் முதல் நீண்டு வகர ஒற்றுக் கெட்டு மூவாயிரம் என்றும் வரும். (60)

467. நான்க னொற்றே லகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: நான்கன் ஒற்று லகாரம் ஆகும் - நான்காம் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று லகர ஒற்றாய் முடியும் எ-று. (61)

எ-டு: நாலாயிரம் என வரும்.

468. ஐந்த னொற்றே யகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: ஐந்தன் ஒற்று யகாரம் ஆகும்-ஐந்தாம் எண்ணின் கண் நின்ற நகர ஒற்று யகர ஒற்றாய் முடியும் எ-று.

எ-டு: ஐயாயிரம் என வரும்.

எ-டு: முன்னர் (454) இவ்வாறு ஓதாமையின், ஐயகல், ஐயுழக்கு என்பவை உடம்படுமெய் பெற்றன. (62)

469. ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்.

இதுவும் அது.

இ-ள்: ஆறன் மருங்கின் குற்றியலுகரம் ஈறு மெய் ஒழிய கெடுதல் வேண்டும்-ஆறும் எண்ணின்கண் நின்ற குற்றியலுகரம் தான் ஏறிய மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாது நிற்ப உகரமாகிய அவ்வீறு தானே கெட்டு முடிதல் வேண்டும் எ-று

எ-டு: ஆறுயிரம் என வரும்.

'திரிந்ததன் திரிபுஅது' என்னும் நயத்தான், 'ஆறன் மருங்கின்' என்று ஓதப்பட்டது. ஆறு என்பது அறு எனக் குற்றியலுகரம் முற்றியலுகரமாக ஓதப்பட்டு நின்றமையின் அவ்வுகரக்கேடு ஓதப் பட்டது.

'ஈறு' எனவும் 'மெய்' எனவும் அவ்வுயிர்மெய்யைப் பிரித்துச் செய்கை ஓதினமையான், அவ்வுயிர் மெய்யினை ஒற்றுமை நயத்தாற் குற்றியலுகரம் என்று ஓதினுரைக் கொள்க.

'ஆறன் மருங்கின் ஈறு மெய்யொழியக் கெடும்' என்னாது 'குற்றியலுகரம்' என்றோதினமையான், நெடுமுதல் குறுகாதே நின்று ஆறுயிரம் என்றும் ஆம்.

இன்னும் அதனானே, 'ஆறு குவதே' (சொல்-79) என்றாற் போலப் பொருட்பெயர்க்கண் வருமுடிபும் கொள்க.

மேல் மாட்டேற்றானே (460) எண்ணாயிரம் என முடிந்தது.

(வி-ரை) ஆறு என்பது 'மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்' (446) என்னும் விதியால் 'அறு' என நிற்கும். ஈண்டு அங்ஙனம்

திரிந்த 'அறு' என்பதைக் கூறுது, திரியப்பட்ட ஆறு என்பதையே கூறுவது திரிந்ததன் திரிபு அதுவென்னும் நயத்தால் ஆகும். (63)

470. ஒன்பா னிறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே.

இதுவும் அது.

இ-ள்: ஒன்பான் இறுதி உருபு நிலை திரியாது சாரியை மரபு இன்பெறல் வேண்டும்-ஒன்பது என்னும் எண்ணின் இறுதிக் குற்றியலுகரம் தன் வடிவு நிலை திரிந்து கெடாது சாரியையாகிய மரபினையுடைய இன்பெற்று முடிதல் வேண்டும் எ-று.

எ-டு: ஒன்பதினாயிரம் என வரும்.

'உருபு' என்றும், 'நிலை' என்றும், 'சாரியை மரபு' என்றும் கூறிய மிகுதியான், ஆயிரமல்லாத பிற எண்ணின்கண்ணும் பொருட்பெயரிடத்தும், இன்னும் உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் முடிபும் கொள்க.

எ-டு: ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றுத் தடக்கை, ஒன்பதிற்றெழுத்து என வரும்.

இன்னும் அவ்விலேசானே மேல் எண்ணாயிரம் என்றவழி ஒற்றிரட்டும் கொள்க. (64)

471. நூறு யிரமுன் வருஉங் காலை
நூறெ னியற்கை முதனிலைக் கிளவி.

இஃது, ஒன்று முதல் ஒன்பான்களோடு நூறு என்னும் அடை யடுத்து ஆயிரம் என்பது முடியுமாறு கூறுகின்றது.

இ-ள்: நூறுயிரம் முன்வரு காலை முதல் நிலைக்கிளவி நூறு என் இயற்கை-நூறுயிரம் என்னும் அடையடுத்த மொழி (ஒன்று முதல் ஒன்பான்கள்) முன்வருங் காலத்து முதனிலைக் கிளவியாகிய ஒன்று என்னும் எண் (மேல் ஒன்று முதல் ஒன்பான்களோடு

முடிந்த) நூறு என்னும் சொல் அவ் ஒன்றனோடு முடிந்த விகார இயற்கை எய்தி முடியும் எ-று.

வழிநிலைக்கிளவியாகிய இரண்டு முதல் எண்கள் விகாரம் எய்தியும் எய்தாதது இயல்பாயும் முடியும்.

எ-டு: ஒரு நூறாயிரம் என வரும். இரு நூறாயிரம்; இரண்டு நூறாயிரம்; முந்நூறாயிரம், மூன்று நூறாயிரம்; நானூறாயிரம், நான்கு நூறாயிரம்; ஐந்நூறாயிரம், ஐந்து நூறாயிரம்; அறு நூறாயிரம், ஆறு நூறாயிரம்; எண்ணூறாயிரம், எட்டு நூறாயிரம்; ஒன்பது நூறாயிரம் என வரும்.

உரையிற் கோடல் என்பதனால், தொள்ளாயிரம் என்ற முடிபினோடு மாட்டேறு சென்றதேனும் அவ்வாறு முடியாதென்று கொள்க.

'முன்' என்பதனான் இன்சாரியை பெற்று ஒன்பதினூறாயிரம் என்றும் ஆம்.

'நிலை' என்றதனான் மூன்றும் ஆறும் இயல்பாய் முடியும் முடிபின்கண் நெடுமுதல் குறுகாமை கண்டு கொள்க. இன்னும் அதனானே நானூறாயிரம் என்புழி வருமொழி நகரக்கேடு கொள்க. (65)

472. நூறென் கிளவி ஒன்றுமுத லொன்பாற்(கு)
ஈறுசினை யொழிய இனவொற்று மிகுமே.

இது, நூறு என்பதனோடு ஒன்று முதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ-ள்: நூறு என் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு ஈறு சினை ஒழிய இன ஒற்று மிகும் - நூறு என்னும் சொல் ஒன்று முதல் ஒன்பான்களோடு புணருமிடத்து ஈறாகிய குற்றியலுகரமும் அவ்வுகரம் ஏறிய மெய்யாகிய சினையும் கெடாது நிற்ப சினைக்கு இனமாகிய இன ஒற்று மிக்கு முடியும் எ-று.

எ – டு: நூற்றொன்று; இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது என வரும்.

'ஈறுசினை' என்று ஓதிய மிகையானே நூறு என்பதனோடு பிற எண்ணும் பிற பொருட்பெயரும் இவ்விதியும் பிறவிதியும் முடியுமாறு கொள்க.

எ – டு: நூற்றுக்கோடி, நூற்றுப்பத்து, நூற்றுத்தொண்ணூறு எனவும்; நூற்றுக்குறை, நூற்றடுக்கு எனவும் வரும். (66)

473 அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும்.

இஃது, அந்நூறு என்பதனோடு ஒன்று முதல் ஒன்பான்கள் அடையடுத்தவழிப் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: அவை ஊர்பத்தினும் அத்தொழிற்று ஆகும் அந்நூறு என்பது ஒன்றுமுதல் ஒன்பான்களான் ஊரப்பட்ட பத்தினோடு புணருமிடத்து அத்தொழிற்றாய் இன ஒற்று மிக்கு முடியும் எ - று.

எ – டு நூற்றொருபஃது; இருபஃது, முப்பஃது, நாற்பஃது, ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது என வரும்.

'ஆகும்' என்றதனான் நிலைமொழியடையடுத்து வரும் முடிபும் கொள்க.

எ-டு: ஒரு நூற்றொருபஃது என ஒட்டுக. (67)

474. அளவும் நிறையும் ஆயியல் [1]திரியா
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

இஃது, அந்நூறு என்பதனோடு அளவுப்பெயரும் நிறைப் பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ – ள்: அளவும் நிறையும் ஆ இயல் திரியா – (அந்நூறு என்பதனோடு புணருமிடத்து) அளவுப் பெயரும் நிறைப்

1. 'திரியாது' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

பெயரும் மேற்கூறிய இயல்பில் திரியாதே நின்று இனவொற்று மிக்கு முடியும், குற்றியலுகரமும் வல்லெழுத்து இயற்கையும் முன் கிளந்த அன்ன என்மனார் புலவர் – அவ்விடத்துக் குற்றிய லுகரம் கெடாமையும் (இன ஒற்று மிக்கு வன்றொடர் மொழி யாய் நின்றமையான் வருமொழி) வல்லெழுத்து மிகும் இயல்பும் மேல் (வன்றொடர் மொழிக்குக்) கூறிய தன்மையவென்று சொல்லுவர் புலவர் எ – று.

எ – டு: நூற்றுக்கலம்; சாடி, தூதை, பானை, தாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும்; கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

'திரியா' என்றதனான், நூறு என்பது அடையடுத்த வழியும் இவ்விதி கொள்க.

எ – டு: ஒரு நூற்றுக்கலம், இருநூற்றுக்கலம் என ஒட்டுக. (68)

475. ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற ஆய்தங் கெடுதல் வேண்டும்.

இஃது, ஒன்று முதல் எட்டு ஈருகிய எண்கள் அடையடுத்த பத்திறேடு ஒன்று முதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ – ள்: ஒன்று முதலாகிய பத்து ஊர் கிளவி – ஒன்று முதல் எட்டு ஈருகப் பத்து என்னும் எண் ஊரப்பட்ட சொற்கள், ஒன்று முதல் ஒன்பாற்கு – அவ்வொன்று முதல் ஒன்பான்கள் வருமொழியாய் வந்து புணருமிடத்து, நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும் – ஆண்டு நின்ற ஆய்தம் கெட்டு முடிதல் வேண்டும்; ஒற்று இடை மிகும் – (கெட்ட வழி இனவொற்ருய் ஒரு தகர) ஒற்று இடை மிக்கு முடியும் எ – று.

எ – டு ஒருபத்தொன்று, இருபத்தொன்று, ஒருபத்திரண்டு, இருபத்திரண்டு, ஒருபத்துமூன்று, இருபத்துமூன்று என ஒட்டிக் கொள்க.

'நின்ற' என்றதனான், மேல் ஒரு பதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு இன்பேறும் கொள்க. (69)

476. ஆயிரம் வரினே [1]இன்னென் சாரியை
ஆவயி னொற்றிடை மிகுத லில்லை.

இஃது. அவ்வடையடுத்த பத்தினோடு ஆயிரத்தினைப் புணர்க்கின்றது.

இ-ள்: ஆயிரம் வரின் சாரியை இன் ஆம் (அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன்) ஆயிரம் என்பது வரின் இடை வந்து புணருஞ்சாரியை இன் ஆம், ஆ வயின் ஒற்று இடை மிகுதல் இல்லை - அவ்விடத்து முன் கூறிய ஒற்று இடை மிகுதல் இன்றி முடியும் எ - று.

எ-டு: ஒருபதினாயிரம், இருபதினாயிரம் என ஒட்டுக.

'ஆவயின்' என்றதனான் ஒருபதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு உகரமும் வல்லெழுத்துப் பேறும் கொள்க. (70)

477. அளவும் நிறையும் ஆயியல் திரியா.

இஃது அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன் அளவுப் பெயரும் நிறைப் பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ-ள்: அளவும் நிறையும் ஆ இயல் திரியா - அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன்) அளவுப் பெயரும் நிறைப் பெயரும் மேல் ஆயிரத்தோடு புணரும்வழி முடிந்த இயல்பில் திரியாதே நின்று இன்பெற்று முடியும் எ - று.

எ-டு: ஒருபதின்கலம், இருபதின்கலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும்; ஒருபதின் கழஞ்சு; தொடி, பலம் எனவும் கொள்க.

'திரியா' என்றதனான், ஒருபதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு இன்னின் னகரம் இரட்டி றகரமாகலும், ஒருபதினாழி என்னும்

---

1. இன்னும் சாரியை என்பதும் பாடம்.

முடிபின்கண் வருமொழி நகரம் திரிந்தவழி நிலைமொழியின் னகரக்கேடும் கொள்க. (71)

478. முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்
ஞநமத் தோன்றினும் யவவந் தியையினும்
முதனிலை யியற்கை என்மனார் புலவர்.

இஃது, ஒன்று முதல் ஒன்பான்களோடு பொருட் பெயரைப் புணர்க்கின்றது.

இ-ள்: முதல்நிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும் ஞ ந ம தோன்றினும் ய வ வந்து இயையினும் – முதனிலை எண்ணாகிய ஒன்று என்னும் எண்ணின் முன் வல்லெழுத்து முதன் மொழி வரினும், ஞ ந மக்களாகிய மெல்லெழுத்து முதன் மொழி வரினும், ய வக்களாகிய இடையெழுத்து முதன்மொழி வந்து பொருந்தினும், முதல்நிலை இயற்கை என்மனார் புலவர்— அவ்வொன்று முதல் ஒன்பான்கள் முன் எய்திய முடிபுநிலை எய்தி முடியும் என்று சொல்லுவர் புலவர் எ-று.

எனவே, வழிநிலை எண்ணாகிய இரண்டுமுதலாகிய எண்கள் அம் முதனிலை முடிபாகிய விகாரம் எய்தியும் எய்தாதும் இயல் பாயும் முடியும்.

எ-டு: ஒருகல்; சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு என வரும். இருகல், இரண்டுகல்; சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு எனவும், ஒன்பதின் காறும் ஒட்டுக.

ஒன்பதின்கல் எனச் சென்றதேனும் வழக்கின்மையின் ஒழிக்க.

'நிலை' என்றதனான், மாட்டேற்றுக்கு ஏலாத ஞகர யகரங்களின் முடிபு கொள்ளப்பட்டது. (72)

479. அதனிலை உயிர்க்கும் [1]யாவரும் காலையும்
முதனிலை ஒகரம் ஓவா கும்மே
ரகரத் துகரந் துவரக் கெடுமே.

1. 'யாவரு காலை' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இஃது, ஒன்று முதல் ஒன்பான்களோடு பொருட்பெயருள் உயிர் முதன்மொழி முடியுமாறும் மேற்கூறிய யகரம் வேறுபட முடியுமாறும் கூறுகின்றது.

இ-ள்: அதன் நிலை உயிர்க்கும் யா வருங்காலையும் முதல் நிலை ஒகரம் ஓ ஆகும்-அவ்வொன்று முதல் ஒன்பான்களோடு புணருமிடத்து உயிர் முதன்மொழி வந்த இடத்தும் யா முதல் மொழி வந்த இடத்தும் முதல் நிலை எண்ணாகிய ஒன்று என்பத ன்கண் ஒகரம் ஓகாரம் ஆம், ரகரத்து உகரம் துவரக்கெடும்-(அவ்விடத்து) ரகரத்து உகரம் முற்றக்கெட்டு முடியும் எ-று.

எனவே வழிநிலை யெண்களுள் உயிர்நிலை முதன்மொழி வந்த இடத்து முன் கூறியவாறே இருவாற்றானும் முடியும்.

எ-டு: ஓரடை ஓராடை எனவும்; இருவடை, இருவாடை இரண்டடை, இரண்டாடை எனவும் உயிர் முதல் மொழிகளை ஒட்டிக் கொள்க.

யா முதல்மொழி ஓர் யாழ் என வரும்.

'துவர' என்றதனான், இரண்டு என்னும் எண்ணும் மூன்று என்னும் எண்ணும் செய்யுளகத்து ஈரசை எனவும் மூவசை எனவும் முதல் நீண்டு வேறுபட முடியுமாறு கொள்க.

'அதனிலை' என்றதனான், முதனிலை நீளாதே நின்று உகரம் கெட்டு ஒரடை, ஒராடை, ஒர்யாழ் என வரும் முடியும் கொள்க. (73)

480. இரண்டுமுத லொன்பான் இறுதி முன்னர்
வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்
மகர [1]அளபொடு நிகரலு முரித்தே.

இஃது, இரண்டு முதல் ஒன்பான்கள் முன்னர் அளவு முதலிய மூன்றற்கும் உரிய மா என்பது புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர் - இரண்டு முதலாக ஒன்பது ஈருகச் சொல்லப்படுகின்ற எண்

1. அளவொடு' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

களின் முன்னர், வழங்கு இயல் மா என் கிளவி தோன்றின் - வழக்கின் கண்ணே கிடக்கின்ற (விலங்கு மரம் முதலிய அல்லாத அளவு முதலியவற்றிற்குரிய) மா என்னும் சொல் தோன்றின், மகர அளபொடு நிகரலும் உரித்து - (இயல்பாய் முடிதலேயன்றி) மேற்கூறிய (446) மண்டை என்னும் அளவுப்பெயரோடு ஒத்து வேறுபட முடிவனவும் பெறும் எ-று.

எ-டு: இரண்டு மா, இருமா, மூன்று மா, மும்மா எனா. ஒன்பதின் காறும் இவ்வாறு ஒட்டுக.

'இரண்டு முதல் ஒன்பான்' என்று எடுத்தமையின், ஒன்றற்கு ஒருமா என்னும் முடிபேயன்றி ஒன்றுமா என்னும் முடிபு இல்லையாயிற்று.

இவற்றுள், மிக்க எண்ணோடு குறைந்த எண் வருங்கால் உம்மைத் தொகையாகவும், குறைந்த எண்ணோடு மிக்கது வரிற் பண்புத்தொகையாகவும் முடித்தார் என்க. (74)

481. லனவென வரூஉம் புள்ளி யிறுதிமுன்
உம்முங் கெழுவும் உளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான.

இது. லகார னகார ஈற்றுச் செய்யுள் முடிபு கூறுகின்றது

இ-ள்: லன என வரும் புள்ளி இறுதிமுன் - லன என்று சொல்ல வருகின்ற புள்ளியீற்றுச் சொல்முன், உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும் - உம் என்னும் சாரியையும் கெழு என்னும் சாரியையும் உளப்படப் பிற சாரியையும், அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி செய்யுள் தொடர்வயின் மெய் பெற நிலையும் - அப்பெற்றிப்பட்ட மரபினையுடைய மொழியிடைத் தோன்றிச் செய்யுள் மொழிகளைத் தொடர்ந்து சொல்லும் இடத்து மெய்ம்மை பெற நிலைபெற்று முடியும், வேற்றுமை குறித்த பொருள் வயின் - வேற்றுமை குறித்த பொருட் புணர்ச்சிக்கண் எ-று.

எ-டு: 'வானவரி வில்லுந் திங்களும்' 'கல்கெழு கானவர் நல்குறு' மகளே' (குறுந் - 71) எனவும் 'மாநிதிக் கிழவனும் போன்ம்' (அகம் - 66) எனவும், 'கான்கெழுநாடு' (அகம் - 97) எனவும் வரும்.

'மொழியிடைத் தோன்றி' என்ற மிகையால், பிற ஈற்றுள்ளும் இச்சாரியை பெற்று முடிவன கொள்க.

எ-டு: 'துறைகெழு மாந்தை' (நற் - 36) 'வளங்கெழு திருநகர்' (அகம் - 17) என வரும்.

'அன்னமரபின்' என்றதனால், சாரியை காரணமாக வல்லெழுத்துப் பெறுதலும், அது காரணமாக நிலைமொழியீறு திரிதலும் சாரியையது உகரக்கேடும், எகர நீட்சியும் கொள்க.

எ-டு: பூக்கேழூரன், வளங்கேழ் திருநகர் என்று அவ்வாறு வந்தமை யறிக.

'மெய்பெற' என்றதனான், இச்சாரியைப்பேற்றின்கண் ஈற்று வல்லெழுத்து வீழ்க்க. (75)

482. உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினுந் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்
செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின்
மெய்யொருங் கியலுந் தொழில்தொகு மொழியும்
தம்மியல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்
எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்
அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய
புணரியல் நிலையிடை உணரத் தோன்று.

இஃது, இவ்வதிகாரத்துப்புணர்க்கப்படா மொழிகள் அவற்றை இவையென யெடுத்து உணர்த்துகின்றது.

இ-ள்: உயிரும் புள்ளியும் இறுதியாகிய குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப்பட வாரா குறைச் சொல் கிளவியும் - உயிரெழுத்தும் புள்ளியெழுத்தும் ஈருகிக் குறிப்பின்கண்ணும் பண்பின்கண்ணும் இசையின்கண்ணும் தோன்றி ஒரு நெறிப்பட வாராக் குறைசொற்களாகிய உரிச் சொற்களும், உயர்திணை அஃறிணை ஆ இரு மருங்கின் ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும் - உயர்திணை அஃறிணையாகிய அவ்விரண்டு திணையிடத்தும் உளவாய ஐந்து பாலினையும் அறிய வரும் பண்புத்தொகை மொழிகளும், செய்யும் செய்த என்னும் கிளவியின் மெய் ஒருங்கு இயலும் தொழில் தொகு மொழியும் - செய்யும் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களின்படி ஒருங்கு நடக்கும் வினைச்சொல் தொக்க வினைத் தொகையும், தம்இயல் கிளப்பின் - (எண்கள்) தம் இயல்பு கிளக்கும் இடத்து, தம்முன் தாம் வரும் எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும் அன்னவை எல்லாம் - (நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியுமாய் வாராது) தம்முன் தாம் வரும் எண்ணின் தொகுதியும் உட்பட்ட பிறவும் அத்தன்மைய வெல்லாம், மருவின் பாத்திய - வழக்கிடத்து மருவி நடந்த இடத்துள்ளன, (ஆகலான் அவ்வாறே கொள்ளப் படும்), புணர் இயல் நிலையிடை உணரத் தோன்று - புணர்ச்சி இயன்ற நிலைமைக்கண் (அவற்றின் முடிபு) விளங்கத் தோன்று எ - று.

எ-டு: விண்வினைத்தது, கார்கருத்தது, ஒல்லொலித்தது; இவை குறைச்சொற்கிளவி ஆயினமையின் முடிக்கப்படாவாயின. விண்ணென விசைத்ததென இடைச்சொல்லொடு கூடியவழிப் புணர்க்கப்படும்.

கருஞ்சான்றன் என்றது பண்புத்தொகை. இது கரும் எனப் பண்புணர நின்றது. கருஞ்சான்றனெனத் தொகையாயவழி கரு மென்பது கரியானெனப் பால்காட்டி நிற்றலில் புணர்க்கப்படா தாயிற்று.

கொல்யானை என்றது வினைத்தொகை. அதுவும் கொல்லெனத் தொழின்மை உணரநின்றது. கொல்யானை எனத் தொகையாய

வழி, கொன்ற எனக் காலம் காட்டி நின்றமையின், புணர்க்கப் படாதாயிற்று.

ஒரொன்று என இது, தம்முற்ரும் வந்த எண். இது நிறுத்த சொல்லும் குறித்துவருகிளவியும் அன்மையிற் புணர்க்கப்படா தாயிற்று. இது தானே ஒரோன்ருகக் கொடு என்புழிப் புணர்க்கப்படும்.

'பிறவும், என்றதனுன் முடியாதன உண்டான், கரியன் என்பன, இவை உண் எனவும் கருமை எனவும் பிரித்து நிறுத்திய வழி ஆனும் அன்னும் குறித்துவருகிளவி யன்மையான் வந்து புணராமையின், புணர்க்கப்படாவாயின.

'தோன்றி, என்றதனுல் கொள்ளெனக்கொண்டான் என் புழிக்கொள்ளென்பதனை, என என்பதனேடு புணர்க்கப்படாமை கொள்க.

'மெய் ஒருங்கியலும்' என்றதனுன், உண்டான் என்புழிச் செய்கையும் காலமும் பாலும் தோற்றிநிற்குமாறு பிரித்துப் புணர்க்கப்படாமை கொள்க. (76)

483. கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனுர் புலவர்.

இஃது, இவ்வதிகாரப் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்-முன் எடுத் தோதின அல்லாதன செய்யுளிடத்து வேறுபட வருவனவற்றை யும், வழங்கு இயல் மருங்கின் மருவொடு திரிநவும்-வழக்கு நடத்து மிடத்து மருவுதலோடு வேறுபட வருவனவற்றையும், விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்-முன் சொன்ன முடிபியற்கை யின் வேறுபடத் தோன்றின், நல்மதி நாட்டத்து வழங்கு இயல்

மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்-நல்லறிவினது ஆராய்ச்சியான் வழக்கு இயலுமிடத்து அவற்றின் முடிபு வேறுபாடுகளை யறிந்து நடத்துக, என்மனார் புலவர்-என்று சொல்லுவர் புலவர் எ-று.

எ-டு: நறவங்கண்ணி, 'கள்ளியங்காடு' (அகம்-97). 'புன்னையங்கானல்' (அகம்-80), பொன்னத்திகிரி, (புறம்-365) ஆரங்கண்ணி, கானலம்பெருந்துறை (ஐங்-158) என இவை வேற்றுமைக்கண் அம்முப் பெற்று முடிந்தன.

'வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை' (நற்-62) என்பது ரகர வீறு அத்துப்பெற்று முடிந்தது. முளவுமா, பிணவு நாய் என்பன, அல்வழிக்கண் மென்கணத்துக் குறியதன் இறுதிச் சினைகெட்டு உகரம் பெற்று முடிந்தன.

'அஞ்செவி நிறைய மந்திரங் கூறி' என்பது அகம் என்னும் நிலைமொழி செவி என்னும் வருமொழியோடு வேறுபட முடிந்தது.

தடவுத்திரை, தடவுத்தோள் என்பன உரிச்சொல் முடிபு.

'ஆயிடை' என்பது அவ்வென்னும் வகரவீறு வேறுபட முடிந்தது.

அருமருந்தன்னான் எனற்பாலது அருமருந்தான் என மருஉவாய் முடிந்தது. சோணாடு மலாடு என்பதும் அது.

பொதியி லென்பதும் அது. பிறவும் அன்ன. (77)

பத்தாவது குற்றியலுகரப் புணரியல் முற்றிற்று.

எழுத்ததிகாரம் இளம்பூரணருரை

முற்றுப்பெற்றது.

—o—

நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : நூற்பா எண்]

அ ஆ உ ஊ ஏ 174
அ ஆ என்னும் 182
அ இ உ அம் 31
அஃதிவண் நுவலா 103
அஃறிணை விரவுப் 156
அகமென் கிளவிக்கு 316
அகர ஆகாரம் 312
அகர இகரம் 54
அகர இறுதிப் 204
அகர உகரம் 55
அகரத்து இம்பர் 56
அக்கென் சாரியை 271
அடையொடு 319
அணரி நுனிநா 94
அண்ணஞ் சேர்ந்த 99
அண்ணம் நண்ணிய 93
அதனிலை உயிர்க்கும் 479
அத்தவண் வரினும் 220
அத்திடை வருஉம் 169
அத்தின் அகரம் 126
அத்தே வற்றே 134
அத்தொடு சிவணும் 318
அந்நான் மொழியுந் 430
அப்பெயர் மெய்யொழித் 351
அம்மின் இறுதி 130
அம்மு வாறும் 22
அரையளபு 13
அரையென வருஉம் 166
அல்லதன் மருங்கிற் 327
அல்லது கிளப்பின் இயற்கை 322
அல்லது கிளப்பினும் வேற் 323
அல்லது கிளப்பின்–எல் 409
அல்வழியெல்லாம் இயல் 362
அல்வழி யெல்லாம் உறழென 369, 399
அல்வழி யெல்லாம் மெல் 315
அவற்றுவழி மருங்கிற் 119
அவற்றுள்–அ ஆ ஆயிரண் 85
.. –அ இ உ எ 3

,, –இகர ஈற்று 155
,, –இன்னின் 121
,, –ஈரொற்றுத் 408
,, –கரமுங் கானும் 136
,, –ணனஃகான் 26
,, –நிறுத்த சொல் 109
,, –மெய்யீறெல் 105
,, –மெல்லெழுத் 146
,, –ரகார 49
,, –லளஃகான் 24
அவைதாம்–இயற்கைய 198
,, –இன்னே 120
,, –குற்றியலிகரம் 2
,, –முன்னப் 143
,, –மெய்பிறிதாதல் 110
அவையூர் பத்தினும் 473
அவ்வழி–பன்னீ ருயிரும் 84
அவ்வா றெழுத்தும் 92
அவ்வியல் நிலையும் 12
அழனென் இறுதி 355
அழனே புழனே 194
அளந்தறி கிளவியும் 446
அளபாகு மொழிமுதல் 122
அளபிறந் துயிர்த்தலும் 33
அளவிற்கும் நிறையிற்கும் 171
அளவும் நிறையும் ஆயியல் 477
அளவும் நிறையும் குற்றிய 474
அளவு நிறையும் எண்ணும் 390
அளவும் நிறையும் வேற்றுமை 320
அன்றுவரு காலை 259
அன்ன என்னும் 211
அன்னென் சாரியை 195
ஆ ஈ ஊ ஏ ஐ 4
ஆ எ ஒ எனும் 64
ஆ ஏ ஓ அம் 32
ஆகார இறுதி 222
ஆடூஉ மகடூஉ 272
ஆணும் பெண்ணும் 304
ஆண்மரக் கிளவி 305
ஆதனும் பூதனும் 349
ஆயிரக் கிளவி 464
ஆயிரம் வரினும் 436
ஆயிரம் வரினே 476
ஆயிரம் வருவழி 392
ஆய்த நிலையலும் 400
ஆரும் வெதிருஞ் 364
ஆவயின் வல்லெழுத்து 302
ஆவு மாவும் 225
ஆவோ டல்லது 65
ஆறன் உருபின் அகரக் 116
ஆறன் உருபினும் 162
ஆறன் மருங்கிற் 469
ஆறென் கிளவி 458
ஆனின் னகரமும் 125
ஆனொற் றகர 233
ஆன்முன் வருஉம் 234
இ ஈ எ ஏ ஐ 86
இகர யகரம் 58
இகர இறுதிப் 236
இக்கின் இகரம் 127
இடம் வரை 252
இடை நிலை ரகரம் 440
இடைப்படிற் 37
இடையெழுத் தென்ப 21
இடையொற்றுத் 414

இதழியைந்து	97
இயற்பெயர்	348
இரண்டுமுத	480
இராவென்	228
இருதிசை	432
இருளென் கிளவி	403
இலமென் கிளவி	317
இல்ல மரப்	314
இல்லென் கிளவி	374
இல்லொடு கிளப்பின்	294
இரு அல் தோற்றம்	344
இனி அணி	237
இன்றி யென்னும்	238
இன்னிடை வருஉம்	187
இன்னென வருஉம்	132
ஈகார இறுதி	250
ஈமும் கம்மும்	329
ஈரெழுத்து மொழியும்-உயி	412
ஈரெழுத்துமொழியும்-வல்	418
ஈரெழுத் தொரு	407
ஈறியல் மருங்கினும்	39
ஈறியல் மருங்கின்	172
உ ஊ ஒ ஓ என்னும்	63
உ ஊ ஒ ஓ ஔவென	87
உஊ காரம் நவவொடு	74
உகர இறுதி	255
உகரமொடு	164
உச்சகாரம் இரு	75
உச்சகாரமொடு	79
உட்பெறு புள்ளி	14
உணரக் கூறிய	406
உண்டென் கிளவி	431
உதிமரக் கிளவி	244
உந்தி முதலா	83
உப்ப காரமொடு	80
உப்ப காரம் ஒன்றென	76
உம்மை எஞ்சிய	224
உயர்திணைப் பெயரே	118
உயர்திணையாயின் உரு	325
உயர்திணையாயின் நம்மிடை	191
உயிரிறு சொல்முன்	108
உயிரீருகிய உயர்திணைப்	154
உயிரீருகிய முன்னிலை	152
உயிரும் புள்ளியும் இறுதி	482
உயிரும் புள்ளியு மிறுதியாகி	165
உயிர்ஔ எஞ்சிய	69
உயிர்முன் வரினும் ஆயிய	208
,, ,,	395
உயிர்மெய் அல்லன	60
உயிர்மெய் யீறும்	107
உரிவரு காலை	241
உருபியல் நிலையும்	295
உருவினும் இசையினும்	40
உரைப்பொருட் கிளவி	213
ஊஎன் ஒருபெயர்	270
ஊகார இறுதி	265
எ என வருமுயிர்	71
எகர ஒகரத்	16
ஏகர ஒகரம்	273
எகின் மரமாயின்	337
எஞ்சிய வெல்லாம்	77
எட்டனொற்றே	444
எண்ணின் இறுதி	169
எண்ணுப் பெயர்க்	420

எப்பெயர் முன்னரும் 129
எருவுஞ் செருவும் 261
எல்லா மென்னும் 190
எல்லா மொழிக்கும் 141
எல்லாரு மென்னும் 192
எல்லா வெழுத்தும் 102
எழுத்தெனப் படுப 1
எழுத்தோ ரன்ன 142
ஏஎன் இறுதிக்கு 278
ஏஓ எனுமுயிர் 73
ஏகார இறுதி 275
ஏழன் உருபிற்குத் 202
ஏழென் கிளவி 389
ஏனவை புணரின் 382
ஏனவை வரினே 257
ஏனைப் புளிப்பெயர் 246
ஏனை முன் வரினே 425
ஏனை யெகினே 338
ஏனை வகரந் 383
ஏனை வகரம் இன் 185
ஐஅம் பல்லென 394
ஐஒடு குஇன் 114
ஐஔ என்னும் 42
ஐகார இறுதிப் 281
ஐகார ஔகாரங் 138
ஐந்தன் ஒற்றே மகாரம் 443
ஐந்த னொற்றே முந்தை 454
ஐந்த னொற்றே மெல் 448
ஐந்த னொற்றே யகாரம் 468
ஐந்தும் மூன்றும் நம 451
ஐயின் முன்னரும் 128
ஒடுமரக் கிளவி 263
ஒவ்வும் அற்றே 72
ஒழிந்ததன் நிலையும் 292
ஒற்றிடை யினமிகா 413
ஒற்று நிலைதிரியா 419
ஒற்றுமிகு தகர 345
ஒன்பானிறுதி-மரபே 470
ஒன்பானிறுதி-மொழியே 459
ஒன்பான் ஒகரமிசைத் 445
ஒன்பான் முதனிலை 463
ஒன்றுமுத லாக எட்ட 434
ஒன்று முதலாகப் பத்து 200
ஒன்று முத லாகிய 475
ஒன்றுமுதலொன்பான் 438
ஓகார இறுதி ஏகார 290
ஓகார இறுதிக்கு ஒன்னே 181
ஓரள பாகும் இடனுமா 57
ஓரெழுத்தொரு 45
ஔகார இறுதிப் 296
ஔகார இறுவாய்ப் 8
ஔவென வருஉம் 153
ககார ஙகார 89
கசதப முதலிய 144
கசதப முதன்மொழி 449
கண்ணிமைநொடி 7
கதந பமஎனும் 61
கவவொ டியையின் 70
காரமுங் கரமுங் 135
கிளந்த அல்ல 48
கிளைப்பெய ரெல்லாங் கிளை 339
கிளைப்பெய ரெல்லாங் கொ 308
கீழென் கிளவி 396
குமிழென் கிளவி 387
குயினென் கிளவி 336
குறியதன் இறுதிச் 235

குறியதன் முன்னர் 38
குறியதன் முன்னரும் 227
குறுமையும் நெடுமையும் 50
குறையென் கிளவி 167
குற்றிய லிகரம் 43
குற்றிய லுகரக் கின்னே 168
குற்றிய லுகரத் திறுதி 196
குற்றிய லுகரமும் 106
குற்றிய லுகர நிறைப் 67
குற்றெழுத்திம்பரு 268
குற்றெழுத் தைந்தும் 44
குன்றிசை மொழி 41
கொடிமுன் வரினே 286
ஙஞண நமன 25
சகரக் கிளவியும் 62
சகார ஞகாரம் 90
சாரென் கிளவி 365
சார்ந்துவரி னல்லது 101
சாவ என்னுஞ் 210
சிறப்பொடு 350
சுட்டி னியற்கை 239
சுட்டின் முன்னரும் 256
சுட்டின் முன்னர் 206
சுட்டிச் சினைநீடிய 428
சுட்டு முதலாகிய இகர 160
சுட்டுமுதலாகிய ஐயென் 178
சுட்டுமுதலாகிய வகர 379
சுட்டுமுதலுகரம் 177
சுட்டுமுதல் இறுதி-நிலையும் 282
சுட்டுமுதல்-நிலையும், ஒற் 264
சுட்டுமுதல் இறுதி யியல் 258
சுட்டுமுதல் வகரம் 184
சுட்டுமுதல் வயினும் 335
செய்யா வென்னும் 223
செய்யுள் இறுதிப் 51
செய்யுள் மருங்கின் 289
சேஎன் மரப்பெயர் 279
ஞகாரை ஒற்றிய 297
ஞணநம னயரல 78
ஞநஎன் புள்ளிக் 183
ஞநமய வவெனு முத 145
ஞநமவ இயையினும் 298
ஞநமவ வென்னும் 27
டகார ணகாரம் 91
டறலள வென்னும் 23
ணகார இறுதி 303
ணளவென் புள்ளிமுன் 151
ணனவென் புள்ளி 147
தகரம் வரும்வழி 370
தத்தந் திரிபே 88
தமிழென் கிளவியும் 386
தம்மியல் கிளப்பின் 47
தாம்நாம் என்னு 186
தாயென் கிளவி 359
தாழென் கிளவி 385
தானும் பேனும் 352
தான்யானெனும் 353
தான்யான் என்னும் 193
திங்களு நாளும் 287
திங்கள் முன்வரின் 249
திரிபுவேறு கிளப்பின் 433
தேற்ற எகரமுஞ் 274
தேனென் கிளவி 341
தொடரல் இறுதி 215
தொழிற் பெய 307, 328, 377, 402

நகர இறுதியும் 299
நமவ என்னும் 450
நாட்பெயர்க் கிளவி 332
நாயும் பலகையும் 375
நாவிளிம்பு வீங்கி 96
நாள்முன் தோன்றுந் 248
நான்கனொற்றே லகார 453, 467
நான்கனொற்றே றகார 442
நான்கும் ஐந்தும் 462
நிலாவென் கிளவி 229
நிறுத்த சொல்லுங் 111
நிறையு மளவும் 437
நீட வருதல் 209
நீட்டம் வேண்டின் 6
நீஎன் ஒருபெயர் உருபியல் 254
நீயென் ஒருபெயர் நெடு முதல் 180
நீயென் பெயரும் 251
நும்மெ னொருபெயர் 326
நும்மென் இறுதி 188
நும்மென் இறுதியும் 163
நுனிநா அணரி 95
நூறு யிரமுன் 471
நூறுமுன் வரினும் 460
நூறூர்ந்து வரூஉம் 393
நூறென் கிளவி 472
நெடியத னிறுதி யியல்பா 401
நெடியதன் இறுதி யியல்பு 371
நெடியதன் முன்னர் 161
நெட்டெழுத் திம்பருந் 36
நெட்டெழுத் திம்பர் ஒற்று 197
நெட்டெழுத் தேழே 43
நெல்லுஞ் செல்லுங் 372
படர்க்கைப் பெயரும் 321
பதக்குமுன் வரினே 240
பத்தனொற் றுக்கெட 435
பத்தென் கிளவி 391
பலரறி சொன்முன் 173
பலவற் றிறுதி உருபியல் 221
பலவற் றிறுதி நீடு 214
பல்லவை நுதலிய 175
பல்லிதழ் இயைய 98
பனியென வரூஉங் 242
பனையின் முன்னர் 285
பனையும் அரையும் 284
பனையென் அளவுங் 170
பன்னீ ருயிரு 59
பாழென் கிளவி 389
பீரென் கிளவி 366
புணரியல் நிலையிடை 35
புளிமரக் கிளவிக் 245
புள்ளி யில்லா 17
புள்ளி யிறுதியுசொல் 203
,, வல் 157
புள்ளி ஈற்றுமுன் 139
புள்ளும் வள்ளுந் 404
பூஎன் ஒரு பெயர் 269
பூல்வே லென்று 376
பெண்டென் கிளவிக் 422
பெயருந் தொழிலும் 133
பெற்றம் ஆயின் 280
பொன்னென் கிளவி 357
மகப்பெயர்க் 219
மகர இறுதி வேற்றுமை 311
மகரத்தொடர்மொழி 82

மகன்வினை கிளப்பின் 360
மக்க ளென்னும் 405
மரப்பெயர்க் கிளவிக் கம்மே 416
மரப்பெயர்க் கிளவி மெல் 218
மருவின் தொகுதி 112
மழையென் கிளவி 288
மன்னுஞ் சின்னு 334
மஃகான் புள்ளிமுன் அத்தே 186
மஃகான் புள்ளிமுன் வவ்வுத் 28
மாமரக் கிளவியும் 232
மாறுகொள்...என்னும் 276
மாறுகொள்...ஐயமும் 291
மின்னும் பின்னும் 346
மீனென் கிளவி 340
முதலா ஏன தம் 66
முதலீ ரெண்ணினொற்று 431
முதலீ ரெண்ணின் 455
முதனிலை நீடினும் 465
முதனிலை ஒண்ணின் 478
முரணென் 310
முற்றிய லுகர 68
முன்னுயிர் 424
முன்னென் கிளவி 356
மூவள பிசைத்தல் 5
மூன்ற னொற்றே...ஆகும் 466
மூன்றனொற்றே-வரும்வழித் 452
மூன்ற னொற்றே நகார 461
மூன்றன் ஒற்றே வந்த 447
மூன்றன் முதனிலை 457
மூன்றுதலை யிட்ட 104
மூன்றும் ஆறும் 441
மூன்றும் நான்கும் 456
மெய்ந்நிலை சுட்டின் 30
மெய்யின் அளபே 11
மெய்யின் இயக்கம் 46
மெய்யின் இயற்கை 45
மெய்யின் வழியது 18
மெய்யுயிர் நீங்கின் 140
மெய்யோ டியையினும் 10
மெல்லெழுத் தாறும் 100
,, தியையின் அவ் 381
,, தியையின் இறு 343
,, தியையின் ணகார 398
,, தியையின் னகார 368
,, து மிகினும் 324, 342
,, து மிகுவழி 158
மெல்லெழுத் துறழு 313, 361
மெல்லெழுத் தென்ப 20
மெல்லொற்று 417
மென்மையும் இடைமையும் 131
மொழிப்படுத் திசைப்பினும் 53
மொழி முதலாகும் 148
யகர இறுதி 358
யகரம் வருவழி 411
யரழ என்னும் மூன்று 48
யரழ வென்னும் புள்ளி 29
யவமுன் வரினே 207
யாதென் இறுதி-அன் 201
யாதென் இறுதியுஞ்-உருபி 423
யாமரக் கிளவியும் 230
யாவினா மொழியே 429
யாவென் வினாவின் 179

யாவென் வினவும் 176
ரகார இறுதி 363
லகார இறுதி 367
லனவென வரூஉம்-முன் 150
லனவென வரூஉ-மிறுதி 481
வகரக் கிளவி 81
வகார மிசையும் 331
வடவேங்கடந் தென் 1
வண்டும் பெண்டும் 421
வரன்முறை மூன்றுங் 137
வல்லெழுத் தியற்கை 216
வல்லெழுத்து முதலிய 115
வல்லெழுத்து மிகினும் 231
வல்லெழுத்து மிகினு-ஒல் 247
வல்லெழுத் தென்ப 19
வல்லென் கிளவி 374
வல்லொற்று-மிகு 427
வல்லொற்று-வரு 410
வளியென வரூஉம் 243
வன்றொடர் மொழியும் 415
வஃகான் மெய் 123
வாழிய என்னும் 212
விசைமரக் கிளவியும் 283
விண்ணென 306
வினையெஞ்சு கிளவிக்கும் 266
வினையெஞ்சு கிளவியும் 205
வெயிலென் கிளவி 378
வெரிந்என் இறுதி 301
வேற்றுமை அல்வழி ஆய்த 380
வேற்றுமை குறித்த 113
வேற்றுமை 113, 380, 309, 34[illegible]
வேற்றுமைக்கண்ணும் 14[illegible], 217, 226, 253, 260, 267, 277, 293
வேற்றுமைக்கு-உக்கெட 300
வேற்றுமை யல்வழி 159
வேற்றுமை யல்வழிக்குறு 354
வேற்றுமை யாயின் ஏனை-இ 33[illegible]
வேற்றுமை யாயின் ஏனை-ஏ 347
வேற்றுமை யல்வழி யெண் 30[illegible]
வேற்றுமை வழிய 11[illegible]
வேற்றுமை-ஒகர 29[illegible]
ழகர வுகரம் 262
ழகார இறுதி 384
ளகார இறுதி 397
ணகார இறுதி 333
னகார இறுவாய் 9
னகாரை முன்னர் 52
னஃகான் றஃகான் 124